N71-31 N70

N71·34

6/49

வெளியீடு—31—8—1971]
Issued—31—8—1971]

3897

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1970 செப்டம்பர் 7
Monday, 7th September 1970

தொகுதி XXXIV—எண் 1
Volume XXXIV—No. 1

தமிழ் நாடு அரசு
1971
GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

D
V211, 31 N70
31N71.34
61494
3897

# Tamil Nadu Legislative Assembly Debates

EIGHTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*7th, 8th and 9th September* 1970.

(Volume XXXIV—Nos. 1 to 3.)

TABLE OF CONTENTS.

*Monday, 7th September* 1970.


| | PAGES |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 1–40 |
| 2. Announcements— | |
| (a) Election to Public Accounts Committee ... | 41 |
| (b) Business of the House ... ... ... | 108–109 |
| 3. Point of Order— | |
| Withholding of consent to an Adjournment Motion ... ... ... ... | 41–42 |
| 4. Government Motion— | |
| Suspension of Rule 41 (3) ... ... ... | 42 |
| 5. Calling Attention— | |
| (a) Stopping Naxalite intrusion from the Western Ghats ... ... ... ... ... ... | 43–44 |
| (b) Need to provide seats for large number of PUC Students in English medium ... | 44–49 |
| (c) Cutting of trees in 20 acres of Raj Bhavan sanctuary ... ... ... ... | 49–51 |
| 6. No-confidence motion against the Ministry ... | 51 |
| 7. Motion censuring Ministry's policy ... ... | 51–108<br>109–158 |
| 8. Papers laid on the Table ... ... ... | 158–160 |


A 223—1

PAGES

*Tuesday, 8th September 1970.*

1. Questions and Answers ... ... ... 163–188
2. Adjournment Motion—
   Burning Camphor in the palms of school students in Vellalapatti village ... ... 188–189
3. Calling Attention—
   Failure of monsoon and need to postpone collection of land tax, etc., in the taluks of Srivilliputhur, Sathur, Sivakasi and Rajapalayam ... ... ... ... 180
4. Minister's Statement—
   Statement by the Minister for Education and Public Health regarding strike by House-Surgeons and steps taken by Government 190–191
5. Announcements—
   (a) Election to Board of Industries ... 191
   (b) Business of the House ... ... ... 260
   (c) The Tamil Nadu Requisitioning of Motor Vehicles Bill, 1970 (L.A. Bill No. 32 of 1970) ... ... ... ... ... 274
6. No-confidence and Censure Motions against Ministry—*contd.* ... ... ... ... 191–193, 196–260, 288–318
7. Points of Order—
   (a) Refusal of a Member to speak when called by the Chair ... ... ... ... 193–196
   (b) Objection to take into consideration a Bill as the reason to bring it as set out in the Objects and Reasons ceased to exist just then 274–277
8. Government Bills—
   (a) The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Bill, 1970 (L.A. Bill No. 29 of 1970) 261–265
   (b) The Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 30 of 1970) ... ... 266–274
   (c) The Tamil Nadu Requisitioning of Motor Vehicles Bill, 1970 (L.A. Bill No. 32 of 1970) 277–286



PAGES

*Tuesday, 8th September 1970*—cont.

9. Government Resolutions—
   (a) Correction in Form for disclosure of Assets of Members ... ... ... ... 286
   (b) Amendment to Cotton Transport Rules, 1950 ... ... ... ... ... 286–287
10. Papers laid on the Table ... ... ... 318–319

*Wednesday, 9th September 1970.*

1. Questions and Answers ... ... ... 321–344
2. Privilege Matter—
   (a) Privilege issue against the Law Minister, Thiru S. Madhavan, for using in the House the letter obtained from the Member Thiru A. K. Subbiah in Tiruchirappalli Central Jail ... ... ... ... ... 345–354
   (b) Publication of distorted version of the Proceedings in 'Nava Sakthi' ... 355
   (c) Publication of distorted and partial version of the Proceedings in the daily 'Nava Sakthi' ... ... ... ... ... 355–356
3. Adjournment Motion—
   Murder of five persons by Naxalite at Vellargoda village ... ... ... ... 366
4. Government Motion—
   Suspension of Rule 41 (3) ... ... ... 366
5. Calling Attention—
   (a) Fire accident to Harijans' houses in Sundararajapuram village and relief measures 367
   (b) Fire accident in Pothakkalanvillai village 368
   (c) Closure of Sri Shanmugar Spinning Mills in Rajapalayam and relief to workers ... 369
   (d) Hunger strike by retrenched Bee Fieldmen before the Collectorate, Nagercoil ... 370
   (e) Non-disbursement of loans to agriculturists by Land Mortgage Banks in Ramanathapuram district and steps taken by Government ... ... ... ... ... 371

PAGES.

*Wednesday, 9th September 1970—cont.*

**6. Minister's Statement—**

Statement by the Minister for Local Administration regarding Dr. Hande's remarks in respect of low proceeds realised from auctions conducted by the Municipal Commissioner, Coimbatore ... ... ... 372-373

**7. No-confidence and Censure Motions against Ministry—*contd.*** ... ... ... ... 374-454

**8. Papers laid on the Table** ... ... ... 455

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

### தமிழ் நாடு ஆளுநர்

சர்தார் உஜ்ஜல் சிங்

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதல் அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி விளம்பரம், திரைப்படச் சட்டம், உணவு உற்பத்தி, பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள், வழங்கல் குறித்த சட்டம்.

**2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி-சுகாதார அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, பொதுச் சுகாதாரம், மருத்துவம், சட்ட மன்றம்.

**3. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (நிதி அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

**4. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (வேளாண்மை-அரிசன நல அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, அரிசனநலம், மகளிர்–சிறுவர் நலம், மீனளம், சுற்றுலா, வேளாண்மை மறு நிதிக் கழகம்.

**5. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பின் தங்கிய வகுப்பினர், பத்திரப் பதிவு, எழுதுபொருள்-அச்சுத் துறை, அரசாங்க அச்சகம்.

**6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வணிக வரி அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, வணிக வரிகள், கால்நடை வளர்ப்பு, பால் வழங்கு துறை.

**7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்): பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள் (Waqfs) போக்குவரத்து, நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், பூதான; கிராமதான இயக்கங்கள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி.

10. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: கூட்டுறவு, துறைமுகங்கள்.

11. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா (அறநிலையத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு, சீர் திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்): கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல் பற்றி சட்டமியற்றுதல்) சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

13. மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் (தொழிலாளர் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர்கள், எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரங்கள், இரவலர்கள், அனாதை இல்லங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

SARDAR UJJAL SINGH.

---

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister): Minister in-charge of Public, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, Disrict Revenue Officers and Deputy Collectors, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Food Production. Passports and Newsprint Control and Prices and Supplies of Goods Act.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Health): Minister in-charge of Education including Technical Education, Official Language, Public Health and Medicine and Legislature.

3. THE HON. THIRU K. A. MATHIALAGAN (Minister for Finance): Minister in charge of Finance, Planning, Revenue, Board of Revenue. District Revenue Establishments, Indian Overseas, Refugees and Evacuees.

4. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (Minister for Agriculture and Harijan Welfare): Minister in-charge of Agriculture, Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Tourism and Agricultural Refinance.

5. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes): Minister in-charge of Backward Classes, Registration, Stationery and Printing and Government Press.

6. THE HON. THIRU P. U. SHANMUGHAM (Minister for Food and Commercial Taxes): Minister in-charge of Food, Commercial Taxes, Animal Husbandry and Milk.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries): Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works): Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Waqfs, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

9. THE HON. THIRU M. MUTHUSWAMY (Minister for Local Administration): Minister in-charge of Municipal Administration, Community Development. Panchayats, Bhoodan and Gramadan, Khadi and Village Industries, Rural Industries Project, Ex-servicemen and Prosperity Brigade.

10. THE HON. THIRU Si Pa. ADITANAR (Minister for Co-operation) : Minister in-charge of Co-operation, and Ports.

11. THE HON. THIRU K. V. SUBBIAH (Minister for Religious Endowments) : Minister in-charge of Religious Endowments, Housing, Accomodation Control, Approved Schools and Vigilance Services.

12. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity) : Minister in-charge of Electricity, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Chits, Forest and Cinchona.

13. THE HON. THIRU K. VEZHAVENDAN (Minister for Labour) : Minister in-charge of Labour, Legislation on Weights and Measures and Statistics, Beggars and Orphanages.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன். **எம். ஏ.**

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட், பி.ஏ., பி.எல்.,

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. நா. வீராசாமி.

திரு. கே. ஆர். கோவிந்தன்.

திரு. எஸ். இராமலிங்கம்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியம்.

திரு. எஸ். முத்துலிங்கம்.

திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ,, பி,எல்,

### துணைச் செயலாளர்.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., **எல். எல். பி.**

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).

திரு. ஜி. இராகவன்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனர், சி.பா. (அமைச்சர்) | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து.ப. (அரசாங்கத் தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி. (செ.வ.) |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 10 | அண்ணாமலை, சி.வி.எம். | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, எ.வி.பி. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | பாலன், எம். சி. | நாகர்கோவில். |
| 20 | பாலகிருஷ்ணன், எ. கோ. | வானூர் (செ.வ.) |
| 21 | பலராமன், இல. | கணியம்பாடி. |
| 22 | பாலசுப்பிரமணியன், எ. | திண்டுக்கல். |
| 23 | பாரதிமோகன், கோ. | குத்தாலம். |
| 24 | பூபதி, எம். | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 25 | பூவராகன், கோ. | விருத்தாசலம். |
| 26 | போஜன், கே. | உதகமண்டலம். |
| 27 | சீமைச்சாமி, கரு. | மானாமதுரை. |
| 28 | சென்னியப்பன், எஸ், ஆர். | பெருந்துறை. |
| 29 | சின்னராஜி, சி. கே. | திருப்பத்தூர். |
| 30 | சின்னச்சாமி, மு. | ஈரோடு. |
| 31 | சின்னச்சாமி, வி. | ஏர்க்காடு (ஆ.வா.) |
| 32 | சித்தன், என்.எஸ்.வி. | திருமங்கலம். |
| 33 | தனுஷ்கோடி, பி. எஸ். | திருவாரூர் (செ.வ.) |
| 34 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி. |
| 35 | துரைராஜ், சு.ம. | திருவள்ளூர் (செ.வ.) |



| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 36 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 37 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில் (செ.வ.) |
| 38 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 39 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 40 | எட்மண்ட், ஜி. ஆர். (பேரவைத் துணைத் தலைவர்) | திருச்செந்தூர். |
| 41 | இளம்வழுதி, இரெ. | கடலூர். |
| 42 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம். (செ. வ.). |
| 43 | கணேசன், எல். | ஒரத்தநாடு. |
| 44 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 45 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 46 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம். |
| 47 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 48 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.) |
| 49 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 50 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்) | செய்யாறு. |
| 51 | கோவிந்தராசன், ம. சொ. | மதுரை சென்ட்ரல். |
| 52 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 53 | கோவிந்தராஜன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 54 | கோவிந்தராசலு, கே. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 55 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 56 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 57 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க்டவுன் (சென்னை மாநகரம்). |
| 58 | இளஞ்செழியன், வீ. சா. | விராலிமலை. |
| 59 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 60 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 61 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை—கிழக்கு. |
| 62 | ஜயராஜ், பி. | நன்னிலம்(செ. வ.). |
| 63 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 64 | ஜெயராமன், பி. | பேர்ணம்பட்டு (செ. வ.) |
| 65 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ. வ.). |
| 66 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 67 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 68 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 69 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 70 | கண்ணன், எம். ஆர். | பேசின்பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 71 | கண்ணப்பன், எம். | கிணத்துக்கடவு. |
| 72 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 73 | கருணைநாதன், சோ. | சூலூர். |

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 74 | கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்) .. | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 75 | கருப்பையா, ஆ. .. .. .. | கங்கைகொண்டான். (செ. வ.). |
| 76 | கருப்பையா, ஆர். .. .. .. | அரியலூர். |
| 77 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 78 | காசிராமன், நா. .. .. .. | கும்பகோணம். |
| 79 | கதிரவன் க. மு. .. .. .. | தென்காசி. |
| 80 | கேசவலு, தே. .. .. .. | கள்ளக்குறிச்சி |
| 81 | கிட்டப்பா, என். .. .. .. | மாயூரம். |
| 82 | கொளத்தூர் கோதண்டம் .. .. | மதுராந்தகம். |
| 83 | கோதண்டராமன், வி. கெ. .. .. | குடியாத்தம். |
| 84 | கோதண்டராமைய்யா, கே. எஸ். .. | உத்தனப்பள்ளி. |
| 85 | கிருஷ்ணமூர்த்தி, கு. .. .. .. | பழனி (செ. வ.). |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, சி. .. .. .. | கொடவாசல். |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, மு. .. .. | பேராவூரணி. |
| 88 | கிருஷ்ணன், அ. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 89 | கிருஷ்ணன், ஈ. ஆர். .. .. | சேலம்-2. |
| 90 | கிருட்டிணன், நா. .. .. .. | காஞ்சீபுரம். |
| 91 | குமாரசாமி, கே. என். .. .. | பல்லடம். |
| 92 | குப்பம்மாள், திருமதி சு. .. .. | போளூர். |
| 93 | மாதவன், செ. (அமைச்சர்) .. | திருப்பத்தூர். |
| 94 | மகாதேவன், ப. .. .. .. | கன்யாகுமரி. |
| 95 | மலைச்சாமி, பெ. .. .. .. | மேலூர். |
| 96 | மலைக்கண்ணன், வீ. .. .. .. | இளையாங்குடி. |
| 97 | மணி, கே. பி. எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 98 | மணி, எம். எஸ். .. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 99 | மாணிக்கவாசகம், இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 100 | மணியன், பி. எஸ். .. .. .. | சோழவந்தான். |
| 101 | மாரிமுத்து, அ. .. .. .. | ஆடுதுறை. |
| 102 | மாரிமுத்து, ஏ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 103 | மாரிமுத்து, மு. .. .. .. | தலைவாசல். (செ. வ.) |
| 104 | மார்டின், டி. .. .. .. | சாத்தான்குளம். |
| 105 | மருதாசலம், என். .. .. .. | பேரூர். (செ.வ.) |
| 106 | மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) .. | ஆயிரம் விளக்கு (சென்னை மாநகரம்). |
| 107 | மெய்யப்பன், சா. .. .. .. | காரைக்குடி. |
| 108 | மேத்தா, எம். .. .. .. | பெரியகுளம். |
| 109 | மூக்கையா தேவர், பி. கே. .. .. | உசிலம்பபடி. |
| 110 | முனுசாமி கௌண்டர், பி. எம். .. | கிருஷ்ணகிரி. |
| 111 | முனுசாமி, ரா. ரா. .. .. .. | மேலமலையனூர். |
| 112 | முனியாண்டி, ஏ. .. .. .. | நிலக்கோட்டை. (செ.வ.). |

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 113 | முனு, ஆதி. .. .. .. | திருப்போரூர், |
| 114 | முருகையன், புலவர் க. .. .. | திருவையாறு. |
| 115 | முருகையன், எஸ். .. .. .. | கலசபாக்கம் |
| 116 | முருகேசன், க. .. .. .. | பாலக்கோடு |
| 117 | செஞ்சி முனுசாமி, வெ. .. .. | செஞ்சி |
| 118 | முத்தையா, கே. கே. .. .. .. | கடலூர் |
| 119 | முத்தையா, மு. .. .. | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 120 | முத்துலிங்கம், எஸ். .. .. .. | வந்தவாசி (செ. வ.) |
| 121 | முத்துசாமி, பா. க. சி. .. .. | பெண்ணகரம் |
| 122 | முத்துசாமி, மா. (அமைச்சர்) .. | நாமக்கல் |
| 123 | முத்துச்செல்வன், பு. செ. .. .. | முசிரி |
| 124 | நாச்சிமுத்து, நா. .. .. .. | ஒட்டன்சத்திரம் |
| 125 | நாகலிங்கம், பா. .. .. .. | பொன்னேரி (செ. வ.) |
| 126 | நாகசுந்தரம், ஆர். .. .. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 127 | நல்லசிவன், க. ர. .. .. .. | மொடக்குறிச்சி |
| 128 | நல்லசாமி, தோ. மு. .. .. .. | கரூர் |
| 129 | நஞ்சன், சி. .. .. .. | கூடலூர் (செ. வ.) |
| 130 | நரசிம்மன், ஏ. சி. .. .. .. | ஆரணி |
| 131 | நாராயணன், இரா. .. .. .. | வரகூர் |
| 132 | நடராசன், மு. க. து. .. .. .. | லால்குடி |
| 133 | நடராஜன், ஜி. .. .. .. | காட்பாடி |
| 134 | நடராசன், ஈ. எம். .. .. .. | அந்தியூர் |
| 135 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர் பேரவை முன்னவர்) .. | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்) |
| 136 | பச்சையப்பன், எஸ். பி. .. .. | சங்கராபுரம் |
| 137 | பத்மாவதி, திருமதி, கோ. .. .. | முகையூர் |
| 138 | பழனி, சி. .. .. .. | ஓமலூர் (செ. வ.) |
| 139 | பாலைய்யா, ஏ. .. .. .. .. | கொளச்சல். |
| 140 | பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம் (செ. வ.) |
| 141 | பழனிவேல் ராஜன் .. .. .. | தேனி |
| 142 | பன்னீர்செல்வம், எம். .. .. | ஆம்பூர் (செ. வ.) |
| 143 | பரமசிவம், பி. என். .. .. .. | பொங்களூர் |
| 144 | பரமசிவம், எஸ். .. .. .. | ஆண்டிப்பட்டி |
| 145 | பரிசுத்த நாடார், ஏ. ஒய். எஸ். .. | தஞ்சாவூர் |
| 146 | பட்டாபி நாயுடு, எ. .. .. .. | காவேரிப்பட்டணம் |
| 147 | பீர் முஹம்மது, ஹாஜி, ம. மு. .. | மேலப்பாளையம் |
| 148 | பெரியசாமி, பெ. .. .. .. | ராசிபுரம் |
| 149 | பெருமாள், ஏ. ஆர். .. .. .. | கரியாப்பட்டி |
| 150 | பொன்னம்பலம், புலவர் பொ. .. | திருமயம் |
| 151 | பொன்னப்ப நாடார், ஆர். .. .. | விளவங்கோடு |
| 152 | பொன்னுமலை, தி. .. .. .. | பனமாத்துப்பட்டி |
| 153 | இராஜா, ஏ. எம். .. .. .. | பவானி |
| 154 | ராசகோபால், க. மு. .. .. .. | உத்திரமேரூர் |

| தொடர் எண். (1) | உறுப்பினர்கள் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 155 | ராஜமன்னார், எஸ். ஏ. .. .. .. | வாணியம்பாடி |
| 156 | இராசாங்கம், மா. .. .. .. | கம்பம் |
| 157 | ராஜாங்கம், என். .. .. .. | குறிஞ்சிப்பாடி (செ. வ.) |
| 158 | ராஜவேலு, டி. ஏ. .. .. .. | திருச்செங்கோடு |
| 159 | ராமச்சந்திர துரை, ரா. .. .. | கந்தர்வக்கோட்டை |
| 160 | இராமச்சந்திரன், க. ந. .. .. | ஆண்டிமடம் |
| 161 | ராமச்சந்திரன், எம். ஜி. .. .. | பரங்கிமலை |
| 162 | இராமச்சந்திரன், எஸ். .. .. | பண்ருட்டி |
| 163 | ராமலிங்கம், எஸ். .. .. .. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 164 | இராமமூர்த்தி, க. .. .. .. | திண்டிவனம் |
| 165 | இராமன், மு. .. .. .. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 166 | ராமன், ஓ. பி. (அமைச்சர்) .. .. | மேலூர்–தெற்கு (செ. வ.) |
| 167 | இராமராசன், வ. க. .. .. .. | பவானிசாகர் (செ. வ.) |
| 168 | இராமசாமி, இ. .. .. .. | வால்பாறை (செ. வ.) |
| 169 | ராமசாமி, எஸ். ஜே. .. .. | அரக்கோணம் |
| 170 | இராசு, ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ. வ.) |
| 171 | இரத்தினசபாபதி, மு. .. .. | விளாத்திகுளம் |
| 172 | ரெத்தின தேவர், ரா. .. .. .. | முதுகுளத்தூர் |
| 173 | சாதிக்பாட்சா, எஸ். ஜே. (அமைச்சர்) .. | உடுமலைப்பேட்டை |
| 174 | சகாதேவக் கண்டர், கே. .. .. | தண்டராம்பட்டு |
| 175 | சாமிநாதன், கே. என். .. .. | வெள்ளக்கோயில் |
| 176 | சங்கரய்யா, என். .. .. .. | மதுரை–மேற்கு |
| 177 | சந்தானம், பி. எஸ். .. .. .. | செங்கம் (செ. வ.) |
| 178 | சாரதி, மா. பா. .. .. .. | வேலூர் |
| 179 | சத்தியவாணி முத்து, டாக்டர், (திருமதி) (அமைச்சர்) .. | பெரம்பூர் (செ. வ.) (சென்னை மாநகரம்) |
| 180 | சீனிவாசக நாயக்கர், ஆர். .. .. | சாத்தூர் |
| 181 | சீனிவாசன், பெ. .. .. .. | விருதுநகர் |
| 182 | செல்ல கவுண்டர், அ. .. .. .. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 183 | சேனாபதி, அ. .. .. .. .. | காங்கேயம் |
| 184 | சேதுராமன், சி. .. .. .. | சிவகங்கை |
| 185 | சண்முகம், எம். .. .. .. | விழுப்புரம் |
| 186 | சண்முகசுந்தரம், அ. ப. .. .. | பொள்ளாச்சி |
| 187 | சிறைமீட்டான் தொ. க. .. .. | பரமக்குடி (செ.வ.) |
| 188 | சிவஞானம், ம. பொ. .. .. .. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்) |
| 189 | சிவபெருமாள், க. ந. .. .. .. | ஆத்தூர் |
| 190 | சிவசாமி, மு. ச. .. .. .. | தூத்துக்குடி |
| 191 | சிவசுப்பிரமணியன், எஸ். .. .. | காட்டுமன்னார் கோயில் (செ. வ.) |
| 192 | சோமசுந்தரம், ந. .. .. .. | வலங்கைமான் (செ. வ.) |
| 193 | சௌந்தரபாண்டியன், நா. .. .. | ராதாபுரம் |



| தொடர் எண். (1) | உறுப்பினர்கள் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 194 | சௌந்தரபாண்டியன், பெ. .. .. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 195 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. .. | பாபநாசம் |
| 196 | சுந்தரபாரதி, சௌடி எஸ். .. .. | அருப்புக்கோட்டை |
| 197 | சீனிவாசன், சு. .. .. .. | போடிநாயக்கனூர் |
| 198 | சுவாரெஸ், திருமதி ஏ. .. .. | நியமன உறுப்பினர் |
| 199 | சுப்பராஜா, ஏ. அ. .. .. .. | இராஜபாளையம் |
| 200 | சுப்பையா, ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ. வ.) |
| 201 | சுப்பையா, கே. வி. (அமைச்சர்) .. .. .. | ஆலங்குடி |
| 202 | சுப்பையா முதலியார், ஏ. ஆர். .. | கடையநல்லூர் |
| 203 | சுப்பிரமணியம், அ. லெ. .. .. | திருநெல்வேலி |
| 204 | சுப்பிரமணிய கவுண்டர், எம். .. | தர்மபுரி |
| 205 | சுப்பிரமணியம், இ. எம். .. .. | திருக்கோவிலூர் |
| 206 | சுரேந்திரன், எம். .. .. .. | மேட்டூர் |
| 207 | சுவாமிநாத உடையார். த. சி. .. | மன்னார்குடி |
| 208 | சுவாமிநாதன், வை. .. .. .. | திருவெறும்பூர் |
| 209 | தம்பி நாயக்கர், பா. .. .. .. | வடமதுரை |
| 210 | தங்கப்பன், டி. .. .. .. | இராமநாதபுரம் |
| 211 | தவமணிதேவர், வி. .. .. .. | சேடப்பட்டி |
| 212 | தீர்த்தகிரி, ந. .. .. .. | ஹரூர் (செ. வ.) |
| 213 | தீர்த்தகிரி கவுண்டர், தி. .. .. | ஊத்தங்கரை |
| 214 | திம்மராய கவுண்டர், தி. சி. .. .. | நாட்ராம்பள்ளி |
| 215 | திப்பையா, டி. டி. எஸ். .. .. | மேட்டுப்பாளையம் |
| 216 | வடிவேலு, எஸ். கே. .. .. .. | தொட்டியம் |
| 217 | வரதராஜன், என். .. .. .. | வேடசந்தூர் |
| 218 | வேதாசலம், மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம்) |
| 219 | வீரமணி, சி. .. .. .. .. | சங்கரி (செ. வ.) |
| 220 | வீராசாமி, நா. .. .. .. .. | ஆர்க்காடு |
| 221 | வேலப்பன், சி. வே. .. .. .. | கபிலமலை |
| 222 | வெள்ளத்துரை, ஏ. .. .. .. | வாசுதேவநல்லூர் |
| 223 | வேலுசாமி, பி. .. .. .. | சிங்கநல்லூர் |
| 224 | வெங்கடாசல தேவர், பெ. .. .. | வேதாரண்யம் |
| 225 | வெங்கடசாமி, பி. .. .. .. | ஹோசூர் |
| 226 | வேழவேந்தன், கா. (அமைச்சர்) .. | கும்மிடிபூண்டி |
| 227 | விஜயரகுநாத தொண்டைமான், ஆர். .. | புதுக்கோட்டை |
| 228 | விஜயராஜ், தா. .. .. .. | திருவண்ணாமலை |
| 229 | விநயகம், கே. .. .. .. | திருத்தணி |
| 230 | விசுவநாதன், செ. கோ. .. .. | செங்கற்பட்டு |
| 231 | வில்லியம், எம். .. .. .. | கிள்ளியூர் |
| 232 | வெற்றிடம் .. .. .. .. | அவனாசி. |
| 233 | வெற்றிடம் .. .. .. .. | ஆத்தூர். |

| தொடர் எண். (1) | உறுப்பினர்கள் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 234 | வெற்றிடம் .. .. .. .. | சேரன்மகாதேவி. |
| 235 | வெற்றிடம் .. .. .. .. | கோபிச்செட்டிப்பாளையம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்**

| | | |
|---|---|---|
| 1 | திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர் |
| 2 | திரு. ப. உ. சண்முகம் .. | அமைச்சர் |
| 3 | திரு. எஸ். கோவிந்த் சாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

### திங்கட்கிழமை, 1970 செப்டம்பர் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்--விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 259, 260, 261, 262 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### உருக்கு நோய் மருத்துவமனை, பெருந்துறை

*263 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை T. B. சானிடோரியத்திற்கு ஆண்டுதோறும் அரசு தரும் உதவித்தொகை எவ்வளவு?

(இ) அத்தொகையை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ரூ. 1,00,000.

(இ) இதற்கான கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, பெருந்துறை மருத்துவ மனையில் இன்னும் அதிகப்படியான படுக்கைகள் அமைக்கப்படுமானால் மிகவும் நலமாயிருக்கும். கோவை மாவட்டத்தில் டி.பி. நோய்க்கான மருத்துவ மனைகள் அரசாங்கத்துறையில் இல்லை. ஆகவே, அங்கு அதிகப்படியான படுக்கைகளை வைக்க அவர்கள் முன்வருவார்களா? அதற்கான உதவிகளை அரசாங்கம் தருவார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1960-க்கு முன்னால் ரூ. 43,000 மானியம் வழங்கப்பட்டது. 60-ல் ரூ. 74,000 வழங்கப்பட்டது. 65-ல் ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. அதை இரண்டு லட்சமாக ஆக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது அங்கு 380 படுக்கைகள் இருக்கின்றன. அதில் இலவசமாகக் கொடுக்கக்கூடிய படுக்கைகள் 130, அந்த அளவிற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. இரண்டு லட்சம் ரூபாய் தந்தால் அந்த 130 என்பதை 150 ஆக உயர்த்தமுடியும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு துண்டு விழுவது ரூ. 1,75,000 என்று அவர்கள் கணக்கு சொல்கிறார்கள். அவற்றையெல்லாம் அரசாங்கம் கேட்டிருக்கிறது. அந்தக் கணக்குகள் வந்த பிறகு அவற்றைப் பரிசீலித்த பிறகு தக்க முடிவு எடுக்க வேண்டிவரும். பிறகுதான் படுக்கைகளை உயர்த்துவது பற்றி எண்ண வேண்டியிருக்கும்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த காச நோயால் பலர் பாதிக்கப்பட்டு அந்த நோயாளிகள் இடம் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த பெருந்துறை டி.பி. ஸானிட்டோரியத்தை அரசாங்கமே ஏற்று நடத்துவது உதவிகரமாகயிருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அது நடந்து வருகிற முறையில் ஒன்றும் கேடு இல்லை. நல்ல முறையில்தான் அந்த ஸானிட்டோரியத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். அதிகமாகச் செலவாகிறது, துண்டு விழுகிறது என்ற காரணத்தினால் அரசாங்கம் கூடுதல் மானியம் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு லட்சம் ரூபாய் மானியம் தருகிறபோது அவ்வகையில் கொஞ்சம் படுக்கைகளைக்கூட்ட முடியும் என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். அதுதான் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. சு. துரைசாமி :** இலவசப் படுக்கைகள் அதிகமாக வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டு ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. வியாதி கடுமையாக இருக்கிறவர்களுக்கு உடனடியாகப் படுக்கைகள் கொடுப்பதற்காக சிறிது அதிகம் படுக்கைகளை உயர்த்தவேண்டுமென்று அரசாங்கம அவர்களுக்கு ஆலோசனை கூறுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** காச நோயைப் பொறுத்த வரையில் வீட்டிலிருந்தே பார்த்துக் கொள்வதற்கு ஏற்ற முறையில் பலவித மருந்துகள், மற்ற வகைகளை எல்லாம் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். மிகக் கடுமையான அளவிற்குள்ள நோயாளிகளைத்தான் ஆஸ்பத்திரிகளில் வைத்துக் கவனிக்க வேண்டிய முறை உள்ளது. நிதி வசதிக்கேற்ற முறையில்தான் படுக்கைகளை கூட்டி வருகிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே நிதி வசதி ஏற்படும்போது அதுபற்றிக் கவனிக்கலாம்.

### தேசிய மாணவர் படை செலவில் மத்திய அரசின் பங்கு

*264 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) என்.சி.சி. மாணவர்களுக்காக செலவழிக்கப்படும் தொகையில் மத்திய அரசு பங்கேற்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இந்திய அரசு இராணுவ அதிகாரிகள், போதகர்கள், படைக் கருவிகள், வெடிமருந்துகள், மாணவர்கள் சீருடை, இளநிலைப் பகுதி (ஆண், பெண்) அதிகாரிகள் சீருடை, இராணுவ ஊர்திகள், பயிற்சிச் சாதனங்கள் ஆகியவற்றைத் தருகிறது. பயிற்சி முகாமுக்கு ஏற்படும் செலவில் 50 சத வீதத்தையும் மத்திய அரசு மாநில அரசுக்கு ஈடு செய்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** தமிழ்நாட்டில் என்.சி.சி. மாணவர்களுக்காக செலழிக்கப்படும் முழுத் தொகையையும் மத்திய அரசிடம் கோரிப் பெற நமது தமிழக அரசாங்கம் முன்வருமா?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பெரும் பகுதியை அவர்கள் தான் ஏற்றுக்கொள்கிறார்கள். ஒரு பகுதியை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரு முடிவிற்கிணங்க ஒரு பகுதியை மட்டும் மாநில அரசு ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

### பெரியநாயக்கன்பாளையம் பகுதியில் மைய சமயற்கூடம்

*265 வினா—திரு. இரா. மாணிக்கவாசகம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வட்டம், பெரியநாயக்கன் பாளையம் பகுதியில் மதிய உணவுத் திட்டத்தின்கீழ் மத்திய உணவு வழங்கு நிலையம் ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

(இ) இத்திட்டத்தை விரைவுபடுத்தும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) &(இ) பெரியநாயக்கன் பாளையத்தில் மத்திய உணவு வழங்கு நிலையம் ஏற்படுத்தும் திட்டம் தற்போது இல்லை. எனினும் நிதிநிலை வசதிக்கேற்ப, 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் படிப்படியாக ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் மத்திய உணவு வழங்கு நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. சு. துரைசாமி :** செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களில் 'கேர்' உணவுத் திட்டத்தின்கீழ் மையச் சமையற்கூடங்கள் அமைக்கப்படடிருக்கின்றன. கோவை மாவட்டத்தில் முதன்முறையாக ஐந்தாறு வட்டங்களிலாவது அப்படிப்பட்ட மையச் சமையற்கூடங்கள் அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முன்பே ஒரு கேள்விக்கு விடையளிக்கும்போது இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். 'கேர்' நிறுவனம் மாவட்டம் மாவட்டமாக எடுத்துக்கொள்கிற திட்டத்தைத்தான் வகுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு வரையில் அப்படி 31 கூடங்கள் கட்டி முடிக்கப்பெற்று 70 அக்டோபரிலிருந்து 71 செப்டம்பர் வரையில் 66 கூடங்கள் கட்டுவதற்கு இந்த ஆண்டு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லும்போது அப்படிக் கட்டுவதற்கு ஏற்ற முறையில் சாமான்கள், போக்குவரத்து தன்மை ஆகியவற்றையெல்லாம் பார்க்கும்போது இப்போதுள்ள முறையில் சென்றால்தான் அதிகச் செலவு இல்லாத வகையில் முடியும் என்று அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள். ஒன்றிரண்டு ஆண்டுக் காலத்திற்குள் 374 ஒன்றியங்களிலும் இத்திட்டத்தை நிறைவேற்றுகிற முறையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வசதிகள் அடிப்படையில் திட்டத்தை நிறைவேற்றவேண்டியிருக்கிறது. இன்னும் இரண்டொரு ஆண்டுக் காலத்தில் கோவை மாவட்டத்திற்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படலாம் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** இப்போது மாநில நிதியில் செலவழிப்பதற்கு நிதிவசதி இல்லாவிட்டாலும் கோவாப்பரேட்டிவ் நிறுவனங்கள் இருக்கின்றன அவற்றில் 'மாமன் குட் பண்ட்ஸ்' இருக்கின்றன. நிதி உதவி அளிக்கத் தக்க வகையில் உள்ள பஞ்சாயத்து ஒன்றியங்களும் உள்ளன. பலதரப்பட்ட இன்ஸ்டிட்யூஷன்ஸ் இவற்றிற்கு உதவுவதற்கான நிலைகளும் இருக்கின்றன. ஆகவே இவற்றையெல்லாம் பயன்படுத்தி இத்திட்டத்தை நிறைவேற்றக்கூடிய செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

[1970 செப்டம்பர் 7

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆங்காங்கு உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் இவற்றின் உதவி பெற்றும், பொது மக்கள் தருகிற நன்கொடையையும் சேர்த்து நடத்த வேண்டுமென்ற திட்ட அடிப்படையில்தான் நடைபெறுகிறது. அதற்கு அரசாங்கம் ஆறு காசு வீதம் தருகிறது. மொத்தம் பத்து காசில் நடைபெறமுடியாது. 'கேர்' நிறுவனம் தருகிற உணவுப் பொருள்களைக் கொண்டு ஓரளவு கட்டுபடியாகும் சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இதனால் ஆசிரியர்களுக்கு சங்கடங்கள் ஏற்படுகின்றன, அவர்கள் சமையல் செய்வது, மேற்பார்வை இடுவது, எல்லா வற்றையும் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு இவற்றின் காரணமாக ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லை இந்த 'கேர்' நிறுவனம் செய்துவரும் உதவியால் இப்போது நீங்குகிறது. அவர்கள் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் மைய உணவுக் கூடங்களைக் கட்டித் தருகிறார்கள். தொடராச் செலவு ரூபாய் இரண்டு லட்சம். அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். தொடரும் செலவு ரூ. 17,000 ஒரு கூடத்திற்கு ஆகிறது. அதை இந்த அரசு ஏற்றுக்கொள் கிறது. அந்த அளவில் இப்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அவர்கள் அளிக்கும் உதவிகளால் நம் வசதிகள் கூடக்கூடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விஞக்கள் 266, 267, 268 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### மதுரையில் பின்நிலை வகுப்புக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி

*** 269 விஞ—திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு பின்நிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை, ஷெஞய் நகரில் 1969 அக்டோபரில் பின்தங்கிய கல்லூரி மாணவர்களுக்கு ஒரு ஹாஸ்டல் திறக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், இதுவரை அந்த ஹாஸ்டலில் தங்கி கல்லூரிக்குப் படிக்கச் செல்லும் மாணவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவரவர்களே, மதுரை ஷெஞய் நகரில் கடந்த அக்டோபரில் பின்தங்கிய மாணவர்களுக்கு ஒரு ஹாஸ்டல் திறந் தார்கள். அதில் பின்தங்கிய மாணவர்களில் பலர் இதுவரை போதுமான அளவு ஹாஸ்டலில் தங்க விரும்பவில்லை என்று அறிகிறேன் காரணம், அங்கே இருக்கும் மாணவர்களுக்கு போதிய அளவு ஹாஸ்டலில் தங்குவதற்கான வசதி, சாப்பாடு பணம் தராத காரணத்தால் சேர விரும்பவில்லை. ஆகவே, இதற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து பணத்தைக் கேட்டு வாங்கி பின்தங்கிய மாணவர்களுக்கு வேண்டிய வசதி செய்துதர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என் வி. நடராசன் :** மதுரை ஷெஞய் நகரில் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு இதுவரை ஹாஸ்டல் திறக்கப்படவில்லை. அப்படி திறக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படும்போது மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தை நினைவில் வைத்து ஆவன செய்யப்படும்.



1970 செப்டம்பர் 7]

### கால்நடை வளர்ச்சித்துறை சீரமைப்பு

*** 270 விஞ—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை இலாகாவில் புனர் அமைப்புத் திட்டத்தின் கீழ், மேற்படி இலாகாவில் புதிய பதவிகள் உண்டாக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அவை யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) பதினன்கு தட்டச்சர் பதவிகளும் ஒரு சுருக்கெழுத்துத் தட் டச்சர் பதவியும் புதிதாக உண்டாக்கப்பட்டன. ஏற்கெனவே இருந்த கண் காணிப்பாளர் என்ற ஐந்து பதவிகள் மேலாளர்கள் என்ற பதவிகளாக உயர்த்தப்பட்டன.

### கைத்தறி துணி ஏற்றுமதி

*** 271 விஞ—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968, 1969, 1970-ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து கைத்தறி துணி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பு என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) 1968—ரூ. 2.59 கோடி

1969—ரூ. 3.46 கோடி.

1970—ரூ. 48.55 இலட்சம்.

(மே முடிய)

*** 272 விஞ—திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

பாதிக்கப்பட்டுள்ள கைத்தறி துணி ஏற்றுமதியை மீண்டும் துவக்கு வதற்கும் புதிய மார்க்கெட்டுகளைப் பிடிப்பதற்கும் சிங்கப்பூர், பர்மா, மலேசியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளோடு அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தும் உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முந்தைய ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 1969-ஆம் ஆண்டில் சிங்கப்பூர், மலேசியா, ஹாங்காங் ஆகிய நாடுகளுக்குக் கைத்தறித் துணி ஏற்றுமதி உண்மையிலேயே அதிகரித் துள்ளது. கைத்தறித் துணிகள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழு, கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியைப் பெருக்குவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**திரு. சு. துரைசாமி :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்த ஆண்டில் ரூ. 48 லட்சம் என்கிற அளவில் சொன்னார்கள். ஆகவே இதை அதிகரிக்கக் கூடிய முறையில ஏதாவது திட்டங்கள் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மே மாதம் முடிய என்று கணக்குச் சொன்னேன். அதற்குப் பின்னாலே சேர்த்தால் அதிகமாகும் என்று நம்புகிறேன்.

**திரு. கே. விநாயகம் :** தமிழ்நாட்டில் 'பிளீடிங் மெட்ராஸ்' என்கிற துணி பெயர் போனதாக இருந்ததே, அதற்கு அமெரிக்காவில் நல்ல கிராக்கி இருந்து அதிகமாக அதை ஏற்றுமதி செய்தோமே, இங்கே இருந்து அனுப்புகிறவர்கள் சரிவர நடந்து கொள்ளவில்லை என்று அங்கே இருப்பவர்கள் அதை விரும்பாமல் ஏற்றுமதியைக் குறைத்துவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறதே, அதற்கு ஏதாவது ஊக்கம் தந்து தரமான 'பிளீடிங் மெட்ராஸ்' துணியை அனுப்புவதற்கு அரசாங்கம் உற்பத்தியாளர்களுக்கு ஏதாவது வசதி அளிக்குமா, அந்த விதத்தில் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படி ஒரு காரணம் இருப்பதாக நான் கேள்விப்படவில்லை. உண்மையான காரணம், அமெரிக்கச் சந்தையில் ஜப்பானிய உற்பத்தியாளர்கள் இந்த வண்ணம் மாறும் துணியை தரம் கூடுதலாகவும் விலை குறைவாகவும் விற்கிறார்கள். ஆகவே, அது பாதித்துவிட்டது. வெளி நாட்டுச் சந்தையைப் பொறுத்தவரையில், சந்தை எந்தெந்த வகையில் பொருள்களை விரும்புகிறதோ, அதற்கு ஏற்ற வகையில் நம்முடைய ரகங்களை மாற்றிக்கொள்வது வணிகத் தத்துவம். நம்முடைய கைத்தறி நெசவு உற்பத்தியாளர்கள், எப்படி வெளிநாட்டில் விரும்புகிறார்களோ அப்படிப்பட்ட முறையில் உற்பத்தி செய்து அனுப்ப வேண்டும்.

**ஹாஜி. ம. மு. பீர்முஹம்மது :** பேரவைத் தலைவரவர்களே, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா போன்ற பகுதிகளில் நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிற கைத்தறித் துணிகளை அதிகமாக விரும்பி அணிகிறார்கள். அவர்களுக்கு எந்த முறையில் அங்கே தேவைப்படுகிறது துணி என்பதைக் கண்டு அறிவதற்காக இங்கே இருந்து ஒரு தூதுக் குழுவை அரசு ஒவ்வொரு ஆண்டும் அனுப்பி, அவர்களுக்கு எந்த மாதிரி துணி தேவைப்படுகிறது என்று தெரிந்துவர அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியார் துறையைச் சார்ந்தவர்கள் அடிக்கடி வெளிநாடுகளுக்கு செல்கிறார்கள். அவர்கள் செல்லும்போது மத்திய அரசாங்கத்தோடு நாம் கலந்து பேசி அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகிறோம். சிங்கப்பூர், மலேசியா ஹாங்காங், இந்தோனேஷியா போன்ற நாடுகளில் நம்முடைய கைத்தறித் தொழிலில் உற்பத்தி செய்யக்கூடிய கைலிக்கு—சாரம் என்று அங்கே சொல்வார்கள்—'சாரத்திற்கு' ஏராளமான கிராக்கி உண்டு. அங்கே அந்த நாட்டில் நான் இருந்து இருக்கிறேன். காலம் மாற, மாற நம்முடைய தமிழ் நாட்டைச் சார்ந்தவர்களே வேறு துணிகளை வாங்க வேண்டுமென்ற எண்ணத்திற்கு ஆட்படுகிறார்கள்.

அது மட்டுமல்ல. இலங்கை போன்ற நாடுகளில் இந்த 'சாரத்தை' உற்பத்தி செய்ய வேண்டுமென்ற முயற்சிகளும் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அதனால் நம்முடைய விற்பனையில் பாதகம் ஏற்படுகிறது. அந்த பாதகத்தை தவிர்ப்பதற்காக என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமோ அதை எடுக்க வேண்டுமென்று கைத்தறி நெசவாளர்களையும், உற்பத்தியாளர்களையும் அரசாங்கம் கேட்டுக் கொண்டு இருக்கிறது. அதற்கு அரசாங்கம் துணை நின்று ஆவன செய்கிறது.



**திரு. நா. கிருட்டிணன் :** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் மொத்தம் எவ்வளவு மதிப்புள்ள கைத்தறித், துணிகள் தயாரிக்கப்பட்டது? அதில் ஏற்றுமதி செய்யப்பட்ட சதவிகிதம் எவ்வளவு? எத்தனை சத விகிதம் இப்போது கைத்தறித் துணிகள் விலை போகாமல் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மொத்த உற்பத்திக்கான விவரம் என்னிடத்தில் இல்லை. ஏற்றுமதி செய்யப்பட்ட துணிகள் எவ்வளவு என்ற விவரம் தான் என்னிடத்தில் இருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சிங்கப்பூர், பர்மா, இந்தோனேஷியா, இந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். மேலும், ஏற்கெனவே சென்று கொண்டிருந்த சிலோன், பாகிஸ்தான், சைனா போன்ற நாடுகளுக்கு மறுபடி ஏற்றுமதி செய்வது பற்றி பேச்சுவார்த்தை ஏதாவது உண்டா? இல்லையென்றால், இனிமேலாவது ஏற்றுமதி செய்வது பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மலேசியாவிலே 1969-ம் ஆண்டு ரூ. 155 லட்சம், சிங்கப்பூரிலே ரூ. 17 லட்சம், ஹாங்காங்கிலே ரூ. 18 லட்சம், மற்ற நாடுகளைப்பற்றி என்னிடத்தில் விவரம் இல்லை. ஆனால், எந்தெந்த நாடுகளுக்கு நம்முடைய துணிகள் தேவை என்று ஆராய்கிறோம். அதில் இந்திய அரசு அதிக அக்கறை காட்ட வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் வலியுறுத்துகிறது. ஆங்காங்கு 'எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில்' நம்முடைய நாட்டிலிருந்து என்னென்ன விற்பனைக்கு அனுப்பலாம் என்று யோசனை கூறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் கேட்டுக் கொண்டு இருக்கிறது. நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் உற்பத்தியாளர்களிடத்தில் அதிக அக்கரை காட்டுகிறோம். நம்முடைய நாட்டில் தயாராகும் ஹாண்ட் கர்சீப், நாப்கின், டவல்கள், கர்டன்கள் இவை போன்ற கைத்தறித் துணிகளுக்கு ஏராளமான கிராக்கி வெளிநாட்டில் இருக்கிறது. குறிப்பாக, இங்கேகூட 'எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில்' இருக்கிறது. அங்கே வெளிநாட்டுக்காரர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு எந்தெந்த ரகம் தேவைப்படுகிறது என்று கணக்கெடுத்து அந்த ரகங்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் வெற்றிபெற்று இருக்கிறோம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, இந்தக் கைத்தறி துணி சம்பந்தப்பட்ட வரையில் வெளிநாடுகளிலே உள்ள கண்காட்சிகளிலே கைத்தறித் துணிகளை வைத்து, மற்ற நாட்டினரை கவர்ச்சி செய்யும் அளவுக்கு நம்முடைய கைத்தறி கண்காட்சியை அமைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துள்ளதா, அதற்கான பணம் கொடுத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கைத்தறித் தொழிலைப் பொறுத்தவரையில் நம்முடைய மத்திய அரசிலே இதற்காக ஒரு அமைப்பு அமைத்து ஏற்பாடு செய்து வருகிறார்கள். அந்த அமைப்பின் துணை கொண்டு வெளிநாட்டிலே விற்பனை செய்வதற்கு முயற்சிகளை செய்து வருகிறோம்.

## Fashion Parade for Handloom Fabrics

* 273 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Handloom Board held any Fashion Parade during the Handloom Week Celebration in April 1970; and

(b) if so, whether police licences were obtained for these parades?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) எழவில்லை.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவரவர்களே, போட்டியில் கலந்து கொள்வதற்கு எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஹாண்ட்லூம் போர்ட் செய்வதாக கேள்வி முன்னே இருந்ததால் இல்லை என்று சொன்னேன். ஆனால், ஆண்டு தோறும் கைத்தறி வாரம் என்று கொண்டாடப்படுகிறது. அப்படிக் கொண்டாடும்போது, அதில் இது போன்ற 'பேஷன் பேரேடு நடத்துகிறார்கள். அதிலே யார் யாரை தேர்ந்தெடுக்கலாம் என்பது அவர்களுக்குள்ள பொறுப்பு. அதை நம்முடைய தமிழ்நாடு கைத்தறி . கூட்டுறவு சங்கம் நடத்துகிறது.

**திரு. கே. விநாயகம்:** இது நம்மை எல்லாம் பாதிக்கும் பிரச்னை. கைத்தறி வாரம் கொண்டாடுவது அல்லது கைத்தறி துணியைப் பரப்புவதற்கு 'பேஷன் பேரேடு' வைத்து நடத்துவது எல்லாம், கைத்தறியில் ஈடுபட்டு இருக்கும் தாழ்வான, மோசமான வாழ்க்கை நடத்திக்கொண்டு இருப்பவர்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்குத்தான் என்று பொருள். ஆனால் ஆட்சியில் இல்லாதபோது கைத்தறித் துணிகளை தோள் மேல் போட்டு விற்று அந்த மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று ஆட்சிக்கு வந்த பிறகு என்ன பொதுவாக, ஏற்கெனவே காங்கிரஸ் செய்யாத காரியத்தை நீங்கள் ஏதாவது அந்த மக்களுக்கு, அவர்கள் வாழ்க்கை உயர்வதற்கு இது வரையில் செய்து இருக்கிறீர்கள் என்று குறிப்பு சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழ்நாடு நெசவாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கத்தில் தான் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொண்டதில் மகிழ்ச்சி. இப்போது அவர்களுக்கு உதவி அளிக்கக்கூடிய வகையில் நிவாரணம் தரக்கூடிய வகையில் முழு முயற்சி எடுத்து வருகிறோம். நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே ரிபேட் கொடுப்பதில் முன்னே கொடுத்ததைவிட 4--5 மடங்கு அதிகம் கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறோம். சென்ற ஆண்டு ரூ. 85 லட்சம் ரிபேட் கொடுத்து இருக்கிறோம். அது மட்டுமல்ல. நான் எங்கே சென்றாலும், கைத்தறி நெசவு கூட்டுறவு சங்கத்திலே சரக்கு தேங்கிக் கிடக்கிறது என்று சொல்வார்கள், இந்த அரசாங்கம் பொறுப்பு எடுத்ததற்கு பின்னாலே எல்லாச் சங்கங்களும், "தாங்கள் உற்பத்தி செய்து தலைமைச் சங்கத்திற்கு அனுப்பக்கூடிய துணிகளுக்கு உடனடியாக பணம் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்து இருக்கிறீர்கள்! நீங்கள் பல்லாண்டு வாழ்க" என்று எங்களை வாழ்த்துகிறார்கள். இன்னும் என்ன செய்யவேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்கிறார்களோ அதைச் செய்யத் தயாராக இருக்கிறோம்.



நெசவாளர் பிரச்னையை ஒரு பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது என்பது இந்த அரசின் கொள்கையாகும். நெசவாளர்கள் என்னென்ன துணிகளை நெய்யலாம், காலத்திற்கேற்றவாறு தரத்தை உயர்த்தலாம் என்று அறிவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பயிற்சிப் பள்ளி நிலையத்தை நாம் ஏற்பாடு செய்து வேண்டிய ரகங்களை ஆங்காங்கு நெய்ய கற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

எங்கள் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் பரமக்குடியில் சென்றால் அங்கே ஒரேமாதிரியான சேலையைத்தான் அந்தக் காலத்திலிருந்து நெய்கிறார்கள். அவர்களுக்கு டவல், நாப்கின் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கும், பயிற்சி கொடுப்பதற்கும் மட்டும் ரூ. 4 லட்சம் ரூபாய் கொடுத்து இருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்து வெற்றி பெற்று இருக்கிறோம். நாங்கள் ஆரம்பித்த காரணத்தால் கனம் திரு. விநாயகத்திற்கு கோபம் வந்தால் கோபம் வரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

## Dye chemicals for handloom Industry

* 274 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any plant for the manufacture of Dye Chemicals used in Handloom Industry is to be set up in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) &(இ) மத்திய அரசு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கூட்டு நிறுவனத்திற்கு ஆண்டொன்றுக்கு 3,300 டன் சோடியம் ஹைட்ரோசல்பைட் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை நிறுவ பூர்வாங்க அனுமதி வழங்கியுள்ளது. இப்பொருள் கைத்தறி தொழில்களில் பெரிதும் உபயோகிக்கப்படும் சாயங்கள் தயாரிக்க உதவும் முக்கிய மூலப் பொருளாகும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இந்தத் தொழிற்சாலை எப்பொழுதிலிருந்து உற்பத்தி தொடங்க இருக்கிறது? அண்மையில் சில மாதங்களுக்கு முன்பு சாய ரசாயன பொருள்கள் இறக்குமதி சம்பந்தமாக ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறதே? அது உண்மையா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்தத் தொழிற்சாலை துவங்குவது பற்றி ஏதாவது தவறு நடந்திருக்கிறது என்று சொன்னால், அதைப்பற்றி தனியாகக் கேள்வி போடவேண்டும். முன்பே கேள்வி போட்டார்கள், பதில் சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி தனியாகக் கேள்வி கேட்டால், மீண்டும் அதைச் சந்திப்பதற்குத் தயார். இதைப் பொறுத்த அளவிற்கு நம்முடைய நாட்டிற்கு டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரிக்குத் தேவையான, குறிப்பாக கைத்தறிக்குத் தேவையான தொழிற்சாலைகளுக்காக நம்முடைய அரசாங்கம் ரூ. ஒரு கோடி முதலில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதாக முடிவு செய்திருக்கிறது. அதற்கு லெட்டர் ஆஃப் இன்டென்டு, முன் அனுமதி நமக்கு

இப்பொழுது கிடைத்திருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை எங்கே தொடங்கலாம் என்பது வசதிகளைப் பற்றி ஆராய்ந்து தொடங்கப்படும். மத்திய அரசுக்கு அனுப்பி, மத்திய அரசு லைசென்ஸ் வழங்கியதற்குப் பின்னால் தொடங்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** கைத்தறித் தொழிலுக்கு மிகத் தேவையானது ரசாயனப் பொருள்கள் உற்பத்தி. சேலம் ஜில்லா கைத்தறித் தொழிலுக்கு மிகப் பிரக்யாதி பெற்ற இடம். அங்கே மிக அதிகமாக நெசவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிற்சாலை சேலம் ஜில்லாவில் தொடங்கப்படுமா ? எவ்வளவு டன் உற்பத்தியாகும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எந்த மாவட்டத்தில் தொடங்கப்படும் என்பதை ஆராய்ந்து முடிவு செய்யலாம். இது எல்லா மாவட்டங்களுக்கும் தேவைப்படுகின்ற பொருளாகும். இப்பொழுது இந்த அரசாங்கத்தின் கொள்கை புதிய தொழிற்சாலைகளையெல்லாம் பின்தங்கிய பகுதிகளை நோக்கி, கிராமங்களை நோக்கிச் செல்லவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். ஆகவே, இதுபற்றி ஆலோசித்ததற்குப் பின்னால் முடிவு எடுக்கப்படும்.

**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் இயந்திரத் தொழில்களைப் பொறுத்தவரையில் பிற மாவட்டங்களைவிட பின்தங்கியிருக்கின்ற காரணத்தினால், நிறைய கைத்தறித் தொழிலாளர்கள் அங்கே இருக்கின்ற காரணத்தினால், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மேலப்பாளையத்தில் ஏறத்தாழ 20,000 கைத்தறிகள் இருக்கின்ற காரணத்தினால், அந்தத் தொழிற்சாலையை அரசு அங்கே துவக்குமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சித்தன் கேட்ட கேள்விக்கு இப்பொழுது அமைச்சர் அவர்கள் பதில் அளித்தாரே ? மறுபடியும் அதைப் பற்றியே கேட்டால் எப்படி ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் தொகுதி மக்களிடம் கொண்டிருக்கக்கூடிய அன்புக்கு நான் மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Naphtha Cracker Plant in Manali*

* 275 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a Naphtha Cracker Plant in Manali near Madras; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) &(இ) தமிழ்நாட்டு அரசுக்கு முற்றிலும் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கூட்டுறவு நிறுவனம் ரசக் கற்பூரத்தைலத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை ஒன்று தமிழ்நாட்டில் தோதான ஒரு இடத்தில் நிறுவ அனுமதி கேட்டு மனு செய்திருக்கிறது. அந்த மனு இந்திய அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.



**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ரசக்கற்பூரத் தைலத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை எங்கே ஏற்பட இருக்கிறது ? அதற்கு மூலதனம் எவ்வளவு தேவைப்படும் ? ரசக்கற்பூரத்தைலம் என்னென்ன பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பெட்ரோல் கெமிகல் காம்ப்ளெக்ஸ் மணலிக்கு அருகில் கிட்டத்தட்ட ரூ. 200 கோடியில் பெரிய திட்டம் ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று நம்முடைய அரசு முடிவு செய்திருக்கிறது. என்ஜினியர்ஸ் இண்டியா கம்பெனி தங்களுடைய ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே ஐ.ஸி.ஐ. கம்பெனி தங்களுடைய ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். இதற்கு நாப்தா கிராக்கர் என்று சொல்லப்படுகிற மூலத் தொழிற்சாலையை மட்டும் முதலில் தொடங்குவது. அதிலிருந்து வருகிற டவுன் ஸ்ட்ரீம், ஒவ்வொரு பொருளாக வரும்பொழுது, அந்தப் பொருள்களுக்கு பல தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். இதற்கு முக்கியமான மூலப்பொருள் நாப்தா நம்முடைய மெட்ராஸ் ரிபைனரியில் ஓரளவுக்குத்தான் கிடைக்கிறது. இது நாட்டில் பற்றாக்குறையாக இருக்கிறது என்ற ஒரு வாதம் மத்திய அரசினால் வைக்கப்படுகிறது. நம்முடைய அரசாங்கம் அதற்குப் பதில் என்ன சொல்லியிருக்கிறது என்றால், இந்த நாப்தாவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தாலும், எக்ஸ்போர்ட் ஓரியண்டெட் ஸ்கீம் என்ற முறையில் எவ்வளவு மூலப் பொருள் இறக்குமதி செய்கிறோமோ அவ்வளவு உற்பத்திப் பொருள், செய்பொருள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற அடிப்படையிலே பெட்ரோ கெமிகல் காம்ப்ளெக்ஸ் திட்டத்தை சுமார் 200 கோடி ரூபாயில் நம்முடைய மாநில அரசிற்குத் தர வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். இதற்குப் பின்னால் விவரங்களை நாம் முடிவு செய்யலாம்.

## குடகனாறு, நொய்யலாறு திட்டம்

* 276 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூருக்கு அருகில் உள்ள குடகனாறு, நொய்யலாறு திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம்.

**திரு. வை. சுவாமிநாதன் :** இந்தத் திட்டத்தை உடனே நிறைவேற்ற அரசாங்கம் முயலவேண்டும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் கரூருக்கு தெற்கு வடக்கில் பல ஆயிரக்கணக்கான நிலங்கள் சாகுபடிக்கு பயன்படுத்தக்கூடிய நிலை இருப்பதினால், இந்தத் திட்டத்தை எப்பொழுது தொடங்குவதற்கு ஆயத்தம் செய்யப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒரு புதிய நீர்த் தேக்கத் திட்டம் போதுமான நீர் வாயில்களின்றி அத்தகைய ஒரு திட்டத்தில் ஏற்படும் செலவுக்கேற்ற பயன்களின்றி இருந்தால் அதிகப்பயன்களைப் பெற குடகனாறு திட்டத்தின்கீழ் மதுரை, திருச்சி மாவட்டங்களில் உள்ள ஏரி குளங்களையும் அணைக்கட்டுக்களையும் மேம்படுத்தல் என்று குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க தலைமை பொறியாளர் (நீர்ப்பாசனம்) கேட்டுக் கொள்ளப்பட்டார். நான்கு திட்டங்கள் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு நிறை

வேற்றப்பட்டு வருகின்றன. மூன்று திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளன. குடகனாறு கீழ்ப் பகுதியிலுள்ள வல்லியணைப் பகுதிகளுக்கு பாசன வசதி செய்வது பற்றி மறு பரிசீலனை செய்யுமாறு தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

### பெரியாறு அபிவிருத்தித் திட்டம்.

* 277 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறு அபிவிருத்தித் திட்டத்துக்காக போடப்பட்டுள்ள மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது அதற்கான துவக்க வேலைகள் நடைபெறும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) 1966-67-ஆம் வருடத்தில் பெரியாறு அபிவிருத்தி திட்டத்திற்காக போடப்பட்ட மதிப்பீடு ரூபாய் 4 கோடியே 25 லட்சம்.

(இ) இந்தத் திட்டம் மத்திய நீர் மின் விசைக் குழுவின் ஒப்புதலும் அரசின் அனுமதிப்பும் கிடைத்தபின் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவர் அவர்களே, பெரியாறு திட்டம் நிறைவேற்றப்பட்டால், அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் யாவை? குறிப்பாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் தினசரி வீணாகிற 100 கன அடித் தண்ணீரை மீதப்படுத்தி, 10,000 ஏக்கர் வரை புதிய பாசனம் செய்யலாம் என்று திட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே? இதை வெகு விரைவாக நிறைவேற்ற மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இந்த ஆண்டு வேலை துவக்க அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பெரியாறு மேம்பாட்டுத் திட்டம் இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். வைகை ஆற்றின் இடது பக்கத்தில் வைகை அணையிலிருந்து பேரணை பொறி மதகிற்கு காரை பூசப்பட்ட, புதிய இணைப்புக் கால்வாய் ஒன்று வெட்டுவதற்கு முதல் பகுதி வகை செய்கிறது. தற்போது வைகை ஆற்றில் மணற் படுகையில் நீர் கொண்டு செல்கையில் சுமார், 1,350 மில்லியன் கன அடி நீர் விரயமாவது இந்த ஏற்பாட்டினால் தவிர்க்கப்பட்டு, அந்த நீர் 9,500 ஏக்கர் புதிய ஆயக்கட்டிற்குப் பாசனமளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாவது, பெரியாறு தலைக் கால்வாய், அதன் நான்கு பெரிய கிளைக் கால்வாய்களுக்கும் காரை பூசுதல், மதகுகள், பொறி மதகுகள் முதலியவற்றிற்கு மேம்பாடுகள் செய்தல் ஆகிய திட்டம். இதன் மூலம் 21,500 ஏக்கருக்குப் பாசனமளிக்க இயலும். மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். கடைசியாக தலைமைப் பொறியாளரின் தொடக்க குறிப்புகளுக்காக அறிக்கை மத்திய நீர் மின்சக்தி ஆணைக் குழுவுக்கு 18--4--1970-ல் அனுப்பப்பட்டது. மத்திய நீர் மின்விசைக் குழுவின் அனுமதி பெற்றவுடன் வேலை துவக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு அபிவிருத்தித் திட்டத்தை ஒட்டியே மதுரையில் புதிய அணைக் கட்டு ஒன்று நான்கு கோடி ரூபாயில் அமைக்க பரிசீலனையில் இருக்கிறதா? அதன் மீது முடிவு எப்பொழுது எடுக்கப்படும்?



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

### தென்காசி, ராஜபாளையம் பகுதிகளுக்கு பாசன வசதிகள்.

* 278 **வினா—திரு. மு. முத்தையா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியிலிருந்து ராஜபாளையம் வரை ஓடிக்கொண்டிருக்கிற சிறு சிறு ஆறுகளை பரிசீலனை பண்ணுவதற்கு தனியாக அதிகாரிகளை நியமித்து பாசன வசதிக்கு பயன்படுத்தி விவசாயத்தை பெருக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இடமில்லை.

**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பொதிகை மலையில் பல சிறிய நதிகள் மிக வேகமாக ஓடுகின்றன. சில நதிகள் கேரள எல்லையில் ஓடியும் அங்கேயும் பயன்படாமல் இருக்கின்றன. அவற்றை அரசு பரிசீலனையில் எடுத்து, கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, அணைக்கட்டுகள் கட்டுவதன் மூலம் திருநெல்வேலியை வளப்படுத்த முயற்சி எடுக்கப்படுமா? அதைப் பரிசீலனை செய்ய ஒரு குழுவை புதிதாக நியமிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** அத்தகைய கருத்தும் அரசாங்கத்தினுடைய ஆலோசனையில் இருக்கிறது. கேரள சர்க்காரோடு கலந்தாலோசித்து, தண்ணீர் கிடைக்க முயற்சி எடுக்கப்படுகிறது. அதில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கருத்தும் இருக்கிறது.

### *Fuel for Departmental vehicles.*

* 279 Q.—**Thiru N. KASIRAMAN :** Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that instructions have been issued to the Revenue and other departments of the Government of Tamil Nadu that motor fuel required for the departmental vehicles should be purchased only from Indian Oil Corporation consumer pumps belonging to the Government departments; and

(*b*) if so, whether the departmental consumer pumps are supplying the required quantity of motor fuel even during night times for the departmental vehicles?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) ஆம்.

### புதியம்புத்தூரில் தண்ணீர் தொட்டி.

* 280 வினா—திரு. மு. முத்தையா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓட்டப்பிடாரம் ஒன்றியத்தைச் சேர்ந்த புதியம்புத்தூரில் தண்ணீர் தாங்கி கட்டி சாமிநத்தம், நடுவக்குறிச்சி, இராஜாவின் கோயில் ஆகிய கிராமங்களுக்குத் தண்ணீர் பெறச் செய்ய 20--1--1966-ல் மத்திய சர்க்காரால் அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

(உ) தாமதமானதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) & (உ) புதியம்புத்தூருக்கும் அதனை அடுத்து அமைந்துள்ள இராஜாவின் கோவில், சாமிநத்தம், நடுவக்குறிச்சி, தில்லாநத்தம் ஆகிய கிராமங்களுக்கும் ஒருங்கிணைந்த நீர் வழங்கு வசதி ரூ. 5.41 லட்சம் செலவு மதிப்பீட்டில் ஏற்படுத்தித்தரும் செயற்குறிப்பு ஏற்பளிக்கப்பட்டது; இதற்கு மத்திய அரசு சுகாதாரப் பணிகள் தலைமை இயக்குநர் 3-ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது, தேசிய குடிநீர் வழங்குதல், துப்புரவு திட்டத்தின் கீழ் ஏற்பளித்தார். ஆனால் இப்பணியை நிறைவேற்ற எடுத்துக் கொள்வதற்காக நிதி ஒதுக்குதல் குறித்து, இந்திய அரசு திட்டவட்டமான மறுமொழி எதும் அனுப்பவில்லை. எனவே, 3-ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தக் குடிநீர் வழங்கு பணித் திட்டம் நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட முடியவில்லை. இருந்த போதிலும், ஏனைய "இடையூறும் பற்றாக் குறையும் உடைய பகுதிகளுக்கான குடிநீர் வழங்கு பணித்திட்டங்களுடன்" சேர்த்து மாநிலத்தின் 4-வது ஐந்தாண்டுத் திட்ட வரைவினுள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக இப்பணித் திட்டம் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

### தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஏரல் அருகில் பாலம்.

* 281 வினா—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், தாமிரபரணி ஆற்றில் குறுக்கே ஏரல்-தென்திருப்பேரை பாலத்தைத் திருத்தி அமைத்து போக்குவரத்து வசதி செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நெல்லை மாவட்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே, ஏரல் என்ற இடத்தில் பாலத்தை திருத்தி அமைத்து கட்டுவதற்கு அரசு ரூ. 12 லட்சம் அனுமதி அளித்துள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, எப்பொழுது அந்த வேலை ஆரம்பிக்கப்படும்? எவ்வளவு காலத்தில் அது முடிவடையும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அரசு அதற்கான ஆணைகளைப் பிறப்பித்து விட்டது சீக்கிரத்தில் வேலை தொடங்கும்.



### *Bridges in Hosur Taluk.*

* 282 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Miister for Local Administration be pleased to state—

(*a*) whether this Government has received any recommendation from the Collector, Dharmapuri district in regard to the construction of two causeways or bridges on the South Pennar River, at the Villages of (i) Pathakota (ii) Keeranapalli in Hosur Taluk, under the Master Plan; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) ஓசூர் வட்டத்தில் போக்குவரத்து நிலையை சீர்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சியாளர் ரூ. 75 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை தயாரித்து அனுப்பியுள்ளார். பேரவை வினாவில் குறிப்பிட்டுள்ள இரண்டு பால வேலைகளும் இதில் அடங்கியுள்ளன. மேற்குறிப்பிட்ட மதிப்பீடானது பிறகு ரூ. 15.3 இலட்சமாக குறைக்கப்பட்டு அதற்கான திட்டத்தை தலைமைப் பொறியாளர் அனுப்பினார். கிராம வளர்ச்சி நெறியாளரும் இத்திட்டத்தை ஒப்புக்கொண்டார். 1971-72, 1972-73, 1973-74 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 5 இலட்சம், ரூ. 5 இலட்சம், ரூ. 5.37 இலட்சம் செலவிடப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. பேரவை வினாவில் குறிப்பிடப்பட்ட இரண்டு பாலங்களும் திருத்தப்பட்ட இத்திட்டத்தின் கீழ் உள்ளன. எனினும் நிதி பற்றாக்குறை காரணமாக வரும் ஆண்டுகளில்தான் இது பரிசீலிக்கப்பட வேண்டியதாய் உள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH: South Pennar river runs in the centre of the taluk and there are a number of villages on either side of the river all along the course and the two bridges are required at the places mentioned in my question. Therefore will the Hon. Minister reconsider this request and see that orders are passed for the construction of these two bridges?

THE HON. THIRU M. MUTHUSWAMI: The two bridges mentioned in the Legislative Assembly question have been included in the revised plan sent by the Chief Engineer and accepted by the Director of Rural Development. However, due to paucity of funds the question of taking them up has to be considered in future years.

### *Full Educational Grant to Panchayat Unions.*

* 283 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government at present, to sanction full educational grant to the Panchayat Unions which are financially unsound; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) & (இ) ஊராட்சி கல்வி நிதி நிலை நகவல் குழு என்ற ஓர் குழுவினை அரசு அமைத்துள்ளது. இக் குழுவின் விவரமான அறிக்கை வரப்பெற்றபின் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கல்வி மான்யக் குழு உதவி அளிப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டு காலமாக அநேக ஊராட்சி ஒன்றியங்கள் நிதி பற்றுக்குறை காரணமாக, ஆசிரியர்களுக்கு காலாகாலத்தில் சம்பளங்களை வழங்க முடியாத நிலை இருப்பதால், அந்தக் குழு அமைக்கப்பட்டது. அது இன்னும் அறிக்கை தரவில்லை. அதே நேரத்தில் ஏராளமான பஞ்சாயத்து யூனியன்கள் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்களே. அதைப் பரிசீலனை செய்து, அவர்களிடம் ஒரு இன்டரிம் ரிப்போர்ட் வாங்கி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 6—8—1969-ல் தான் அந்தக் குழு அமைக்கப்பட்டது. குழுவேலைகளை முடித்து விட்டதாக தகவல் இருக்கிறது. அவர்களுடைய அறிக்கை இன்னும் சில தினங்களில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்கள், அங்கே ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதிப் பற்றுக்குறை என்று முறையிட்டு வருகிறது. அங்கே பணம் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. கனம் உறுப்பினர் கூறும் குறை இருந்து வருவதை விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. துரைராஜ்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் பற்றுக்குறை அடிக்கடி ஏற்படுகிறது. குழுவின் இறுதியான அறிக்கை வருவதற்குள்ளாக, இடைக்கால நிவாரணமாக முன் பணம் கொடுத்து நிலைமைகளை சமாளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அப்படி எந்த ஊராட்சி ஒன்றியத்திற்காவது பணத்தட்டுப்பாடு என்று, வழிவகை முன்பணம் கேட்டால், அது கொடுக்கப்படுகிறது. சங்கரன்கோவிலிலிருந்து அப்படி கோரிக்கை வந்தால் அது உடனடியாகக் கவனிக்கப்படும்.

திரு. டி. மார்டின்: பேரவைத்தலைவர் அவர்களே, இந்த மாதத்திலேயே சாத்தான்குளம், உடன்குடி ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறார்களே? அவர்களுக்கு உடனடியாக சம்பளம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்தத் தகவலை மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தால், இந்நேரம் பரிகாரம் கண்டிருக்கலாம். உடனடியாக அதைக் குறித்துக் கொடுப்பார்களானால் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

### கொளகட்டூர் கூட்டுறவு கடனுதவிச் சங்கம்.

*284 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் கொளகட்டூர் கூட்டுறவு கடனுதவி சங்கத்தில் மோசடி செய்ததாக கூட்டுறவு இன்ஸ்பெக்டர்கள் உள்பட பலர் மீது டெபுடி கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் 1969 நவம்பரில் புகார் செய்துள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) இன்ஸ்பெக்டர்கள் ஆறு பேர்கள் உட்பட, 11 பேர்கள் கொளகட்டூர் பலநோக்க கூட்டுறவுச் சங்கத்தின் நிதியை ரூ. 35,019 கையாடல் செய்திருப்பதாகக் கணக்குத் தணிக்கை செய்யப்பட்டபோது கண்டுபிடிக்கப்பட்டது. மேல் நடவடிக்கைக்கு, காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா? இம்மாதிரி மற்ற இடங்களில் கூட்டுறவு சங்கங்களில் நடந்தால் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, குற்றம் கண்ட இடத்தில் இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும். சற்று காலதாமதம் ஆகிறது என்பது உண்மை. இதற்காக, கூட்டுறவுச் சங்கங்களில் கண்டுபிடிக்கப்படும் குற்றங்களை மேல் நடவடிக்கை எடுக்க காவல் துறையின் தனிப்பகுதியை விரிவுபடுத்த வேண்டும் என்கின்ற செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

### வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம், கடலூர்

*285 வினா—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலூரிலுள்ள வீடு கட்டும் கூட்டுறவு நிறுவனத்தில் பணம் கையாடல் செய்யப்பட்டதாக அதன் முன்னாள் தலைவர் மற்றும் இருவர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: ஆம்.

திரு. சி. கோவிந்தராஜன்: இந்த வழக்கின் நிலை எப்படி உள்ளது? என்னென்ன குற்றச்சாட்டுகள் மீது வழக்கு தொடரப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்க முன்னாள் அதிகாரிகளான, சுப்பராயுலு ரெட்டியார் என்பவர் ரூ. 500 மோசடி செய்ததாகவும், 409 ஐ.பி.சி. செக்ஷன்படி வழக்குத் தொடரப்பட்டதாகவும், பானுகுமார் நயினார் என்பவர் ரூ. 405 மோசடி செய்ததாகவும், அவர்மீது ஐ.பி.சி. 408-ன் கீழ் கேஸ் போடப்பட்டதாகவும், ஏ. 3, சந்தானம் என்பவர் ரூ. 225 மோசடி செய்ததற்கு ஐ.பி.சி. 408-ல் கேஸ் போடப்பட்டதாகவும், அந்தக் கேஸுகளில், சந்தானம், சுப்பராயுலு ரெட்டியார் இருவர் மீதும் போடப்பட்ட கேசில் கோர்ட்டில் விடுதலை அளிக்கப்பட்டதாகவும், பானுகுமார் நயினார் இறந்துவிட்டதாகவும் தகவல் இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கு இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா? அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களே, எந்த அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்? குற்றமே இல்லையென்று கருதி அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்களா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, கோர்ட்டிலிருந்து அந்த இரண்டு பேர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆகவே, கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதுதான் அர்த்தம். மேற்கொண்டும் தகவல்கள் வேண்டுமானால் உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், விவரம் தரப்படும்.

## கதலீஸ்வரர் கோயில்

*286 வினா—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியிலுள்ள திருக்களம்பூரில் அமைந்திருக்கும் கதலீஸ்வரர் கோயிலின் உள்சுற்றுப் பகுதியில், ‘கதலி’ என்று அழைக்கப்படும் வாழையினம் பல்லாண்டு காலமாகத் தாமே செழித்து வளர்ந்திருப்பதை ஆய்ந்து, பாதுகாக்க அரசு முற்படுமா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** திருமயம் வட்டம், திருக்களம்பூரில் உள்ள கதலீஸ்வரர் கோவிலில் கதலி வாழை மரங்கள் மனித முயற்சியின்றித் தாமாக ஏராளமாய் வளர்ந்திருப்பதாகவும், அவை அவ்வாறு வளர்ந்திருப்பது தெய்வ அம்சம் என்று உள்ளூர் மக்கள் கூறுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது. இந்த வாழை மரங்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கோவிலின் நிர்வாக அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகளில் சிறந்த மருந்துப் பொருளாகக் கருதப்படும் கதலி வாழை இனம் மிகவும் அரிதாக திருக்களம்பூரிலுள்ள கதலீஸ்வரர் கோவிலில் தாமாக வளர்ந்திருக்கிற காரணத்தால், அந்த இனத்தைப் பாதுகாப்பதற்காக தனிப் பணியாளர் ஒருவரை நியமித்து உரிய பாதுகாப்பு அளிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, அதுசம்பந்தமாகத்தான் என்னென்ன பாதுகாப்பு முயற்சிகளையெல்லாம் விரைவிலே செய்யலாம் என்று கோவில் நிர்வாக அதிகாரிகளை ரிப்போர்ட் கேட்டிருக்கிறோம். அந்த ரிப்போர்ட் வந்தபிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைகளும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கட்டாயப் பணிக்கொடைத் திட்டம்

*287 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், தொழிற்சாலைகளில் கட்டாய கிராஜுவிடி திட்டத்தை அமுலாக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன?



**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** (அ) & (இ) சென்னையில், அண்மையில் 10—4—1970 அன்று நடந்த தென்மண்டலத் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில், தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குப் பணிக் கொடை (Gratuities) கொடுப்பதற்காக மத்தியச் சட்டம் ஒன்றை வகுப்பது குறித்து மாநாட்டில் கவனிக்கப்படலாம் என இந்த அரசு கருத்துத் தெரிவித்தது. மாநாட்டின் தலைவரான மத்தியத் தொழிலாளர் நல அமைச்சர் இக்கருத்துப் பரிசீலிக்கப்படவேண்டுமென்று குறிப்பிட்டார். இது குறித்து மத்திய அரசுக்கும் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாக, நம்முடைய மாநிலமே முதன் முதலில் இதுகுறித்து சட்டமன்றத்தில் ஒரு மசோதாவைக் கொண்டு வந்து சட்டமாக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின்மூலமாக நாட்டிலே இருக்கிற எல்லாத் தொழிலாளர்களுக்கும் நன்மை கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான், போனஸ் சட்டத்தைப்போன்ற பொதுவான சட்டத்தை, கிராஜுவிடி சட்டத்தை இயற்ற வேண்டுமென்று நாம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம். நம்முடைய மாநிலத்தின் சார்பில் முதன்முதலில் நாம்தான் இதைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி வலியுறுத்தியிருக்கிறோம்.

**Dr. H. V. HANDE :** Sir, even if there is going to be great delay in getting the approval of the Central Government for this scheme, will this Government come forward to implement it in any industrial undertaking which the Government themselves are running? Also, will this Government invite some of the private industrialists to co-operate in regard to this matter, as many of them might be prepared to implement it voluntarily. So, will this Government come forward to make a beginning in this respect even before the enactment is passed?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே சட்டம் இல்லாமல் இருக்கிற நேரத்திலே பல தொழில் நிறுவனங்கள் கிராஜுவிடி வழங்கிக் கொண்டிருக்கின்றன. எல்லாத் தொழிலாளர்களுக்கும் நன்மை கிடைக்க வேண்டும். எல்லாத் தொழிலாளர்களும் சீரான நிலை பெற வேண்டுமென்பதற்காகத்தான் மத்திய அரசாங்கமே ஒரு பொதுச் சட்டத்தை இயற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். நம்முடைய மாநிலத்தின் சார்பில் மாநிலச் சட்டமாக உருவாக்க வேண்டுமென்று முதலில் பரிசீலித்தோம். பின்னால் சில சங்கடங்கள் வரலாம் என்ற காரணத்தால் மத்திய அரசாங்கமே ஒரு பொதுச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மத்தியத் தொழிலாளர் நல அமைச்சர் திரு. சஞ்சீவையா அவர்களும் தக்க உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். வேஜ் போர்டு முறையில் இந்தச் சட்டத்தைக்கொண்டுவர முயற்சி எடுத்துக்கொண்டு, சட்டம் கொண்டுவந்து அமல் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாய இராஜுடி சட்டத்தை கேரள அரசு நிறைவேற்றியிருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா? வேறு ஒரு ராஜ்யத்திலே இப்படிப்பட்ட சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறபோது, நம்முடைய ராஜ்யத்திலேயும் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏன் தயக்கம் காட்டுகிறார்கள்?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, கேரள அரசாங்கம் சென்ற ஆண்டில்—அவசரச் சட்டத்தின்மூலம்—ஆர்டினன்ஸ் பிறப்பித்தது. போனஸ் சட்டம் போன்று இந்தியா முழுமைக்கும் பொதுச் சட்டம் இருக்க வேண்டுமென்பதற்காக மத்திய அரசாங்கமே ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நாம் முதன்முதலிலே வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். தொழிலாளர்களின் நன்மைக்காக தொழிலாளர் துறை மூலம் நாம் பல சட்டங்களை செய்திருக்கிறோம். 'ஷாப் அண்ட் எஸ்டாபிலிஷ்மென்ட்ஸ் ஆக்ட்' வருவதற்கு முன்னால் பத்து ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியிருந்தாலும் பர்மனென்ட் இல்லையென்று சொல்லி அனுப்பிவிடலாம். அந்த ஆக்ட் கொண்டுவந்து அவர்களுக்கு நன்மை செய்திருக்கிறோம். இந்தியா முழுமைக்குமாக கிராஜுவடி சட்டம் கொண்டுவர வேண்டுமென்று மத்திய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை தொழிலாளர் மாநாட்டிலும் கேட்டுக் கொண்டேன். இதுகுறித்து இந்த மாநில அரசு மத்திய அரசை திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறது. இந்தச் சட்டம் இந்த ஆண்டிலோ அல்லது அடுத்த ஆண்டிலோ விரைவிலே நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Demonstration by employees of Small Engineering Units.*

*288 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the employees of the Small Engineering Units in Ambathur and Guindy demonstrated before the Office of the Tamil Nadu Small Service Industries Corporation in Madras City about 24th May 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : சென்னை அம்பத்தூரில் உள்ள தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தைச் சேர்ந்த சில பிரிவுகளில் பணிபுரியும் சில தொழிலாளர்கள் மௌண்ட் சாலையில் உள்ள நிறுவனத்தின் மத்திய அலுவலகத்திற்கு 23—5—1970 அன்று ஊர்வலமாக வந்து அவர்களது பிரதிநிதிகள் கீழ்க் காணும் ஐந்து கோரிக்கைகள் அடங்கிய ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்தனர் :—

1. மத்திய ஊதியக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துதல்.

2. கோரிக்கை 1 பற்றி எல்லா சங்கங்களிடமும் ஒரே சமயத்தில் பேச்சு வார்த்தை நடத்துதல்.

3. 1—3—1970 முதல் ஒவ்வொரு மாதமும் ரூ. 10 சிறப்பு ஈட்டுப்படியாக வழங்குதல்.

4. பிரிவுகளை மூடுவதற்கான யோசனையைக் கைவிடுதல்.

5. தொழிலாளர் வேலை நீக்கத்தை நிறுத்துதல்.



கோரிக்கைகள் 1-ம் 3-ம் ஏற்கனவே பரிசீலனையில் உள்ளன என்றும் எஞ்சியுள்ள மூன்று கோரிக்கைகள் ஆய்வுசெய்யப்படுமென்றும் நிறுவனத்தாரால் அறிவிக்கப்பட்டதும், தொழிலாளர்கள் கலைந்து சென்றனர்.

திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின்கீழ் சுமார் 25 என்ஜினியரிங் யூனிட்டுகள் இருக்கின்றன. இதில் வேலை செய்பவர்களுக்கு சென்ட்ரல் வேஜ் போர்டு சட்டம் அமலாக்காமல் இருக்கிறது. அவர்கள் அன்றைக்கு ஆர்ப்பாட்டம் செய்ததாகத் தெரிகிறதே, அது சம்பந்தமாக அரசின் நிலை என்ன?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அரசின் நிலை என்னவென்றால், தொழிலாளர்கள் வேஜ் போர்டின் சிபாரிசின்படி ஊதியம் பெற வேண்டுமென்பதுதான். தொழில்துறை மூலமாக தொழிலாளர்களும் நிறுவனமும் பேச்சுவார்த்தை நடத்தி சில செட்டில்மென்டுகளை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். ஒருசில நிறுவனங்களில் பேச்சுவார்த்தை முடிந்தும் இருக்கிறது. பேச்சுவார்த்தை நடக்காத நிறுவனங்கள் இருக்குமானால், தொழிற்சங்கத் தலைவர்களும், நிறுவனமும் கூடிப்பேசி தீர்த்துக்கொள்ளலாம். ஏதாவது கஷ்டங்கள் இருந்து என் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், நானும் என்னுடைய துறையின் மூலமாக தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வழி செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## காவல்துறையினருக்கு ரயிலில் பிரயாணம் செய்ய இலவசப் பயணச் சீட்டுகள்

*259 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல்துறையினருக்கு அவர்கள் வெளியூர்களுக்குச் சென்று வர இலவச ரயில் பாஸ் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அத்தகைய திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, ராணுவத்தினருக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் காவல் துறையினருக்கும் அளிக்கப்படுவது நியாயம் என்பதை நமது அரசு மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி, அதைப் பெறுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்ற ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் இதுபற்றி எடுத்துச்சொல்லப்பட்டு, ஆனால், மத்திய அரசு அந்தச் சலுகைகளை ஏற்றுக்கொள்ள இயலாது என்று தெரிவித்திருக்கிறது.

## *Permission to rear cattle in police lines.*

*260 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal pending now before the Government to permit policemen to rear cows and buffaloes near their houses in the Police lines in Madras?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, confronted with the paltry income which policemen get from the Government, to augment their sources of income honestly they take to rearing of cows and buffaloes and planting of some trees like drumstick trees in their police lines. Previously this was permitted by the previous Government. May I know from the Hon. Chief Minister whether there was any specific reason to prevent the policemen from rearing cows and buffaloes and planting trees in the police lines?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'வைத்துக் கொள்ளக்கூடாது, என்று விதிகள் இருந்தபோதிலும், அநேகமாக போலீசார் தங்களுடைய காலனிகளில் மரங்கள் வைத்துக்கொள்வது, எருமை மாடுகள் வைத்துக்கொள்வது மறுக்கப்படாமல் இருந்து வருகிறது. அதிக அளவிலே போய்விடக்கூடாது என்று அவர்களுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 'மாடுகள் வைத்துக்கொள்ளக்கூடாது' என்று போலீஸ் கமிஷனர் ஒரு உத்தரவை பிறப்பித்த நேரத்தில், அண்ணா அவர்கள், பெருமளவில் இல்லாமல், குறைந்த அளவில் இரண்டு மாடுகள் மட்டும் வைத்துக்கொள்ளலாம் என்று கூறியதற்கிணங்க, அந்த விதி தளர்த்தப்பட்டது. அந்த நிலையே இன்னும் இருந்து வருகிறது.

## *Linguistic Minorities.*

* 261 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Commissioner for Linguistic Minorities visited this State about 17th November 1969;

(b) if so, whether the Government representatives met the Commissioner; and

(c) the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) & (உ) விவர அறிக்கை * பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. அ. சுப்பராஜா : ராஜாபாளையத்தில் பள்ளிக்கூடங்களில் தெலுங்கை கற்பித்துக்கொண்டிருந்தார்கள். இப்போது அறவே நீக்கப்பட்டுவிட்டது. அதைச் சொல்லிக்கொடுப்பதில் தடை இல்லை என்று எனக்குப் பதில் கிடைத்திருக்கிறது. மீண்டும் தெலுங்கைப் புகுத்தும் நோக்கம் சர்க்காருக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த மொழியைப் பயில்வதற்கு போதுமான எண்ணிக்கையுள்ள மாணவர்கள் முன்வந்தால் அதுபற்றி நிச்சயமாகக் கவனிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : I appeared before the Linguistic Minorities Commissioner when she came here in the month of November along with a number of Government Officers.

* 160-161 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



Some others also representing Malayalam, Urdu and Kannada also came. It was pointed out by Government in their memorandum (I have a copy of it here) that a number of local areas have been recognised for teaching of Telugu, Kannada and Malayalam in the entire State and in these areas I wish to say that safeguards for linguistic minorities have not been properly implemented.

MR. SPEAKER : நீங்கள் கேள்வியைப் போடுங்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : I am coming to the question. The peculiar position is that the Linguistic Minorities Commissioner can only recommend and give advice; but has no authority to implement them; the authority to implement them are the State Governments. Unless State Governments take action and implement the recommendations, it is difficult. Our difficulties have been pointed out to her. May I request the Hon. Minister to be kind enough to appoint a Special Officer to go into the question of providing safeguards for linguistic minorities in the State and its implementation?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சிறுபான்மைக் குழுவினர் பற்றி ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவுகளில் ஒன்பது கோரிக்கைகளின் கீழ் அந்த அந்த துறை தலைவர்களுடன் கலந்து நடவடிக்கை எடுக்க யோசிக்கப்பட்டு வருகிறது. ராஜபாளையத்தைப்பற்றிக்கூட உறுப்பினர் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும் குறைந்தபட்சம் ஒரு வகுப்புக்கு 15 மாணவர்கள் மீது மூன்று வகுப்புகளில் 45 மாணவர்கள் இருந்தால் தனி வகுப்பே துவங்கப்படும். இங்கு வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை ஆராய்ந்து முடிவு எடுக்க அரசு தயாராய் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கன்னியாகுமரி ஜில்லாவில் மலையாள மைனாரிடிகள் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பெண்கள் ட்ரெயினிங் படிக்க வழியில்லை. அதற்கு ஏதாவது வசதி செய்து கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு போன்ற இடங்களில் சிறுபான்மையினர் வசிக்கிறார்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட உதவிகளை செய்யவேண்டுமென்ற கருத்து ஆராய்ந்து ஏற்ற முடிவு எடுக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர். முஹம்மது : சிறுபான்மை மொழியினர் ஆணையாளரை இந்த நாட்டில் உள்ள உருதுமொழி பேசுகின்ற சிறுபான்மையினர் சந்தித்தார்களா? உருது மொழியைப் பயின்று வளர்ப்பதற்கு உருது மொழி சிறுபான்மையினருக்கும் வசதி அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த ஆணையரை சந்தித்தவர்களில் முஸ்லீம் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். திரு. வெங்கடசாமியும் இருக்கிறார். பலதுறை அதிகாரிகள் இருக்கிசீர்கள். முஸ்லீம் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள் என்பதால் உருதுமொழியைப் பற்றி பேசியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

DR. H. V. HANDE : Is the Hon. Minister aware of the fact that in the last three or four years where there were previously Telugu medium in Government Arts College (there was Kannada section also there as second language) progressively the seats for these languages, have been reduced, even though it is of course stipulated that for this, a certain minimum number should come in? Will the Government take into consideration the fate of large number of students and their parents who are likely to be transferred to Madras and those who had been here even before the division of this State? Will the Government view this question sympathetically and give instruction to the officers, not to view this question on the rule of law but more sympathetically?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்கு ஒரு தனிக் கேள்வியை நண்பர் ஹாண்டே அவர்கள் போடுவார்களானால் கல்வி அமைச்சரே விவரமான பதிலை அளிக்க முடியும்.

திரு. கே. விநாயகம் : நமது மாநிலத்தில் இருக்கிற பிறமொழி சிறுபான்மையோருக்கு போதிய அளவு பாதுகாப்புத் தரவேண்டும் என்பதில் அபிப்பிராய பேதம் இல்லை. ஆயினும் நமது மாநிலத்திற்கு அண்டையில் இருக்கிற பகுதிகளில் மிக அதிக அளவில் சிறுபான்மையினராக வாழும் தமிழர்களுக்கு— நகரி, பத்தூர், திருப்பதி, திருமலை போன்ற இடங்களில் அதிகமாகத் தமிழர்கள் வாழ்ந்தாலும் இவர்கள் தமிழே படிக்கக் கூடாது என்ற விதியை அந்த அந்த மாநில சர்க்கார் போட்டிருப்பது தெரியுமா? நாம் எப்படி பிற மொழி சிறுபான்மையோருக்கு என்ன என்ன வசதிகளை அளிக்கிறோமோ அது போலவே அண்டை மாநிலங்களில் உள்ள நம் மொழியினருக்கு அந்த அந்த அரசாங்கம் போதிய பாதுகாப்புகளைத் தரவேண்டும் என்பதை இந்த அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சிறுபான்மை மொழி ஆணையர் முன்பு இதுபற்றியும் பேசப்பட்டு இருக்கிறது. ஏனைய மாநிலங்களிலும் இதுபோன்ற சலுகைகளை நம்முடைய மொழி சிறுபான்மையோருக்கு அளிக்க அவர்களது இசைவைப் பெற அரசு எழுதியிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தமிழைத் தவிர கன்னடம் பேசும் மக்கள் தாளவாடி பிர்க்காவில் மிக அதிகமாக இருப்பதனால் அங்கே கன்னட பள்ளிக் கூடங்களை அதிகமாக்க சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் குழுவின விவாதத்தில் அளிக்கப்பட்ட பரிந்துரைகளின் வரிசையில் தொடக்கப்பள்ளி முதல் கல்லூரி வரையில் கன்னட மொழியில் படிப்பதற்கு வசதி செய்வதுபற்றிய பரிந்துரை இருக்கிறது.

### செங்கற்பட்டு நகரில் ஜாதிப் பெயர்களையுடைய தெருக்கள்

* 362 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969-ஆம் ஆண்டு, ஜூலை மாதம், செங்கல்பட்டு நகராட்சிக் கூட்டத்தில், நகரில் ஜாதிகளைக் குறிக்கும் தெருப் பெயர்களை நீக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றியுள்ளதா?



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : செங்கற்பட்டு நகராட்சியில் உள்ள சாதிப் பெயருடன் கூடிய தெருக்களைப் பொறுத்த வரையில் அவற்றில் நபர்களின் பெயர்களை மட்டும் நிறுத்திக் கொண்டு சாதிப் பெயர்களை நீக்க ஒப்பளிப்பு வழங்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டு, 30—6—1969 அன்று நடந்த தனது கூட்டத்தில் செங்கற்பட்டு நகராட்சி மன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

திரு. என். கிட்டப்பா : செங்கற்பட்டு நகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்போல தமிழகத்தில் வேறு எந்த, எந்த நகராட்சிகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சாதிப்பெயர்களை நீக்க வேண்டும் என்று மதுரை, இராமநாதபுரம், கிருஷ்ணகிரி, தாம்பரம் போன்ற இடங்களில் இருந்தும் தீர்மானம் போடப்பட்டு வந்து அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. வேறு சில இடங்களுக்கு அனுமதி வழங்கவும் யோசிக்கப்பட்டு வருகிறது.

### *Harijan Colony at Pullarambakkam*

* 266 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the construction of houses in the Harijan colony at Pullarambakkam, Tiruvellore taluk, Chingleput district started during the previous Ministry has been completed; and

(*b*) if not, the reasons for the same?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) புள்ளரம்பாக்கம் கிராமத்திலுள்ள எஸ். விஜயன் என்பவரிடம் வீடுகள் கட்டும் வேலை ஒப்படைக்கப்பட்டது. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் மீண்டும் மீண்டும் உத்தரவுகளும், கட்டளைகளும் பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வேலையை முடிப்பதற்கு அவர் உண்மையாக முயற்சிகள் எடுத்துக்கொள்ளவில்லை. அவ்வேலையை விரைந்து முடிக்கத் தேவையான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்து வருகிறார்.

DR. H. V. HANDE : Is it not a fact that the beneficiaries of these 10 huts received an amount of Rs. 10,000 and odd as loan and the Special Tahsildar instructed that this amount should be paid to the contractor after the contractor had built the houses? In view of the fact that the money has been paid, and the houses have not been constructed, will the Hon. Minister give an assurance asking these people not to pay loans back till the houses are properly built by Governmental Departments?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படித் தான் நன்மை அடைகிறவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் கொடுத்த பணத்தையும் அவர் வாங்கிக்கொண்டிருக்கிறார். இதுவரையிலும் 11,156 ரூபாய் வாங்கியிருக்கிறார். இன்னும் 8 ஆயிரம் சொச்சம் கொடுத்தால் அவரே கட்டிக்கொடுப்பதாகச் சொல்கிறார், மாவட்ட ஆட்சியாளர் இவற்றைக் கட்டி முடிக்க எல்லா நடவடிக்கையும் எடுத்து வருகிறார். மேற்கொண்டு பணத்தைக் கொடுத்து இவரையே கட்டச் சொல்லலாம். அல்லது வேறு யாரையாவது கட்டச் சொல்லலாம்.

### தஞ்சாவூர், பூதலூர் பகுதிகளில் நிலக்கடலைப் பயிர்கள்

*267. வினு.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை, பூதலூர் பகுதிகளில் புழுக்களின் காரணமாக நிலக்கடலைப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) இதை தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) நிலக்கடலையில் சிவப்புக் கம்பளிப்பூச்சி சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தஞ்சாவூர் வட்டாரத்தில் வல்லம் பகுதிகளிலும் பூதலூர் வட்டாரத்தில் செங்கிப்பட்டி பகுதிகளிலும் தோன்றியது.

(இ) இப்பூச்சி தோன்றுவதற்கு முன்பாகவே சென்ற ஆண்டு ஜுலை மாதத்திலிருந்தே விவசாயிகளுக்கு பிரசுரங்கள் மூலமும் விரிவினைப் பணியாளர்கள் மூலமும் வானொலி மூலமும் தடுப்பு முறையாக மருந்தடிக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் முதல் தடவையாக பூச்சி தோன்றிய தருணத்தில் 1,270 ஏக்கர்களிலும் இரண்டாவது முறையாக அக்டோபர் மாதத்தில் தோன்றிய தருணத்தில் 1,210 ஏக்கர்களிலும் மருந்தடித்துப் பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டன.

முற்பகல் 10-00 திரு. வை சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இம்மாதிரி பூச்சிகள் மறுபடியும் வராமலிருக்க ஆரம்பத்திலேயே இதைக் கவனித்து தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்யப்படுமா? சென்ற ஆண்டு இந்த பூச்சி வந்ததன் காரணமாக எவ்வளவு ஏக்கர் பாதிக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, பூச்சிகள் உடனே தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டதாகத்தான் குறிப்பில் இருக்கிறது. பூச்சி பிடிக்காமல் இருப்பதற்காக என்னென்ன எதிர்ப்பு முறைகள் எடுக்கவேண்டுமென்றுதான் 'எக்ஸ்டன்ஷன் ஆபிஸர்கள்,' மூலமாகவும், வானொலிகள் மூலமாகவும் பிரசாரம் செய்து அவ்வப்போது அறிவித்துக் கொண்டு இருக்கிறோம். கவனக்குறைவாக உள்ள விவசாயிகள் இருப்பதினாலே பூச்சி வருகிறது. அப்படியே வந்தாலும் இலாகா தடுப்பு நடவடிக்கை எடுத்துத் தடுத்து வருகிறது. கடந்த ஆண்டிலே எந்த இடத்திலும் நாசம் ஏற்படவில்லை. தடுக்கப்பட்டிருக்கிறது.

### *Film Projector for Coimbatore Agricultural College.*

*268 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether a number of 35 m.m. projector with accessories were purchased for the Agricultural College at Coimbatore during October-November 1969 ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: 35 மி.மீ. திரைப்படம் காட்டும் கருவி ஒன்று வாங்கப்பட்டு, பொதுப்பணித்துறை மின்சாரப் பொறியாளரால், கோயம்பத்தூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவப்பட்டு வருகிறது.





## வெள்ளிக்குறியிடப்படாத வினுக்கள்

### மேஜர் பஞ்சாயத்துக் கிளை நகராட்சி மன்றங்களாக்கல்

1 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1970–71-ல் எந்தெந்த மேஜர் பஞ்சாயத்துக்கள் நகராட்சி மன்றங்களாக ஆக்க அரசு உத்தேசித்துள்ளது ?

விடை—சில பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றி அமைக்கும் பிரச்னையை அரசு பரிசீலித்தது. ஆனால் அதை தற்போதைக்கு தள்ளி வைக்க முடிவு எடுத்தது. ஆயினும் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள மாதவரம், கத்திவாக்கம் பேரூராட்சிகளை நகராட்சி சட்டத்தின்கீழ் இயங்கும் நகரியங்களாக மாற்றி அமைக்கும் எண்ணத்துடன் நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன.

*A.*—The Government considered the question of constituting municipalities for certain town panchayats but deferred it for the present. But the Government propose to constitute Municipal Townships for the Madhavaram and Kathivakkam Town Panchayats in the Chingleput district and steps are being taken in this regard.

### விதைப் பண்ணைகள்

2 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள விதைப் பண்ணைகளின் மொத்த பரப்பளவு என்ன, மாவட்ட வாரியாக ?

விடை—மாவட்டவாரியாக உள்ள விதைப் பண்ணைகளின் மொத்த பரப்பளவு கீழ் கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ஏக்கர். | | ஏக்கர். |
|---|---|---|---|
| 1 செங்கற்பட்டு .. | 339·27 | 7 இராமநாதபுரம் .. | 329·64 |
| 2 வட ஆற்காடு .. | 322·73 | 8 கன்னியாகுமரி .. | 77·45 |
| 3 தென் ஆற்காடு .. | 515·94 | 9 திருநெல்வேலி .. | 455·32 |
| 4 தஞ்சாவூர் .. .. | 830·07 | 10 கோயம்புத்தூர் .. | 313·43 |
| 5 திருச்சிராப்பள்ளி .. | 605·20 | 11 சேலம் .. | 427·37 |
| 6 மதுரை .. .. | 362·08 | 12 தர்மபுரி .. | 55·20 |

*A.*—The following are the district-wise particulars of area of State Seed Farms in the State :—

| | ACRES. | | ACRES. |
|---|---|---|---|
| 1 Chingleput .. | 339·27 | 7 Ramanathapuram. | 329·64 |
| 2 North Arcot .. | 322·73 | 8 Kanyakumari .. | 77·45 |
| 3 South Arcot .. | 515·94 | 9 Tirunelveli .. | 455·32 |
| 4 Thanjavur .. | 830·07 | 10 Coimbatore .. | 313.43 |
| 5 Tiruchirappalli .. | 605·20 | 11 Salem .. | 427·37 |
| 6 Madurai .. .. | 362·08 | 12 Dharmapuri .. | 55·20 |

## மீனவர்களுக்கு மீன்பிடி படகுகள்

3 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை-அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969-70-ல் அரசினர் தமிழ்நாட்டு மீனவர்களுக்காக வழங்கிய மீன்பிடி தோணிகள், ஸ்டீம் லாஞ்சுகள் எத்தனை—மாவட்டவாரியாக ?

விடை—மீனவர் தொகுதிகளுக்குக் கட்டுமரங்கள் வழங்க வகை செய்யும் திட்டம் எதுமில்லையாதலால் 1969-70-ஆம் ஆண்டில் அவர்களுக்குக் கட்டுமரங்கள் அளிக்கப்படவில்லை.

(2) மூழ்கிய மற்றும் சேதமடைந்த படகுகளுக்குப் பதிலாக 1969-70-ம் ஆண்டில் 30 அடி படகுகள் பதினொன்றும் 32 அடி படகுகள் ஏழும் மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்டன.

| மாவட்டத்தின் பெயர். | 30 அடி படகுகள். | 32 அடி படகுகள். |
|---|---|---|
| சென்னை .. .. .. | 4 | 2 |
| செங்கற்பட்டு .. .. .. | ஒன்றுமில்லை. | 1 |
| தென் ஆற்காடு .. .. | 2 | ஒன்றுமில்லை. |
| தஞ்சாவூர் .. .. .. | ஒன்றுமில்லை. | 2 |
| இராமநாதபுரம் .. .. | 1 | ஒன்றுமில்லை. |
| கன்னியாகுமரி .. .. | 4 | 2 |
| | 11 | 7 |

*A.*—There is no scheme for the allotment of catamarans to fishermen groups and as such there was no allotment of catamarans to the fishermen groups during 1969-70.

(2) Eleven numbers of 30′ boats and seven numbers of 32′ boats were allotted to fishermen groups during the period 1969-70 for replacement of sunken and damaged boats as detailed below :—

| *Name of the district.* | *30′ boats.* | *32′ boats.* |
|---|---|---|
| Madras .. .. .. .. | 4 | 2 |
| Chingleput .. .. .. | Nil. | 1 |
| South Arcot .. .. .. | 2 | Nil. |
| Thanjavur .. .. .. | Nil. | 2 |
| Ramanathapuram .. .. | 1 | Nil. |
| Kanyakumari .. .. .. | 4 | 2 |
| | 11 | 7 |

## அரிசனக் குடியிருப்புக்களுக்கு கிணறு வெட்ட மானியம்.

4 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மாயூரம் தொகுதியில் 1969-70-ம் ஆண்டில் அரிசன நலத் துறை மூலமாக எத்தனை அரிசனக் குடியிருப்புகளுக்கு கிணறுகள் வெட்ட மானியம் வழங்கப்பட்டுள்ளது ?

விடை—அம்மாதிரிமானியம் 1969-70-ம் ஆண்டில் எந்த அரிசனக் குடியிருப்புக்கும் வழங்கப்படவில்லை.



## தீவிர சாகுபடித் திட்டம்.

5 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை—அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் அமுலில் இருந்துவரும் Package Scheme-ஐ மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ?

(இ) இதற்காக 1969-70-ஆம் ஆண்டில் மத்திய சர்க்காரின் நிதி உதவி கிடைத்துள்ளதா?

(உ) உரம், நவீன கருவிகள் முதலியன மேற்படி ஆண்டில் மத்திய சர்க்காரிடமிருந்து கிடைத்துள்ளதா ?

விடை—(அ) தஞ்சை மாவட்டத்தில் அமுலில் இருந்துவரும் தீவிர சாகுபடித் திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

(இ) தீவிர சாகுபடித் திட்டத்தை 1969-70-ம் ஆண்டில் மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கும் பொருட்டு மத்திய சர்க்காரின் நிதி உதவி எதும் கிடைக்கவில்லை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தஞ்சைத் தீவிர சாகுபடி திட்டத்துக்காக 1969-70-ம் ஆண்டுக்கு கீழ்க்கண்ட பிரிவுகளுக்கு மத்திய அரசினரிடமிருந்து உதவி கிடைத்துள்ளது :—

| | மொத்தச் செலவு. |
|---|---|
| | ரூ. பை. |
| 1. தீவிர சாகுபடித் திட்டத்தின் நடைமுறை முதலிய பயிற்சி (Programme of work Training Course for Package Officials). | 1,297·28 |
| 2. பெஞ்ச் மார்க் சர்வே (புள்ளி விவரம் சம்பந்தப் பட்டது). | 2,047·85 |
| 3. நிருபணங்கள் (Demonstrations) .. .. | 1,50,088·65 |
| 4 விளம்பரப் பிரிவிற்கு உபகரணம் வாங்க .. .. | 10,258·93 |
| 5. அம்பாசிடர் கார் வாங்குதல் .. .. .. | 20,182·50 |
| 6. விசைத் தெளிப்பான்கள் வாங்க (Power Sprayers ) | 3,03,671·73 |
| | 4,87,546·94 |
| | அல்லது 4·88 லட்சம் * |

(உ) தீவிர சாகுபடித் திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கும் பொருட்டு மத்திய அரசிடமிருந்து உரங்களோ, நவீன கருவிகளோ 1969-70-ம் ஆண்டில் கிடைக்க வில்லை.

ஆயினும், தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் 350 விசைத் தெளிப்பான்கள் 3·03 லட்ச ரூபாய் செலவில் 1969-70-ம் ஆண்டில் வாங்கப்பட்டன. இந்தத் தொகையில் 30 சதவீதத்தை மத்திய அரசு தமிழ்நாட்டுக்காக ஒதுக்கியுள்ள மொத்த திட்டச் செலவின் விகிதாசாரத்தின்கீழ் ஏற்கும்.

## *Production of Foodgrains*

6 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) The quantum of Food Production in this State during 1969-70, 1971 ; and

(*b*) The steps taken to improve the production ?

* இந்தத் தொகையில் 30 சத வீதத்தை மத்திய அரசு ஏற்கும்.

A.—(a) As per final forecast the production of foodgrains during 1969-70 is estimated at 62,48,860 M.T. Target fixed for 1970-71 is 67 lakhs tonnes.

(b) In order to increase food production, a number of special programmes like High Yielding Varieties Programme Navarai Porgramme, Multiple Cropping Programme, Intensive Agriculture District Programme (in Thanjavur District), extensive well sinking programme, etc., are being implemented and these programmes are expected to contribute to a sizeable increase in the level of production of foodgrains.

## உணவு கலப்படத் தடைச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட்டவர்கள்

7 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-70-ஆம் ஆண்டில் உணவு கலப்படச் சட்டத்தின்கீழ் மாயூரம் நகரில் தொடுக்கப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(இ) அவைகளில் தண்டனை கிடைத்தது எத்தனை பேருக்கு ?

விடை—(அ) 18.

(இ) 15.

## ஜவ்வாது மலையில் விற்பனை செய்யப்பட்ட சந்தன மரங்கள்.

8 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1969-70-ம் ஆண்டில் ஜவ்வாது மலையில் சந்தனக் கட்டையின் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

விடை—1969-70-ம் ஆண்டில் ஜவ்வாது மலையில் சந்தனக்கட்டை விற்பனையின் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 82,93,409.30 ஆகும்.

A.—The Revenue realised by sale of sandalwood in the Javadi Hills during 1969-70 is Rs. 82,93,409·30.

## மாயூரம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் வழங்கப்பட்ட வீட்டு மனைகள்

9 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுகாவில் மாயூரம் யூனியன் பகுதியில் 1967 பிப்ரவரிக்கும் பின்னல் சர்க்கார் புறம்போக்கு இடங்களில் எத்தனை பேர் களுக்கு குடி இருப்பு மனைக்காக இலவச பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன ?

(இ) அதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எத்தனை பேர்களுக்கு வழங்கப் பட்டது ?

விடை—(அ) 851

(இ) 697

## முதுமலை வன விலங்குகள் சரணலயம்

10 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம் முதுமலைக் காட்டில் வன விலங்குகளின் சரணலயத் தில் தற்போது எந்தெந்த மிருகங்கள் பாதுகாக்கப்படுகின்றன ?

விடை—நீலகிரி மாவட்டம் முதுமலை வனவிலங்கு உய்விடத்தில், விலங்கு கள் எல்லாவற்றிற்கும் முழுப் பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது.





இந்தியக் காட்டு எருமை (Bison), யானை, சிறுத்தை, நரி, கழுதைப் புலி, கீரி, காட்டுப் பூனை, புனுகுப் பூனை, பழுப்பு வண்ணப் புள்ளிகள் கொண்ட பூனை, மலபார் மலை அணில், சிறுத்தைப் பூனை ஆகியவை பொதுவாக உய்விடத்தில் காணப்படும் விலங்குகளாகும்.

எறும்புண்ணும் விலங்கு, தேனுண்ணுங்கரடி, காட்டுப் பன்றி, முள்ளம்பன்றி, காட்டு நாய், புலி ஆகியவை உய்விடத்தில் அபூர்வமாக காணப்படும் விலங்குகளாகும்.

மறிமான், புள்ளிமான், நான்கு கொம்புகளைக் கொண்ட கலைமான், எலிமான், பறக்கும் அணில், காட்டு ஆடு நீண்ட வாலுடைய குரங்கு வகை, நாட்டுக் குரங்கு ஆகிய பிற விலங்குகளும் உய்விடத்தில் காணப் படுகின்றது.

A.—All the animals in the Mudumalai Wild Life Sanctuary in the Nilgiris district are completely protected.

The following animals are commonly seen in the sanctuary, i.e., Indian Gaur (Bison), elephant, panther, jackal, hyaena, mongoose, wild cat, civet cat, rusty spotted cat, giant Malabar squirrel and the leopard cat.

The following animals are rarely seen in the sanctuary (i.e.), scaly ant-eater or pangolin, sloth bear, wild pig, porcupine, wild dog and tiger.

Other animals which are also found in the sanctuary, are Sambhar, spotted deer, four-horned antelope, mouse deer, flying squirrel, barking deer, common langur and the bonnet monkey.

## தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்ட நக்சல்பாரி கம்யூனிஸ்ட்டுகள்

11 வினு—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் நாளதுவரைக் கைது செய்யப்பட்ட நக்சல்பாரி கம்யூனிஸ்ட்டுகள் எத்தனை பேர் ?

விடை—1968-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் 1970-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதி வரை தமிழ்நாட்டில் 43 நக்சல் பாரி கம்யூனிஸ்ட்டுகள் கைது செய்யப்பட்டார்கள்.

A.—Forty-three Naxalites have been arrested in Tamil Nadu between 1st January 1968 and 30th June 1970.

## சவிரியப்ப உடையார் உயர்நிலைப்பள்ளிக்கான மான்யம்

12 வினு—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உத்தமபாளையம், ராயப்பன்பட்டியில் உள்ள சவிரியப்ப உடையார் உயர்நிலைப்பள்ளிக்கு 1966-67, 1967-68 ஆண்டுகளில் தளவாட மான்யமாக எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

(இ) தளவாட சாமான்கள் எந்த மரத்தில் செய்யப்பட்டுள்ளன ?

விடை—(அ) இந்த ஆண்டுகளில் தளவாட மான்யம் வழங்கப்படவில்லை.

(இ) மருதும், செங்கோனும்.

A.—(a) No equipment grant has been paid for these years.

(b) Maruthu and Sengona.

## கூட்டுறவு சிறப்பு அங்காடிகள்

13 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1965, 1966, 1967, 1968-69-ம் ஆண்டுகளில், தமிழகத்தில் உள்ள சூப்பர் மார்க்கெட்டுகளில் எதேது லாபமாக நடைபெற்றது ?

விடை—1965-66-ம் (1—7—1965 முதல் 30—6—1966 வரை) ஆண்டில் தமிழகத்தில் கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் ஆரம்பிக்கப்படவில்லை. 1966-67-ம் ஆண்டு முதல் 1968-69 வரை லாபத்தில் நடைபெற்ற சிறப்பு அங்காடிகளின் விவரம் வருமாறு :—

| 1966-67 (1—7—1966 முதல் 30—6—1967 வரை). | 1967-68 (1—7—1967 முதல் 30—6—1968 வரை). | 1968-69 (1—7—1968 முதல் 30—6—69 வரை). |
|---|---|---|
| 1. காமதேனு (தென் சென்னை). | 1. காமதேனு (தென் சென்னை). | 1. காமதேனு (தென் சென்னை). |
| 2. சேலம். | 2. சேலம். | 2. சேலம். |
| | 3. சிந்தாமணி (கோயம்புத்தூர்). | 3. சிந்தாமணி (கோயம்புத்தூர்). |
| | 4. கற்பகம் (வேலூர்) | 4. கற்பகம் (வேலூர்). |
| | | 5. திருச்சி. |
| | | 6. மதுரை. |
| | | 7. சரவணபவ (கடலூர்). |
| | | 8. பகவதி (நாகர் கோயில்). |

14 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the name of the supermarkets that are working on profit for the past continuous three years and also the profits earned by them; and

(*b*) the names of those supermarkets that are working on loss for the past three continuous years and also the amount of loss sustained by them ?

*A.*—(*a*)

| *Name of the Supermarket.* | *Profit earned.* | | |
|---|---|---|---|
| | 1966-67. | 1967-68. | 1968-69. |
| | (RUPEES IN LAKHS) | | |
| 1 Kamadhenu Co-operative Supermarket, Madras. | 0·32 | 0·81 | 0·28 |
| 2 Salem Co-operative Supermarket, Salem. | 0·34 | 0·49 | 0·81 |

(*b*) No supermarket has worked on loss continuously for the past three co-operative years.



விடை—(அ)—

| சிறப்பு அங்காடிகள். | அடைந்த லாபம். | | |
|---|---|---|---|
| | 1966-67. | 1967-68. | 1968-69. |
| | (ரூபாய் லட்சங்களில்.) | | |
| 1 காமதேனு கூட்டுறவு சிறப்பு அங்காடி, சென்னை. | 0·32 | 0·81 | 0·28 |
| 2 சேலம் கூட்டுறவு சிறப்பு அங்காடி. | 0·34 | 0·49 | 0·81 |

(ஆ) எந்தக் கூட்டுறவு சிறப்பு அங்காடியும் தொடர்ந்தாற்போல் கடந்த மூன்று கூட்டுறவு ஆண்டுகளில் நட்டத்தில் வேலை செய்யவில்லை.

15—*Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) Whether a large quantity of silk sarees has been ordered by person in charge of the supermarket (Karpagam) at Vellore from Darasuram Silk Weavers' Co-operative Society at Dharapuram.

(*b*) If so, the total quantity of silk sarees (in numbers) and the dates on which so orderd ; and

(*c*) the stock as on 31st March 1970 and how long they are in stock ?

*A.*—(*a*) Yes.

(*b*) 93 silk sarees were purchased on 25th November 1968.

(*c*) As on 31st March 1970 83 silk sarees were held in the stock since 25th November 1968.

விடை.—(அ) ஆம்.

(இ) 1968-ம் வருஷம் நவம்பர் மாதம் 25-ம் தேதியில் 93 பட்டுப் புடவைகள் வாங்கப்பட்டன.

(உ) 1970-ம் வருடம் மார்ச்சு மாதம் 31-ம் தேதி அன்று 83 பட்டுப் புடவைகள் 1968-ம் வருஷம் நவம்பர் மாதம் 25-ம் தேதி முதல் இருப்பில் உள்ளன.

16—*Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon the the Minister for Co-operation be pleased to state—

The profit or loss of 'Karpagam' Supermarket at Vellore for the years 1968-69 and 1969-70 ?

*A.*—The profits earned by the 'Karpagam' Co-operative Supermarket, Vellore, during the year 1968-69 and 1969-70 are given below :—

| *Year.* | *Profit earned (tentative).* |
|---|---|
| | RS. P. |
| 1968-69 .. .. .. | 22,548 42 |
| 1969-70 .. .. .. | 42,368 83 |

விடை—1968-69, 1969-70 ஆண்டுகளில் வேலூர் கற்பகம் கூட்டுறவு சிறப்பு அங்காடியில் ஏற்பட்ட லாப விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வருடம். | உத்தேச நிகர லாபம். |
|---|---|
| 1968-69 .. .. .. | ரூ. 22,548·42 |
| 1969-70 .. .. .. | ரூ. 42,368·83 |

## தொழிலாளர் குறை தீர்ப்பு கமிட்டிகள்.

17—வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எத்தனை தொழில் நிறுவனங்களில் தற்போது " குறை தீர்ப்பு கமிட்டி " அமைக்கப்பட்டுள்ளது ?

விடை—" குறை தீர்ப்பு கமிட்டி" இதுவரை 128 தொழில் நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :—

| | |
|---|---|
| நெசவுத் தொழில் .. .. .. | 38 |
| சர்க்கரைத் தொழில் .. .. .. | 7 |
| பொறியியல் .. .. .. .. | 19 |
| தோட்டத்தொழில் .. .. .. | 38 |
| இதரத் தொழில்கள் .. .. .. | 28 |
| மொத்தம் .. | 128 |

*A.*—Grievance Committee have been constituted in 128 industrial establishments in this State so far and the industry-wise break-up figures are as follows :—

| | |
|---|---|
| Textiles .. .. .. .. | 38 |
| Sugar .. .. .. .. | 7 |
| Engineering .. .. .. .. | 19 |
| Plantation .. .. .. .. | 38 |
| Miscellaneous .. .. .. | 28 |
| Total .. | 128 |

## கதர் விற்பனை

18—வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் கதர் விற்பனை மூலம் எவ்வளவு ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது

விடை—சுமார் ரூ. 16 லட்சங்கள்.

*A.*—About Rs. 16 lakshs.

## பர்மாவிலிருந்து தாயகம் திரும்பி தஞ்சை மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டவர்கள்.

19—வினா—திரு. ஆ. கு. சுப்பையா : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் பர்மா அகதிகள் எத்தனை பேர்கள் தற்போது இருக்கிறார்கள் ?

(இ) அவர்களில் தொழில் செய்ய கடன் கோரி விண்ணப்பம் செய்தவர்கள் எத்தனை பேர்கள் ?

(உ) இதுவரையில் 1969–70 வருடம் முடிய கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(எ) தஞ்சை நகரத்தில் மட்டும் மனு செய்தவர்கள் எத்தனை பேர்கள் ? எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது ?



விடை—(அ) தஞ்சை மாவட்டத்தில் பர்மா அகதிகள் 22,005 பேர்கள் (7,095 குடும்பங்கள்) இருக்கிறார்கள்.

(இ) அவர்களில் 5,763 குடும்பங்கள் தொழில் செய்யக் கடன் கோரி விண்ணப்பம் செய்துகொண்டார்கள்.

(உ) 1969–70 முடிய கொடுக்கப்பட்ட கடன் தொகை ரூ. 35,12,366·96

(எ) தஞ்சை நகரில் மட்டும் மனு செய்தவர்கள் 3,662 குடும்பங்கள். கொடுக்கப்பட்ட கடன் தொகை ரூ. 17,46,950.

*A.*—(*a*) There are 22,005 Burma Repatriates (7,095 families) in Thanjavur district.

(*b*) 5,763 families have applied for business loan.

(*c*) Up to the end of 1969–70, a sum of Rs. 35,12,366·96 has been sanctioned as loan.

(*d*) In Thanjavur town 3,662 families applied for business loan and a loan of Rs. 17,46,950 has been sanctioned.

## *Soil Testing Laboratories*

20 *Q.*—THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) the number of soil testing centres functioning now in the State ; and

(*b*) the number of additional soil testing centres proposed for the year 1970–71 and the names of the places, where they are to be established.

*A.*—(*a*) Nine Soil Testing Laboratories are functioning in the following places :—

(i) Coimbatore.
(ii) Aduthurai.
(iii) Kovilpatti.
(iv) Cuddalore.
(v) Kancheepuram.
(vi) Gudiyatham.
(vii) Madurai.
(viii) Salem.
(ix) Ootacamund.

(*b*) Two Soil Testing Laboratories are to be established during 1970–71, one at Tiruchirappalli and another at Paramakudi in Ramanathapuram district.

விடை—(அ) ஒன்பது மண்வள ஆய்வுக் கூடங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன :—

(1) கோயம்புத்தூர்.
(2) ஆடுதுறை.
(3) கோவில்பட்டி.
(4) கடலூர்.
(5) காஞ்சீபுரம்.
(6) குடியாத்தம்.
(7) மதுரை.
(8) சேலம்.
(9) உதகமண்டலம்.

(இ) 1970–71-ல் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடியில் ஒன்றுமாக இரு மண்வள ஆய்வுக்கூடங்கள் நிறுவப்பட இருக்கின்றன.

(உ) நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவில் வீட்டு வசதிக்காக ரூ. 30·30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1970-71-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 477·68 லட்சம்.

| திட்டத்தின் பெயர். | ஒதுக்கப்பட்ட தொகை. | ஒதுக்கப்பட்ட தொகை. 1970-71 |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1 தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டம். | 1,50 | 13·96 |
| 2 தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம். | 10 | 2·00 |
| 3 கிராம வீட்டு வசதித் திட்டம் .. .. | 50 | 6·72 |
| 4 குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு வசதி. | 5,20 | 55·00 |
| 5 சேரி மேம்பாடு/அகற்றுதல் திட்டம் .. | 8,00 | 1,00·00 |
| 6 நிலக் கையகப்படுத்துதல் மேம்பாட்டுத் திட்டம். | 5,00 | 1,60·00 |
| 7 நடுத்தர வருமானமுள்ளோர்களுக்கு வீட்டு வசதித் திட்டம். | 5,00 | 65·00 |
| 8 தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டம். | 5,00 | 75·00 |
| | 30,30 | 4,77·68 |

*Canvas belts purchased by State Transport Department.*

25 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether a large number of canvas belts have been purchased by the State Transport at Madras City during May 1970 ;

(*b*) the details of firms and individuals who supplied these ; and

(*c*) the details of the rates and the amount for which they have been purchased from these firms and individuals ?

*A.*—(*a*)—No.

(*b*) & (*c*) Do not arise.

விடை—(அ) இல்லை.

(இ) & (உ) இந்த வினாவிற்கு இடமில்லை.

*Tax collection from Race Courses.*

26—*Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state the details of the income from the Race Courses in this State during 1969–70 at various places ?

*A.*—

| | RS. |
|---|---|
| Madras (Guindy) .. .. .. | 163,47,484 |
| The Nilgiris (Ootacamund) .. .. | 4,89,179 |



*Polytechnics in the State.*

27 *Q.*—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) the total number of Polytechnics in this State run (i) by the State Government(ii) by private philanthropists in the State at presents and

(*b*) the details thereof.

*A.*—(*a*) (i) 17.

(ii) 18.

(*b*) (i) (1) Central Polytechnic, Madras.

(2) Government Polytechnic, Coimbatore.

(3) Tamilnad Polytechnic, Madurai.

(4) Government Polytechnic, Vellore.

(5) Government Polytechnic, Tiruchirappalli.

(6) Government Polytechnic, Nagercoil.

(7) Government Polytechnic, Tuticorin.

(8) Government Polytechnic for Women, Madras.

(9) Government Polytechnic for Women, Madurai.

(10) Government Polytechnic for Women, Coimbatore.

(11) Regional School of Printing, Madras.

(12) Institute of Leather Technology, Madras.

(13) Institute of Film Technology, Madras.

(14) Institute of Chemical Technology, Madras.

(15) Institute of Textile Technology, Madras.

(16) Government Institute of Commerce, Madras.

(17) Institute of Catering Technology, Madras.

(ii) (1) Alagappa Polytechnic, Karaikudi.

(2) Annamalai Polytechnic, Chettinad.

(3) C. N. T. Institute, Vepery, Madras-7.

(4) Murugappa Chettiar Memorial Polytechnic, Avadi, Madras-54.

(5) Bhakthavatsalam Polytechnic, Kancheepuram.

(6) Srinivasa Subbaraya Polytechnic, Puttur.

(7) Valivalam Desikar Polytechnic, Nagapattinam.

(8) Thiagarajar Polytechnic, Salem.

(9) P. A. C. Ramasamy Raja Polytechnic, Rajapalayam.

(10) Nachimuthu Polytechnic, Pollachi.

(11) Rajagopal Polytechnic, Gudiyatham.

(12) Ramakrishna Mission Technical Institute, Madras.

(13) Virudhunagar S. Vellaichamy Nadar Polytechnic, Virudhunagar.

(14) Muthiah Polytechnic, Annamalai Nagar.

(15) Seshasayee Institute of Technology, Tiruchirappalli.

(16) Sankar Institute of Polytechnic, Talaiyuthu, Tirunelveli.

(17) P. S. G. Polytechnic, Coimbatore.

(18) C. I. T. Sandwich Polytechnic, Coimbatore.

விடை—(அ) (i) 17.

(ii) 18.

(இ) (i)—

1. மத்திய பல்தொழில் பயிற்சிப் பள்ளி, சென்னை.
2. அரசு பல்தொழில் பயிற்சிப் பள்ளி, கோயம்புத்தூர்.
3. தமிழ்நாடு பல்தொழில் பயிற்சிப் பள்ளி, மதுரை.
4. அரசு பல்தொழில் பயிற்சிப் பள்ளி, வேலூர்.
5. அரசு பல்தொழில் பயிற்சிப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.
6. அரசு பல்தொழில் பயிற்சிப் பள்ளி, நாகர்கோயில்.
7. அரசு பல்தொழில் பயிற்சிப் பள்ளி, தூத்துக்குடி.
8. அரசு பெண்கள் பல்தொழில் பயிற்சிப் பள்ளி, சென்னை.
9. அரசு பெண்கள் பல்தொழில் பயிற்சிப் பள்ளி, மதுரை.
10. அரசு பெண்கள் பல்தொழில் பயிற்சிப் பள்ளி, கோயம்புத்தூர்.
11. வட்டார அச்சுத் தொழில் பயிற்சிப் பள்ளி, சென்னை.
12. தோல் தொழிற் பயிற்சி நிலையம், சென்னை.
13. திரைப்பட தொழிற் பயிற்சி நிலையம், சென்னை.
14. இரசாயனத் தொழிற் பயிற்சி நிலையம், சென்னை.
15 பஞ்சாலைத் தொழிற் பயிற்சி நிலையம், சென்னை.
16. அரசு வணிகவியல் பயிற்சி நிலையம், சென்னை.
17. சமையற்கலை பயிற்சி நிலையம், சென்னை.

(இ) (ii)—

1. அழகப்பா பல்தொழில் பயிற்சிப் பள்ளி, காரைக்குடி.
2. அண்ணாமலை பல்தொழில் பயிற்சிப் பள்ளி, செட்டிநாடு.
3. செங்கல்வராய நாய்க்கர் பல்தொழில் பயிற்சி நிலையம், வேப்பேரி, சென்னை.
4. முருகப்பச் செட்டியார் நினைவு பல்தொழில் பயிற்சிப் பள்ளி, ஆவடி, சென்னை.
5. பக்தவத்சலம் பல்தொழில் பயிற்சிப் பள்ளி, காஞ்சீபுரம்.
6. ஸ்ரீனிவாச சுப்பராய பல்தொழில் பயிற்சிப் பள்ளி, சீர்காழி.
7. வலிவலம் தேசிகர் பல்தொழில் பயிற்சிப் பள்ளி, நாகப்பட்டினம்.
8. தியாகராஜர் பல்தொழில் பயிற்சிப் பள்ளி, சேலம்.
9. பி. ஏ. சி. ராமசாமி ராஜா பல்தொழில் பயிற்சிப் பள்ளி. ராஜபாளையம்.
10. நாச்சிமுத்து பல்தொழில் பயிற்சிப் பள்ளி, பொள்ளாச்சி.
11. ராஜகோபால் பல்தொழில் பயிற்சிப் பள்ளி, குடியாத்தம்.
12. ராமகிருஷ்ண மிஷன் பல்தொழில் பயிற்சிப் பள்ளி, சென்னை.
13. விருதுநகர் எஸ். வெள்ளைச்சாமி நாடார் பல்தொழில் பயிற்சிப் பள்ளி, விருதுநகர்.
14. முத்தையா பல்தொழில் பயிற்சிப் பள்ளி, அண்ணாமலை நகர்.
15. சேஷசாயி தொழிற் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி.
16. சங்கர் பல்தொழில் பயிற்சிப் பள்ளி, தாழையூத்து, திருநெல்வேலி.
17. பி. எஸ். ஜி. பல்தொழில் பயிற்சிப்பள்ளி, கோயம்புத்தூர்.
18. சி. டி. ஐ. சாண்ட்விச் பல்தொழில் பயிற்சிப் பள்ளி, கோயம்புத்தூர்.



[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1970-71-ம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவில் திரு. கே. எம். இராமசாமி கவுண்டர் அவர்களின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. பி. வெங்கடசாமி அவர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளார். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளரின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1970-71-ம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு அவர் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

## 3. நடைமுறைக் கேள்வி.

### ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது குறித்து

DR. H. V. HANDE : Sir, on a point of order. We have only three more days, after which the Assembly will come to a close. We have no opportunity to discuss any supplementary budget or anything like that. So, may I request the Hon. Speaker to be fairly lenient—I am not accusing the Chair—Towards us because there are no possibilities of discussing any sudden problem even on the No-Confidence Motion. For instance, we have given notice of adjournment motions ........

MR. SPEAKER : பாயின்ட் ஆப் ஆர்டர் என்னவென்று சொல்லுங்கள்.

DR. H. V. HANDE : We have given notice of adjournment motion with regard to the Medical College students and the Hon. Speaker has withheld his consent to it. I do not dispute.........

MR. SPEAKER : Please sit down.

DR. H. V. HANDE : Sir, I will complete my point of order.

MR. SPEAKER : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

DR. H. V. HANDE : Sir, I shall complete it.

MR. SPEAKER : எந்த விதியை மீறி இருக்கிறது என்று முதலிலே சொல்லுங்கள்.

DR. H. V. HANDE : The rule under which the House is going to carry on the business. Unless the Chair gives me an opportunity to explain my point of order......

MR. SPEAKER : எந்த விதியை மீறி இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள். இந்த அவைக்கு நீங்கள் வழிகாட்ட வேண்டாம்.

DR. H. V. HANDE : Under rule 82 . . .

MR. SPEAKER : விதி 82-ன் கீழ் மினிஸ்டர்ஸ் ஸ்டேட்மெண்டு கொடுப்பது.

DR. H. V. HANDE : Unless you give me an opportunity. . . .

MR. SPEAKER : எந்த விதி மீறி இருக்கிறது என்று சொல்லுங்கள். உங்களுக்கு ஆப்பர்சூனிட்டி, வாய்ப்பு, கொடுக்கிறேன்.

DR. H. V. HANDE : You kindly listen to me . . . .

MR. SPEAKER : எதற்காக லிசன் பண்ணுவது?

DR. H. V. HANDE : You listen to me. Unless you give me an opportunity . . .

MR. SPEAKER : உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கிறேன். ஆனால் எந்த விதியின்கீழ் கொண்டு வருகிறீர்கள்? சட்டமன்ற எந்த விதி மீறப்பட்டிருக்கிறது, எந்த நடைமுறை மீறப்பட்டிருக்கிறது, என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால் வாய்ப்புத் தரலாம்.

DR. H. V. HANDE : I shall quote the rule. It is rule 42 concerning adjournment motions.

MR. SPEAKER : அதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. அட்ஜர்ன்மென்ட் மோஷனை பொறுத்த வரையிலும் . . .

DR. H. V. HANDE : You kindly note down the number of adjournment motions allowed by you in this House under rule 42...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே, நீங்கள் உட்காருங்கள். விதி 42-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தால் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிப்பது பற்றி முடிவு செய்ய வேண்டியது பேரவைத் தலைவரின் உரிமையாகும்; அவர் சட்டத்திற்கு உட்பட்டு அதைச் செய்கிறார். அதைப்பற்றி விவாதிப்பதற்கு 'பாயின்ட் ஆப் ஆர்டர்' இல்லை. ஆகவே எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

அடுத்து, அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வருவார்.

### 4. அரசினர் தீர்மானம்

#### விதி 41 (3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்தலைவர் அவர்களே, "ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது" என்ற 41 (3) விதியைத் தளர்த்த வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### 5. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, விதி 41-ன் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.



#### (அ) மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து வரும் நக்சல் பாரிகளின் ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்துதல்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் நமது மாநிலத்திற்கும், கேரள மாநிலத்திற்கும் இடையே எல்லைக் கோடாக அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் வந்துள்ள நக்சல்பாரிகளின் ஊடுருவல்களைத் தடுக்க சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்க விழைகிறேன்.

கேரள மாநிலத்திலுள்ள திருநெல்லி கிராமத்தில் 9---2---1970-ல் நக்சல் பாரிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, கேரள மாநிலக் காவல் துறையின் நீலகிரி மாவட்டக் காவல்துறையினரை எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொண்டனர். நீலகிரி மாவட்டக் காவல்துறையினர் உடனடியாக இயன்ற எல்லா முன்னெச்சரிக்கையான தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். நக்சல்பாரிகள் இம்மாநிலத்திற்குள் ஊடுருவி வாராமல் தடுப்பதற்கு, எல்லைப்பகுதிக் காவல் நிலையங்கள், சிறுநிலையங்கள் ஆகியவற்றை விழிப்புடன் இருக்கச் செய்தல், முதுமலைக்காடுகள் வழியாகச் சென்று ஜீப்கார்களில் எல்லைப்புறத்தை ரோந்து செய்தல் முதலிய நடவடிக்கைகள் உட்படத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளூர்க் காவல் துறையினரின் விழிப்பு நடவடிக்கை காரணமாக 1969, டிசம்பர் மாதத்தில் நக்சல்பாரிகளால் தாக்குதலுக்கு உள்ளான குட்டாடி காவல் நிலைய எல்லையைச் சேர்ந்தவரெனப்படும் இருவர் ஐயப்பாடான சூழ்நிலைகளில் இ.பி.கோ. 55-வது பிரிவின்கீழ் 12---2---1970-ல் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். திருவனந்தபுரம், காவல்துறைத் துணைத்தலைவர், குற்றப் புலனாய்வுத் துறையினர் ரயில்வே துறையினர் ஆகியோருக்கு இதுபற்றிய தகவல் தெரிவிக்கப்பட்டது.

நெல்லகோட்டா காவல் நிலையத்தைத் தாக்குவதற்கு அதை நோக்கி நக்சல்பாரிகள் குழு ஒன்று சென்று கொண்டிருந்ததாக, கேரள மாநிலத்திலுள்ள சுல்தான் பாட்டரி காவல் நிலையத்திலிருந்து 16---2---1970-ல் கூடலூர் காவல் நிலையத்திற்குத் தகவல் வந்தது. இக்கூட்டத்தினர், பிதர்காடு என்னுமிடத்தை அடைந்தது. அந்த இரவில் நடுவட்டம் காவல்நிலையத்தை அக்கூட்டம் தாக்குமென்றிருந்தது. எல்லைப்பகுதி நிலையங்கள், சோதனைச் சாவடிகள் அனைத்தையும் விழிப்பாயிருக்குமாறு செய்ததுடன் உள்ளூர்க் காவற்படையினர் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள். இரவு முழுவதும் விழிப்பாக இருந்து காவல் செய்தனர். என்றாலும் வன்செயல் எதுவும் நடைபெறவில்லை.

எனினும் நக்சல்பாரிகளின் நடவடிக்கைகளைத் தடுக்கவும் கேரள மாநிலத்திலிருந்து நக்சல்பாரிகள் ஊடுருவிவருவதைத் தடுக்கவும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் எல்லைப்பகுதி நெடுகவும் உள்ள காவல் நிலையங்களும் சிறுகாவல் நிலையங்களும் காவல்துறையினரால் காக்கப்பட்டு வருகின்றன.

[திரு. மு. கருணாநிதி]

இந்த அச்சுறுத்தலைச் சரிபடுத்த, இந்த அரசும் காவல்துறையினரும் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள், மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்துச் சட்டமன்றப் பேரவையில் வெளியிடுவது பலகாரணங்களால் பொது நலனிற்கு ஏற்புடையதல்ல. இந்த இரண்டு மாவட்டங்களிலும் நக்சல்பாரிகள் நடவடிக்கைகளை உன்னிப்பாகவும் தொடர்ந்தும் அரசும் காவல்துறையினரும் கண்காணித்து வருவதாகவும் சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்தவும் எல்லைப் பகுதிவழியாக நக்சல்பாரிகள் ஊடுருவிவாராமல் தடுப்பதற்கும் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தால் போதுமானதாகும்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே இரண்டு மாவட்டங்களில் மாத்திரம் கடுமையான நடவடிக்கைகளும், கண்காணிப்பும் இருந்து வருகிறது என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவை ஒட்டி மேற்கு தொடர்ச்சிமலை இரண்டு மாநிலங்களுக்கும் எல்லைக் கோடாக இருப்பதாலே, காவல்துறையினர் மட்டும் தான் அதைக் கண்காணிப்பார்கள் என்பதைவிட காட்டிலாகா இருக்கின்ற காவல் துறையினரும் இதிலே அக்கரைக் காட்டவேண்டுமென்று ஏற்பாடு செய்வதோடு, நக்சல்பாரிகள் நிறைய இருப்பதாலே அங்கே வந்து அந்தந்த ஊர்களிலே, யார் முக்கியமானவர்கள், யார் எம்.எல்.ஏ.-க்கள், யார் பணக்காரர்கள் என்றெல்லாம் அந்த ஊரைச் சேர்ந்தவர்களைக் கேட்கிறார்கள் என்று ஹேஷ்யம் சொல்லப்பட்டிருக்கிறது. வரசநாடு கிராமத்தில் இருந்து வந்த இந்த ஹேஷ்யம், ஹேஷ்யம் மட்டும் அல்ல, உண்மையான தகவல் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. எனவே நடைமுறையில் காட்டு இலாகாவைச் சேர்ந்தவர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய தகவல்களையும் கவனத்தில் வைத்துக்கொண்டு காவலர்கள் ஏற்ற நடவடிக்கை எடுப்பார்கள்.

**(ஆ) புகுமுகவகுப்பு ஆங்கில பயிற்றுமொழி பிரிவுகளில் மாணவர்களுக்கு இடம் அளித்தல்**

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Health to a matter of urgent public importance, namely, the need to provide seats in the PUC English medium for a large number of students who have not yet secured admission and the need to take steps to see that all the students get the medium of their choice.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரிக் கல்வி உட்பட ஒவ்வொரு நிலையிலும் தமிழ்மொழி பயிற்றுமொழியாகப் பயன்படுத்தப்படுவதைப் படிப்படியாக அதிகரிப்பது அரசின் கொள்கையாகும். இக்கொள்கை கல்வி குறித்த தேசியக் கொள்கைத் தீர்மானத்தை நிறைவேற்றுகையில் நாடாளு மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோத்தாரி கல்வி ஆணைக் குழுவின் பரிவு இணக்கமான கொள்கையாகும். அனைத்துப் பல்கலைக் கழகங்களின் துணை



[திரு. இரா. நெடுஞ்செழியன்]

வேந்தர்களும் மாநாடு ஒன்றில்கூடி, மேற்படிப்பின் பயனை மாணவர்கள் பெருமளவில் பெறுவதற்காக, மேற்படிப்பு வட்டார மொழியில் கற்பிக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்தனர். இந்தப் பேரவை, 1968 ஜனவரி 23-ம் நாளன்று மொழிப் பிரச்னை குறித்துக் கருத்துவேறுபாடற்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது என்பதை நினைவுகூரலாம். ஐந்து ஆண்டுக்கால அளவுக்குள், கல்லூரிகள் அனைத்திலும் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டுவருவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று அப்பொழுது தீர்மானிக்கப்பட்டது. இதுகுறித்த முதல் நடவடிக்கையாக, 1968-69 ஆம் கல்வி ஆண்டிலிருந்து அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் புகுமுக வகுப்பில் கலைப்பாடங்கள் தமிழ்மொழியில் மட்டுமே பயிற்றுவிக்கப்படும் என்று இப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இப்பேரவையின் கொள்கை ஆணைக்கிணங்க, அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் தமிழைப் பயிற்றுமொழியாகக்கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்தது. புகுமுக வகுப்பில் முதற்கண் கலைப்பாடங்களுக்கான புத்தகங்களைத் தமிழில் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. தமிழில் பயிற்றுவிப்பதற்கான நடைமுறைகள் குறித்து ஏராளமான ஆசிரியர்களுக்குப் பணியிருப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. புகுமுக வகுப்பில் தமிழ் பயிற்றுமொழிப் பிரிவு ஒன்றையேனும் தொடங்குமாறு தனியார் கல்லூரிகளைத் தூண்டுமாறு துணைவேந்தர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

தற்போது நமது மாநிலத்தில் 158 கல்லூரிகளில் புகுமுக வகுப்பு உள்ளது. அவற்றில் 43 அரசுக் கல்லூரிகளில், கலைப்பாடங்களிலும், அறிவியலிலும் தமிழ் பயிற்றுமொழியாகக் கொண்டுவரப்பட்டது. அரசுக் கல்லூரிகளிலும், இருமொழிப் பகுதிகளில் உள்ள கல்லூரிகளில் ஆங்கிலப் பிரிவு ஒன்று இருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அக்கல்லூரிகளாவன :

1. இராணி மேரிக் கல்லூரி, சென்னை.
2. அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, வட சென்னை.
3. லோகநாதன் நாராயணசுவாமி அரசினர் கலைக் கல்லூரி, பொன்னேரி.
4. அரசினர் கலைக் கல்லூரி, உதகமண்டலம்.
5. அரசினர் கலைக் கல்லூரி, கோயம்புத்தூர்.

1968-69-ம் ஆண்டில், புதுமுக வகுப்பில், கணிதத்திலும், அறிவியலிலும் தமிழ் பயிற்று மொழியாகக் கொண்டு வரப்பட்டது. அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் அறிவியல் பிரிவு ஒவ்வொன்றிலும் தமிழ் பயிற்று மொழிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. போதுமான அளவு மாணவர்கள் தமிழ் பயிற்று மொழியில் பயில விரும்பினால் தமிழ் பயிற்றுமொழிப் பிரிவுகளைத் தனியார் கல்லூரிகள் ஏற்படுத்தலாம்.

தற்போதுகூட, கணிசமான அளவுக்கு ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவுகள் உள்ளன. அரசுக் கல்லூரிகள், அல்லது தனியார் கல்லூரிகளில் அத்தகைய ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளில் தம் விருப்பம்போல்

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

மாணவர்கள் சேரலாம். பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்ற தமிழ் மாணவர்களும், அரசுக் கல்லூரிகளில் ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவுகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக, மொழிவாரிச் சிறுபான்மையினருடன் சேர்த்து கருதிப்பார்க்கப்பட வேண்டும் என்பது குறித்தும் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களின் நலன்களைக் காக்க சில காப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதைப் பொறுத்த வரையில் ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவில் பயின்ற மாணவர்களுக்கு இணையாக, தமிழ் பயிற்று மொழிப் பிரிவில் பயின்ற மாணவர்களும் கருதிப் பார்க்கப்படுவர். கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக்கொண்ட மாணவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவினால் நடத்தப்படும் தேர்வுகளில், தமிழில் விடையளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே, வேலை வாய்ப்பைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு எந்தவித இடர்ப்பாடும் இருக்காது. அரசின் சில துறைகளில் உள்ள சில பதவிகளுக்குப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கையில் தமிழ் பயிற்று மொழி வகுப்புகளில் பயின்ற மாணவர்களுக்குச் சலுகை அளிக்க முடியுமா என்பதுகுறித்தும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

தமிழ் பயிற்று மொழிப் பிரிவு மாணவர்கள் பல்கலைக் கழகத் தேர்வுக்களுக்கான வினாத்தாள்களுக்குத் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடையளிக்கலாம் என்பதைப் பல்கலைக் கழக அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவுகளில் சேருவதற்குள்ள இட நெரிசலைப் பொறுத்தவரையில், அறிவியல் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 80-லிருந்து 90 ஆகவும், கலைப் பாடத் தொகுப்பில் அந்த எண்ணிக்கை 90-லிருந்து 100 ஆகவும் பல்கலைக் கழக அதிகாரிகளால் உயர்த்தப்பட்டது. இது பெருமளவுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதை எளிதாக்கியுள்ளது. பல்தொழில் பள்ளியின் முதலாண்டுப் படிப்பு, புகுமுக வகுப்புக்கு இணையானதாக்கப்பட்டுள்ளது. எனவே, கணிதத் தொகுப்பில் பயின்ற மாணவர்கள் பல்தொழில் பள்ளி வகுப்புகளிலும் சேரலாம்.

கல்லூரிகளில் அனுமதிக்கான நெருக்கடி சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற பெரிய நகரங்களில் மட்டுமே இந்த இட நெருக்கடி நிலவுகிறது. பிற கல்லூரிகளில் இப்பொழுதுகூட ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவுகளில் காலியிடங்கள் உள்ளன. விவரங்கள் கிடைக்கப் பெற்ற 68 கல்லூரிகளில் சுமார் 42 கல்லூரிகளில் ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவுகளில் காலியிடங்கள் உள்ளன.

கும்பகோணம் மகளிர் கல்லூரி.

ராசிபுரம் அரசினர் கலைக் கல்லூரி.

விருத்தாசலம்.



[திரு. இரா. நெடுஞ்செழியன்]

திருச்சிராப்பள்ளி

பொன்னேரி

புதுக்கோட்டை

வாலாஜாபேட்டை மகளிர் கல்லூரி

ஆகிய 7 அரசுக் கல்லூரிகளில் ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவில் காலியிடங்கள் உள்ளன. இத்தகைய அரசுக் கல்லூரிகளில் உள்ள மொத்தக் காலியிடங்கள் 174 ஆகும்.

இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை எதுவாயினும், அது மாணவர்களின் நலனுக்காகவே எடுக்கப்பட்டுள்ளது. இப்பொழுதும்கூட மாணவர்கள் தங்கள் விருப்பப்படி பயிற்று மொழியைத் தெரிந்தெடுத்துக் கொள்ளலாம். பற்பல ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, அரசுக் கல்லூரிகளிலேனும் தமிழைப் பயிற்று மொழியாக்க நடவடிக்கைகள் தொடங்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

DR. H. V. HANDE: The question which I wanted to ask by means of call-attention notice was that number of students who wanted to get English medium could not get English medium. Even recently is it not a fact that some students met the Vice-Chancellor, University of Madras and he has said that it was not his responsibility but that it was Government's responsibility and it was Government that should have provided seats for these boys and girls. In view of the fact that a large number of students were not getting the English medium and in view of the fact that out of 16 per cent of seats allotted for Harijans, many of the Harijans who applied for English medium were denied admission saying that if they wanted Tamil medium there was seat, otherwise 'No', and many Harijans had complained to us that they were not getting English medium and in view of the fact that actually, though seats had been increased it is only a certain percentage of Tamil medium seats that had been increased and not English medium seats and the number of students had represented that they were not able to get English medium seats, in view of all these—Will the Government come forward to issue a statement as to how exactly they are going to satisfy the large number of students who are willing to take English medium bu who had been compelled to take to Tamil medium even though they are keen on taking the English medium?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற நிலையில்லை. இந்த ஆண்டுமட்டும் 18 புதுக் கல்லூரிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 4 கல்லூரிகள்தான் அரசினர் கல்லூரிகள். தனியார் கல்லூரிகளில் ஆங்கிலம் பயிற்று மொழியாக வைத்திருக்கிறார்கள். அரசினர் கல்லூரிகளிலேதான் அதுவும் கலைப் பாடங்களைப் பொறுத்தவரையிலேதான் தமிழிலே பயிற்றுமொழி இருக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம். ஆகவே, ஆங்கிலத்திற்கு ஏற்கனவே,

இருந்த வாய்ப்பு இன்னும் அதிகமாயிருக்கிறது. கலைப்பாடங்களைப் பொறுத்தவரையில் 80 இடங்கள் இருந்தால் அதை 100 இடமாக அதிகப்படுத்தியிருப்பதில் ஆங்கிலமொழிப் பிரிவும் சேர்ந்து இருக்கிறது. எனவே, ஆங்கிலமொழிப் பிரிவில் இடங்கள் குறையவில்லை.

இன்னும் சொல்லப்போனால் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. எண்பது இடங்கள் இருந்தால் 90 ஆகவும் 100 ஆகவும் தேவைப்படுகின்ற இடங்களிலே உயர்த்தப்பட்டிருக்கின்றன. அரசினர் கல்லூரிகளிலே 174 இடங்கள் என்ற அளவில் ஆங்கிலப் பயிற்று மொழி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட சில கல்லூரிகளில் ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்புகளில் சேரத் துடிக்கிறார்கள். இடம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்கள் ஆங்கிலத்திற்கும் 19 ஆயிரம் அல்லது 20 ஆயிரம் என்ற அளவிற்குத்தான் தமிழுக்கும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதுக்கல்லூரிகள் அனைத்திலும் ஆங்கிலத்திற்கான பயிற்றுமொழி வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே எந்த வகையிலும் இடம் குறைக்கப்படவில்லை. ஆங்கிலப் பயிற்று மொழிக்கான வாய்ப்புகள் பொன்னேரியிலே இருக்கின்றன. விருத்தாசலத்திலே இருக்கின்றன. ஆனால் அந்த இடங்களில் சேர மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் காலி இடங்கள் இருக்கின்றன. ஆகவே அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது குற்றச்சாட்டாகாது.

DR. H. V. HANDE: Is is not a fact that number of students had approached the Government, after they had approached the Vice-Chancellor, requesting that they should be allowed to have the English medium? Is it not a fact? If so, what is the action taken by this Government to satisfy those students who want English medium? That is the categorical answer I am expecting from the Hon. Minister.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அநேகம் பேர்கள் பி.காம். சேரவேண்டுமென்று விரும்புகிறார்கள், ஆனால் அத்தனை பேர்களுக்கும் இடம் கிடைப்பதில்லை. அதேபோன்று எம்.ஏ. படிக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். விரும்புகிற அத்தனை பேர்களுக்கும் இடம் கிடைப்பதில்லை. ஆங்கிலப் பயிற்று மொழியில் படிப்பதற்கு வாய்ப்புப் பெற விரும்புகிறவர்களுக்குப் போதுமான அளவிற்கு மார்க் இருந்தால் இடம் கிடைத்து இருக்கும். இருக்கிற தமிழ் இடங்களை ஆங்கிலமாக மாற்றுவதற்கு அரசு தயாராக இல்லை. தமிழைப் பயிற்றுமொழியாக ஏற்றுக்கொண்டு படிப்படியாக அதைக் கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, தமிழ் பயிற்றுமொழியாகவுள்ள இடங்களையெல்லாம் ஆங்கிலத்திற்கு மாற்றுங்கள் என்று சொன்னால் அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆங்கிலப் பிரிவுகளும் இருக்கின்றன. எனவே, தனிப்பட்ட முறையிலே மாணவர்களைப் பிடித்து நீ தமிழிலேதான் படித்துத் தீர வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. எதை வேண்டுமானாலும் படிக்கலாம். அதற்கேற்ற மார்க்குகள் வாங்கியிருந்தால் தனியார் கல்லூரிகளிலே சேர்ந்து கொள்ளலாம். சில தனியார் கல்லூரிகளில், 350, 400, 450 மார்க்குகளுக்கு மேல் வாங்கியிருந்தால் சேர்த்துக்கொள்கிறார்கள். அந்தத் தகுதி பெற்றி



ருந்தால் அந்த இடம் தானாகக் கிடைக்கும். ஆகவே, வாய்ப்புகள் மறுக்கப்படவில்லை. எனவே, இருக்கும் இடங்களையெல்லாம் மாற்றி, ஆங்கிலமாக மாற்றியமைக்க வேண்டுமென்றால் அதற்கு இந்த அரசு முன்வராது. இரண்டு சாராருக்கும் இடர்ப்பாடு ஏற்படாதவகையில் ஒரு கொள்கையை அரசு பின்பற்றி வருகிறது.

## (இ) கிண்டி ராஜ்பவன் வனசரணாலயத்தில் 20 ஏக்கரில் மரங்கள் வெட்டப்படுதல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கிண்டி ராஜ்பவன் வனச்சரணாலயத்தில், எந்தக் காரணத்திற்கு அந்தக் காடுகள் பாதுகாக்கப்பட்டனவோ, அதைமீறி, வனப்பாதுகாவலர்களால், சுமார் 20 ஏக்கர் வரை மரங்களை வெட்டி வீழ்த்திக் கொண்டிருப்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியம்."

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, சென்னை குருநானக் கல்விச் சங்கம் கிண்டி சாகத்தில் ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று கிண்டி ராஜபவன் வனச்சரணாலயத்திலிருந்து இருபது ஏக்கர் நிலத்தைக் கொடுக்குமாறு வேண்டினர்.

இது சம்பந்தமாக கிண்டி வனச்சரணாலயத்தை மேதகு கவர்னர் அவர்கள், மாண்புமிகு கல்வி அமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உள்படபலர் பார்வையிட்டு எந்த இடத்தைக் கல்லூரிக்கு ஒதுக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்தின்படி கிண்டி சரணாலயத்திலிருந்து இருபது ஏக்கர் நிலத்தை குருநானக் கல்விச் சங்கத்திற்கு ஒப்படைக்குமாறு அரசு ஆணை பிறப்பித்தது. குருநானக் கல்விச் சங்கத்திற்கு அந்நிலத்தை எந்த முறையில் கொடுக்கலாமென்றும் எந்தெந்த விதிகளின்படி கொடுக்கப்படவேண்டுமென்றும் வனத்துறைத் தலைவரிடமிருந்து கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவருடைய குறிப்பை வருவாய்த்துறை (நிலவருவாய்) வாரியம் மூலமாகவும் அனுப்பும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மேற்படி அரசு ஆணையின்பேரில் இருபது ஏக்கர் நிலம் குருநானக் சங்கத்திற்கு 27—7—1970-ம் நாள் ஒப்படைக்கப்பட்டது.

கலைக் கல்லூரிக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்ட சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவரவர்களே, அயல்நாடுகளிலிருந்து வரும் எல்லாப் பெரியவர்களும் இந்தச் சென்னை நகரத்திலே அமைந்திருக்கும் வனச்சரணாலயத்தைப் பார்த்துவிட்டு, இப்பேர்ப்பட்ட நகரத்திலே அருமை

யான பார்க் அமைவது கஷ்டமானது என்று சொல்லக்கூடிய பெருமை சென்னை நகரத்திற்கு முக்கியமான பெருமை. அதே நேரத்தில் சென்னை நகரத்திலே இன்னும் அநேக இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து அந்தக் கல்லூரிக்குக் கொடுப்பதில் என்ன கஷ்டம்? அதைவிட்டுவிட்டு இப்படிப்பட்ட ஒரு நல்ல இடத்தை, இந்த நவநாகரிகமான காலத்தில், நல்ல ஓய்வு பெறுவதற்காகவும், பொழுது போக்கிற்காகவும், சுகாதார முறை ஏற்படக்கூடியதற்கும் உள்ள இடத்தை இம்மாதிரிக் கல்லூரிக்குச் கொடுப்பது அவசியம்தானா? அதற்கு முன்பே, கோரிக்கை வருவதற்கு முன்பே, காட்டிலாக்காவினர் மரங்களை வெட்ட ஆரம்பித்துவிட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, கிண்டி பகுதியிலே 379 ஏக்கர் நிலம் அரசுக்குச் சொந்தமாக இருக்கிறது. 619 ஏக்கர் நிலம் காட்டிலாக்காவின் பொறுப்பிலும், 260 ஏக்கர் நிலம் ராஜ்பவன் பொறுப்பிலும் இருந்து வருகிறது. அந்தக் குருநானக் கல்விச் சங்கத்தினர், தென் பகுதியிலே எங்களுக்குக் கலைக் கல்லூரி இல்லை. எனவே, அதை எங்களுக்குச் சொந்தமாக அளிக்க வேண்டுமென்று பலமுறை கேட்டிருக்கிறார்கள். காந்தி நகர் பகுதியிலே கலைக்கல்லூரி இல்லை என்பதாலும், குருநானக் கல்விச் சங்கத்தினர் அந்தப் பகுதியிலே குருநானக் பெயரிலே, தென்மாநிலத்திலே அவருடைய பெயர் மதிக்கப்படும் அளவிலே இருப்பதற்காக, கலைக்கல்லூரி அமைக்க இந்த அரசு ஒப்படைக்க வேண்டுமென்று பேசி வந்தார்கள். பலமுறை அதிகாரிகள் பரிசீலித்த பிறகு, மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் பார்த்த பின்பு, முதலமைச்சரவர்களும் அதைப்பற்றிக் கருதி முடிவு எடுத்ததில், 20 ஏக்கர் நிலம் கொடுப்பதில் எந்தவிதமான குற்றமுமில்லை என்றார்கள். இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜிக்காகப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 632 ஏக்கர் நிலம் வேண்டுமென்று மத்திய அரசு கோரியதன் பேரில் மாநில அரசு 383 ஏக்கர் நிலத்தை ஒதுக்கப்பட்ட காடுகளிலிருந்து நீக்கி மேற்படி இன்ஸ்டிடியூட்டிற்கு வழங்கியது. கிண்டி பார்க் பகுதியிலே காட்டிலாக்காவின் பொறுப்பில் உள்ள ஒதுக்கப்பட்ட நிலம் மான்கள் வளர்ச்சிக்காக வரையறுக்கப்பட்டது. குருநானக் கலைக்கல்லூரிக்குத் தற்பொழுது இந்த மான்கள் உய்விடத்திலிருந்துதான் 20 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டது. மான்கள் உலாவும் இடத்திற்கு ஊறு நேராத வகையில் இந்த நிலம் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவரவர்களே, இப்பொழுது அங்கிருக்கும் டீர் சாங்ச்சுவரி, நல்லமான்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று அங்கே கொடுக்கப்பட்டு அந்த விதத்திலே நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது அங்கிருக்கும் நிலப்பரப்பே போதாமல் அதிகமான மான்கள் வெளியே ஓடும் நிலை இருக்கிறது. இதையெல்லாம் பார்த்துச் செய்ய வேண்டும். முன்பு ஒருமுறை செய்தார்கள் என்பதற்காக மறுபடியும் அப்படிச் செய்யவேண்டுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, எனக்குத் தெரிந்த வரையிலே, இப்படி மாநிலத் தலைநகரில், 879 ஏக்கர் அளவிற்குப் பெரிய சாங்க்சுவரி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதுவும் தமிழ்நாட்டிலே





தான் இப்படி சாங்க்சுவரி அகலமாக இருக்கிறது. "ஸூ" என்று பல இடங்களில் வைத்திருக்கிறார்கள். அதுகூட இந்த அளவிற்கு இல்லை, சில மாகாணங்களில் இல்லை. எனவே, அவ்வளவு விரிவான இடத்தில் 20 ஏக்கர், பொதுக் காரியத்திற்காகக் கொடுப்பதைப் பெரிய குறை என்று சொல்ல முடியாது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த மான்கள் உலாவிற்காக ஒதுக்கப்பட்ட அந்தக் காட்டுப்பகுதி தனியாக இருக்கிறது. கல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட பகுதி காட்டுப் பகுதி என்றயிடத்தில் ஒதுக்கப்பட்ட தேயல்லாமல், டீர் சாங்க்சுவரி என்ற வட்டம் அமைத்து அதற்குள்ளே 20 ஏக்கர் ஒதுக்கப்படவில்லை. காட்டுப்பகுதி, என்ற ஃபாரஸ்ட் பகுதியில் 20 ஏக்கரை, காட்டு இலாக்காவினரும், மற்றவர்களும் தேர்ந்தெடுத்து, குருநானக் கல்லூரிக்காகக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். பஞ்சாபிகள் சேர்ந்திருக்கும் சங்கத்தினர், ஒரு கல்லூரி அமைக்க முயற்சியெடுத்து ஏராளமான பொருள் திரட்டும் பணியில் ஈடுபடுகிறார்கள். கல்லூரிக்காக இடம் மட்டும் தரும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. பல இடங்களில், புறம்போக்குக் காட்டு நிலத்தைக் கல்லூரிகளுக்கு வழங்குவதை முறையாகக் கொண்டிருக்கிறோம். குருநானக் 500-வது பிறந்த நாள் ஆண்டு விழாவினையொட்டி, 5 இலட்சம் ரூபாயில் கட்டடம் கட்டும் முறையில் அவர்கள் 3 இலட்சம் ரூபாய் திரட்டி வருகிறார்கள். இந்திய அரசு ஒரு இலட்சம் தருகிறேன் என்று சொல்லியது. மாநில அரசும் தந்து, அந்த மண்டபம் வரத்தக்க அளவில், கவர்னர் அவர்களின் ஆலோசனையின்பேரில் காட்டிலாக்கா அவர்களையும் கலந்துகொண்டு, மான் உலாவிற்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத அளவிற்குத் தந்திருக்கிறது.

### (6) அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் இயங்கும் அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையை இப்பேரவை தெரிவிக்கிறது".

**THIRU R. POONAPPA NADAR:** Sir, I second it.

### (7) அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்

**திரு. என். சங்கரய்யா :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"குறிப்பாக அரசின் போலீஸ் அடக்குமுறைக் கொள்கையை இப்பேரவை கண்டிப்பதோடு, அரசின் கொள்கையை ஏற்க மறுக்கிறது".

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு முன்பு, இந்தப் பேரவையிலேயிருக்கும் உறுப்பினர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். நம்பிக்கையில்லை என்று தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசும் மாண்புமிகு உறுப்பினர்களும்,

அதை எதிர்த்துப் பேசும் உறுப்பினர்களும், தங்களுடைய கருத்துக்களை, காரண காரியங்களோடு காட்டும் அந்த அளவிலே மிக அமைதியான முறையிலே மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். குற்றம் சாட்டவும், குற்றத்தை மறுக்கவும் உரிமை இருக்கிறது என்றாலும், கூறப்படும் குற்றங்கள் ஆதாரபூர்வமான குற்றங்களாக இருக்கவேண்டும், அதை மறுக்கும் நேரத்தில் காரண காரியங்களைக் காட்டி மறுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு நாளும் நமக்கு 3 மணி நேரம்தான் கிடைக்கும். பத்தரை மணிக்குத் தொடங்குகிறோம். எனவே, இருக்கின்ற அந்த 3 மணி நேரத்திலே கட்சிகளிலே இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது, ஆளுங்கட்சிக்கு அதிக நேரம் கொடுக்க வேண்டியிருக்கும். பாதி நேரம் கொடுக்க வேண்டியிருக்கும். இருந்தாலும் அவர்களுக்கு 1 மணி நேரம் என்றும், நம்முடைய பிரதான எதிர்க்கட்சிக்கு 40 நிமிடங்கள் என்றும், சுதந்திராக் கட்சிக்கு 20 நிமிடங்கள் என்றும், கம்யூனிஸ்ட் (லெஃப்டிஸ்ட்) கட்சிக்கு 20 நிமிடங்கள் என்றும், ரூலிங் காங்கிரஸ் அதாவது காங்கிரஸ் (ஆர்) கட்சிக்கு 15 நிமிடங்கள் என்றும், ஃபார்வர்ட் பிளாக் கட்சிக்கு 15 நிமிடங்கள் என்றும், ஏனைய கட்சிகளுக்கு 10 நிமிடங்கள் என்றுதான் வருகிறது. 3 மணி நேரத்தைப் பங்கிட்டால் இப்படி வருகிறது. ஆகவே, இந்தக் காலவரையறைக்குள் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கட்சித் தலைவர்களை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**திரு. கே. விநாயகம்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன். இது ஒரு 'நோ கான்ஃபிடன்ஸ் மோஷன்'. இதில் பேசுகிறவர்கள் காரண காரியங்களைக் காட்டவேண்டும் என்றால் எங்களிடம் தஸ்தாவேஜுகள் இல்லை. நாங்கள் அரசாங்கத்தை நடத்தவில்லை, எங்களுக்குக் கிடைக்கிற தகவல்களை வைத்துக்கொண்டுதான் பேசுகிறோம். ஆனால் அவர்களிடம் தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. அதை வைத்துக்கொண்டு அவர்கள் மறுக்கவும் மறுக்கலாம், சொல்லாமலும் இருக்கலாம். ஆகவே, எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இப்படிப் பட்டதொரு சிக்கலான நிலைமையை தாங்கள் உண்டாக்கக் கூடாது.

No confidnce motion means it is a freefight (laughter).

மத்திய சர்க்காரில் என்ன நடக்கிறது என்று பாருங்கள். லோக் சபாவில் அல்லது பார்லிமெண்டில் நடப்பதைப் பாருங்கள். ஒவ்வொன்றுக்கும் தஸ்தாவேஜு இருக்கிறதா, ஒவ்வொன்றுக்கும் டாகுமென்ட்ஸ் இருக்கிறதா. இதை நிரூபிக்க முடியுமா என்றால் அது முடியாத காரியம். பொதுவாக ஜெனரல் ஸ்பீச்சஸ்' ஆகத்தான் இருக்கும். ஆகவே ஆங்காங்கு எங்களை நீங்கள் தடை செய்யக் கூடாது.

Please be charitable to the Opposition. We must have our say because they are having their way. We belong to the Opposition Party and we have a right to charge them and let them repudiate it if they can manage to do so . . ..

ஆதலால் ப்ளாங்க் சீட்ஸ் போட்டு இப்படித்தான் செய்யவேண்டும் என்று சொல்லக் கூடாது. தயவுசெய்து எங்களுக்கு எங்கள் உரிமையைத் தரவேண்டும்.

வரையிலே, இப்படி . . .
**சாங்க்சுவரி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதுவும் தமிழ்நாட்டிலே**



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பேச வேண்டாமென்று சொல்லவில்லை. விதிமுறைகளையொட்டித்தான் நான் சொன்னேன். விதிமுறைகளை மீறி இந்த அவைக்கு நான் எந்தவித வேண்டுகோளையும் விடுவிக்கவில்லை.

[பேரவைத் தலைவர்]

குற்றஞ்சாட்டுகிற நேரத்தில் அவை ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுகளாக இருக்கவேண்டும்—வேக் அலிகேஷன்ஸ்—ஆக இருக்கக் கூடாது என்று விதிமுறைகளில் இருக்கின்றன. குற்றஞ்சாட்ட வேண்டாமென்று நான் சொல்லவில்லை. குற்றஞ்சாட்டுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது என்று கூறிவிட்டுத்தான் கூறியிருக்கிறேன்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** சம்யுக்த சோஷலிஸ்ட் பார்ட்டி, பி.எஸ்.பி., முஸ்லீம் லீக், தமிழரசுக் கட்சி என்று நாங்கள் இருக்கிறோம், ஒவ்வொரு கட்சிக்கும் தலா பத்து நிமிடங்களா அல்லது எல்லாக் கட்சிகளுக்கும் சேர்த்தா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாக் கட்சிகளுக்கும் சேர்த்துத்தான். இன்று ஒரு கட்சியில் உள்ளவர்கள் பேசினால் நாளை மற்றொரு கட்சியைச் சார்ந்தவர்கள் பேசலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்கள் நேரத்தைப் பகிர்ந்து கொடுத்தார்கள். ஆரம்பிக்கிற எனக்கு இவ்வளவு நிமிடங்கள்தான் என்று கொடுக்க முடியாது. இவ்வளவு நாட்களுக்குள், இவ்வளவு நேரத்திற்குள் இருக்கவேண்டுமென்று சூழ்நிலை இருக்கக்கூடாது. எதிர்க்கட்சிக்குத்தான், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிற எங்களுக்குத்தான் முக்கால் வாசி நேரம் ஒதுக்கவேண்டும். நீங்கள் கட்டுப்பாடு செய்தால்தான் இதைச் சொல்கிறேன். ஆளும் கட்சி சார்பில் அமைச்சர்கள் பதில் சொன்னால் போதும். உங்கள் கட்சியை டிஃபெண்ட் செய்வதற்கு மந்திரிகளுக்கு சக்தியில்லையா? இந்தச் சட்டமன்றத்தில் நான் பதினைந்து இருபது ஆண்டுகளாக இருந்திருக்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

THIRU N. S. V. CHITHAN:
THIRU V. GEORGE: } Sir, under what rule. . . .

THIRU T. MARTIN: Quote rule first. . .

THIRU K. VINAYAKAM: Quote rule first . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் திரு. அரங்கண்ணல் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பாயின்ட் ஆஃப் ஆர்டர் எதன்மீது என்பதை முதலில் சொல்லிவிட்டு பிறகு சொல்லுங்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** சபையில் நேரம் ஒதுக்குவதுபற்றி . . .

THIRU T. MARTIN:
THIRU J. JAMES:
THIRU K. VINAYAKAM: } under what rule, under what rule?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி ஒவ்வொருவரும் ' under what rule ', ' under what rule ' என்று சொன்னால் சபை நடக்குமா?

**THIRU K. VINAYAKAM:** You have confronted us with the same kind of question. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேளுங்கள். பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் விதியை மீறுவதுபற்றிச் சொல்லலாம். அல்லது அவை நடக்கிற நடைமுறையில் வருகிற மரபை பற்றியும் சொல்லலாம். ஆகவே திரு. அரங்கண்ணல் அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்பதைப்பற்றிச் சொல்லிவிட்டு பிறகு மேற்கொண்டு சொல்லுங்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** அவை நடக்கிற முறைகளைப்பற்றி. பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் ஒரு முடிவு எடுத்த பிறகு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அதில் ஒரு உறுப்பினர் என்று கருதுகிறேன். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அவர்கள் எடுத்துக்கொள்வதுபற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை, ஆனால் அவர்கள் பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் ஒரு உறுப்பினராக இருந்து ஒரு முடிவு எடுத்த பிறகு, எடுத்த முடிவுபற்றி நீங்கள் வாசித்த பிறகு அதன் மீது பேசுவது முறையா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அங்கு இவ்வளவு நேரம் என்று முடிவு எடுக்கவில்லை. வசதிக்காகத்தான் சொல்கிறேன். மூன்று மணி நேரம்தான் இருக்கும். நேரத்தை கட்சிகளுக்கிடையே பங்கிட்டுக் கொடுக்கிற முறையில் எல்லோருக்கும் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கவேண்டும் என்ற முறையில் தான் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகிற நேரத்தில் அவர்கள் வேண்டுமானால் அதிகப்படி நேரத்தை எடுத்துக் கொள்ளலாம், நாற்பது நிமிடங்கள் என்பதை ஒரு மணி நேரம் என்று எடுத்துக்கொண்டால் பிறகு பேசுகிறவர்களிடமிருந்து அந்த நிமிடங்களைக் குறைக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மந்திரிகள் மட்டும் பதில் சொன்னால் போதாதா என்று கேட்டார்கள். இன்றல்ல, ஒவ்வொரு முறையும் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வந்திருக்கின்ற நேரத்தில், நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது மந்திரிகள் மட்டும் பதில் சொல்லவில்லை. ஆளும்கட்சியைச் சார்ந்தவர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலரும் அப்போது பேசியிருக்கிறார்கள். ஆகவே இப்போதும் ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பேசுவதற்குத் தடை இருக்கக் கூடாது. அந்தத் தடையை விதிக்கக்கூடாது என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களை நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நான் அந்தத் தடையை விதிக்கவில்லை. எப்படி சௌஜன்யமாக நடக்கவேண்டுமென்று சொல்கிறீர்களோ அதற்காகத்தான் சொல்கிறேன். திரு. ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது ஆளும் கட்சி அங்கத்தினர்கள் ஒருவரும் பேசவில்லை. (குறுக்கீடு) அதை



மட்டும் நான் ஏன் சொல்லக் கூடாது என்று கேட்கிறேன். அப்போது ஆளும் கட்சி அங்கத்தினர்கள் ஒருவரும் பேசவில்லை. முன்னால் இருந்ததிலிருந்து சொல்கிறேன் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் இருக்கையில் இருந்து கொண்டு பேசுவதை கைவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அமைச்சர்கள் கூடப் பேசவில்லை என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அது நம்பிக்கைத் தீர்மானம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நான் பேசும் நேரத்தைக் காங்கிரஸ் கட்சிக்குக் கொடுக்கப்பட்டிருப்பதிலிருந்து கழிக்கக் கூடாது. நான் விவாதத்தை ஆரம்பிப்பவன். அப்படியே அமைச்சர்கள் பேசும் நேரத்தையும் கழிக்க வேண்டாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவை தவறாக புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். திரு. ராஜாஜி அவர்கள் கொண்டு வந்தது, அவரே தன்மீது நம்பிக்கைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் பெருமதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள் முதல் மந்திரியாக இருந்த நேரத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் போன்றவற்றின்மீது பேச ஆளும் கட்சி உறுப்பினர்களும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் பேசுவதற்கு.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உரிமை இல்லை என்று சொல்லவில்லை. குற்றச்சாட்டுக்கள் அதிகமாக இருக்கின்றன. பேசக்கூடாது என்று சொல்லவில்லை. நீங்கள் ஆரம்பித்ததுதான் இந்தத் தகராறு, நீங்கள் இதை ஆரம்பித்திருக்காவிட்டால் என் பொன்னான நேரம் இதில் போயிருக்காது. நீங்களே ஆரம்பித்துவிட்டு நீங்கள் சொல்வதை எங்கே அட்ஜஸ்மென்ட் செய்கிறீர்கள்.

**திரு. ஏன். சங்கரய்யா:** இந்தக் கண்டனத் தீர்மானம்தான் முதலில் கொடுக்கப்பட்டது. பிறகுதான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டது. ஆகவே, நான் கொண்டு வந்திருக்கக்கூடிய கண்டனத் தீர்மானத்தையும் முன்மொழிந்து பேசுவதற்கு எனக்குப் போதுமான அவகாசம் தரவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஒரு தீர்மானம் மட்டும் அல்ல என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டியில் மாலையிலும் கூட்டம் இருக்கிறது என்று அன்று முடிவு செய்யப்பட்டது. இன்று மாலைக் கூட்டம் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எங்களுக்குப் பத்து நிமிடங்கள் என்றிருப்பதைத் தளர்த்த வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, இந்த அமைச்சரவை மீது இந்த முறை கொண்டு வரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரே ஒரு வாசகத்தில்தான் இருக்கிறது. நாக்கைச் சப்புவதெல்லாம் பிறகு வைத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் இருக்கையில் அமர்ந்து கொண்டு பேசுவது முறையல்ல, அது தேவையும் அல்ல. முன் வரிசையில் மாண்புமிகு அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பதில் கூறும் பணியை

ஏற்றுக்கொள்வார்கள். குறுக்கீடு தேவைதான். ஆனால் அதிகமான குறுக்கீடுகள் இருப்பது விவாதத்தை நல்லமுறையில் கொண்டு செல்லாது. ஆகவே இருக்கையில் அமர்ந்து கொண்டு பேசக்கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஏன் ஒரே ஒரு வாக்கியத்தில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறதென்றால், 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் தேதி அன்று மறைந்த மாண்புமிகு அண்ணாதுரை அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது ஓர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் பிரேரேபித்தேன். அதில் அதற்கான காரண காரியங்களை எல்லாம் குறிப்பிட்டிருந்தேன். பத்து பதினொரு காரணங்கள் கூறப்பட்டு அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். அப்போதுதான் அவர்கள் புதிதாக வந்திருக்கிறார்கள். குறிப்பிட்ட சிலவற்றின்மீதுதான் தவறுகள் நடந்திருக்கும் என்று குறிப்பிடுகிற வகையில் அது கொண்டு வரப்பட்டது. அதற்குப் பின்னால் வந்திருக்கும் அமைச்சரவை செய்திருக்கும் நிர்வாகங்கள் எல்லாவற்றிலும் தவறுகள் நடந்து கொண்டிருக்கும்படியான காரணத்தினால், தமிழ் நாட்டு மக்களின் உள்ளங்களில் எல்லாம் இவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்பதைத் தெரிவிக்கும் காரணத்தினால் ஒரே ஒரு வாசகத்தில் இத்தீர்மானத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன். மக்கள் உணர்ச்சியைப் பிரிதிபலிப்பது தான் ஒரே ஒரு வாசகத்தில் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானம்.

இப்போது கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை இந்த மாமன்றம் நிராகரிக்குமேயானால், மக்களுடைய குரலைப் பிரிதிபலிக்கவில்லை என்பதைத் தான் அது காட்டும். இதிலே கட்சி நோக்கம் இல்லாமல் கட்சி நலனைப் பார்க்காமல், நாட்டு மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு கட்சிக்கு அப்பாற்பட்டு நின்று மனச் சாட்சியோடு இதற்கு ஆதரவு தர வேண்டும். இதற்கு முன்னாலே கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்களுக்கெல்லாம் காங்கிரஸ் கட்சி மட்டுந்தான் கொண்டு வந்து ஆதரித்தது. இப்போது, உங்களோடு உறவாடிக் கொண்டிருந்தவர்கள், தோளோடு தோள் நின்று காங்கிரசை எதிர்த்தவர்கள் மாறி இப்போது எங்கள் பக்கத்தில் இருக்கிறார்கள். சி.பி.எம்., சி.பி.ஐ., பி.சோ., ச.சோ., எல்லோரும் சர்க்காருக்குக் கண்டனத்தைத் தெரிவிக்கிறார்கள்.

**திரு. என். சங்கரய்யா :** கம்யூனிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி ஆகியவை தனியாகக் கண்டனத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நாங்கள் எழுந்து ஆதரிக்கவில்லை (ஆரவாரம்). இந்த அரசு சம்பந்தமாக காங்கிரஸ கட்சித் தரப்பில் ஆட்சேபணையான கருத்துக்கள் இருந்தால் பிரச்சனையிலே மாறுபாடு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் முடிப்பதற்குள்ளாகவே அவர் ஆரம்பித்துவிட்டார். சர்க்கார் செய்யும்படியான தவறுகளில் போலீசார் சம்பந்தப்பட்டவரை அவர்கள் கண்டனத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.



அன்றே நாங்கள் சொன்னோம் போலீஸ் இலாகாவில் தவறுகள் இருக்கின்றன என்று. அதிகாரிகளைப் பற்றிச் சொல்லவில்லை. சர்க்காருடைய கொள்கையில், நடக்கும் போக்கில் தவறுகள் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது என்றுதான் கூறுகிறோம். அப்போது நாங்கள் சொன்ன நேரத்தில் இந்த பி.சோ., ச.சோ., எல்லாம் ஆதரிக்கவில்லையே. இன்று அதற்காகக் கண்டனத்தைக் கூறுகிறார்கள். பின்னால் அந்த நிலை வந்திருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** பி.சோ. கட்சி எந்தக் காலத்தில் எதைச் செய்ய வேண்டுமென்பதைப் புரிந்து கொண்டிருக்கிறது. உங்களுடைய ஆலோசனை தேவையில்லை. (ஆரவாரம்)

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அன்று நாங்கள் எழுந்திருக்காவிட்டால் இந்தக் கண்டனத் தீர்மானம் என்னவாகியிருக்கும்? என்னிடம் வந்து ஆதரிக்க வேண்டுமென்று கெஞ்சினீர்களே இல்லையென்று சொல்ல முடியுமா? வெளியில் ஒரு பேச்சு உள்ளே ஒரு பேச்சு வேண்டாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஓர் அரசியல் கட்சி கெஞ்ச வேண்டுமென்கின்ற பண்புதான் உங்களிடம் இருக்கிறது என்பதை நான் இப்போதுதான் புரிந்து கொண்டேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவர்களிடம் கெஞ்சுவீர்கள், வேறு சமயத்தில் எங்களிடம் கெஞ்சுவீர்கள், உங்களுடைய போக்கு அது, தவறு என்று சொல்லவில்லை. மக்களுக்குத் தீமை விளையக் கூடாது, விளைந்தால் கண்டிக்க வேண்டுமென்பதற்காக உங்களை ஆதரித்தோம். உங்களுக்குப் பயந்து ஆதரிக்கவில்லை. சர்க்கார் செய்யும் தவறுகளை இப்போதாவது கண்டிக்க முன் வந்தீர்களே என்பதற்காகப் பரிதாபத்துடன் எழுந்து நின்றோம்.

அதிலே கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறதே, நீங்கள் ஆதரித்து விட்டீர்களே என்று சொல்லலாம். அவர்களுடைய கட்சியை நாங்கள் ஆதரிக்கவில்லை, அவர்களுடைய வன்முறைப் போக்கை ஆதரிக்கவில்லை, இதுவரை ஆதரிக்கவும் இல்லை, இனிமேல் ஆதரிக்கப் போவதும் இல்லை. மகாத்மா காந்தி அவர்களிடம் "கம்யூனிஸ்ட் தத்துவம், சமதர்மத் தத்துவம் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?" என்று ஒருவர் கேட்டார். அவர்கள் சொன்னார்கள்---கம்யூனிஸ்ட் தத்துவத்திலே தவறு கிடையாது, சமதர்ம நோக்கிற்கு ஆட்சேபணை கிடையாது. அதை ஏற்றுக் கொள்ளுவதாக இருந்தால் கம்யூனிசம் மைனஸ் வயலன்ஸ்—பலாத்காரம் எடுக்கப்பட்டால்---அதை ஆதரிப்பேன், என்றார். நல்ல முறையில் மக்களுக்கு நன்மை செய்ய முற்படும் போது ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். நாங்கள் சர்க்கார் செய்த தவறுகளைக் கண்டிக்கும் வகையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் ஒரு கண்டனத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும் நாங்கள் கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை என்று கூறுகிறீர்கள். உங்களுடைய இந்தப் போக்கு என்ன என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளுவார்கள்.

பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன. கட்சி சார்பாகப் போட்டி போடப் போவதில்லை என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு பதின் மூவாயிரம் பஞ்சாயத்துக்களிலும் எங்கள் கொடிதான் பறக்கப்போகிறது என்று சவால் விட்டார்கள். அந்த லட்சியத்தை அடைய ஓயாது ஒழியாது மந்திரிகள் பாடுபட்டார்கள், அதிகாரிகள் பாடுபட்டார்கள். நிர்வாகம் பாடுபட்டது. வேண்டாத அதிகாரிகள் மாற்றப்பட்டார்கள். வேண்டியவர்களை அதே இடத்தில் வைத்துக் கொண்டார்கள். சிலருக்கு வேலை இறக்கம் எல்லாம்கூட நடந்தது. இவ்வளவெல்லாம் செய்துவிட்டு கடைசியில் பட்டியல் கொடுக்க ஆரம்பித்தார்கள். அந்தப் பட்டியலிலே என்ன நியாயம் இருக்கிறது? அந்தப் பட்டியலாவது பூரணமாக இருந்ததா என்றால் இல்லை. பஞ்சாயத்துத் தேர்தல்களில் கட்சி சார்பாகப் போட்டியிடவில்லை என்றாலும் கட்சிக்காரர் நின்றதாக நாவலர் அவர்கள் சொன்னார்கள். ஆளும்படியான அந்தக் கட்சி மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்திருப்பார்களானால் உங்களை ஏன் ஆதரிக்காமல் போகப் போகிறார்கள்?

வறட்சி நிவாரணத்திற்குப் பல கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அந்த வேலைகள் கிராமத்தில் செய்யப்பட்டிருக்குமானால், மக்கள் அதை உணர்ந்திருப்பார்களானால் உங்களுடைய கட்சியை ஆதரித்திருக்க வேண்டும். வறட்சி நிவாரண நிதி ஏன் கொடுக்கப்பட்டது? பழைய காங்கிரசுக்கு, எங்கள் காங்கிரசுக்கு இங்கே மிகவும் செல்வாக்கு இருக்கிறது. இதன் மூலம் அவர்களை ஒழித்து விடலாம் என்று மறைமுகமாகக் கொடுத்த ஆதரவு என்று குற்றம் சாட்டுகிறேன். உங்களுடைய ஆட்சிக்கு வறட்சி நிவாரணத்திற்காக மத்திய அரசில் இருந்து 14 கோடி ரூபாய் வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். வறட்சி நிவாரண நிதி, பழைய காங்கிரஸ், புதிய காங்கிரஸ் என்று தோன்றியதற்குப் பிறகு கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அது முற்றிலும் தவறு. காங்கிரஸ் ஒன்றாக இருந்த நேரத்திலேதான் வறட்சி நிவாரண நிதி கொடுக்கப்பட்டது. அந்த நேரத்திலேதான் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சுற்றுப் பயணம் வந்தார்கள். திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்தான் அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சி. எஸ். இப்போது உங்களைப் பற்றி என்ன சொல்லுகிறார்? (குறுக்கீடு) அவர் திருவாய் மலர்ந்தருளியதைக் கூறுகிறேன். பஞ்சாயத்துக்களைப் பிரித்திருப்பதிலேயே தவறுகள் இருக்கின்றன என்று கூறுகிறார். அப்போது காங்கிரஸ் ஒன்றாகத்தான் இருந்ததாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த நோய் அப்போதே ஆரம்பித்து விட்டது.

பஞ்சாயத்துத் தேர்தல்களில் போலீஸ் தலையீடும், அதிகாரிகள் தலையீடும் அதிகமாக இருந்திருக்கிறது. போலீசார் வன்முறையைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் கூடக் கண்டித்திருக்கிறார்கள். ஆனால் நடந்தது என்ன? மானாமதுரையில் நடந்த சம்பவம்பற்றி கோர்ட்டில் இருப்பதால் அதைப்பற்றி அதிகமாகச் சொல்லவில்லை. சில பஞ்சாயத்து உறுப்பினர்கள் முந்திய நாளே



வந்திருக்கிறார்கள். அந்தக் கார் மரத்தில் மோதி அடிபட்டிருக்கிறது. ஊரைக் கெடுக்கும் சில பத்திரிகைகளில் மறுநாள் என்ன செய்தி வந்தது? சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள் கொலை செய்து விட்டார்கள் என்று வந்தது. அப்படியானால் சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது?

யார் தவறு செய்தாலும் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுப்போம் என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். பிறகு சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள் தான் செய்தார்கள் என்று சொல்வதற்கு என்ன ஆதாரம்? இந்த மாதிரி தவறான பிரசாரத்தை செய்வது எங்களை அவமானப்படுத்துவது ஆகும். இது அரசியல் நாகரிகமா? நியாயமா? என்று கேட்க ஆசைப்படுகிறேன். அவர்கள் முந்திய நாளே மானாமதுரைக்கு வந்தார்கள். எல்லாம் நடந்து இருக்கிறது. பெரும் வழக்கு காங்கிரஸ்காரர்கள் மேல். இதிலே விஷயம் என்னவென்றால் எம்.பி. காரில் இருந்தபோது அடித்ததாகக் குற்றச்சாட்டு. அதனால் அங்கே இருக்கும்படியான காங்கிரஸ் ஊழியர்கள், மெம்பர்களை ஜெயிலுக்கு அனுப்பி இருக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அங்கே நியாயம் நடந்து இருக்கிறதா? சர்க்கார் இதிலே தலையிடவில்லை என்றால் நியாயமாகத்தானே இருந்து இருக்கவேண்டும். இது இப்போது நடந்த சம்பவம். பலப்பல நிலையில் இப்படி நடந்து கொண்டு இருக்கிறது. சர்க்கார் உணரவேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பஞ்சாயத்து தேர்தல் இருக்கட்டும். இப்போது நடந்து கொண்டு இருக்கும்படியான நீதி நிர்வாகத்துறையில் சர்க்கார் சொல்படி எந்த அதிகாரி நடக்கவில்லையோ அவர் மாற்றம் செயப்படுகிறார். எவ்வளவு தவறுதல்கள் நடந்து கொண்டு வருகின்றன? வாராவாரம் கெஜட்டில் வருகிறது. வாரம் தவறாமல் மாறுதல்கள் டிரான்ஸ்பர் இருக்கும். டிரான்ஸ்பர் எப்படி நடக்கிறது? ஒரு அதிகாரி ஒரு இடத்தில் 3 வருஷம் இருக்கலாம். 3 மாதம் இருந்தாலே டிரான்ஸ்பர். 6 மாதத்திற்கு 2 மாதத்திற்கு டிரான்ஸ்பர். அவர்கள் இஷ்டப்பட்டால் ஒருவர் 5 வருஷம்கூட இருக்கலாம்.

உதாரணம், ஊட்டியில் ஒரு கலெக்டர் 5 வருஷமாக ஒரே இடத்திலே பணியாற்றிக் கொண்டு வருகிறார். சிலருக்கு தினமும் ஒரு இடத்திற்கு இடம் மாற்றுகிறார்கள். இது ஆட்சியாளர் தலையீடு இல்லையா? ஒரு முனிசிபல் கமிஷனர்மீது எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து அவர் பேரில் புகார் செய்யப்பட்டு அவர் லீவில் இருக்கிறார் இங்கே கோட்டையிலிருந்து தந்தி வருகிறது. அதை நிறுத்திவை என்று. இது நிர்வாகக்கோளாறா அல்லது தலையீடா? ராணிப்பேட்டையில் இருக்கும் கமிஷனர் மீது புகார் செய்யப்பட்டு டிரான்ஸ்பர் ஆர்டர் போட்டாகிவிட்டது. அதை நிறுத்தி வை என்று தந்தி வருகிறது. அதில்

"Copy of telegram. Received on the 28th evening. Reference R.D.L.A. Order G.O. 6863, dated 20th June 1970. The transfer of Thiru K. G. Subramaniam on return from leave to be Municipal Commissioner Ranipet vice Thiru A M. Krishnaswami to Wallajapet is kept under abeyance."

தவறு செய்தவர்மீது நடவடிக்கை எடுக்காமல், புகார் சொல்லப்பட்டவர் மீது நடவடிக்கை எடுக்காமல், இப்படிச் செய்தால் இது நிர்வாகமா? இது மாதிரி ஆயிரம் சொல்லலாம். கோபிச்செட்டிபாளையத்திலே ஒரு வெடரினரி டாக்டர், டிரான்ஸ்பர் செய்யப்பட்டார். மூன்று மாதம் லீவில் போனார். லீவில் இருக்கும்போது சொன்னார். நான் லீவ் முடிந்த பிறகு இங்கேயே திரும்பவும் வருவேன் என்றார். அதை நிறைவேற்றி விட்டார். இந்த ஆட்சியில் இது ஒரு பெரிய சாதனை. டிரான்ஸ்பரான அதிகாரி லீவ் எடுத்துக் கொண்டு வந்து லீவ் தீர்வதற்குள் அதே இடத்தில் இருப்பதற்காக உத்தரவு வாங்கிக்கொண்டு வருகிறார்.

இது மாதிரி எத்தனையோ சீர்கேடுகள், ஊழல்கள் என்று சொல்லலாம். ஆதாரம் எங்கே? கொண்டா என்றால், இதையெல்லாம் விசாரியுங்கள். இது மாதிரி எத்தனையோ ஆயிரம் இருக்கும். யாருக்கு உங்கள் பேரில் நம்பிக்கை இருக்க முடியும்? இது மாதிரியான நிலை ஏற்படுவது சர்க்காரின் தலையீட்டாலா, ஆட்சியாளர்களின் தலையீட்டாலா, அல்லது கட்சி ஊழியர்களின் செல்வாக்காலா, அல்லது அதிகாரிகளுக்கே இருக்கும்படியான செல்வாக்கின் அடிப்படையிலா?

அந்தக்காலத்தில் செக்ரடேரியட்டில் செக்ரடரிகள் இருந்தார்கள். அமைச்சர்கள் இருந்தார்கள். அவர்களுடைய கருத்தை எழுதுவார்கள். அமைச்சர்கள் கருத்து எழுதுவார்கள். எனக்குத் தெரிந்து ஐ.சி.எஸ். அதிகாரி ஒருவர் பச்சை இங்கில் எழுதுவார்கள். பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அந்த பைல் அமைச்சரிடத்தில் வந்தது. அவர் என்ன எழுதினார் தெரியுமா? " இங்கே எழுதப்பட்டுள்ள எழுத்திலே பச்சை மசி அதிகமாக செலவழிந்து இருக்கிறது, தெரியும். இருந்தாலும் உங்கள் அபிப்பிராயத்திற்கு நான் மாறுபடுகிறேன்." என்று எழுதினார். அது நிர்வாகம். அது அந்தக் காலத்தில் நடந்தது. இது மாதிரி பல சந்தர்ப்பங்களில் நடந்து இருக்கிறது. இது மாதிரி ஒரு பைல் இப்போது கொண்டு வந்து காட்ட முடியுமா? நீங்கள் மனதில் என்ன நினைக்கிறீர்களோ அதை அதிகாரி எழுத வேண்டும். அப்படிச் செய்ய வில்லை என்றால் உடனே டிரான்ஸ்பர். அதிகாரிகள் எழுதி வைத்தால் கையெழுத்து போடுவீர்கள். அந்தக் கையெழுத்தும் ஒரு நாளைக்கு எத்தனை போடுவீர்களோ ? ஏனென்றால் உங்களுக்கு டூர் போகத்தான் சரியாக இருக்கிறது. கல்யாணத்திற்கு அப்படியே அமைச்சர்கள் எல்லோரும் கும்பலாகப் போகிறீர்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இப்படி அமைச்சர்கள் கல்யாணத்திற்கு போகிறார்களே என்று அங்கலாய்த்தீர்கள். இந்த நிலையை சீர்திருத்தி அமைக்கத்தான் இப்படிக் குற்றச்சாட்டு சாட்டுகிறேன்.

ஆகவே, எந்தப் பிரச்னையை எடுத்து நாம் பார்த்தாலும் இப்போது சர்க்கார் அதிகாரிக்குச் சரியான சுதந்திரம் கிடையாது அவர் எடுத்துக் கொண்ட கருத்துக்களில் நாம் எப்படி மாறுபட்டு இருக்கிறோம்? அப்போது தானே அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியும்? உங்களுடைய கருத்து அறிந்து அதிகாரிகள் எழுதினால் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? இந்த அரசாங்கத்திலே நிர்வாகம் என்பது ஸ்தம்பித்து இருக்கிறது. அரசாங்கத்திலே இருக்கும் பெரிய அதிகாரிகள் எப்படி எழுதினால் என்ன ஆகுமோ,



என்று பயந்து கொண்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் சர்க்காரின் மந்திரிசபை கவனித்து சரியானபடி நிர்வாகம் நடக்க ஆவன செய்ய வேண்டும்.

இந்த ஆட்சியில் சட்டம் அமைதி காக்கப்படவில்லை. ஒழுங்கு இங்கே நாட்டில் இல்லை. தமிழர் படை என்று ஒரு படையை வைத்து இருக்கிறார்கள். போலீஸார் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறார்கள். மதுரையில் நடந்தது. மந்திரிகளுக்குப் பாதுகாப்பு என்று சொன்னார்கள். போலீசுக்கு என்ன பயம் என்றால் அவர்கள் பேரில் அது பாயாமல் இருந்தால் போதும். நாங்கள் அப்போதே சொன்னோம். எல்லோரும் சேர்ந்து எதிர்த்தார்கள். இப்போது சி.பி.எம். கட்சி கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து இருப்பதற்கு என்ன பொருள்? தோளோடு தோள் நின்று உங்களோடு இருந்தார்கள். இப்போது என்ன சொல்கிறார்கள் ? போலீஸ் யதேச்சாதிகாரம் பெருகி விட்டது. போலீஸ்காரர்கள் பேரில் கோபம் இல்லை. சர்க்கார் பேரில் கோபம், நீங்கள் செய்யும் திட்டத்தின் அடிப்படையிலே தான் இந்த தவறு ஏற்படுகிறது என்று குற்றச்சாட்டு சாட்ட விரும்புகிறேன்.

இப்போது இருக்கும்படியான நிலை என்ன? ஒரு அமைச்சர் ஜெயிலுக்குப் போய், ஒரு சட்ட மன்ற உறுப்பினரிடத்திலிருந்து எழுதி கையெழுத்து வாங்கிக்கொண்டு வந்து இருக்கிறார்கள். நிலப்பறி போராட்டத்தில் வன்முறையை தடுக்க வேண்டியது சர்க்காரின் கடமை. வன்முறையைத் தடுக்காமல் இருக்கக்கூடாது. வன்முறையைத் தடுக்க வேண்டுமானால், நீதியை, நியாயத்தை காப்பாற்றவேண்டுமானால் ஜெயிலில் போட வேண்டும். பெரிய ஆபத்து என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஆபத்தைச் செய்தவர்களைப் போய் அமைச்சர் சந்திக்கிறார். சந்தித்ததோடு மட்டுமல்ல, எழுதிக் கொடுங்கள் என்று எழுதி வேறு வாங்கி வந்து இருக்கிறார். சட்ட அமைச்சர் 30-ம் தேதி திருச்சி ஜெயிலுக்குச் சென்று இருக்கிறார். அவர் போய் இருக்கலாம். அவர் திரு. ஏ. கே. சுப்பையாவைப் பார்த்து இருக்கிறார். அதற்காக நான் பாராட்டுகிறேன். திரு. ஏ. கே. சுப்பையாவைக் கூப்பிட்டு பேசி இருக்கிறார். " நீங்கள்தான் எல்லாம் முடித்து விட்டீர்களே, கடிதத்தில் எழுதிக் கொடுங்கள் " என்று சொல்லி இருக்கிறார். அந்தச் சட்டசபை உறுப்பினர் வந்து மறுக்கட்டும். அவர் ஒரு அப்பாவி மனிதர். கையெழுத்து போட்டுவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு சட்டமன்ற உறுப்பினர் இன்னொரு சட்டமன்ற உறுப்பினரை 'அப்பாவி' என்று பேசுவது நல்லதல்ல, அந்த சட்டமன்ற உறுப்பினர் பதில் கூறுகிற அளவுக்கு இந்த மன்றத்தில் இல்லாததால், அதைப்பற்றி குறிப்பிடாமல் இருப்பது நல்லது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** குறிப்பிடாமல் இருப்பது என்றால், நான் நடந்ததை எப்படிச் சொல்லாமல் இருக்க முடியும்? சட்டசபையில் முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள், திரு. ஏ. கே. சுப்பையாவிடமிருந்து கடிதம் வந்து இருக்கிறது. அந்தக் கடிதத்தில் நாங்கள் போராட்டத்தை நிறுத்தி விட்டோம் இனிமேல் நடத்த மாட்டோம் என்று குறிப்பிட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அவர் சொன்ன உடனே அந்த கைதிகளை

விடுதலை செய்வதாகச் சொல்லி விட்டார்கள். எனக்கு அதற்குப் பிறகு வந்த தகவல். அவரே என்னிடத்தில் வந்து சொல்லி இருக்கிறார். நான் ஜெயிலில் இருந்தேன். சட்ட அமைச்சர் வந்தார். வந்து என்னைக் கூப்பிட்டார். எழுதிக் கொடு என்று சொன்னார், அதற்கு மேலே எழுதிக் கொடுத்து இருக்கிறேன் என்று சொல்லி இருக்கிறீர்.

முற்பகல் 11-00 நான் என்ன குற்றச்சாட்டு சாட்டுகிறேன் என்றால், அமைச்சருடைய மனநிலையைப் பற்றி. நான் சொல்கிறேன், எழுதி கையெழுத்துப் போடுங்கள். இனிமேல் இந்தப் போராட்டம் நடைபெறாது என்ற ஒரு வாக்கியத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். அதற்கு மேல் அவர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களாக உணர்ந்து, அவர்களாக தெரிந்து சொன்னார்களோ, இல்லையோ, தெரியாது. ஒரு அமைச்சர் ஜெயிலுக்குப் போய் இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு எழுதி வாங்கியிருக்கிறார்கள். இது சாதாரணமான விஷயம் அல்ல. எந்தக் கட்சியைச் சார்ந்தவரானாலும் சரி, வலது சாரி கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்தவரிடமிருந்து ஒரு கடிதம் எழுதி வாங்கியிருக்கிறார் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையை இங்கே எழுப்பியிருப்பது எனக்கு உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. இதை ஏதோ அரசியல் கட்சிப் பிரச்சினைக்கு உள்ளாக்குவது நல்லது அல்ல என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிறைச்சாலைகளில், குறிப்பாக, திருச்சி சிறைச்சாலையில் அதிகமாக கைதிகள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள், வசதிகள் குறைவாக இருக்கின்றன என்ற குற்றச்சாட்டு வந்துகொண்டே இருந்தது. திருச்சி சிறைச்சாலையிலிருந்து பல சிறைச்சாலைகளுக்குக் கைதிகளை மாற்றினோம். அங்கே மீதி இருக்கிற கைதிகளுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் பார்த்து வரவேண்டும் என்று பார்ப்பதற்கு நான் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தபொழுது, கொஞ்ச நேரம் அங்கே போய்ப்பார்த்தேன். எல்லாக் கைதிகளையும் பார்த்தேன். ஒவ்வொரு இடத்திலும் அவர்களுக்கு வசதிகள் என்னென்ன தேவை என்று கருதுகிறார்கள் என்பதை நான் கேட்டு அறிந்துகொண்டேன். வசதி போதாது என்று சொன்னார்கள்.

உதாரணமாக, எண்ணெய் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். உடனே எண்ணெய் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. காலையில் கஞ்சியோடு கொடுக்கப்படும் துவையல் சரியாக இல்லை என்று சொன்னார்கள். நானே சாப்பிட்டுப் பார்த்தேன். அது சரியில்லை, இன்னும் கொஞ்சம் நன்றாகப் போடுங்கள் என்று யோசனை கூறினேன்.

சிறைகளினுடைய நிர்வாகத்தைப்பற்றி பார்ப்பதற்குச் சென்றிருந்தேன். அங்கே உள்ள கைதிகள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், மனிதாபிமானத்தோடு பார்க்க வேண்டும் என்பதுதான் எங்கள் கருத்து. முன்னால் எப்படி இருந்ததோ, எனக்குத் தெரியாது. எங்களுடைய அரசாங்கத்தைப் பொறுத்த அளவுக்கு அப்படிப்பட்ட நல்லெண்ணத்தை



வைத்துக்கொண்டுதான் அங்கு சென்று பார்த்தேன். சாதாரணமாக சந்திக்க வேண்டும் என்று அவர்களைச் சந்தித்தேன். தனியாகக் கட்சித் தலைவர்களையும், அவர்கள் சார்ந்த தலைவர்களையும், மக்களால் போற்றப்படக்கூடிய தலைவர்களையும், இந்த மன்ற உறுப்பினர் ஒருவர், இன்னொரு முன்னாள் மன்ற உறுப்பினர், இன்னொருவர் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்காகப் பல்லாண்டு காலமாகத் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு பெரிய தியாகி ஆகியோர்களைச் சந்தித்தேன். அப்படிப்பட்ட தலைவர்கள் அங்கே ஜெயிலில் இருந்தார்கள். இவ்வளவு பெரிய தலைவர்கள் அங்கே இருந்ததால், அவர்களைச் சந்திக்க வேண்டும் என்று சந்தித்தேன். அவர்களோடு பேசிக்கொண்டிருந்தேன்.

பேசிக்கொண்டிருந்தபொழுது, சட்டமன்ற உறுப்பினர் கேட்டார்கள், மற்றொருவரும் கேட்டார்கள். இந்தப் போராட்டம் நின்றுவிட்டதே, ஏன் மறுபடியும் வழக்குகள் தொடருகின்றன என்று கேட்டார்கள். அவர்களுக்கு நான் பதில் சொன்னேன். இதே கேள்வியைத்தான் உங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்தபொழுது கேட்டார்: அப்பொழுதே முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; தீர்மானங்களில், குறிப்பாக வலதுசாரிக் கம்யூனிஸ்டு கட்சியின் தீர்மானத்தில் இந்தப் போராட்டம் தொடர்வது போல் விளக்கங்கள் இருக்கின்றன, வார்த்தைகள் இருக்கின்றன, என்று சொன்னார்கள். அந்த வார்த்தைகளைக் கூட நான் அவர்களிடம் சொன்னேன். அந்த வார்த்தைகள் இப்பொழுது கூட நினைவு இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இப்பொழுது அநாவசியமாக என்னுடைய நேரத்தை வீணாக்க வேண்டாம். பின்னால் வேண்டுமானால் இதைப்பற்றி சொல்லிக்கொள்ளலாம். நான் கேட்பதெல்லாம் சட்ட மந்திரி ஜெயிலுக்குப் போனதுபற்றிகூட இல்லை. திரு. ஏ. கே. சுப்பையா கையெழுத்துப்போட்டு எழுதித் தந்த பிரச்சினையைப்பற்றித்தான் நான் சொல்கிறேன். அதற்கு வேண்டுமானால் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதற்குப் பதில் சொல்லத்தான் வருகிறேன். தீர்மானத்தில் இருக்கும் வார்த்தைகளைப்பற்றி சுட்டிக்காட்டினேன். தலைவர்கள் கைது செய்யப்பட்டாலும், தொண்டர்கள் தொடர்ந்து நிலத்தை சீர்படுத்துவார்கள், நிலத்தில் விவசாயம் செய்வார்கள் என்றெல்லாம் வார்த்தைகள் அந்தத் தீர்மானத்தில் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ‘உறுதியாக இந்தக் கட்சியிலிருந்து இந்தத் திட்டம், இந்தப் போராட்டம் இந்தத் தேதியுடன் முடிந்து விட்டது என்று எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். பிறகு அவர்களை விடுதலை செய்வதுபற்றிப் பரிசீலிக்கிறேன்’ என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள் என்று அவர்களிடம் சொன்னேன். அதற்கு அவர், ‘இல்லை, உறுதியாக முடிந்து விட்டது’ என்று சொன்னார். ‘அப்படியென்றால் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எழுதித் தாருங்கள், நான் முதல் அமைச்சர் அவர்களிடம் சொல்கிறேன்’ என்று நான் அவர்களிடம் சொன்னேன். உடனே தாள் கேட்டார், எழுதிக் கொடுத்தார். பக்கத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இருந்தார்கள்,

அவர்கள் கட்சியினரும் இருந்தார்கள். சூப்பரின்டெண்டெண்டும் இருந்தார். எழுதித் தந்தார். விடுதலை செய்ய வேண்டும் என்று சொன்னார். 'போராட்டத்தைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டேன். 'போராட்டம் நிறுத்தப்பட்டு விட்டது', என்று சொன்னார். நாளைக்கு, முதல் அமைச்சர் அவர்களிடம் சொல்கிறேன் என்று சொன்னேன். முதல் அமைச்சர் அவர்கள் அந்தக் கடிதத்தை இங்கே படித்தார்கள். அவர்கள் எழுதிக் கொடுத்ததை அங்கேயே கலெக்டர் அவர்களிடம் கொடுத்தேன். முறைப்படி நடவடிக்கை எடுத்து, அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னேன். அப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்து விட்டேன். மறுபடியும் அது இங்கே முறைப்படி வந்தது, முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. முதல் அமைச்சர் அவர்கள் அந்தக் கடிதத்தை இங்கே வாசித்து, அவர்களை விடுதலை செய்வதாக அறிவித்தார். இதில் என்ன தவறுகள் என்று எனக்குப் புரியவில்லை.

சட்ட அமைச்சர், சிறைச்சாலைக்கு அமைச்சர் என்ற முறையில் ஜெயிலிலிருக்கும் சட்ட மன்ற உறுப்பினர் ஒருவரிடத்தில் கட்டாயப்படுத்தி எழுதி வாங்கினேன் என்பது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய குற்றச்சாட்டு என்றால் அதை அவர் தெளிவுபடுத்தவேண்டும். இது ஒரு சட்ட மன்ற உறுப்பினருக்கும், இன்னொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் பகிரங்கமாக நடந்த விஷயம். நான் கட்டாயப்படுத்தி, நான் சொல்லியதற்காக அவர் எழுதிக் கொடுத்தார் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குற்றம் சாட்டுகிறார்களா என்று தெளிவுபடுத்த வேண்டும். பலமுறை சிறைவாசம் அனுபவித்தவர், தியாகம் செய்தவர், அப்படிப்பட்ட ஒரு கட்சியைச் சேர்ந்தவா ஒரு அமைச்சர் ஜெயிலுக்கு வரும்பொழுது, விடுதலை பெறவேண்டும் என்ற ஆசையோடு எழுதிக் கொடுத்தார் என்று அப்படி அந்தக் கட்சியை அவ்வளவு இழிவுபடுத்துவதற்கு நான் தயாராக இல்லை. அவர்கள் தயாராக இருக்கிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது. தெளிவாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டும். நான் கட்டாயப்படுத்தி அவர்களிடம் எழுதி வாங்கினேன் என்று அவர்கள் குற்றச்சாட்டு சொல்வார்களேயானால், அதை நான் ஏற்றுக்கொண்டு, அதற்காக என்ன விசாரணையையும் ஏற்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தயாராக இருக்கிறாரா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ரொம்ப நன்றி, சபாநாயகர் அவர்களே, இப்பொழுது அவர்கள் விசாரணைக்கு தயாராகிவிட்டார். இப்பொழுது இருக்கும்படியான பிரச்சினை வலது சாரிக் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த உறுப்பினருக்கும், அமைச்சர் அவர்களுக்கும் இருக்கும்படியான விவகாரம். திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் விடுதலை அடைந்ததும் என்னை வந்து சந்தித்தார்கள். நான் கேட்டேன், அவர்கள் சொன்னார்கள். அவராகவே எழுதிக் கொடுத்திருந்தால் எனக்கு ஆட்சேபனை இல்லை. அவரே வந்து நானாக எழுதிக்கொடுத்தேன் என்று சொல்லட்டும். எனக்கு ஆட்சேபனை கிடையாது. கட்சிப் பெருமை, இவர்கள் பெருமை இதெல்லாம் இருக்கட்டும். இதைப்பற்றியெல்லாம் விசாரணை நடத்த வேண்டும் . . .



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** விடுதலை செய்ய வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுக்கிறார்கள். விடுதலை செய்வதைப்பற்றி ஏற்கனவே முதல் அமைச்சர் அவர்களை டெல்லியிலிருந்து வந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர் சந்தித்தார். என்னை வந்து அவர் சந்தித்துப் பேசினார். திரு. அஹமத் என்பது அவருடைய பெயர். எல்லோரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். உங்களுடைய போராட்டம் நிறுத்தப்பட்டதாகத் தெரியவில்லை, நிறுத்தப்பட்டதாகத் தெரிந்தால், விடுதலை செய்வது பற்றி பரிசீலிக்கிறேன் என்று சொன்னேன்.

திரு. சுப்பையா அவர்களை சிறைச்சாலையில் சந்தித்தபோது திரு. மாதவன் அவர்கள் இதைத்தான் அவர்களிடம் குறிப்பிட்டிருக்கிறார்கள். விடுதலை செய்ய வேண்டும் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார். முதல் அமைச்சர் அவர்கள் ஒரு நிபந்தனை போட்டிருக்கிறாரே, என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டிருக்கிறார் ; போராட்டம் தொடர்ந்து நடத்தப் போவதில்லை என்று சொல்லியிருக்கிறார் ; அதுதான் விஷயம். அதைத் திரு. சுப்பையா அவர்கள் எழுதித் தந்திருக்கிறார். அதை வாங்கி அனுப்பியிருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் இங்கே என்ன கூறுகிறார்கள். விடுதலை செய்தது தவறா? கடிதம் கொடுத்தது தவறா? அல்லது நிலப்பறி இயக்கம் தொடர்ந்து நடக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இப்படிக் கேள்விகள் கேட்டு என்னை சிக்க வைக்கப் பார்க்கிறார் முதல் அமைச்சர் அவர்கள். நான் சிக்கிக்கொள்ள மாட்டேன். நான் கேட்கிற கேள்வி இதுதான். அமைச்சர் அவர்களிடம் அங்கே போய், ஒரு எம்.எல்.ஏ.-யிடம் கொயர்ஸ் பண்ணாமல் நைஸாகப் பேசி, கொஞ்சம் எழுதிக் கொடுத்துவிடுங்கள் என்று நைஸாகச் சொன்னார். அப்படியில்லாமல், எழுதிக்கொடுங்கள், எழுதிக்கொடுத்தால்தான் முடியும், ஹா, எழுதிக்கொடுங்கள்' என்று சொல்லாமல் நைஸாகச் சொன்னார். சபாநாயகர் அவர்களுக்குத் தெரியும். தமிழில் சிறந்த அறிஞர் நீங்கள் கேட்டதில் பல தினுசாகக் கேட்கலாம் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எனக்கு நைஸ் பண்ணத் தெரியாது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் நைஸாகப் பேசியதாகக் குறிப்பிட்டார்கள் எனக்கு நைஸ் பண்ணத் தெரியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஒன்றுமே தெரியாது என்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்களை ஆதரிக்கிற திரு. ராஜாஜி அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவர் சொல்லியிருப்பது இதுதான்

'The Law Minister has no doubt some knowledge of law but is politically an immature personality. He deserves to be relieved from the portfolio of law.'

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** என்ன காரணத்திற்காகச் சொன்னார்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸ்ட்ரிக்சரை வைத்து . . . இம்மெச்சூர் பெர்ஸனாலிடி என்று சொல்லியிருக்கிறார். எனக்கு நைஸ் பண்ணத் தெரியாது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

[1970 செப்டம்பர் 7

[திரு. மு. கருணாநிதி]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ராஜாஜி அவர்கள் எதற்காகச் சொல்லியிருக்கிறார் என்று கூறுகிறேன். தடுப்புக் காவல் சட்டம் போட வேண்டும் என்று சொன்னார்கள். பி.டி. ஆக்ட் போட வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு இந்த அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை. பி.டி. ஆக்டை போட்டால், எனக்குத் தெரியும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே கூட, ஏன் இதைப் போடவேண்டும் என்று கேட்டிருப்பார்கள். அதைப் போடாமல் நடவடிக்கை எடுத்தோம். அதைப் போடாமல் இருந்ததன் காரணமாக சட்ட அமைச்சராக இருக்க லாயக்கு இல்லை என்று அவர்கள் கூறியதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவர்கள் சொல்வது one aspect of the thing உங்களுடைய சௌகரியத்திற்கு நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்கள். எங்களுடைய சௌகரியத்திற்கு நாங்கள் எடுத்துக் கொள்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ராஜாஜி அவர்கள், சட்ட அமைச்சர் தடுப்புக் காவல் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு ஒப்புதல் தரவில்லை, இணங்கிவரவில்லை என்பதற்காக அப்படிச் சொன்னார். அந்த அடிப்படையை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா? தயவு செய்து நான் விளக்கம் பெறுவதற்காக கேட்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எந்த அடிப்படையோ தெரியாது. ஒரு அமைச்சரைப்பற்றி, உங்களுடைய அமைச்சரவையிலே இருக்கும்படியான ஒரு அமைச்சரைப்பற்றி அவர் எப்படி அம்மாதிரி சொல்லலாம்? அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. எனக்கு ரொம்ப கோபம் வருகிறது. இம்மெச்சூர் பெர்ஸனாலிடியை அமைச்சராக வைத்துக்கொண்டிருப்பது உங்களுக்குத் தானே குறைவு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் என்மீது இவ்வளவு ஆசையோடு பேசியிருப்பதற்கு நன்றிதெரிவிக்கிறேன். ஆனால் இதற்கு முன்னால் ராஜகோபாலாச்சாரியார், பெரிய அரசியல் நிபுணர், என்னையே பாராட்டி, நான் அமைச்சரவையில் இருப்பது பற்றி எழுதியிருக்கிறார்கள். அதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது அவர்கள் சொல்லியிருப்பது, தடுப்பு காவல் சட்டம் கொண்டு வந்திருக்க வேண்டும் என்று சட்ட ஆலோசனை கொடுக்கவில்லை என்பதால் 'பொலிடிகல் இம்மெச்சூரிடி' என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்லியிருப்பதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளுகிறேன். இந்த அரசு தடுப்புக் காவல் சட்டத்தை கொண்டு வரக்கூடாது என்று, நான் முடிவு செய்யவில்லை, மந்திரிசபை முடிவுசெய்தது 'பொலிடிகல் இம்மெச்சூரிடி' என்றால் அதைப் பரிபூரணமாக ஏற்றுக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இப்படியெல்லாம் எதையாவது சொல்லி கப்பித்துப் போய்விடுவதில் பிரயோஜனம் இல்லை. தவறு என்றால் விசாரணை செய்ய வேண்டும். விசாரணைக்குத் தயார் என்றார்கள் . . .



1970 செப்டம்பர் 7]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தடுப்புக்காவல் சட்டம் கொண்டு வருவது சரி என்று சொல்லுகிறீர்களா? அதைச் சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அதைப் பற்றி அப்புறம் பேசிக் கொள்ளலாம். இப்பொழுது நம்பிக்கை இல்லாத் தீர்மானம். தடுப்புக் காவல் சட்டத்தைப் பற்றியில்லை. தடுப்புக் காவல் 'பில்'-லைக் கொண்டு வாருங்கள், அப்பொழுது அதைப்பற்றிச் சொல்லுகிறேன். (சிரிப்பு) இப்படித் திருப்புகிறார்கள். ஆகவே, அவர்கள் சொல்லியிருக்கிறார். ஐயா, இந்தத் திட்டத்திலே தவறு இருக்கிறது என்றால், நல்ல எண்ணத்தில் சொல்லுகிறேன். அதைவிட்டு விட்டு வேறு பேசினால் எப்படி? ஆக தவறு நடந்திருக்கிறது. தவறு நடந்திருக்கிறது என்றால், நீங்கள் பங்குக்கு வாருங்கள் என்றால் இவையெல்லாம் தமாஷ் இல்லை. நாட்டு மக்களுடைய நலனுக்காக சட்ட சபையை நடத்த வேண்டும். சும்மா குறுக்கீடு செய்து, சைட் ட்ராக் பண்ணுவது ஒன்றும் சரிவராது. நம்பிக்கை இல்லை என்று சொல்லுகிறேன். மக்கள் சொல்லுவதை நான் இங்கே சொல்லுகிறேன். (குறுக்கீடு) தடுப்புக் காவல் சட்டத்தைக் கொண்டு வாருங்கள், அப்பொழுது பார்ப்போம்.

ஆகவே, அதோடு மட்டுமல்லாமல், அமைச்சர்களைப் பற்றி பல புகார்கள் வருகின்றன. ஆதாரம் காட்டு, ஆதாரம் காட்டு என்றால் எங்களுக்குக் கிடைப்பதைக் கொடுக்கிறோம். ஒரு அமைச்சர் வீடு வாங்கியிருக்கிறார் என்று டெல்லியிலிருந்து எனக்கு கடிதம் வருகிறது. இப்படியிருக்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி பத்திரிகையில் வந்தது. பெரிய மனிதர் கணக்கில், ஒன்றேகால் லட்சத்திற்கு அமைச்சருடைய மனைவி பெயரில் ரெஜிஸ்டர் ஆகியிருக்கிறது. இரண்டரை லட்சம் பிடிக்கும், பணமெல்லாம் வந்துவிட்டது என்று தெரிகிறது. இந்த இரண்டரை லட்சம் எப்படி வந்தது? நாமெல்லாம் சொத்துக் கணக்குக் கொடுக்கிறோம். உடனே தெரிவிக்க வேண்டும் என்று இருக்கிறது அல்லவா? எப்படி வந்தது இந்தப்பணம்? பொது மக்கள் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள், இதையெல்லாம் கேட்கவில்லை என்றால்? ஆகவே, இதிலெல்லாம் மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. தவறு நடந்திருக்கிறது. ஒரு பங்களா வீட்டை எடுத்து ஒன்றேகால் லட்சத்துக்கு ரெஜிஸ்டர் ஆகியிருக்கிறது நாமே சட்டத்தைப் பண்ணியிருக்கிறோம் இது சம்பந்தமாக. இதையெல்லாம் பரிசீலனை செய்து, விலை அதிகமாக இருந்தால் அதற்கு அபராதம் கொடுக்க அமைச்சருடைய குடும்பத்தினர் காரணமாக இருக்க வேண்டும். ஏதாவது இப்படி இருக்கிறது என்றால், மாமியார் வீட்டிலிருந்து வந்தது, மாமனார் வீட்டிலிருந்து வந்தது என்றால், அதை நிரூபிக்க வேண்டும்.

சில அமைச்சர்கள் ஒன்றுமே கிடையாது, நாங்களெல்லாம் பரிசுத்தமானவர்கள், கார் கூடக் கிடையாது என்று சொல்லுகிறார்கள். சில சமயங்களில் சில குற்றங்களை அவைமுன் வைக்கும்போது, நிரூபிக்கவேண்டும், டாகுமெண்டரி எவிடென்ஸ் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். எனக்கு வந்திருக்கும் ஒரு தகவலைப் படிக்கிறேன்.

Minister in the Ministry of Finance,
New Delhi.
3/650/MRF 20
11th June 1970.

My dear Dr. Ram Subhag Singh Ji.,

Please refer to your letter of 25th April 1970 with which you had enclosed a copy of the letter received by you from Shri P. G. Karuthiruman, M.L.A., Madras, regarding the Dina Thanti Trust.

The income of the Dina Thanti Trust which has been set up by Shri S. B. Adityan, was earlier accepted as qualifying for exemption for Income-tax purposes upto the assessment year 1967-68. However, investigation made recently showed that the income of the Trust was not being applied for charitable purposes. The income-tax department has already taken action for reopening the assessments for the assement years 1956-57 to 1967-68. The Trust has, however, filed writs in the Madras High Court against the action of the Department.

Yours Sincerely,
Signed—P. C. Sethi.

Dr. Ram Subah Singh,
Leader of the Opposition in Lok Sabha.
2, Parliament House, New Delhi-1.

என்று கடிதம் வந்திருக்கிறது. ஒன்றுமே கிடையாது என்கிறார்கள். இன்கம்-டாக்ஸ் பற்றி, அப்படிச் சந்தர்ப்பமே கிடையாது என்று சொன்னார்கள். அமைச்சரைப் பற்றி கோர்ட்டில் தவறு என்றால், களங்கம் என்றால், ஒழுங்குத் தவறு என்றால், உடனே மந்திரி சபையிலிருந்து அவர் வெளியேற வேண்டும் என்பது முறை அந்த நிலையில்,

810, Criminal (Appeal) Judgment given by Mr. K. S. Venkataraman on 4th April 1968.

அதாவது 1967 மார்ச்சுக்குப் பின்னால் கொடுத்த ஜட்ஜ்மெண்ட், திரு. எஸ். பி. ஆதித்தன் பற்றியது.

The suggestions of the appellant is that the instructions of PW/7 to accused I to draw a good portion of the amount in small denominations varying from one to five rupees, coupled with the other recitals in the letter and the fact that i was on the eve f the elections are sufficient to show that the amount was drawn for spending for the election of P.W. 7 and that the amount was falsely exhibited as loans to three persons mentioned therein.

The accounts showing that the loans were returned have not been produced and no voucher of those three persons has been produced to show that they received the loans but the learned Public Prosecutor states that the accounts were not readily available and that I may proceed on the basis of the materials on record.



தினத்தந்தி ட்ரஸ்ட் தவருக பிரயோசனப்படுத்தியிருக்கிறது. தவறான வவுச்சர்களை எலெக்ஷனுக்காக ஏற்படுத்தி, ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று சிறிய டினாமினேஷன்களில் வாங்கி தவறு இழைத்திருக்கிறது. பி. டபுள்யூ. 7 அதாவது திருவாளர் எஸ். பி. ஆதித்தனார் என்று குறிப்பிட்டிருக்கிறது. இதைவிட மாரல் டர்ப்பிட்யூட் என்ன வேண்டும்? தவறு என்று என்ன இருக்கிறது என்று கேட்கிறேன். இப்படிப்பட்ட எண்ணம் உள்ளவர்கள் அமைச்சரவையில் இருந்தால், அது உங்களுக்குக் களங்கம் இல்லையா? தவருகக் கையெழுத்துப் போட்டு, எலெக்ஷனுக்காக செலவழிக்கப் பட்டது என்று ஜட்ஜ்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள் திரு. கே. எஸ். வெங்கட்டராமன். அவர்களை நான் பாராட்டுகிறேன். ஜட்ஜ் சொல்லியிருக்கிறார்.

திரு. சஞ்சீவ ரெட்டி அமைச்சராக இருந்தார்கள். ட்ரான்ஸ்போர்ட் மினிஸ்டராக இருந்தார்கள். அப்பொழுது ஒரு பர்மிட் கொடுத்தது பற்றி சந்தேகம் என்று கோர்ட்டில் சொல்லப் பட்டது. உடனே அவர் ராஜினாமா செய்தார்கள். அவரல்லவா மந்திரியாக இருக்க தகுதியுள்ளவர்கள், தன்மையுள்ளவர்கள்! இங்கே டாகுமெண்டரி எவிடென்ஸ் கொண்டா என்று என்னையே எச்சரிக்கை செய்யும் அளவில் இருக்கிறது நிலைமை என்றால் என்ன சொல்லுவது? (குறுக்கீடு) அந்தவகையில் செய்து மந்திரி சபையின் பெயரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்கிறேன். (குறுக்கீடு) அப்பொழுது நம்பிக்கை வந்துவிடும். அப்படி முதல் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு) ஆகா அதைச் செய்தால், தவறுகள் செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுத்தால் பெரிய மாலை போட்டு வரவேற்கத் தயாராக இருக்கிறேன். (சிரிப்பு).

1972 வரைக்கும் மக்கள் ஆதரவு கொடுத்திருக்கிறார்களே. ஐயா இடையிலே ஏற்படும் தவறுகளை திருத்திக் கொள்வதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். ஒரு தவறு இருக்கிறது என்று சுட்டிக்காட்டினால், அதைத் தவிர்க்க வேண்டியது கடமை.

சட்ட மன்றத்திலேயே ஒரு அமைச்சருக்கும் மற்றொரு அமைச்சருக்கும் கருத்து வேறுபாடு. இவர் மெடிகல் காலேஜ் வரும் என்கிறார் அவர் அதை மறுத்துச் சொல்கிறார். ஒரு கதை உண்டு. ஒரு ராஜாவுக்கு இரண்டு ராணிகள். ஊர்வலம் போகும்போது, பெரிய ராணி 'என் குதிரைத்தான் பெரியது என்றாள். சிறிய ராணி என்னுடைய குதிரைதான் பெரியது என்றாள். ராஜாவிற்கு ஒன்றும் சொல்ல முடியவில்லை. மந்திரி மிகவும் கெட்டிக்காரர். 'போகும்போது பெரிய ராணியின் குதிரை நன்றாக இருந்தது, வரும்போது சின்ன ராணியின் குதிரை நன்றாக இருந்தது' என்று சொன்னானாம். அதேபோல நம்முடைய மந்திரிகளும், மக்கள் இப்படிச் சொல்கிறார்களே, அப்படிப் பேசிக்கொள்கிறார்களே என்று சொன்னால், உடனே அதெல்லாம் இல்லை, நாங்கள் சொல்வதுதான் சரியானது என்கிறார்கள்.

முன்பொருநாள் நாங்கள் கேள்வி கேட்டபோது, நமது உணவு அமைச்சருக்கும், நிதியமைச்சருக்கும் இடையே பெருத்த போராட்டம். ஒருவர் 'கடிதம் வந்தது' என்கிறார், இன்னொருவர், 'ஐயோ, அப்படிப்பட்ட

கடிதம் எதுவும் வரவில்லையே' என்கிறார். கடிதம் வந்ததா, இல்லையா என்பதைக்கூட நினைவில் வைத்துக்கொள்ள முடியாதவர் அமைச்சர் பதவி வகிக்க அருகதை உண்டா? அதுவும்சாதாரண பிரச்சினை அல்ல. உணவு மண்டலப் பிரச்சினைமீது முடிவு எடுக்க வேண்டிய விஷயம். கடிதம் வந்திருக்கிறது. இதில் இவரைப் போய் ஏன் கலக்க வேண்டும், முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுத்தால் போதும் என்று ஒரு அமைச்சர் முடிவெடுக்கிறார். இப்படி மறதி அதிகமாக உள்ளவர்களை வைத்துக்கொண்டு, மறந்து கையெழுத்துப் போட்டுவிட்டேன்' என்று அமைச்சர் சொல்ல ஆரம்பித்தால் எங்களுடைய நிலை என்ன ஆவது? அமைச்சர்களுக்குள்ளே போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அடுத்தபடியாக, கல்யாணம் போன்ற விழாக்களில் அமைச்சர்களுக்கு அன்பளிப்புகள், போன்றவைகள் எல்லாம் நடக்கின்றன. நான் கல்யாணம் செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை. அன்பளிப்பு என்றால் அமைச்சர்களுக்கு மலைபோல் குவிந்துகொண்டிருக்கிறது. அந்தஸ்துக்குத் தகுந்தாற் போல் கல்யாணம் செய்யலாம்.

உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். கோயில் மந்திரி வீட்டில் ஒரு கலியாணம் நடைபெற்றது. அந்தத் திருமணத்தின் போது அன்பளிப்பு பற்றி மைக்கில் சொல்லும்போது, ஒருவர் பழனி தேவஸ் தானம், இன்னும் பல்வேறு தேவஸ்தானங்களைக் கூப்பிட்டு அன்பளிப்பைப் பெறுகிறார். இனிமேல் போகப் போக வாங்குகிற அன்பளிப்புகளுக்கு ரசீது போட்டுத் தர வேண்டும்போல் இருக்கிறது. அமைச்சர்கள் போன்றோர் அன்பளிப்புகளைப் பெறும்போது அது 250 ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால், ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அதை சர்க்காருக்கு ஒப்படைத்துவிட வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. ஏதோ ஒரு சர்க்கார் அதிகாரி ஐந்து ரூபாய் பெற்றுக்கொண்டால் அதற்குப் பெயர் லஞ்சம் என்பதா? இப்படி அமைச்சர்கள் 'அன்பளிப்புகள்' என்ற பெயரில் பெற்றுக் கொள்வதெல்லாம் சரியா? நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது என்ன மாதிரி பேசினீர்கள்? எந்தமாதிரி கேள்விகள் எல்லாம் கேட்டீர்கள்? அதை யெல்லாம் மறந்துவிடலாமா?

மேலும், தொகுதி சுற்றுப் பயணத்திற்கென்று கார்களை அன்பளிப்பாக கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

(திரு. சா. மெய்யப்பன் அவர்கள் எழுந்தார்கள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. சா. மெய்யப்பன் அவர்கள் ஏன் எழுந்திருக்கிறார்கள்.

**திரு. சா. மெய்யப்பன்:** தலைவர் அவர்களே, 250 ரூபாய்க்கு மேல் போனால் அதை சர்க்காரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று விதி இருப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது எந்த விதி?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தொகுதிச் சுற்றுப்பயணத்திற்காக அன்பளிப் பாக கார் கொடுத்தார்கள் என்ற நிலைக்கும், அவர்கள் தந்திருக்கும் சொத்து விவரத்திற்கும் சம்பந்தம் இல்லைபோல் தெரிகிறது. சொத்துவிவரத்தில் கார் கொடுத்ததுபற்றிய நிலை வரவில்லை. சொத்துவிவரம் இங்கே எல்லோரும் கொடுத்திருக்கிறார்கள், நானும் கொடுத்திருக்கிறேன் ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டம்போல் சொத்துவிவரம் கொடுத்திருக்கிறார்கள். சிலர் கடன் வாங்கியதைப்பற்றியும் விவரம் கொடுத்திருக்கிறார்கள். யார் கொடுத் திருப்பது நியாயம் என்று தெரியவில்லை. ஆகவே, சொத்துவிவரம் பற்றிய அறிக்கைகளை வைத்துக்கொண்டு, நீதி விசாரணை நடத்த வேண்டும். அப்படிச் செய்தால் பொதுமக்களுக்கும் நல்லது, நமக்கும் நல்லது. பத்து வருடத்திற்கு முன்பு அரசியலில் ஈடுபட்டிருந்தால் அவர்களுடைய அன்றைய நிலை, சொத்துவிவரம் பற்றிக் கணக்கெடுத்து இன்றைய நிலையிலுள்ள சொத்து விவரத்தையும் விசாரணை நடத்த வேண்டும். அவருடைய குடும்பத்தார், உறவினர்கள் எல்லோரையும் விசாரிக்க வேண்டும். சர்க்கார் எத்தனையோ கார்களை அலாட் பண்ணியிருக்கிறார்கள். அந்த அன்பளிப்பில் . இந்தக் கார்கள் வந்திருக்கின்றனவா என்பதையும் பார்க்க வேண்டும். அப்படி வந்திருந்து அதை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டிருந்தால் அது மிகவும் பெரிய தவறாகும், அதன்மீது சரியான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்திருப்பவர்களை சட்டமன்றத்திலிருந்து நீக்கி வைக்கக்கூட அதிகாரம் இருக்கிறது. சொத்து விவரம் சரியாக இருக்கிறதா, அஸெட்ஸ்க்கும் லையபிலிட்டீஸுக்கும் சரியாக இருக்கிறதா? என்பதை யெல்லாம் நீதிவிசாரணை செய்து அறிக்கை கொடுக்க வேண்டும். அப்போது தான் பொதுமக்கள் பழியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும், சட்டத்தை நாம் மதித்தவர்களாவோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.





நாங்கள் மூன்று வருடங்களில் எத்தனையோ காரியங்களைச் **சாதித்து** விட்டோம் என்று ஆட்சியினர் சொல்கின்றனர். நாங்கள் மூன்று ஐந்து ஆண்டுத் திட்டத்தில் சாதித்தவைகளைவிட, நீங்கள் என்ன சாதித்து விட்டீர்கள் என்பதைக் கேட்க விரும்புகிறேன். நான் பல தடவைகளில் கேட்டாகிவிட்டது. யார் தவறு செய்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுங்கள் என்றுதான் சொல்கிறேன்.

நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபொழுது உருளைக் கிழங்கு ஊழல், பருப்பு வாங்கியதில் ஊழல் என்றெல்லாம் என்று சொன்னீர்கள். இப்பொழுது நீங்கள் ஆட்சியிலே இருக்கிறீர்கள்? ஏன் அந்தத் தவறுகளைச் செய்தவர்களின்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடாது? 87 லட்சம் ரூபாய் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டிலே நஷ்டம் என்று சட்டமன்றத்திலே கூறினீர்கள். அது பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் எல்லாம் வந்தது. தவறு செய்த வர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள் என்று தான் மீண்டும் சொல்கிறேன். தவறு செய்பவர் நானாக இருந்தாலும் பழைய முதலமைச்சராக இருந்தாலும் திரு. காமராஜ் அவர்களாக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள். நடவடிக்கை எடுக்காமல் பொறுப்பற்ற பேச்சில் ஈடுபடாதீர்கள் என்றுதான் சொல்லிக்கொள்கிறேன். அரசாங்கம் இன்றைக்கு உங்கள் கையில்தான் இருக்கிறது.

அடுத்தபடியாக, முன்பு காங்கிரஸ் போட்ட திட்டங்கள்தான் இந்த நாட்டிலே இருக்கின்றன. காங்கிரஸ் அரசாங்கம் முன்பு வாங்கிய அனுமதியை வைத்துக்கொண்டுதான் நீங்கள் ஆட்சி செய்கிறீர்கள். உங்களுடைய காலத்தில் எத்தனை தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன?

[திரு. பி. ஜீ. கருத்திருமன்] [1970 செப்டம்பர் 7

இன்றைய முதலமைச்சர் அவர்கள் இந்தப் பக்கம் இருந்தபோது என்ன என்ன பேசினார்கள். கடற்பாசியிலேயிருந்து அல்வா செய்யலாம், கடல் ஆமைகளைப் பிடித்து, மேல்நாடுகளுக்கு அனுப்பலாம் என்று சொன்னார்களே, அந்தத் திட்டங்களையெல்லாம் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏன் நிறைவேற்றக்கூடாது? அண்மையில் முதலமைச்சர் அவர்கள் மேல்நாடுகளுக்குச் சென்றிருந்தாரே, அந்தத் திட்டங்களுக்காக எத்தனை அக்ரிமெண்டுகள் செய்துகொண்டு வந்திருக்கிறீர்கள்? மேலும் சொப்புக் கடைகள் வைக்க வேண்டுமென்று சொன்னார்களே, அது என்ன ஆனது? முன்பெல்லாம் எதிர்க்கட்சியில் இருந்தபோது கோழிப் பண்ணைகளை ஆரம்பித்து, கோழி முட்டைகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே கோழிப் பண்ணைகளையெல்லாம் மூடிவிட்டார்கள். நாங்கள் எங்களுடைய ஆட்சியிலே ஆயிரம் தொழிற்சாலைகளை ஆரம்பித்தோம். இப்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? இருக்கின்ற தொழிற்சாலைகளையெல்லாம் மூடிக்கொண்டு வருகிறீர்கள். எல்லாவற்றுக்கும் நீங்கள் மூடுவிழாக்களை நடத்திக்கொண்டு வருகிறீர்கள்.

அடுத்தபடியாக கட்சியை வளர்த்தீர்களே தவிர, கட்சியிலுள்ள அன்பர்களையும் நண்பர்களையும் வளர்த்தீர்களே தவிர, நாட்டை வளர்க்கவில்லை, லாட்டரி டிக்கெட்டில் கமிஷன் போகிறதே, அதில் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒருசிலரும் நன்மையடையவில்லை. நீங்கள்தான் வட்டம், மாவட்டம் என்று வைத்துக் கொண்டிருக்கிறீர்களே . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் குறுக்கிடுவதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மன்னிக்க வேண்டும். லாட்டரிச் சீட்டு ஏஜெண்ட் எல்லாம் கட்சிக்காரர் அல்ல. சென்னையைப் பொறுத்தவரையிலும் அதற்கும் ஒரு லாட்டரி போட்டு, தேர்ந்தெடுக்கப்படுகிறது. பெரும்பாலானவர்கள் அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள் வெளியூர்களில் சில விதிமுறைகளை வைத்து ஏஜெண்டுகளை தேர்ந்தெடுக்கிறார்கள். சென்னையில் ஏஜெண்டுகளை 'லாட்' போட்டு, அதாவது குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கிறோம்.

**திரு. பி. ஜீ. கருத்திருமன் :** நான் சொல்வதை புரிந்துகொள்ள முடியவில்லையென்றால் நான் என்ன செய்ய முடியும்? எல்லாம் உங்கள் கட்சிக்காரர் என்று நான் சொல்லவில்லை. (சிரிப்பு) உங்கள் கட்சியிலே இருப்பவர்களை நீங்கள் வளர்த்திருக்கிறீர்கள். முன்பு காங்கிரஸ்காரர்கள் சம்பாதித்து விட்டார்கள், காங்கிரஸ்காரர்கள் பணக்காரர்களாகி விட்டார்கள் என்று சொன்னீர்கள். எங்கள் பக்கத்தில் ஏதோ ஒன்றிரண்டு பேர் அப்படி ஆகியிருக்கலாம். ஆனால் உங்கள் பக்கத்தைப் பார்த்தால் நூற்றுக்கு தொண்ணூறு பங்கு அவ்வாறு நடந்திருக்கிறது. வீடு அன்பளிப்பு, கார் அன்பளிப்பு என்றெல்லாம் நடந்துகொண்டு இருக்கின்றன. உங்கள் கட்சியின் பலம்பெருகியதோ என்னவோ, ஆனால் உங்கள் நண்பர்களின் பணம் பெருகியிருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1970 செப்டம்பர் 7] [திரு. பி. ஜீ. கருத்திருமன்]

முற்பகல் 11-30

மக்களுக்கு வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொடுப்பதில் இந்தச் சர்க்கார் ஏதாவது செய்திருக்கிறதா? 1954-ஆம் ஆண்டு முதல் 1963-ஆம் ஆண்டு வரை எடுத்துக்கொள்ளுங்கள். அப்போது எங்களுடைய வருவாய் என்ன? நாங்கள் அப்போது எத்தனை திட்டங்களைப் போட்டோம். மக்களுடைய வாழ்க்கை வசதிகளை எந்த வகையில் எல்லாம் பெருக்கினோம் என்று பாருங்கள். இப்போது வருவாய் என்ன? வருவாய்க்கு ஏற்ற அளவில் திட்டங்களைப் போட்டு மக்களுடைய வாழ்க்கை வசதிகளைப் பெருக்கியிருக்கிறீர்களா? புள்ளிவிவரத்தோடு பெருக்கியிருக்கிறேன் என்று எடுத்துக் காட்டுங்கள். நான் எந்த தண்டனைக்கும் உட்படத் தயாராக இருக்கிறேன்.

1967-ஆம் ஆண்டு வேலையில்லாமல் திண்டாடியவர்களின் எண்ணிக்கை என்ன? இன்றையதினம் 1970-ஆம் ஆண்டு எத்தனை பேர் வேலையில்லாமல் தெருத்தெருவாகத் திண்டாடுகிறார்கள்? அப்போது 200 கோடி ரூபாய் வருமானம் என்றால் இப்போது 300 கோடி வருகிறதே, "வரிகளைக் குறைப்போம், வசதிகளைப் பெருக்குவோம்" என்றீர்களே. சொன்னால் புளித்து, புளித்துப்போன பேச்சு. (திரு. இராம அரங்கண்ணல் : விவசாயம்).

விவசாயம் என்று சொல்கிறீர்கள். பசுமைப் புரட்சி என்கிறீர்கள். மழை பெய்து விளைகிறபோது 'பார்த்தீர்களா, எங்கள் சாதனை என்கிறீர்கள், மழை இல்லை என்றால் மில்லிமீட்டர், டெசிமீட்டர் கணக்கு எடுத்துச் சொல்கிறீர்கள். மழை பெய்வது விளைவது உங்கள் சாதனையா? இந்த மூன்று வருஷத்தில் உங்களுடைய சாதனை என்ன? தெருத்தெருவாக பலர் வேலையில்லாமல் சுற்றுவதுதான். உங்கள் கட்சிக்காரர்களை வளப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். இல்லை என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வேலையில்லாத் திண்டாட்டம் வேலைவாய்ப்புபற்றி எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். அப்போதுள்ள நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். 3 ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடர்ச்சியாக நடந்துகொண்டிருந்த நேரம் அது. இது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்காத நேரம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இப்போதுதான் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இந்தக் காலத்தையும்—தொடர்ச்சியாக 3 ஐந்தாண்டுத் திட்டங்கள் நடைபெற்று வந்த காலத்தையும் எப்படி ஒப்பிட்டுப் பார்ப்பது என்பதையும் யோசிக்கவேண்டும்.

**திரு. பி. ஜீ. கருத்திருமன் :** இந்த உணவு எதிர்க்கட்சியில் இருந்தபோது இருந்திருக்கவேண்டும் அல்லவா? அப்போது 'கடலாமையைப் பிடி, கடல் பாசி அல்வாவைப் பண்ணு' என்று சொன்னீர்களே, நீங்கள் ஆட்சிக்கு வந்து மாணவர்களுடைய பிரச்சினையைத் தீர்த்திருக்கிறீர்களா? ஆசிரியர்கள் உங்களுக்கு அல்லும் பகலும் உழைத்தார்களே, அந்த ஆசிரியர்களுடைய பிரச்சினையைத் தீர்த்திருக்கிறீர்களா? விவசாயத் தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்த்திருக்கிறீர்களா? 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருந்ததை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைத்துவிட்டோம். ஆம் முற்போக்கு, எவ்வளவு மிச்சம் இருந்தது. எடுத்துக் கொடுத்தீர்கள்? சும்மா

மார்தட்டி என்ன பிரயோசனம்? (ஒரு குரல்: நீங்கள் ஆதரித்தீர்கள்) ஆம் ஆதரித்தேன். ஆதரித்து வோட்டுப் போட்டேன். யானையைப் பிடிக்க குழிதோண்டி அதன்மேல் மூடிவைத்திருப்பதுபோல எங்கள் பக்கத்து யானைக் குழியில் வந்து விழுந்துவிட்டீர்கள்.

"ஐயய்யோ அப்பா, கூலி கேட்டால், குண்டடி பட்டுச் செத்தான், நாங்கள் வந்தால் குண்டு பறக்குமா?" என்றீர்களே, என்ன நடந்தது? திருவொற்றியூரில் நடந்தது துப்பாக்கிச் சூடு, பூந்தாழங்குடியில் நடந்தது துப்பாக்கிச் சூடு, நெய்வேலியில் நடந்தது துப்பாக்கிச் சூடு, பெருமாநல்லூரில் நடந்தது துப்பாக்கிச் சூடு. சுட்டவர்கள் முற்போக்காளர்கள். அடிப்பட்டுச் செத்தவர்கள் பிற்போக்காளர்கள். உங்களுடைய முற்போக்குச் சக்தி குண்டு பாய்ந்திருக்கிறது.

இன்னும் கொடி என்று சொல்கிறீர்கள். இந்தக் கொடியை எதிர்ப்பவர்கள் தேசத்துரோகிகள்—ஏன்? அதில் தேசியக் கொடி இருப்பதால், இந்தக் கொடியை எதிர்ப்பவர்கள் நாஸ்திகர்கள்—ஏன்? இதில் கோபுரம் இருப்பதால். நாங்கள் எல்லாம் தேசத்துரோகிகள்—நீங்கள் தேச பக்தர்கள்—ஆஸ்திகர்கள். இவர்கள் ஆஸ்திகர்களாக ஆகிவிட்டார்களே அதற்காகப் பெருமைப்பட வேண்டும். இப்படி எதற்கெடுத்தாலும் குறுக்கே ஒன்றைப் பேசுவது—இது முதல் அமைச்சர் அவர்களுக்கே உரிய சாமர்த்தியம்.

இன்னும் சொல்வேன். ரொம்பச் சூடாக இருக்குமே என்று சொல்லவில்லை. தேச சுதந்திரம் வாங்கினபோது இவர்கள் எப்படி இருந்தார்கள்? நாங்கள் வந்தால் கோயில்களை இடித்து பள்ளிக்கூடங்கள் வைப்போம். மடங்களைத் தகர்த்தெறிவோம் என்றெல்லாம் நடித்த நாடகங்கள் எத்தனை? எழுதிய கதைகள் எத்தனை? இப்போது தருமபுர ஆதினத்திற்குச் சென்று பொன்னுடை போர்த்திக்கொள்கிறார்கள். தெய்வீகப் பேரவையில் திருநீறு பூசிக்கொண்டு பொன்னுடை போற்றிக்கொள்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கோவில்களை இடிப்போம், மடங்களைத் தகர்ப்போம் என்று நாங்கள் தேர்தல் பிரச்சாரம் செய்ததாகச் சொல்கிறார்கள். நாங்கள் அவ்வாறு சொல்லவில்லை. தெய்வீகப் பேரவையில் கலந்துகொண்டபோது பண்டார சந்நிதி அவர்களே சொன்னார்கள். முன்பு இருந்த ஆட்சியாளர்கள் எங்களை நாடி வந்தார்கள். இப்போது நாங்கள் உங்களை நாடி வருகிறோம் என்றார்கள். மக்கள் மன்றத்திற்கு வந்து கல்விக்காகவும், மருத்துவத்திற்காகவும் அவர்கள் பணியாற்ற முன்வருகிறார்கள் என்றால் அது இந்தக் கழகத்தின் சாதனையைத் தவிர வேறு இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவர்கள் உங்களை நாடித்தான் வருகிறார்கள். எல்லோரும் உங்களை நாடித்தான் வருகிறார்கள். நாடியவர்களுக்குப் பொருள்கள் கூடும், நாமமும், புகழும் உண்டு. எத்தனைபேர் தேடிக்கொண்டு தான் வருகிறார்கள்.

"எதிர்க்கட்சித் தலைவர் என்னிடத்தில் வந்து ரெக்கமெண்ட் பண்ணினது இல்லையா. திரு. விநாயகம் அவர்கள் சரஸ்வதி பாடசாலைக்காக வந்தது இல்லையா?" என்று சொல்வீர்கள். எல்லோரையும் போல எங்களுக்கும் எடுத்துச் சொல்ல உரிமை இருக்கிறது. உங்கள் கட்சி உறுப்பினர்கள் மட்டும்



தான் வந்து சொல்ல உரிமை இருக்கிறதா? நாங்கள் எது நியாயம் என்றுபடுகிறதோ அதை எடுத்து உங்களிடம் வந்து ரெக்கமண்டு பண்ணுகிறோம். தவறாக இருந்தால் தள்ளிவிடுங்களேன். நீ முதல் அமைச்சர்—நாங்கள் உறுப்பினர்கள், வந்து எடுத்துச் சொல்வது எங்கள் உரிமை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** "நான் எதிர்க்கட்சித் தலைவன். நீ முதல் மந்திரி" என்று சொன்னார்கள். என்னை அவர்கள் 'நீ' என்று சொல்வதைப் பொருட்படுத்தவில்லை. அவரைவிட நான் எவ்வளவோ தாழ்ந்தவன்—வயதிலும் சரி, குலத்திலும் சரி, ஆனால் இந்தமுறையில் மற்றவர்களைச் சொல்லவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** 'நீ' என்று சொல்ல நான் நினைக்கவே இல்லை. 'நீங்கள்' என்றே சொல்கிறேன். அப்படிச் சொல்லியிருந்தால், ஆயிரம் தடவை வருந்துகிறேன். ஒருவருடைய பிறவிக் குணத்தை யார் மாற்றுவது? சிறு குழந்தை இன்றைக்கு மிட்டாய் கொடுக்கும், நாளைக்கு 'நான் மிட்டாய் கொடுத்தேனே, அதைக் கொடு' என்று கேட்கும். அந்த மாதிரி சொல்லிக் காட்டினால் என்ன அர்த்தம்? நாம் பெரிய அந்தஸ்தில் இருக்கிறோம். அதற்குத் தகுந்த மாதிரி நாம் நடந்துக்கொள்ள வேண்டாமா? வெளியில் சொல்வது? இது என்ன பண்புக்கு உகந்தது? தவறுகளை எல்லாம் நாம் களைந்தெறிய வேண்டும்.

கூவம் நதித் திட்டத்தில் எவ்வளவோ தவறுகள் நடந்திருக்கின்றன. முன்பு சென்னை நகர் மட்டும்தான் நாறியது என்றில், இப்போது எல்லா இடங்களிலும் இந்த நாற்றம் அடிக்கிறது. விராணம் ஏரித்திட்டம் சர்வ தேசப் புகழ் அடைந்துவிட்டது. டெண்டர் விட்டோம் என்று சொல்கிறீர்கள். டெண்டர் யாருக்கு விட்டீர்கள்? உங்களுடைய அன்பர்களுக்கு, உங்கள் கட்சிக்காரர்களுக்கே விட்டிருக்கிறீர்கள் என்பது குற்றச்சாட்டு. கூவம் திட்டம் தமிழ்நாடு பூராவும் மணக்கிறது.

வீராணம் திட்டம் உலகப் பிரசித்திபெற்றுவிட்டது. பத்திரிகையில் என்ன வருகிறது? சரியான விவரங்கள் வருவதில்லை. முன்பே சொல்லிவிட்டேன் என்றாலும் ஆயிரம் தடவை சொல்வேன். நீங்கள் சிபார்சு செய்கிற முறை. இந்தத் திட்டம் பற்றிய பூரா விவரமும் எல்லாக் குறிப்புக்களுடன் சட்டசபையில் வைக்கப்பட வேண்டும்.

சத்தியநாராயணா கம்பெனிக்கு 18 கோடி டெண்டர் கொடுக்கிறீர்கள். அவர்கள் ஸ்டேடஸ் என்ன? அவர்கள் ஹார்பரிலே சில காண்ட்ராட்டுகளை எடுத்திருக்கிறார்கள். போன மாதம் அவர்கள் ஆட்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. சாதாரண தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத சத்தியநாராயணா கம்பெனிக்கு 18 கோடி ரூபாய் காண்டராக்ட் கொடுக்கலாமா? அவர்கள் பைப் உற்பத்தி செய்யக் கூடியவர்களா? மேல் நாட்டிலே . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எட்டு பேர்கள் டெண்டர்கள் கேட்டார்கள், அவர்களில் யார் பைப் உற்பத்தி செய்யக்கூடியவர்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியுமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதற்குத்தான் பைலை எல்லாம் கொண்டு வந்து வை என்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நீங்கள்கூட பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் போட்டீர்கள், வீடூர் திட்டம், வைகைத் திட்டம் போட்டீர்கள். எல்லாவற்றிற்கும் சட்டசபையில் பைலைக் கொண்டு வந்து ஆராயப்பட்டதா? எதற்கெடுத்தாலும் ஃபைல் வேண்டும். நீதிவிசாரணை வேண்டும் என்றால் என்ன விவரம் என்று புரியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** புரியவைக்கத்தான் போகிறேன் இப்போது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வீராணம் திட்டத்தில் என்ன தவறு என்பதை திட்டவட்டமாகச் சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அன்றைக்கும் சொன்னேன். நடந்தது பூரா அத்தனையும் தப்பு. சபாநாயகர் அவர்களை 1 மணிநேரம் கொடுக்கச் சொல்லுங்கள், புரியவைக்கிறேன்.

(ஒரு குரல் : 1½ மணி நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்)

சபாநாயகர் அவர்களே, உங்கள் நிலையை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். இதுவே ஒரு உரிமைப் பிரச்சினை.

தவறு நடந்தது என்று குற்றம் சாட்டுகிறேன். வீராணம் ஏரித் திட்டத்தில் அடிப்படையிலே தவறு இருக்கிறது. 1924-ம் வருட ஒப்பந்தப்படி மைசூரும் நாமும் ஒப்பந்தம் செய்து கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே ஏற்கனவே, தஞ்சாவூர், சிதம்பரத்தில் தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். உடனே எதிர்கட்சித் தலைவர் மெட்ராசுக்கு தண்ணீர் வேண்டாம் என்கிறார் என்று கூறுவார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, வீராணத்திலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளுகிறோம் என்பது பற்றி எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள். இப்போதே மைசூர் மாநிலத்திலிருந்து நாம் அதிகத் தண்ணீரை எடுத்துக் கொள்கிறோம் என்ற குற்றச்சாட்டை கூறிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வீராணம் தண்ணீரை எடுத்துக் கொள்ளலாம் என்று கூறி அதன் மூலம் மைசூர் அரசாங்கத்திற்கு ஒரு போர்க் கருவியைத் தருவது நல்லது அல்ல, நடைமுறைக்கும் உகந்ததும் அல்ல. சட்டப் பேரவையின் நிகழ்ச்சிக் குறிப்புகளிலிருந்தும் அதை நீக்கிவிடுவது நல்லது. பத்திரிகைகளிலும் வாராமல் இருப்பது நல்லது. எதிர் கட்சித் தலைவர் அவர்களும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். ஏன் என்றால் கிடைக்கின்ற தண்ணீரும் கிடைக்காமல் போய்விடும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வீராணத்திலிருந்து தண்ணீர் எடுக்கிறார்கள் என்று பத்திரிகைகளிலே வருகிறதே அவர்களுக்குத் தெரியாதா? நான் சொல்லித்தான் தெரியவேண்டுமா. 1924-ம் வருஷ ஒப்பந்தத்தைப் பற்றி



குல்காத்தி கமிஷன் ரிப்போர்ட், கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் எடுக்க வேண்டுமென்று பழைய அரசாங்கம் ஒப்பந்தம் இருக்கிறது. ஓப்பன்-கட் கிரடேஷனில் இருந்து தண்ணீர் எடுத்தால் பம்ப் செய்வோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எங்களால் முடியவில்லை. சோமசீலா திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு, ஆந்திர அரசு முன் வரவில்லை. அங்கே இருக்கிற நிலச் சுவான்தார்கள் ஆட்சேபணை கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆந்திர அரசு அந்த நிலைமையில் இருந்து விடுபட்டால் நாம் உடனடியாகச் செய்யலாம். சிக்கல் அங்கேதான் இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பாராளுமன்றத்திலேயே நான் சொன்னேன். மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். சிக்கல் என்றால் அதைத் தீர்ப்பதற்காகத்தான் முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அதுவும் இந்த முதலமைச்சர் சொன்னால் டெல்லியே ஆடுமே, ஆந்திரா கூட ஆடுமே. பைப்பை சர்க்காரே செய்து கொள்ளலாம். எட்டு பேர்களுக்கு டெண்டர் அனுப்பினார்கள் என்று சொன்னார்கள். எனக்கு எப்படி செரியும். குலோபல் டெண்டர் கொடுத்தார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** குலோபல் டெண்டர்தான் கொடுக்கப்பட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்குத் தெரியாது என்று சொல்லுகிறார்கள். வீராணம் திட்டத்திலே நடந்த நிலை, அது செய்யப்பட்ட முறை, டெண்டர்கள் கொடுத்த முறை, அந்த பைப்கள் செய்யும் முறை, இன்ஜினீயர்கள் செய்த குறிப்புகள் எல்லாம் வரவேண்டும். இதைக் கேட்டால் பரம்பிக் குளத்தைப் பாருங்கள், லோயர் பவானியைப் பாருங்கள் என்று சொல்லுகிறார்கள். "வடக்கே பக்ரா நங்கல், தெற்கே சர்க்கரைப் பொங்கல். இன்ஜின்கள் செய்வது வடக்கே, பெட்டிகள் போடுவது தெற்கே, கொக்கிகள் செய்வது எங்கே?" இப்படித்தான் பேசுகிறார்கள். பேச்சா இது? இப்படியெல்லாம் பேசினால் பிரயோசனம் கிடையாது. நாங்கள் அப்படி செய்திருந்தால் இப்போது நீங்கள் ஆட்சியிலே இருக்கிறீர்கள், பைல்கள் எல்லாம் உங்களிடம்தான் இருக்கின்றது. நடவடிக்கை எடுங்களேன். நாங்கள் தயாராக இருக்கிறோம். பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டித் தீர்மானம் பண்ணட்டும், என்குயரி போடுங்கள். அதைப் பற்றி ஒன்றும் இல்லை.

கடைசியாக, சபாநாயகர் அவர்களே, வண்டலூர் தொழிற்சாலையை மூடியிருக்கிறார்கள். 3½ மாதங்கள் ஆகின்றன. என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் ? கோவையில் கடக்ஸ்டூல் கம்பெனி மூடப்பட்டு இப்போது 4,000 தொழிலாளர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் ? லோகல் அட்மினிஸ்ட்ரேசன் மினிஸ்டர் ஆங்கு போய் கலக்டர் நடவடிக்கை எடுப்பார் என்று சொன்னார்கள். நாலாயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அறிவிப்பிலே ஒன்றும் குறைச்சல் இல்லை, திடீர், திடீர் என்று அறிவிப்புகள் விடப்படுகின்றன. 'திடீர் சாம்பார், 'திடீர் சரம்' போல 'திடீர் அறிவிப்புகள்' வந்து கொண்டிருககின்றன.

இப்போது இருக்கும்படியான பிரச்சினை போலீஸ் நிர்வாகம் பற்றி ஒரு கண்டனத் தீர்மானம். போலீஸ் அதிகமாக தவறு செய்கிறுர்கள் என்று கண்டனத் தீர்மானம். அதைப்பற்றி அன்று நான் சட்டமன்றத்திலே சொன்னபோது கூட்டணிக் கட்சிக்காரர்கள் அதை எதிர்த்தார்கள். ஆனல் இப்போது அவர்களுக்கு அந்தத் தலைவலி வந்த பிறகுதான் 'ஓகோ இருக்கிறது' என்று சொல்லுகிறுர்கள். போலீஸ்காரர்களிலே கூட நல்லவர்களும் இருக்கிறுர்கள், கெட்டவர்களும் இருக்கிசிர்க. அமைச்சர்களில் கூட நல்லவர்களும் இருக்கிறுர்கள், கெட்டவர்களும் இருக்கிறுர்கள்.

Petition No. 3, Er. Muthu, Villivakkam.—Sub-Inspector of Villivakkam beating Police Constable. என்று புகார் வந்திருக்கிறது. அடுத்து

Petition No. 6, C. Jagannathan, Central Jail, Madurai—Harassment in the Jail and irregularities in the jail. என்று புகார் வந்திருக்கிறது.

A. S. Raju, 9961, Cuddalore Central Jail.—Complaints against the jail. என்று வந்திருக்கிறது.

3. Murugesan, M.C. Idapadi.—Raping Incident—No police action. Case filed என்று வந்திருக்கிறது.

Petition No. 1, R. Balasubramaniam, Constable 18, Retired Head constable.—Police case filed—not taken. Case not proved —acquitted. But CBE D.S.P. K. R. Rajagopal redrafted minutes and sentenced. இதுமிகவும் பரிதாபமான கேஸ். ரிடையர்டு ஹெட் கான்ஸ்டபிள் கையெழுத்துப் போட்டு கொடுத்திருக்கிறுர்கள். கையெழுத்துப் போடாமல் நிறைய இருக்கிறது. எங்கள் ஊர் டி.எஸ்.பி. மிகச் சிறப்பானவர். என்னைப் பார்த்து "நீ, எதிர்க்கட்சித் தலைவர் என்று எனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார். மற்றவர்கள் மத்தியில் என்னைப் பார்த்துக் கேட்டார். நான் "நீ டி.எஸ்.பி. தானு?" என்று கேட்டேன். அதற்காக முதலமைச்சர் வருத்தம் தெரிவித்தார். அவர் ஏன் ஏன் வருத்தம் தெரிவிக்க வேண்டும்? அந்த டி.எஸ்.பி. வந்து வருத்தம் தெரிவித்திருக்க வேண்டாமா? அடுத்து,

No. 2, Secretary, A.B.T. Union—Corruption by Police. என்று ஒரு புகார் வந்திருக்கிறது. மேலும் Bakthavatsalu, Uppatti—Brutal attacks by Police என்ற புகார் வந்திருக்கிறது. இதெல்லாம் இதெல்லாம் மெட்ராஸ், சவுத் ஆர்காட், சேலம் பற்றியதாகும்.

S. Nainan, Sholapuram.—Police impartial. Police charge sheeted—but Additional Public Prosecutor withdrawn the case. இது ஒரு வேடிக்கை!

T. S. Sivanantham, D.S.P. Retired, Tirunelveli—Police Officials—D.M.K. Minister intervened and transferred his brother from place to place because not obliging the Minister and his partymen.



இவர் தன்னுடைய தம்பியைப்பற்றிக் கடிதம் எழுதியிருக்கிறுர். அமைச்சர்கள் தலையீடு செய்திருக்கிறுர்கள் என்று எழுதியிருக்கிறுர்.

Daniel, Advocate, Nagercoil.—Police case filed by him against D.M.K. men waylaying him—no case investigation. இதைப்பற்றி கையெழுத்துப்போட்டு எழுதிக் கொடுத்திருக்கிறுர்கள்

Kottamangalam Village People signed by the D.M.K. men also with seal prohibition. தி.மு.க.-வைச் சேர்ந்தவர்களே சீலோடு எழுதிக்கொடுத்து இருக்கிறுர்கள் புரகிபிஷனைப்பற்றி.

Hotel Workers of Hotels, Tanjore—Corrupt Practices—P.A. ரேட் கேட்கிறுர்கள் என்று எழுதியிருக்கிறுர்கள், மாமூல்பற்றி.

D.M.K. Workers of Tanjore Town—Police Brutality என்று கொடுத்திருக்கிறுர்கள்.

M. Baskara Sethupathi, Manakkudi—Brutality of Sub-Inspector என்று கொடுத்திருக்கிறுர்கள்.

Kanthan, Kuzhiarai—Police Action—M.L.A. intervenes. என்று கொடுத்திருக்கிறுர்கள். இப்படிப் பலவிதமான புகார்கள், புரகிபிஷன் கேஸஸ், தவறு நடந்த கேஸ்கள் எல்லாம் இருக்கின்றன. இதனுடைய அடிப்படையென்ன? தலையீடுகள் எந்த அளவில் இருக்கின்றன?

போன தடவையிலே போலீஸ் மானியத்தின்மீது பேசும்பொழுது நான் சொன்னேன், "முதலமைச்சர் அவர்களே! நிர்வாகம் சரியாக நடைபெற வில்லை, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்தாலும் யாருக்கும் தலை கொடுக்காதீர்கள், சிபாரிசைத் தள்ளிவிடச் சொல்லுங்கள், அவர்களைச் சுதந்திரமாக நடவடிக்கை எடுக்குமாறு சொல்லுங்கள்" என்று சொல்லி அதற்கு உத்திரவாதம் கொடுங்கள் என்று கேட்டேன். அன்றைக்கு நான் பேசுவதாக இல்லை, என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்தான் பேசவேண்டு மென்று கேட்டிருந்தேன். ஆனல் முதலமைச்சர் அவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டார்கள், நான் பேசினேன் பேசியதற்குப் பிறகு இப்படியா பேசினீர்கள் என்று கேட்டார்கள். தவறு நடந்தால் எப்படி எடுத்துச் சொல்லாமல் இருக்கமுடியும்?

சுதந்திரமாகப் போலீசை இயங்க வையுங்கள், சுதந்திரமாக நடவடிக்கை எடுக்கட்டும். பவானியிலே சோலைமணியம்மாள் என்று சொன்னுர்களே, அப்படிப்பட்ட நிலைமை எல்லாம் இருக்கிறது. இதனுல் எவ்வளவுதூரம் சமூகத்திற்குக் கெடுதல் ஏற்படும்? ஜமீலா என்ற பெண்ணைப்பற்றிச் சொன்னுர்கள். தவறு செய்தால் நடத்தைப்பற்றி அதைச் சட்டசபையிலே வைப்பது நம்முடைய பண்பா? யுத்தகாலத்திலே டைம் பாம் வைப்பது என்று சொல்வார்கள். அது வைத்தால் நான்கு நிமிடத்தில் வெடிக்கும்.

ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியிலே விஷம் குடித்தால் விஷம் குடித்து போலீஸ் லாக்கப்பில் வைத்ததற்குப் பிறகுதான் இறக்கிறார்கள்! புது ஆராய்ச்சி இது. இப்பொழுது செய்கிறார்கள்.

அரிசனங்களுக்கு உங்களுடைய ஆட்சியிலே பாதுகாப்பு இருக்கிறதா? ஒருவர் விருதுநகரிலே ஆம்பத்தூரிலே ஜாதி இந்துக்கள் வீடுகளுக்குப் பக்கத்திலே வீடு வாங்கினார், அதுதான் ஐயா அவர் செய்த குற்றம். அவரை இழுத்துப்போட்டு அடித்து போலீஸ் ஸ்டேஷனில் இருந்திருக்கிறார். விசாரணை உண்டா? அரிசனங்களும் நாமும் சமமாக இருக்கவேண்டு மென்றெல்லாம் சொல்கிறார்கள். அரிசனங்கள் குடி இருப்பதற்கு இதுவா பாதுகாப்பு?

கீழ்வெண்மணியிலே என்ன நடந்தது? எத்தனையோ இடங்களில் என்ன என்ன நடக்கிறது? இந்தப் பிரச்னைகளையெல்லாம் அலசிப் பார்ப்போமானால் நீதி விசாரணை, நீதி விசாரணை கேட்கிறார்களே, கேட்கிறார்களே என்று முதலமைச்சர் அவர்கள் வருத்தப்படுகிறார்கள். நீதி விசாரணை நிலைக்கிற மாதிரித் தெரியவில்லை. பொதுமக்களுடைய நீதி விசாரணைக்குப் போக வேண்டிய சூழ்நிலைதான் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அதுதான் பொருத்தமே தவிர, நீதி விசாரணை வரும், இதோ போட்டுவிடுகிறேன், செய்து விடுகிறேன் என்று சொல்வது எல்லாம் எந்த நிலையிலே போய், எப்பொழுது தீர்ந்து நோய்க்கு மருந்தாக இருக்குமோ என்னவோ?

தமிழக மக்களுக்கு நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றித் தராத காரணத்தினாலே, பிரச்னைகளைத் தீர்க்காத காரணத்தினாலே— மாணவர்கள் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை, விவசாயிகள் பிரச்னை தீர்க்கப் படவில்லை, தொழிலாளர்கள் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை—இப்படி எத்தனையோ பிரச்னைகள் வெடித்துக்கொண்டே இருக்கின்றன, சமுதாயப் பிரச்னைகள் வெடித்துக்கொண்டே இருக்கின்றன. பிரச்னைகளைத் தீர்க்காமல் நீங்கள் செல்வதெல்லாம் என்ன?

கூவம் அழகுபடுத்தப்படுகிறது, வீராணம் கொண்டுவந்துவிட்டோம். அண்ணா சாலையை அழகுபடுத்திவிட்டோம், இதுதானே? இது பசியைப் போக்கிவிடமுடியுமா? சாதாரண சைக்கிள் ரிக்ஷாக்காரர் பேட்டி கொடுத் திருக்கிறார். அரிசி விலை குறைந்துவிட்டால் போதுமா, உப்பு, புளி இவை களின் விலை குறையவில்லையே என்று உங்களை அன்றைக்கு ஏற்றினவர்கள், சேரிவாசிகள் எல்லாம் அன்றைக்கு உங்களுக்காகப் பறந்து பறந்து வேலை செய்தார்களே, எங்களைக் கீழே இறக்குவதற்காகப் பாடுபட்டார்களே அவர்கள் கேட்கிறார்களே, செய்திருக்கிறீர்களா?

பிரச்னைகள் எல்லாம் தானாகத் தீர்ந்த பிரச்னைகள்தான். நீங்கள் தீர்த்தது கிடையாது. பிரச்னைகளைத் தீர்க்காமல் வளரவிட்ட காரணத்தினாலே வேலை யில்லாத் திண்டாட்டம், வறுமை, ஏழ்மை மக்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைமை எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. சமுதாயத்திலே ஜெயிலுக்குள் தள்ளு வதை கட்சி நலனை வைத்துத்தான் செய்கிறார்கள். அரசியலுக்கு அப்பாற் பட்டு செய்கின்ற காரியம் ஒன்றுமே இல்லை உங்கள் ஆட்சியில். மக்கள்



நலத்தைப் பெருக்காமல் கட்சியின், கட்சிக்காரர்களின் நலத்தைப் பெருக்கி யிருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டைச் சாட்டுகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறுகிறதா நிறைவேறாதா? நிறைவேறினால் மக்களுடைய உணர்ச்சியை மதிக்கிறீர்கள் என்று அர்த்தம். நிறைவேறவில்லையென்றால் மக்கள் என்ன நினைத்துக்கொள்வார்கள் என்பதைச் சொல்லி இந்தத் தீர்மானத்தின்மீது என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம். 1961-ம் வருடம் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது ஒரு கிரிமினல் வழக்கு அதிலே, ராமரத்தினம் என்பவர் குற்றவாளி, நான் சாட்சி. அறநிலையக் கட்டளைப் பணத்தை கையாடல் செய்ததாக வழக்கு, நான் தேர்தலுக்குச் செலவழித் தேன் என்று குற்றவாளி சொன்னார். அப்படியல்ல என்று நான் சொன்ன தை ஹைகோர்ட்டிலே ஏற்றுக்கொண்டு ராமரத்தினத்திற்கு ஒரு வருடத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஜட்ஜ்மெண்டிலே அப்படிச் சொல்லப்பட வில்லை. ஸ்ட்ரிக்சர்ஸிலே தேர்தலுக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஊர்ஜிதப்படுத்துகிறேன். யார் மேலே கேஸ் என்பதல்ல. சாட்சி பெட்டியிலே ஏற்றினால் ஏன் பயப்படுகிறார்கள் தெரியுமா? ஸ்ட்ரிக்சர்ஸ் சொல்லியிருக்கிறார்கள். தவறு என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் என்ன பண்ணியிருக்கிறாரோ பண்ணவில்லையோ எனக்குத் தெரியாது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** "நான் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன்" கொடுக்கிறேன். எடுத்த எடுப்பிலேயே தவறு என்று தோற்றத்தில் காணப்படுகிறது. அதற்காகத்தான் சொல்கிறேன். தென்காசித் தேர்தல் வந்தபொழுதும் எழுதப்பட்டது. நான் கூறியிருக்கிறேன். குற்றம் சாட்டப்பட்டவர் அறக் கட்டளைப் பணத்தை கையாடல் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டார். நான் எடுத்து தேர்தலுக்குச் செலவழித்ததாகக் குற்றவாளி சொன்னார். அது இல்லை, சாட்சி சொன்னதை நம்புகிறேன் என்று நீதிபதி கூறியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லிக் குற்றவாளிக்கு ஒரு வருடத் தண்டனையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்டசபையிலே பேச்சுரிமை இருக்கிறது. வெளியிலே குற்றம் இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, அந்த ஜட்ஜ் மெண்டை இங்கே வைக்கவேண்டும். இங்கே வைத்துத் தீர்மானம் செய்து கொள்ளலாம். ஜட்ஜ்மெண்டையும், வைக்கவேண்டும், அந்தக் கேஸ் ரிக்கார்டுகள் பூராவையும் வைக்கவேண்டும். நாம் தீர்மானம் செய்யலாம்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம். இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசுகின்ற நேரத்திலே ஒரு அமைச்சர் வீடு வாங்கியிருக்கிறார் என்ற தகவலைச் சொன்னார்கள். என்னைப் பார்த்துக்கொண்டு சொன்னதால் நான் அதைப்பற்றி விளக்கிவிடுகிறேன். சில பத்திரிகைகளிலே கூட இப்படித் தவறாக எழுதப்பட்டதற்கு அவதூறு வழக்குப் போடுவதற்கு முயற்சிகளை

எடுத்துக்கொண்டிருக்கிறேன். எனக்கு என்ன சொத்து இருக்கிறது
நண்பகல் 12-00 என்பதை நான் அமைச்சராக வருவதற்கு முன்பே அதிகாரிபூர்வமாக அறிவித்திருக்கிறேன். கிராமத்திலே இருக்கும் 30, 35 ஏக்கரா நஞ்சை, புஞ்சை நிலங்களை, 4, 5 பம்பு செட்டுகளைப்பற்றி அறிவித்திருக்கிறேன். என்னுடைய மாமனுருக்கு ஐந்து, ஆறு வீடுகள் சென்னையில் இருக்கின்றன. திருமண நேரத்தில் வீடு வாங்கிக்கொடுப்பதாக உறுதிமொழி கொடுக்கப்பட்டது. அமைச்சராவதற்கு முன்பே அதைப்பற்றிப் பேசசுக்கள் நடந்தன. இப்பொழுது வாங்கியிருக்கும் கடன் 60,000 ரூபாய், ரெஜிஸ்டர்ட் மார்ட்கேஜ் டீட் கொடுத்து, எக்மோர் பெனிபிட் சொசைட்டியில் கொடுத்து, கட்டப்பட்டு வருகிறது. மெஜாரிட்டி பொருள்கள் கடனிலே இருக்கிறது என்ற விவரங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேண்டுமென்றே எதையாவது சொல்ல வேண்டுமென்று . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : எதையாவது சொல்லவேண்டுமென்பதற்காகவா நான் சொன்னேன் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தன்னிலை விளக்கம் கூறுகிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை என்பதைப் போல் சொல்லிக்கொள்கிறார்கள்.

* திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது இந்தச் சட்டமன்றத்திலே, ஆட்சியினர்மீது, ஆட்சியினர் பின்பற்றும போலீஸ் அடக்குமுறைக் கொள்கையைக் கண்டிக்கும் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து நான் இப்பொழுது இங்கு நிற்கிறேன்.

1967-ஆம் ஆண்டில், பொதுத்தேர்தல் முடிந்தபிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றது. அந்த நேரத்திலே, தமிழகத்திலேயிருந்த மக்கள், முன்பிருந்த ஆட்சி எந்தத் தவறான கொள்கையைப் பின்பற்றியதோ அந்தக் கொள்கையை இப்பொழுது ஏற்பட்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் பின்பற்றாது, ஒரு ஜனநாயக ரீதியான பாதையிலே இந்த அரசு நடைபெறும் என்று தமிழகத்திலேயுள்ள மக்கள் எதிர்பார்த்தார்கள்.

முன்பிருந்த ஆட்சி, 1967 தேர்தலிலே தோற்கடிக்கப்பட்டதற்கு, பல அடிப்படையான காரணங்களிலிருந்தாலும், மிக முக்கியமாக, அந்த ஆட்சி மக்கள் சம்பந்தப்பட்ட மட்டிலும் பின்பற்றி வந்த போலீஸ் கொள்கை, மக்கள் மீது, மக்கள் இயக்கம் சம்பந்தமாக அந்த ஆட்சியினர் பின்பற்றி வந்த அந்தப் போலீஸ் கொள்கையின் காரணமாகத்தான் 1967 தேர்தலிலே ஒரு பெரும் மாற்றம் தமிழகத்திலே ஏற்பட்டதென்பதை இந்தத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். எனவேதான், இந்தப் புதிய ஆட்சியிலே போலீஸ் கொள்கையில் ஒரு முழு மாற்றத்தை மக்கள் எதிர்பார்த்தார்கள்.

அந்த மாற்றம் தமிழகத்திலேயுள்ள உழைப்பாளி மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சாதகமாக, அவர்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்குச் சாதகமாக அமைய வேண்டுமென்று தமிழகத்திலேயுள்ள மக்கள்



(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்—தலைமை)

எதிர்பார்த்தார்கள். ஆனால் அவ்விதமான மாற்றம் ஏற்படவில்லை. இந்த மாமன்றத்திலே, 67 தேர்தலின்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தொகுதி உடன்பாடு கண்டு, ஒரு மாற்று அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்காக ஏதோ ஒரு அளவிலே பணியாற்றிய பல இடதுசாரிக் கட்சிகள் இன்று இந்த அரசினுடைய போலீஸ் கொள்கை கண்டிக்கப்படவேண்டிய ஒரு கொள்கை என்ற முடிவிற்கு வந்து, அதற்கான ஒரு தீர்மானத்தை இங்கே கொண்டுவர வேண்டிய அவசியம் இந்த அரசாங்கத்தின் கொள்கையினாலே, இந்த அரசாங்கத்தின் போலீஸ் இலாக்காவிலுள்ள நடைமுறைச் செயல் முறைகளினாலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் முதலிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த மூன்றாண்டு காலமாக, பல சந்தர்ப்பங்களில், இங்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கும் அரசியல் கட்சிகள் ஆட்சியினரைப் பார்த்து மிகவும் விளக்கமாகவும், மிகவும் காரண காரியங்களோடும் இந்தப் போலீஸ் அடக்குமுறைக் கொள்கை சம்பந்தமாக அது கைவிடப்பட வேண்டும், அந்தக் கொள்கையிலே மாற்றம் ஏற்பட வேண்டுமென்று எத்தனையோ முறை இங்கே வாதாடியிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே மட்டுமல்ல, மன்றத்திற்கு வெளியிலே இருக்கும் மேடைகளிலேயும், இருக்கின்ற வாய்ப்புகளையும் பயன்படுத்தி, மக்களுக்குச் சாதகமான, உழைக்கும் மக்களுக்குச் சாதகமான ஒரு போலீஸ் கொள்கை வேண்டுமென்பதற்காகப் போராடினோம். அந்த நோக்கத்தோடுதான், இன்றைக்கு, அவ்வாறு போராடியதற்குப்பிறகு, ஒரு குறிப்பிட்ட கட்டத்திலே, சமீபகாலத்தில் மேலும் இந்தக் கொள்கையில், மேலும் ஒரு பிற்போக்கு ரீதியான மாற்றம் ஏற்பட்டிருப்பதைத் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற சம்பவங்கள் தெளிவாக உறுதிப்படுத்துகின்ற காரணத்தால், இன்று இந்த விமரிசனத்தைச் சட்டமன்றத்திலே நடைபெறும் வாதத்திலே மட்டும் வைத்தால் போதாது, அதற்குமாறாக இதை ஒரு கண்டனத் தீர்மான ரூபத்திலே கொண்டுவந்து, இன்று ஏற்பட்டிருக்கும் நிலைமையை அரசும், மக்களும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நிலைமையை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்தத் தீர்மானத்தை இங்கே நாங்கள் முன்மொழிந்திருக்கிறோம்.

இன்றும் நாம் இவ்வாறு குறிப்பிடுகின்ற நேரத்திலே, இது ஏதோ ஒரு திடீரென்று ஏற்பட்ட மாற்றமல்ல. இந்த ஆட்சி ஏற்படவேண்டும், ஒரு மாற்று ஆட்சி ஏற்பட வேண்டும், அது சரியான திசைகளிலே செல்ல வேண்டும் என்று கடந்த மூன்றாண்டுகாலமாக நாம் பொறுமையுடனும், விடாப்பிடியுடனும், ஆக்கபூர்வமான விமரிசனங்களின் மூலமாகவும், ஆலோசனைகளின் மூலமாகவும் வற்புறுத்தி வந்தபிறகும், இன்றையதினம் ஒரு திரும்பு முனையாக, அரசின் கொள்கையிலே ஒரு திட்டவட்டமான வலதுசாரித் திருப்பம் ஏற்பட்டிருப்பதால் இந்த அரசினுடைய போலீஸ் கொள்கையைக் கண்டிக்க வேண்டிய அளவிற்கு ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்திலே கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மற்றப் பிரச்சினைகளுக்குப் போவதற்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழகம் 1967-இலே தேர்தலிலே பிரவேசித்த நேரத்திலே, அவர்கள் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையிலேயிருந்து, எவ்வாறு இன்று ஒரு திரும்பு முனை, பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் ஆதாரப்பூர்வமாகப் பேசுவதற்கு, அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே உள்ள சில பகுதிகளை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

> "தொழில் துறையைப் பொறுத்தமட்டில், சோஷலிசம் பேசும் காங்கிரசு, பெரிய முதலாளிகளிடமே தொழில் துறையை ஒப்படைத்து விட்டதால், ஏழை பணக்காரன் பேதம் வளர்ந்து விட்டதுடன் அரசியலை ஆட்டிப் படைக்கவும் ஆட்சியை அடிமை கொள்ளவுமான வலிவும் ஆதிக்க உணர்வும் முதலாளிகளுக்குத் தடித்துப் போய்விட்டதுடன் பாசிசம் உருவெடுக்கும் நிலை ஏற்பட்டிருப்பது கண்டு கழகம் வருந்துகிறது.
>
> இந்த முதலாளித்துவப் பிடியைப்போக்கிடும் முறையில் தொழில் துறையைத் திருத்தி அமைக்கும் திட்டத்தை மேற்கொள்ள, கழகம் பொது மக்களின் ஆதரவையும் ஆணையையும் எதிர்பார்த்து நிற்கிறது.
>
> சோஷியலிசம் பேசிக்கொண்டே, காங்கிரசு அரசு, உள்நாட்டு வெளிநாட்டு முதலாளிகளுக்கு ஆதிக்கம் வளரும் நிலையை உருவாக்கி விட்டதைச் சுட்டிக் காட்டுவதுடன், அந்தச் செல்வான்களுக்கும் காங்கிரசு கட்சிக்கும் ஏற்பட்டுள்ள எழுதாத ஒப்பந்தம், ஏழையைக் கெடுத்து சனநாயகத்தைப் போலியாக்குவதை எடுத்துக்கூறி, அந்த ஒப்பந்தத்தை உடைத்தெறியும் ஆற்றலைக் கழகத்துக்கு அளிக்கும்படி பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறது.
>
> சோஷியலிசம் பேசிக்கொண்டே காங்கிரசு அரசு தொழிலாளர்களுக்குக் கேடு விளைவிக்கும் சட்டங்களை இயற்றி இருப்பதை உணர்ந்து, அத்தகைய சட்டங்களை உடைத்தெறியும் கட்டளையைப் பிறப்பித்து அதற்குத் தேவையான வலிவுடன் கழகத்தை ஆட்சிமன்றம் அனுப்பிவைக்கும்படி மக்களைக் கேட்டுக்கொள்கிறது.

என்று வெளியிட்டிருக்கிறார்கள். தொழில்துறை சம்பந்தமாக, திராவிட முன்னேற்றக் கழகம், மிகவும் பொருத்தமாக, காங்கிரஸ் ஆட்சியின் கொள்கைக்கு நேர்மாறான கொள்கையை தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே வெளியிட்டு, அந்த அடிப்படையிலே ஜனநாயக சக்திகளின் ஆதரவோடு ஒரு மாற்று அரசாங்கத்தை இந்த மாநிலத்திலே ஏற்படுத்த முன்வந்தது என்பதை நாம் நன்கறிவோம். ஆனால், அப்படிப்பட்ட நேரத்திலே சொல்லப் பட்ட அந்தக் கொள்கை இந்த மாநிலத்திலே பின்பற்றப்பட்டதா என்பதைப் பார்க்கும் நேரத்தில், அவ்வாறு பின்பற்றப்படவில்லை என்பது மட்டுமல்ல, அதற்கு மாறான கொள்கை திராவிட முன்னேற்றக் கழக அரசினால் பின்பற்றப் பட்டு வந்திருக்கிறது என்பதைத் தெளிவாகப் பார்க்க முடியும்.



இன்றைக்கு, வெளிநாட்டு முதலாளிகள் தமிழகத்திற்கு அதிகமாக வர வேண்டும், அதற்குத் தடங்கலாக இருக்கும் எந்தக்கொள்கையும் தூக்கி யெறியப்பட வேண்டுமென்று சொல்லும் அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் பொதுக்கூட்டங்களிலும், வேறுபல மேடைகளிலேயும் பேசிக்கொண்டு வருகிறார்கள். அதுமட்டுமல்ல, டி.வி.எஸ். போன்ற ஏகபோக முதலாளிகள், இந்தியஅரசாங்கம் தயாரித்திருக்கும் ஏகபோக முதலாளிகள் பட்டியலில் சொத்து காரணமாக இடம் பெற்றிருக்கிறார்கள், அப்படிப்பட்ட ஒரு கூட்டம், ஏகபோக முதலாளிகள் பட்டியலிலே இருப்பது தங்களுக்கு அபாயம் என்று ஒருவர் கூறுகிறார். கோடிக்கணக்கான மக்கள், ஏகபோக முதலாளிகள் வளர்வது அபாயகரமானது என்று உணர்ந்திருக்கும் நேரத் திலே, திராவிட முன்னேற்றக் கழக அரசு, தன்னுடைய தேர்தல் அறிக்கை யிலே கூறியதற்கு மாறாக, ஜெர்மன், ஜப்பான் முதலாளிகள் இன்று தமிழகத் திலே முதலீடு செய்வதற்கு ஏற்பாடு செய்யும் முறையிலே அதிக வாய்ப்புகள் தரவேண்டுமென்று சொல்லப்படுகிறது.

இந்தியா பூராவும் இருக்கும் முதலாளிகள் முதலீடு செய்வதற்கு எந்த விதமான தங்கு தடையும் கிடையாது, சட்டம் அமைதி பாதுகாக்கப்படும் முறையில் அரசு செயல்படும் என்று, இதையே மறு வார்த்தைகளில் சொன்னால் தொழிலாளர் இயக்கத்தைக் கட்டுப்படுத்தி, அவர்களால் உங்களுக்கு எந்தவிதமான தொந்தரவும் ஏற்படாதவாறு செய்ய நாங்கள் தயார் என்று சொல்லும் அளவிற்குத் தொழில்துறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை பூரணமாகக் கைவிடப்பட்டு, அந்நிய முதலாளிகளுக்காகவும், இந்தியப் பெருமுதலாளிகளுக்காகவும், தமிழகத்திலுள்ள பெருமுதலாளிகளுக் காகவும் ஒரு தொழில் கொள்கை பின்பற்றப்படுகிறது. அந்தக் கொள்கை கைவிடப்படவேண்டும். கடந்த காலத்திலேயிருந்த ஆட்சியிலேயிருந்த அதே கொள்கை இன்று இந்த ஆட்சியாலும் பின்பற்றப்படுகிறது. அதிலிருந்து சில விளைவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாத நிலை ஏற்படுகிறது.

ஆகவேதான், தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட பிறகு இந்திய நாட்டிலேயே ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடி தமிழகத்தையும் பாதித்தது. மத்திய அரசாங்கத்தின் தவறான கொள்கைகள், ஏகபோக முதலாளித்துவ நிலப்பிரபுக்களுக்குச் சாதகமான கொள்கைகள், விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியாத கொள்கைகள் தமிழகத்தில் எந்தவிதத் திட்டத்தையும் நிறை வேற்றமுடியாமல் செய்துவிட்டது. தொழிலாளர்கள் பஞ்சப்படியை உயர்த்த வேண்டுமென்று போராடும் நிலைமை ஏற்பட்டது.

இந்தியா பூராவிலும் பல்வேறு தொழில்கள், பஞ்சாலைகள், எஞ்சினியரிங் தொழில்கள் இந்த நெருக்கடியின் காரணமாகப் பாதிக்கப்பட்டபோது தமிழக முதலாளிகள் இந்தியப் பெருமுதலாளிகளைப் போல் நெருக்கடியின் சுமைகளையெல்லாம் தொழிலாளர்களின் தலையின்மேல் போட்டு லாபத்தைப் பாதுகாக்க அவர்கள் முனைந்த நேரத்தில் தொழிலாளர் வர்க்கம் தங்களுடைய அற்ப சொற்ப உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு போராட்டங்களை நடத்தும் நிலைமை ஏற்பட்டது. அவ்வாறு ஏற்பட்டபோது உழைப்பாளி மக்கள் நினைத்தார்கள்---இந்த ஆட்சி நம்முடைய ஆட்சி; நம்முடைய பக்கத் தில் நிற்கும்; தங்களுடைய உரிமையை நிலைநாட்ட கிளர்ச்சி இயக்கங்கள்,

போராட்டங்களை நடத்தும்போது இந்த அரசின் பக்கபலமும், துணையும், ஆதரவும் நிச்சயமாக இருக்கும்; அந்த வகையிலே பயம் இல்லாமல் போராடலாம் என்று தொழிலாள மக்கள், விவசாய மக்கள் கருதினார்கள். ஆரம்பத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஓரளவு அந்தக் கொள்கையில் நின்றது. வேலை நிறுத்தங்கள் நடந்தபோது அதைத் தடுக்க கருங்காலிகளைக் கொண்டு செல்ல முதலாளிகளுக்கு உரிமை கிடையாது என்ற முறையில் சரியான முடிவை எடுத்தது. வேலை நிறுத்தம் நடைபெறும்போது சரக்குகளை வெளியே கொண்டுபோகக்கூடாது, கொண்டு போக உரிமை கிடையாது என்று கூறியது.

ஆனால், அந்தக் கொள்கை படிப்படியாகச் சரிய ஆரம்பித்தது. இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய சுரண்டல் கூட்டப் பிரதிநிதிகள், அவர்களுடைய பெரும் பத்திரிகைகள், தொழிலாளர்கள் வரம்பு மீறி நடக்கிறார்கள், முதலாளிகள் செயல்பட உரிமை இல்லை என்ற கூச்சலைக் கிளப்பியபோது அரசாங்கம் அந்த நிர்ப்பந்தத்திற்குப் பணிந்து முதலில் எடுத்த நிலையில் இருந்து படிப்படியாகப் பிறழ ஆரம்பித்தார்கள். தங்களுடைய சரக்குகளை வேலை நிறுத்த காலத்தில் வெளியே எடுக்க உரிமை வேண்டுமென்று முதலாளிகள் ஹைகோர்ட்டில் ரிட் போட்டார்கள். அதிலே ஹைகோர்ட் தீர்ப்பிற்கு மேல் மேல்முறையீட்டுக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்ட நேரத்தில் அவர்கள் மேல் முறையீட்டுக்கு நாங்கள் போகமாட்டோம்; ஹைகோர்ட் தீர்ப்பின்படி இனிமேல் வேலைநிறுத்த காலத்தில் தொழிலாளர் வேலைநிறுத்தத்திற்குப் பாதகமான முறையில் முதலாளிகள் நடக்க உரிமை இருக்கிறது என்ற முறையில் அரசாங்கக் கொள்கை மாற்றப்பட்டது. முதலில் வேலை நிறுத்த காலங்களில் கருங்காலிகளை உள்ளே கொண்டு செல்ல அனுமதிக்கப்படாமல் இருந்து, பின்னர் அந்தக் கொள்கையில் இருந்தும் அரசு மாறிவிட்டது. கருங்காலிகளை எடுத்துச் செல்ல போலீஸ் பாதுகாப்புக் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

1967 பொதுத் தேர்தலுக்குப் பிறகு தங்களுடைய உரிமைகளுக்குப் போராட மேலும் அதிக வாய்ப்புகள் கிடைக்கும், வசதிகள் ஏற்படும், சாதகமான சூழ்நிலை இருக்கும் என்று எதிர்பார்த்த உழைப்பாளி மக்கள் இடையில் இன்று பெரிய ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்த முறையில் முதலாளிகளுக்குச் சாதகமாக, தொழிலாளர்கள் மேல் அடக்குமுறை சுமத்தப்பட்டதற்கு ஒரு சில உதாரணங்களைக் கொடுக்க விரும்புகிறேன்.

1967 செப்டம்பர் மாதத்தில் நெல்லை மாவட்டம் செங்கோட்டையில் பலராமவர்மா மில்ஸ் கதவடைப்பு நடந்தது. 1968 மார்ச் வரை பிரச்சினை தீர்க்கப்படவில்லை. தாலூகா ஆபீஸ் முன் மறியல் செய்வதன் மூலம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குப் பிரச்னையைக் கொண்டுவர தொழிலாளர்கள் முற்பட்டபோது 250 பேர் கைது செய்யப்பட்டார்கள். மறியல் செய்ய முன்வந்தவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டபோது மன்னிப்பு எழுதிக்கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. தொடர்ச்சியாக தொழிலாளர் கிளர்ச்சி நடைபெற்றதன் பிறகுதான் இன்று அந்த வழக்கு வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது. ஒரு முதலாளி நூற்றுக் கணக்கான குடும்பங்களைப் பட்டினி போடும் வகையில் மில்லை நீண்ட காலத்



திற்கு மூடி விடுகிறார். அவரைத் தடுப்பதற்கோ, சட்ட விரோதமாக மில்லை மூடியதைத் திறக்கச் செய்வதற்கோ வழிவகை செய்யாமல் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மீது சட்டம் பாய்கிறது என்பதை இந்த உதாரணத்திலிருந்து அறிந்து கொள்ள முடியும்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** குறுக்கீட்டுக்கு மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டு வருகிறபோது பொதுவான குற்றச்சாட்டுகளாகச் சொல்லிக் கொண்டே வருகிறபோது வெறுமனே கவனித்துக் கொண்டிருந்தேன். பிறகு தனிப்பட்ட ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுப் பேசினார் தாலூகா அலுவலகத்தில் மறியல் செய்ய தொழிலாளர்கள் முற்பட்டபோது கைது செய்யப்பட்டார்கள் என்பதை அவரே விளக்கினார். அதற்குப் பிறகு கைது செய்யப்பட்டவர்களுடைய கோரிக்கையை முதலமைச்சர் அவர்களும், சட்ட அமைச்சர் அவர்களும் கனிவோடு பரிசீலித்து விடுதலை செய்திருக்கிறார்கள். சட்ட விதிகளுக்குட்பட்டு, தொழிலாளர் சட்ட விதிப்படி தொழிலகத்திலே மறியல் நடத்தியிருந்தால் இப்படிப்பட்ட சிக்கல்கள் வந்திருக்காது. தாலூகா அலுவலகத்தில் ரெவின்யூ அதிகாரிகளைத் தடுத்த காரணத்தால்தான் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

**திரு. என். சங்கரய்யா:** நான் பல உதாரணங்களை வைத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு தடவையும் விளக்கம் அளித்துக் கொண்டிருப்பார்களேயானால் இதுவே பெரிய விவாதமாக அமைந்துவிடும். அவர்கள் சொல்லவேண்டியதை எல்லாம் இறுதியிலே சொன்னால் நலமாக இருக்கும்.

அந்தத் தொழிலாளர்கள் அமைதியான முறையில் மறியல் செய்யப் போனார்கள். அவ்வாறு மறியல் செய்வது என்பது எந்தத் தொழிலாளர் இயக்கமும் எதிர்பார்க்கக்கூடிய ஒன்று. சட்ட ரீதியாக மில்லைத் திறக்க அரசாங்கத்தால் முடியாமல் இருக்கும்போது பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க அத்தகைய நடவடிக்கையை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். அந்த நேரத்திலே தொழிலாளர்கள் கைது செய்யப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இது போன்று வேறுபல உதாரணங்களையும் கொடுக்க விரும்புகிறேன்.

கோயில்பட்டி லட்சுமி மில்லில் 1968 ஜூலையில் அதிக வேலைப் பளுவைத் திணிக்க முற்பட்டபோது தொழிலாளர்கள், எல்லாக் கட்சித் தொழிலாளர்களும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஜூலை 30-ம் தேதி கதவடைப்பு நடந்தது. ஆகஸ்டு 9-ம் தேதிக்கு மேலும் கதவடைப்பு நீடிக்கும் நிலைமையில், தொழிலாளர்கள் எந்த விதமான பலாத்காரத்திலும் ஈடுபடாது இருந்த நேரத்தில் மதுரையில் இருந்த டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் தலையிட்டதன் பேரில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவ்வாறு போட்டது தொழிலாளர்கள் சமாதானமான முறையில், கதவடைப்பு செய்ததற்கு எதிர்ப்பு செய்து கிளர்ச்சி செய்வதைத் தடுப்பதற்காகத்தான். அங்கு சட்டம் பாதிக்கக்கூடிய விதத்தில், அமைதி பாதிக்கக்கூடிய விதத்தில் எந்தவிதமான சம்பவமும் ஏற்படாமல் இருந்தபோதே அவ்வாறு மதுரை டி.ஐ.ஜீ.-யின் தலையீட்டின் பேரில் செய்யப்பட்டது. குறிப்பிட்ட அந்த மில்

முதலாளிக்கும் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கும் இடையே உள்ள சிநேகம்தான், அவர்களிடையேயுள்ள உறவு காரணமாகத்தான் அப்படி நேரிடையாக தலையிடுகிறார்கள் என்று அந்த மாவட்டத்திலுள்ள தொழிலாளர்கள் மத்தியிலே தெளிவான பேச்சு ஏற்பட்டது.

அடுத்தபடியாக, நெல்லை மாவட்டத்தில் ஆறுமுகநேரியில் 'த்ரங்கத்ரா கெமிக்கல்ஸ் கம்பெனி' இருக்கிறது. இது பிரசித்த பெற்ற ஜெயின் பிரதெர்ஸ் நடத்தக்கூடிய கம்பெனி. இந்தியன் ஃபெடரேஷன் ஃஆப் சேம்பர்ஸ் ஆஃப் காமர்ஸ்ன் தலைவர் ஜெயினின் உறவினர் நடத்தக்கூடிய தொழிற்சாலை அது. அவர் இந்தியாவிலேயே ஒரு பெரும் முதலாளி. அங்கு 1969-ம் ஆண்டு செப்டம்பரில் கம்பெனி நிர்வாகிக்கும், அதாவது மானேஜிங் டைரக்டருக்கும் தொழிற்சங்கத்திற்கும் இடையே 20 சதவிகிதம் போனஸ் கொடுப்பது என்று ஒப்பந்தம் செய்யப்பட்டு அந்த நிர்வாகி அதில் கையெழுத்தும் இட்டார்கள். பலாத்காரம் காரணமாக அந்த கையெழுத்து போடப்பட்டது என்ற குற்றச் சாட்டு ஸ்தல போலீஸ்க்கு வரவில்லை. ஆனால் அந்த ஒப்பந்தம் கையெழுத் திட்டு ஒன்றரை மாதங்களுக்குப் பிறகு 12 தொழிற்சங்க ஊழியர்கள் அவர்களை 'கேரோ' செய்தார்கள் என்று வழக்கு போடப்பட்டு அவ்வழக்கு இன்றும் நடந்து வருகிறது. மாநில அமைச்சர்களின் நேரடி தலையீடு காரணமாக எப்படியாவது அந்தக் கம்பெனி நிர்வாகி சொல்லக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்ற வற்புறுத்தல் காரண மாக, ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு ஒன்றரை மாதங்கள் ஆன பிற்பாடு கேரோ செய்தார்கள் என்று 12 ஊழியர்கள் மீது வழக்கு போடப்பட்டு நடந்துவந்திருக்கிறது. போலீஸின் கொள்கை எவ்வாறு அமலில் வந்திருக் கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக, இதை ஒரு உதாரணமாக கூறுகிறேன்.

அடுத்தபடியாக, திருச்சியில் காட்டூரில் கொத்தாரி சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் போராட்டம். அதன் முதலாளி நம் மாநிலத்தில் மட்டு மல்ல, இந்தியாவிலேயே ஒரு பெரும் முதலாளி. அங்கு தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்தார்கள். இன்றைய சட்டப்படி உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்வதற்கு தொழிலாளர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் ஹைகோர்ட் தீர்ப்பு எட்டுமணி நேரம் வரை, அதாவது அவர்கள் வேலை நேரம் வரை அவர்கள் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்யலாம், ஆனால் அதற்குப் பிற்பாடு அவர்கள் அங்கிருந்து வெளியே போய்விட வேண்டும் என்பதாகும். அடுத்து ஷிப்டில் வேலை செய்கிற தொழிலாளர்கள் அங்கு வந்தபோது போலீஸ்காரர்கள் தலையிட்டு நீங்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்யக்கூடியவர்களாக இருந்தால் உங்களை நாங்கள் உள்ளே அனுமதிக்க மாட்டோம், ஆனால் வேலை செய்ய சம்மதிப்பவர்களை, கருங்காலி களை மட்டும் உள்ளே செல்ல அனுமதிப்போம் என்று ஹைகோர்ட் தீர்ப்பைச் சுட்டிக்காட்டிச் சொன்னார்கள். ஹைகோர்ட் தீர்ப்பு என்னவெனில் உள்ளி ருப்பு வேலைநிறுத்தம் எட்டு மணி நேரம் முடிந்த பிறகு அவர்கள் வெளியேறி விடவேண்டும் என்பதாகும். ஆனால் அதற்குப் பின்னர் வரக்கூடிய தொழி லாளர்களை, வேலைநிறுத்தம் செய்யக்கூடியவர்களை மட்டும் தடுத்து நிறுத்தி முதலாளிக்கு ஆதரவாக வேலைக்குச் செல்கிறவர்களை மட்டும் அனுமதிப்பது என்ற நிலைமை ஏற்பட்டது. வேலைக்குச் செல்கிறவர்களை எட்டு மணி நேரம்



அல்ல இரண்டு நாட்கள் அங்கேயே தங்கி வேலை செய்ய அனுமதித்திருக் கிறார்கள். இவற்றைக் குறித்து தொழிற் சங்கத் தலைவர்கள் ஆட்சேபணை கிளப்பினார்கள். ஏன் அந்நிலை ஏற்பட்டது? முதலாளிக்கு பாதுகாப்பு, ஆனால் நியாயத்திற்காகப் பாடுபடும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டாமா? ஏன் அரசாங்கம் விசேஷமாக இத்தகைய நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

அடுத்தபடியாக, திருச்சி மாவட்டத்தில் காவேரி மில்ஸ் என்றதொரு மில்ஸ் இருக்கிறது. அது கருமுத்து தியாகராஜச் செட்டியாருக்குச் சொந்த மானது. அந்த மில் பதினாறு மாதங்களாக மூடிக் கிடந்தது. அதைப் பற்றி லேபர் கமிஷனர், 'Lock-out is unjustifiable' என்று, நியாயப்படுத்த முடியாத ஒரு லாக் அவுட் என்று குறிப்பிட்டுள் ளார்கள். தொழிலாளர்கள் என்ன சொன்னார்கள்? வன்முறை இன்றி வறுமையைப் போக்குவோம் என்று சொல்லும்போது எந்த விதமான வன்முறை பிரச்னையும் அதில் இல்லை. ஏற்கனவே வாங்கிக் கொண்டிருக்கக் கூடிய பஞ்சப்படியில் ரூ. 40-ஐ குறைத்துக் கொள்ள ஒப்புக் கொள்ளவேண்டும், வேலைப் பளுவை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று முதலாளிகள் சார்பில் சொல்லப்பட்டது. 40 ரூபாயைக் குறைத்துக் கொள்ளவேண்டும் பஞ்சப்படி யில், வேலைப் பளுவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லி அடம் பிடிக் கிறார்கள். ஐ.என்.டி.யு.ஸி. சங்கம், தி.மு.க. சங்கம இவை அந்த முதலாளியின் வற்புறுத்தலை ஏற்றுக்கொண்டன. ஆனால் வலதுசாரி கம்யூனிஸ்ட்ஸ் நடத்தும் தொழிற் சங்கம், நாங்கள் நடத்தும் தொழிற் சங்கம் இவை அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த அடிப்படையில்தான் திறக்கப்படும் என்று கூறி மில்லை திறக்கும் நேரத்தில் அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் 350 தொழிலாளர்கள் ஒரு க்யூவில் நிற்கிறார்கள். அவற்றை ஏற்றுக் கொள்ள முடியாத சங்கத்தைச் சேர்ந்த 750 பேர்கள் இன்னொரு க்யூவில் நிற்கிறார்கள். அப்போது போலீஸ் வருகிறது. எதற்காக போலீஸ் வருகிறது? 'டியர்காஸ் ஸ்க்வாட், ஃபயர், ஸ்க்வாட்' இவற்றோடு லாரி லாரியாக போலீஸாரும் வந்து இறங்குகிறார்கள். முதலாளி சொல்கிறபடியுள்ள அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்து போடுகிற வர்களாக இருந்தால்தான் அவர்களை உள்ளே செல்ல அனுமதிப்போம், அதற்கு விருப்பம் இல்லாதவர்களை உள்ளே செல்ல அனுமதிக்கமாட்டோம் என்று போலீஸிலிருந்து சொல்லப்பட்டது. தொழிலாளர் சட்டம் என்ன சொல்கிறது என்றால்; ஒரு ஃபாக்டரி மூடப்பட்டு கிடந்து மீண்டும் திறக்கப் படுகிறது என்றால் அந்த லாக் அவுட் செய்யப்பட்ட நேரத்தில் யார் யார் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தார்களோ அவர்கள் அத்தனை பேரும் தங்குதடையின்றி வேலைக்குச் செல்ல உரிமை இருக்கிறது என்பதுதான் இன்றுள்ள சட்டம். போலிஸ்காரர்களிடம் இதைப் பற்றிச் சொன்னபோது, பாக்டரிச் சட்டத்தைப் பற்றியெல்லாம் எங்களுக்குத் தெரியாது, பஞ்சப் படியில் நாற்பது ரூபாயைக் குறைத்துக் கொள்கிறேன், வேலைப் பளுவை ஏற்றுக்கொள்கிறேன் என்ற நிபந்தனையில் கையெழுத்து போட்டால்தான் உள்ளே செல்ல அனுமதிப்போம், இல்லாவிட்டால் அனுமதிக்க மாட்டோம் என்று சொன்னபோது, தொழிற் சங்கத் தலைவர் தோழர் உமாநாத் அவர்கள் டியூட்டியில் இருந்த சப் கலெக்டரிடம் சென்று போலீஸின் உதவியோடு

ஒப்பந்தத்தில் கட்டாயமாக கையெழுத்து வாங்கிக் கொண்டுதான் உள்ளே அனுப்புகிறார்களா இல்லையா என்பதைப் பார்த்துச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டபோது, அதைப்பற்றி சப் கலெக்டர் அவர்கள் அத்தாட்சி கொடுத்திருக்கிறார்கள். போலீசாரால் கட்டாயமாக கையெழுத்து போடும் படிச் செய்யப்பட்டது என்று ட்யூட்டியில் இருந்த சப் கலெக்டரே அத்தாட்சிப்பத்திரம் கொடுத்திருக்கிறார்கள். பிறகு இதைப்பற்றி ஜில்லா கலெக்டரிடம் கூறியபோது அவர்கள் மாநில அரசோடு தொடர்பு கொண்டு பின்னர் சொல்லப்பட்டது, மாநில அரசாங்கம் எப்படியாவது தியாகராஜ செட்டியாரின் முடிவுகளின் பேரில் நடக்கவேண்டுமென்று விரும்புகிறது. ஆகவே, எந்தவித தலையீடும் செய்யமுடியாது என்று சொல்லப்பட்டது. மற்றவைகளை எல்லாம் அப்படியே மறைத்துவிட்டார்கள். போலீஸின் கொள்கை எவ்வாறு இருக்கிறது என்பதற்கு இது மற்றொரு உதாரணம்.

இன்று சர்க்காரால் ஏற்று நடத்தப்படுகிற நிவாரணத் தொழிற்சாலைகளைத் தவிர மற்ற மில்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களைவிட நாற்பது ரூபாய் பஞ்சப்படியில் குறைந்திருக்கும் அளவிற்குத்தான் இந்த காவேரி மில்ஸ் தொழிலாளர்கள் இன்றையதினம் பெற்றுவருகிறார்கள் அதற்காக போலீஸ படை அங்கே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து எவ்வாறு நம் தொழிலாளர் கொள்கை நடைமுறையில் இருக்கிறது என்பதைப் பார்க்க முடியும்.

அதேபோல் திருச்சி மாவட்டத்தில் நமணசமுத்திரத்தில் புதுக்கோட்டை டெக்ஸ்டைல் மில்ஸ் என்று எல். நாராயணன் செட்டியார் என்பவரின் நிர்வாகத்தின்கீழ் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள்

**திரு. என். சங்கரய்யா :** நான் ஏற்கனவே சபாநாயகர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். 1½ மணி நேரம் நான் பேசுவேன் என்று அவர்கள் அதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். முன்னாலேயே நான் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். கூடுமான வரையில் சுருக்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள், முயற்சி செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நான் கூறிய விஷயங்களை ரிப்பீட் செய்வதாக இருந்தால் சொல்லுங்கள். நான் சொல்வதற்கு முக்கியமான பல அம்சங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்று இருபது நிமிடங்கள் தான்.

**திரு. என். சங்கரய்யா :** அது நான் முன்மொழிந்து பேசிய பிறகு இருக்கக்கூடிய நேரம். முதலிலேயே சபாநாயகர் அவர்கள் தெளிவுபடுத்தி விட்டார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது.

அந்த நாராயணன் செட்டியார் என்பவர் கருமுத்து தியாகராஜச் செட்டியாரின் மருமகன். 30--3--1970 முதல் கதவடைப்பு செய்துள்ளார்கள். தொழிலாளர்கள் பஞ்சப்படியில் நாற்பது ரூபாய் குறைத்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லி அதை ஒப்புக் கொள்ளச் செய்யும் விதத்தில் தொழிலாளர்களை பட்டினிப் போடச் செய்யும் விதத்தில் லாக் அவுட் செய்



துள்ளார்கள். அங்கு வேலை செய்பவர்கள் 400 பேர்கள் என்றால் போலீஸ்காரர்கள் 300-க்கு அதிகமானவர்கள் அங்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இதை யோசனை செய்யவேண்டும். ஒரு அமைச்சர் கூறியிருக்கிறார், தொழிலாளர்களிடத்தில் செய்தி அனுப்பியிருக்கிறார்கள், நீங்கள் இந்தப் பஞ்சப்படியை வெட்டிக் கொள்வதற்கு ஏற்றுக்கொண்டால் மில்லைத் திறக்க ஏற்பாடு செய்கிறோம் என்று. போலீஸ் துறை எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பாருங்கள்.

அதேபோல் திருச்சி மாவட்டத்தில் ஸ்மால் ஆர்ம்ஸ் பாக்டரியில் தொழிலாளர்கள் வீடுகளில் தண்ணீர் வசதிக்காக கொடுக்கப்படவேண்டிய பணத்தை ஒரே மாதத்தில் பூராவையும் கட்டவேண்டுமென்று நிர்வாகம் சொன்னதை ஆட்சேபித்து பாக்டரி முடிந்த பிறகு அந்த காம்பவுண்டிற்குள் அமைதியாக வேலைநிறுத்தம் செய்ததன் பேரில் கடுமையான முறையில் தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டு ஐம்பது பேர்களை தொழிலாளர்கள் காலனிக்குள்ளே புகுந்து அடித்திருக்கிறார்கள். முப்பது பேர்களின் பேரில் க்ரிமினல் வழக்கு போடப்பட்டது. தொழிலாளர்கள் அந்த வழக்கை நடத்தி விடுதலைப் பெற்றிருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சேலம் மாவட்டத்தில் பள்ளிப்பாளையத்தில் காவேரி சேஷசாயி பேப்பர் மில்ஸ் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அரசாங்கமும் அதிலே பிற்பகல் 12-30
ஒரு கோடி ரூபாய் மூலதனம் போட்டு இருக்கிறது. 10 கோடி ரூபாய் மூலதனம் போட்டு ஆரம்பித்த தொழிற்சாலை தொடர்ந்து நஷ்டக்கணக்கை காட்டி வருகிறது. 1968 ஆகஸ்டில் தொழிலாளிகள் பஞ்சப்படி வேண்டுமென்று கேட்டார்கள். பஞ்சப்படி கொடுக்கவில்லை. தொழிற்சங்கங்கள் விசாரணை வேண்டும் என்று கோரின, அமைச்சர் மாதவன் அவர்கள் அரசு பரிசீலிக்கும் என்று கூறினார். ஆனால் விசாரணை நடக்கவில்லை. ஆகவே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய நேரிட்டது. அங்கே வேலை நிறுத்தம் செய்தபோது அந்த பாக்டரி ஏரியாவையே போலீஸ் மயமாக்கினார்கள். 500 பேர் மீது தடியடிப் பிரயோகம் செய்தார்கள். சுமார் 100 பேருக்கு காயம். 36 பேர் மேல் கிரிமினல் வழக்கு. இவ்வளவும் நடந்த பிறகு அங்கே ரூ. 25 பஞ்சப்படி உயர்வு தரப்பட்டது. இதிலிருந்து நாம் பார்க்கலாம். தொழிலாளிகள் முதலிலே செய்த கோரிக்கை நியாயமானது. இவ்வளவு அடக்கு முறை எற்பட்ட பிறகு தொழிலாளர்கள் போராட்டத்தின் மூலமாகத்தான் இந்த கோரிக்கையை அடைய வேண்டி இருந்தது என்பதைப் பார்க்கிறோம்.

மாதவரத்திலே 11--7--1970-ம் தேதியன்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தத்தின்போது அங்கே திடீரென்று 50 தொழிலாளிகள் மீது எவ்வித காரணமும் இல்லாமல் தடியடி செய்தார்கள். 18 பேருக்குக் காயம், 6 பேர் இன் பேஷன்ட்டாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வேலை நிறுத்தத்தை உடைக்க சிறைக்கைதிகள் பயன்படுத்தப்பட்டனர். இப்படி பல முறை போலீஸ நடந்து கொண்டு இருக்கிறது. ஆகவேதான், அரசாங்கத்தைப் பற்றி . . (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1½ மணிநேரம் பேசுவதாக என்னிடத்தில் சொன்னீர்கள். நான் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்று சொன்னேன். 1 மணி நேரத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. என். சங்கரய்யா :** நான் முன்னேயே 1¼ மணி நேரம் வேண்டு மென்று சொல்லி . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் 1½ மணி நேரம் கேட்டீர்கள். நான் 1½ மணி நேரம் கொடுக்க முடியாது என்று சொன்னேன். 1 மணி நேர அளவில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. என். சங்கரய்யா :** நான் உங்களிடத்தில் முன்னேயே சொன்ன மாதிரி 1½ மணி நேரம் வேண்டும். முக்கியமான அம்சங்களை சொல்ல வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் நான் இந்த தீர்மானத்தையே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் நேரம் எல்லாவற்றையுமே ஒரே உறுப்பினருக்குக் கொடுக்க முடியாது. ஒரு மணி அளவில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. என். சங்கரய்யா :** சபாநாயகர் கொஞ்சம் தாராளமாக இருக்க வேண்டும்.

இன்று இதே போல் மின்சார வாரியத்தில் 'மாஸ் காஷவல் லீவ்' எடுத்த போது போலீஸ் படை வைத்து மிரட்டப்பட்டது. இதைப்பற்றி பத்திரிகை களில் செய்திகள் வந்தன. கன்னியாகுமரி மாவட்டத்தில் டிவிஷனல் இஞ்சினீர் ஒருவர் "humiliate" செய்யப்பட்டார். மக்கள் முன்னிலையில் வைத்து அவமரியாதை செய்யப்பட்டார் என்று சொல்லப்பட்டது.

வடஆற்காடு மாவட்டத்தில் 1968 ஆகஸ்டில் 30,000 பீடித்தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, போலீஸ் அடக்குமுறை ஏவிவிடப்பட்டது. பீடி சுற்றிய காய்ப்பு விரல்களில் இருக்கின்றனவா என்று பார்த்து பீடித் தொழிலாளர்களை போலீஸார் தாக்கினர். இந்த சம்பவத்தைப் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டு இருக்கிறேன்.

மதுரை செல்லூரில் 12--8--1970 அன்று கைத்தறி தொழிலாளர்கள் ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். அப்போது 90 பேர் கைது செய்யப் பட்டனர். அவர்கள் அமைதியாக போராட்டம் நடத்தினார்கள். அந்த நேரத்தில் அங்கே இருந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் 90 பேரைக் கைது செய் தார்கள். தடியடிப்பிரயோகம் செய்தார்கள். 50 பேருக்குக் கடுமையான காயம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சியாளர் தலையிட்டு தொழிலாளர்களின் போராட்டக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. முதலிலேயே இப்படி ஏற்றுக்கொண்டு இருந்தால், இந்த அடக்குமுறை இல்லாமல் இருந்து இருக்கும். இந்த நிலைமை ஏற்பட்டு இருக்காது.

அதேபோல் 1968-ம் ஆண்டிலே கதிரி மில் தொழிலாளர்கள் தங்களுடைய பிராவிடண்ட் பண்ட் தொகையை தங்கள் பங்கில் சேர்க்கவில்லை என்று தெரிந்தும், சம்பள பாக்கியைக் கொடுங்கள் என்றும் கேட்டார்கள். சம்பள பாக்கி கேட்ட 600 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேபோல் டால்மியா சிமெண்ட் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள்.





கும்பகோணம் பட்டுக் கைத்தறி நெசவாளர்கள் தாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை உற்பத்தியாளர்கள் அமுல்படுத்தாததால் போராட்டம் நடத்தினார்கள். அந்த நேரத்திலே அந்த தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள், என்பதை இந்த நேரத்திலே ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது போல் பல விஷயங்கள்.

நெய்வேலியில் 2--5--1970 அன்று வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. 5--5--1970 வரை நடந்தது. முதல் தடவை தடியடி காலை 10 மணிக்கு நடந்தது. 2-வது தடவை தடியடி இரவு 7 மணிக்கு நடந்தது. தொடர்ந்து கண்ணீர்ப் புகை 10 மணி வரை நடைபெற்றது. பின் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. 3--5--1970 காலை 10 மணி முதல் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு. தொடர்ந்து இப்படி நிகழ்ச்சிகள் இருந்ததைப் பார்த்தோம். குப்பங் களிலே தாண்டவகுப்பம், மந்தாரக்குப்பம், திமர் குப்பம் முதலிய இடங் களிலும் நகர் முழுவதும் வீடு புகுந்து போலீஸ் தடியடி பிரயோகம் செய் தார்கள். மிராசாவின் 9 மாதக் குழந்தை இறந்தது. இதை 6--5--1970-ல் தி.மு.கழக சங்கமே நோட்டீஸ் போட்டு கண்டித்து இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களே பார்க்கலாம். திராவிட முன்னேற்றக் கழக சங்கமே வேலை நிறுத்தத்திற்கு வேண்டுகோள் விட்டு இருக்கிறது. ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் இந்த வேலை நிறுத்த நிலைமை எல்லாம் ஏற்படாமல் இருந்து இருக்கும். கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்று முதல் அமைச்சர் சொன்னதால், போலீஸ்காரர்கள் அவர்கள் பாஷையில் அதைப் புரிந்து கொண்டு பயங்கரமான முறையில் அடக்குமுறையில் ஈடுபட்டார்கள். எத்தனையோ பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டார்கள். கற்பழிக்கப் பட்டார்கள். வீடுகளில் உள்ள பொருள்கள் சூறையாடப்பட்டன. அந்த நேரத்தில் மாநில அரசாங்கம் நீதி விசாரணை நடத்த மறுத்து விட்டார்கள். அதற்குப் பதிலாக அந்தத்துறையின் செயலாளர் விசாரணைக்கு அனுப்பப் பட்டார். போலீஸ் நிர்வாகத்தைச் சேர்ந்தவரே போலீஸ் அதிகாரி ஒருவர் வன்முறையில் அடக்குமுறையில் ஈடுபட்டதை விசாரிக்க இருக்கிறார் என்ற உடனே எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இழந்தன. பல கட்சிகள் விசாரணை சரியாக இருக்காது என்று அதிலே பங்கு எடுத்துக் கொள்ளவில்லை. சரியான நீதி விசாரணை நடக்கவில்லை என்று தமிழ் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் கூறுகிறார்கள்.

இப்போது மற்றொன்று கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையில் கூறினார்கள். எவ்வாறு விவசாயத் துறையில் நடப்போம் என்று சொன்னார்கள். "திராவிட முன்னேற்றக் கழகம் இந்த சட்டத்தில் உள்ள ஓட்டைகளை அடைத்து, இந்தச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள நிலச்சுவான்தாரர்கள் செய்து கொண்டுள்ள ஏற்பாடு களின் போலித் தன்மையைக் கண்டறிந்து, நடவடிக்கை எடுக்க திட்டமிட்டு இருக்கிறது. உழுபவனுக்கே நிலம் என்ற திட்டத்தை அமுலாக்க கழகம் உறுதி கொண்டிருக்கிறது. நிலமற்றவர்களுக்கு நிலம் தருவதுடன், அவர்கள் நல்ல முறையில் விவசாயம் செய்திட தேவைப்படும் வசதிகளையும் தந்திட முனையும்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், விவசாயத் தொழிலாளர்கள் போராட்டம் நடந்தபோது பல தடவைகள் அடக்கு முறை பிறப்பிக்கப் பட்டு இருக்கிறது. சிக்கல் பக்கிரிசாமி பட்டப்பகலில் கொலை செய்யப் பட்டார். விவசாயத் தொழிலாளர்கள் பல போராட்டங்களை நடத்திய நேரத்தில்

போலீஸ் அவர்கள் பேரில் வழக்கு போட்டார்கள். பல போராட்டங்களுக்குப் பின்னர்தான் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன. ஆனால் தஞ்சை மாவட்டத்தில் நிலப் பிரபுக்களின் மேல் போட்ட வழக்குகளில் ரிகார்டுகள் தயாரிப்பதில் அதிக அக்கரையின்மை காரணமாக கேஸ்கள் ஜெயிக்கவில்லை.

இறிஞ்சூர் சின்னப்பிள்ளை மறைந்து விட்டார். அவர் கொலை செய்யப் பட்டாரா அல்லது இறந்துவிட்டாரா என்று இதுவரை தெரியவில்லை. அவர் கொலை செய்யப்பட்டார் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். இம்மாதிரி ஒரு நிலப்பிரபு கொலை செய்யப்பட்டால் அல்லது மறைந்து விட்டால் இந்த அரசாங்கம் சும்மா இருக்குமா? மறைந்துவிட்ட விவசாயத் தொழிலாளியைக் கண்டுபிடிக்க, அதற்கு பொறுப்பானர்கள் மீது நடலடிக்கை எடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததா?

அதற்குப் பின்னுல் பார்த்தால் இதற்கெல்லாம் உச்சமான ஒரு நிகழ்ச்சி நடந்தது. கீழ்வெண்மணியில் நடந்தது. சென்ற ஆண்டு காங்கிரஸ் உறுப்பினர் ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தார்கள் இது பற்றி. நாங்கள் அதை எவ்வாறு ஆதரிக்க முடியாத நிலையில் இருக்கிறோம் என்று அப்பொழுதே விளக்கினோம். எந்த அடிப்படையில் அரசியல் காரணமாக காங்கிரஸ் கட்சி விவசாயிகளைப்பற்றி நடந்துகொண்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அந்தக் கண்டனத் தீர்மானம் இங்கே கொண்டுவரப் பட்டபொழுது அது உண்மையானது அல்ல, ஏன் அதை நாங்கள் ஆதரிக்க முடியாத நிலையில் இருக்கிறோம் என்பதற்கு தெளிவான காரணங்களைக் காட்டி யிருக்கிறோம்.

தோழர் ராமமூர்த்தி அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலப் பிரபுக்கள் ஆயுதங்களை தயாரிப்பு செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் இந்த மாநிலத்திலுள்ள ஐ.ஜி. அது உண்மை இல்லை என்று கூறி விட்டார். முன்னாள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ராமமூர்த்தி அவர்களின் கட்சிக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் என்ன ஆபத்து ஏற்பட்டு விடப் போகிறது என்று கேட்டார்கள். சில தினங்கள் கழித்து அந்த ஆபத்து தெரிந்தது. கீழ் வெண்மணியில் 44 பேர்கள் உயிரோடு கொளுத்தப் பட்டார்கள். இதை சற்று யோசனை செய்து பாருங்கள். 44 நிரபராதிகள் மூச்சுமுட்டி தீயில் இறந்தார்கள். 44 நிலப் பிரபுக்கள் இறந்திருந்தால் அங்கே எத்தனை பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பார்கள்? விவசாயத் தொழி லாளர்கள் போராடுவதை எதிர்க்கக்கூடிய ஒரு சில கட்சியினர்கள் அந்தப் போராட்டத்திற்கு அர்த்தம் இல்லை என்று சொன்னார்கள். என்ன நிகழ்ச்சி நடந்தது? ஆகவேதான் குறிப்பிடுகிறேன்.

நிலப் பிரபுக்களில் ஒருவர் தாக்கப்பட்டால் எந்த அளவுக்கு அதைப்பற்றி பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகிவிடும்? உடனே விசாரணை நடக்கும். இப்படி விவசாயத் தொழிலாளிகள் படுகொலை செய்யப் பட்டார்கள். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால்தான் இந்த நிகழ்ச்சி ஏற்பட்டது என்று அன்றைக்கும் சொன்னோம், இன்றைக்கும் சொல்கிறேன்.

அடுத்ததாகப் பார்க்கலாம். இப்பொழுது நம்முடைய தோழர் திரு. எ. கே. சுப்பையா அவர்கள் கட்சி நில மீட்சிக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அவர் கள் பேரில் கொள்ளை வழக்கு, சதி வ க்கு, செக்ஷன் 120-பி யின் கீழ் வழக்குத்



தொடர்ந்திருக்கிறார்கள். நிலத்திற்காக ஒரு கிளர்ச்சி நடைபெறுகின்ற பொழுது, கொள்ளையையும், சதியையும் சேர்த்து வழக்குப் போட்டிருக்கிறார் கள். அவ்வாறு செய்து, கிரிமினல் திருத்தச் சட்டத்தின்கீழ் கொண்டு வந்து, அவர்களுக்கு ஜாமீன் மறுக்கப்பட்டிருக்கிறது. எத்தனையோ முறைகளில் கிளர்ச்சி நடைபெற்றபோது, அப்பொழுதெல்லாம் ஜாமீனில் விடப்பட்டிருக் கிறார்கள். இப்பொழுது மட்டும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. ஜாமீன் மறுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கொள்ளையடிப்பதற்கும், சதி செய்வதற்கும் ஏற்பாடு செய்தார்களா? நில மீட்சிக் கிளர்ச்சிதானே நடத்தினார்கள். அவர் களின் போராட்டம் இன்று முடிந்தது என்ற ஒரே காரணத்திற்காக கொள்ளை வழக்கை, சதி வழக்கை அரசாங்கம் வாபஸ் வாங்கியிருக்குமா என்று நான் கேட்கிறேன். அவர்கள் கொள்ளையடிப்பதற்கும், சதி செய்வதற்கும் ஏற்பாடு செய்யவில்லை உண்மையிலேயே. எந்தவிதமான ஒரு பெரிய ஆர்ப்பாட்டமு மின்றி அந்த வழக்குகளை வாபஸ் செய்திருப்பீர்களா? உண்மையில் இந்த இயக்கத்தை தோற்கடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் செய்யப்பட்ட மோசமான அடக்குமுறைதான் இது. அதைப்பற்றி அவர்களுக்கு ஒரு கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்பதுதான் நோக்கம். அந்த நோக்கத்தில்தான் கொள்ளை, சதி வழக்குகள் போடுவதற்கு இந்தச் சட்டம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

1937-ல் முனகாலாவில் விவசாயத் தொழிலாளர்களின் கிளர்ச்சி நடந்தது. அப்பொழுது ராஜாஜி அவர்கள் குற்ற இயல் திருத்தச் சட்டத்தைப் பிரயோ கித்தார். இந்த மாநிலத்தில் அதற்கு ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக, அந்தக் குற்ற இயல் திருத்தச் சட்டத்தை மேற்கொண்டு பிரயோகிப்பதைக் கைவிட்டுவிட்டார். அதற்குப் பிறகு குற்ற இயல் திருத்தச் சட்ட அமைப்பு பயன்படுத்தப்படவே இல்லை. இந்த அரசாங்கம் அந்தப் பாதையிலே சென்று கொண்டிருக்கிறது. இந்த நாட்டு மக்கள் இதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, மின்சாரக் கட்டண உயர்வை எதிர்த்துக் கிளர்ச்சி நடந்தது. அதைப்பற்றிய நிலையையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், வேறு முக்கியஸ்தர்கள் அவர்களை மட்டும் கைது செய்துவிட்டு, பாக்கிப் பேரை தடியால் அடித்துத் துரத்துங்கள் என்று போலீஸுக்கு இங்கிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. முக்கியஸ் தர்கள் கைது செய்யப்பட்டதும், மற்றவர்கள் 'நாங்கள் இந்த இடத்தை விட்டுப்போகமாட்டோம்' என்று உட்கார்ந்தார்கள்; சத்தியாக்கிரஹம் செய் தார்கள். சட்டப்படி வேண்டுமானல் கைது செய்யுங்கள் என்று சத்தியா கிரஹம் செய்தார்கள். ஆனால், அவர்கள் அப்படி கைது செய்யப்படவில்லை. அவர்களை தடுத்து, தடியால் அடித்துத் துரத்தவேண்டும், அந்த வழியிலே தான் இந்தப் பிரச்னையை தீர்க்க முடியும் என்ற ஒரு முடிவுக்கு வந்திருக் கிறது அரசாங்கம். கொள்கை ரீதியிலே அரசாங்கம் ஒரு முடிவு எடுத்திருக் கிறது. மென்மையான கரத்தை பயன்படுத்தாமல், அரசாங்கம் இரும்புக் கரத்தைப் பயன்படுத்தும்—முதலாளிகள், நிலப்பிரபுக்களுக்கு எதிராக கிளர்ச்சி நடந்தால்—என்ற ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது என்றுதான் கருத வேண்டியிருக்கிறது.

கோவை நிகழ்ச்சியில் ஏற்பட்டிருக்கிற அடக்குமுறை அரசியல் அடிப்படையில்தான் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. போலீஸார்கள் அவர்கள் சொந்தத்தில் ஏற்படுத்தியது இந்த முடிவு என்று நான் கருதவில்லை.

அடுத்து, போலீஸ் லாக்கப்பில் இருக்கும்பொழுது பல மரணங்கள் சம்பவித்திருக்கின்றன. பின்னால் பேசுபவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிடுவார்கள். தஞ்சாவூரில் ஜமீலா மரணமடைந்த நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டால், மார்க்சிஸ்டு கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டுவந்து அந்தப் பிரச்னையை இங்கே கிளப்பியதால்தான், மீண்டும் அதுபற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதற்கு அவசியம் ஏற்பட்டது. அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவராமலிருந்தால் என்ன நடந்திருக்கும்? தற்கொலை என்று பஞ்சாயத்தார்கள் கொடுத்த தீர்ப்பு அப்படியே நின்றிருக்கும். இதைப்பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பெண்களை இரவு நேரத்தில் லாக்கப்பில் வைக்கக்கூடாது என்ற உத்தரவு இன்றைக்கு அமல் நடத்தப்படுகிறதா? அமல் நடத்தப்படவில்லை. விசாரணையின் பேரில் ஒரு எஸ்.ஐ., ஒரு எச்.ஸி. சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார். இன்றைக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் மக்கள் கருதுகிறார்கள், அந்தப் பெண் கற்பழிக்கப்பட்டிருக்கிறாள், ஒருவரல்ல, பலரால் கற்பழிக்கப்பட்டதால் மரணம் ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறார்கள். கற்பழித்தால் இண்டியன் பீனல் கோடுபடி என்ன தண்டனை தரப்படுகிறது? பிரைமா பேஸி கேஸ் இருந்தால், கைது செய்யப்படவேண்டும். அப்படி கைது செய்யப்படாமல், சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, அவர்கள் மீது யார் வழக்குப் போடவேண்டும்? அதே போலீஸ் இலாகா அதிகாரிகள்தான் வழக்குப் போடவேண்டும். தாட்சண்யம் இல்லாமல் வழக்குப் போடுவார்களா? ரயில்வேயில்கூட டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்பவர்களைப் பிடிப்பதற்கு அதே டிவிஷன் ரயில்வே உத்தியோகஸ்தர்கள் வரமாட்டார்கள், இன்னொரு டிவிஷன் உத்தியோகஸ்தர்கள்தான் அந்த கேஸ்களை பிடிப்பார்கள். இன்றைக்கு நான் கேட்கிறேன், இன்றைக்கு மாவட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரியினால் விசாரணை செய்யப்பட்டு, ஜமீலா வழக்கு சம்பந்தமாக இரண்டு போலீஸ் அதிகாரிகள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். இறுதியிலே அவர்கள் வழக்கு முடிந்து விடுதலை செய்யப்பட்டாலும் செய்யப்பட்டுவிடலாம்.

தமிழகத்தில் பெண்மையைப் பற்றி கூறுகிறோம். பொன்னே, மணியே புனைப் பூங்கோதாய், நாணின்பாவாய், நீணில விளக்கே, கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி என்றெல்லாம் நாம் பெண்மையைப் பற்றியும், தாய்மையைப் பற்றியும் சொல்கிறோம். கற்புக்கரசி கண்ணகியைப் பற்றி நாமெல்லாம் பெருமைப்படுகிறோம். தஞ்சை மாவட்டத் தலைநகரத்தில் இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடந்திருக்கிறது என்றால், ஒரு பானைக்கு ஒரு சோறு உதாரணம். இப்படி எத்தனையோ சம்பவங்கள் நடைபெறுகின்றன. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவேண்டும்.

நம்முடைய தோழர் கோதண்டராமன் அவர்கள் வேலூரில் நடந்த சம்பவத்தைப்பற்றி சொன்னார். ஒரு பெண்ணிடம் ஒரு S.I. தவறான முறையில் நடந்ததாக கைது செய்யப்பட்டு, வழக்கு முடிந்து, விடுதலை





செய்யப்பட்டுவிட்டார். இதையே ஒரு சாதாரண மனிதர் செய்திருந்தால், ரேப் என்று சொல்லப்பட்டு கடுமையான தண்டனை விதிக்கப்பட்டிருக்கும். இப்படி வேலியே பயிரை மேய்ந்தால் நிலைமை என்ன ஆவது? இதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால், ஒன்றிரண்டை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1970-ம் ஆண்டு செப்டம்பர் இரண்டாம் தேதியன்று தினமணிப் பத்திரிகையில் ஐந்தாம் பக்கத்தில் கீழ்க்கண்ட செய்தி வந்திருக்கிறது : 'பூட்ஸ் காலால் தாக்கியதாக வழக்கு, சப்-இன்ஸ்பெக்டருக்கு அபராதம்' என்ற தலைப்பில் செய்தி வந்திருக்கிறது.

"அவமரியாதை செய்யும் நோக்குடன் கடந்த மே 5-ல் பரமதி போலீஸ் நிலையத்தில் பூட்ஸ் காலால் உதைத்ததாக குப்பம் கிராமத்தைச் சேர்ந்த கே. பி. கிருஷ்ணசாமி கவுண்டர் என்பவர் சப்-இன்ஸ்பெக்டர் ஆர். ஜெ. கோபால்மீதும், போலீஸ் கான்ஸ்டேபிள் ஒருவர்மீதும் திருச்சி ஜில்லா மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் புகார் தாக்கல் செய்திருந்தார். போலீஸ் அதிகாரி தாக்கியதால் காயம் ஏற்பட்டது என்பதை நிரூபிக்க டாக்டர் சர்டிபிகேட் ஒன்றையும் அவர் தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கை விசாரித்த ஜில்லா மாஜிஸ்டிரேட் ஸ்ரீ எம். நஞ்சப்பன், சப் இன்ஸ்பெக்டர் ஜயகோபாலுக்கு ரூ. 100 அபராதமும், கட்டத் தவறினால் 4 வாரம் கடுங்காவல் தண்டனையும் விதித்தார். போலீஸ் கான்ஸ்டேபிளுக்கு ரூ. 50 அபராதமும், கட்டத் தவறினால் இருவார கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது."

என்ற செய்தி வந்திருக்கிறது. நான் கேட்பது என்ன? பூட்ஸ் காலால் உதைத்தார் என்பதற்காக ஜில்லா மாஜிஸ்டிரேட் சட்டப்படி வழக்கை விசாரித்து, தண்டனை அளித்திருக்கிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில், அந்த ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய நேரத்தில் போலீஸ் அதிகாரிகள் மக்களை தங்கள் பூட்ஸ் காலால் உதைத்ததை நாமெல்லாம் கண்டித்தோம். இன்றைக்கு சுதந்திரம் வந்தபிறகு ஒரு போலீஸ் எஸ்.ஐ. ஒருவரை பூட்ஸ் காலால் உதைத்தார் என்று நிரூபிக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறார். அந்த மாதிரி ஒரு எஸ்.ஐ. நடந்துகொண்டிருக்கிறார் என்றால், இந்த அமைப்பு முறையில் இன்றைக்கு அவ்வாறு நடக்கக்கூடும் என்ற நிலை ஏற்படுகிறது. ஏதோ ஒரு பெரிய மனிதர் இப்படி பூட்ஸ் காலால் உதைக்கப்பட்டிருக்கிறார்; அவர் மிகுந்த சிரமப்பட்டு, டாக்டர் சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு, கோர்ட்டில் சொந்தப் புகார் கொடுத்து, வழக்கு நடத்தியிருக்கிறார். சாதாரண குடிமகன் அம்மாதிரி செய்ய முடியுமா? இதை நன்றாக நினைத்துப் பாருங்கள். இதே எஸ்.ஐ.-யை ஒரு சாதாரண விவசாயி பூட்ஸ் காலால் உதைத்திருந்தால், ரூ. 100 அபராதம் இல்லை, உடனே துப்பாக்கிப் பிரயோகமே நடந்திருக்கும். இந்த ஒரு சம்பவம் வெளியே வந்திருக்கிறது. உதாரணத்திற்காகத்தான் இதைச் சொன்னேன். வேறு எந்த நாட்டிலும் எந்த விதத்திலும் இம்மாதிரி நடக்க முடியாது.

மாண்புமிகு முதல் அமைச்சரவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, ஒரு பெடிஷன். இராமநாதபுரம் மாவட்டம், கல்லல் என்ற இடத்திலிருந்து, 29-8-1970 அன்று சர்வ கட்சிக் குழு, திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அகில இந்திய (ஸ்தாபன காங்கிரஸ் கட்சி),

மற்றும் பஞ்சாயத்துத் தலைவர்கள் கையெழுத்திட்டு, அனுப்பப்பட்டுள்ள ஒரு மனுவில், இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கை சர்கிள், போலீஸ் துறையைச் சேர்ந்த கல்லல் போலீஸ் ஸ்டேஷன் அதிகாரியாகிய சப்-இன்ஸ்பெக்டர் 27—8—1970 காலை கல்லல் வட்டார தி.மு.க. செயலாளர் திரு. சி. கருப்பையா அவர்களை, கீழ்க்கண்ட நிகழ்ச்சி சம்பந்தமாக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றிருந்த சமயம், 'யாரடா? தேவடியாள் மகன்' என்றும், மேலும் பல கேவலமான வார்த்தைகளைக் கூறியும் கேவலப்படுத்தி வெளியில் அனுப்பியுள்ளார்.

27—8—1970 காலையில் கல்லல் போலீஸ் சரகத்தைச் சேர்ந்த குருந்தம் பட்டு கரு. நாச்சியப்பன் என்பவரை ஸ்டேஷனுக்குக் கூட்டி வந்து, குருந்தம் பட்டு கிராமத்தைச் சேர்ந்த வேறொரு நபரான பெரி. நாச்சியப்பன் சம்பந்தப் பட்ட கேசுக்காக கோர்ட்டில் அபராதம் கட்ட ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்தினர். அவர் இச்செயலை மறுக்கவே, திரு. கரு. நாச்சியப்பனை மேற்படி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் பூட்ஸ் காலால் உதைத்தும் மிகவும் கொடுமையாக இடித்தும் துன்புறுத்திக் கொண்டிருந்தார். அப்போது ஸ்டேஷன் வழியாக வந்து கொண்டிருந்த அவரது மனைவியின் காதில் விழவே, அவர் அருகாமையில் கடையில் இருந்த தி.மு.க. செயலாளர் திரு. சி. கருப்பையா அவர்களிடம் அழுது கொண்டு விபரம் கூறவே தி.மு.க. செயலாளர் ஸ்டேஷனுக்குச் சென்று அங்கிருந்த (ஸ்டேஷன் வராந்தாவில்) குருந்தம்பட்டு கரு. நாச்சியப்பனிடம் விபரம் கேட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது தி.மு.க. செயலாளரை நோக்கி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் 'யாரடா தேவடியாள் மகனே? பேசிக் கொண்டிருப்பது' என்று கேட்டார். அதற்கு தி.மு.க. செயலாளர் திரு. சப்-இன்ஸ்பெக்டரிடம் விபரம் தான் கேட்டேன் என்று கூறியபோது "நீ, யாரடா . . ." நான் சபையில் படிக்க முடியாத அளவில் வார்த்தையைச் சொல்லியிருக்கிறார், ஆளும் கட்சியைச் சேர்ந்தவருக்கே இப்படிப்பட்ட நிலை என்றால், மற்றவர்கள் நிலை என்ன? இந்தக் கட்சி, அந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறது என்பதல்ல முக்கியம். அவர்கள் ஆட்சியில் இருக்கும் வரை எந்தக் கட்சிக்கும் அடங்கியிருப்பது போல இருந்தாலும், இவர்களெல்லாம் பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலிருந்து ஏகாதிபத்திய மனப்பான்மையில் வளர்ந்தவர்கள். ஆகவே, இதில் மாறுதல் செய்ய வேண்டும். பல புகார்கள் வருகின்றன. இது கட்சிப் பிரசாரத்திற் காக செய்யப்படும் காரியம் இல்லை.

தேனியில் நடந்த சம்பவம் தெரியும். கோவையில் தொழிலாளி பிண மாகக் கிடந்த சம்பவமும் தெரியும். இருக்கும் பிரச்சினை என்னவென்றால், இந்த அரசாங்கத்தின் பாதுகாப்பில், போலீஸ் ஸ்டேஷனில் இருட்டறையில் நடப்பதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். போலீஸ் ஸ்டேஷனில் மக்கள் கலாட்டா செய்தார்கள் என்கிறார்கள். ஒரு மனிதன் கைது செய்யப் பட்டிருக்கிறான், துன்புறுத்தப்படுகிறான் என்றால், 'விடுங்கள்' என்று மக்கள் கேட்கிறார்கள். அதிகாரிகள் இசையவில்லை என்றால், ஆர்ப்பாட்டம் செய் யாமல் என்ன செய்ய முடியும்? மூன்று வருஷங்களுக்கு முன்னால் இருந்த அதே நிலைதான் இப்பொழுதும் இருக்கிறது என்றால் என்ன மாற்றம் செய்தி ருக்கிறோம்? ஆகவே, ஒட்டு மொத்தமாகக் கூறும்போது, இந்த அரசு தொழி



லாளர்கள், விவசாயிகள் இவர்கள் சம்பந்தமாக போலீஸ் இலாகாவில் கொடுமைகள் பற்றி அதிகமாக இருக்கின்றன. சந்தேகக் கேசுகள், முக்காடு கேசுகள் அதிகமாகியிருக்கின்றன.

மதுவிலக்கு பொறுத்தவரையில் தஞ்சாவூர் மாவட்டத்தில், இத்தனை மாதத்திற்கு இவ்வளவு என்று மாமூல் வாங்கிக் கொண்டு, சமாதான சகவாழ்வு என்ற முறையில் நடக்கிறது. ஆனாலும் மதுவிலக்கு அமுலில் இருக்கிறது. சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு ஒரு லட்சம் வழக்குகள் அதிகம் என்றால், காட்டிக் கொடுக்கிறவர்களுக்கு வெகுமதி. தஞ்சாவூர் மாவட்டத்தில் கணக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு கைது செய்யவேண்டும் என்று அவர்களே ஆட்களைக் கொடுக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு இவ்வளவு ஆள் என்று கொடுக்கிறார்கள். அதன் பிறகு மற்ற காரியங்கள் தன் பாட்டில் நடக்கும்.

தோழர் பூபதி குறிப்பிட்டது போல் கோவை மாவட்டத்தில் பல கேசுகள் போடப்பட்டுகின்றன. மோட்டார் ஹாரனில் கள்ளை வைத்துக்கொண்டு ஆளைப் பிடித்து, வாயில் பம்பு செய்து கள் அருந்தியிருக்கிறான் என்று சர்ட்டிபிகேட் வாங்கி, கேசுகள் போடுகிறார்கள். அந்த வகையில் வழக்குகள் நிரூபிக்கப்படுகின்றன. ஜமீலா வழக்கில் இப்படித்தான் மது வைத்திருந்தார் என்று கைது செய்யப்பட்டார்.

இன்றைக்கு ஒரு புதிய திருப்பம். மாணவர்கள் ஆசிரியர்கள் பற்றி அரசுக் கொள்கையில் ஒரு மாற்றம். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் போக மற்றவர்கள் கண்காணிக்கப்படுகிறார்கள். ரகசிய முறையில், இப்படிப்பட்டவர்களை வேலையில் அமர்த்தவேண்டாம் என்று உத்தரவு. இன்றைக்கு மாநிலத்தில் நடக்கிறது. முன்பு இருந்த ஆட்சியில் பின்பற்றப்பட்டு வந்த கொள்கைகள் மாற்றப்படவேண்டும். அடிப்படை யான மாற்றம், திருப்பம் ஏற்படவேண்டும். அரசியல் கட்சி காரணமாக போலீஸ் இலாகாவினால் துன்புறுத்தப்பட மாட்டார்கள் என்கிற நிலை இருக்க வேண்டும். இம்சிக்கப்படாமல், சட்ட விரோதமாக யாரும் கைது செய்யப் படமாட்டார்கள், சட்ட விரோதமாகக் கைது செய்யும் குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும், தண்டனை அடைவார்கள், இதுதான் அரசின் கொள்கை என்று நிலைமை இருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, என் கட்சியின் சார்பில் கொண்டு வந்திருக்கும் கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்து என் உரையை முடிக்கிறேன்.

**திரு. இரெ. இளம்வழுதி:** மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் கலைஞர் தலைமையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை மீது, சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு திரு. கருத்திருமன் அவர்கள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் வன்மையாக எதிர்த்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர் 'புலி வருகிறது, புலி வருகிறது' என்று சொல்லி, கடைசியில் ஒரு பூனையைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். 1968-ல் பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, நம்முடைய அமைச்சரவைமீது நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். இன்று கொண்டு வந்துள்ள

[திரு. இரெ. இளம்வழுதி] [1970 செப்டம்பர் 7

நம்பிக்கையில்லாத் தீர்மானம் எந்த விதமான குற்றச்சாட்டுகளையும் காட்டவில்லை. தனிப்பட்ட முறையில் சில அமைச்சர்கள்மீது குற்றங்கள் சுமத்தினர்கள். அவர்களும் தந்நிலை விளக்கம் கொடுத்த பிறகு அதற்கு ஒன்றும் சரியாகச் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் கயிற்றில் முடிச்சு . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : கூட்டுறவு அமைச்சர் தந்நிலை விளக்கத்தில் இன்கம்-டாக்ஸ் பற்றிக் குறிப்பிடவில்லை. அதை ரீ-ஓபன் பண்ண வேண்டும், அஸெஸமெண்டை வைத்து, என்பதையும் சேர்த்து இவர்கள் பேசினுல் நன்ருக இருக்கும்.

திரு. இரெ. இளம்வழுதி : தந்நிலை விளக்கம் என்ற முறையில் கூட்டுறவு அமைச்சர் கொடுத்தார்கள். இன்கம்டாக்ஸ் விவகாரத்தைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பான குற்றச்சாட்டைச் சொன்னுர்கள் என்று நான் கருதவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எழுதின கடிதத்தில் இன்கம்-டாக்ஸ் விதித்ததில் தவருகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மினிஸ்ட்ரி ஆப் ஃபைனன்ஸ் சொல்லியிருக்கிறது. 1967-68 வரை கொடுக்க வேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. இன்வெஸ்டிகேஷன் இருக்கிறது. ஆகவே, இன்கம்டாக்ஸ் கிடையாது, ஒன்றும் கிடையாது என்று இவர் சொல்லுகிருர்களா?

திரு. இரெ. இளம்வழுதி : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ள வழக்கு பற்றி என்ன கருதுகிருர்கள் என்று தெரியவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கருதுவது நான் இல்லை, ஜட்ஜின் கருத்து, ஜட்ஜு கருதினர் கருத்திருமன் கருதவில்லை. அங்கத்தினர் வழக்கறிஞர், ஜட்ஜின் கருத்தைக் கவனிக்க வேண்டும்.

திரு. இரெ. இளம்வழுதி : நான் வழக்கறிஞர் என்ற முறையில் சொல்லுகிறேன், இவர்கள் வழக்கைச் சரியான முறையில் வாதாடவில்லை என்று. ஆதாரங்களை அள்ளித் தரவில்லை. பொதுவான முறையில் குற்றச்சாட்டைச் சொன்னுர்கள். கயிற்றில் நிறைய முடிச்சுக்கள் இருக்கின்றன என்ருல் அவற்றை முறையாக அவிழ்க்காமல், வெட்டியெடுத்துவிட்டு, 'பாருங்கள், பாருங்கள்' திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரை, என்று பொதுவாகக் குறிப்பிட்டார்கள். அவற்றைச் சற்று விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தால், அவருடைய வாதம் ஆதாரத்துடன் காட்டப்பட்டிருக்குமானுல், அவருடைய வாதத்தை தமிழ்நாட்டு மக்கள் ஏறக்குறைய வரவேற்றிருப்பார்கள். ஆனுல், அமைச்சர்கள் தெளிவான விளக்கங்களைக் கொடுத்திருக்கிருர்கள்.

அவர்கள் குறிப்பிடும்போது சொன்னுர்கள். அவருடைய முதல் குற்றச் சாட்டு என்ன?

"அண்மையில் நடைபெற்ற பஞ்சாயத்து தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகம் கட்சி சார்பிலே ஈடுபடவில்லையென்று சொல்லியிருந்தது. ஆனுல் நாளாக நாளாக கட்சி சார்பிலேதான் வேலை செய்தது. பின்பு இத்தனை பேர் கட்சி சார்பாக வெற்றி பெற்றிருக்கிருர்கள்" என்றெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசினுர்கள். அவர்களை நான் திருப்பிக் கேட்க முடியும். உங்களுடைய பெருந்தலைவர் காமராஜ்



V2.11.31 N70
31 N71.34
61494

1970 செப்டம்பர் 7] [திரு. இரெ. இளம்வழுதி]

அவர்கள் சேலம் மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும் பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன்னுல் சூருவளிச் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். ஒவ்வொரு இடத்திற்கும் சென்று பஞ்சாயத்து தேர்தலில் குறிப்பாக சிண்டிகேட் காங்கிரஸுக்காக பிரசாரம் செய்திருக்கிருர்கள். கட்சி சார்பற்றவர்களை, கட்சிக்காரர்களை ஆதரிக்க வேண்டுமென்று உங்களுடைய பெருந்தலைவர் சொல்ல வேண்டிய காரணம் என்ன? திராவிட முன்னேற்றக் கழகத்தை கட்சி ரீதியில் எதிர்க்க வேண்டுமென்று உங்கள் தலைவர் சொல்லக் காரணம் என்ன?

சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள் ஏதோ எண்ணிக் கொண்டிருக்கிருர்கள். தமிழ்நாட்டில் காற்று தங்கள் பக்கம் வீசுவதாகச் சொல்லிக்கொண்டு, அதன் அடிப்படையில் பஞ்சாயத்துத் தேர்தல்களைப்பற்றி களிப்பு அடைந்து கொண்டிருக்கிருர்கள். பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன்னுல் சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள் எத்தனை இடங்களில் இருந்தார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எத்தனை இடங்களில் இருந்தார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். பஞ்சாயத்து தேர்தலுக்கு முன்னுல் தமிழ்நாடு பூராவுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருபது பஞ்சாயத்து தலைவர்கள்தான் இருந்தார்கள். ஆனுல் காங்கிரஸ் கட்சிக்கு 300 பஞ்சாயத்து தலைவர்கள் இருந்தார்கள். பஞ்சாயத்து தேர்தலுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் 20 இடத்திலிருந்து கிட்டத்தட்ட 180 இடங்களைக் கைப்பற்றியிருக்கிறது. ஆனுல் 300 பேராக இருந்தவர்கள் 120-ஓ, 140-ஓ இடங்களைக் கைப்பற்றிருக்கிருர்கள். இதை வைத்துக்கொண்டு காங்கிரஸ்காரர்கள் மக்கள் மனதில் ஏதோ மாற்றம் கண்டுவிட்டமாதிரி பேசிவருகிருர்கள். இருபதாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை 180 இடங்கள் என்ற அளவிற்கு ஆதரித்திருக்கிருர்கள்.

உண்மை நிலையை ஆராய்ந்து பார்த்தால் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் திரும்பியிருக்கிருர்களா அல்லது காங்கிரசின் பக்கம் திரும்பியிருக்கிருர்களா என்பது நன்ருக விளங்கும். காங்கிரஸ்காரர்கள் இருந்த இடங்களை இழந்திருக்கிருர்கள். கழகத்தினர் இல்லாத இடங்களைப் பெற்றிருக்கிருர்கள். இதுதான் உண்மை நிலை. இதனுல்தானே என்னவோ, திரு. காமராஜ் அவர்கள் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்க வேண்டுமென்று மக்களை போகும் இடங்களில் எல்லாம் கேட்கிருர்கள். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன், நீங்கள் தேர்தலிலே கட்சியைக் காட்டி வேலை செய்தீர்கள், திராவிட முன்னேற்றக் கழகமும் கட்சியின் சார்பிலே வேலை செய்தது. ஆனுல் எங்களை மட்டும் குற்றம் சொல்லிப் பயன் இல்லை. உங்களுடைய பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள் என்ன சொன்னுர்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : திரு. காமராஜ் அவர்கள் என்ன சொன்னுர் என்பதைப்பற்றிப் பிரச்சினை இல்லை. உங்களுடைய மந்திரிகள் எல்லாம் ஊர் ஊராக டேரா போட்டு தேர்தல் வேலை நடத்தவில்லையா? அப்போதெல்லாம் நீங்கள் வாயடைத்திருந்தீர்களே, அது சரியா? (காங்கிரஸ் தரப்பில் சிரிப்பு)

திரு. இரெ. இளம்வழுதி: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு திரு. காமராஜ் தலைவர் இல்லையா? சிண்டிகேட் காங்கிரஸ் ஸுக்கும் அவர் தலைவர். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், சிண்டிகேட் காங்கிரஸ் தலைவராகிய காமராஜ் அவர்களின் கட்டளையை ஏற்று, கீழ்ப்படி கிறாரா, இல்லையா என்பதை அறிய வேண்டுகிறேன்.

திரு. பி. ஜீ. கருத்திருமன் : நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம், திரு. காமராஜ் அவர்கள் சிண்டிகேட்டுக்கும் தலைவர், இந்தியாவுக்கும் தலைவர். இந்த நாட்டிற்கே தலைவர். உங்களுக்கும், உங்கள் அப்பன், பாட்டனுக்கும் தலைவர் . . .

(ஆளும் கட்சித் தரப்பில் பல உறுப்பினர்கள் எழுந்து, 'காமராஜ் எங்களுக்குத் தலைவர் இல்லை' என்று உரத்த குரலில் சொன்னார்கள் (மணி யடிக்கப்பட்டது)

திரு. இரா. இளம்வழுதி : திரு. காமராஜ் அவர்கள் காங்கிரஸ் கட்சிக் காக பஞ்சாயத்துத் தேர்தலில் ஈடுபட்டாரா, இல்லையா? காங்கிரஸ்காரர்களுக்கு வேலை செய்தாரா, இல்லையா? அப்படி இருக்கும்போது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் அரசியல் ரீதியில் பஞ்சாயத்துத் தேர்தல்களில் வேலை செய்தது என்று குற்றம்சாட்டுவது அர்த்தமில்லாதது. அது வாதத்திற்கே இடமில்லாதது. திரு. காமராஜ் அவர்கள் காங்கிரஸ் கட்சிக் காக வேலை செய்தார்கள். அதேபோல் முன்னேற்றக் கழகத்திற்காக அமைச் சர்கள் போனார்கள். முன்னேற்றக் கழகம் செய்தால் மட்டும் கட்சிக் கலரா? திரு. காமராஜ் அவர்கள் தேர்தல் வேலைகளில் ஈடுபட்டபொழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் போய்த் தடுத்திருக்க வேண்டாமா? அப்படிச் செய்தாரா, இல்லையே. உங்களுடைய பெருந்தலைவர் அவர்கள் தேர்தல் வேலைகளில் ஈடுபட்ட போது, எதிர்க் கட்சித் தலைவர் போய்த் தடுத்திருக்க வேண்டுமா, வேண்டாமா? ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன குற்றச் சாட்டுக்களில் நீதி இல்லை, நியாயம் இல்லை. அவர்கள் சொன்ன குற்றச்சாட் டிற்கு ஆதாரம் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்னொரு உண்மையை உணர வேண்டும். 'சொல்வதை நாங்கள் செய்வோம், முன்னேற்றக் கழகம் சொன்னதைச் செய்கிறதா?' என்று கேட்டார்கள். நல்ல சட்டத்தை முன்னேற்றக் கழகம் நடைமுறையில் கொண்டு வருகிறது. காங்கிரஸ்காரர்கள், குறிப்பாக சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள் சொன்னதைச் செய்வது இல்லை.

திரு. பி. ஜீ. கருத்திருமன் : சொன்னதைச் செய்வோம் என்று சொன்னீர் களே, படி அரிசி நாடு பூராவிலும் போடுவோம் என்று சொன்னீர்களே, அப்படிச் செய்தீர்களா?

திரு. இரெ. இளம்வழுதி : உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அரிசியே கிடைக்கவில்லையென்பதை கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.





திரு. பி. ஜீ. கருத்திருமன் : அந்தக் கதையே எனக்கு வேண்டாம். நீங்கள் என்ன சொன்னீர்கள், 'லட்சியம் மூன்று படி, நிச்சயம் ஒரு படி' என்று சொன்னீர்களே, அப்படிச் செய்தீர்களா? கேட்ட கேள்விக்குப் பதில் கொடுங்கள்.

திரு. இரெ. இளம்வழுதி : படி அரிசித் திட்டம் நன்றாக நிறைவேறி இருக் கிறது. ஆரம்பகாலத்தில் நீங்கள், 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுத்தால், விவசாயினுடைய நிலைமை என்ன ஆகும் என்பதாக இந்த மன்றத்திலே பேசியிருக்கிறீர்களே?

திரு. பி. ஜீ. கருத்திருமன் : அப்படியானால், என்னுடைய கட்சிக்கு வந்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் இப்படி வார்த்தைக்கு வார்த்தை எழுந்து பேசினால் விவாதம் என்ன ஆவது?

திரு. இரெ. இளம்வழுதி : ராஜாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சலுகை களை ரத்து செய்ய வேண்டும் என்று பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது 'ஏழைகளுக்காக பாடுபடுகிறோம், ஜனநாயக சோஷலிசத்திற் காகப் பாடுபடுகிறோம்' என்று காமராஜ் அவர்களும் மற்றவர்களும் குடம் குடமாக தமிழ்நாட்டிலே இருந்து கொண்டு கண்ணீர் விடுகிறார்கள். ஆனால் பாராளுமன்றத்தில் இவர்கள்தான், ராஜாக்களுக்கு மானியத்தைக் கொடுக்க வேண்டுமென்று வாதாடியிருக்கிறார்கள்.

*      *      *
*      *      *

நான் சொன்னது திராவிட முன்னேற்றக் கழகம் பஞ்சாயத்து தேர்தலில் சொன்ன சொல்லை மீறி கட்சியாளர்களை ஆதரித்தது என்று சொன்னார்கள். சிண்டிகேட் காங்கிரஸ் காரர்களும் ஆதரித்தார்கள். அது ஒரு குற்றச்சாட்டாக ஆகாது. ஆனாலும் சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள்தான் கொள்கையை மீறிய காரியங்களைச்செய்து வருகிறார்கள் என்பதை ஆதார பூர்வமாச் சொல்கிறேன்.

பார்லிமென்ட் கட்சியில் அவர்களுடைய உறுப்பினர்களுடைய ஒரு பத்து அம்சத் திட்டம் இருக்கிறது. அதில் ஒரு அம்சம் அரச மானியத்தை ஒழிக்க வேண்டும் என்பதாகும். அரசர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகளை நீக்க வேண்டும் என்பதாகும். 'அப்படி நம்முடைய குறிப்பில் இருக்கிறதே' என்பதை அந்த நேரத்தில் ஒரு உறுப்பினர் எடுத்துக் காட்டியும், "அரசாங்கத்திற்குத் தொல்லை வரவேண்டும் என்ற அடிப்படையில் அரசர் மானியத்தை ஒழிக்கக் கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவை எதிர்க்க வேண்டும்" என்று சொல்லி காரியம் ஆற்றினார்கள்.

THIRU K. VINAYAGAM : Is it the no confidence motion that we are discussing here or are we speaking on the Privy Purses Abolition Bill? There is no relevance.

---

■ மாண்புமிகு பேரவைத்தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது கழகத்தினுடைய கொள்கைகளைப் பற்றிச்சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் உங்கள் கட்சியினுடைய கொள்கைகளைச் சொல்கிறார்களே தவிர, பாராளுமன்ற நிகழ்ச்சியைப் பற்றிஅல்ல.

**திரு. இரெ. இளம்வழுதி :** அதில் முக்கியமான கொள்கை ஸ்வதேச மன்னர் களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளில் ஒன்று அவர்கள் தனிக்கொடி வைத் துக்கொள்ளலாம் என்பது. சமஸ்தானங்கள் இல்லை. ராஜ்யங்கள் இல்லை. அவர்கள் ஆண்டுவந்த இடமே இல்லை. அவைகள் இந்திய யூனியனோடு இணைந்து மாநில கவர்னர்களின் கீழ் வந்துவிட்டது. மந்திரிசபை ஆட்சி புரிகிறது. ஆயினும் அவர்களுக்குத் தனிக்கொடி இருக்கிறது. அந்தத் தனிக்கொடியை சிண்டிகேட் காங்கிரஸ் எப்படி ஆதரிக்கிறது என்று தெரியவில்லை. அவர்களுக்கு அளிக்கப்பட்டுவந்த சலுகையை ஒழிக்க வேண்டுமென்ற மசோதாவை தங்களது கொள்கையைவிட்டும் எதிர்த்திருக்கிறார்கள்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் சொன்ன சொல்லை, கொண்ட கொள் கையை நல்லமுறையில் நிறைவேற்றி வருகிறது என்பதை அனைவரும் அறிவார் கள்.

நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்றொன்றைக் குறிப்பிட்டார்கள். மானமதுரை தகராறை எடுத்துச் சொல்லி, கொலை நடந்துவிட்டது, சம்பந்தப் பட்டவர்கள் சிண்டிகேட்காரர்கள் என்று சொல்கிறார்களே, ஐயஹோ" என்றார் கள். அந்தத் தேர்தல் தகராறு வழக்கில் கைதாகியிருப்பவர்களில் நான்கு பேரில் மூன்று பேர்கள் சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்படிப் பேசுவதைத்தான் நான் ஆட்சேபிக் கிறேன். கேஸ் விசாரணையில் இருக்கிறது. இது சப்ஜுடிஸ்.

**திரு. இரெ. இளம்வழுதி :** நான் அவர்களைக் குற்றவாளிகள் என்று முடிவு கட்டவில்லை. கொலையாளிகள் என்று பெயர் சூட்டவில்லை. கைதாகியிருக்கிற நான்கு பேர்களில் மூன்றுபேர் சிண்டிகேட் காங்கிரசைச் சேர்ந்தவர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படிச் சொல்வதைத்தான் நான் ஆட்சே பிக்கிறேன். முன்பு தீ வைத்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்றீர்கள். பத்திரி கையில் எல்லாம் வந்தது. கடைசியில் விசாரணையில் அது இல்லை என்றீர்கள். கட்சிபேதம் இல்லாது நடக்க வேண்டும்.

**திரு. இரெ. இளம்வழுதி :** கொலை செய்யப்பட்டவர் தி.மு.க. வினர்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மூன்று பேர் சிண்டிகேட் காரர்கள் என்று சொன்னதை குறிப்பில் இருந்து நீக்க வேண்டும்.

**திரு. இரெ. இளம்வழுதி :** நான் சொல்வது எல்லாம் கைதாகி இருக்கும் நான்கு பேர்களில் மூன்றுபேர்கள் சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள் என்பது தான்.

* * *

■ மாண்புமிகு பேரவைத்தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**திரு. இரெ. இளம்வழுதி :** கைது செய்யப்பட்டவர்களில் மூன்றுபேர் சிண்டி கேட் காங்கிரஸ்காரர்கள் என்று சொன்னதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே மறுக்கவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மறுப்பதற்கா இந்த இடம்? தயவு செய்து கட்சியைப் பற்றிப் பேச வேண்டாம் என்பது என் வேண்டுகோள்.

THIRU T. MARTIN : On a point of Order, Sir, The hon. Member is talking about a murder case. The previous Speaker Hon. Thiru S. B. Adityan, who is now a Minister, has already rendered a judgment that as soon as an FIR has been launched in Police Station, it attracts the rule 'sub judice.'. Therefore any reference about that matter should not be raised on the floor of the House. I want your ruling on that, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது உங்களுடைய ரூலிங்கா, அல்லது ஸ்பீக்கருடைய ரூலிங்கா, இந்தப் பேரவையில் முன்பு இருந்த பேரவைத் தலை வர்களுடைய தீர்ப்புக்களை எல்லாம் அடுத்த பேரவைத் தலைவர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இல்லை. சப்ஜுடிஸ் ஆக இருப்பதை விவாதிக்கக் கூடாது என்று விதிமுறை இருக்கிறது. ஆகவே பேரவையிலே தனியாகக் கொடுக்க வேண்டிய தேவையில்லை. ஆனால் எந்த அளவுக்கு சப்ஜுடிஸ் ஆக இருக்கும் என்பதை நான் கவனித்துக் கொண்டு வருகிறேன். பேசுகின்ற வழக்கைப் பற்றி வருகின்ற நேரத்தில் நான் நிறுத்தி விடுவேன். முந்தைய சபா நாயகர்களை இழுக்கத் தேவையில்லை.

**திரு. இரெ. இளம்வழுதி :** நான் எந்த வழக்கின் உள்ளேயும் சென்று குறிப் பிடவில்லை. அது மட்டுமல்ல தி.மு.க. தொண்டர் போகிற நேரத்திலே காங்கிரஸ்காரர்களால் படுகொலை செய்யப்பட்டார். (ஆரவாரம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காங்கிரஸ்காரர் என்பது வேண்டாம்.

**திரு. இரெ. இளம்வழுதி :** தி.மு.க. தொண்டர் படு கொலை செய்யப் பட்டார் என்றால் இந்த நாட்டின் நிலை என்ன என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பழைய நினைப்பிலே— 1967-க்கு முன்னாலே இருந்த நிலையிலே—தங்களுடைய ஆட்டங்களை எல்லாம் போடுகிறார்கள். (குறுக்கீடுகள்).

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சார், என்ன ஆட்டங்கள்?

(திரு. விநாயகம் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விநாயகம் நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கே. விநாயகம் :** தெருச் சண்டையா, நியாயம் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது விநாயகம் அவர்களுடைய ஆட்சேபனை என்ன? நீங்கள் மட்டும் சொல்லுங்கள்.

[1970 செப்டம்பர் 7

**திரு. கே. விநாயகம்:** பேசுவதை கொஞ்சம் குணமாகப் பேசவேண்டும் ஆட்சேபணை என்ன வென்றால் "நீங்கள் 1967 முந்தி இருந்த நினைவில் வைத்துக் கொண்டு இப்போது எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஆட்டம் போடுகிறீர்கள்" என்று சொன்னார்கள். அதற்கு என்ன பொருள்? சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தச் சொற்கள் எப்படி அன்பார்லிமெண்டரியான சொற்கள்.

**திரு. கே. விநாயகம்:** "ஆட்டம் போடுவது" என்று சொல்வது அன்பார்லிமெண்டரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "ஆட்டம் போடுவது" என்று சொல்வது அன்பார்லிமெண்டரி இல்லை. உங்களுடைய பழைய கால நிலை பழைய கொள்கைகளை விமரிசிக்கக் கூடாது என்று பேரவைத் தலைவர் யாருக்கும் தடை போட முடியாது. அவர்கள் கூறுவதற்கு உரிமை இருக்கிறது. முறை தவறி கேட்டார்களா என்று போர்க்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ரொம்ப நன்றி, இந்த முறையில் தீர்ப்புக் கொடுத்தற்கு ரொம்ப நன்றி.

**திரு. இரெ. இளம்வழுதி:** தலைவர் அவர்களே, என்பேச்சில் அடிக்கடி குறுக்குடுவதால் எனக்கு அதிக நேரம் ஒதுக்கி கொடுக்க வேண்டும். மாலையிலும் கொடுக்க வேண்டும். தி.மு.க. தொண்டர்கள் இப்போது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை விட்டுவிட்டு வேறு விஷயத்திற்கு வாருங்கள்.

**திரு. இரெ. இளம்வழுதி:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடும்போது சொன்னார்கள் காங்கிரஸ்காரர்கள் அமைச்சர்களை அணுகி ஏதாவது சிபாரிசு செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் தி. மு. க. காரர்கள் அமைச்சர்களை அணுகி ஏதாவது சிபாரிசு கேட்டால் குற்றம் என்று சொல்லுகிறார்கள். இது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். சிபாரிசுக்காக நாங்கள் சொல்லவில்லை. ரெப்ரசென்டேஷன் அமைச்சர்களிடத்திலே கொடுக்கத் தான் செல்லுகிறோம். சிபாரிசு வேறு, ரெப்ரசென்டேஷன் வேறு.

**திரு. இரெ. இளம்வழுதி:** அவர்கள் எவ்வளவு செய்தார்கள் என்பதை அமைச்சர்களைக் கேட்டால் நன்கு தெரியும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இது நிரூபிக்கப்பட வேண்டும். என்னென்ன செய்தார்கள் என்பதைச் சொல்ல வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி:** இவர் கடலூரில் என்னென்ன பண்ணினார் என்று கடலூரில் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இளம்வழுதி, ஏதாவது மோடிவ் குறித்துப் பேச வேண்டியது இல்லை. எதிர்க் கட்சிக்காரர்கள் அமைச்சர்களை அணுகி முறையீடுகள் செய்கிறார்கள், நாங்கள் போய் செய்வதிலே என்ன ஆட்சேபம் என்பதில் எந்தவித தவறும் இல்லை.



1970 செப்டம்பர் 7]

**திரு. ஆலடி அருணா:** எதிர் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, அவர்களை அணுகி என்னென்ன சலுகைகளை பெற்றிருக்கிறோம் என்று அவர்கள் நிரூபிக்கவேண்டும். இல்லையென்றால் நாங்கள் வெளிநடப்பு செய்வதைத் தவிர வேறு வழியில்லை. நாங்கள் லாபம் பெற்றோம் என்று சொல்லுகிறார்கள் அதை நிரூபிக்கவேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, எங்கள் வீடுகளைப் பாருங்கள், அவர் வீட்டைப் பாருங்கள். யாருக்கு லாபம் இருக்கிறது என்று தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அதற்கு ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள் என்றால் எந்த அளவுக்கு லாபம் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்வதிலே தனிப்பட்ட லாபமா இல்லையா என்பதுதான் குற்றச்சாட்டு. தனிப்பட்ட முறையில் லாபம் பெற்றார்கள் என்று நினைத்தால் அது தவறுதான். எதிர்க்கட்சிக்காரர்கள் செய்தாலும் ஆளும் கட்சிக்காரர்கள் செய்தாலும் பொதுமக்களுக்குச் செய்வதானால் தவறு இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, அவர்கள் நாங்கள் ஏதோ அமைச்சரிடத்திலே நிறைய சலுகைகள் பெற்றிருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படியெல்லாம் சொன்னால் நாங்கள் சபையிலே இருக்கவேண்டிய அவசியம் கூட இருக்காது. நாங்கள் எல்லாம் வெளியே போனபிறகு, நாங்கள் இல்லாத நேரத்திலே அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்ளட்டும். ஏன் என்றால் எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. என்னென்ன காரியத்திற்காக போனேன் என்று சொல்லவேண்டும். அப்படியானால் மந்திரிகளையும் குற்றம் சாட்டுவது ஆகும். பொது லாபங்களா என்று அவர்கள் சொல்லவேண்டும். ஆதாரத்துடன் டாக்குமென்டரி எவிடன்சுடன் சொல்லவேண்டும். கருத்திருமன் இந்த காரியத்திற்காக வந்தான் என்று சொல்லவேண்டும். லாபத்திற்காக சென்றேன் என்று எந்த அமைச்சராவது சொல்லட்டும். இது நிரூபிக்கப்படவேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, பல காரியங்களுக்காக வருகிறார்கள். நேர்மையான காரியங்களுக்கு, தவறான காரியங்களுக்காக அல்ல சுயலாபத்திற்காக அல்ல. சட்டமன்றத்தில் இந்தப் பக்கத்திலும் சரி அந்தப் பக்கத்திலும் சரி, வருகின்ற காரியங்களை சாதித்து விட்டால் அது லாபம்தான். அங்கத்தினர் அவர்கள் சுயலாபத்திற்கு என்று சொல்லியிருந்தால் அது தவறு தான். அவர் அப்படி சொல்லியிருக்கமாட்டார் என்று தான் எண்ணுகிறேன். அதை அவர்கள் தெளிவாகச் சொல்லவேண்டும். அதற்காக அவர்கள் வெளிநடப்பு செய்யவேண்டியதில்லை. எங்கள் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துவிட்டு நீங்கள் வெளியே போனால் அவ்வளவு நல்லது அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த பிறகு இப்படியெல்லாம் பேசி இவர்கள் போய்விட்டால் இஷ்டப்படி பேசிக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். நான் என்ன என்ன காரியங்களுக்கு போனேன், என்னென்ன சலுகைகள் பெற்றேன் என்று சொல்லவேண்டும்.

[1970 செப்டம்பர் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இல்லாவிட்டால் இவர்கள் என்னவெல்லாம் பேசிக்கொள்ளட்டும் என்று இவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்துவிடுவது நல்லது அல்ல. இரண்டு பக்கங்களில் உள்ள உறுப்பினர்களும் அமைச்சர்களை அணுகுவதில் தவறு இல்லை. ஆகையால் எந்நோக்கத்தில் இளம்வழுதி அவர்கள் சொன்னார்கள் என்பதை விளக்க வேண்டும். தனிப்பட்ட முறையிலே லாபம் சம்பாதித்தார் என்று சொல்லி இருப்பார்களானால் அது உண்மையிலேயே தவறு. இதை விளக்கவேண்டும்.

திரு. இரெ. இளம்வழுதி : தனிப்பட்ட முறையில் லாபம் சம்பாதித்ததாகச் சொல்லவில்லை. தி.மு.க. வைச் சேர்ந்த தொண்டர்கள் அல்லது சட்ட மன்ற உறுப்பினர்கள் சென்று அமைச்சர்களை அணுகினால் அதைப் பெரிய குற்றம் சாட்டி, வட்டச் செயலாளர் வந்தார், குட்டச் செயலாளர் போனார் என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்கள் இதைப் போல சென்று தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லிப் பல காரியங்களை சாதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது என்ன தவறு என்று எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட முறையிலே லாபம் பெற்றுக் கொண்டார்கள், தனிப்பட்ட முறையில் சலுகைகளைப் பெற்றுக் கொண்டார்கள் என்றால் சொல்ல வேண்டும்.

திரு. இரெ. இளம்வழுதி : அவசியம் இல்லை. நான் சொல்லவில்லை. அவசியம் இல்லை என்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தெளிவாக சொல்ல வேண்டும.

பிற்பகல் 1–30 திரு. இரெ. இளம்வழுதி : என்னுடைய பேச்சிலே தனிப்பட்ட முறையிலே யாருக்காவது கொஞ்சம் கஷ்டம் இருக்குமானால் நான் அப்படிப் பேசவில்லை நான் பேசியது பொதுவாக.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய காலை விவாதம் இத்துடன் முடிவுற்றது. அடுத்து பேரவைக்கோர் அறிவிப்பு.

### (2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே அறிவித்தபடி பேரவை இன்று மாலை 4 மணிமுதல் கூடி நம்பிக்கையின்மை, கண்டனத் தீர்மானங்கள் மீதான விவாதத்தைத் தொடரும்.

வழக்கம்போல பேரவை நாளை, 8—9—1970 அன்று காலை 9 மணிக்குக் கூடி நம்பிக்கையின்மை, கண்டனத் தீர்மானங்கள் மீதான விவாதத்தைத் தொடரும்.

நாளை, 8—9—1970 அன்று பேரவை மாலையும் 4 மணி அளவில் கூடி பின்வரும் கண்ட மசோதாக்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் :—

(1) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள்கள் அங்காடிகள் (திருத்தம் தீர்வை செல்திறன் ஆக்குதல்) மசோதா.



1970 செப்டம்பர் 7] [பேரவைத் தலைவர்]

(2) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள்கள் (இரண்டாம் திருத்த) மசோதா.

(3) தமிழ்நாடு 1970 ம் ஆண்டு மோட்டார் வண்டிகளைக் கேட்டுப் பெறுதல் மசோதா.

### அரசினர் தீர்மானங்கள்.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று மீண்டும் பேரவை மாலை 4-00 மணிக்குக் கூடும்.

**பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.** பிற்பகல் 1–32

### 7. அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்— தொடர்ச்சி

### (இடைவேளைக்குப் பின்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமையில் பேரவை மாலை 4-00 மணி அளவில் மீண்டும் கூடியது.

திரு. இரெ. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, காலையில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தம்முடைய தீர்மானத்தின் மீது பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஏதாவதொரு துப்பாக்கிச் சூடு நடந்து, அதன் மீது நீதி விசாரணை செய்யும் நிலைமை ஏற்பட்டால், அந்த நீதி விசாரணை கூடப் பிரயோசனம் இல்லை. மக்கள்தான் நீதி வழங்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். நான் ஒரே ஒரு கருத்தைமட்டும் சொல்ல விரும்புகிறேன். கோவை மாவட்டத்தில் விவசாய சங்கத்தினர் போராடியபோது, பெருமாநல்லூர்த் துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டு, அதன் காரணமாக மூன்று பேர்கள் உயிரிழந்ததை நாம் அறிவோம். அது விஷயமாக விவசாய சங்கத்தினரும் தமிழ்நாட்டிலுள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் நீதி விசாரணை வேண்டும் என்று கேட்டார்கள். உடனடியாக ஒரு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியை விசாரணைக் கமிஷனாக அரசு நியமித்து அங்கே நீதி விசாரணை நடந்தது.

நீதி விசாரணை நடக்கும்போது விவசாய சங்கத்தின் சார்பில் வழக்கறிஞர்களும், பொதுமக்கள் சார்பில் வழக்கறிஞர்களும், சில அரசியல் கட்சிகள் சார்பில் வழக்கறிஞர்களும், அரசாங்க சார்பில் வழக்கறிஞர்களும் அன்று விசாரணையில் கலந்து கொண்டார்கள். ஆனால், விசாரணை செய்த நீதிபதி, துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இடத்திற்கு நேரிலே போய்ப் பார்த்தவுடன், அந்த விசாரணையில் அதுவரை கலந்துகொண்டிருந்த விவசாய சங்கத்திற்காக வாதாடிய வழக்கறிஞர்கள் அந்த விசாரணையிலிருந்து விலகி விடுவதாக அறிவித்துவிட்டு, அவர்கள் மேற்கொண்டு விசாரணையில் கலந்து கொள்ளவில்லை. அதனுடைய அடிப்படைக் காரணம் என்ன என்பதை நாம் ஆலோசிக்க வேண்டும். நீதி விசாரணை கேட்டு, அதற்காக ஒரு நீதிபதியை நியமித்து, அந்த நீதிபதி அதற்கான முறையில் விசாரணை நடத்திக் கொண்டிருந்து, கடைசியாக, துப்பாக்கிச்சூடு நடைபெற்ற இடத்திற்குச் சென்று பார்க்கும்பொழுது விவசாய சங்கத்தைச் சார்ந்த வழக்கறிஞர்கள், "நாங்கள் இனிமேல் இந்த நீதி விசாரணையில் கலந்துகொள்ளமாட்டோம்" என்று வெளியேறியதற்குக் காரணம் என்ன, வெளியேறவேண்டிய அவசியம் என்ன என்பதை நீங்கள் உணரவேண்டும். துப்பாக்கிச்சூடு நடந்த இடமும், விவசாய சங்கத்தைச்

சார்ந்த வழக்கறிஞர்கள் ஆரம்பத்திலே கொடுத்துவந்த கருத்தும் மாறுபட்டு இருந்தது. விவசாய சங்கம் தான்—அதைச் சார்ந்தவர்கள்தான்—தவறுதலாக நடந்துவிட்டார்கள், ஆகையால்தான் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது என்று எங்கே ஒருவேளை விசாரணை கமிஷன் தீர்ப்பளித்துவிடுமோ என்று பயந்து, நடுவிலே விசாரணை முடியாத நேரத்திலேயே வழக்கறிஞர்கள் விலகிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், அன்றுட நிர்வாகத்தில் போலீஸ ஸ்டேஷனில் நடக்கும் காரியங்களை எடுத்து நம்முடைய சட்ட மன்றத்தில் அடிக்கடி பேசுகிறார்கள், எதிர்க்கட்சிக்காரர்கள்; வெளியிலேயும் அவர்கள் பேசுகிறார்கள். இங்கே பேசும் போது, அண்மையில் தஞ்சை மாவட்டத்தில் ஜமீலா என்ற பெண் போலீஸ் ஸ்டேஷனிலே வைக்கப்பட்டு, அங்கு ஏதோ ஒரு காரியம் நடந்து, பிறகு ஆஸ்பத்திரிக்குச் சென்று மரணம் அடைந்து, அதுபற்றி விசாரணை செய்ய வேண்டும் என்ற முறையில் பொதுமக்களுடைய கோரிக்கை அங்கே வந்ததை நாம் பார்த்தோம். ஆனால், நான் ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். போலீஸ்காரர்கள், போலீஸ் உத்தியோகத்திற்குரிய தங்கள் அதிகாரத்தை வைத்துக்கொண்டு, தனிப்பட்ட முறையில் வீக்னெஸ் ஆப் ஆன் இன்டிவிஜுவல் ஹ்யூன் பீலிங்' என்று சொல்லக்கூடிய தன்மையில், ஒரு மனிதனுக்கு ஏற்பட்ட பலவீனத்தின் காரணமாக ஏதாவது தவறுகள் நடைபெறுமானால், அந்தத் தவறுகள் அரசாங்கத்தை எப்படிச் சாரும் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு அரசாங்க அதிகாரி லஞ்சம் வாங்குகிறார் என்றால், லஞ்சம் வாங்கும் அதிகாரியைக் கண்டுபிடித்து அந்த அதிகாரியின்மீது வழக்கு தொடர்ந்து கோர்ட் வரைக்கும் அந்த அதிகாரியை நாங்கள் அனுப்புகிறோம். குற்றம் நிரூபிக்கப்பட்டால் அதிகாரிக்குத் தண்டனை கிடைக்கிறது. அப்படி ஒரு அதிகாரி லஞ்சம் வாங்கினார் என்றால், அவருடைய அந்தச் செயலுக்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இருக்கிறது என்று எந்த முறையில் சொல்ல முடியும்? அதுபோல்தான், போலீஸ் ஸ்டேஷனில் தனிப்பட்ட முறையில் ஏதாவதொரு இன்ஸ்பெக்டரோ சப்-இன்ஸ்பெக்டரோ தவறு செய்தால் அது அரசாணைக்கு எந்தவிதத்தில் தொடர்புடையது என்று தெரியவில்லை.

அதுமட்டுமல்லாமல், அப்படித் தனிப்பட்ட முறையில் தவறுநடைபெறுமானால் உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து அந்த அதிகாரிகளை ஸஸ்பெண்டு செய்வதை நாம் பார்த்து வருகிறோம். ஆனால், காங்கிரஸ் நண்பர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில், நம்முடைய பேரவையில் இன்றைய உறுப்பினர் திரு. மா. இராசங்கம் அவர்கள் ஏதோ ஒரு வழக்கில் அகப்பட்டுக்கொண்டார் என்று சொல்லி, அவரைக் கொண்டுபோய்ப் போலீஸ ஸ்டேஷனுக்குள்ளே வைத்து, அவரை அடித்து, எலெக்டரிக் ஷாக் கொடுத்து, அவருக்குப் பலவிதமான தொந்தரவுகள் கொடுத்தார்கள். அந்த நேரத்தில், இப்பொழுது சட்ட அமைச்சராக இருக்கும் திரு. மாதவன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை இதே மன்றத்தில் எடுத்து வைத்தார்கள். சட்டமன்ற உறுப்பினரொருவருக்கு போலீஸ் ஸ்டேஷனில் இவ்வளவு பயங்கரமான சூழ்நிலை இருக்கிறது, அது சட்டமன்ற உறுப்பினரின் உரிமையைப் பாதிக்கிறது, ஆகையால் இந்தப் போலீஸ்காரருடைய அத்துமீறிய நடவடிக்கைகளை அரசாங்கம் கண்காணிக்கவேண்டும், கவனிக்கவேண்டும், நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்ன நேரத்தில், அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு பக்தவத்சலம் அவர்கள் ஒரே ஒரு வரியில் சொன்னார்கள், 'அது நமக்கு சம்பந்தம் இல்லாத காரியம்' என்று.



போலீஸ் ஸ்டேஷனில் எம். எல். ஏ. யை வைத்து அந்தக் காலத்தில் அடித்தார்கள். என்றாலும், அதற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று அப்பொழுது சொல்லிவிட்டார்கள். அப்படியிருக்க போலீஸ் ஸ்டேஷனில் ஏதோ ஒரு போலீஸ்காரருடைய 'வீக்னெஸ்' காரணமாக, பலவீனத்தின் காரணமாக, தனிப்பட்ட முறையில் ஏதாவது குற்றம் செய்தால் அந்தக் குற்றத்தை அரசாங்கத்தோடு இணைத்து, இந்த அரசாங்கம் செய்கிறது, இந்த அரசாங்கம் போலீஸ் செய்கிறது என்று குற்றஞ்சாட்டுவது எந்த முறையில் நியாயம் என்பது எனக்குப் புரியவில்லை.

1967-ம் ஆண்டுக்கு முன்னால், எத்தனையோ போலீஸ் ஸ்டேஷன்களில், லாக் அப்பில் இருந்த எத்தனையோ கைதிகள் மரணம் அடைந்திருக்கிறார்கள். எத்தனையோ விசாரணைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. எத்தனையோ போலீஸ் அதிகாரிகள் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகையால்தான் இப்படித் தனிப்பட்ட பிரச்சினைகளை எடுத்து அரசாங்கத்தோடு இணைப்பது நியாயமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

காங்கிரஸ் நண்பர்கள் சொல்லலாம், நாங்கள் ஏராளமான குற்றச் சாட்டுக்களைச் சொல்லுகிறோம், அவற்றுக்கு அரசாங்கம் பதில் சொல்லவில்லை என்று. ஏராளமான குற்றச்சாட்டுக்களை, கேவலமான வழியில் பத்திரிகைகளில் எழுதுகிறார்கள். தமிழ்நாட்டில் காங்கிரஸ்காரர்கள் நடத்துகிற பல பத்திரிகைகள், அரசாங்கத்தில் இருக்கும் அதிகாரிகளைப்பற்றியும், அமைச்சரவையைப்பற்றியும், திராவிட முன்னேற்றக்கழகத்தாரைப் பற்றியும் கேவலமாக எழுதி மஞ்சள் பத்திரிகைத் தரத்தில் பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகிறார்கள். இந்த அரசாங்கத்தைப் பாதிக்கப்படுகிற நேரத்தில், கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்கிறார்கள். கோர்ட்டில் நடைபெறுகிற வழக்கில், தவறாக எழுதுகிற காங்கிரஸ் பத்திரிகைக்காரர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கிறார்கள்; அபராதம் போடுகிறார்கள். சிறைத்தண்டனை விதிக்கப்பட்டும், அபராதம் போடப்பட்டும், மறுபடியும் காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள், நாங்கள் அப்படியேதான் எழுதுவோம், அப்படியேதான் செய்வோம், நீங்கள் யாரும் கண்டிக்க முடியாது என்று.

மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் திரு. கருத்திருமன் அவர்களோடு இருக்கும் கட்சிக்காரர்கள் காங்கிரஸ் கொள்கைகளைப் பரப்புகிறவர்கள் காங்கிரஸ் கட்சிக்காக தாங்கள்தான் உயிர்மூச்சாக இருப்பதாக நினைத்து அந்தனை பேரும் எழுதுகிற வாசகங்களை, எழுத்துக்களைப் பார்க்க வேண்டும். பல வழக்குகளில் தண்டிக்கப்படுகிறார்கள். தண்டனையடைந்து வந்தவுடனாவதாவது காங்கிரஸ் பெருந்தலைவர்கள், காங்கிரஸ் கட்சியில் இருக்கும், ஆரோக்கியமான அரசியலை நடத்தவேண்டும் என்றுவிரும்புகிற நல்ல தலைவர்கள் இதைக் கண்டித்தார்களா? பலவிதமாக எழுதியதற்கு கோர்ட்டால் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டு, அதை அவர்கள் அனுபவித்துவிட்டு வந்தாலும், அவர்கள் மாற்றிக்கொள்வதில்லை. கோர்ட்டில் தீர்ப்பளித்திருப்பதைக் கருத்தில்கொண்டு அப்படி எழுதும் பத்திரிகைகள் திருத்திக்கொள்ளவேண்டும் என்று யாராவது கண்டித்திருக்கிறார்களா? இல்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு, சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்கும் முறையில் எப்படிப்பட்ட காரியமாற்ற வேண்டும், என்ன என்ன

முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று யோசனை செய்து, நல்ல நல்ல காரியங்களைச் செய்கிறது. காங்கிரஸ் கட்சியில் உள்ள பல பேர் ஜெயிலுக்குப் போகிறார்கள். ஜெயிலுக்குப் போகிற நேரத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் உரையை முடித்துவிட வேண்டும்.

**திரு. இரெ. இளம்வழுதி :** காங்கிரஸ் நண்பர்கள் இப்படித் தரக்குறைவாக எழுதி, தாறுமாறாக எழுதி, கேவலமான வார்த்தைகளை எழுதி, கடைசியில் சிறைச்சாலைக்குப் போகிறார்கள். அவர்களைச் சிறைச்சாலைக்குத் திராவிட முன்னேற்றக் கழகமா அனுப்புகிறது? திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களா அவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்புகிறார்கள்? வழக்குமன்றங்களில் நீதிபதிகளின் விசாரணை முடிந்து, இப்படிச் சொல்வது தவறு, இது மான நஷ்டத்தை உண்டாக்குகிறது, இது உண்மைக்குப் புறம்பாக இருக்கிறது, இது தேவையில்லாதது என்று சொல்லி அந்தப் பத்திரிகை ஆசிரியர்களைச் சிறைச்சாலைகளுக்கு அனுப்பும் நேரத்தில், தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன், நல்ல உள்ளம் படைத்தவர்களே நீங்கள் இதிலே என்ன செய்திருக்கிறீர்கள்? அப்படி எழுதுவது நீடித்துக்கொண்டு போகிறதே அதைத் தடுத்திருக்கிறீர்களா? திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கும் காங்கிரஸ்காரர்கள், ஏன் மாறுபாடான கருத்துக்களைத் தெரிவிக்கிறீர்கள் என்று சொல்லி அவர்களைத் தடுக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். நிலப்பறி இயக்கத்தின்போது அருமை கம்யூனிஸ்ட் நண்பர்கள் போராட்டத்தில் ஈடுபடப் போகிறார்கள் என்பதற்காக, ஏராளமானபேர்கள் கைது செய்யப்பட்ட நேரத்தில், அவர்கள் தலைவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் "ஹேபியஸ் கார்ப்பஸ்" மனு தாக்கல் செய்தார்கள். அதற்கு நீதிபதிகள் நல்ல தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். கைது செய்தது கெட்ட நோக்கத்துடன் அல்ல, கைது செய்தது சட்டம், அமைதியைக் காப்பாற்றுவதற்காகத்தான். கைது செய்தது தமிழ் நாட்டிலே இவர்கள் ஒரு காரியம் செய்ய இருந்ததைக் தடுக்கும் முறையிலே போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், ஆகவே, போலீசார் எடுத்த நடவடிக்கை, முதலிலேயே கைது செய்த நடவடிக்கை, அப்படிக் கைது செய்யப்பட்டவர்கள் 12,000 பேர்களாகயிருந்தாலும் பாவாயில்லை, அந்த நடவடிக்கை நியாயமானதுதான், அந்தக் குற்றங்களைக் காட்டி, பலவிதமான குற்றங்களைக் காட்டி கைது செய்திருக்கிறார்கள். அது நியாயம்தான் என்று "ஹேபியஸ் கார்ப்பஸ்" மனுவை உயர்நீதிமன்றம் தள்ளியிருக்கிறது.

நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், முன்னேற்றக் கழகம் செய்த எந்தக் காரியமும் நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, நாட்டிற்கு நல்லாட்சி தேவை என்ற அடிப்படையிலே, முன்னேற்றக் கழகத்தின் வழிகாட்டி பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அருமையான தத்துவத்தின் அடிப்படையில் ஆட்சி நடக்கிறது. அதைக்காண மனம்பொறாத காங்கிரஸ்காரர்கள், ஏதேதோ சொல்லி, நம்மீது சேற்றைவாரி இறைக்கிறார்கள், கல்லை வாரி எறிகிறார்கள். காங்கிரஸ் நண்பர்களுக்கு நான்



சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், கண்ணாடி வீட்டிலேயிருந்துகொண்டு கல்லை விட்டெறியாதீர்கள், ஜாக்கிரதையாக இருங்கள். அப்படிக் கல்லையெறிந்தால் அது திரும்ப உங்கள் வீட்டையே வந்து தாக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு ஒரு பெரிய ஷாக் ட்ரீட்மெண்ட் இருந்தது. அவர்கள் தங்களோடு இடது சாரி கம்யூனிஸ்டுகள், வலது சாரி கம்யூனிஸ்டுகள், ச.சோ., பி.சோ., ஆதரிப்பார்கள் என்ற கருத்துப்படச் சொன்னார்கள். ஆனால் இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள், நோ கான்பிடென்ஸ் மோஷனுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை, அதை நாங்கள் ஆதரிக்கவில்லை, நாங்கள் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு ஷாக் ஒன்றைக் கொடுத்தார்கள்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள், பி. எஸ். பி., தலைவரைப்பார்த்து, எங்களிடம் கெஞ்சினீர்கள், நாங்கள் உங்களை ஆதரித்தோம் என்று சொல்வதுபோல் கூறினார்கள். நான் பி. எஸ். பி., தலைவரின் ராஜதந்திரத்தைப் பாராட்டுகிறேன். ஏதோ சொல்லி காங்கிரஸ்காரர்களின் ஆதரவைப் பெற்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்துவிட்டார்கள். காங்கிரஸ்காரர்கள் ஏமாந்து அந்தத் தீர்மானத்தை ஆதரித்துவிட்டார்கள். அவர்களுக்குத் தெரியும், தாங்கள் நோ கான்பிடன்ஸ் மோஷன் கொண்டு வரப்போகிறோம் என்று. இருந்தாலும் பி. எஸ். பி., விரித்த வலையில் விழுந்துவிட்டார்கள். பி. எஸ். பி., எஸ். எஸ். பி., கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் காங்கிரஸ் தலைவரை தங்களுடைய வலையிலே இழுத்துவிட்டார்கள்.

ஆகவே, அருமையான திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையின்மீது காங்கிரஸ் தலைவர்கள் இல்லாததும் பொல்லாததும் சொல்லி, தமிழ்நாட்டில் ஒரு தவறான எண்ணத்தை உண்டாக்க வேண்டுமென்று முனைகிறார்கள். அந்த முறையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருஷவாரி உற்சவம்போல் இருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசுவதும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்தச் சட்டமன்றம் நிராகரிப்பதுமாக இருந்தும், அவர்கள் அதை நிறுத்துவதில்லை, அதைப்போல் இங்கே வழக்கம்போல் நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், வழக்கம்போல் இந்தத் தீர்மானம் நிராகரிக்கப்பட இருக்கிறது. எனவே, நான் இந்தத் தீர்மானத்தை வன்மையாக எதிர்க்கிறேன், அதே நேரத்தில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் கொண்டு வந்திருக்கும் கண்டனத் தீர்மானத்தையும் எதிர்த்து, இரண்டு தீர்மானங்களையும் நிராகரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்படியான நேரத்திலே, என்னமோ அவர்கள் தயவை நாடித்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தோம் என்னும் பொருள்படப் பேசினார்கள். ஒருவர் தயவும் இல்லாமல் இந்தச் சட்டசபையிலே கொண்டு வருவதற்குச் சக்தியிருக்கிறது, திறமையிருக்கிறது, எல்லாம் இருக்கிறது. ஆகையால் மக்கள் அறிந்து கொள்ளுவார்கள். யார் தயவினாலே இந்தத் தீர்மானம்

வந்தது என்று அறிந்துகொள்ளுவார்கள். ஓட்டுக்கு வரும் நேரத்தில் பார்ப்போம். யார் நன்றியுடையவர்கள், யார் நல்லவர்கள், கெட்டவர்கள் என்பதைப் பார்த்துக்கொள்ளலாம்.

DR. H. V. HANDE: Hon. Mr. Speaker, we have in front of us two motions; one is the no-confidence motion moved by the Hon. Leader of the Opposition, and the other is the 'Censure Motion' moved by deputy leader of the Communist Party (Marxist) Mr. Sankariah. At the outset I want to assure the House and I want to make it clear that we totally disassociate ourselves from the censure motion moved by Mr. Sankariah, because we completely differ from the ideology and reasons with which he has brought forward this censure motion.

With regard to the 'no-confidence motion' I feel that it is unfortunate and irrelevant that at this time of the political state of the country, the Congress Party in the State has brought in a motion. I feel that they have brought this at an inopportune time. Just for argument's sake if this no-confidence motion is passed, is the Congress in a position to form a Ministry here? Surely not. Though I agree with some points the Hon. Leader of the Opposition has mentioned emphaticaly in his speech, I do not agree with the 'no-confidence motion'. I think it is irrelevant.

I shall only make reference to some points. There is the allegation of corruption. I want to stress this point clearly since unfortunately wherever you go there is this cry of corruption. It is being talked of by people in season and out of season. It does not speak well of any Government. There may be one or two blacksheep here and there but there cannot be widespread talk of corruption everywhere. I cannot understand how this talk can go on everywhere. The other day I had been to Trichy and the Press correspondent and even some members of the public asked me this question; 'How is it you are tolerating so much corruption in the rank and file of the ruling party and administration'? I asked them to furnish me with certain details. I was given the reply 'You know the difficulties of furnishing details. We will be taken to task'. There is the point that there is widespread corruption. If it is said that there is widespread corruption and people are talking about it, it is not as if I am making an unnecessary criticism against D.M.K. We have to take note of what people say.

I can give one or two examples. The other day I had been to Coimbatore and I have got some information which I am placing before the Hon. Chief Minister in the hope he will give it proper consideration. There is the Municipality of Coimbatore. A number of persons have come and complained that the Municipality is not functioning properly. There is now a Special Officer in charge of the administration. There is no Municipal Council now but only a Special Officer. They have put some of these things



in 'auction'. Through the ஏலம் of market, cart stand, lorry stand, etc., the municipality gets income. I have now got a list of losses suffered by the Municipality this year, due to this auction, as compared to last year.

With regard to Pannerselvem market, last year Rs. 74,999 was got as against Rs. 66,012 this year. With regard to Kumaran market, the income of last year, by auction, was Rs. 1,32,000. It is Rs. 83,500 this year. For Kumaran market cart stand, the income of last year was Rs. 1,32,000 and it is Rs. 84,500 this year. There is a loss of Rs. 48,000. For Ukkadam lorry stand, the loss is Rs. 32,973. For 'Tyagi Kumaran Cycle Stand' the loss is Rs. 1,800. The colossal loss is on 'drainage pits'. Last year the income was Rs. 4,12,352 and this year the income is only Rs. 2,03,760. There is a loss of Rs. 2,08,592. I asked one of my friends. 'To whom do you attribute this loss?" Could you furnish me the information' I asked. I understand that the Special Officer running the Municipality is having some shady transactions. Municipal Council has no voice now. There is the Special Officer. He is the one who is administering. We must be given the full picture. I am requesting the Hon. Chief Minister that he must do something in this regard, to see that corruption is wiped out. I want the Government to make the necessary investigation to find out how this had taken place and so much loss had been incurred. Unless investigation is done, we cannot have the full picture.

Sir, I had been to Tiruchi sometime ago and there the press people asked why I am supporting the Government on several issues when the Government are committing several mistakes and how is it that I am watching the misdeeds of the Government like Thirutharashtra watching the misdeeds of his sons.

In this connection, I have to point out that the D.M.K. partymen had enacted a drama there and the Hon. Chief Minister also was asked about it when he had been there last week. The local Members of the D.M.K. Party have been in charge of that drama and a lot of corruption was going on there. I request the Hon. Chief Minister to look into this matter and see that corruption is wiped out by taking stringent steps against the concerned persons, whether they are Ministers or High officials or low officials.

Then I come to the Cooum business. It is a good project on paper but what has happened? It has given rise to a number of scandals, about which the Hon. Leader of the Opposition has also referred. I do not want to go into the merits or demerits of it. Now, the point is that engineers have prepared some slabs in cement and 'choonambu'. These slabs had just been kept loosely on the banks of the Canal and consequently when the rains came all those slabs had fallen. Thousands and lakhs of rupees spent on them have been wiped out. Whose money is this? This

is the tax-payers' money. Wastage of funds like this have been pointed out by the Public Accounts Committee and their reports should be given priority and seriously considered.

Usually the Government, whether it is the previous Government, or the present Government, have got the habit of defending their action even if it is wrong. For instance, the other day the Hon. the Leader of the Opposition made an accusation against the action of the Government and that they were responsible for it, the Government tried to defend it. If it is a valid point, they can pull up the officers concerned.

Now the point is that in the case of the slabs, there is not enough cement in it and so they have fallen. Is this the way to spend money on such things ? So, I suggest that the Cooum business should be thoroughly investigated and that a Commission be appointed to go into the various aspects of the matter including the one raised by the Hon. the Leader of the Opposition so that like Caesar's wife, the Government could be above suspicion.

Then, I come to public health. Regarding this matter different statements had been made by the Hon. the Leader of the Opposition and the Hon. Minister for Finance and at that time I also pointed out the discrepancy in the matter. The Fourth Five-Year Plan was held up for about $2\frac{1}{2}$ years and in another $2\frac{1}{2}$ years it would be over. The Hon. Minister has stated that they are going to have one more medical college. When the students came and represented to him about this matter, he had stated that they would not open it. It is something like playing to the galleries. Be very clear and be very firm in regard to such matters.

With regard to the food problem also, different statements were made by the Hon. Minister for Finance and the Hon. Minister for Food. Let there be clarity in their thoughts and let them make a clear statement after holding a Cabinet meeting.

Then I come to the strike of House Surgeons. I unsuccessfully tried to bring the matter before this House in the morning. The Hon. Minister has made a statement that the doctors are not prepared to serve in Primary Health Centres even though there are better opportunities there. I have got a clear proof to show that the statement of the Hon. Minister is not correct. One Thiru Srinivasagopalan, who is the Assistant Director of Health Services has sent a number of letters to those who wanted application forms for the jobs in the Primary Health Centre. In those letters he had stated that no application form could be sent as there was no vacancy at all. Those letters have been produced to me and when such is the case, how can the Hon. Minister say that they are not prepared to serve in Primary Health Centres?



Another argument of the Hon. Minister is that the 250 vacancies in the Primary Health Centres are meant for lady doctors who will be in charge of Loop Insertion Programme . . . . . .

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி*** : ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தத்தைப் பொறுத்தவரை இன்று ஒரு மணி அளவில் என்னையும், சுகாதார அமைச்சர் நாவலர் அவர்களையும் வந்து சந்தித்து அவர்களுடைய முறையீடுகளை எடுத்துச் சொன்னார்கள். இதற்கு முன்பே அவர்கள் சுகாதார அமைச்சர் அவர்களைச் சந்தித்தார்கள், அப்போதும் நல்ல விளக்கங்களை சுகாதார அமைச்சர் அவர்கள் தந்தார்கள். இன்றைக்கும் அவர்கள் முறையீட்டைக் கேட்டு ஆவன செய்வதாக வாக்களித்த பிறகு அவர்கள் தங்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : I am very happy to hear that pleasant thing. I would only make a practical suggestion. This loop-insertion programme is only 1/100th or 1/200th of the work that a Primary Health Centre has got to do and so in all primary health centre where women doctors are not forth-coming the Government can appoint men doctors. Whenever a loop insertion has to be done, the women doctors employed in nearby Centres—say about 25 miles—could attend to this work and the concerned patients could be asked to go there for loop insertion. So, we need not wait for the women doctors to be employed in every Centre. 99 per cent of the work done in the Primary Health Centre, the men doctors can do. This is a practical suggestion and I want the Hon. Chief Minister to take it up for consideration.

With regard to the educational policy, I am very sorry to say that it is in a very bad way and it is in a great mess. They say that the policy of the Government is to progressively bring in Tamil medium and remove the English medium. But what is the wish of the parents ? Are we not entitled to know the wish of the parents—father and mother—and the students. As responsible Members of the Opposition during 1962–67 we know how the Congress Party had always given consideration to the wishes of the students. But you have never cared to look after the wishes of the students. You have adopted a dogmatic approach in regard to this matter and you have your pet philosophy and theories. You want to project your theories on the students, and compel them to study in the Tamil medium. You must not compel students and you must see what is in their mind and you must take them along with you.

Therefore, I beseech you on behalf of the Swatantra Party that you must take into consideration the wishes of the parents, and students whether it is with regard to medium of instruction or syllabus. Now, a large number of students take to Tamil medium by compulsion. If they do not take to it, they cannot study P.U.C.

Even in the morning I referred to the fact that Harijan students were given only 16 per cent of the seats and that they were asked to take to Tamil medium. So far as the English

[Dr. H. V. Hande]

[1970 செப்டம்பர் 7

medium is concerned, they are given only 8 per cent representation. Whether a person is Harijan or a poor person or a rich person, he should not be prevented from taking the English medium. Therefore, I say give them full freedom to take English medium or Tamil medium.

In this connection I wish to refer to the statement made the other day by the Hon. Minister that the medical graduates could go to Uttar Pradesh. How can they go there as they do not know Hindi? We have adopted the two-language formula and now we want to do away with English and have only Tamil. Then it will become one-language formula. Therefore, I beseech this Government not to be too rigid with regard to their dogmatism and ideal, and see that they cater to the requirements of the students.

மாலை4-30 With regard to text-books, I am sorry there has been a mess, a mess on two fronts. Text-books have not been properly printed. They have not come in time. It is said that they have Rs. 1 crore project and material and machinery have not come. I do not know when they will come. God only knows when they are going to get the machinery. Small enterpreneurs have been ruined. Big entrepreneurs have been given opportunities to print (in the name of social justice) and neither they have done it properly nor have they allowed small enterpreneurs to enter the field. What is the result? The poor boys have not got the textbooks in time. That is one aspect of the case.

The introduction of political ideology in the text-books is another thing which the Swanthantra Party abhors. We are totally against it. I beseech with all emphasis at my command "for God's sake, don't infuse political ideology, or politics in text books". I have got a number of details here wherein such a thing has been done. Seventh standard non-detailed book printed by 'Pari Nilayam', authors Andimadan and K. N. Ramachandran. A number of points are there infusing politics, political ideology. On page 69 there is reference about E.V.R.'s marriage with somebody, birth of D.M.K. Party, etc. I can read a number of instances. On page 71 is given the branches of D.M.K., total strength of D.M.K. party, etc. In another paragraph there is reference about meeting of C.N.A. and Karunanidhi and Anbazhagan. I have a number of details. I do not want to waste the time of the House. It is not good. This is all right when we have dictatorship wherein there are no two parties and there is no question of opposition and wherein Dr. Hande or anybody cannot open their mouth. Even Trotsky was banished lastly. Even Stalin was dfied later on and they changed the name of one town named after him. Those things can happen in a dictatorship wherein they could not brook any opposition. But here we have democracy wherein the words of opposition are paid heed to. What has happened has pained me. You should allow some time. You have rushed glorifying Anna everywhere, with the result you have allowed opportunity for



[Dr. H. V. Hande]

1970 செப்டம்பர் 7]

others to speak against him. Because of your glorifying him in season and out of season (instead of allowing time to take its own course) an opportunity has now been given for Opposition parties to show him disrespect. Because you have used his name for your political advancement, for all purposes, because his name has been unnecessarily dragged, he has now become a subject of controversy. This is absolutely needless, uncalled for. This could not have happened if only you had not dragged his name for your political advancement.

I would like to touch upon another point. I think on the 12th and 13th you are going to have a conference on "மாநில சுயாட்சி" I have not understood what the Hon. Chief Minister means by this. I have been following his reply very carefully but he has not explained. "மத்தியில் கூட்டாட்சி" '. For the Parliament we send our representatives. In the Parliament, there is representation for all States. During the Congress regime also, representation was given to all States in the matter of Ministership in the Centre. So, in some way or other, there is representation for States in the Centre. Even here, the Chief Minister has so chosen the Cabinet that almost all the districts (with the exception of one or two are represented here). All the districts are almost covered. That is how it is being done. In the centre also there is represenation for States. My submission is what exactly do you mean by this slogan? If you mean representation in the Centre for different parts of the country, I can understand. Even now, it is there. But I think you are saying ' மத்தியில் கூட்டாட்சி '. I do not understand its meaning. I was listening when the Chief Minister was talking.

You adopt a different procedure here of not interrupting the Ministers when they speak. When we speak, the Ministers have the prerogrative to interrupt us. But we are not able to do so here. But in the Council, it was different and when Sri R. Venkataraman was speaking, I used to interrupt him for getting some elucidation or other and he used to yield. Similarly I used to yield when he interrupted my speech for any clarification. But here it is not so. I could not interrupt the Hon. Chief Minister and get information from him as to what exactly he
மத்தியில் கூட்டாட்சி
say is this is not the time to whip up the passions of the people in this way.

Next I come to the demand for State flag. The Chief Minister has said that all of us who are against such demand are (1) anti-national and (2) anti-God. I do not understand what is anti-God in this and how we are anti-national. We are against the very concept of State flag. Tomorrow my friend Mr. Ma.Po.Si. may come with a demand for a flag with bow and arrow and fish and if I suppose it, he may say 'Dr. Hande is anti-fish. Mr. Ramamoorthi is anti-fish. I cannot understand this. We are against the very concept of a State flag.

[Dr. H. V. Hande]

[1970 செப்டம்பர் 7

Again is this the opportune time to demand any such thing? We are now facing a very serious situation in this country, wherein in one part of the country, the very writ of Government is not running. When we have two menacing foreign powers on our sides, when what we need is security of country, is this the time to demand a State flag? When considering all these, we oppose the concept how can we be called anti-national? It hurts me. Supposing I say that the ruling party is anti-national, how much it will hurt you? Because I have got culture, I did not say that and I controlled myself.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தனிக் கொடி வேண்டும் என்பது எப்படி தேச விரோதமாகும்? அதற்குப் பதில் சொன்னால் நான் இதற்கும் பதில் சொல்வேன்.

DR. H. V. HANDE: First you raised the question that we are anti-national and I had said I could not understand how we could be dubbed anti-national simply because we oppose that concept of State Flag. Is this the opportune time for it when we see fissiparous tendencies in the country and even the National Flag is not respected. As my revered Leader Rajaji said if other States also demand separate flags, it will lead to inter-State rivalry. So it is that we oppose the very concept.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சங்கராச்சாரியாருக்கு என்று ஒரு தனிக் கொடி வைத்திருக்கிறார். அப்படியானால் அதுவும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துகிறதா? முருகனுக்கு என்று சேவல் கொடி இருக்கிறது. அதுவும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துகிறதா? ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு கொடி, ஹனுமார் கொடி இருக்கிறது, சேவல் கொடி இருக்கிறது. சங்கராச்சாரியாருக்கு என்று ஒரு தனி கொடி இருக்கும்போது ஒரு மாநிலத்திற்கு ஒரு கொடி இருக்கக்கூடாதா என்பதுதான் என்னுடைய கேள்வி.

DR. H. V. HANDE: Where will this go? A district may demand a separate flag. So also a taluk and Panchayat Union. My friend Mr. Subbaraja may demand a separate flag for Rajapalayam. The Honourable Chief Minister has dragged the name of Sankaracharya. What are we discussing here? Not religion, but politics. Religion has absolutely no connection here. I am only voicing forth the feeling of the people about this demand. People are not happy about it.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சில உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது மனிதனின் உரிமை. அதுபோல் இது இந்த மாநிலத்தின் உரிமை. கன்னியாகுமரியில் விவேகானந்தருக்கு ஒரு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. விவேகானந்தர் பாஸ்கர சேதுபதியின் உதவியால் வெளிநாட்டுக்குச் சென்றார். ஆகவே சேதுபதியின் சிலையும் அங்கே இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. விவேகானந்தருக்கு ஒரு மண்டபம் கட்டுவதிலேயே அதில் சேதுபதியின் உணர்ச்சியும் அதில் இருக்கிறது, அவரது நினைவும் அதில் இருக்கிறது என்று எண்ணம் கொள்ளவில்லை. சேதுபதியின் சிலையும் வேண்டுமென்று நினைக்கிறோம். அதற்காக ஒரு கிளர்ச்சிக் கூட ஆரம்பித்தார்கள். உங்கள் கட்சித்



[திரு. மு. கருணாநிதி]

1970 செப்டம்பர் 7]

தலைவர் சிமைச்சாமி போன்றவர்கள் கூட அதில் பெருத்த உணர்ச்சிகளைக் காட்டினார்கள். அதற்கு இந்த அரசாங்கச் சார்பில் பதில் அளித்து அந்த உணர்ச்சி பாராட்டப்படவேண்டியதுதான் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆகவே விவேகானந்தரின் நினைவாக ஒரு மண்டபம் எழுப்பும்போது சேதுபதியின் நினைவும் அதில் பங்கு கொள்ளவில்லை, ஆகவே அது எப்படி தனித்து இருக்கவேண்டுமென்று விரும்புகிறோமோ அதேபோல் இந்தியாவுக்கு என்று ஒரு தேசியக் கொடி இருக்கும்போது மாநிலத்திற்கும் ஒரு கொடி தேவை என்று நாங்கள் கருதுகிறோம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** உணர்ச்சிகள் வரும் என்று அவர்கள் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள். அதைத்தான் நாங்களும் சொல்கிறோம். அரசியலில் பெருத்த உணர்ச்சிகள் வரத்தான் போகிறது. இங்கேயே அப்படி உணர்ச்சிகள் வந்தன. அதேபோல் அரசியலில்கூட உணர்ச்சிகள் வரத்தான் போகிறது. அதுதான் நாட்டுக்கு ஆபத்தாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

It is not as if we are trying to be anti-national. On the other hand, we speak after understanding the psychology of the people. A majority of people do not like this idea. People are feeling that this demand is quite unnecessary. What is their main point? They say when there are so many problems still remaining to be solved, why should time be wasted on this demand now? The unemployment problem is there. That has not been solved. The educational policy is in confusion. Everywhere there is confusion. In the Police Department there is confusion. Instead of solving the major problems, because you have not solved them, you are trying to side-track the minds of the people from the real problems, by bringing in this red-herring. That is the real feeling of the people.

Then I come to the handloom affair. There is a gentleman, Thiru S. K. Sambandham, who was a Member of the D.M.K. Party until recently. He was the President of the Handloom Society. As long as he was a D.M.K. Party man, things went on perfectly in the Handloom Society. The moment he ceased to be a D.M.K. man, things began to move in a different direction and finally he was removed from his office through a No-confidence Motion. Later on, he was arrested and then let off on bail. The point is that whenever a person is in the D.M.K. party he enjoys their confidence and the moment he ceases to be a member of that party, he loses their confidence.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு விவரங்களை யாரோ அதிகமாகச் சொல்லி இருப்பார்களோ என்று சந்தேகப்படுகிறேன். 'நோ-கான்பிடன்ஸ் மோஷன்' கொண்டு வந்தது காங்கிரஸ் கட்சிக்காரர்கள். அதிலே மெஜாரிட்டியாக அவர்கள் தான் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசாங்கத்தின் செயல் அல்ல. அவர்மீது ஏதோ சந்தேகம் இருந்து, அதை மெம்பர்கள் மத்திய

[திரு. செ. மாதவன்]



சர்க்காருக்கு எழுதி, மத்திய சர்க்காரிடமிருந்து வந்த அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. விலகுவதற்கு முன்னாலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டது. 'நோ கான்பிடன்ஸ் மோஷன்' அதற்குப்பின்னாலே தான். நடவடிக்கை எடுப்பதற்கு முன்பே இதுபற்றி அவரிடத்தில் சொல்லி இருக்கிறோம். அந்த போர்டில் அதிகமான உறுப்பினர்கள் கொடுத்த விவரங்களைக் கொண்டுதான் நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அரசாங்கம் எந்த விதமான தவறையும் செய்யவில்லை. அந்த போர்டு நிர்வாகத்தில் குறுக்கிட்டது இல்லை. அது காங்கிரஸ் மெஜாரிட்டியாக உள்ள நிர்வாகம். அவர்கள் செய்து இருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, I know the point. The Congress Party has been opposing Thiru S. K. Sambandam all these years. In fact, the post of the President of the society had been taken by Thiru Sambandham from Thiru Nachiappan. The point is the moment he ceased to be a member, a few D.M.K. Members withdrew their support for him and joined the Congress Party in opposing him.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய அரசாங்க சார்புடையவாகள் 'நாமினேட்ட்' மெம்பர்கள். அவர்களை விட எலெக்டட் மெம்பர்கள் தான் அவர்களை நீக்க வேண்டுமென்று முயற்சி செய்து 'நோ கான்பிடன்ஸ் மோஷன்' கொண்டு வந்தார்கள். ஆகவே, கட்சிச் சாயம் பூசக்கூடாது. எங்கள் கட்சிக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

(Mr. Speaker sounded the gong).

DR. H. V. HANDE : Sir, nearly eight minutes have been taken up by intervention . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—ஏற்கெனவே 30 நிமிடங்கள் ஆகிவிட்டன. 4-15-க்கு ஆரம்பித்தார்கள். இப்பொழுது 4-45 ஆகிவிட்டது.

DR. H. V. HANDE : Now I come to Police. Though I do not agree with Thiru Sankariah with regard to what he has stated about Police, still I must say that the Police are committing a number of mistakes especially in regard to Prohibition cases. I would request the Hon. Chief Minister to look into this matter. For instance, they are asking for 'mamool'. I have got proof to substantiate it. Also they resort to third-degree methods in lock-ups and also beat the innocent people. In my constituency three deaths took place due to indiscriminate beating of the Police. The third-degree methods and beating by the Police should be stopped. If the Hon. Chief Minister can give an assurance, I shall be glad.

Finally I come to the point raised by Thiru Elamvazhuthi though it does not concern our State. It is about privy purses. I want to make it very clear that we are not bothered about Princes or Maharajahs. But our point is that by bringing the Constitution Amendment Bill for the abolition of privy purses and privileges, they have completely eroded the powers of the people. The Constitution has been completely raped and the people will



[Dr. H. V. Hande]



have no power at all. Tomorrow another amending Bill would be brought forward and finally the Constitution will have no validity at all. If the Constitution is held to ransom, what will happen to the country. Thousands and thousands of people will be deprived of their rights.

Now what has happened? The Constitution Amendment Bill was rejected in the Rajya Sabha after it was passed in the Lok Sabha. The Prime Minister should have kept quiet but that was not the case. Immediately a Presidential order has been issued, setting at nought the decision of the Rajya Sabha. If this is the case, tomorrow it may happen that they may bring forward a Bill which will interfere with the powers of States. (Mr. Speaker sounded the gong). Of course, I am a poor Hande and my views may not be liked by you. . .

Sir, you have allowed this point to be raised here and you should have been careful to point out that the matter could be referred to only in the Lok Sabha . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைப் பேச வேண்டாம் என்று சொல்லவில்லை. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட 15 நிமிடம் மேலே ½ மணி எடுத்துக்கொண்டுபேசினால் எப்படி. எல்லாம் பேச வேண்டுமானால் முடியாது அல்லவா. இதோடு முடித்துக் கொள்ளுங்கள்.

DR. H. V. HANDE : Today the ruling party may be under the impression that they need not bother about what Hande says. But I may say that there is a feeling among the people that the Government have committed a number of mistakes. When the Bhaktavatsalam Ministry was in power, the D.M.K. thought that they would never come to power. Even our respected Anna wanted to go to the Lok Sabha and many of the present Ministers would not have thought that they would become Ministers. Thiru Karuthiruman would have thought they would come to power. But that has not happened. The same thing might happen to the D.M.K.

* திரு. என். மருதாசலம் : சபாநாயகர் அவர்களே, சென்ற ஆகஸ்டு மாதம் 8-ம் தேதி இரவு 2 மணிக்கு நான் வீட்டிலே தூங்கும்போது தமிழக போலீஸ் வந்து எழுப்பி என்னைக் கைது செய்தது. கைதுசெய்து மண் லாரியில் ஏற்றிக்கொண்டு போனார்கள். அங்கு இருந்த எல்லா அரசியல் சம்பந்தப்பட்ட நண்பர்களையும், தலைவர்களையும் கோவையில், மண் லாரியில் ஏற்றிக் கொண்டு போய் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்தார்கள். இவ்வளவு கீழ்த்தரமான முறையில் ஒரு சட்டசபை அங்கத்தினரை நடத்தினால் போலீஸ் இலாகாவுக்கு எவ்வளவு தகவல் கொடுத்து இருக்க வேண்டுமென்பதை குறிப்பிடுகிறேன். அதேமாதிரி இன்றைக்கு ஜெயிலில் கொண்டு போய் 24 நாள் தமிழக சிறையிலிருந்து, 1-ம் தேதி விடுதலை பெற்று இன்று இங்கு வந்து போலீஸ் அடக்குமுறையைக் கண்டித்து, கொண்டு வந்து இருக்கும் பிரேரணை மேல் நான் ஆதரித்து பேசுகிறேன்.

[திரு. என். மருதாசலம்]

[1970 செப்டம்பர் 7

ஆகஸ்டு 15ம் தேதி அன்று எங்கள் கட்சி இந்தியா பூராவும் நில மீட்சிப் போராட்டம் நடத்துவது என்று தீர்மானித்தது. அந்த ஏற்பாட்டின் பேரில், அந்தப் போராட்டம் வருவதற்கு முன்னாலே 7-8-ம் தேதி எல்லோரையும் சிறையில் அடைத்தது. தஞ்சையிலே நமது திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் வீட்டில் இருக்கும் எல்லோரையும் அரெஸ்ட் செய்து கொண்டு போய் விட்டார்கள். எட்டாம் தேதி நடந்தது இது. பத்தாம் தேதி அன்று போலீஸ் சுப்பையா வீட்டில் வந்து அவர்கள் மனைவியை துன்புறுத்தி இருக்கிறார்கள். அப்போது அங்கிருந்த மணியக்காரர் வந்து சமாதானம் பண்ணி போகச் சொன்னார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினருடைய குடும்பத்திற்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? பாதுகாப்பு கிடையாது.

இன்றைக்கு போலீசாரின் அடக்குமுறை தான் தாண்டவமாடுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். தலைவர்களையெல்லாம் அரெஸ்டு செய்தார்கள். மணலி கந்தசாமி அவர்களை எடுத்துக்கொள்வோம். அவர்களால் சுறுசுறுப்பாக நடக்க முடியாது. காலில் வாதம். அவர்கள் பேரில் கேஸ் போட்டிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் கம்பைக் கொண்டு போயிருந்தார்கள், அறுவாளை எடுத்துப்போயிருந்தார்கள், நெல்லை அறுத்து சுருட்டுவதற்கு என்று அவர்கள் மீது கேஸ் போட்டிருக்கிறார்கள். அதே மாதிரி நமது பெரிய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மீது சதி வழக்கு போட்டிருக்கிறார்கள். கொள்ளை, கொலை இம்மாதிரி சதிகளைச் செய்தார்கள் என்று போடப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

இந்தச் சட்டமானது வெள்ளைக்காரன் காலத்திலிருந்த பழைய சட்டம். அந்தச் சட்டத்தைத்தான் இப்பொழுது இந்த அரசாங்கம் பயன்படுத்துகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்தச் சட்டத்தின் அடிப்படையில் கைது செய்தது மாத்திரம் அல்லாமல், தஞ்சாவூரில் ஒவ்வொரு இடத்திலும் 10 நாட்கள் வரையில் அந்தப் பகுதிகளில் ஜனநடமாட்டமே கிடையாது. அந்த மாதிரி நடமாட்டம் ஸ்தம்பித்திருந்தது, போலீஸ் அட்டகாசத்தினால்.

ஜெயிலிலுள்ளவர்களுக்கு குடிக்கத் தண்ணீர் இல்லை. தஞ்சாவூரில் கொட்டகை போட்டிருப்பதாக, லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து கொட்டகை போட்டிருப்பதாகச் சொன்னார்கள். கொட்டகை எதற்காக? அது மாட்டுக் கொட்டகையா, ஆள் கொட்டகையா என்ற நிலைமையில்தான் இருந்தது. ரொம்ப மோசமான நிலைமையிலே ஜனங்களை நடத்துவதற்கு இந்த அரசாங்கம் தீவிரமான நடவடிக்கை எடுத்திருக்கிறது.

இன்றைக்கு நில மீட்சிப் போராட்டத்தில் கைது செய்யப்படவேண்டியவர்கள் நிலக் குவியல்களை குவியலாக வைத்திருப்பவர்கள்தான். அவர்களைத்தான் அரசாங்கம் கைது செய்திருக்கவேண்டும். பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்கள் உபரி நிலங்களைத்தான் விவசாயிகளுக்கு பங்கிட்டுக் கொடுக்கவேண்டும் என்று எங்கள் கட்சி முடிவு செய்திருந்தது. அரசாங்கத்தின் சட்டத்தை மீறி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அரசாங்கச் சட்டத்தை மீறி நிலம் வைத்திருப்பவர்களைத்தான் அரசாங்கம் கைது செய்திருக்கவேண்டும், அவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அப்படியில்லாமல் இன்றைக்கு அரசாங்கத்தினுடைய சட்டதிட்டத்தின் கீழ், உபரி நிலம் வைத்திருப்பவர்கள் சாதாரண விவசாயிகளுக்கு அந்த நிலங்களைக் கொடுக்கவேண்டும் என்றுதான் நாங்கள் நில மீட்சிப் போராட்ட அடையாளமாக நடத்தினோம். அந்தப் போராட்டத்தில் பல பேர்களுக்கு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டன. போலீஸ் அடக்குமுறை சொல்ல முடியாது. இதற்கு முன்னால் பேரூர் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு விவசாயியை அடித்துக் கொன்று போட்டுவிட்டார்கள். அடித்துக் கொன்றுபோட்ட பிற்பாடு அந்தப் பகுதி விவசாய மக்கள் போலீஸ் ஸ்டேஷன் முன்பாக கும்பலாகச் சேர்ந்து கொண்டார்கள். அப்படிச் சேர்ந்துகொண்டபொழுது ரிசர்வ் போலீஸ் அந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்கு பாதுகாப்புச் செய்தது. அந்தப் போலீஸ் எஸ்.ஐ. யின் மீது என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்? அந்த எச். ஸி., எஸ்.ஐ. யை வேறு இடத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். அதுதான் கண்ட பலன். ஆனால், எஸ். ஐ., ஹெட்கான்ஸ்டேபிள் தவறு செய்யவில்லை என்று அங்கே இருக்கிற அந்த பேரூர் வட்டச் செயலாளர் கையெழுத்து இயக்கம் ஆரம்பித்து, கையெழுத்து வாங்கி ஆர்.டி.ஓ-க்கு கொடுத்திருக்கிறார்கள். அம்மாதிரி கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள். அம்மாதிரி இயக்கம் நடந்திருக்கிறது. அம்மாதிரி பல இடங்களில் மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் போலீசில் தலையிடுகிறார்கள். அதனால், சாதாரணமான ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஜெயில் சூப்பிரண்டென்டே சொல்கிறார். போலீஸ் பண்ணுகிற அநியாயம் சொல்ல முடியாது. ஏதாவது கேஸ் கிடைக்கவில்லையென்றால், சாதாரணமாக வீதியில் சுற்றுபவன் வாயில் சாராயத்தை ஊற்றி, கேஸ் போட்டு உள்ளே தள்ளிவிடுகிறார்கள், நாங்கள் கஷ்டப்படவேண்டியிருக்கிறது என்று சூப்பிரண்டேன்டே சொல்கிறார்கள்.



[திரு. என். மருதாசலம்]

1970 செப்டம்பர் 7]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எந்தச் சிறைச்சாலையில் உள்ள சூப்பிரண்டென்டு சொன்னார்? யார் அப்படிச் சொன்னார்?

**திரு. என். மருதாசலம்:** கோவை ஜெயிலில் சொன்னார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எந்த சூப்பிரன்டென்டு சொன்னார்? அவர் பெயர் என்ன? கோவை சூப்பிரண்டென்டு சொன்னாரா?

**திரு. என். மருதாசலம்:** கோவை சூப்பிரண்டென்டு மாதிரி எத்தனையோ பேர்கள் சொல்கிறார்கள். இப்படி போலீஸுக்கு அதிக உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறார்கள். போலீசார் குடிப்பவர்களைப் பிடிக்கவேண்டாம் என்று சொல்லவில்லை, தவறு செய்பவர்களை பிடிக்கவேண்டாமென்று சொல்லவில்லை. தவறு செய்பவர்கள் பிடிக்கப்படவேண்டும். கண்டிக்கப்படவேண்டும். ஆனால், சாதாரணமாக ஏழை எளிய ஜனங்கள், வீதியில் நடமாடிக்கொண்டிருப்பவர்கள் மீது இம்மாதிரி கேஸ்கள் போடக்கூடாது. எந்த விதமான கேஸும் போடப்படவில்லை, ஏன் என்று கேட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு உத்தரவு வந்தவுடனேயே, வீதியிலே யார் இருந்தாலும் நான்கு பேர்களைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து, வாயில் சாராயத்தை ஊற்றி கேஸ் போட்டு விடுகிறார்கள். இம்மாதிரி சாதாரண மக்கள் மீது கேஸ் போடாதீர்கள். இம்மாதிரி விஷயங்கள் ஏகப்பட்டது நடைபெறுகின்றன. போலீஸ் ஸ்டேஷனில் கள்ளுக்கடை நாற்றம் சொல்ல முடியாது. நேரடியாகப் பார்த்திருக்கிறேன். பல போலீஸ் ஸ்டேஷன்களில் சாராய நாற்றம் தான்...

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** போலீஸ் ஸ்டேஷனுக்கு மாவட்டச் செயலாளர், வட்டச் செயலாளர் போகிறார்கள், நாங்கள் போகவில்லை, என்று சொன்னார். 'ஒரு ஸ்டேஷனில் கள்ளுக் கடை இருப்பதை நானே நேரில் பார்த்தேன்' என்று சொன்னார். உறுப்பினர் அவர்கள் அங்கே எதற்காகப் போனார்?

**திரு. என். மருதாசலம்:** நான் வட்டச் செயலாளர், மாவட்டச் செயலாளர் தலையிட்டு இருக்கிறது என்று சொன்னேன். கள்ளுக் கடை, சாராயக் கடை மாதிரி இருக்கிறது ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷன் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நேரில் பார்த்தேன் என்கிறீர்களே, ஒரு போலீஸ் ஸ்டேஷனில் கள்ளுக் கடை இருப்பதை. அங்கே ஏன் போனீர்கள், எதற்காகப் போனீர்கள் என்று கேட்கிறேன்.

**திரு. என். மருதாசலம்:** பஞ்சாயத்திற்குப் போயிருந்தேன். அப்பொழுது நான் இதையெல்லாம் பார்த்தேன். ஆகையினாலே போலீஸ் அடக்குமுறை தாண்டவமாடுகிறது. இதை நிறுத்த வேண்டும். நில மீட்சிப் போராட்டத்திற்கு முன்னால் ஐ. ஜி. அவர்கள் ஒரு அறிக்கை விட்டிருந்தார்கள். சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கக்கூடிய ஐ.ஜி. அவர்கள் ஒரு அரசியல் தலைவர்மாதிரி அறிக்கை விட்டார். அவர் அரசியல் தலைவரா அல்லது சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கக்கூடிய அரசாங்கத்தின் ஐ.ஜி.யா என்பது சந்தேகத்தில் இருக்கிறது.

எங்களுடைய போராட்டத்தில் பல பேர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஊட்டியில் வேலையில்லாமல் அலைந்து கொண்டிருந்தவர்களை, பஸ் ஸ்டான்டில் நின்று கொண்டிருந்தவர்களை நான்கு பேர்களைப் பிடித்துக்கொண்டுபோய் நில மீட்சிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என்று கொண்டுவந்து விட்டார்கள். அவர்கள் வேலையில்லாமல் வேலை தேடிக்கொண்டு வந்தவர்கள். இம்மாதிரி பல பேர்வழிகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள் போலீஸ்காரர்கள். வீதியில் யார் போனாலும், காமாலைக் கண்ணனுக்கு பார்த்ததெல்லாம் மஞ்சள் என்று சொல்வது போல, வீதியில் யாரைப் பார்த்தாலும் அவர்களைப் பிடித்துக் கொண்டுவந்துவிட்டார்கள் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நில மீட்சிப் போராட்டத்தில் ஈடுபடாதவர்கள் எத்தனைபேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று சொல்ல முடியுமா?

**திரு. என். மருதாசலம்:** சர்க்கார் கணக்கு 13,000. அதில் இவர்கள் எத்தனை பேர்கள் என்று நான் கணக்குச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்தப் போராட்டத்தில் ஈடுபடாமல் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்கள்? எத்தனை பேர்கள் ஈடுபடாமல் கைது செய்யப்பட்டார்கள்?

**திரு. என். மருதாசலம்:** நம்மிடத்தில் அந்தக் கணக்கு கிடையாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அப்பொழுது ஒரு சமயம் அங்கத்தினரைக் கூட ஈடுபடாமல்தான் பிடித்துவிட்டார்கள்போல் இருக்கிறது.



**திரு. என். மருதாசலம்:** ஆகையினாலே நில மீட்சிப் போராட்டத்தின் பொழுது அரசாங்கம் கையாண்ட உளுத்துப்போன சட்டத்தை மறுபடி தள்ளுபடி செய்யவேண்டும். வெள்ளைக்காரர்கள் கொண்டு வந்த சட்டத்தை உபயோகப்படுத்துகிறார்கள். காங்கிரஸ்காரர்கள் கூட அந்தச் சட்டத்தைக் கொண்டுவர பயப்பட்டார்கள். இவர்கள் இந்தச் சட்டத்தை இப்பொழுது கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை மறுபடியும் ரத்து செய்ய வேண்டும்.

ரகசிய திட்டம் ஒன்றும் நாங்கள் போடவில்லை. சர்க்கார் சொன்னமாதிரி ரகசியத் திட்டம் ஒன்றும் கிடையாது. இந்தியா பூராவும் நில மீட்சி போராட்டத்தை நடத்த வேண்டும் என்று எங்கள் கட்சி முடிவு செய்தது. அம்மாதிரி பிரகடனப்படுத்தியது. பிரகடனப்படுத்தப்பட்டதுமல்லாமல், எல்லா இடங்களிலும் பொதுக் கூட்டங்களில் பேசப்பட்டது. அரசாங்கத்திற்கும் தெரியும். ஒன்றும் ரகசியமான திட்டம் இல்லை. ரகசியமாக திட்டம் போட்டு நில மீட்சிப் போராட்டம் செய்யப்படவில்லை என்பதைச் சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையினாலே இம்மாதிரி வழக்குகள் போடுவதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்று கூறிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்றும், கண்டிக்கும் வகையிலும் இன்றைக்கு தீர்மானங்கள் வந்திருக்கின்றன. இவற்றைப் பொறுத்தவரையில், நான் எந்தக் கட்சியையும் சேராத, கட்சி மாச்சரியம் இல்லாத வகையில் என்னுடைய ஒன்றிரண்டு அபிப்பிராயங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு மீது என்று சொன்னால் அமைச்சர்கள் நேராகச் செய்கிறார்கள் என்று அர்த்தம் இல்லை. ஒரு வீட்டில் பெற்ற பிள்ளை திருடுகிறான் என்றால், அதற்கு பெற்றவர்கள் என்ன செய்ய முடியும்? அதே போல, கீழ் மட்டத்தில் அதிகாரிகள், ஒரு சிலர், மோசமான வகையில் நடந்து கொள்ளுகிறார்கள் என்றால், இப்படிப் பட்ட சூழ் நிலைகள் வருகின்றன என்பதை அமைச்சரவை மனதில் வைக்கவேண்டும். மாலை 5-00

என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். சமீபத்திலே 151-வது பிரிவிலே அரெஸ்டுகள் நடந்தன. நிலப்பறி என்பது சட்டப்படி தப்பு; ஜனங்களுடைய ஓட்டுக்களைப் பெற்ற நீங்கள் உங்கள் கொள்கைப்படி 151 பிரிவின் கீழ் ஈடுபட்டவர்களை அரெஸ்ட் செய்கிறீர்கள். அது ஒரு பக்கம் இருக்கட்டும். இன்னொன்று நடந்திருக்கிறது.

ராஜபாளையம் நகரத்தில் கொடிப் பிரச்னை எங்கு பார்த்தாலும் பாபரப்பை உண்டு பண்ணியிருக்கிறது. கொடியை அவமானப் படுத்துவது தவறு என்கிற சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். கொடியை அவமானப் படுத்துபவர்கள் மீது வன்மையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் வேறொன்று சொல்ல வருகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் என்னைக் கேட்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, அங்கே இருக்கக் கூடிய சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், நேற்று தொலை பேசி மூலம் கேள்விப் பட்டேன். கொடிப் பிரச்சினை சம்பந்தமாக, 31-ம் தேதி கொடியை யாரோ

ஏற்றிவிட்டுப் போக, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் பீட் இருக்கும் இடத்தில், அதற்கு எதிரிலேயே சென்ட்ரல் ப்ளேசில் யாரோ கொடியை ஏற்றியிருக்கிறுன். அன்றே அதை லிஸ் பண்ணி அது போலீஸ் ஸ்டேஷனிலும் இல்லையாம். சட்டசபையிலே முதல் மந்திரி அவர்கள் சொல்லும்போது, இம்மாதிரி ராஜபாளையம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்று சொன்ன பிறகு, அதிகாரிகள், 4-ம் தேதி அங்கே உள்ள தி.மு.க. நகர செயலாளரை, திரு. கந்தசாமி, என்பவரைக் கொண்டு ஒரு மனு எழுதிப் பெற்றுக் கொண்டு, நடவடிக்கை எடுத்திருக்கிறுர்கள். ஏன் நாலு நாள் தாமதம் என்பதற்கு, நாங்கள் மேலேயிருந்து அவர்களுடைய ஒப்புதல் பெறவேண்டியிருந்ததால், காலதாமதம் ஆகிவிட்டது என்றுர்களாம். முதலிலேயே, சம்மந்தப்பட்ட மூன்று பேர்கள் மீது சார்ஜ்-ஷீட் போட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அடுத்து, அங்கே இருக்கக் கூடிய சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் கட்சி மாச்சரியங்களை வைத்துக்கொண்டு, 5-ம் தேதி ஒரு மனுவைப் பெற்று, அதே கந்தசாமியிடமிருந்து, மறுநாளே ஒரு பெட்டிஷனையும் தயார் செய்து, அந்தப் பெட்டிஷனில் கொடியைக் கட்டுவதற்கான செலவுகளை இன்னின்ன பேர்வழிகள் செய்தார்கள் என்று குறிப்பிட்டு, அவரும் நகர சபை அங்கத்தினர், இன்டிகேட் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், உள்ளே உள்ள பூசல்களை வைத்துக் கொண்டு, அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்க என்று வீடு வீடாகப் போய் வேலை செய்திருக்கிறுர்கள். இதற்கு என்ன காரணம்?

இது மாத்திரமல்ல, இன்னென்றும் நடந்திருக்கிறது. 151-ம் பிரிவில் அரெஸ்ட் செய்த போது நடந்தது. எம். எல். ஏ. அலுவலகம் ஒன்று நான் வைத்திருக்கிறேன், அதிலே ஒரு கிளார்க்கும், ஒரு ஆபீஸ் பையனும் வைத்திருக்கிறேன், அவனை நன்றாக அந்த சப்-இன்ஸ்பெக்டருக்கு தெரியும் என்னுடைய பையன் என்று. நான்கு வருஷமாக என்னிடத்தில் வேலை செய்கிறுன் என்றும் தெரியும், எந்தக் கட்சியையும் சேர்ந்தவன் அல்ல என்றும் கம்யூனிஸ்டு கட்சிக்கும் அவனுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றும் தெரியும், அப்படியெல்லாம் இருந்தும், வேண்டுமென்றே, அவனையும் நிலப்பறி இயக்கத்தைச் சேர்ந்தவன் என்று கொண்டுபோய் சேர்த்துவிட்டார். நான் சொன்னேன், அவனைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா, அவன் என்னிடத்தில் இருக்கிறவன், எந்த ஒரு கட்சியையும் சேர்ந்தவன் அல்ல என்று, அதற்கு அவர் தனக்கு மேலேயிருந்து உத்திரவு அப்படி என்றுர். நான் இன்ஸ்பெக்டரைக் கேட்டேன்; அவர் தனக்கு மேலே இருந்து அப்படி உத்தரவு என்றுர். நான் எஸ்.பி.க்கு போன் செய்தேன். அவர்கள் தெரியாமல் ஏதாவது உள் பூசல் காரணமாக நடந்திருக்கும் என்றுர்கள். இந்தமாதிரி கீழே இருப்பவர்கள் செய்யக் கூடிய தவறுகளைக் கண்டிக்கக் கூடிய திண்ணம் வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன்.

அந்த ஊரிலே ஒரு பஸ் முதலாளி. கொடி கட்ட என்னென்ன திட்டங்கள் வகுத்தார்கள் என்று கேட்டு, 4-ம் தேதி எனக்கு வேண்டியவரைக் கூப்பிட்டு பஸ் முதலாளியைக் கூப்பிட்டு, உங்கள் தலைவர் என்ன, கொடி கட்டு என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாரு என்றுராம். அரசியல் சட்டப்படி தவறு செய்தால், கைது செய்யப் பட்டால் அதற்கு உட்படத் தயார். முன்னுலே கான்ஸ்டிட்யூஷனை எரித்தோம். அது தவறு இல்லையா?



அது மட்டுமல்ல, முனிசிபாலிடியைப் பொறுத்தவரையில், அந்த சப்-இன்ஸ்பெக்டர் என்ன செய்தார் என்று சொல்லவேண்டும். முனிசிபாலிடியிலே தண்ணீர் இல்லாத நேரத்தில், எக்ஸ்டென்ஷனுக்குக் கொடுக்க முடியாமல், பைப்லே அவுட் இல்லாமல், டாங்கர் மூலம் தண்ணீர் கொடுத்தோம். அங்கே போலீஸ் காலனியும் அமைந்திருக்கிறது. போலீஸ் இன்ஸ்பெக்டர் கேட்டார், உங்களுக்கும் தாராளமாக தண்ணீர் இருக்கும் என்று சொல்ல இயலாது. ஆனால் ஒரே வண்டிதான் இருக்கிறது, முடிந்த அளவு கொடுக்கச் சொல்லுகிறேன் என்றேன். ஆனல் அவர் டாங்கர் ட்ரைவரை அடிக்கப்போய், என்னடா நினைத்துக் கொண்டிருக்கிறுய், நான் போலீஸ் என்று அடிக்கப் போயிருக்கிறுர். அது அவர்களுடைய பாரம்பரை வழக்கம். அதன் பிறகு கமிஷனர் என்னிடம் சொன்னுர். மேலே அதிகாரிகளிடம் தொலைபேசி மூலம் பேசி, பிற்பாடு அது அடங்கியது. 5-ம் தேதி பெடிஷன் வாங்கியவர்கள், 6-ம் தேதி சட்டசபை உறுப்பினர் தூண்டிவிட்டார் என்று சொல்லி ஊரில் இருக்கிறவர்களை அடைத்து வைக்கலாம். இப்படியிருந்தால் ஜனநாயகம் எங்கே போகிறது? ஜனநாயகத்தில் எல்லோரும் ஒரே கட்சியாக இருக்க முடியுமா? எதிர்க் கட்சியில் இருக்கிறோம். தவறுகள் செய்தால் கண்டிக்க வேண்டியதுதான், தண்டிக்க வேண்டியதுதான். ஒரு காலத்தில் ப்ரொசஷனில் போய்க் கொண்டிருந்தேன். நகரசபையில் வெற்றி பெற்று முன்னுலே வண்டியில் போய்க் கொண்டிருந்தேன். ஊர்வலத்தில் பின்னுல் யாரோ காலிகள், கலவரத்தை உண்டாக்கினர். அதையொட்டி என் மீது வழக்குபோடப்பட்டது. அப்பொழுது டி.ஐ.ஜி. தனிப்பட்ட முறையில், இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு, எம்.எல்.ஏ.-வை உள்ளே போடவேண்டும் என்றுராம். நிரூபிக்க முடியுமா என்று கேட்கலாம். அதிகாரிகள் பற்றி வந்து சொல்வார்களா? இங்கே உரிமை இருக்கிறது, சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது. சொல்லுகிறேன், கனம் அமைச்சர் போகிறுர்கள் என்றுல் பின்னுலே ஒரு சிலர் கலாட்டா செய்து விட்டால், முன்னுலே கையைக் காட்டினுர். அதனுல் தூண்டினுர் என்று வழக்குபோட முடியுமா? ஆகவே, இப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்துக் கொண்டு இருப்பது கண்டு மனம் குமுறுகிறது. யாரிடம் சொல்வது? உங்களிடம் சொல்லுகிறோம். நீங்கள் அக்கறை எடுக்க வேண்டும் என்று முதல் அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தனியாக அந்த இலாகாவிலிருந்து ஒரு அதிகாரியை அனுப்பித்தர முடிவு செய்தால், அந்த சப்-இன்ஸ்பெக்டரைப் பற்றி விவரங்கள் தெரியும். அப்படி ஒரு அதிகாரியை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகள் ஜனநாயகத்தில் வளர்ந்தால், அதன் கதி என்ன ஆகும்?

நகரசபைச் செயலாளர் அவரைப்பற்றிக் குறை சொல்ல வரவில்லை. அங்கே இருக்கும் சப்-இன்ஸ்பெக்டரைக் குறித்து, அவரை இதுமாதிரி எழுதிக்கொடு என்று இனிமேல் சொல்லப் போகிறுர்களாம். சட்டசபை மெம்பரையே உள்ளே வைக்கப் போகிறுர்களாம். சப்-இன்ஸ்பெக்டர் சொல்லவில்லை. வெளியே பேசிக்கொள்கிறுர்கள். அதையும் செய்யட்டும். இன்னும் நான் ஜெயிலுக்குப்போனதே இல்லை. இந்தப் பெருமையும் அரசியலில் இருக்கட்டும்.

ஒன்றை மட்டும் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அன்றைய தினம் எதிர்க் கட்சியில் இருந்தபோது என்ன நடந்தது, எத்தனை கஷ்டப்பட்டோம் என்று பார்க்க வேண்டும். இன்றைய முதலமைச்சரவர்களையே தேர்தல்

நேரத்தில் அடிக்க வந்து, அவர் குடிசைக்குள் நுழைந்துகொள்ள, அந்தக் குடிசையே கொளுத்தி எறியப்பட்ட நேரத்தை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அதேமாதிரியான நிலை எதிர்க்கட்சியில் இருக்கும் எங்களுக்கு ஏற்பட்டால் நீங்கள் பொறுக்க முடியுமா? பொறுக்கக்கூடாது என்றுதான் சொல்ல விரும்புகிறேன். ஒருசில சப் இன்ஸ்பெக்டர்கள், ஒரு சில அதிகாரங்களைக் கையில் வைத்துக்கொண்டு, எதிர்க்கட்சி சட்டசபை உறுப்பினர்தானே, அவர்கள் மந்திரி சபையினிடம் சொன்னால் ஏறாது, நான் செய்ததுதான் சட்டம் என்ற நிலை ஏற்படுமானால், இந்த நாட்டில் அராஜகம் தவிர, வேறொன்றும் வராது. ஆகையால்தான் இங்கே கனம் முதலமைச்சர் அவர்களிடம் நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இதை நன்றாகக் கவனிக்க வேண்டும். நான் சொல்வதைக் கனம் முதலமைச்சர் அவர்கள் கவனிக்கிறாரோ என்னவோ. இருந்தாலும் உடனடியாக அவர்கள் இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைச்சரவைமீதும், குறிப்பாக முதலமைச்சராக இருக்கக்கூடிய கலைஞர் கருணாநிதி அவர்கள்மீதும் தங்களுக்கு நம்பிக்கையில்லை என்பதைத் தெரிவிக்கும் வகையில், எதிர்க்கட்சித் தலைவரும் சிண்டிகேட் காங்கிரஸ கட்சியைச் சார்ந்தவருமான மாண்புமிகு கருத்திருமன் அவர்கள் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அவருக்கே உரித்தான பாஷையில் கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் பேசினார்கள்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிற செய்தியை அவர் இங்கே தெரிவித்தபோது தமிழகத்திலிலுள்ள பத்திரிகைகளும், முன்னேற்றக் கழக அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை திரு. கருத்திருமன் கொடுத்திருக்கிறார், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்று தமிழகத்திலுள்ள மக்களெல்லாம் பேசும்போது, என்ன குற்றச் சாட்டைச் சொல்வார்களோ, என்ன ஆதாரங்களைத் தருவார்களோ, திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன தவறுகளைச் செய்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டுக் காட்டுவார்களோ, தமிழகத்திலே இருக்கக்கூடிய மக்களில் எந்தச் சமுதாயத் துறையில் இருக்கும் மக்கள் தாக்கப்பட்டு விட்டார்கள், கெட்டுப்போய்விட்டார்கள் என்று சொல்வார்களோ என்ற ஆவலோடு தமிழக மக்களும் இந்திய உப கண்டத்தில் இருக்கும் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த எதிர்பார்ப்பெல்லாம், இன்றைய தினம் காலை ஏமாற்றம் அளிக்கக்கூடிய வகையில், எள்ளி நகையாடக்கூடிய அளவில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசிய பேச்சுக்களை நாம் கண்டோம்.

என்றைய தினம் காங்கிரஸ்காரர்கள் எங்களை நம்பினார்கள்? சென்ற மூன்றரை ஆண்டுக் காலமாக நாங்கள் கொண்டுவந்த திட்டங்களிலே எந்தத் திட்டத்திலே உங்களுக்கு நம்பிக்கை இருந்தது. 1967 பொதுத் தேர்தலுக்கு முன்பே எங்களை நீங்கள் நம்பவில்லை. நீங்களா வெற்றிபெறப் போகிறீர்கள்? இந்த மூஞ்சிகளா இங்கே ஆளப்போகிறது? என்று சொன்னவர்கள் நீங்கள்? அப்படி நாங்கள் மீறி, வெற்றிபெற்ற பிறகு, "ஆறு மாத காலம் உங்களால்



ஆட்சி செய்ய முடியுமா?" என்று சொன்னவர்கள் நீங்கள், ஆறு மாதங்கள் எங்களுக்குக் கொடுத்தீர்கள் நீங்கள், அவ்வளவையும் நாங்கள் பொறுத்துக் கொண்டிருந்தோம், எங்களுக்கிருக்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்கிற பெருந்தன்மையின் காரணமாக, ஆனால், நாட்டு மக்கள் எங்கள் ஆட்சியைப் பார்த்துப் பாராட்டி, போற்றி, புகழ்ந்து, மகிழ்ச்சி தெரிவித்து, நன்றி தெரிவித்ததன் காரணமாக, பலதரப்பட்ட இடைத் தேர்தல்களில் பெரும்பான்மையான ஆதரவைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்திருக்கிறார்கள் என்றால், அது மூன்றாண்டுக் காலமாக இந்த ஆட்சி மிக நல்ல முறையில் தமிழகத்தில் செயலாற்றி வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டே தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பதினைந்து மாதங்களுக்குள்ளாக, 1968-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ம் நாள், எங்கள் அமைச்சரவைமீதும், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள்மீதும் நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் கொண்டுவந்தார்கள். அதற்குப்பிறகு நடைபெற்ற பல்வேறு இடைத்தேர்தல்களிலும் திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாகவுள்ள இதர கட்சிகளும் பல தேர்தல்களில் பெருவாரியான வெற்றி பெற்றிருப்பதே எங்கள்மீது தமிழ் நாட்டு மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் நாட்டு மக்கள் தெரிவித்திருக்கிறார்கள். எங்களைமற்றவர்கள் பாராட்டுகிறார்கள். மற்ற மாநிலங்களில் இருக்கும் அமைச்சர்கள் பாராட்டுகிறார்கள் இந்த ஆட்சியை. மத்திய சர்க்காரிலே இருக்கும் அமைச்சர்கள் பாராட்டுகிறார்கள். 'சிண்டிகேட்', 'இண்டிகேட்' என்று பிரியாமல் ஒன்றாக இருந்த, ஒரே 'கேட்' டாக இருந்த நேரத்தில், மத்திய சர்க்காரில் உணவு அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் தமிழ் நாட்டுக்கு வந்த நேரத்தில், இந்த ஆட்சியை புகழ்ந்து பேசியிருக்கிறார்கள்; போற்றிப் பேசியிருக்கிறார்கள். ஒருமுறை அல்ல; இருமுறை அல்லன மூன்று முறை பேசியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் சத்தியமூர்த்தி பவனத்தில் திரு. கருத்திருமன் அவர்கள் அவரை அழைத்து, அவருக்கு விருந்து கொடுத்து, "நீங்கள் வரும்போதெல்லாம் முன்னேற்ற கழகத்தையும், கழக ஆட்சியையும் பாராட்டி பேசிவிட்டு போய்விடுகிறீர்கள். நாங்கள் எப்படி தமிழகத்தில் முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிப் பேசுவது?" என்று திரு. கருத்திருமன் அவர்கள் கேட்டார்கள். அதற்கு திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் பதில் சொன்னார்கள்—"நல்ல காரியங்கள் செய்தால் நான் பாராட்டுவேன்; இதுவரையில் பாராட்டினேன்; இப்பொழுதும் பாராட்டிக் கொண்டிருக்கிறேன்; இனியும் பாராட்டுவேன்" என்று. சொன்னது யார்? காங்கிரஸ் அமைச்சர். எங்கே சொன்னார்? சத்தியமூர்த்தி பவனத்தில்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தவறான தகவல் கொடுப்பது மிகவும் தவறு. கருத்திருமன் கேட்டார், அவர் சொன்னார் என்று உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். என்னிடம் அதுமாதிரி சொல்ல அவருக்குத் தைரியம் இருக்காது. நான் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களிடம் அவ்வாறு கேட்டதாக திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் நாளைக்கே வந்தாலும் சொல்லட்டும், தைரியமாக.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** இவ்வளவும் பத்திரிகைகளில் வந்த செய்திகள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நிரூபிக்க வேண்டும். நல்ல காரியம் செய்தால் நானும் பாராட்டுவேன். எதிர்க்கட்சியில் இருந்தாலும் நாங்களும் பாராட்டு வோம். நல்லதை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால், திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் "இனியும் பாராட்டுவேன், எப்போதும் பாராட்டுவேன் என்று கருத்திருமனிடம் சத்தியமூர்த்தி பவனில் சொன்னார்" என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதை அவர்கள் நிரூபிப்பார்களா ?

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** நான் இதை எடுத்துக்காட்டாகச் சொல்வதற்குக் காரணம், முஸ்லிம் லீக் கட்சியைச் சார்ந்தவர்கள் பேசியிருந்தால் நான் குறிப் பிட்டுக் காட்டியிருக்கமாட்டேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "ஏன் பாராட்டினார்கள் ?" என்று கேட்டது வேண்டுமானால் உண்மையாக இருக்கலாம். ஆனால் திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள், "நான் அப்படித்தான் பாராட்டுவேன்" என்று கூறினார் என்று திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் சொல்வதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார். ஏனென்றால் அவர் சொல்லி இருக்க முடியாது, ஆனால், தொடர்ந்து திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் பாராட்டிக் கொண்டிருந்தார். அது உண்மை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அது இருக்கட்டும். இவர்கள் பெரிய கேலிக் கூத்தாகக் கூடப் போட்டார்கள். இதே சட்டசபையில் சொல்லியிருக்கிறேன். மறைந்த அண்ணாதுரை அவர்களும் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களும் மாலே போட்டுக்கொண்டு இருப்பதுபோல் போட்டு, கீழே நாயைப் போட்டு படம் போட்டிருந்தார்கள். நன்றியுள்ள மிருகம் நாய் ஒன்றுதான் 'முரசொலி' ப் பத்திரிகையில் படம் போட்டிருந்தது. அதைக் கொண்டுவந்து காட்டியிருக் கிறேன். திருடர்களைப் பிடிப்பது நாய் ; மக்களுடைய நலனைக் காப்பது நாய் ; நன்றியுள்ளது நாய். நல்ல வேலை செய்யும்போது நன்றியுடையவனாக இருக் கிறேன் ; பாராட்டியிருக்கிறேன். படம் போட்டிருக்கிறார்கள். அதைப் பற்றிக் கவலேயில்லை. நன்றியுள்ள மிருகம் நாய்தான்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** ஆகவே, காங்கிரஸ் கட்சித் தலைவர்களால் பாராட்டும், புகழும் பெற்ற இந்தத் தமிழக அமைச்சரவை—திராவிட முன் னேற்றக் கழகத்தினுடைய அமைச்சரவை—மிக்க சீரோடும், சிறப்போடும், நாட்டு மக்களுடைய நல்ல ஆதரவைப் பெற்று, மிகச் சிறந்த முறையில் பணி யாற்றி வருகிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களுடைய பெயரை நான் குறிப்பிட்டேன்.

அவர்களுடைய பெயரை நான் குறிப்பிட்டேன். இங்கே குறிப்பிடுகிறபோது, இந்த ஆட்சி தமிழகத்திற்கு எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை என்பதை அவர்களுடைய பேச்சின் இறுதியில் எதிர்க்கட்சித் தலைவர்கள் குறிப்பிட் டார்கள். அண்மையில் நான்கு மாத காலத்திற்கு முன்பு இந்த அவைக்கு அளித்த வரவு செலவுத் திட்டத்தில் எந்த அளவுக்குப் பலதுறைகளில் இருக் கும் பணியாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்,



என். ஜி. ஓ.-க்களுக்கும் நன்மைகளைச் செய்திருக்கிறது, என்பதை வரவு-செலவு அறிக்கையில் மிகத் தெளிவாக நாங்கள் குறிப்பிட்டிருக்கின்றோம். இரண்டாவது சம்பளக் கமிஷன் அறிக்கை வரக்கூடிய நேரத்தில் கூட, அது வரக் காலதாமதமாகும் என்று கருதி, சிறப்பு ஊதியமாகப் பத்து ரூபாய் அவர் களுக்கு அளித்து, அது மட்டுமல்லாமல் அவர்களுக்கு வேண்டிய இலவச மருந்து, இன்னும் எல்லாவிதமான நன்மைகளையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்து காட்டியிருக்கிறது. மருந்துகள், வீட்டு வாடகைப் படி, குளிர் காலப்படி போன்ற பல நன்மைகளை அரசு பணியாளர்களுக்கும் ஆசிரியர்களுக் கும் செய்து காட்டியிருக்கிறது.

சுமார் 5970 ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு களை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். இவ்வளவும் செய்ததைக் குறித்து தமிழ் நாடு ஆசிரியர்கள் கூட்டணித் தலைவர் இந்த அரசைப் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்திருக்கும் செய்தியை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தச் செய்தி பத்திரிகையில் வந்தது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வந்ததைப் பார்த்தோம்.

இந்த அரசு என்.ஜி.ஓ. க்களுக்குக் கொடுத்திருக்கிற சிறப்பு ஊதியம் பத்து ரூபாய் பற்றி என்.ஜி.ஓ. க்களின் சங்கத்தின் தலைவர் அரசாங்கத்திற்குப் பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சிதான் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறது. அதற்குக் காரணம், வெளியிலே உள்ள மக்கள் காங்கிரஸ் எம். எல். ஏ. க்களைப் பார்த்து 'என்ன சட்ட மன்றத் தில் பேசவே இல்லையே, வாய்மூடிக்கொண்டிருக்கிறீர்கள், கலைஞர் கருணாநிதி அவர்கள் ஏதாவது சொன்னால் ஏன் வாய்மூடி நிற்கிறீர்கள் ?' என்று கேட்டிருப் பார்கள். எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்களும், 'இதோ பாருங்கள் இந்த ஆட்சியின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறேன்', என்று சொல்லி, அவர்களிடம் சபாஷ் பட்டம் பெறுவதற்காக வேண்டி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார் என்று கருதுகிறேன்.

தற்போது இந்திய அரசியலில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. இம்மாதம் 1-ம் தேதி டெல்லி பாராளுமன்றத்திலே ராஜமானிய ஒழிப்பு நிறை வேறியிருக்கிறது. சிண்டிகேட்டும், இண்டிகேட்டும் ஒன்றாக இருந்த நேரத் தில் பத்து அம்ச திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஆனால் இப்போது அதே காமராஜர் ராஜமானிய ஒழிப்பு கூடாது. ராஜாக்களுக்கு அப்படியே முன் போலவே உரிமைகள் தர வேண்டும் என்று பாராளுமன்றத்திலே சொல்லி, தீர்மானத்தை எதிர்த்து ஓட் போட்டார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, ராஜ மானியத்தை ஒழிக்க வேண்டாமென்று காமராஜ் அவர்கள் சொல்லவில்லை. அவர்களுடைய காம்பன்சேஷனுக்கு வழிவகை செய்யவில்லையென்ற காரணத்திற்காக மீண்டும் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். எங்கள் கட்சியின் சார்பாக, அந்த வாதம் பாராளுமன்றத்திலே கிளப்பப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1970 செப்டெம்பர் 7

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, நான்கும் நான்கும் எட்டு என்பதற்கும் ஐந்தும் மூன்றும் எட்டு என்பதற்கும் விடை ஒன்றுதான். சோஷலிசத்திற்காகவே வாழ்கிறோம். இந்த நாட்டிலே சோஷலிசம் வளர வேண்டும், பெருக வேண்டும். என்று பல ஆண்டுகாலமாகப் பேசிவந்த ஜனநாயக சோஷலிசவாதிகள் அந்த ஜனநாயக சோஷலிசத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் வகையில் ராஜ மானியத்திற்கு ஆதரவாக ஓட் போட்டிருக்கிறார்கள். இந்தப் பிற்போக்கு சக்திகள் அங்கு தோல்வியடைந்ததும், தமிழகத்தில் நாம் எப்படி பவனி வருவது? இதற்கு ஏதாவது வழி தேட வேண்டும் என்ற வகையில்தான், முன்னேற்றக் கழகத்தில் இது ஓட்டை, இது உடைசல் என்று சொல்லி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தால் மக்களுடைய கவனம் எல்லாம் இதன்மீது திரும்பும் என்ற முறையில் மக்களுடைய கவனத்தைத் திசை திருப்புகின்றவகையில்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன். டெல்லியில் 1-ம் தேதி ராஜ மானிய ஒழிப்பு நடந்தது. உடனே 3-ம் தேதி இங்கே சட்டமன்றத்திலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

பத்தாண்டு காலமாக இருந்த அரிசிப் பஞ்சத்தை நாங்கள் ஒழித்திருக்கிறோம். அதற்கு இந்தக் காங்கிரஸ்காரர்கள் பாராட்டாவது தெரிவித்தார்களா, இல்லையே. ஜனவரி 8-ம் தேதியிலிருந்து ரேஷனை எடுத்துவிடலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களும் கூடிப்பேசி முடிவு செய்தார்கள். இதன்படி எல்லாவிடத்திற்கும் அரிசி எடுத்துக் கொண்டு போகலாம் என்ற நிலைமை ஏற்பட்டு, உணவுப் பஞ்சம் தலை காட்டாமல் ஒழிந்தது. ஆனால் அப்பொழுதும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அரிசி விலை குறைந்துவிட்டது, நெல்விலை குறைந்துவிட்டது, விவசாயிக்கு லாபம் கிடைக்கவில்லை, எனக்கும் லாபம் குறைந்துவிட்டது என்றுதான் பேசினார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** விவசாயத்தில் உங்களுடைய ஆட்சியில் லாபம் இந்த இந்த முறையில் கிடைத்திருக்கிறது என்று நீங்கள் பிரசாரம் செய்யலாமே?

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, நான் சபாநாயகர் அவர்கள் மூலமாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்மையில் ஒரு பெரியவர் இந்த ஆட்சியைப் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள், எழுதியிருக்கிறார்கள். "எனக்குத் தமிழ் சரியாகத் தெரியாது. கன்னடம்தான் தெரியும். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு கிராமங்களில் எல்லாம் ரோடு வசதி, மின்சார வசதி எல்லாம் சீராகக் கிடைத்து வருகிறது. கோடிக்கணக்கான ரூபாயைக் கிராம வளர்ச்சிக்கு இந்த அரசு செலவழித்து வருகிறது. என் ஊரான தாளவாடிக்கு முன்பு எல்லாம் ரோடு வசதி கிடையாது. இப்போது தார் ரோடு எங்கு பார்த்தாலும் போடப்பட்டிருக்கிறது. தாளவாடிக்கும் சத்தியமங்கலத்திற்கும் மாட்டு வண்டியில்தான் போக வேண்டும். அதற்கு எட்டு நாட்களாகும். ஆனால் இப்போது பஸ் வசதி ஏற்பட்டிருப்பதால் உடனுக்குடன் சென்று வர முடிகிறது. இந்த ஆட்சி பஞ்ச நிவாரண வேலைகளுக்காக மத்திய அரசாங்கத்திடமிருந்து பணம் வாங்கிச் செலவழித்திருக்கிறார்கள். நான் முப்பதாண்டுக் காலம் காங்கிரஸ் கட்சி உறுப்பினன். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் உறுப்பினன். இந்த ஆட்சியில் எனக்குத் தெரிந்து பல வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் எங்களுக்கு வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன . . ."



1970 செப்டம்பர் 7]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவருடைய பெயர் என்ன?

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** இன்றையதினம் கலைஞர் ஆட்சியில் பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். தாளவாடி பஞ்சாயத்து யூனியன் தலைவர் ராஜையா அவர்கள் அண்மையில் இவ்வாறு பேசியிருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திரு. சி. ஆர். ராஜையா அவர்கள் பேசினார்களா? அவர் முன்பு காங்கிரஸில் இருந்தது வாஸ்தவம். இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கட்சியில் சேர்ந்திருக்கிறார். அப்படிப்பட்டவர் ஏன் தேர்தலில் தோற்றுவிட்டார். (மணியடிக்கப்பட்டது.)

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** மீண்டும் 1972 தேர்தல் வரப்போகிறது. அதில் உங்களுக்கு காங்கிரஸுக்கு வெற்றி கிடைக்காது. (மணியடிக்கப்பட்டது.) வேண்டுமானால் நானே உங்களுக்கு, முதல்வரிடம் சொல்லி போட்டியில்லாமல் விட்டுக்கொடுக்கச் செய்கிறேன், என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இவர் யார் எனக்கு விட்டுக் கொடுப்பதற்கு? நான் உங்களை எப்போதும் எதிர்ப்பவன், எல்லா இடங்களிலும் எதிர்ப்பவன் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே எங்களுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையொட்டி ஒருசில கருத்துக்களை இந்த மன்றத்தில் வைப்பதற்கு விரும்புகிறேன். 1969-70 ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போதும், அதற்கு முன்பு நடந்த தொடர்க் கூட்டத்தின்போதும் ஒருசில விஷயங்களை இந்த மன்றத்திலே வைத்துப் பேசினேன்.

ஒன்று மெடிகல் காலேஜ் சம்பந்தமாக ஒரு அமைச்சர் பத்தாயிரம் ரூபாய் பணம் வாங்கியதாகவும், ஐந்தாயிரம் ரூபாய் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு, மீதி ஐந்தாயிரம் ரூபாய் பணத்தைத் திருப்பித் தரவில்லையென்று அந்தப் பணம் கொடுத்த மாணவர் ஒரு பெட்டிஷனை அவரே, கையெழுத்திட்டு எனக்கு கொடுத்தார். அதில், முன்பாகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மற்றும் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் குறிப்பிட்ட எந்த அமைச்சர் பணம் வாங்கினாரோ அதே அமைச்சருக்கும் பெட்டிஷன் கொடுத்திருப்பதாக அந்த மனுவில் குறிப்பிட்டிருந்தது. அந்தப் பையனுடைய பெட்டிஷனைக் காட்டி, அந்த மனுவின்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று இந்த மன்றத்திலே கேட்டேன். அந்த நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'ராமசந்திரதுரை அவர்கள் இம்மாதிரியான மெடிகல் காலேஜ் சம்பந்தமாக, அதாவது பணம்வாங்கினார் என்று ஒரு மனு வந்தால், எப்படி நடவடிக்கை எடுப்பது என்று சொன்னார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 'லஞ்சம் கொடுப்பதும் தவறு, லஞ்சம் வாங்குவதும் தவறு, இரண்டும் குற்றம்' என்று சொன்னார்கள். எந்தக் குறிப்பிட்ட பையன் பணம்கொடுத்

தாரோ, அதே பையன் கையெழுத்துப் போட்ட மனுவை இந்த பேரவையில் தாக்கல் செய்திருக்கிறேன்' என்று நான் அதற்குச் சொன்னேன். அந்த மனுவின்மீது விசாரணை செய்தால், அந்தப் பையனைக் கொண்டுவந்து முன்னால் சாட்சியாக நிறுத்தத் தயாராக இருக்கிறேன் என்று அந்தத் தொடர் கூட்டத்திலேயே இதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் பணம் வாங்கினால், வாங்கவில்லை, பையன் பணம் கொடுத்தான், கொடுக்கவில்லை அதைப்பற்றிய பிரச்சினை இல்லை. இந்த மன்றத்திலே ஒரு பிரச்சினையை வைத்ததற்குப் பிறகு, பணம் வாங்கியிருந்தால் அந்த அமைச்சர் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். பையன் அப்படிப் பணம் கொடுக்கவில்லையென்றால் பையன்மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். பையன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. பாக்கி கொடுக்க வேண்டிய தொகை அந்தப் பையனிடத்திலே போய்க் கொடுத்து சரிக்கட்டியிருப்பதாகத்தான் பொருள் படுகிறதே தவிர, விசாரணைக்குக் கொண்டுவந்ததாகத் தெரியவில்லை. நீதியை நிலைநாட்ட வேண்டிய அரசு இந்த மனுவின்மீது நடவடிக்கை எடுக்கவில்லையென்பதை நினைவில் கொண்டு தான், இப்போது நாங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம்.

அதற்கடுத்தபடியாக டி.ஐ.ஜி. நாராயணன் அவர்கள் ஒரு பெண்ணை அரசாங்கக் காரை ஓட்டச் சொல்லி அந்தக் கார் மரத்தில் மோதி—விளக்கமாகச் சொல்ல நேரம் இல்லை—முன்பே சொல்லியிருக்கிறேன்—இந்தப் பிரச்சினைபற்றி சென்ற கூட்டத்தொடரிலேயே சொன்னேன். தகுந்த நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். இன்று கிட்டத்தட்ட நான்கைந்து மாதங்கள் ஆகின்றன. எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

இதற்கு முன்பு நடந்த கூட்டத் தொடரில் டி. கே. இண்டஸ்ட்ரி என்ற நிறுவனத்தாருக்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 60 ஆண்டு லீசுக்கு ஒரு ஏக்கரா நிலம் செயின்ட் தாமஸ் மவுண்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் ஒரு ஏக்கரா எண்பது சென்ட் நிலம்—நான்கு லட்சம் பெறுமான இடம்—அந்த இடத்தை ஹவுசிங் போர்டு கேட்டு, கொடுக்க மறுத்து, கார்ப்பரேஷன் கேட்டு கொடுக்க மறுத்துவிட்டு இந்த நபருக்குப் பட்டா செய்து கொடுக்க சிபார்சு செய்து போயிருக்கிறது என்று குறிப்பிட்டேன். அமைச்சர் அவர்கள் கூட நல்லதொரு யோசனையைக் கிளப்பியிருப்பதாக என்னைப் பாராட்டினார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆனால் என்ன ஆயிற்று இன்று செயின்ட் தாமஸ் மவுண்ட்டில் அந்த இடத்தில் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கப்பட்டுவிட்டதா? அல்லது லீசுக்குத் தரப்பட்டிருக்கிறதா என்கிற விவரம் தெரியவில்லை.

அதற்கு அடுத்தபடியாக, கீவளூர் அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் நாகப்பட்டினம் தி.மு.க. வட்டச் செயலாளருடைய—வெங்கடங்கால் சந்தானம் என்பவர்களுடைய மகள் படிக்கிறாள். மிகக் குறைந்த 9 மார்க்குகளே வாங்கினாள் என்பதற்காக அவள் ஃபெய்ல் போடப்படவேண்டிய நிலையில்—அவளுக்கு பாஸ் போட வேண்டுமென்று போய்க் கேட்டிருக்கிறார்கள். ஆசிரியர் அதற்கு மறுத்து விட்டார். அதற்குப் பிறகு மாவட்டக் கல்வி அதிகாரியிடத்தில் சென்று, விசேஷ கல்வி அதிகாரியிடத்தில் சென்று



அந்த இரண்டு அதிகாரிகளிடமும் அந்தப் பெண்ணுக்குப் பாஸ் போட வேண்டுமென்று ஆசிரியரை மிரட்டி, பாஸ் போட வைத்தார்கள் என்ற செய்தி நவ சக்தி பத்திரிகையில் வந்த பிறகு, சென்னை கடற்கரைக் கூட்டத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் "நேற்றும் இன்றும் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் ஒரு உயர் நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியரை மிரட்டி மாவட்டக் கல்வி அதிகாரிகள் ஒரு கழக உறுப்பினரின் பெண்ணுக்குப் பாஸ்போட வைத்திருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டு. அதைப் படித்துவிட்டு நான் அலட்சியம் செய்யவில்லை. உடனடியாக மாவட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டிருக்கிறேன். இந்தச் செய்தி உண்மையாக இருக்கும் பட்சத்தில் முதல் அமைச்சர் என்ற முறையில் அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பேன். அதே நேரத்தில் கழகத் தலைவர் என்ற முறையில் கழகத் தோழர் மீதும்—செய்தி உண்மையாக இருக்குமானால்—நடவடிக்கை எடுப்பேன்". என்பதாக கடற்கரை கூட்டத்தில் முதல்வர் பேசியதாக பத்திரிகையில் வந்திருக்கிறது.

இந்த நடப்பு உண்மையா, இல்லையா என்பதற்கு இதுவரை எந்தவிதமான விளக்கமும் வரவில்லை. ஆனால் கல்வி அதிகாரிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் அந்தத் தலைமை ஆசிரியர் அவருடன் சேர்ந்த ஆசிரியர் இரண்டு பேரையும் அந்த இடத்தை விட்டே மாற்றியிருக்கிறார்கள். யாருக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமோ அவர்களுக்குத் தண்டனை அளிக்கப்படவில்லை. ஆனால் அந்தத் தவறைச் செய்ய மறுத்த தலைமை ஆசிரியர், கூட இருந்த இன்னொரு ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த இடத்தைவிட்டே மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்றால் கழகத் தலையீடு நிர்வாகத்தில் எவ்வளவு தூரம் செல்வாக்குப் பெற்றிருக்கிறது என்பதை இதில் இருந்து புரிந்துகொள்ள முடியும்.

* * *

தனியார் நிறுவனம் தேசிய மயம் ஆக்க வேண்டுமென்ற பிரச்சினை பல ஆண்டுகளாக எல்லாக் கட்சிகளாலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இது உள்ளபடியே பாராட்ட வேண்டிய விஷயம். இங்கு பஸ் போக்குவரத்து எல்லாம் தேசிய மயம் ஆக்கினார்கள். அது உள்ளபடியே பாராட்டப்பட வேண்டிய விஷயம். இந்த பஸ் போக்குவரத்து தேசிய மயம் ஆகிவிட்டாலும் கூட ஒரு லட்சம் இரண்டு லட்சம், சில பேர்கள் -0 லட்சம் பெறுகிறார்கள். இப்போது அரசாங்கம் எடுக்கக்கூடிய சில பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட நபர்களுக்கே கொண்டு கொடுக்கிறார்கள். அரசாங்கம் செய்யக்கூடிய காரியங்கள், அவர்களே முன் வந்து செய்யக் கூடிய காரியங்கள் எல்லாம் தனிப்பட்டவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கக்கூடிய வகையில் அவர்கள் உத்தரவிடுகிறார்கள். மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கூட சொன்னார்கள்.

இந்த வீராணம் பிரச்சினைப் பற்றி பேசினார்கள். அந்த வீராணம் பற்றி ஒருசில விஷயங்களைக் கூற ஆசைப்படுகிறேன். அந்த வீராணத்தில் 132 மைல் நீளம் உள்ள குழாய்களின் குறுக்களவு 5' 6". இது சர்க்காருடைய நிபந்தனை

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**என்ன வென்றால் சர்க்காருடைய நிபந்தனை 8 அட்மாஸ்பியர் காற்று அழுத்தம்,** குறைந்த பட்சம். அதிக பட்சம் 10 அட்மாஸ்பியர் காற்று அழுத்தம் இருக்க வேண்டும். இதற்கு 9 பேர்கள் டெண்டர் போட்டார்கள். சர்க்காருடைய நிபந்தனைப்படி ஏற்இக் கொள்ளப்பட்ட டெண்டகள் 4. அதில் மூன்று டெண்டர்கள் சுழற்சிக் குழாய்கள். ஸ்பின்னிங் டைப். ஒரு டென்டர் **சூனிய முறை குழாய் (வேக்கும் டைப்) இதில் குறைந்த டெண்டர்கள் எடுத்து வாக்கும் டைப் காரர்களுக்கு கொடுத்தாக அமைச்சர் அவர்களுடைய வாதம்,** அதற்கு முன்பு கொடுத்த மூன்று டெண்டர்காரர்களும் 17½ கோடி, 20½ கோடி வரை டெண்டர் கொடுத்திருக்கிறார்கள். இந்த வாக்கும் டைப் டெண்டர் எடுத்த சத்தியநாராயண பிரதர்ஸ்-ஐ சேர்ந்தவர்கள் அன்னிய செலவாணியாக வேண்டி ரூ. 180 லட்சம் கேட்டார்கள். மற்ற மூன்று டெண்டர்காரர்களும் அன்னிய செலவாணியாக அவ்வளவு அதிகமாக கேட்க வில்லை. அதே நேரத்தில் சர்க்காருடன் நடத்திய பேரத்தில் . . .

**(மணி அடிக்கப்பட்டது)**

திரு. ரா. ராமச்சந்திரதுரை : எனக்குக் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் ஒரு நிமிஷம் இருக்கிறது. அதற்குள் பேசுங்கள்.**

திரு. ரா. ராமச்சந்திரதுரை : அந்நிய செலவாணிக்காக 120 இலட்சத்திற்குக் குறைத்துக் கொண்டார்கள். 15½ கோடிக்கு அதிகமாக, 90 இலட்சம் டெண்டர் கோரிக்கைக்குக் கூட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும் **பொழுது, ½ கோடிதான் வித்தியாசம் இருக்கிறதே தவிர, அவர்களுக்கும்,** இவர்களுக்கும் ½ கோடி தான் வித்தியாசம் இருக்கிறது, அதற்காக வேண்டி அரை கோடிக்காக வேண்டி, 10 இலட்சத்திலேகூட செய்யலாம். அப்படிச் **செய்தால் பத்து நாட்களிலே உடைந்து போகும் பைப்புகளைப் போட்டு பத்து இலட்சத்திலேகூடச் செய்யலாம். எனவே, 50 லட்சம் போகிறது என்பதற்காக வேண்டி. . .**

(மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்பொழுதே ஒரு விளக்கத்தைக் கூறுவது நல்லது என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் குற்றம் சாட்டும்பொழுது, தஞ்சை மாவட்டம் கீவளூர் உயர்நிலைப்** பள்ளியில் நடந்த ஒரு நிகழ்ச்சியைப்பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். அந்தப் **பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்குத் தேர்வு அளிக்கும் முறையில் ஒரு குறிப்பிட்ட உறுப்பினருடைய மகளுக்கு மேல் வகுப்பிற்குச் செல்ல முறைகேடான வகையில் ஈடுபாடு கொண்டு அந்தத் தேர்வு அளிக்கப்பட்டதாகச் செய்தித் தாளில் செய்தி வந்தது. அதைக் கண்டவுடனே மாண்புமிகு முதலமைச்ச**ரவர்கள், அது பற்றி உண்மையான நிலைமையிருந்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னது உண்மை, கடற்கரைக் கூட்டத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.





உடனே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறியதற்கிணங்க, பள்ளிக் கல்வியின் இணை இயக்குநர் அவர்கள் உடனடியாக அங்கு அனுப்பி வைக்கப்பட்டு, நிலைமைகளை ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுக்க வேண்டுமென்று, இதுபற்றி புகார்கள், செய்திகள் வந்திருக்கின்றன என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள் என்ற அளவிற்கு, வேறு யாரையும் அனுப்பினால் விசாரணை தகுந்த முறையில் இருக்குமா என்று எண்ணி, இணை இயக்குநர் அவர்களை அனுப்பினோம். 27—6—1970 அன்று சென்று அவர்கள் விசாரித்து வந்தார்கள். ஆகவே, 22—5—1970 அன்று தேர்வு பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டன. இருக்கின்ற விதிமுறைகள் என்ன **சொல்கிறது என்றால்,**

For purposes of promotion the Headmaster shall frame definite principle for each class in consultation with Staff Council and apply them strictly and impartially in all cases.

என்பது விதிமுறையாகும். 22—5—1970-இலே தேர்வு அளிக்க குழு அமைந்தது. தலைமையாசிரியரும், மற்ற 6 ஆசிரியர்களும் அதிலே இடம் பெறுகிறார்கள். அன்று இரண்டு ஆசிரியர்கள் வரவில்லை. கூட்டத்திலே கலந்து கொள்ள வேண்டியிருந்த தலைமையாசிரியர் 22—5—1970 அன்று கலந்து கொள்ளவில்லை. ஆனால், தலைமையாசிரியர் கலந்துகொள்ளாத நிலைமையில் மற்ற ஆசிரியர்கள் தேர்வு அளிக்கக்கூடிய முறையைக் கடைபிடித்தார்கள். அந்த முறையின் மூலமாகப் பலபேர் தேர்வு அளிக்கப்படாத சூழ்நிலை ஏற்படும் என்று கருதி, 23—5—1970-இல் தலைமையாசிரியர் மீண்டும் ஸ்டாப் கவுன்சில் கூட்டத்தைக் கூட்டி, அந்தக் கன்சிடரேஷன் நடைமுறையைப் பொதுவாகத் திருத்தியிருக்கிறார்கள்.

முதலில் ஹெட்மாஸ்டரை வைத்துக்கொண்டு திருத்த வேண்டுமென்று விதியிருக்கிறது. எதிர்பாராதவகையில் தலைமை ஆசிரியர் வராத காரணத்தினால், மற்ற ஸ்டாப் உறுப்பினர்கள் சேர்ந்து முடிவிற்கு வந்தார்கள். அந்த முடிவுகளின்படி, பலபேர் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு வகையில், 15, 20 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஹெட்மாஸ்டர் **அந்த நிலையைச் சரிக்கட்ட மறுபடியும் 23—5—1970-இல் அன்று ஸ்டாப் கவுன்**சில் கூட்டத்தைக் கூட்டி ஒரு முறையை வரையரை செய்து, அதன்மூலமாக **ஒவ்வொரு பள்ளியிலேயும், அந்த முறைதான் கையாள வேண்டுமென்ற நிலையில்,** ஹெட்மாஸ்டரும் அந்தக் கவுன்சிலும் செய்த முடிவுதான் இறுதியானது என்று, 89 பேர்களுக்குப் பலனளிக்கும் வகையில், முடிவெடுக்கும் தன்மை வந்தது. **அப்படியிருந்தும், 15, 16 பேர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் தேர்ந்தெடுக்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டது.**

எனவே, அப்படிப்பட்ட முறையிலே தேர்வு அளிக்கப்பட்டவர்களில் ஒரு **பெண்தான் செல்வி கலையரசியே தவிர கலையரசிக்காக மட்டும் தேர்வு தர வேண்டுமென்ற அடிப்படையிலே இது செய்யப்படவில்லை. 89 பேர் இதன் மூலம் பலன் பெறுகிறார்கள்.** ஆகவே அவர்கள் திரும்ப வைக்கின்ற சூழ்நிலையில், ஹெட்மாஸ்டரே அந்த முடிவைச் செய்திருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தை கொண்டு வந்து என்னிடம் காட்டினார்கள். முதலில் தலைமையாசிரியர் செல்லவில்லை. மற்ற ஆசிரியர்கள் முடிவெடுத்தார்கள். மறுநாள் தலைமையாசிரியரும், மற்றவர்களும் சேர்ந்து முடிவெடுத்தார்கள். அந்த முடிவை பல பள்ளிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில்,

A comparative study of principle followed by other schools in the area reveal that principle followed by this school was very high. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைவிடக் குறைந்த அளவிலே நிலைப் பள்ளிகளில், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த As many as 63 schools in the district did not specify minimum mark for promotion. என்ற அளவில் மற்ற பள்ளிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இந்தப் பள்ளியில் இவர்கள் எடுத்த அத்தகைய முடிவு, குறிப்பிட்ட ஒரு பெண்ணிற்காக எடுக்கப்பட்டது முறையல்ல என்பதையும், ஆகவே, இதில் எந்தவிதமான தவறும் இல்லை என்று துணை இயக்குநர் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

இதை ஏன் இந்த அவையின்முன் சொல்கிறேன் என்றால், தனிப்பட்டவர்களுக்காகவே மாற்றம் செய்தார்கள் என்றால் அதன்மூலம் மற்றப் பள்ளிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, எல்லாப் பள்ளிகளிலும் எடுத்துப் பார்க்கும்பொழுது மிகவும் தாழ்ந்திருக்கிறார்கள் என்று இதற்காக எடுக்கப்பட்டதே தவிர, முடிவு எடுத்திருப்பதில் தனிப்பட்ட முறையிலே ஒரு பெண்ணிற்காக மட்டும் ஏற்கப்பட்டது என்னும் முறை இல்லை என்று துணை இயக்குநர் தந்திருக்கிற அறிக்கையின் மூலம் தெளிவாக்க நான் விரும்புகிறேன்.

மேலும், இரண்டுபேர் மாற்றத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இரண்டு பேர் மாற்றப்பட வேண்டுமென்று தலைமை ஆசிரியர் பல மாதங்களுக்கு முன்பே, டைரக்டருக்கு எழுதியிருப்பதாக சி.ஓ. எழுதி வைத்திருந்து, அது காலப் போக்கிலே, உடனடியாக மாறுதல் அளிக்கும் முறை வந்து, அதையொட்டி ஏற்பட்டது, முடிவு செய்தது இரண்டு பேர் மட்டுமல்ல, 4, 5 பேர்கள்தான் முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே, இரண்டு பேர் மாறுதல் இதையொட்டி ஏற்பட்டது அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நம்முடைய கல்வியின் தரம் எவ்வளவு கீழே வந்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் உணர்ந்து கொள்கிறார்களா? இவ்வளவு கீழேயிருக்கும் மார்க்குப் போட்டிருக்கிறார்கள்? ஒரு இடத்திலே ஃபர்ஸ்ட், செகண்ட் என்று சொன்னார்களாம். அந்த இடத்திலே மொத்தம் இருந்ததே இரண்டு பேர்தானும். ஒன்று வாங்கியவன் பர்ஸ்ட், சைபர் வாங்கியவன் செகண்ட் என்று அதுமாதிரிதான் இருக்கிறது. எவ்வளவு தரம் குறைந்திருக்கிறது? சிபாரிசினால் நடக்குமோ என்ற சந்தேகம் இருக்கிறது? தரத்தை உயர்த்துவார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களைப் போலவேதான் நானும் வருந்துகிறேன். தரம் குறைந்துதான் வருகிறது. தரத்தை உயர்த்த வேண்டுமென்று நானும் குறிப்பிட்டிருக்கிறேன். நான் படிக்கின்ற காலத்தில் இருந்ததைவிட தரம் குறைந்து வருகிறது. பல பள்ளிகளில் குறைந்து விட்டதைக் குறிப்பிட்டு இயக்குநரிடத்திலே சொல்லியிருக்கிறேன். தரம் உயர வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். மற்ற அவையிலேகூட கூறினேன். பதினோரு உயர்நிலைப்பள்ளிகளில் ஒருவர் கூட வெற்றிபெறாத நிலை இருக்கிறது.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதுதான் உங்கள் சாதனை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதற்கு முன்பும் இருந்தது. தொடர்ந்து ஏறியும், இறங்கியும் இருக்கிறது. முப்பத்தெட்டு பள்ளிகளில் நூற்றுக்கு நூறு பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதுவும் சாதனைதான். ஆகவே, எடுக்கப்பட வேண்டிய முறை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை உணர்த்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, பெரிய விஷயங்களைப்பற்றி அவ்வப்பொழுது சொல்லிவிடுவது கடைசியிலே பதில் சொல்வதற்கு சௌகரியமாக இருக்கும் என்ற முறையில் அமைச்சர்கள் சில விவரங்களை விளக்க முற்படுகிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் இப்பொழுது இங்கிருந்து போய்விட்டார்கள். அவர்கள் பேசும்பொழுது, பறங்கிமலைப் பகுதியில் டி. கே. இண்டஸ்ட்ரீஸ் என்ற ஒரு நிறுவனத்திற்கு ஒரு ஏக்கரா நிலம் அளிக்கப்பட்டது என்று சொன்னார்கள். டி. கே. இண்டஸ்ட்ரீஸ் நல்ல முகப்பான இடத்திலே இருக்கிறது, விளக்கெல்லாம் போட்டிருக்கிறது. அளிக்கப்பட்ட நிலம் இதற்கு முன்பு இருந்த அரசாங்கத்தால் அளிக்கப்பட்டது. திருவாளர் பக்தவச்சலம், தொழில் அமைச்சராக இருந்த திரு. வெங்கட்டராமன், இன்னும் ரெவின்யூ அமைச்சராக இருந்த திரு. ராமையா ஆகிய 3 பேரும் சேர்ந்து அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலம்.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் திருப்பத் திருப்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மந்திரிகூட சொன்னதாகக் கேள்வி என்று சொன்னார்கள். எந்த மந்திரி என்று தெரியவில்லை. மந்திரிகளே, ஏதோ கேள்வி கேட்கச் சொன்ன மந்திரி எந்த மந்திரி என்று தெரியவில்லை. எம். ஜி. ஆர். ஸ்டுடியோ நிலம் பற்றி வரும் நேரத்தில் டி. கே. இண்டஸ்ரீஸ் என்ற நிலத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவரைப்பொறுத்தவரையிலே இந்த நிறுவனத்திற்கு எந்த நிலத்தையும் பட்டாவாகவோ அல்லது வாடகைக்கோ கொடுக்கவில்லை. இதற்கு முன்பிருந்த அரசாங்கம், திருவாளர் பக்தவச்சலம், திருவாளர் வெங்கட்டராமன், திருவாளர் ராமையா அவர்கள் கையெழுத்திட்டு, அதுவும் கூட பட்டாவாக இல்லை, அந்தத் தொழில் செய்ய வாடகைக்காக. 20, 30 வருஷம் இருக்க வேண்டுமென்று கொடுத்திருக்கிறதே தவிர, அவர்கள் போய் விட்டார்கள். இப்பொழுது கட்டடங்கள்தான் இருக்கின்றன. ஏதோ வழியிலே போகிறவர்கள், இவர்கள் கொடுத்தார்கள் என்று பேசுவதை வாதமாக்க வேண்டாம். அவர்களுக்கு எந்த நிலத்தையும் இந்த அரசாங்கம் கொடுக்கவில்லை என்பதை முதலமைச்சர் அவர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(திரு. ரா. ராமச்சந்திரதுரை அவர்கள் எழுந்தார்கள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ளவில்லையா?

**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** நான் ஒன்றும் குற்றம் சாட்டப் போகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அமைச்சரவை அந்த நிறுவனத்திற்கு நிலத்தைக் கொடுக்கவில்லை, முன்பிருந்த அமைச்சரவைதான் கொடுத்தது என்று அமைச்சர் அவர்கள் கூறியதை ஏற்றுக் கொள்ளுகிறீர்களா இல்லையா?

திரு. ரா. ராமச்சந்திரதுரை: ஏற்றுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது திரு. தனுஷ்கோடி அவர்கள் பேசுவார்கள்.

*திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தலைவர் அவர்களே, எங்கள் கட்சி சார்பி லும், இடதுசாரி கட்சிகள் சார்பிலும் வைத்திருக்கக்கூடிய கண்டனத் தீர்மானத் தின்மீது பேசுகையில் தஞ்சை மாவட்டத்தில் போலீஸ் இலாகா நடத்தியிருக் கும் கொடுமைகளைப் பற்றிய சில விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

1967-ம் வருஷம் சட்டமன்றம் புதிதாகத் துவங்கப்பட்டவுடனே தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள் பூராவும் கடந்த காங்கிரஸ் அரசாங்கத்தினால் ஏற்பட் டிருக்கக்கூடிய கொடுமைகள் மாறி புதிய அரசு வந்த பிறகு நல்ல எதிர்காலம் இருக்குமென்று நினைத்தார்கள். அந்த மக்களுக்குத் தஞ்சையிலே நடந்த கொடுமைகளைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1967-ம் வருஷம் எப்ரல் மாதம் 4-ம் தேதி என்னுடைய தொகுதியில் ராதா மங்கலம் என்கிற கிராமத்தில் நெல் உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்தவர் களும், நிலப் பிரபுக்களும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு, விவசாயத் தொழிலா ளர்கள் காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்தார்கள் என்ற காரணத்திற்காக அந்த அரிசன மக்கள் தெருக்களில் நடக்க முடியாத அளவுக்கு நிலைமையை ஏற்படுத் தினார்கள். சட்ட மன்றக் கூட்டத்திற்கு வந்துவிட்டு நான் திரும்பியவுடன் அதைப் பற்றிக் கேள்விப்பட்டு அந்தக் கிராமத்திற்குச் சென்றேன். எங்கு பார்த்தாலும் அரிசனங்கள் தெருவிலே வர முடியாத நிலை இருந்தது. அடியாட் களை வைத்துக் கொண்டு ஈட்டி, வாள் கொண்டு தாக்கினார்கள். போலீசாரைப் பார்த்து அந்த அரிசன மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டபோது கீவளூர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் நிலப் பிரபுக்கள் பாதுகாப்புக்கு எது வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுவார்கள். நீங்கள் யார் கேட்பதற்கு என்று என்னையே கேட்டார்கள். அதைப் பற்றி நான் காலஞ் சென்ற முதலமைச்சர் அவர்களுக்கு எழுதினேன். அவர்களும் இதுபற்றி நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால் பல அசம்பா விதமான சம்பவங்கள் நடக்காமல் தடுக்கப்பட்டிருக்க முடியும். இதற்கு ஆக்கமும், ஊக்கமும் ஊட்டக் கூடிய அளவிலேதான் அங்கே நிலைமை இருந்தது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் கண்டனத் தீர்மானத்தை இன்று கொண்டு வந்திருக்கிறோம்.

என்னுடைய தொகுதியில் 1968-ம் வருஷம் எப்ரல் மாதம் வைப்பூர் சூரனூர் கிராமத்தில் திராவிட கழகத்தைச் சேர்ந்த 15 பேர் எங்களுடைய இயக்கத்திற்கு வந்த காரணத்தால் அந்தத் தெருவில் இருப்பவர்கள் அவர்களை அடிக்க வேண்டு மென்று கூறி நிலப் பிரபுக்கள் தூண்டுதல் பேரில் கொடூரமான காரியங்களில் இறங்கினார்கள். இதைப்பற்றி இரவு 2 மணிக்கு நாகப்பட்டினம் போலீஸ் சூப்பரின்டெண்டுக்கு போன் பண்ணி உடனடியாகப் பாதுகாப்புக் கொடுக்க



வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் மறுநாள் காலை 10 மணிவரை எந்தப் போலீஸ்காரரும் அங்கே போகவில்லை. இதன் காரணமாக அங்கே 34 அரிசனக் குடிசைகள் எரிக்கப்பட்டன. பக்கிரிசாமி என்ற விவசாயத் தொழிலாளியின் கை துண்டிக்கப்பட்டது. போலீஸ் பாதுகாப்பு கேட்ட நேரத்தில் கொடுத்தி ருந்தால் இவற்றைத் தடுத்திருக்கலாம்.

போலீஸ் கொள்கையிலே மாற்றம் வேண்டுமென்று இந்தச் சர்க்கார் அமைந் தவுடனேயே சொன்னோம். வெள்ளையர் ஆட்சிக் காலத்திலும் சரி, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, இன்றையதினமும் சரி, சில அதிகாரிகள் நிலப் பிரபுக் களுக்கும், முதலாளிகளுக்கும் உதவிகரமாக இருந்தார்கள், இருக்கிறார்கள், இனியும் இருப்பார்கள் என்ற நிலை இருக்கிறது. இதைப்பற்றி நாங்கள் அன்றே இந்த அரசாங்கத்துக்குச் சொன்னோம். ஆனால் அரசாங்கம் அன்றைய தினம் இதைக் கவுரவப் பிரச்சினையாகப் பார்த்தது. ஆகவே இன்றைய தினம் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையில் நாங்கள் கண்டனத் தீர்மானம் கொண்டு வரும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

1968-ம் வருஷம் அக்டோபர் மாதம் 15-ம் தேதி அன்று தேக்கரை ராமச் சந்திரன் அவர்கள் போலீசில் ஒரு புகார் கொடுத்தார். திருவாரூர் சப்-இன்ஸ் பெக்டரிடம் திரு. ஞானசம்பந்தமும் எழுதிக் கொடுத்தார். திருவாரூர் போலீஸ் அதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்தார்கள். என்னுடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும், பாதுகாப்புக் கொடுங்கள் என்று எழுதிக் கொடுத்தார். அந்த நகல் அங்கே இருக்கிறது. முதலமைச்சர் அவர்களுக்கும் எழுதப்பட்டது. அன்றையதினம் அவருக்குப் பாதுகாப்புக் கொடுத்திருந்தால் ராமச்சந்திரன் கொலை செய்யப்படாமல் தடுத்திருக்க முடியும். அந்த உயிருக்குப் பாதுகாப்பு இல்லை. காரணம் என்ன? அவர் மாநில லஞ்ச ஒழிப்புக் கமிட்டியில் முன்னால் இருந்த அரசாங்கத்தாலும் நியமிக்கப்பட்டார், இந்த அரசாங்கம் வந்த பிறகும் நியமிக்கப்பட்டார். அவரால் பாதிக்கப்பட்ட பல அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் உட்பட இருக்கிறார்கள். அவர் எங்களுடைய இயக்கத்தின்தச் சார்ந்து வந்தார் என்ற காரணத்திற்காக இரவு 7 மணிக்கு விசில் அடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். முன்கூட்டியே போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்தால் அந்த உயிரைக் காப்பாற்றி இருக்கமுடியும்.

1968-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 15-ம் தேதி எங்கள் கட்சி ஊழியர் சிக்கல் பக்கிரிசாமி பொதுக்கூட்டத்திற்குச் சென்று திரும்பியபோது இரவு 10½ மணிக்குக் கொலை செய்யப்பட்டார். திரு. சங்கரய்யா காலை 10 மணி என்றார் கள், அது சரியல்ல, இரவு பத்தரை மணிக்குத் தெருவிலே கொலை செய்யப் பட்டார். அங்கு போலீஸ் அதிகாரிகளும் மற்றவர்களும் முகாம் செய்திருந் தார்கள். கல்வியமைச்சர் அவர்கள் விவசாயக் கூலித்தகராறு சம்பந்தமாக பேச வந்த நேரத்தில் மிராசுதார்கள் போலீஸ் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டு அங்கு போலீஸ் முகாமிட்டிருந்தது. போலீஸ் பாதுகாப்பு இருக்கக் கூடிய இடத்தில் இரவு [illegible] மணிக்குக் கொலை செய்யப்பட்டார்.

போலீஸ் கொள்கையிலே மாற்றம் வேண்டும். எந்த மக்கள் இந்த அரசு வரவேண்டுமென்று ஆவலாக இருந்தார்களோ, எந்த ஏழை எளிய மக்கள், கிராமப் பகுதி மக்கள் இந்த அரசாங்கத்தைக் கொண்டு வந்தார்களோ அதே அரசாங்கத்தின் போலீஸ் கொள்கையினால் எப்படிப்பட்ட கொடுமைகள் இழைக்

கப்படுகின்றன, எப்படிப்பட்ட பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பக்கிரிசாமி தினம் கொண்டாடிய நேரத்தில் நானும், ஞானசம்பந்தமும் நாகப்பட்டினம் போலீஸ் டெபுடி சூப்பிரண்டிடம் கூறினோம். கீழ்வெண்மணியில் தெருவையே கொளுத்த வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள், போலீஸ் பாதுகாப்புக் கொடுங்கள் என்று சொன்னோம். பாதுகாப்புக் கொடுத்தார்களா? 1968-ம் வருஷம் டிசம்பர் மாதம் 5-ம் தேதி அன்று முதலமைச்சர் அவர்களுக்கு பதிவுத் தபாலில் எழுதினோம். கீழ்வெண்மணியில் நெல் உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் காங்கிரஸ் கட்சியை விவசாயத் தொழிலாளர்கள் தோற்கடித்தார்கள் என்பதற்காக நெல் உற்பத்தியாளர்கள் தங்கள் கொடியை ஏற்ற வேண்டுமென்று சொல்லி அங்கே கொளுத்தப் போகிறார்கள், உடனடியாகப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று பதிவுத் தபாலில் முதலமைச்சர் அவர்களுக்கு எழுதினோம். இடையில் 20 நாட்கள் இருந்தன. எந்த நிலப் பிரபு என்ற பெயர் கூட எழுதிக் கொடுத்தோம். யாருடைய பெயர் குறிப்பிட்டிருந்ததோ அவரைக் கூப்பிட்டுத் தடுத்திருந்தால், பாதுகாப்புக் கொடுத்திருந்தால் 44 உயிர்களைப் பாதுகாத்திருக்க முடியும். அமைச்சர் அவர்கள் பேசக்கூடிய நேரத்திலே எங்களுக்கும் அக்கறை இல்லையா என்று கேட்டார்கள். அக்கறை இல்லையென்று சொல்லவில்லை, பரிதாபப்படுவது உண்மையாக இருக்குமானால் 20 நாள் இடைவெளியில் போலீஸ் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருந்தால் இன்று உலகத்தின் கவனத்தில் கீழ்வெண்மணி இருக்க முடியாது.

கீழையூரில் இந்த வருஷம், 1970-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 2-ம் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த, மருத்துவ குலத்தைச் சேர்ந்த சிங்காரவேலு என்பவரை நாகை தாலுகா கீழையூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்தேகக் கேசில் அழைத்துக் கொண்டு போனார்கள். அவர் பட்டியில் அடைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவர் பஞ்சாயத்தாராக நியமிக்கப்பட்டு போலீஸ் நடவடிக்கையால்தான் அவர் இறந்துவிட்டார் என்று சொன்னார். மீண்டும் போலீசுக்குச் சாதகமான ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் தற்கொலை என்று சொல்லிவிட்டார். மருத்துவமனையில் காதரின் என்ற டாக்டர் அவரைப் பரிசோதனை செய்யக் கூடாது, வெங்கடேசன் என்ற டாக்டரை நியமிக்க வேண்டுமென்பதிலே டெபுடி இன்ஸ்பெக்டர் சொல்லி ஏற்பாடு செய்தார்கள். விவசாயிக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது?

அதேபோல் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் அவர்களாலும் திருத்துறைப்பூண்டி டெபுடி எஸ்.பி. பற்றி புகார் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார், நிலப்பிரபுக்களிடம் எப்படி நடந்து கொள்கிறார், சாதாரண மக்களிடம் எப்படி நடந்து கொள்கிறார், சாதாரண மக்களை அவர் எப்படிப் பார்க்கிறார், அங்கு எவ்வளவு கொடுமைகள் நடந்திருக்கின்றன என்பதைப் பற்றி ஆளும் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களே கூறுகிறார்கள். அதன் பேரில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டாமா? மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டாமா?

ஆக, போலீசின் கொள்கையில் ஒரு மாற்றம் வேண்டும். அப்படி ஒரு மாற்றம் செய்யவில்லையானால், எதிர்கட்சியிலிருந்து கொண்டு அரசைக் குறை கூறுகிறேன் என்று கருத வேண்டாம். உங்கள் ஆட்சிக்கு இந்த அதிகாரிகளால்



ஆபத்து இருக்கிறது எதிர்காலத்தில் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உள்ளே இருந்து கொண்டு கொல்லும் வியாதி என்பதைப் போல் உள்ளேயே இருந்து கொண்டு உங்களுக்கு விரோதமாக செயலாற்றுகிறார்கள் சில அதிகாரிகள். ஆகவே உங்கள் போலீஸ் கொள்கையில் ஒரு மாற்றம் வேண்டும். வலிவலத்தில் ஏன் இந்த சிட்டி ஆக்டைப் போடவேண்டும்? வெண்மணியில் ஏன் இந்த ஆக்டைப் போடவேண்டும்? 23-ம்தேதி அன்று தியாகிகள் விழா கொண்டாடினோம். இருபதாம் தேதி அன்று தடை உத்தரவு போடப்பட்டது. அப்படிதடை உத்தரவு போடுவதற்கு என்ன நடந்து விட்டது? விழா கொண்டாடப்பட இருக்கிறது என்பதற்காக அந்த சிட்டி ஆக்ட் அங்கு போடப்பட்டது. அன்று ஞாயிற்றுக்கிழமை ஆதலால் எங்களுக்கு ஒன்றும் செய்யமுடியவில்லை. போலீஸ் மைக்கு வைத்துக்கொண்டு தடை உத்தரவைப் போட்டது. அப்படி தடை உத்தரவு போடும்படி என்ன நடந்தது?

வலிவலத்தைப் பொறுத்தமட்டில் வெள்ளைக்காரன் ஆட்சியிலும், காங்கிரஸ் ஆட்சியிலும், இந்த ஆட்சியிலும் அவர்களுக்கு பாதுகாப்பு இருக்கிறது. சென்ற ஆண்டு ட்ராக்டர் போராட்டம் நடந்தது. விஞ்ஞான முன்னேற்றத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. அதனால் விவசாயிகள் பாதிக்கப்படும் நிலைமையில் அதை வைத்துக்கொண்டு விவசாயிகளுக்கு வேலை கொடுக்க மறுக்கிறார்கள் நிலப்பிரபுக்கள். ஆகவே கண்டனத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று ஒரு லிஸ்ட் போட்டு அனுப்பிவைத்தோம். வலிவலத்திற்கு மட்டும் ஏன் இந்த சிட்டி ஆக்ட்? சின்ன சின்ன நிலச்சொந்தக்காரர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க இந்த சிட்டி ஆக்ட் பிரயோஜனப்படுத்தப்படுகிறதா? எந்த அரசாங்கம் வந்தாலும் எங்களுக்கு பாதுகாப்பு உண்டு என்று அவர் சொல்கிறார்.

வலிவலத்திற்கு போகிறவர்கள் பஸ்களில் போகமுடியவில்லை, இறங்க முடியவில்லை. சிகப்புத் துண்டு அல்லது சிகப்பு கருப்புத் துண்டு போட்டிருந்தால் அவர்களை இறங்கச் சொல்லி அடி. பாலகிருஷ்ணன் என்பவர் வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி தலைவர். அவர் வந்து இறங்கினார். அவர் பெயரை ஏற்கெனவே கொடுத்தாகிவிட்டது. அவரைக் கைது செய்து வையுங்கள். ஆனால் அவர் மண்டையை எல்லாம் உடைத்து பஸ்ஸில் இருந்து இறங்குகிறவர்கள், பஸ்ஸில் ஏறுகிறவர்கள் இவர்களை எல்லாம் அடித்து கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே நீங்கள் உங்கள் போலீஸ் கொள்கையை மாற்றிக்கொள்ளவேண்டும். இல்லை என்றால் 1967 தேர்தலுக்கு முன்பாக எப்படி மாற்றம் வேண்டுமென்று மக்கள் நினைத்தார்களோ அந்த மாற்றத்திற்காக நின்ற மக்கள் மத்தியில் ஒரு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும்படிச் செய்யவேண்டும்.

தஞ்சையில் உள்ள நிலப்பிரபுக்கள், இன்று உங்களுக்கு பொன்னாடை போர்த்த வருகிறார்கள். மடாதிபதிகள் உங்களுக்கு பொன்னாடை போர்த்த முன்வருகிறார்கள். ஏன் அப்படி அவர்கள் சந்தோஷமாக முன்வருகிறார்கள்? இன்றையதினம் அரசாங்கத்தால் நமக்கு ஆபத்து இல்லை, உழைக்கும் மக்கள் மீது உதை கொடுக்கும் அரசாங்கமாகயிருக்கிறது. ஆகவே உங்களுக்கு பொன்னாடை போர்த்த முன்வருகிறார்களே தவிர, வேறு ஒன்றுமல்ல என்று கூறிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[1970 செப்டம்பர் 7]

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியின் சார்பில் எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் இன்று திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசிய ஆளும்கட்சி உறுப்பினர்கள் இது தேவைதானா, இன்றையதினம், பஞ்சாயத்து தேர்தல் நடைபெற்று முடிந்த பிறகு அவற்றில் நாங்கள் பெருத்த வெற்றி அடைந்திருக்கிறோமே, இன்னுமா அது உங்களுக்குப் புரியவில்லை என்றெல்லாம் கேட்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் ஆளும் கட்சியாக இருந்தபோது, நாங்கள் அரசு நடத்திக்கொண்டிருந்தபோது அன்றையதினம் ஏறத்தாழ 390 பஞ்சாயத்து யூனியன்களில் 340 பஞ்சாயத்து யூனியன்கள் காங்கிரஸ் வசமாகியது. இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால்—அவர்கள் ஆட்சியை தங்கள் கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், இருந்தபோதிலும் அவர்கள் கைப்பற்ற முடிந்த பஞ்சாயத்து யூனியன்களின் எண்ணிக்கை அவர்கள் கணக்குப்படி 170, எங்கள் கணக்குப்படி 140.

இதை எதற்காக நான் கூறுகிறேன் என்றால், மற்றப் புள்ளிவிவரங்களைக் காட்டி, ஏமாற்றிக் கொண்டிருப்பதை விட இந்தப் புள்ளிவிவரம் இன்றையதினம் இவர்களிடமிருந்து மக்கள் எவ்வளவு வேகமாக விடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள், இவர்களை நம்பி பிரயோஜனமில்லை என்ற உணர்வுக்கு மக்கள் எவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டத்தான் இதைக் கூறுகிறேன். இந்தப் புள்ளிவிவரம் அதைத்தான் எடுத்துக்காட்டுகிறது. மக்களின் முடிவோடு, இன்னொன்றும் நடைபெற்றிருக்கிறது.

நாங்கள் ஏதோ இங்கிருந்து கொண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இன்றையதினம் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள்ளேயே என்ற நிலைமை ஏற்பட்டு விட்டதை பத்திரிகைகள் மூலம் நாம் காண்கிறோம். கட்சிக்குள்ளேயே நம்பிக்கையற்று விட்ட இந்த அமைச்சரவை மீது நாங்கள் அதிகாரபூர்வமாக மக்களுக்கு உங்கள் மீது நம்பிக்கை அற்றுவிட்ட நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆகவே விலகுங்கள் என்று சொல்கிற அளவிலேதான் இத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் எந்த அளவிற்கு அதிகார வர்க்கத்தை, அவர்கள் பதவியை வைத்துக்கொண்டு தங்கள் கட்சி நலனுக்காக அதைப் பயன்படுத்தி வருகிறார்கள் அல்லது எதிர்க் கட்சிகளை வதைப்பதற்கு அல்லது அடக்குவதற்கு அதைப் பயன்படுத்தி வருகிறார்கள் அதைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஐந்து பேர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். கடைசியாக அப்படி மாற்றப்பட்டவர் எந்தச் சூழ்நிலையில் மாற்றப்பட்டார் என்பதை இந்த அவையில் உள்ள மற்ற உறுப்பினர்கள் சொல்லவில்லை என்றாலும் பலபேர்களுக்கு அது தெரியும். அமைச்சர்களுடைய சாதாரண இச்சைகளுக்கு அவர்கள் சரிவர இல்லை என்ற காரணத்திற்காக அவர் மாற்றப்பட்ட நிலையைக் காண்கிறோம்.



1970 செப்டம்பர் 7] [திரு. க. இராமமூர்த்தி]

திண்டிவனத்திலும் அதே நிலைமை. அங்குள்ள ஆர்.டி.ஓ. பலமுறை மாற்றப்பட்டார். மூன்று நான்கு முறைகளுக்கு மேலாக மாற்றப்பட்டு, மாற்றப்பட்டவுடனே அங்கிருந்து வருவார், அந்த மாற்றல் உத்தரவு திரும்பப் பெறப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர், கூட்டாட்சித் தலைவர் இவர்கள் நிலைமை மட்டும் இப்படியல்ல பெரிய பதவிகளில் இருப்பவர்களுடைய நிலைமையும் அப்படித் தான்.

உதாரணமாக, கூட்டுறவுப் பதிவாளர் பி. பி. கிருஷ்ணசாமி இந்த அரசுக்கு ஒரு அறிக்கையைத் தந்தார்கள். 30—5—1970-ல் ஒரு அறிக்கை தந்தார்கள். அவர்கள் தஞ்சையில் இருக்கிற தஞ்சாவூர் கூட்டுறவு மார்க்கட்டிங் ஃபெடரேஷன் என்பதன் அமைப்பு பற்றி அங்கு சென்று அதை நேரில் பார்வையிட்டு அதன்மீது ஒரு ரிப்போர்ட்டை அரசாங்கத்திற்கு சமர்பித்தார்கள். அந்த ஃபெடரேஷனைப் பொறுத்தவரையில் அதன் தலைவராக வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார் இருந்தார்கள். அதில் அங்கம் வகிப்பவர்கள் மன்னை நாராயணசாமி, தி.மு.க. மாவட்டச் செயலாளர் என்று நினைக்கிறேன், எஸ்.டி. சோமசுந்தரம், எம்.பி.—பத்து நாட்களுக்கு முன்பாக அவர் அதிலிருந்து விலகி விட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. (குறுக்கீடு) வலிவலத்திற்கு எந்த அளவிற்கு பாதுகாப்பு இருக்கிறது என்பதைப்பற்றி அவர்கள் சொன்னார்கள். யார் எந்தக் கட்சியைச் சார்ந்தவராகயிருந்தாலும் யார் யாருக்கு இவர்கள் பாதுகாப்பு இருக்கிறது என்பது தெரிகிறது. யார் யார் எந்த எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் யார் யாருக்கு எல்லாம் பாதுகாப்பு அளிக்கிறீர்கள் என்பதுதான் முக்கியமானது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: (அமைச்சர்களை சுட்டிக்காட்டி) உங்களுக்கு பொன்னாடை போர்த்தினார்களே.

திரு. க. இராமமூர்த்தி: அப்படிப்பட்டவர்கள் எங்களை ஆதரித்தார்கள், நாங்கள் தோற்றோம். அப்படிப்பட்டவர்கள் இன்று உங்களை ஆதரிக்கிறார்கள். ஆகவே, நீங்கள் தோற்கப் போகிறீர்கள், உங்கள் பேரில் மக்களுக்கு நம்பிக்கையில்லை என்ற நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதை விட வேறு எடுத்துக் காட்டு தேவையில்லை. அந்த ஃபெடரேஷன் பற்றி ரெஜிஸ்ட்ரார் அவர்கள் ஒரு அறிக்கை தந்திருக்கிறார்கள்.

What has been stated above can be epitomised in one sentence, viz., the Thanjavur Co-operative Marketing Federation as an organisation has displayed ambition on a scale completely unmatched by administrative financial or accounting competency that such ambition entails. In the process, unscrupulous elements have gained at the expense of the ryots, the societies and above all, the Government.

The Thanjavur Co-operative Marketing Federeation has got to show by very detailed explanation that it deserves to be kept on the books as a Co-operative Marketing Organisation involving crores of rupees of public money.

இப்படிப்பட்டதொரு அறிக்கையை அவர்கள் இந்த அரசுக்குக் கொடுத்ததற்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பரிசு அந்தத் துறையிலிருந்து அவரை விலக்கி ஷுகர் போர்டுக்கு அவரை அனுப்பியிருக்கிறார்கள். ஒரு க்ளார்க் செய்யவேண்டிய வேலை அது. இப்படிப்பட்ட ஒரு திறமையான அதிகாரி தேவை இல்லை என்ற அளவில் அத்துறையிலிருந்து அவரை விலக்கியிருப்பது இந்த ஆட்சி அந்த அதிகாரிக்கு தந்த பரிசாகும். அவரது ரிப்போர்ட்டில், கோடிக்கணக்கான பணம் அந்தக் கூட்டுறவு சங்கத்தின் சார்பாக நிர்வாகத்தில் ஊழல்கள் புரிந்திருப்பதன் காரணமாக அரசாங்கம் பணம் நஷ்டப்பட்டிருக்கிறது என்பது அந்த அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்குப்பிறகு இந்த அரசு எந்த நிலைமையை எடுத்து இருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது ஏதோ தஞ்சாவூரிலே மட்டும் நடந்தது அல்ல. இது போன்ற பல நிலைமைகள் இருக்கின்றன திருநெல்வேலி, திண்டிவனம் இங்கெல்லாம் நடந்து இருக்கிறது. திண்டிவனம் கூட்டுறவு வங்கியைப் பலருக்கு தெரிந்து இருக்கும். இது வரையிலும் எங்கள் பகுதியில் இருந்து இந்த பேச்சு வந்ததால் எந்த விதமான நடவடிக்கை எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அடிக்கடி கடிதம் எனக்கு வருகிறது. ஆனால் எந்த நடவடிக்கையும் இருக்காது.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். காலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் சொன்னார்கள், நாங்கள் தலையிடுகிறோமா, செய்கிறோமா என்று. அவர்கள் ஒன்றை உணர வேண்டும். அவர்கள் தலையீட்டின் காரணமாகவோ அல்லது அவர்களை அறியாமலேயோ எந்த அளவுக்கு மக்கள் அவர்களை பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன். விழுப்புரத்தில், அண்ணா தமிழ் கல்லூரி, விழுப்புரம் என்று இருக்கிறது. அதிலே இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கு கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பெயரைக் கூட நான் சொல்ல விரும்பவில்லை. அவசியம் என்று தாங்கள் விளித்தால் சொல்லத் தயார். அதிலே விண்ணப்பம் கோரி எழுதிய ஒருவருக்கு கடிதம் போய் இருக்கிறது. அதிலே குறிப்பிட்டு இருக்கும் வரி "திறப்பு விழா" செலவை ஏற்றுக்கொள்ளுங்கள் இல்லையாயின் ஆட்சிக் குழுவின் முடிவுக்கு தாங்கள் ஆட்படுவீர்கள் என்று அறிவிக்கிறேன்". விண்ணப்பம் செய்தவர்க்கு இந்த அளவு எழுத்தால் மிரட்டல் கடிதம் சென்று இருக்கிறது என்று பாருங்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் இதிலே இப்படி செய்து இருக்கமாட்டார்கள். ஆதரவாக இருப்பார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் எந்த அளவுக்கு அவர்களுடைய பெயரை துஷ்பிரயோகம் செய்து இருக்கிறார்கள் என்பதை அரசு கவனிக்க வேண்டும்.

இதைப்போலவே இன்னொன்று. இந்த மன்றத்திலே ஏற்கெனவே எழுப்பினேன். என்னுடைய திண்டிவனம் நகராட்சி மன்றத்திலே கோதுமை விற்பனையில் ஊழல். நகராட்சி மன்றத்திலே நடைபெற்ற கோதுமை விற்பனை ஊழல்கள் பலவற்றைச் சொன்னேன். பல மறுப்புகள். என்னுடைய பேச்சின் ஒரு பகுதி இந்த நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அது பற்றிய விவரம் எனக்கு இது வரை தெரிவிக்கப்படவில்லை. நான் பேசிய பிறகு முதலமைச்சர் அவர்களிடத்



திலே சில ரிகார்டுகளைக் கொடுத்தேன். இது வரை நடவடிக்கை எடுக்கபட்டதா என்றால், இல்லை. எனக்கு பதில் தரக்கூட முன்வர இந்த அரசாங்கம் தைரியம் இல்லாது இருக்கிறது. ஊழலை அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் செய்யும் போது எப்படி தட்டிக்கழிக்கிறது என்பதைப் பார்த்தோம்.

சில அங்கங்களிலே, சில இடங்களிலே அவர்களுக்கு செல்வாக்கு இல்லையென்றால், அதிலே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் பணியாற்றுகிறபோது உண்டாகிற நிலைமையைப் பார்க்கிறோம். தென் ஆற்காடு மாவட்டத்தில் லோகல் லைப்ரரி அதாரிடி குழுவிற்கு எலெக்ஷன் முடிந்து அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்தாகிவிட்டது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அன்றிலிருந்து இன்று வரைக்கும் எதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டோம் என்ற நிலையில் இருக்கிறார்கள். இது வரையில் முதல் கூட்டம் கூட நடைபெறவில்லை. காரணம் கேட்டால், அதற்கு அரசாங்கம் நியமனம் செய்யவில்லை, ஆகவே இந்த நிலைமை இருக்கிறது என்று சொல்லி வருகிறார்கள். இதிலே ரகசியம் என்ன என்றால் காங்கிரஸ்காரர்கள் அதிகமாக வந்து விட்டார்கள். ஆகவே லோகல் லைப்ரரி அதாரிடி செயல்பட முடியாத நிலைமை? இதை வைத்துக்கொண்டு யாருடைய நம்பிக்கையை நீங்கள் பெறப் போகிறீர்கள். இது லோகல் லைப்ரரி அதாரிடியோடு மட்டும் போகவில்லை.

ஹரிஜன் வெல்பேர் ஹாஸ்டலில் அதற்கான மாணவர்களை பொறுக்கும் குழுவுக்கு சட்ட மன்ற உறுப்பினர்களை பங்கு கொள்ளச் செய்கிறார்கள். திண்டிவனம் ஹரிஜன வெல்பேர் ஹாஸ்டலிலும் இன்றையதினம் வரை தேர்ந்தெடுக்கப்படவில்லை. என்ன காரணம் என்று சொல்ல முடியுமா இந்த அரசு? 3 மாதம் ஆகிறது. பள்ளிக்கூடம் திறந்து. இங்கே இருக்கும் ஹரிஜன பின் தங்கிய மாணவர்கள் படிக்க வேண்டாமா? சட்ட மன்ற உறுப்பினர்களை கமிட்டியில் நியமித்து இருப்பதாக சொல்லி கடிதம் அனுப்பி இருக்கிறார்கள். சட்டமன்றத்திற்கு வருகிற முதல் நாள் அறிக்கை வருகிறது. நான் சட்ட மன்றத்திற்கு போக வேண்டும். ஆகவே வர முடியாது என்று சொல்லி எழுதி அனுப்பினேன். இருப்பினும் 7-ம் தேதியே அந்த தேர்ந்தெடுக்கும் கூட்டத்தை கூட்டி இருக்கிறார்கள். எங்களை அலட்சியப்படுத்தி இருக்கிறார்கள். சட்ட மன்றம் கூடி இருப்பது அதிகாரிகளுக்குத் தெரியும். சட்ட மன்ற உறுப்பினர்கள் சட்ட மன்றத்திலே பங்கு கொள்ள வேண்டுமென்பதும் தெரியும். இருந்தாலும் இப்படி நடந்து இருக்கிறது. இப்படிப்பட்ட நிர்வாகத் தலையீட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தை தவிர வேறு யாராவது செய்து இருந்தால் திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி கொதித்து இருக்கும் என்பதைப் பார்த்து இருக்கிறோம். அவர்கள் அராஜக ஆட்சி நடத்துகிறார்கள். சர்வாதிகாரிகள் என்று சொன்னார்கள். சர்வாதிகாரிகள் என்று சுட்டிக்காட்டி படம் எடுத்தவர்கள், படத்திற்கு வசனம் எழுதியவர்கள் சர்வாதிகார ஆட்சியின் கடைக் கோடிக்கு சென்று இருக்கிறார்கள்.

நில அடைமானத்தைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இதிலே சில பெயர்கள் என்னிடத்தில் இருக்கின்றன. அவை சபைக்கு உகந்ததாக இல்லாததால் சொல்ல விரும்பவில்லை. அந்த கடிதத்தை நான் பேசிய பிறகு தந்து விடுகிறேன். குறிப்பிட்ட பொறுப்பான நிலைமையில் இருப்பவர்கள் மீது இந்தப் புகார் வந்து இருக்கிறது. நிலம் வைத்து இருப்பவர்களுக்கு அங்கே

நிலம் வழங்கப்பட்டு இருக்கிறது. 3 விவரங்கள் வந்து இருக்கிறது. எனக்கு வந்து இருக்கும் கடிதத்தில் வேறு தகவல் வந்து இருந்தாலும் இந்த குறிப்பிட்ட 2, 3 தகவல்களுக்காக அதைத் தர தயாராக இருக்கிறேன். இதை பரிசீலிக்க வேண்டும். இப்படிச் சொல்கிறபோது, நிலம் வழங்கும் முறையில். நீங்கள் பரிபூர்ணமாக செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் வழங்கவேண்டும். எந்தெந்தப்பகுதியில் யார் யாருக்கு நிலம் தருகிறார்கள் என்ற விவரம் வேண்டும். 20,000 பேருக்கு தந்தோம் என்று சொல்லி விட்டால் போதாது. விவரம் தேவை.

சமீபத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பட்டு இருந்தது. மாணவர்கள் பிரச்னை எப்படி எல்லாம் சென்று எந்த அடிப்படையில் அது மூடப்பட்டு இருந்தது என்பதை சொல்ல நான் விரும்புகிறேன். இது எதற்காக, இதனுடைய ஆரம்பம் எங்கே இருக்கிறது என்றால், அந்தப் பகுதியைப் பொறுத்த வரையில் சிதம்பரத்தில் பல இடங்களில் கள்ளக்கடத்தல் நடந்து கொண்டு இருக்கிறது. அது பல காலமாக இப்படி நடந்து கொண்டு இருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது). அந்தக் கள்ளக்கடத்தலை கிராமத்தில் இருக்கும் வன்னிய விவசாயிகள் அங்கே இருக்கும் வலிமைமிக்கவர்களின் பேச்சுக்கு ஆதரவாக இல்லாத காரணத்தால் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது போன்று பல இடங்களில் போலீசார் கண்காணிக்காமல், கவனிப்பார் அற்று, அவர்களுடைய கடமையைச் செய்யாமல் இருக்கிறார்கள். சேலத்தில், தஞ்சையில், மாயவரத்தில் காங்கிரஸ்காரர்கள் கொலை செய்யப்பட்டார்கள். சென்னை பெரியமேட்டிலே குடிகாரன் ஒருவன் கைது செய்யப்பட்டு, பிணமாக திரும்பி வந்ததைப் பார்த்தோம். போலீசாருடைய நிலைமையைப் பொறுத்த வரையில் பல இடங்களில் இப்படி நடந்து இருக்கிறார்கள் என்று நான் சொல்லி இருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பலர் மீது வழக்கு பதிவு செய்வது நான்பேய்லபிள்' என்று, ஆனால் அவர்களை எப்படியும் சிறைச்சாலைக்கு அனுப்பிவிட வேண்டுமென்பதற்காக வழக்கு பதிவு செய்யும்போது 'நான்பேய்லபிள்' என்று போலீசார் செய்வதைப் பார்த்து இருக்கிறோம். மிகுந்த அளவுக்கு லஞ்சம் நடக்கிறது. இந்த அரசின் கொள்கைக்கு அவர்களுடைய இச்சைக்கு திண்டிவனம் பகுதி மக்கள் ஒத்துழைக்கவில்லை என்ற காரணத்திற்காக அந்தப் பகுதி அப்படியே இருக்கிறது. பல இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் தங்களுடைய அதிகாரத்தை வைத்து எல்லோரையும் மிரட்ட முடியும் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட எண்ணம் தலைவிரித்தாடி உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்ற நிலைமை மக்களுக்கு உண்டாகிவிட்டது. உங்கள் கட்சிக்குள்ளே உண்டாகிவிட்டது. இந்த மன்றத்திலே உண்டாகிவிட்டது. இனி இடத்தை காலி செய்ய நேரம் ஆக்காதீர்கள் என்று சொல்லி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் தென் ஆர்காடு நூலக ஆணைக் குழுவிற்கு இதுவரை அரசாங்க நியமனம் செய்யப்படவில்லை, காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இது என்னுடைய கவனத்திற்கு



ஒரு வாரத்திற்கு முன்புதான் கொண்டுவரப்பட்டது. ஆகவே, மாவட்ட கல்வி அதிகாரி அனுப்பியுள்ள பெயர்களை வைத்து, கல்வி இயக்குநர் நியமனம் செய்வார்கள். இதற்கான வழிமுறைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. விரைவில் இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்றபொழுது, தஞ்சை மாவட்டத்திலே மாலை 6-30
மார்க்கெட்டிங் பெடரேஷன் டி. வி. எம். எஃப்-இல் நிர்வாகக் குழுவில் தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் மன்னை நாராயணசாமி அவர்கள் இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அது உண்மைக்கு புறம்பானது. இரண்டு பெடரேஷன்கள் இருக்கின்றன. ஒன்று தஞ்சை மாவட்ட மார்கெட்டிங் பெடரேஷன், இன்னொன்று ஸ்டேட் மார்கெடிங் பெடரேஷன். மன்னை நாராயணசாமி அவர்கள் ஸ்டேட், மாநில மார்கெட்டிங் பெடரேஷனில் டைரக்டராக இருக்கிறார்கள், பிரசிடெண்டாக இருக்கிறார்கள். தஞ்சை மாவட்ட மார்கெடிங் பெடரேஷனில் மன்னை நாராயணசாமி அவர்கள் டைரக்டராக இல்லை என்ற குறிப்பை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: விளக்கத்தை ஏற்றுக் கொள்கிறேன். இந்த ரிப்போர்ட்டை நான் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன்.

*திரு. மு. சின்னசாமி: மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து ஒரு சில வார்த்தைகள் பேச முற்படுகிறேன்.

இன்று பேசிய நண்பர்கள் அனைவரும் காவல் துறையைப் பற்றி கொஞ்சம் அதிகமாகவே பேசியிருக்கிறார்கள். போலீஸ் இலாகாவைப் பற்றி அதிகமாகப் பேசியிருக்கிறார்கள். அதிலே நான் அதிகமாகப் போக விருப்பப்படவில்லை, காரணம், இந்த நாடு 1946-ம் ஆண்டு இடைக்கால ஆட்சி ஏற்று, 1947-லிருந்து 1967 வரைக்கும் 21 ஆண்டு காலம் ஒரு நிர்வாக இயந்திரத்தை எவ்வளவு அருமையாக வளர்த்து எங்கள் கையில் ஒப்படைத்திருக்கிறீர்கள் என்பதனை கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தாகவேண்டும். ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து, அதைப் படிக்க வைத்து, 21 ஆண்டுகள் கழித்து, அந்தக் குழந்தை ஒரு சிறிய தவறு செய்தது என்றால், பெற்றோர்கள் குற்றமா? அவர்களுக்குக் கற்றுத் தந்த பெரியவர்களின் குற்றமா என்பதைக் கோவைக் கம்பன் அவர்கள் அருள் கூர்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஏதோ அங்கு ஒன்று, இங்கு ஒன்று தவறு இல்லை என்று வாதாடவில்லை. ஒரு லட்சத்து நாற்பது ஆயிரம் வார்டுகளில் 13,500 ஊராட்சி மன்றத் தேர்தல்கள் பரந்த தமிழகத்தில் நடைபெற்றன. அங்கு ஒன்று, இங்கு ஒன்று சிறிய தவறு ஏற்பட்டிருக்கிறது என்றால், அந்த சிறிய தவறுக்குக் காரணம் அந்த இயந்திரத்தை வளர்த்த, காப்பாற்றிய பெருமைக்குரிய காங்கிரஸ்காரர்கள்தான் என்பதை மனச்சாட்சியோடு அவர்கள் ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். இன்று காலையிலே துவக்க உரையில் மனச்சாட்சி பற்றிப் பேசிய கோவை கம்பனுக்கு இதைக் காணிக்கையாக செலுத்துகிறேன்.

[திரு. மு. சின்னசாமி] [1970 செப்டம்பர் 7

அடுத்த பிரச்சினைக்கு நான் வருகிறேன். அடுத்து பாட புத்தகத்தில் தந்தை பெரியார் வாழ்க்கையைப் பற்றி குறிப்பிட்டிருப்பதை சுதந்திராக் கட்சி நண்பர் திரு. டாக்டர் ஹாண்டே அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். நான் அவர்களுக்கு மரியாதையோடும், அடக்கத்தோடும் சொல்லிக்கொள்வேன். தமிழ் நாட்டில் இன்றைக்கு இருக்கிற பீடைகள் போவதற்கு ஒரு ஈரோட்டுத் தந்தை மாத்திரம் போதாது, 100 ஈரோட்டுத் தந்தையர்கள் தேவை என்பதை திரு. ஹாண்டே அவர்களுக்கு நான் பெருமையோடு சொல்லிக்கொள்வேன். சமுதாயப் புரட்சி வீரனைப் பற்றி ஒரு பாட புத்தகத்தில் மாத்திரம் அல்ல, தமிழகத்தில் எத்தனை பாடப் புத்தகங்கள் இருக்கின்றனவோ, ஒவ்வொரு புத்தகத்திலும் ஒரு பக்கமாவது பகுத்தறிவு மேதையின் பாடத்தை வைத்தாகவேண்டும் என்று நாடு விரும்புகிறது, நாங்கள் மட்டும் விரும்பவில்லை என்பதை என்னுடைய நல்ல நண்பர்களுக்கு எடுத்துச் சொல்வேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் நாவன்மை படைத்தவர்கள் என்று நாங்களெல்லாம் பெருமைப்படுகிறோம். அவரைக் கோவைக் கம்பன் என்று சொல்வதில் நாங்களெல்லாம் பெருமைப்படுகிறோம். நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று ஒரு வழக்கை எடுத்து வந்திருக்கிறார் அவர்கள். இன்று காலை 10 மணியிலிருந்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு இந்தக் கட்சிக்கு தகுதியில்லை என்று பொருள்பட தமிழகத்திலிருந்து செய்தி இங்கு வந்திருக்கிறது, நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தின் உட்கருத்தைவிட. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கை இல்லை, இடத்தைக் காலி செய்யுங்கள், 1972-ல் சந்திப்போம் என்றெல்லாம் மாண்புமிகு திரு. இராமமூர்த்தி அவர்கள் கூறினார்கள். அந்த இடத்திலிருந்து அப்படிப் பேசவேண்டியது அவர்களுடைய தலைவிதி. அவருடைய மனச்சாட்சி அப்படிப் பேசவில்லை என்பது எனக்குத் தெரியும் என்பதை மிகத் துல்லியமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இன்று வேறு திசையிலே செல்லுவதாக மிக சாமர்த்தியமாக வழக்காடினார்கள் திரு. கருத்திருமன் அவர்கள். நான்கு இடத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். இந்த மாமன்றத்தில் அவர்களுக்கு பேரவைத் தலைவரின் மூலம் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். துப்பாக்கிச் சூடு நடந்த சம்பவம் பற்றி அருள் கூர்ந்து சிண்டிகேட் காங்கிரஸ் இந்தியாவில் அரசியல் மேடையிலே பேசினால், அவர்கள் பஞ்ச மகா பாதகர்கள் என்ற வார்த்தை அன்பார்லிமெண்டரி வார்த்தையாக இருந்தால், அவர்கள் அப்படிப் பேசுவதற்கு தகுதியற்றவர்கள் என்றுதான் நான் சொல்லுவேன்.

அது மாத்திரமல்ல. என் மனக் கண் முன்பு நிற்கிறது. 1946-ல் கோவையில் ஸ்டேன்ஸ் மில் ஸ்டிரைக் நடந்தது. அப்பொழுது துப்பாக்கிச் சூடு நடந்தது. ஜாலியன்வாலாபாக் துப்பாக்கிச் சூடை விட மோசமாக இருந்தது. அந்தப் போராட்டத்தில் ஒரு வீராங்கனையினுடைய மர்மஸ்தானத்தைக் குறி பார்த்துச் சுட்டார்கள். ஆகையால் துப்பாக்கிச் சூடு பற்றி அவர்கள் பேசவேண்டாம். இடதுசாரி கம்யூனிஸ்டோ, வலதுசாரி கம்யூனிஸ்டோ, சோஷலிஸ்டு கட்சியோ, பிரஜா சோஷலிஸ்டு கட்சியோ பேசட்டும். எங்களுடைய தவறுகளைத் திருத்திக் கொள்கிறோம். நீங்கள் அதைப்பற்றிச் சொல்வதற்கு



1970 செப்டம்பர் 7] [திரு. மு. சின்னசாமி]

லாயக்கு இல்லை என்று காலம் ஏற்கனவே முடிவு செய்துவிட்டது. நீங்கள் சமுதாய விரோதிகள் என்று முடிவு கட்டிவிட்டார்கள். ஆகவே, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்லிக்கொண்டு நாட்டு மக்களின் மத்தியிலே நடமாடலாம் என்று கனவு காணவேண்டாம்.

அது மாத்திரமல்ல, மாண்புமிகு சட்ட அமைச்சர் திருச்சிக்குச் சென்றார். எதற்காகத் திருச்சிக்குச் சென்றார்? அங்கே கைதிகளுக்குக் குறைகள் இருக்கின்றன என்று பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வந்தது. அதை அலட்சியப்படுத்தாமல் நேராக திருச்சி சென்று அவர்களுடைய குறையைக் கேட்டார்கள். இதைப்பற்றி ஒரு வாதம். நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உங்களுடைய புனிதமான ஆட்சியில் சேலம் சிறையிலே, அவர்கள் கையிலே கம்பு இல்லை, அவர்கள் கையிலே துப்பாக்கி இல்லை, அவர்கள் கையிலே வெடி-குண்டு இல்லை, உங்களுடைய புனிதமான ஆட்சியில் சேலம் மத்திய சிறையிலே சுட்டுச் சாகடித்தீர்கள். அதை இந்த நாடு மறக்காது. பொது உடைமைக் கட்சி நண்பர்களுக்கு ஒன்று சொல்வேன். இந்த சம்பவத்தை நாடு பூராவும் எங்கள் தானைத் தலைவர் தமிழக முதல்வர் தமிழகத்தில் எங்கும் எடுத்துச் சொல்லி, பொது உடைமைக் கட்சி நண்பர்களுக்கு நாட்டு மக்கள் சக்தியை ஈட்டித்தந்தார்கள். பொது உடைமை கட்சி நண்பர்கள் நன்றி ஆர்வத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பகல் 10 மணிக்கு உங்களோடு கூட்டுச் சேர மறுத்துவிட்டார்கள் என்பதை தயவுசெய்து மறக்கவேண்டாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தது அந்தக் கட்சியினர்தான். அதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

திரு. மு. சின்னசாமி : நான் மரியாதையோடு ஏற்றுக்கொள்கிறேன். கண்டனத் தீர்மானம் கொண்டு வருவதற்கு அவர்களுக்குத் தான் உரிமை உண்டு. துப்பாக்கி சூடு பற்றிப் பேசுவதற்கு காலத்திலும், சரித்திரத்திலும், வரலாற்றிலும் இந்திய துணைக் கண்டத்தில் பேசுவதற்கு உங்களுக்கு உரிமை நிச்சயம் இல்லை என்று தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்களுக்கும் தெரியும், காலத்திலும், மாளத்திலும் உங்களுக்கு எது ஏற்படும் என்பது எங்களுக்கும் தெரியும்.

திரு. மு. சின்னசாமி : அரசியல் ஜோசியம் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தம் தி.மு.க. விற்கு ஏற்படவில்லை. நாங்கள் உங்களுக்கு கற்றுத்தரவேண்டிய அந்தஸ்தில் இருந்துகொண்டிருக்கிறோம்.

தலைவர் அவர்களே, அடுத்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனிக் கொடியைப் பற்றி பேசி, ஏதோ மீண்டும் பிரிவினைப் பூதம் வருவது போல் எடுத்துச் சொல்லி, அதற்குப் பிறகு டாக்டர் ஹாண்டே அவர்களும் அதைப் பற்றி எடுத்துச்சொல்லி அரசியல் கதையை எங்கேயோ திருப்பி விட்டிருக்கிறார்கள். நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். ஏதோ காங்கிரஸ் கட்சியில் தேசியப் போராட்டத்தில் சிறை சென்றவர்கள், நாங்களெல்லாம் எதற்கும் பயப்படமாட்டோம் என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். கன்னட ரத்தம் ஓடினாலும். கொஞ்சம் தமிழ்த் தண்ணீரை குடித்ததன் காரணமாக கொஞ்சம் எங்களுடைய வீரம் போயிருக்கிறது, அதனால் கொஞ்சம் அதிகமாகப் பேசினார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன்.

அந்தப் பக்கம் பார்க்கிறேன். 1942-ல் எவ்வளவு நண்பர்கள் சத்தியாகிரகம் செய்தார்கள் என்று பார்க்கிறேன். எண்பது ஆண்டு கடந்த பெரியவர் ஒருவர் சிறை சென்றார். 1942 ம் ஆண்டில் எத்தனை பேர்கள் சிறை சென்றார்கள் என்று பார்க்கிறேன். பொது உடமைக் கட்சியினரைப் பார்க்கிறேன். 1942-ல் அலிபுரம் ஜெயிலில் இருந்தவர்களைவிட அவர்கள் கட்சியில் அதிகமான பேர்கள் இருக்கிறார்கள். உங்கள் கட்சியில் இருப்பதைவிட அவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறேன். வெள்ளையர்களை வெளியேற்றியதற்கு நீங்கள்தான் சொந்தக்காரர்கள் என்பது பைத்தியக்காரத்தனமான வாதம் என்பதற்காகத்தான் இதை சாட்சியமாக அழைத்தேன்.

தனிக்கொடி பற்றியும், மாநில சுயாட்சி பற்றியும் சொன்னார்கள் . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஆகவே, பயித்தியக்காரத்தனம் என்றாலும் அத்தனைபேரும் காங்கிரசிலிருந்து பிரிந்தார்கள். கனம் அங்கத்தினரும் எங்கேயிருந்து மாறினார்கள் என்பதும் தெரியும்.

திரு. மு. சின்னசாமி : மகாத்மா காந்திக்குப் பிறகு கட்சியை விட்டு வந்தவன்தான் நான்.

திரு. என். எஸ். வி. சித்தன் : வேறு எந்த எந்தக் கட்சிக்கெல்லாம் சென்றீர்கள் என்று சொன்னால் தெரிந்துகொள்ளலாம்.

திரு. மு. சின்னசாமி : அரசியல் வாதிக்கு அதைச் சொல்வதிலும் வெட்கம் ஒன்றும் இல்லை. எனவே, தனிக் கொடி, தனி நாடு பிரிவினை இவை பற்றியும் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1946 ஜூலை 7-ம் தேதி பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கூட்டம் நடந்தது. அதெல்லாம் உங்களுக்கு தெரியாது. அப்பொழுது அபுல் கலாம் அஸாத் தலைமை வகித்தார். கிரிபஸ் தூது கோஷ்டி கொண்டு வந்த மாநில சுயாட்சி திட்டத்தைப் பற்றிப் பேசப்பட்டது.

மற்றொரு தகவலையும் சொல்வேன். காயிதே அஸாம் ஜின்னா, காங்கிரஸில் இருந்தார்கள். நேருப் பெருமகனார் அவர்களை விட அதிகமாக நாட்டுப் பிரிவினையை வன்மையாகக் கண்டித்தார்கள் என்பதை முந்தாநாள் காங்கிரஸ்காரர்கள் உணரவேண்டும். 1946 ஜூலை 7-ம் தேதி கிரிப்ஸ், பெதிக் லாரன்ஸ், அலெக்ஸாண்டர் இவர்கள் மாநில சுயாட்சி எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். பிரிக்க முடியாத அளவில் போக்குவரத்து சாதனம், பாதுகாப்பு, அயல்நாட்டு உறவு இவை மத்தியில் இருக்க வேண்டும், மற்ற எல்லா அதிகாரங்களும் மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். 1946 ஜூலை 7-ம் நாள் பம்பாயில் காங்கிரஸ் கமிட்டி அந்த திட்டத்தை ஏற்றுக் கொண்டு தீர்மானம் போட்டது இன்னும் பசுமையாக என்னுடைய நினைவில் இருக்கிறது. அப்படியெல்லாம் இருந்தும், ஆஸாத் அவர்கள் வெளியேற்றப்படவில்லை, ஆனால் பண்டிட் ஜவஹர்லால் நேரு காங்கிரஸ் தலைவராக பம்பாயில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில், காங்கிரஸ் தீர்மானம் செல்லாது, அதை ஏற்கமாட்டோம் என்றார்கள். உடனே ஜின்னா சொன்னார்கள், ஒரு காங்கிரஸ் கட்சி, ஆஸாத் தலைமையில் தீர்மானம் செய்கிறது, 10 நாளில் அது செல்லாது என்று சொல்லுகிறார்கள். நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, சிறுபான்மையாக உள்ள முஸ்லிம்கள் நிலைமை என்ன என்று நேரிடை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆணையிட்டார். அப்பொழுது நான் அதில் சம்மந்தப்பட்டவன் என்பதால், அதை நினைக்கும்போது, என்னை அறியாமலேயே அந்த மாநில சுயாட்சித் திட்டம் ஏற்கப்பட்டிருக்குமானால், துர்பாக்கியமான பாகிஸ்தான் பிரிவினையே ஏற்பட்டிருக்காது என்பதை நாட்டுக்கு எடுத்துச் சொல்லி,



மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்கிற கோரிக்கை சரித்திரத்தையே ஏற்படுத்தும் என்று சொல்லி, அதை ஏற்றுக் கொண்டு, எங்கள் தலைவரோடு வருக வருக என்று உங்களை அழைத்து, இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, நம்பிக்கையில்லாத தீர்மானம், கண்டனத் தீர்மானம் இவற்றை முன் வைத்து பல உறுப்பினர்களும் இங்கே பேசியிருக்கிறார்கள். என்னுடைய கருத்துக்களையும் நான் கூற விரும்புகிறேன்.

1967-ம் ஆண்டுக்குப் பிறகு, தமிழகத்தில் முக்கியமாக சாதாரண ஏழை எளிய மக்கள் தங்களுக்கு நல்ல காலம் வரும் என்று எதிர்பார்த்தார்கள். குறிப்பாக, ஏழை விவசாயிகள், 100 க்கு 80 பேர்களாக இருக்கும் விவசாயிகள் கடந்த 20 ஆண்டுகாலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் பட்ட கஷ்டங்களைப் போக்கி, இனியாவது விடிவு காலம் வரும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் எதிர்பார்த்த அளவில் அவர்களுக்கு இன்று வாழ்வு கிடைக்கவில்லை என்பதை கூறித்தான் ஆக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, நிலச் சீர்திருத்தச் சட்டத்தை, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரிலிருந்து 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராகக் குறைத்திருக்கிறோம் என்று கூறப்படுகிறது. ஆனால், திருத்தம் வரும்போது, நிலச் சொந்தக்காரர்கள் பல பத்திரங்களை அதிகப்படியான விலை கொடுத்து வாங்க முயற்சி செய்து, இறுதியாக, மசோதா நிறைவேறும் போது, ஜனாதிபதி கையெழுத்திட்டு கெஜட்டில் வெளிவந்தபிறகுதான் அது அமுலுக்கு வரும் என்கிற உத்தரவாதம் கொடுத்தபிறகு, நம்பிக்கையோடு பீதியின்றி, தங்களுக்குள்ளே பிரித்து வைத்துக் கொண்டுவிட்டார்கள், அதனால் ஒரு செண்ட் நிலம் கூட விவசாய ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிடைக்கவில்லை என்கிற நிலை ஏற்பட்டுவிட்டது. நிலச் சீர்திருத்த சட்டத்தை காங்கிரஸ் சர்க்கார் தான் மோசடியாகச் செய்தது என்றால், திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரும் செய்திருப்பதில் நிலம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை இல்லை. இதுவும் ஒரு விதமான மோசடிதான் என்று விவசாயிகள் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்து, ஏழை எளிய விவசாய மக்கள், விவசாயத் தொழிலாளிகள், தஞ்சாவூரில் மட்டும் கூலி உயர்வு பெற்றார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் அப்படி லட்சோப லட்சம் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். தஞ்சை போலவே மற்ற ஜில்லாக்களிலும் கிடைக்க வேண்டும் என்றும், தமிழக அரசு, விவசாயத் தொழிலாளர்களுடைய அரசு தஞ்சை ஜில்லாச் சட்டத்தை மற்ற மற்ற ஜில்லாக்களுக்கும், தமிழகம் முழுவதிலும் கொண்டு வருமென்று எதிர்பார்த்தார். ஆனால் இந்த அரசு கொண்டு வரவில்லை. தினசரிக் கூலி 1 ரூபாய் 1.25 ரூபாய் வாங்கி ஏழை விவசாயிகள் வாழ்க்கை நடத்துகிறார்கள். விலைவாசி ஏற்றத்தால் சிரமப்படுகிறார்கள். நூற்றுக்கு 75 பேர் என்ற நிலையில் இருக்கும் விவசாயத் தொழிலாளிகளுக்கும் நன்மை ஏற்படும் வகையில், அந்த சட்டத்தை மாநில முழுவதற்கும் ஏன் செயல்படுத்தவில்லை. காங்கிரஸ் சர்க்கார்தான், நிலப்பிரபுக்களுடைய பக்கத்தில் நிற்கும் சர்க்கார் செய்யவில்லையென்றால், விவசாயிகள் பக்கம் நிற்கிறோம் என்று கூறக்கூடிய இந்த சர்க்காரில் கூட அதைச் செய்ய வில்லை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியதாக இருக்கிறது.

அடுத்தபடியாக, கைத்தறித் தொழிலைப் பற்றிச் சொல்ல வேண்டும். இந்த அரசுக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை. தோளிலே கைத்தறித் துணிகளைச் சுமந்து கொண்டு ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று விற்பனை செய்தவர்கள். தமிழகத்தில் 30 லட்சம் கைத்தறியாளர்கள் இருக்கிறார்கள். 6 லட்சம் கைத்தறிகள் தமிழகத்தில் இருக்கின்றன. அவர்களுடைய நிலைமை மோசமாக இருக்கிறது. ஒரு அமைச்சர் கூறினார், கைத்தறித் தொழில் பழமையானது, நாசமாகப் போகக் கூடிய நிலையில் இருக்கிறது, ஆகவே, இவர்கள் வேறு தொழிலுக்குச் செல்ல வேண்டும் என்றார்கள். வேறு எந்தத் தொழிலுக்குப் போக முடியும்? கைத்தறித் தொழிலாளிகள் வசிக்கும் பகுதிகளில் புதிய புதிய

பாக்டரிகளோ தொழிற்சாலைகளோ ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றனவா? வேலை வாய்ப்புக்கள் இருக்கின்றனவா? வாழ்க்கையில் திக்கற்றவராக இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால், காங்கிரஸ் சர்க்கார் மதுவிலக்கு, தங்கக் கட்டுப்பாடு சட்டங்களைக் கொண்டு வந்தபோது அந்த தொழிலாளிகளை வேலையிழக்கும் நிலைக்குக் கொண்டு வந்தார்களோ அதே மாதிரித்தான் திராவிட முன்னேற்றக் கழக அரசும், இன்றைக்கு இருக்கும் கைத்தறித் தொழிலாளிகளை வேலை வாய்ப்பு இல்லாமல், வேறு வேலைக்குப் போங்கள் என்று சொல்லி, அவர்களை திக்கற்றவராக விட்டு, வாழ வழி காட்டாமல் நிறுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக, இன்றைக்கு பவர் லூம்கள் கொண்டு வரப்படுகின்றன. காங்கிரஸ் சர்க்கார் காலத்தில் கூட இல்லாத முறையில் 14,000 விசைத்தறிகள் திணிக்கப்பட்டுள்ளன. விலைவாசி உயர்ந்திருக்கும் இந்த நேரத்தில் இருக்கிற வேலையையும் இழந்து விடாமல் இருப்பதற்காக தக்க வசதிகளை செய்து தர வேண்டும். அப்படி கைத்தறித் தொழிலிலே மாறுதல் ஏற்பட்ட பிறகும்கூட தொழில் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். கைத்தறித் தொழில் வேறு, பாக்டரிகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் நிலைமை வேறு. கைத்தறித் தொழிலாளர்களுக்கு இன்றைக்கு ஏற்பட்டுள்ள மாறுதலுக்கு தகுந்த முறையில் கூலி நிர்ணயச் சட்டம், தொழில் பாதுகாப்புச்சட்டம் ஆகியவற்றைக் கொண்டுவந்தாக வேண்டும்..

இதற்கெல்லாம் மேலாக மதுரை நகரில் ஒரு சிறிய சம்பவம் நடைபெற்று வருகிறது. இந்தச் சம்பவம் சிறியதாக இருந்தாலும் பெருவாரியான மக்கள் இதற்கு ஆளாகி அல்லல்படுகிறார்கள். இன்றைக்கு அங்கு நடமாடும் கோர்ட்டுகள் வந்திருக்கின்றன. கோர்ட்டுகள் விஷயத்திற்கு நான் போகவில்லை. பல்லாயிரக்கணக்கான சிறு தொழிலாளர்கள் சாலை ஓரங்களில் கடைகள் வைத்திருப்பவர்கள். இதனால் பாதிக்கப்படுகிறார்கள். வேலை கிடைக்காத இளைஞர்கள், மாணவர்கள், வயோதிகர்கள் போன்றோர் தங்களுடைய பிழைப்புக்கு வழியில்லாத காரணத்தால் சாலையோரங்களில் கடைகள் வைத்திருக்கிறார்கள். போலீசார் அவர்களது சாமான்களை அப்படியே லாரியில் தூக்கிப் போட்டு, அவர்களுடைய சாமான்களை நஷ்டப்படுத்தி, அவர்களுக்கு ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்ற அளவில் அபராதம் போட்டு, அந்த மக்களை சித்திரவதை செய்து வருகிறார்கள். இப்படி கிட்டத்திட்ட இருபதாயிரம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பெருவாரியானவர்கள் இரவுபகலாக உழைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர்த்தியிருப்பவர்கள். அவர்கள் எல்லாம் இன்றைக்கு ரத்தக்கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகவே இதனைக் கூறுகிறேன். இவர்கள் வாழ ஒரு மாற்று ஏற்பாடுவேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயிகளுடைய போராட்டத்தில் எல்லாம் போலீஸ் தலையிடுகிறது. அதைப்பற்றி என் கட்சித் தலைவர் அவர்கள் கூறிவிட்டார்கள். ஒரு சில விஷயங்களை மட்டும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குத்தகைவார விவசாயி போராட்டங்களில் போலீஸ் தலையீடு இன்னமும் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. மாறுதல் எதுவும் ஏற்படவில்லை.

உதாரணமாக, குளமங்கலம் என்ற கிராமத்தில் காராளம் என்ற விவசாயிக்கு குத்தகைப் பத்திரம் இருக்கிறது, ரசீதும் இருக்கிறது. இத்தனையும் இருக்கிற நேரத்திலே நிலச்சுவான்தார் விவசாயியை வெளியேற்றுகிறார் இதற்கு போலீஸ் உடந்தை. விவசாயி நடவு நட்டுக்கொண்டிருந்தான். போலீஸ் அதிகாரி ஒருவர் நிலச்சுவான்தார் அவர்களுடைய காரிலே வந்து இறங்கி, தடை உத்தரவு கோர்ட்டிலே இருப்பதாக அந்த விவசாயியிடம் கூறி, அவனை லாரியிலே ஏற்றிக் கொண்டுபோய், ஒருநாள் முழுவதும் போலீஸ் ஸ்டேஷனிலே வைத்திருக்கிறார். இரண்டு நாள் கழித்துத்தான் வெளியே விடுகிறார்.



இந்த இரண்டு நாள் அவகாச காலத்தில் நிலச்சுவான்தார் அத்தனை விவசாய வேலைகளையும் செய்து கொண்டு விட்டார். மேலும் அந்த விவசாயிமீது ஒரு பொய்க் கேசும் போடப்பட்டிருக்கிறது. நான் தடை உத்தரவை சார்பு செய்யப் போனபோது தடுத்தான் என்று போலீஸ் அதிகாரி பொய்க் கேஸ் போடுகிறார். அந்த விவசாயிக்கு ரிகார்டுகள் எல்லாம் இருக்கின்றன. இருந்தும் அவன் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார். இது போன்று இன்னும் அதிகமானவற்றை சொல்ல முடியும். உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சொன்னேன்.

அடுத்து, காவல் துறையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள். இது காவல் துறையா, அல்லது கரப்ஷன் துறையா? என்று பொதுமக்களின் மத்தியில் பரவலான எண்ணம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. சாதாரண குடிமகன் ஒருவன் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று ஒரு மனுவைக் கொடுத்து தன்னுடைய குறையைத் தீர்த்துக்கொள்ள முடியாது. என்னுடைய பகுதியில் அவனியாபுரம் என்ற கிராமத்தில் ஒரு விவசாயி ஒரு மனுவை போலீஸ் ஸ்டேஷனிலே கொடுக்கப் போனான். அந்த மனுவை வாங்கிக்கொள்ளக் கூடிய போலீஸ்காரர் அந்த விவசாயியிடத்தில் என்னென்ன கேட்கிறார் தெரியுமா? இரண்டு கொயர் வெள்ளை பேப்பர், ஒரு கொயர் கார்பன் பேப்பர், நான்கு பெருமாள் செட்டி கம்பெனி பென்சில்கள், ஒரு ரப்பர் இவை எல்லாம் வேண்டுமென்று கேட்கிறார். பாவம் விவசாயி இவற்றிற்கெல்லாம் எங்கே போவான்? இது ஒரு சிறிய சம்பவம்தான். எந்த அளவிற்கு இவர்களுடைய மனோபாவம் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

பிரிட்டிஷ் சர்க்கார் காலத்திலிருந்து, அதன்பிறகு காங்கிரஸ் சர்க்கார் காலத்திலிருந்து லஞ்சமும் ஊழலும் நிறைந்த இயந்திரமாக போலீஸ் துறை இயங்கி வருகிறது. அந்த முறையில்தான் இன்னமும் மாறுதலின்றி தொடர்ந்து நீடித்து வருகிறது. இதன் காரணமாக ஏழை எளிய மக்கள் வாழ முடியவில்லை. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனவன் மரியாதையாக வீடு திரும்புவானா என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மேலும் உயிரோடு திரும்பி வருவானா என்ற நிலைமை இருக்கிறது. நம்முடைய சக அங்கத்தினர் ஒருவர் கூறினார், "அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதோ ஒன்றிரண்டு சம்பவங்கள் நடந்து இருக்கலாம். அதை வைத்துக்கொண்டு இந்த அரசாங்கத்தை தாக்கி பேசலாமா" என்று கேட்டார். நான் சொல்கிற சம்பவங்கள் ஒன்றிரண்டு அல்ல.

மதுரையில் வேலு என்பவர் பெல்ட் கம்பெனியில் வேலை செய்து வந்தவர். போலீஸ் ஸ்டேஷனிலே இறந்தார். தேனியிலே வீரபத்திரன் என்பவர் போலீஸ் ஸ்டேஷனிலே இறந்தார். கொடைக்கானலிலே பி.டபிள்யூ.டி.யில் வேலை செய்துவந்த ஜார்ஜ் என்ற தொழிலாளி போலீஸ் ஸ்டேஷனிலே இறந்தார். இன்னும் தஞ்சையிலே ஜமீலா என்பவர் இறந்தார். ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக நடந்ததாகச் சொல்லி, இதை விட்டுவிடக்கூடாது என்பதற்காகவே இதைச் சொல்கிறேன். இந்தப்பழி முழுவதும் அரசாங்கத்தைதான் சேரும். அரசாங்கத்தின்கீழ் இருக்கக்கூடிய போலீஸ் நிர்வாகத்திற்கு பொறுப்பு யார்? அரசாங்கம்தான் நிச்சயமாக பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். தட்டிக் கழிக்கும் போக்கு இந்த அரசாங்கத்திற்கு வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன். இதைத் தட்டிக் கழித்தால் மக்களுடைய பிரச்சினைகளைத் தட்டிக் கழிப்பதாகத்தான் அர்த்தம். முதலில் ஒரு சம்பவம் நடக்கும்போது தக்க முறையில் நடவடிக்கை எடுத்திருந்தால், மற்ற இடங்களில் இது மேலும் பரவாமல் இருந்திருக்கும். கோர்ட்டுகளில் கேஸ் நடந்து நிரூபணமாகவில்லை யென்று சொல்கிறார்கள். யார் கொலைக்குக் காரணமானவர்களோ, யார் அந்த போலீஸ் ஸ்டேஷனில் கொலைக்கு காரணமாக இருந்தார்களோ, அவர்கள்தான் முதல் அறிக்கையை தயார் செய்கிறார்கள்.

அதை வைத்துத்தான் கேஸ் போட வேண்டும். இந்த நிலையில் பாதிக்கப்பட்டவனுக்கு யார் சாட்சி சொல்ல முடியும். கொலைக்குக் காரணமானவர்களே கேஸ் தயாரிக்கிறார்கள், சாட்சி போடுகிறார்கள். இந்த நிலையில் எப்படி ஒரு நல்ல தீர்ப்பை பாதிக்கப்பட்டவன் பெற முடியும்?

ஒரு சம்பவம் நடந்தால், அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, குற்றம் செய்தவன் தண்டிக்கப்பட்டிருந்தால் மற்றவர்கள் பயப்படுவார்கள். முதலில் குற்றம் செய்தவன் தண்டிக்கப்பட்டு, நடுத் தெருவில் நின்றிருந்தால் அதைக் கண்டு மற்றவர்களும் குற்றம் செய்வதற்கு அஞ்சுவார்கள். முதலில் தண்டிக்கப்படாமல் விட்டால், அதுவே மற்ற குற்றங்களுக்கு வழிகாட்டியாகி விடுகிறது. அரசின் போலீஸ் கொள்கையின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் நடந்துகொண்டு வருகின்றன. இதை அரசு மாற்றிக் கொள்ள வேண்டும். போலீஸ் நடவடிக்கைகளை தடுக்க, அரசு மக்கள் சார்பிலே நின்று அநீதிகளைத் தடுக்கும், எந்த போலீஸ் ஆபீசராக இருந்தாலும் மக்கள் சார்பிலே நின்று நடவடிக்கை எடுக்கும் என்பது எங்கள் கொள்கை என்று இந்த அரசு திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்.

இன்றைக்கு காங்கிரஸ் கட்சி நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வந்திருக்கிறது. போலீஸ் கொள்கை இப்படியே நீடித்துக் கொண்டு போனால் மக்களே உங்கள்மீது நம்பிக்கையில்லையென்று சொல்லும் நிலை ஏற்படும். விவசாயிகள், தொழிலாளர்கள் பக்கம் நிற்போமென்று சொல்லிக்கொண்டிருந்த இந்த அரசு நிலப்பிரபுக்களின், முதலாளிகளின் பக்கத்திலும், போலீஸ் உயர்தர அதிகாரிகளின் பக்கத்திலும் சாய்ந்து வருகிறது என்ற எண்ணம் வளர்ந்து வருகிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றுதான் இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம், அதை நான் ஆதரிக்கிறேன் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைய பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும்.

7-00 பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. *Statutory Rules and Orders*

@ 276. Notification issued with G.O. Ms. No. 1013, Rural Development and Local Adminitsration, dated the 1st June 1970, in regard to an amendment to the conduct of Election of Members of Town Panchayats Rules, 1964. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 277. Notification issued with Roc. No. 144830/69-P2, dated the 7th February 1970, in regard to exclusion of area from the existing Veeravanallur Town Panchayat in Ambasamudram taluk

தான் பிரிவினையே ஏற்பட்டிருக்காது என்பதை நாட்டுக்கு





of Tirunelveli district for the constitution into a separate panchayat by name "Puthukudi" [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 278. Notification issued with G.O. No. 1576, Revenue, dated the 25th May 1970 in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959 published at pages 232--280 of the Rules supplement to the *Tamil Nadu Government Gazette* dated the 1st April, 1959 as subsequently eamended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act 1959 (Tamil Nadu Act I of 1959].)

@ 279. Notification issued with G.O. P. No. 540, Revenue, dated the 23rd February 1970, in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232 to 280 of the Rules supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

@ 280. Notification issued with G.O. Ms. No. 550, Rural Development and Local Administration, dated the 28th March, 1970, in regard to exclusion of certain local areas of Pettai rural village from the limits of Tirunelveli Municipality with effect from the 31st March 1970. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities, Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

@ 281. Notification issued with Roc. No. 177862/69-P2, dated the 1st December 1969 in regard to exclusion of areas from the existing Nedumaram Panchayat and inclusion within the limits of Kumarapettai Panchayat in Tirupattur taluk of Ramanathapuram district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

B. *Reports, Notifications and Other Papers.*

£ 64. List of Unstarred Questions and Answers from Nos. 1 to 27 only.

£ 65. The Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1970 (L.A. Bill No. 26 of 1970).

£ 66. The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 27 of 1970) with Annexure.

£ 67. The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill 1970 (L.A. Bill No. 28 of 1970) with Annexure.

£ 68. The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Bill, 1970 (L.A. Bill No. 29 of 1970).

£ 69. The Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 30 of 1970).

& 70. Annexure to the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1970 (L.A. Bill No. 26 of 1970).

& 71. Annexure to the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Bill, 1970 (L.A. Bill No. 29 of 1970).

& 72. Annexure to the Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 30 of 1970).

& 73. The Tamil Nadu Panchayat Courts (Validation of Proceedings) Bill, 1970 (L.A. Bill No. 31 of 1970)

& 74. The Tamil Nadu Requisitioning of Motor Vehicles Bill 1970 (L.A. Bill No. 32 of 1970).

---

@ Laid on the Table of the House on 3rd September 1970.

£ Despatched to Members on 3rd September 1970.

& Despatched to Members on 4th September 1970.

## இணைப்பு.

### விவர அறிக்கை.

[22-ம் பக்கத்தில் 261-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

சென்னை அரசு தலைமைச் செயலகத்தில் 10—11—1969 அன்று சிறுபான்மை மொழியினருக்கான ஆணையாளர், சிறுபான்மை மொழியினரின் பிரதிநிதிகளைச் சந்தித்தார். கல்வித்துறைச் செயலாளரும், அரசு பொதுத் துறை கூட்டுச் செயலாளரும், பள்ளிக் கல்வி இணை இயக்குநரும் அப்போது இருந்தனர். தொடக்கத்தில் சிறுபான்மை மொழியினரின் நலப்பாதுகாப்புக்கு இந்திய அரசும், மாநில அரசுகளும் மேற்கொள்ளும் ஏற்பாடுகளைப்பற்றி ஆணையாளர் விவரித்தார். அதைத் தொடர்ந்து நடந்த விவாதத்தின்போது, சிறுபான்மை மொழியினரின் பிரதிநிதிகள் சில முறையீடுகள் செய்தனர். கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள், சிறுபான்மையினர் எடுத்துக் கூறிய பல்வேறு பிரச்சனைகள் குறித்துத் தற்போதைய நிலைமைபற்றி விளக்கினர். சிறுபான்மை மொழியினருக்கான ஆணையாளரிடமிருந்து கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் வரப்பெற்றுள்ளன. அந்தந்தத் துறைத் தலைவர்களைக் கலந்து இவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

தான் பிரிவினையே ஏற்பட்டிருக்காது என்பதை நாட்டுக்கு எடுத்துச [illegible]



The Commissioner for Linguistic Minorities met the representatives of the Linguistic Minorities at the Secretariat in Madras on 19th November 1969. The Education Secretary, the Additional Secretary to Government, Public Department and the Joint Director of School Education were present at the meeting. At the outset, the Commissioner detailed the steps taken by the Government of India and the State Governments for safeguarding the interests of Linguistic Minorities. During the discussions that followed, the representatves of the Linguistic Minorities made certain representations. The representatives of the Tamil Nadu Government who were present at the meeting explained the present position in respect of the various points raised by them. The proceedings of this meeting have been received from the Commissioner for Linguistic Minorities. They are under examination in consultation with the concerned Heads of Departments

# தமிழ் நாடு சட்டப் பேரவை

## செவ்வாய்க்கிழமை, 1970 செப்டம்பர் 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர்** கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### *Japanese Goodwill Mission*

* 289 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether he met a Japanese Goodwill Mission about the 13th November 1969?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஆம்.

### மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் சுத்திகரிப்பு ஊழியர்கள் வேலை நிறுத்தம்.

* 290 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் 15-10-1969-ல் சுத்திகரிப்பு ஊழியர்கள் திடீரென வேலை நிறுத்தம் செய்தார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஆம்.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரி சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் எக்காரணத்தை முன்னிட்டு வேலைநிறுத்தம் செய்தார்கள்? அவர்களுடைய கோரிக்கைகள் என்ன? அவற்றைத் தீர்ப்ப தற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? குறைந்த பட்ச வாழ்க்கைக் கேற்ற வசதிகளையாவது இந்த அரசு அவர்களுக்கு அளிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** துப்புரவுத் தொழிலாளர்கள் கோரிக்கை வைத்துச் செய்யப்பட்ட வேலைநிறுத்தம் அல்ல இது. 14-7-1970 அன்று ஒரு துப்புரவுத் தொழிலாளிக்கு மார்பு வலி ஏற்பட்டது. அவர் காஷுவாலிடி பிரிவில் பணிபுரிந்து வந்தார். உடனே அவர் ஆஸ்பத்திரியில் இருந்த திரு. கே. குமாரசுவாமி என்ற டாக்டரிடம் அனுப்பப்பட்டார். அவரை குமாரசுவாமி வெளியே போ என்று சொல்லித் திட்டியதாக அந்தத் தொழிலாளி குறைபட்டுக்கொண்டு அன்று இரவே 11½ மணிக்குத் தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொண்டுவிட்டார். உடனே அவர் அறுவைச் சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டார். ஆயினும் அவர் அங்கே இறந்துவிட்டகாரணமாக மறுநாள் காலையில் துப்புரவுத் தொழிலாளர்கள் அத்தனைபேரும் வேலைநிறுத்தம் செய்தார்கள். டீன் அவர்கள் தலையிட்டு டாக்டர் கே. குமாரசுவாமியை விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்தவுடன் அத்தனைபேரும் வேலைக்குத் திரும்பிவிட்டார்கள்.

அந்த டாக்டர்மீது விசாரணை செய்யப்பட்டு அந்த இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு அவர் மாற்றப்பட்டிருக்கிறார். அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

## *Pupils of Vadapathimangalam Elementary School*

* 291 *Q*.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether a number of pupils suffered from food poison in the Vadapathimangalam Elementary School in Thanjavur District around 4th February 1970 after consuming the Midday Meal?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* நச்சுணவினால் மாணவர் யாரும் பாதிக்கப்படவில்லை. எனினும் உணவில் பல்லி காணப்பட்டதாக மற்றொரு மாணவன் கூச்சலிட்டதன் விளைவாக, இரு மாணவர்கள் வாந்தி எடுத்தனர். அவ்வுணவு முற்றிலும் தவிர்க்கப்பட்டதுடன் எச்சரிக்கையாக எல்லா மாணவர்களுக்கும் மருத்துவமனையில் இரைப்பை துப்புரவு (stomach wash) செய்யப்பட்டது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* 292, 293, 294, 295, 296 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

## கோழிப் பண்ணைகளில் புதிய ஆராய்ச்சி

* 297 வினா.—*திரு. எம். பூபதி :* மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கோழிப்பண்ணைகளில் ஒவ்வொரு கோழியும் ஒரே நாளில் இரண்டு முட்டைகள் இடச்செய்யும் ஆராய்ச்சி நடத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், இதில் வெற்றி ஏதேனும் கிட்டியதா?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

*திரு. எம். பூபதி :* நம்முடைய கோழிப் பண்ணைகள் நட்டத்தில் நடைபெறுவதாக மூடப்பட்டு வருகின்றனவே, ஆனால் ருஷ்யா, சீனா போன்ற நாடுகளில் பகல் போலவே இரவு நேரங்களிலும் விளக்குகளைப் பகல்போலப் போட்டு ஒரு நாளைக்கு இரண்டு தடவை இ,ரவும்கூட கொழிகள் முட்டையிடச்செய்கிறார்களே, நம் நாட்டிலும் அதைப்போல நம் மாநிலத்திலும் இரு முறை முட்டையிடும் முறையைக் கொண்டுவர அமைச்சர் தலைமையில் ஒரு குழுவைப்போட்டு வெளிநாடு சென்று அதைப் பரிசீலித்து வருவார்களா?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* அது போன்ற தகவல் கிடையாது. குழு அமைக்கின்ற உத்தேசம் இல்லை.

*திரு. கே. என். குமாரசாமி :* நம் மாநிலத்தில் கோழிப் பண்ணைகள் மூடப்பட்டு வருகின்றன. அதற்காகக் கட்டப்பட்ட கட்டடங்கள் வீணாகக் கிடக்கின்றன.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இது கோழி இரண்டு முட்டையிடுவதைப் பற்றிய கேள்வி.





*திரு. கே. என். குமாரசாமி :* ஒரு முட்டையிடுவதற்குக்கூட வழியின்றி மூடிவிட்டார்களே என்று கேட்கிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* கோழிப் பண்ணைகளை மூடிவிட்டார்கள் என்ற தவறான செய்தி பரப்படுகிறது. முன்பு கோழிப் பண்ணை என்று போர்டு இருக்கும். உள்ளே கோழியிருக்காது, முட்டையிருக்காது அதுபோன்ற இடங்களைத்தான் மூடினோம். இன்னும் தொடர்ந்து நட்டத்தில் இருந்துகொண்டிருந்த இடங்களை மூடி அங்கேயிருந்த குஞ்சுகளை வேறு இடங்களுக்கு அனுப்பியிருக்கிறோம்.

*திரு. கே. ஆர். கோவிந்தன்:* நம்முடைய கோழி முட்டைகளுக்கு வெளி நாடுகளில் கிராக்கி இருக்கிறதா? ஆம் எனில் அனுப்பப்படுகிறதா?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* ஏதேனும் அனுப்ப முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

*திரு. கே. விநாயகம் :* கோழிப் பண்ணை நடத்துவதில் அதிகமாகச் செலவு ஆகிறது. நம்முடைய உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கிற சம்பளத்தை எல்லாம் கணக்கிட்டுச் சராசரி பார்த்தால் ஒரு முட்டை 1¼ ரூபாய் ஆகிறது என்று முன்பு மாவட்ட கலெக்டர் அறிக்கை கொடுத்தார்களே, அதன் காரணமாகத்தான்—எக்கனாமிகலாக இல்லை என்று இந்த பவுல்ட்ரி பார்ம்கள் மூடப்பட்டுவிட்டனவா ?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* கோழிப்பண்ணை லாபகரமாக இருக்க அதிகமாக கோழிகள் இருந்தால்தான் முடியும். டாக்டர்களை எல்லாம் போட்டுச் சம்பளம் கொடுக்கிறபொது அப்போதுதான் பொருளாதாரத் துறையில் நட்டமில்லாதிருக்கும். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் பெரிய அளவில் கோழிப்பண்ணைகள் ஏற்படுத்த வேண்டுமென்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.

## *Construction of Advocates' Chamber*

* 298 *Q*.—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any proposal for the construction of Advocates' Chamber sent by the High Court, Madras is pending construction in 1969 before the Public Works Department of Government of Tamil Nadu; and

(*b*) if so the action taken thereon?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* (அ) ஆம்.

(இ) இச்செயற்குறிப்பு பரிசீலனையிலுள்ளது.

*திரு. டி. மார்டின் :* பொதுவாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு அறிஞர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இருந்து தொழில் செய்ய சேம்பர் வசதி இல்லாமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அடிஷனல் சேம்பர் கட்டவேண்டுமென்று பலகாலமாக யோசனை இருந்து வருகிறதே, உடனடியாகக் கட்ட முயற்சி எடுக்கப்படுமா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* பலகாலமாக இருப்பது எனக்குத் தெரியாது. மே 1970 இல் தான் உயர்நீதி மன்றத்தில் இருந்து ஒன்பது லட்சத்து ஐம்பத்தாராயிரம் மதிப்பில் அடிஷனல் சேம்பர்ஸ் கட்ட ப்ரபோஸ் வந்திருக்கிறது. அது பரிசீலனையில் உள்ளது.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜூடிஷியல் டிமாண்ட்மீது அடிக்கடி பேசுவதற்கு நமக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிற காரணத்தாலே பொதுவாக ஹைகோர்டிலே வழக்காட வருகின்றவர்கள் இருப்பதற்கு வசதியில்லாமல் பெஞ்சுகள் முதலிய வசதிகள் இல்லாமல் இருக்கிற காரணத்தினால் அவர்கள் பே மாஸ்டர், அதாவது வழக்குக்கு கோர்ட் பீஸ் கட்டுகிறார்களே என்பதை மனதிலே வைத்து, வருகின்றவர்கள் இருப்பதற்கு பெஞ்சுகள், நாற்காலிகள் போட்டு, தங்களுடைய வழக்கு நடப்பதைப் பார்ப்பதற்கு வருகின்றவர்களுக்குக் குறைந்த பட்சம் அப்படிப் பட்ட வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு இந்த அரசு ஹைகோர்ட்டுக்குப் பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உயர்நீதி மன்றத்திலே தங்களுடைய வழக்குகள் நடந்துகொண்டிருக்கும்பொழுது அமர்ந்து பார்ப்பதற்கு அருமையான நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. நானேகூடப் பார்த்திருக்கிறேன். ஆகவே, பொதுமக்களுக்கு என்ன தேவை என்று உயர்நீதி மன்றம் பரிந்துரை செய்கிறதோ அதையெல்லாம் நாம் முடிந்த அளவுக்குச் செய்து தருகிறோம்.

## *Sub-Magistrate's Courts at Vannarpet*

* 299 *Q.*—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is a proposal to shift the Sub-Magistrate's Courts at Vannarpet to Kokarakulam in Tirunelveli district?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே வண்ணாரப்பேட்டையிலுள்ள நீதிமன்றத்தை கொக்கரகுளத்திலே உள்ள கலெக்டர் ஆபீசுக்குக் கொண்டுவரவேண்டுமென்று அங்கேயுள்ள வழக்கறிஞர் சங்கம் ஏகோபித்து முடிவுசெய்து அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளதா? ஆமெனில் அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வழக்கறிஞர் சங்கம் முடிவு செய்ததைப் பற்றி என்னிடத்திலே விவரம் இல்லை. ஆனால் அந்த நீதிமன்றம் கலெக்டர் ஆபீசுக்கு மாற்றப்படவேண்டுமென்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் சிபாரிசின்பேரிலே இதுகுறித்துத் தகுந்த முடிவு எடுக்கப் படும்.

ஹாஜி ம. மூ. பீர்முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் கொக்கரகுளத்திலே வழக்குமன்றம் இருக்கிற இடம் அவ்வளவு வசதியாக இல்லாமல் இருக்கிற காரணத்தினாலும் வண்ணாரப்பேட்டையிலுள்ள வழக்குமன்றத்தை பாளையங்கோட்டை ஹை கிரவுண்டிற்கு மாற்றுவதற்கு—மதுரையில் இருப்பதைப் போன்று செய்வதற்கு—அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா? இல்லையென்றால் அரசு அதைக்குறித்துப் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கிற நீதிமன்றங்களுக்குச் சரியான கட்டடங்கள் இல்லை என்பதை நானே சென்று பார்த்தேன். அங்கேயுள்ள நீதிபதிகள் அழைத்துச் சென்று காண்பித்தார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் நீதிமன்றங்கள் சிறந்த இடங்களில் அமைக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் ஒவ்வொரு மாவட்டமும் அதற்கான செயற்குறிப்பைத் தயாரித்து வருகிறார்கள். அந்தச் செயற்குறிப்பு வந்ததற்குப் பிறகு படிப்படியாக பேஸ்ட் புரோகிராமாக எல்லா மாவட்ட நீதி மன்றங்களுக்கு சிறந்த கட்டிடங்கள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் மிகுந்த முக்கியத்துவத்தைத் தந்துவருகிறது.



## நாகப்பட்டினம் தொழிற்பேட்டை

* 300 வினா—திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் தொழிற்பேட்டை கட்டி முடிப்பதற்கு ஆன மொத்த செலவு எவ்வளவு?

(இ) இப்பொழுது அங்கு என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் (அ) ரூ. 4,19,470.

(இ) இந்தத் தொழிற்பேட்டையில் மொத்தம் நான்கு தொழிற் கூடங்கள் 18-5-1970-ல் கட்டி முடிக்கப்பட்டன. இவற்றில் ஒரு தொழிற் கூடம் இரும்பினாலும் எஃகினாலும் ஆன நிர்மாண வேலைகள் செய்தல் (Iron and Steel Fabrication) மற்றும் கூரைகளுக்கு வேண்டிய உத்திரங்கள் (Trusses) இரும்புக் கதவு, சன்னல்கள் தயாரித்தல் (gates and windows manufacture) முதலியவைகளுக்காக 13-7-1970-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்: தலைவர் அவர்களே, இப்பொழுது என்ன என்ன தொழில்கள் அங்கே செயல்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாம் அலாட்மெண்ட் செய்ததைப்பற்றிச் சொன்னேன். தொழில் ஆரம்பித்து நடத்துகிறார்களா என்பதைப்பற்றி என்னிடத்திலே தகவல் இல்லை.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்: ஏராளமான பணம் செலவு செய்து எந்தத் தொழிலும் ஆரம்பிக்கப்படாமல் சும்மா பூட்டிக் கிடக்கிறது. எனவே, தொழில் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த அளவிற்கு 1967-ஆம் ஆண்டு 3 லட்சத்து 23 ஆயிரம் என்ற அளவிற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதி வாங்கியிருக்கிறார்கள். 1970-ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறையிலே யார் யார் வாடகைக்குக் கேட்கிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுத்திருக்கிறோம். நாம் தொழில் நடத்துவதில்லை. அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். எந்த எந்தத் தொழிலுக்கு அலாட் செய்து இருக்கிறோம் என்பதைப்பற்றிச் சொன்னேன். தொழில்கள் ஆரம்பிக்க வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. கனம்

உறுப்பினர் போன்றவர்கள் இன்னும் பலரைச் சேர்த்து அந்த முயற்சியிலே ஈடுபடுவதற்குக் கூட்டுறவுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ ஏற்பாடு செய்தால் அரசாங்கம் கட்டடம் கட்டுவது, பண உதவி செய்வது, இயந்திரங்கள் வாங்கிக்கொடுப்பது, மூலப்பொருட்கள் பெற்றுத் தருவது இவற்றையெல்லாம் செய்வதற்குத் தயாராக இருக்கிறது.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டைகளிலே தனியார் தொழில்களை நடத்தினாலும் நாம் மூலதனம் போட்டிருக்கிறோம், ஏராளமான பணம் போட்டு இருக்கிறோம். சிறு தொழில்கள் நெருக்கடியான கட்டத்தில் இருக்கின்றது. நம் மாநில அரசு வெளிநாடுகளுக்கோ அல்லது வெளி மாநிலங்களுக்கோ தேவையான பொருட்களை எவை எவை என்று அறிந்து அந்த வகையிலே உற்பத்தி செய்வதற்கு சிறு தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய வகையில் தொழிலதிபர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறதா? சிறு தொழில்கள் அபிவிருத்தியடைய சர்க்கார் முயற்சியெடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டிலே சிறு தொழில்களுக்கு ஆபத்து இருப்பதாக யாரும் என்னிடத்திலே சொல்லவில்லை. புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது ஆண்டுதோறும் தமிழ்நாட்டிலே ஏராளமான சிறு தொழில்கள் தொடங்கப்படுகின்றன என்பதை அறிகிறோம். இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் காம்ப்ளக்ஸ் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய மாநிலம் சிறப்பான முறையிலே நடைபெறுவதாக எல்லா மாநிலங்களின் அமைச்சர்களும் சொல்லியிருக்கிறார்கள். சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு இந்த அரசாங்கம் ஊக்கம் தருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்கிற கருத்து உற்பத்தி செய்த பொருள்களுக்கு சந்தை தேடித்தருவது, மார்க்கெட்டிங் பெஸிலிட்டிஸ் செய்துகொடுக்கின்ற பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்வது என்பது. அப்படிச் செய்தால் சிறு தொழில்களுக்கு வாய்ப்பு இருக்கும் என்பது உண்மை. அதற்காகத்தான் சர்க்கார் ஒரு சிறு தொழில் வாரியத்தை ஏற்படுத்தித் தனியார் துறையில் சிறு தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய வகையில் அவர்களுக்குச் சந்தையைத் தேடிக்கொடுப்பதற்கும் மூலப்பொருட்களை வாங்கிக்கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்து கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

### *Working Group for Electronics Industries*

* 301 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have constituted any Working Group to study the Electronics Industry in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் குறிப்பாக சிறுதொழில் பிரிவில் மின் அணுப் பொருள்கள் உற்பத்தித் தொழில் வளர்ச்சிக்குரிய வாய்ப்புகளைக் கண்டறிவதற்காக மின் அணுப் பொருள் உற்பத்தித் தொழிலுக்கான செயற்குழு ஒன்றை அமைப்பதற்கு 1970 ஏப்ரலில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மின் அணுப் பொருள் உற்பத்தித் தொழில் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய வழிவகைகளைப்பற்றி விவாதிப்பதற்காக குறித்த காலத்திற்கொருமுறை அது கூட்டங்கள் நடத்தியது. இச்செயற்குழு தனது அறிக்கையை முடிக்கும் தறுவாயில் உள்ளது. அவ்வறிக்கை விரைவில் அரசிற்கு அனுப்பப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.



### கோயம்புத்தூரில் சிறுதொழில்கள் பொருட்காட்சி

* 302 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகரத்தில் சிறு தொழில்களின் நிலையான பொருட்காட்சி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ மாதவன் :** இல்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில் நிலையத்தின் சார்பாக கோவை நகரிலே பொருட்காட்சி அமைக்கப்படுமேயானால் வருகின்ற பொதுமக்கள் பொருட்காட்சியைப் பார்க்கவும், அரசாங்கத்திலே உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை வியாபாரம் செய்வதற்கும் வசதியாக இருக்கும். எனவே, அரசாங்கம் அதைத் தொடங்குவதற்கு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறு தொழில்களிலே உற்பத்தியாகின்ற பொருட்கள் விற்பனையாவதற்கு வசதிசெய்யும்வண்ணம் இப்படிப்பட்ட கண்காட்சிகள் அமைக்கப்படவேண்டுமென்பதைக் கொள்கையளவிலே நம்முடைய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சில இடங்களிலே இதற்கான வசதிகளுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே நாம் பரிசீலித்து எந்த இடத்திலே என்ன என்ன முறையிலே அமைத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைப்பற்றி முடிவு எடுக்கலாம்.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் ஏற்படுத்தப் பட்டிருக்கிற சிறு தொழில்களிலே என்ன என்ன பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன? அந்தத் தொழிற்சாலைகள் லாபகரமாக நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பெரிய கேள்வியாகப் போடுகிறார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் தொழில் நடத்துகிறார்கள். யார் யார் என்ன தொழில்கள் நடத்துகிறார்கள் என்று விவரம் இல்லை. ஒவ்வொருவருடைய லாபநஷ்டம் கணக்கு நமக்கு வருவதில்லை. குறிப்பாக, தொழில்களைப்பற்றி பொதுமக்களுடைய நன்மையைக் கருதி கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னால் அதை அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

### திருப்பூரில் நொய்யலாற்றின் குறுக்கேயுள்ள அணையை உயர்த்துதல்

* 303 வினா.—**திரு. சு. துரைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

### கிராம வளர்ச்சித்துறை புனரமைப்பு.

* 307 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கிராம வளர்ச்சித் துறையை புனர் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (அ) ஆம்.

(இ) அரசு இவ்விஷயத்தில் முடிவெடுத்தவுடன்.

திரு. சு. துரைசாமி தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆம் என்று தெரிவித்தார்கள். எந்தெந்த முறையில் புனர் அமைப்பு செய்யப் போகிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, வட்டாரங்களின் அமைப்பை (பிளாக் செட் அப்) புனரமைப்பு முக்கியமாக வட்டார வளர்ச்சி அலுவலர்களின் வேலைகளைக் குறைக்கும் நோக்கத்துடன் வட்டார அலுவலர்களின் வேலைகளில் சில மாறுதல்கள் செய்ய அரசு உத்தேசித்துள்ளது. தற்பொழுது வட்டார வளர்ச்சி அலுவலர் வட்டாரத்திலுள்ள விவசாய விஸ்தரிப்பு அலுவலர், கல்வி விஸ்தரிப்பு அலுவலர், ஊராட்சி ஒன்றியத்தின் பொறியர், கூட்டுறவு விஸ்தரிப்பு அலுவலர், தொழில் விஸ்தரிப்பு அலுவலர், மற்றும் பல விஸ்தரிப்பு அலுவலர்களின் அலுவல்களை நேரடியாக மேற்பார்வை பார்க்க வேண்டியிருக்கிறது. இதனால் அவருக்கு வேலைப் பளு அதிகம். வட்டாரத்தின் புனரமைப்புத் திட்டப்படி வட்டாரம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, நான்கு பிரிவுகளிலும் செயல்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் ஒரு குறிப்பை பெற்றுள்ளது. இதை கிராம வளர்ச்சி இயக்குநரோடு கலந்தாலோசித்து இன்னும் முடிவெடுக்காமல் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது இந்த ரூரல் டெவலப்மெண்ட் டிப்பார்ட்மெண்டு , இந்த கம்யூனிடி டெவலப்மெண்டு டிப்பார்ட்மெண்டுகளை திருத்தி அமைக்கும்போது இந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்களை நேரடியாக அல்லது எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சு மூலமாகவோ, ஒன்றியத் தலைவர் மூலமாகவோ செய்து கொள்வதற்குப் பதிலாக இதற்கென்று தனியாக ஒரு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஏற்படுத்தினால் இந்த ரூரல் டெவலப்மெண்டு டிப்பார்ட்மெண்டு வேலைபார்ப்பதற்கு நல்ல திறமையான ஊழியர்கள் இந்த வேலைக்கு மனு போடுவார்கள். அப்படி இருந்தால் யோசிப்பதற்கோ பரிசீலனை செய்வதற்கோ இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தனித் துறை அமைப்பது என்பது அரசாங்கத்தின் முடிவல்ல. இருக்கிற நிலைமையை புனர்அமைப்பதுதான் அரசாங்கத்தின் கருத்தில் இருக்கிறது. இப்போது நியமனங்கள் விதிமுறைகளின்படி செய்யப்படுகின்றன. அதற்காக தனி சர்வீஸ் கமிஷன் நிலை ஏற்பாடு செய்யலாமா என்று கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட நிலைமை எதுவுமில்லை.





### *Separate service for Community Development.*

* 308 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether separate service for Community Development is to be formulated; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை, ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளரின் ஊராட்சி வளர்ச்சிக்கான நேர்முக உதவி அலுவலரின் பதவியை மாவட்ட வளர்ச்சி அதிகாரியின் பதவியாக உயர்வுபடுத்தவும், கோட்ட ராட்சி அலுவலர்களின் பதவிகளை கெசட் பதிவு பெற்றதாகவும், வட்டாரங்களின் அமைப்பைப் புனரமைக்கவும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த சமுதாய வளர்ச்சிக்கு என்று தனியாக ஒரு பணி அதிகாரி அமைப்போமேயானால் இன்னும் சிறப்பாக செயல்பட முடியும். பல துறைகளில் இப்போது இருக்கின்ற அதிகாரிகளுக்கு வேலைப் பளு இருக்கிறது என்று அரசாங்கம் கருதுகின்றதா ? குறிப்பாக, தொழில் வளர்ச்சி அதிகாரிகள் அவர்களுக்கு அதிகம் வேலை பளு இருக்கிறது என்று கருதுகின்றதா ? இல்லை என்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, வட்டார வளர்ச்சித் திட்டங்களுக்குத் தனியாக ஒரு துறை அமைப்பதில் பல சங்கடங்கள் ஏற்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டியதன் பேரில் இதிலே புனரமைப்பு செய்வது என்று நான் முன்பே குறிப்பிட்டு இருக்கிறேன். சில மாறுதல்களைச் செய்ய அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக தொழில் வளர்ச்சி அலுவலர்கள் இப்போது மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வேலைக்குப் பளு அதிகம் இல்லை என்று அவர்களை எந்தெந்த துறையிலே பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைப் பற்றி அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ஊழியர்களை அமர்த்துவதற்கு தனி பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அமைப்பதற்கு அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளதா ? அப்படியானால் அதன் நிலைமை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட விவரங்கள் எதுவும் இல்லை.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்ற நேரத்தில் வட்டார வளர்ச்சியை புனர் அமைப்பு செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். சில ஊராட்சி ஒன்றியங்களில் 22 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். வேறு சில ஊராட்சி ஒன்றியங்களில் 48, 50 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். கிராம வளர்ச்சிப் பணிகள் துரிதமாக நடைபெற வேண்டுமானால் அதிகமாக ஊராட்சிகள் இருக்கிற ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்து செயல்படுத்த இந்த அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** கேள்வி இந்தத் துறையைப் புனரமைப்பு செய்வதைப்பற்றித்தான். உறுப்பினர் அவர்கள் ஒன்றியங்கள் புனரமைப்பு செய்வது பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஒன்றியங்கள், மூன்று காரணங்கள் அடிப்படையில் வைக்கப்பட்டிருக்கிறது. மக்கள் தொகை, பரப்பளவு, கிடைக்கிற வருமானம். அங்கே இருக்கிற ஊராட்சி மன்றங்கள் அத்தனையும் கணக்கெடுத்துத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. சில இடங்களில் அதிகமாகவும் சில இடங்களில் குறைவாகவும் உள்ள ஊராட்சி மன்றங்கள் உள்ளன. அதைப் புனரமைப்பு செய்வது என்றால் அரசுக்கு நிறைய செலவாகும். அதைப் பரிசீலிக்கும் நிலைமை இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், இந்த சமுதாய அபிவிருத்தி பற்றி ஏற்கனவே திரு. முருகேச முதலியார் அவர்களைக் கொண்டு ஒரு கமிட்டி அமைத்து அவர் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். அந்த ரிப்போட்டின் அடிப்படையில் எல்லாக் கட்சிக்காரர்களையும் கொண்ட கூட்டம் வைத்து, அதில் மாநில அடிப்படையில் அதிகாரிகள் நியமிக்கப்படுகிறபோது, மாவட்ட அளவில் டிஸ்ட்டிரிக்ட் டெவலப்மெண்டு ஆபிஸர் என்ற அடிப்படையிலே நியமனம் செய்ய வேண்டுமென்று ஏகோபித்த முடிவு எடுத்ததே, அதை அமலாக்கும் உத்தேசம் உண்டா? அந்த ரிப்போர்ட் என்ன ஆனது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அந்த ரிப்போர்ட் அரசாங்கத்தின் கைவசம் பத்திரமாக இருக்கிறது. அதன் மீது பரிசீலனை செய்துதான் மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள், வட்ட வளர்ச்சி அதிகாரிகள் நியமிக்கப் போகிறோம். அந்த வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசித்து முடிவு செய்யப்படும்.

*Scrutiny fee on lay-outs.*

முற்பகல் 9-30. * 309 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Corporation of Madras is levying scrutiny fee on applicants for lay-outs from April 1969; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ), (இ) ஒப்பளிப்பு பெறுவதற்காக மனைப்பிரிவு வரைப் படங்களை அனுப்புபவர்களிடமிருந்து அவ்வரைப் படங்களைப் பரிசீலனை செய்வதற்காகக் கட்டணம் எதுவும் விதித்து வசூலிக்கப்படுவதில்லை. வரைப்படங்கள் அனைத்து குறித்தும், தற்காலிக அடிப்படையில் ஒரு சதவீத சென்டேஜ் கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

**திருவெறும்பூர் மின் அழுத்த தொழிற்சாலை பகுதியில் வீட்டு வரி.**

* 310 வினா—**திரு. வை சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, திருவெறும்பூரில் அமைந்துள்ள மின் அழுத்த தொழிற்சாலையில் வீட்டு வரி, தொழில் வரி முதலியன வசூல் செய்ய அரசு சம்பந்தப்பட்ட ஊராட்சிக்குத் தடை உத்தரவு இட்டுள்ளதா?





(இ) இத்தடை உத்திரவு எப்போது போடப்பட்டது?

(உ) எப்போது இத்தடை உத்திரவு நீக்கப்படும்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) நகரியம் ஒன்று அமைப்பது குறித்த பாரத் ஹெவி எலெக்டரிக்கல்ஸ் நிறுவனத்தின் வேண்டுகோளின் மீது ஒரு முடிவு எடுக்கப்படுகிறவரையில் அந்தப் பகுதியில் தொடர்புள்ள ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியக் குழுக்களும் வரி விதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டன.

(இ) 2--11--1965-இல் இப்படித் தடை உத்தரவு போடப்பட்டுள்ளது.

(உ) நகரியம் ஒன்று அமைப்பது குறித்த திட்டத்தின் மீது முடிவு எடுக்க இன்னும் சில காலம் பிடிக்குமாதலால், தொழில் வரி விதிக்காமலிருப்பதற்கான சலுகையை உடனடியாக எடுத்துவிட அரசு முடிவு செய்துள்ளது. பிற்பட்ட ஒரு தேதியிலிருந்து தொழில் வரி விதிக்குமாறு தொடர்புடைய ஊராட்சிகளுக்கு அறிவுரை அனுப்பப்பட்டுள்ளது. நகரியம் ஒன்று அமைக்கப்பட்ட பிறகு மற்ற வரிகள் விதிக்கப்படும்.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவரவர்களே, நகரியம் அமைப்பதற்குத் கால தாமதமாகும் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அந்தக் கிராமப் பஞ்சாயத்துக்கு இப்பொழுது வரும் வருமானம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பகுதியிலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு வரி கிடைக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** பாரத் ஹெவி எலெக்ட்ரிக்கல் ஒரு இந்திய அரசு நிறுவனமாகும். இந்திய அரசியலமைப்பின் 285 (1) பிரிவின் படி, திட்டப்பகுதியில் இந்திய அரசுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு வீட்டு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இந்திய அரசுக்கும் சொந்தமான எல்லாச் சொத்துக்களையும் பொறுத்தவரை பணிக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு இந்திய அரசு தானாகவே இசைந்துள்ளது. அந்தப் பணிக்கட்டணங்களை வசூலிக்கத்தான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. என். மருதாசலம்:** தலைவரவர்களே, சாதாரண தொழிலாளர்களுக்கு, மில் தொழிலாளர்களுக்கு, தொழில் வரியில் அதிகமாக உயர்த்தியிருக்கிறார்கள். நூறு ரூபாய்க்கு மேற்பட்டவர்களுக்கு 2 ரூபாய் தொழில்வரியாக வாங்குவதை, இந்தத் தொழிலாளர்களுக்கு மாத்திரம் தொழில்வரியை ரத்து செய்ய உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இது ஒரு கொள்கைப் பிரச்சினையாகும்.

**கோயில்களிலிருந்து நிகர வருமானம்.**

* 311 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயில்கள், மடங்கள், ஆதீனங்கள் ஆகியவற்றின் நிகர வருமானத் தொகையினை கல்வி, மருத்துவமனை போன்றவற்றிற்கு செயல்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இந்து மத போதனை அளிக்கும் கல்வி நிலையங்களை ஏற்படுத்துவதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. யாத்ரிகர்களின் பயனுக்காக மருத்துவமனைகளையும், மருந்தகங்களையும் ஏற்படுத்தி, அவற்றைப் பேணுவதற்கும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, கோயில்கள், மடங்கள், ஆதீனங்கள் ஆகியவற்றின் நிகர வருமானத்திலிருந்து வரும் தொகையினுல், கணிசமான தொகையைக் கண்டிப்பாக இம்மாதிரிக் காரியங்களுக்குப் பயன்படுத்த அரசு ஏதாவது உத்தரவிட முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அதைத்தான் முதலிலேயே சொன்னேன். சட்டத்திலே இடமிருக்கிறது. ஒவ்வொரு கோயிலிலும், சர்ப்ளஸ் பண்ட் இருந்தால், அதாவது கோயில் காரியங்களுக்கான செலவுகளுக்குப் போக மீதமிருந்தால், அப்படி மிச்சமிருக்கும் பணத்தைக் கொண்டு, இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்குச் செய்யலாம் என்று சட்டத்தில் இடமிருக்கிறது. அந்தந்தக் கோயில்களில் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்காக தனியாக ஒரு சட்டம் தேவையில்லை.

**திரு. என். வரதராஜன் :** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மிகவும் வருமானம் வரும் இப்படிப்பட்ட அறநிலையங்களிலிருந்து, அந்தத் தொகையைப் பொதுமையாக்கி, அறநிலைய ஆணையர் மூலமாக இப்படிப்பட்ட வேலைகளை ஆரம்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அறநிலைய ஆணையாளர் அவர்களுடைய ஒப்புதலின்பேரில் இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் அந்தந்தக் கோயில்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறது. ஆகவே, ஆணையாளர் அவர்களுடைய உத்தரவைப் பெற்று, சில காரியங்களெல்லாம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, எல்லாக் கோயில்களிலிருக்கும் பணத்தை எடுத்து அரசாங்கத்திலே வைத்துக்கொண்டு செய்வதற்கு இப்பொழுது சட்டம் இடம் கொடுக்கவில்லை. இருந்தாலும் அந்தந்தக் கோயில்களே இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து வருவதால், ஒரு தடங்கலும் இல்லாமலிருப்பதால் அப்படிப்பட்ட ஒரு விதி தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், கோயில்கள், மடங்கள், ஆதீனங்கள் போன்ற அமைப்புக்களிலிருந்து வருகின்ற வருமானத்திலே இவ்வளவு பர்செண்டேஜ் கல்வி, மருத்துவம் போன்றவைகளுக்கு ஒதுக்கி ஒரு தனி நிதி ஏற்படுத்தி ஏன் அரசாங்கம் அந்தக் காரியங்களைத் துரிதமாகச் செய்யக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** சில கோயில்களிலே வருமானம் போதாத அளவிற்கு இருக்கிறது. சில கோயில்களில் அதிகமான வருமானம் வருகிறது. ஆகையால், இத்தனை பர்செண்டேஜ் என்று வைத்தால் சில கோயில்களுக்கும் நாம் கொடுக்க வேண்டிய நிலை இருக்கும். ஆகவே, சர்ப்ளஸ் பண்ட் இருந்தாலொழிய அதை நாம் எடுப்பது அவ்வளவு நல்லதாக இருக்காது. சர்ப்ளஸ் பண்டைக் கொண்டு செலவு செய்யலாம் என்று சட்டத்தில் வகுத்து வைத்திருக்கிறார்கள்.



**திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர் :** தலைவரவர்களே, கோயில்களில் வரும் அதிக வருமானத்தை, அதாவது அதிக வருமானம் வரும் கோயில்களில் இருக்கும் மீதிப் பணத்தை கல்வி ஸ்தாபனத்திற்கு எடுத்துக் கொள்ளலாம், அதற்கு விதி இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அதைத்தான் முதலிலேயே சொன்னேன், எடுத்துக்கொள்ளலாம் என்று.

Diversion can be made only from surplus funds of temples for purposes mentioned under section 66 of the Act. என்றிருக்கிறது. ஆகவே, மிச்சமிருக்கும் பணத்தைக் கொண்டு இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்யலாம் என்றுதான் சட்டத்தில் இருக்கிறது. அதைத்தான் செய்து கொண்டு வருகிறோம்.

### *Archakas of Sri Kapaleeswarar Temple.*

* 312 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the present archakas of Sri Kapaleeswarar Temple, Mylapore, Madras have been permitted to take remunerative jobs outside under (i) Government and (ii) private bodies ; and

(b) if so, the details of the archakas permitted to do so?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இல்லை.

### *Seminar conducted by Madras Management Association.*

* 313 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the State Government representatives participated in the seminar of the recommendation of the National Commission on Labour conducted by the Madras Management Association about 26th April 1970; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

### *Award on Plantation Labour.*

* 314 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether an award was given by the Labour Commissioner in the year 1969 in the dispute between the workers and the plantation owners; and

(a) whether an award was given by th Labour Commissioner owns quite a large area of rubber plantation, etc. ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) இல்லை**

**(இ) இவ்வினு எழவில்லை.**

திரு. கே. விஞயகம்: சார், இந்த இரு சாாருக்கும் ஏற்பட்டிருக்கிற சச்சரவுகளைப்பற்றி ஏதாவது மனு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அதைப் பற்றி பரிசீலிக்க, அவர்களுக்குச் சேரவேண்டிய சலுகைகளைத் தர ஆராய்ச்சி செய்ய அரசு முன்வந்ததா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: மூலக்கேள்வி, தோட்டத் தொழிலா அவர்களுக்காக ஏதாவது கமிஷனர் அவார்ட் வழங்கினாரா என்பது பற்றியது, அப்படி இல்லை. ஆனால் 1968, 1969, 1970-ஆம் ஆண்டிற்கான போனஸ் தரப்பட வில்லை. அதைப்பற்றி ஒரு உடன்பாடு காணவேண்டுமென்று அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. உடன்பாடு காணப்பட்டு; செட்டில்மெண்ட் உடன்பாட்டில் கையொழுத்து போடப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே சுமுகமான தீர்வு காணப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே 23 தோட்டங்களுக்கு அம்மாதிரி உடன்பாடு சென்ற ஆண்டு காணப்பட்டிருக்கிறது.

## தென்னை ஆராய்ச்சி நிலையம்.

*294 வினு.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை ஆராய்ச்சி நிலையம் ஏதேனும் நமது நாட்டில் செயல்பட்டு வருகிறதா?

(இ) இல்லையெனில், இனியேனும் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) தற்பொழுது மண்டல தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று வேப்பங்குளம் (தஞ்சாவூர் மாவட்டம்) என்னும் இடத்தில் செயல்பட்டு வருகிறது.

(இ) மேற்கூறிய தென்னை ஆராய்ச்சி நிலையத் (வேப்பங்குளம்) தைத் தவிர இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வாராய்ச்சி நிலையம் விரைவில் தகுந்த இடம் கிடைத்தவுடன் செயல்படவுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இம்மாதிரியான ஆராய்ச்சியின் காரணமாக தென்னையை மேலும் அபிவிருத்தி செய்ய அரசு மேற்கொண் டிருக்கும் நடவடிக்கையை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆராய்ச்சி நிலையம் தேவை என்பதை உணர்ந்து ஏற்கெனவே, 1958-ஆம் ஆண்டு, வேப்பங்குளம் என்னுமிடத்தில் ஒரு நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது. மேலும் இப்படிப் பட்ட நிலையம் அவசியம் என்பதை உணர்ந்து 1970-71-ஆம் ஆண்டில் இன்னொரு நிலையம் இராமநாதபுரம் மாவட்டத்தில் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. தகுந்த இடம் கிடைத்தபின்னர் அது செயல்படத் துவங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதைத்தவிர வேறு வேறு புதிய நிலையங்களை நிறுவ தற்சமயம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

திரு. நா. வீராசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுவதை வரவேற்கின்ற அதேநேரத்திலே, இந்த அரசு வந்ததற்குப் பின்னால் ஐ. ஆர். 8, குட்டை வாழை போன்ற இந்தப் பயிர்



களுக்கு கடன் உதவியை விவசாயிகளுக்குத் தருவதைப்போல், தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் தேங்காய்ப் பற்றாக்குறையைப் போக்கும் வகை யிலே, வட மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பிருக்கும் வகையிலே இதை நல்லமுறையில் உருவாக்க வேண்டி, விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் உதவி அளிக்க முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மூலக்கேள்வி 'தென்னை ஆராய்ச்சி நிலையம் ஏதேனும் நமது நாட்டில் செயல்பட்டு வருகிறதா?' என்பதாகும். உறுப்பினர் அவர்கள் ஐ.ஆர். 8, குட்டை வாழை போன்றவற்றிற்குக் கொடுப்பதைப் போல் பணப்பயிரை உற்பத்தி செய வதற்கும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதைப் பற்றிக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

## *I.R.8 variety of Paddy*

*295 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether the Government propose to launch upon a crash programme for cultivating high yielding I.R. 8 paddy over five lakh acres this Navarai season in Chingleput, North Arcot and South Arcot districts?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நவரை, சுவாணை வாரிப் பருவங்களில், மிகு பயன்தரும் நெல்ரகங்களை, இம்மாநிலமெங்கும் பயிரிட இவ்வரசு விரைவுத் திட்டம் ஒன்றைத் தொடங்கியது. செங்கல்பட்டு, வடஆற்காடு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் மட்டும் ஐ.ஆர். 8 நெல்லை ஏறக்குறைய ஐந்து லட்சம் ஏக்கர் நிலத்தில் பயிரிடத் திட்டமிடப்பட்டது. நடைமுறையில் மொத்தம் 6.15 லட்சம் ஏக்கர் பரப்பளவில் ஐ. ஆர். 8 நெல் பயிரிடப்பட்டது.

திரு. கே. விஞயகம்: இந்தக் குறிப்பிட்ட ஐ.ஆர். 8 என்ற நெல் 'ஹை ஈல்டிங் வெரைட்டி' என்று சொல்கிறார்கள். அதன் பொருள் என்ன? ஏற்கனவே இருக்கிற ரகங்களை விட அதிகமாக எவ்வளவு மணி—'இன் ப்ரொப்போர்ஷன்' எவ்வளவு க்ரெயின் வருகிறது? என்று சொல்லமுடியுமா? இந்த நெல் விளைந்த பிறகு அதிலிருந்து கிடைக்கக்கூடிய அரிசியைச் சாப்பிட்ட மக்கள் அது சுலபமாக ஜீர்ணிப்பதில்லை என்று பொதுவாக நாட்டிலே ஒரு புகார் இருக்கிறது. அதோடு அதிலுள்ள வைக்கோலைச் சாப்பிட்ட கால்நடைகள், காட்டில் எல்லாம் கூட அதை ஜீரணிக்க முடியாமல் தத்தளிக்கிறது என்று பொதுவான ஒரு கருத்து விவசாயிகளிடையே இருக்கிறது. அது உண்மையாக இருந்தால் அதைப் போக்குவதற்கு ஏதாவது நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மிக அதிக விளைச்சல் தரக்கூடிய ஹை ஈல்டிங் வெரைட்டி ஒரு அதிசய நெல். சாதாரண மாக ஒரு ஏக்கருக்கு 1200, 1400 கிலோதான் விளையும் என்றால் இந்த ஐ. ஆர். 8 நெல்லை பயிரிடுவதால் 4000 கிலோ கூட—கோவை மாவட்டத்தில் அப்படி ஒரு விவசாயி ஒரு ஏக்கரில் நாலாயிரத்திச் சொச்சம் கே.ஜி.

விளைவித்து அவர்களுக்கு முதல் பரிசும் கொடுத்தோம். ஒருவர் தன் குழந்தைக்கு ஐ.ஆர் 8 என்று கூட பெயர் வைத்திருக்கிறார். எந்தப் புது ரக நெல்லோ அல்லது எந்த முறையும் புதிதாக வரும்போது முதலில் விவசாயிகளிடையே அதுகுறித்து தானாகவே ஒருவித அச்சம் அவர்களிடையே ஏற்பட்டு அதை வெறுக்கத் துணிகிற அளவிற்கு அவர்கள் மத்தியில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. பின்னர் நாளாவட்டத்தில் அவர்களால் அவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அப்படித்தான் ட்ராக்டருக்கு கூட முதலில் எதிர்ப்பு இருந்தது அவர்களிடையே. பிறகு விவசாயிகளே ட்ராக்டர்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது மாதிரி இந்த அரிசி சாப்பிடுவதால் எந்தவிதக் கோளாறும் ஏற்படுவது கிடையாது. எப்போதுமே ஒருபுது ரக அரிசி சாப்பிடும்போது கோளாறு உள்ளவர்களுக்கு கோளாறைத்தான் கொடுக்கும்.

ஐ.ஆர். 8.-ன் வைக்கோல் சாப்பிடும் கால்நடைகளுக்கு கோளாறு ஏற்படுவதாகச் சொல்லப்பட்டது. அது முற்றிலும் தவறு. மேலவையில் கூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், துணைத் தலைவர் அவர்கள் கூட இப்படியெல்லாம் சொன்னார்கள். எங்கள் வீட்டு மாடுகளுக்குக் கூட இந்த ஐ.ஆர். 8 வைக்கோலைப் போட்டோம், ஆனால் கோளாறு ஒன்றும் ஏற்படவில்லை என்று திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் கூட மேலவையில் சொன்னார்கள். ஆகவே இது ஒரு தவறான பிரசாரமே தவிர வேறு எதுவும் இல்லை.

இந்த ஐ.ஆர். 8 போன்றவை நல்ல அதிகப்படியான விளைச்சலைத் தருகிறது. நல்லமுறையில் சுலபமான விலைக்கும் அது தரப்படுகிறது. ஆகவே, இது ஒரு நல்ல ரக நெல் என்றுதான் சொல்வேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, the people of our State are feeling that I.R. 8 is easily digestible and the straw is very fine for eating animals. So, will this Government come forward to extend this kind of paddy to other areas like Salem, Dharmapuri and Ramanathapuram? At the same time I wish to state that I am a grower of I.R. 8 paddy and it is very good for the health of the people and the animals.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து**: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரு. விநாயகம் அவர்கள் கேட்ட கேள்விக்கு சரியான பதிலைத் தந்திருக்கிறார்கள். ஆதாரம் இங்கேயே இருக்கிறது. ஐ.ஆர். 8 இன்று தர்மபுரி மாவட்டத்தில் கூட 15,000 ஏக்கர்களில் பயிரிடப்பட்டிருக்கிறது. இன்னும் வேறு மாவட்டங்களில் கூட அதை பயிரிட்டுக்கொண்டு வருகிறார்கள். திருச்சியில் 14,000, மதுரையில் 20,000, இராமநாதபுரத்தில் 12,000, திருநெல்வேலியில் 50,000, கன்னியாகுமரியில் 11,000, கோவையில் 35,000, சேலத்தில் 51,000, தர்மபுரியில் 15,000. ஜனவரியில் இருந்து ஏப்ரல் முடியும் வரையில் இருக்கிற நவரைப் பருவத்தில் எல்லா மாவட்டங்களிலும் இந்த ஐ.ஆர். 8 பயிரிடப்பட்டு ஏறத்தாழ 2.08 லட்சம் ஏக்கர்களில் பயிரிடப்பட்டு வருகிறது.





**திருமதி வி. ப. பழனியம்மாள்**: தலைவர் அவர்களே, கருணா என்ற ஹைஈல்டிங் வெரைட்டியை மாதிரிப்பண்ணைகள் வைத்து உற்பத்தி செய்வதற்காக மத்திய அரசு அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வந்து அதைச் சரியாகவே கவனிப்பதில்லை. ஆகவே, மாநில அரசாங்கமே அதிகப்படியாக அதன் உற்பத்தியைப் பெருக்க முயற்சி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து**: புது ரக நெல்லான கருணா-வை இன்று பலயிடங்களில் விவசாயிகள் தனிப்பட்ட முறையிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் விதை உற்பத்தி செய்யும் வகையில் ஈடுபட்டு அதிகப்படியான விதைகளை உற்பத்தி செய்துகொண்டு வருகிறார்கள். தேவையான அளவிற்கு விதைகளை உற்பத்தி செய்துவிட்ட பிறகு விவசாயிகளிடம் விநியோகிக்கப்பட்டு முறையாக நடைபெறுகிறது. அதனால் விவசாயிகள் மூலம் அதிகப்படியான விளைச்சலைக் காணமுடியும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்**: இந்த ஐ. ஆர். 8 நெல்லுக்கு அதிக அளவில் இரசாயன உரம் உபயோகிப்பதால் இதன் அரிசியைச் சாப்பிடுகிறவர்களுக்கும், அதேபோல் அதன் வைக்கோலைச் சாப்பிடுகிற கால்நடைகளுக்கும் தீங்கு ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இதைப் பற்றி அரசாங்கத்திற்கு திட்ட வட்டமான புகார்கள் வந்திருக்கிறதா? இந்த ஐ.ஆர். 8 அரிசியை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சாப்பிட்டிருக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து**: அதிகப்படியான உரம் போடத்தான் வேண்டும். உரம் அதிகப்படியாக போடவேண்டும். ஆனால் அதற்குரிய விளைச்சலும் அதிகமாகவரும். பூச்சிக் கொல்லி மருந்தையும் அதிகமாகப் போடவேண்டும். பூச்சிகளை ஈர்க்கக் கூடிய சக்தி இந்தப் பயிருக்கு இருக்கிறது. நிறையப் பூச்சிகள் வருகின்றன. ஆகவே அதிகமாக உரமும் போடவேண்டும், பூச்சிக்கொல்லி மருந்தையும் அதிகமாகப் போடவேண்டும். அப்படிச் செய்தால் விளைச்சல் அதிகமாக இருக்கிறது. அதைச் சாப்பிடுவதால் எந்தவிதமான கோளாறும் இருக்கவில்லை. நானும் அதைச் சாப்பிட்டிருக்கிறேன் என்று உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### பம்பு செட்டுகள் பழுது பார்த்தல்

*** 296 வினா—திரு. என் கிட்டப்பா**: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயத்திற்குப் பயன்படும் பம்பு செட்டுகளைப் பழுது பார்க்க "பறக்கும் குழுக்கள்" (Flying Squads) அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து**: இல்லை.

**திரு. என். கிட்டப்பா**: இனியாவது அம்மாதிரியான 'பறக்கும் குழுக்களை' அமைக்க அரசு ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அப்படி ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை என்றுதான் அரசு கருதுகிறது. இப்போதே கிட்டத் தட்ட 29 கம்பெனிகள் அவர்களாகவே இந்த பம்ப் செட்களை எல்லாம் கொடுக் கிறார்கள். அவற்றைச் செப்பனிடும் பணியையும் அவர்கள் ஏற்றுக்கொண்டி ருக்கிறார்கள். எல்லாயிடங்களிலும் தனித்தனி மெக்கானிக்களும் வேறு இருக்கிறார்கள். கிராமங்களில்கூட மெக்கானிக்கள் இருக்கிறார்கள். அவைகளை உற்பத்தி செய்து கொடுத்து வகை செய்கிற 29, 30 கம்பெனிகள் இருக் கின்றன. ஆகவே, இதில் தனியானவிதத்தில் எந்தவித முயற்சியிலும் அரசு ஈடுபடவேண்டிய அவசியமில்லை என அரசு கருதுகிறது.

### *Bifurcation of Ramanathapuram district*

* 292 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government at present to bifurcate the Ramanathapuram district; and

(*b*) if so, the particulars thereof?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இல்லை. 1972 பொதுத் தேர்தல் முடியும் வரை ஆட்சி வரம்பை இரு கூறுக்கவோ, சேர்க்கவோ, விலக்கவோ எதுவும் நடவடிக்கை எடுக்க இயலாது.

**திரு. டி. மார்டின்:** இந்த இராமநாதபுரம் மாவட்டம் பெரியதொரு மாவட்டமாக இருந்து கொண்டு அட்மினிஸ்ட்ரேட்டிவ் எஃபிஷியன்சி இலாத முறையில் கிழக்கு இராமநாதபுரத்திலிருந்து மேற்கு இராமநாத புரத்திற்கு போகவேண்டுமானால் எவ்வளவோ இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிலையில் அங்குள்ள மக்கள் இருக்கிறார்கள் என்பது இந்த அரசின் பரிசீலனையில் வெகு காலமாகவே இருந்து வருகிறது. எனவே, அதை மனதிற் கொண்டு, 1972 தேர்தலில் இது இடைஞ்சலாக இருக்காது என்பதையும் மனதிற்கொண்டு உடனடியாக அந்த மாவட்டத்தை இரண்டாகவோ அல்லது மூன்றாகவோ பிரித்து நிர்வாக வசதிகளுக்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் துரித நடவடிக்கைகள் எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** உறுப்பினர் அவர்கள் சொல்கிற நியாயம் முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது. அந்த மாவட்டம் நீண்ட நெடுங்காலமாகவே அப்படி இருந்து கொண்டு வருகிறது. அந்த மாவட்டம் மட்டும் அல்ல, வேறு பல மாவட்டங்களையும் நிர்வாக சௌகரியத்திற்காகப் பிரிக்க வேண்டும்' என்பதற்காக டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷனைப் பற்றி ஆராய குழு ஒன்று அமைக்கப்பட்டு அது பெரிய மாவட்டங்கள் இருக் கின்றன என்று பரிந்துரையும் சொல்லியிருக்கிறது. ஆனால் இப்போதி ருக்கிற இடைஞ்சல், தேர்தலில் நமக்கு இருக்கிற சாதக பாதகங்கள் பற்றி யல்ல. மத்திய அரசாங்கம் 1972-ம் ஆண்டு வரையில் இப்போது சென்சஸ் காரியங்கள் நடைபெறுவதால், பொதுத் தேர்தல் வருகிறதை பாதிக்கக் கூடாது இந்த அமைப்புகள் வந்தால் என்று தடை உத்தரவு, மாவட்டங்கள் பிரிப்பதற்கு இப்போது தடை உத்தரவு, மத்திய அரசால் போடப்பட்டிருக் கிறது. அந்தக் காரணத்தினால்தான் இதைப் பரிசீலனை செய்யமுடியவில்லை.



**திரு. டி. தங்கப்பன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே இராமநாதபுரம் மா வட்டம் மதுரை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டது என்பது உண்மையா? அதே நேரத்தில் மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதாலே என்னென்ன சௌகரியங்கள் ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது எல்லாம் அந்த மூலக் கேள்வியில் எழவில்லை. ஒரே மாதிரியான அபிப்பிராயம் ஏற்படுவதும் இல்லை. நீண்ட காலமாக இருக்கும் பிரச்னையை ஒருமித்த எண்ணத்தோடு இருக்கிற நிலைமைகளை அரசாங்கம் தற்போது இந்தப் பிரச்னையில் ஆராய்ந்து வரு கிறது.

**திரு. சா. மெய்யப்பன்:** 1969-ம் ஆண்டில் ஏதாவது பிரிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டதா? அதற்கான விவரங்கள் சேகரிக்கப்பட்டனவா? இப்போது எந்த நிலைமையில் உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த மாவட்டம் தொடர்ந்து இப்படியே வேண்டுமென்று எந்தச் சாராரும் சொல்லவில்லை. இதில் மாறுதல் வேண்டுமென்று பல்வேறான கருத்துக்கள் இருக்கின்றன. 'காரைக்குடியை மாவட்டத்தின் தலைநகரமாக ஆக்கவேண்டும், மானாமதுரையை மாவட்டத்தின் தலைநகரமாக ஆக்க வேண்டும், சிவகெங்கையை மாவட்டத்தின் தலைநகரமாக ஆக்க வேண்டும். மேற்குப் பகுதியில் திருநெல்வேலி மாவட்டத்தையும் இணைத்துவிட வேண்டும்'. இப்படி பல கருத்துக்கள் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்றன. அந்தக் கருத்துக்களை எல்லாம் மாவட்டத்தைப் பிரிக் கிற நிலைமை வரும்போது அரசாங்கம் பரிசீலித்து முடிவு எடுக்கும்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை வெகுகாலமாக ஒரு பெரிய தலைவலியாக இருக்கிறது. இப்போது திரு. நம்பியார் வந்து பார்த்து அது சம்பந்தமாக மானாமதுரையை தலைநகராக வைக்கலாம் என்று பரிந்துரை கொடுத்ததாகக் கேள்வி. புதுக்கோட்டை, கிழக்கு இராமநாத புரம் எல்லாம் சேர்ந்த ஒரு ஜில்லாவாகப் பிரிந்து நல்ல முறையில் நடை முறைக்கு கொண்டு வர அரசு முயலுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அப்படிப்பட்ட தகவல் என்னிடத்தில் இல்லை. இந்தக் கருத்துக்கள் எல்லாம் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரிப் பதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளின்போது பரிசீலிக்கப்படும்.

**திரு. சோ. கருணைநாதன்:** பொதுவாக எந்த அடிப்படையில் மாவட்டங் கள் பிரிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாவட்டங்கள் பிரிக்கப்பட்டவை அல்ல. மாவட்டங்கள் பல்வேறு காரணங்களால் அமைந்து இருக்கின்றன பூகோள ரீதியாகவும், சரித்திர ரீதியாகவும் அமைந்து இருக்கின்றன. நவீன காலங்களில் 20 பிளாக்குகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இருக்க வேண்டும். இருபது இலட்சம் மக்களுக்கு மேல் ஒரு மாவட்டத்திலே இருக்கக்கூடாது. 5000 ஸ்கொயர் கிலோ மீட்டருக்கு மேல் இருக்கக்கூடாது என்ற முறையில் பிரிக்கப் படுகிறது. இதனால் மாவட்டங்களில் மக்கள் நிர்வாக அதிகாரிகளை சந்திக்கவும், நிர்வாக அதிகாரிகளை மக்கள் சந்திக்கவும், சிறிய மாவட்டங் களாக இருந்தால் நிர்வாகம் நன்கு நடைபெறவும் வசதியாக இருக்கும் என்று அந்தக் குழு பரிந்துரை செய்து இருக்கிறது.

**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** பேரவைத் தலைவரவர்களே, முகவை மாவட்டம் அமைக்கப்பட்ட நேரத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து ஒரு பகுதியை எடுத்துக் கொண்டார்களே, திரும்ப அது பிரிக்கப்படுகிற நேரத்தில் திருநெல்வேலி மாவட்டத்தோடு அந்தப் பகுதி இணைக்க அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது எல்லாம் பழங்கதை, புதிய நிலைமைகள் ஏற்படுகிற நேரத்தில் அது யோசிக்கப்படும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** மாவட்டத்தை பிரிக்கக்கூடாது என்று உத்தரவு வந்து இருப்பதாகச் சொன்னார்கள். மாவட்டத்தில் சின்ன உட்பிரிவுகள் ஏற்படுத்தும் திட்டம் இருந்து கொண்டு இருக்கிறதே, இதை நடத்தவாவது சர்க்கார் தயாராக இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எப்படி எப்படி நிர்வாகத்தை சீர்படுத்துவது என்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். அது தான் புது தாலுக்காக்கள் பிரிப்பது. பல புதிய தாலுக்காக்கள்கூட புதிய அரசு வந்ததற்குப் பிறகு பிரிக்கப்பட்டிருக்கின்றன. பெரிய தாலுக்கா இருக்கும் இடங்களில் புது தாலுக்காக்கள் அமைந்து இருக்கின்றன. அவ்வப்போது என்னென்ன நடவடிக்கைகள் தேவையோ அது எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவரவர்களே, மாவட்டத்தைப் பிரிப்பது இப்போது முடியாத காரியமாக இருந்தாலும், இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரையாவது மதுரையில் இருக்காமல், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாத்தூரிலாவது, விருதுநகரிலாவது, சிவகெங்கையிலாவது, அந்த மாவட்டத்தின் தலைநகரைக் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த மாவட்டத்திற்கான தலைநகரம் எங்கே வைப்பது என்பதைப் பற்றி எல்லாக்கட்சித் தலைவர்களும் கூடி ஒரு முடிவு எடுப்பது நல்லது. ஆகவே தான் இதிலே அரசு அவசரப்படவில்லை.

**திரு. டி. தங்கப்பன் :** தலைவரவர்களே, இந்த மாவட்டத்தின் தலைநகரம் இப்போது எங்கே இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது எங்கே இருக்கிறது என்பது உலகப் பிரசித்தம். இனி எங்கே அமையவேண்டுமென்பதற்குத்தான் எல்லாக் கட்சித்தலைவர்களும் ஒரு அபிப்பிராயம் சொல்லுங்கள் என்று முதல்வர் கூறினார்கள்.

## *Madurai as Second Capital of Tamil Nadu*

*293 *Q.*—Thiru K. S. KOTHANDARAMAIAH : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether there is a proposal to make Madurai, the second capital of Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மதுரை நகரை இரண்டாவது தலை நகராக ஆக்கவேண்டுமென்ற செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசிலனையில இல்லை.

Thiru K. S. KOTHANDARAMAIAH : Sir, Madurai has been one of the seven sacred cities of India and is more centrally situated. It was the capital of the ancient, enlightened Pandyan monarchs. Further, our revered Rajaji, the greatest thinker of Modern India, when he was the Hon Chief Minister of this State, stated that Madurai city deserves to be made the capital of Madras State. Further, our present Hon. Law Minister, Thiru Madhavan also has stated recently that he would try to locate a branch of the High Court at Madurai. So, considering all the favourable circumstances will the Hon. Finance and Revenue Minister kindly give this divine city the dignity of the second capital?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மதுரை புனிதமான நகரம். அதிலே யாருக்கும் அபிப்பிராயபேதம் இல்லை. அந்த நகருக்குள்ள முக்கியத்துவம் என்றும் உண்டு. அரசாங்கம் அதை இரண்டாவது தலைநகராக மாற்ற முயற்சி எடுத்து இருக்கிறதா என்பது கேள்வி. அந்தக் கேள்வி இப்போது எழவில்லை.

Dr. H. V. HANDE : In view of the fact that there is heavy traffic problem in Madras City and in view of the fact that a number of offices are concentrated in Madras City and just as in States in Kerala and Andhra we have got second important towns like Cochin and Vijayawada in spite of the fact that headquarters are different, will this Government come forward to implement a scheme by which certain important offices in Madras City are decentralised and taken to Madurai so that it will not only give importance to the southern part of Tamil Nadu, viz., Madurai but also relieve the traffic congestion in Madras city ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : I entirely agree with the hon. Member as far as relieving of congestion in Madras City is concerned. Though we have no such proposal to have Madurai as second headquarters, certainly the Government can look into the problem of relieving the congestion in Madras City, since the City is growing at a galloping speed by examining the question of shifting offices like Endowment Offices and other offices which have no direct contact with headquarters to Madurai City.

**திரு. சுரேந்திரன் :** சார், மாவட்டங்களை பிரிக்கும்போது தலைநகரங்களை . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாவட்டங்களைப்பற்றி அல்ல கேள்வி. இது மதுரையை தமிழ்நாட்டின் இரண்டாவது தலைநகராக்குவது பற்றி அப்புறம் கேளுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, தென் மாவட்டங்களிலே இருப்பவர்கள் நாட்டின் நடவடிக்கைகளை அறிவதற்காகவாவது ஒரு முறை தமிழ் நாட்டின் சட்டமன்றம் மதுரையில் கூட்டப்படுமா?

[1970 செப்டம்பர் 8

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நாட்டின் நடவடிக்கைகளை தென் மாவட்டங்களில் மட்டுமல்ல, தென் அமெரிக்காவிலேகூட அடுத்த நிமிடமே தெரிந்து விடுகிறது. நவீன காலத்தில் அங்கே போய் இரண்டாவது அலுவலகம் இருப்பதால் ஏற்படுவது ஒன்றும் இல்லை.

**திரு. ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவரவர்களே, முன்னொரு காலத்தில் சென்னை நகரம் வேறொரு மொழி வழி மாகாணத்தில் கூட்டுத் தலை நகராக இருக்க வேண்டுமென்று கோரிக்கை கிளப்பப்பட்டது. இப்போதுகூட மொழிவழியில் அடிப்படையில் சென்னை நகரின் முக்கியத்துவத்தை குறைக்க திட்டமிட்டு இருப்பதாகத் தெரிவதால் இந்த பிரச்னையில் கேள்விக்கு இடம் இல்லாமல் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** சென்னை நகரின் முக்கியத்துவத்தை யார் சார்ந்தாலும் குறைக்க முடியாது. மதுரையைப்பற்றி சொல்லும்போது மதுரைக்கு முக்கியத்துவம் தரவேண்டும். 4--5 மாவட்டங்களின் மையமாக இருக்கிறது. அதுவும் இப்போது போட்டி போட்டுக்கொண்டு முன்னேறி வருகிறது. இதிலே கேள்விக்கு எதுவும் இடமில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அன்று மதுரை தலைநகராக இருந்ததால் அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்று என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. ஏதாவது தவறுகிவிட்டால் அதுவே எமனாகி விடும் என்பது சர்க்காருக்கு தெரியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தவறு செய்தால் தான் யமனாக முடியும். யாரும் இங்கே தவறு செய்யவில்லை. தவறு செய்யாதவர்கள் எமனைக் கண்டு பயப்படத் தேவையில்லை.

*Licence for sale of wine.*

*2 P.N.Q.—THIRU P.G. KARUTHIRUMAN: Will the Honourable the Chief Minister be pleased to state—

(*a*) the number of applications received by the Government of Tamil Nadu for the grant of licences to sell wine, foreign wine in Madras City from 1st April 1967 to 3rd April 1970;

(*b*) the number and names of applicants who were granted licences;

(*c*) the number and names of applicants who were refused licences with reasons therefor?

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) எட்டு.

(இ) கீழ்க்கண்ட ஐந்து விண்ணப்பதாரர்களுக்கு உரிமங்கள் வழங்கப் பட்டன.

(1) திருவாளர் டி. எம். சம்பத் அண்டு டி. எம். சரவணன் சென்னை-17.
(2) மதராஸ் ஒயின், சென்னை-34.
(3) எசன் ஜீ கம்பெனி, சென்னை-18.
(4) ஜீ. ஆர். டிரேடர், சென்னை-34.
(5) திரு. எம். ராமசாமி, சென்னை-17.



1970 செப்டம்பர் 8]

(உ) கீழ்க்கண்ட மூன்று பேருடைய மேல் முறையீட்டு மனுக்கள் அரசாங்கத்தால் தள்ளுபடி செய்யப்பட்டன:—

(1) திரு. எம். கோபால கிருஷ்ணன், சென்னை-12.
(2) திரு. வி. எம். தட்சிணுமூர்த்தி, சென்னை-20.
(3) திரு. எஸ். பி. மகாதேவன், சென்னை-1.

இந்த மூன்று பேர்களுக்கும் உரிமம் வழங்குவது, உள்ளூர் தேவைகளைக் கருதிப் பார்க்குமிடத்து நியாயமாக இல்லை என்று குறிப்பிடவிரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நாம் மது விலக்கை தீவிரமாக அமுல் நடத்துகிறோம் என்று சொல்லும்பொழுது, இது மாதிரி பெர்மிட்கள் வழங்குவதினால் மது விலக்குச் சட்டத்தை மீறுவதற்கும், தவறுகளைச் செய்வதற்கும் இடம் கொடுக்காதா? இதை சர்க்கார் அறிவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஏற்கனவே இருதய நோயின் காரணமாக பெர்மிட் பெற்றிருந்தவர்கள் 2,800 பேர்கள். இப்பொழுது அந்த நோய் அதிகமாகி 4,000 பேர்கள் அளவுக்கு பெர்மிட் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். சொந்த உபயோகத்திற்கு பெர்மிட் வைத்துள்ளவர்கள் 30 பேர்கள். மற்றும் கிளப்புகளில் வாங்குவதற்கு உரிமம் பெற்றுள்ளவர்கள் 25 பேர்கள். சிறப்பு அனுமதி அவ்வப்பொழுது பெறுகிற 15 பேர்கள் ஆகியோர்களுக்கு மது அளிக்கக்கூடிய அளவில் இடங்கள் தேவைப்படுமாகையால், அவர்களுக்கும் அளிக்கலாம் என்ற அடிப்படையிலே இப்படி அளிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கிற 4,000 பேர்களுக்கு, சென்னை மாநகரத்திலே பெர்மிட் பெற்றிருப்பவர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற கடைகளை போதாது. மொத்தம் 25 கடைகள் இருக்கவேண்டும். ஏற்கனவே 1966 வரையிலே 10 கடைகள் தான் இருக்கின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** முதல் அமைச்சர் அவர்கள் முதலிலே 2,000 பெர்மிட்களாக இருந்தது 4,000 ஆக அதிகரித்துவிட்டது என்று சொன்னார்கள். இதுவும் அவர்களுடைய ஒரு சாதனை என்று சர்க்கார் பிரசாரம் செய்வார்களா? 4,000-க்கு அதிகரித்திருக்கிறது ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வியை ஒட்டி இது வாராது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** முன்பெல்லாம் ரூ. 2,000 வருமானம் உள்ளவர்களுக்குத் தான் பெர்மிட் கொடுக்க வேண்டுமென்ற ஒரு விதி விதிக்கப்பட்டிருந்தது. அந்த விதி இப்பொழுது தளர்த்தப்பட்டுவிட்டது. இருதய நோய் ரூ. 2,000 வருமானம் இல்லாதவர்களுக்கும் வரலாம். சம தர்மம் இருக்கவேண்டும். ஜனநாயக சோஷலிசம் பேசுகிற மாபெரும் தலைவர்கள் வாழ்கின்ற நாடு அல்லவா இது? நாமும் சோஷலிச பாதையிலே போகவேண்டும் என்ற எண்ணத்தில், இருதய நோய் ரூ. 2,000-க்கு குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கும் வரலாம் என்று கருதி அந்த ரூ. 2,000 என்ற நிலைமையை எடுத்துவிட்டோம். ஆகவே, இப்பொழுது 4,000 பெர்மிட்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. விநயகம்:** இப்பொழுது புதியதாக உரிமம் பெற்றவர்களிலே யாராவது ஒருவர் பெண்மணியாக இருக்கிறார்களா? ஏற்கனவே இந்தத் துறையிலே 'பிரிவியஸ் எக்ஸ்பீரியன்ஸ் இன் திஸ் டிரேட்' என்று சொல்கிறோமே, அது யாருக்கு இருக்கிறதோ அவர்களுக்குத் தான் தரவேண்டும்

என்ற ஒரு விதி இருக்கிறதே? அதையும் மீறி ஏன் நியூ என்ட்ரன்ட்ஸ்க்கு, இதிலே அனுபவம் இல்லாதவர்களுக்கு தந்ததற்குக் காரணம் ஏதாவது உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** லாகிரிச் சட்டத்தின்கீழ் விற்கும் உரிமையை அவர்கள் ஏற்கனவே வைத்திருந்தார்கள். அந்தச் சட்டம் நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே எடுக்கப்பட்டுவிட்டது. ஆகவே, அந்த விதி இங்கே மேற்கொள்ளப்படவில்லை. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000 லைசென்ஸ் தொகை கட்டவேண்டும். போதுமான மூலதனத்தை உடையவராகவும் சட்டத்தின் விதித் துறைகளையும் அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளையும் பின்பற்றுபவராகவும், எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு நல்ல நிலையில் உள்ளவராகவும், இருக்கவேண்டும். இதெல்லாம் பழைய உத்திரவின்படி போடப்பட்ட விதிகள். மேலும், தமக்கு ஆதாயம் தேடிக் கொள்ளும் வகையில் தான் வாங்குகின்ற மதுவின் அளவை வேண்டுமென்றே அதிகரிக்கமாட்டாதவராக, மதுவிலக்குத் திட்டம் சரிவரச் செயல்படுவதற்கு அரசுடன் ஒத்துழைப்பவராக இருக்க வேண்டும் என்கின்ற விதிகளின் அடிப்படையிலே தான் இவைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவே ஆண், பெண் என்ற வித்தியாசமே இல்லை, விதிகளின்படி, முறைப்படி தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. விதிகளில் பெண்ணுக்குக் கொடுக்கக்கூடாது என்று இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, இருதய நோய் ஏற்பட்டிருப்பவர்களுக்கு மது பெர்மிட் கொடுப்பதினால் அவர்களின் நோய் போகமுடியும் என்று அரசாங்கம் நம்புகிறதே, அதே மாதிரி டி.பி. நோய் வந்தவர்களுக்கும், வயிற்று வலி நோய் வந்தவர்களுக்கும் கள்ளு குடிப்பதற்கு பெர்மிட் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இப்பொழுது இருதயத்தை அடிப்படையாக வைத்து வழங்கப்படுகிறது. அதற்குப் பிறகு எல்லா நோய்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்றால், கிட்டத்தட்ட மது விலக்கையே ரத்து செய்து விட்டோம் என்று ஆகிவிடும்.

மாண்புமிகு போவைத் தலைவர்: வினாக்கள்விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

**வெள்ளாளப்பட்டி கிராமத்தில் மாணவர்கள் கையில் ஆசிரியர் கற்பூரத்தை கொளுத்தி தீக்காயங்கள் ஏற்படுத்தியது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பராஜா, திரு. சித்தன் ஆகியோர்கள் வெள்ளாளப்பட்டி கிராமத்தில் காணாமல் போன புத்தகத்தை எடுத்த மாணவரைக் கண்டறிய பள்ளி மாணவர்கள் எல்லோருடைய கைகளிலும் கற்பூரத்தைக் கொளுத்தி தீக்காயங்கள் ஏற்படுத்திய பள்ளி ஆசிரியரின் கொடுமையைப் பற்றி விவாதிக்கவேண்டும் என்று ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்படுகின்ற நேரத்தில் ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு இடம் தருவது முறையல்ல. மேலும் உறுப்பினர்களுக்கு நம்பிக்கையில்லாத்



தீர்மானத்தின் மீதான விவாதத்தில் இதைப்பற்றி பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலும், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

### 3. கவன ஈர்ப்பு

**ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, இராஜபாளையம் வட்டாரங்களில் பருவ மழையின்மையும் வரி தள்ளுபடி முதலியவையும்**

**திரு. எ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், சிவகாசி, இராஜபாளையம் வட்டாரங்களில் பருவமழை தவறியதால் வரண்டு விளைச்சல் ஏதுமின்றி பாதிக்கப்பட்டுள்ள இப்பகுதி விவசாய மக்களுக்கு நில வரிகளைத் தள்ளுபடி செய்யவும், கடன் வசூலிப்பதை ஒத்திப் போடவும், பழைய கடன்களை வஜா செய்யவும் வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker Sir. as early as March 1970, reports were received from several Collectors including the Collector of Ramanathapuram that owing to failure of rains in 1969 and in the first quarter of 1970, acute distress prevailed in several pockets in their respective districts. To alleviate the distress caused the Collectors recommended that the collection of Government dues might be postponed. The Government examined the question very carefully and issued orders in March 1970 authorising the Collectors to use their discretion in postponing the collection of all Government loans and land revenue dues for a period of six months in places where they are personally satisfied that owing to failure of rains, acute drought conditions prevail. This concession is available till about the end of September 1970. Under this concession, the complete waiver of long-standing loan arrears is not contemplated. However, in cases of extreme hardship where the arrears are considered irrecoverable, it is open to the Collectors to recommend to the Government for write-off of such arrears.

Grant of remission of land revenue in affected parts would certainly be considered by the Revenue officials in accordance with the Board's Standing orders. As regards special remission, the Government issued orders in April 1970 itself that remission of full wet assessment may be granted for wet lands in the areas specified by the Collector of Ramanathapuram, where the yield has been 25 paise or less except for mamool waste.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** அமைச்சர் அவர்களுடைய பதிலிலே கலெக்டருடைய டிஸ்கிரெஷன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் குறிப்பாக கேட்க விரும்புகிறேன். கலெக்டர் டிஸ்கிரெஷன் என்றாலும்கூட, லிஸ்டு தயார் செய்து, சிபார்சு செய்து, மறுபடியும் அரசாங்கத்திற்கு வரவேண்டுமா, அல்லது அவரே செய்துவிடலாமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அவர்களே செய்துவிடலாம். அவர்களுக்கு டிஸ்கிரஷனரி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

He himself must be personally satisfied about it and he can take necessary steps in the matter.

### 4. அமைச்சரின் விளக்க உரை

**ஹவுஸ் ஸர்ஜன்கள் வேலை நிறுத்தம் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி கல்வி-சுகாதார அமைச்சரின் விளக்கம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் பேரவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நேற்று ஹவுஸ் ஸர்ஜன்களைப் பொறுத்து, அவர்களுடைய கோரிக்கைகளை வைத்து, நாலும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி சமரச முடிவுக்கு வந்தோம். அந்த வகையிலே கோரிக்கைகள் சிலவற்றை அவர்கள் எடுத்துவைத்து, சமரச முடிவின் அடிப்படையில் அவர்களும் ஒரு முடிவை மேற்கொண்டு தந்தார்கள். அதில் சில திருத்தங்கள் செய்து திருப்பித் தரப்பட்டது. மறுபடியும் வந்து அதில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. மூன்றுவதாகக் கொண்டு வந்தார்கள். அதிலும் சில திருத்தங்கள் செய்து, அந்தத் திருத்தங்களின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டு, சிறிய திருத்தங்கள் 'வேர்ட்ஸ்' பொறுத்தவரை இருக்கின்றன. அதற்கு சரியான விளக்கம் வேண்டும் என்ற அளவில் இந்த அறிக்கையைப் பேரவையின் முன் நான் வைக்கிறேன்.

Mr. Speaker, Sir, Tamil Nadu House Surgeons and Students Association met the Honourable Chief Minister and the Honourable Health Minister on 7th September 1970 and have come to the following conclusions :—

An Expert Committee will be appointed within one week which will recommend how best the reduction of admission in Medical Colleges of this State can be effected which will be implemented by the Government. Expert members suggested by House Surgeons and Students Associations will also be considered for inclusion in the Committee. Two among them will be selected.

Fifty per cent of the available vacancies reserved for women in Family Planning Programme will be filled up by men within one week by those who have already applied and the rest as and when they apply. They will be replaced by women doctors as and when they are available.

In the 50 vacancies for Public Health Service, persons will be posted immediately, if they opt.

Chief Minister assured that there will not be any increase in the medical admission nor there will be any new medical colleges.

Non-medical M.Sc. course will be kept in abeyance.

As to the opening of Dental Clinics, Chief Minister assured that it will be included in the Part II scheme proposed this year.





The State Government will press for the revival of ECMFG examination in Madras.

As to the stipend for Senior House Surgeons and Post-Graduates it will be examined by Government later. Chief Minister assured to take effective measures to solve the unemployment problem of Doctors.

On the representation of the House-Surgeons that there should not be any victimisation of those who participated in this strike, it was agreed accordingly on the fulfilment of these demands, the House-Surgeons and Students Association promised to call off the strike and work will resume from Wednesday (9th September 1970) at 7 a.m.

இதை நான் கொடுப்பதற்குக் காரணம், ஹவுஸ் சர்ஜன்கள் தங்கள் ஸ்டேட்மெண்டில் ஹவுஸ் ஸர்ஜன்ஸி ஒன்பது மாதம் என்று கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி முடிவு செய்யவேண்டியது இந்தியன் மெடிகல் கவுன்சில். அது ஒரு ஆண்டா அல்லது ஒன்பது மாதமா என்பதை அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும். அமைச்சரவர்களும், மாணவர்களும் தீர்மானிக்க முடியாது. அப்படிப்பட்ட நிலைமையை விளக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த அறிக்கையைக் கொடுக்கிறேன்.

### 5. அறிவிப்புகள்.

#### (அ) தொழில்கள் வாரியத்திற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவைக்கு ஓர் அறிவிப்பு. தொழில்கள் வாரியத்தின் தேர்தலுக்காக இருவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கையை ஒத்திருப்பதால், அதாவது இரண்டு என்பதால், திரு. ஏ. எம். இராஜா, திரு. எஸ். ஆறுமுகம் ஆகிய இரு வேட்பாளர்களும் தொழில்கள் வாரியத்திற்கு முறைப்படி தேர்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

### 6. அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் இவற்றின் மீது விவாதம் தொடரும். இன்றைக்கு பேசுவதற்குக் கொடுத்திருப்பது 17 உறுப்பினர்களுடைய பெயர்கள். இருப்பது மூன்று மணிநேரம். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிஷம் பேசுவதற்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சிக்காக ஒதுக்கியிருக்கும் நேரம் 40 நிமிஷங்கள். இதில் இத்தனை பேர் என்பதில்லாமல், எங்கள் கட்சிக்குள் நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். ஆகவே, முதலில் பேசும் உறுப்பினருக்கு அதிக நேரம் வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[1970 செப்டம்பர் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினருக்கு அப்படிக் கொடுப்பது பழக்கமில்லை. தலைவர்கள் பேசும்போது, தனியாக நேரம் கொடுப்பது என்ற முறை உண்டு. ஆனால், உறுப்பினர்கள் எல்லோரும் ஒரே நிலையில்தான் மதிக்கப் படவேண்டும். ஒரு பார்ட்டிக்கு 40 நிமிஷம் என்றால் அதை ஒரே அங்கத்தினரே 40 நிமிஷத்தையும் எடுத்துக் கொள்வது முறையாகாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சொல்ல வேண்டிய விஷயங்கள் சில அங்கத்தினர்களுக்கு அதிகமாக இருக்கும். இது நம்பிக்கையில்லாத் தீர்மானம். எங்களுக்குக் கொடுத்த நேரத்தை நாங்கள் அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்ளுகிறோம். ஒருவருக்கு அதிகமானால், மற்றவருக்குக் குறைத்துக் கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்குக் கொடுத்த நேரம் என்பது வசதிக்காகக் கொடுத்தது. நாற்பது நிமிஷம் என்றால் கட்சியின் எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால், மூன்று மணி நேரத்தில், ஒன்றரை மணிக்குமேல் ஆளும் கட்சிக்கு வரவேண்டும். அப்படியிருந்தும், ஒரே ஒரு மணி நேரம்தான் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டும் என்பது உரிமையில்லை. வசதிக்காக அப்படிச் செய்கிறோம். தலைவருக்கு என்றால், 5, 10 நிமிஷம், அல்லது அரை மணிநேரம் கொடுக்கிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முத்துராமலிங்கத் தேவருக்கு முன்பு தனியாக ஒரு மணிநேரம் கொடுக்கப் பட்டது. இங்கே சசிவர்ணத் தேவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சசிவர்ணத் தேவர் பார்ட்டி லீடர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மார்டின் அவர்கள் 10 நிமிஷத்தில் முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரத்தைப் பற்றிப் பேசவேண்டாம். விவாதத்தின் மேல் பேசுங்கள்.

**திரு. டி. மார்டின் :** பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சித்தன்.

**திரு. ஜேம்ஸ், திரு. ஜார்ஜ் :** Nobody is speaking

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களை, ஜார்ஜ், ஜேம்ஸ் என்று அழைக்கவில்லை. திரு. சித்தனை அழைத்தேன். திரு. சித்தன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே (குரல்கள் பேசவேண்டாம். உட்காருங்கள்) இருங்கள். இந்த அமைச்சரவைமீது எங்கள் கட்சித் தலைவர் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.



1970 செப்டம்பர் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையிலே பேரவைத் தலைவர் ஒரு உறுப்பினரைப் பேசுமாறு அழைத்தால், அந்த அழைப்பு ஆணை போலத் தான். பேரவைத் தலைவர் ஆணையை மறுப்பது, அவைத்தலைவரை அவமதிப்பது போல்தான்.

**Thiru K. VINAYAKAM :** I can say, I am sorry 'I cannot comply with your command, I regret I cannot comply with your command'.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதெல்லாம் கட்சிக்குள்ளே வருத்தத்தை உண்டுபண்ணும் நிலையில் இருக்கிறது. அப்படியென்றால் நாங்கள் பேசாமல் இருக்க வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, நாங்கள் விவாதத்தில் கலந்து கொள்ள உதவிசெய்யுங்கள். உள்நாட்டுப் போர் கிளம்பாமல் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பெயர்கள் கொடுத்ததில் திரு. மார்டின் பெயர் முதலில் கொடுத்திருக்கிறது. அவர் வேண்டாம் என்று சொல்லி விட்டார். அடுத்த பெயர் திரு. சித்தன் அவர்களைக் கூப்பிட்டேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாற்பது நிமிஷம் என்று எங்கள் கட்சிக்கு கொடுத்திருப்பதை, அவருக்கு ஒரு அரைமணிநேரமாவது கொடுங்கள். பின்னால் பார்த்துக் கொள்ளலாம். அப்படி ஒரு தரம் செய்யுங்கள். பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேவரவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார்கள், விவாதத்தைத் தொடங்குகிறவருக்கு, அதிகநேரம் வேண்டும் என்று. பத்து நிமிஷம் பேசட்டும். மேற்கொண்டு தருகிறேன் என்று சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதனால்தான் கேட்கிறேன் ஒரு அரை மணி நேரமாவது கொடுங்கள் என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மார்டின், 15 நிமிஷத்தில் பேசுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எங்கள் கட்சிக்குக் கொடுத்த நேரத்தில் அரை மணி கொடுங்கள் ஒருவருக்கு என்று கேட்கக்கூட எனக்கு உரிமை கிடையாதா ?

### 7. நடை முறைக் கேள்விகள்

#### (அ) பேரவைத் தலைவரால் பேச அழைக்கப்பட்ட ஓர் உறுப்பினர் பேச மறுத்தது குறித்து.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** பாயிண்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளின்படி ஒரு உறுப்பினருக்கு நேரம் குறிப்பிடுவ தற்கு பேரவைத் தலைவருக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. உறுப்பினர்கள் எனக்கு இவ்வளவு நேரம் கொடுக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்த விதியில் இடம் இல்லை. அப்படிக் கேட்பது முறையா? தங்கள் தீர்ப்பை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி :** அனதர் பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பேசுபவர்கள் பற்றி ஒரு பட்டியலை வைத்துக் கொண்டு பேரவைத் தலைவர் இன்னார் என்று அழைக்கிறார்கள். அந்த ஆணைக்கு உட்படாமல், மிரட்டுவதுபோல் இவ்வளவு நேரம் வேண்டும், இல்லையென்றால், எங்கள் உறுப்பினர் பேசவில்லை என்று சொல்வது முறைதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிக் கேட்பது முறையல்ல. நம்முடைய விதிமுறைகள் விளக்கமாகச் சொல்கின்றன . . .

The Speaker may prescribe a time-limit for speeches on Bills or Resolutions or amendments to Bills or Resolutions or Adjournment Motions under Rule 42 or any other matter under discussion in the House.

என்று தெளிவாக இருக்கிறது. அவையிலேயும் தீர்ப்பு இருக்கிறது, ஒவ்வொரு அங்கத்தினருக்கும் இவ்வளவு நேரம் என்று தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு சபாநாயகருக்கு இருக்கிறது. அந்த வகையில் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் நேரம் ஒதுக்கவேண்டிய கடமை சபாநாயகருக்கு இருக்கிறது. (குரல்கள் : கட்சி, கட்சி) நீங்கள் வக்கீல்களாக இருந்து கொண்டு, கட்சி, கட்சி என்று சொல்லுகிறீர்களே. ஆகவே, நேரம் ஒதுக்குவது என்பது பேரவைத் தலைவரின் உரிமையாகும். இதில் யாருக்கும் குறுக்கிட உரிமை இல்லை. 'எனக்கு உரிமை இல்லையா?' என்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். பேரவைத் தலைவர் நேரம் ஒதுக்குவதில் குறுக்கிட எதிர்க்கட்சித் தலைவருக்கும் உரிமை இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் உரிமை இல்லை. பேரவைத் தலைவருக்கு மட்டும் உள்ள உரிமையாகும். பேசும்போது வேண்டுமானால் மேலும் ஐந்து நிமிடம் பேசுவதற்கு நேரம் தருகிறேன்.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டியில் ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு நேரம் என்று ஒதுக்குகிறார்கள் . .

**மாண்பமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். அதில் இவ்வளவு நேரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், விதி 83-ன்கீழ். பேரவைத் தலைவராகிய தாங்கள் திரு. டி. மார்டின் அவர்களைப் பேச அழைத்து, அவர் 'நான் பேசவில்லை' யென்று கூறி அமர்ந்துவிட்டார்கள். அதற்கு உறுப்பினர் வருத்தம் தெரிவித்து விட்டாவது பேசினால்தான் இந்த அவையின் கௌரவத்தைக் காப்பதாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நண்பர் அரங்கண்ணல் அவர்கள் எழுப்பியது முறையான பாயின்ட் ஆஃப் ஆர்டர்தான். பேரவைத் தலைவர் உறுப்பினரைப் பேச அழைப்பது அழைப்பு அல்ல, ஆணை என்றே கொள்ளப் படும். அந்த ஆணையை மீறுவது பேரவைத் தலைவரை அவமதிப்பதாகும், இந்த பேரவையை அவமதிப்பதாகும். அதற்கு உறுப்பினர் அவர்கள் வருத்தம் தெரிவித்துக்கொள்வதுதான் முறை. நண்பர் மார்டின் அவர்கள் வருத்தம் தெரிவித்துக்கொண்டு பேசுவதுதான் நல்லது.





**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, 'தாம் பேசவில்லை' என்று சொல்வதற்கு ஒரு உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது. நான் பேரவைத் தலைவர் அவர்களையோ, இந்த அவையையோ அவமதிப்பதாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுக்கு அப்படிச் சொல்வதற்கு உரிமை இல்லை. அந்த வாதத்திலே இப்பொழுது இறங்க வேண்டாம். உறுப்பினர் அவர்கள் வருத்தம் தெரிவித்துக்கொண்டு பேசுவதானால் பேசட்டும். இந்த பேரவையின் கண்ணியத்தைக் காக்கின்ற முறையிலே உறுப்பினர் அவர்கள் வருத்தம் தெரிவித்துவிட்டு பேசட்டும். அப்படி பேசவில்லையென்றால், பேரவைத் தலைவர் மேற்கொண்டு நடவடிக்கையை எடுத்துக்கொள்ள நேரிடும்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களுக்கு இது ஒரு கண்ணியக் குறைவாக இருக்கும் என்று கருதினால் நான் தெரிவித்துக்கொள்கிறேன்,

Mr. Speaker, If you consider that I have disobeyed. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் அவர்கள் அழைத்த அழைப்பை மறுப்பது தவறான காரியம் என்று திரு. டி. மார்டின் அவர்கள் உணர்ந்தால், அதுவே வருத்தம் தெரிவித்துக் கொள்வதாகும் (ஒரு குரல் : அப்படி உணரவில்லை) இது பேரவையின் முடிவாக, பேரவை தீர்ப்பு அளிக்க வேண்டும். நண்பர் அரங்கண்ணல் அவர்கள், 'பேரவைத் தலைவரின் அழைப்பை அவமதிப்பது பேரவையை அவமதிப்பதாகாதா? அதற்காக உறுப்பினர் அவர்கள் வருத்தம் தெரிவித்துவிட்டுப் பேசுவதுதான் முறை' என்று கூறினார். உறுப்பினர் திரு. டி. மார்டின் அவர்கள் வருத்தம் தெரிவித்துவிட்டுப் பேசுவதானால் பேசட்டும். இல்லையென்றால், பேரவைத் தலைவரின் ஆணையை, இந்தப் பேரவையை அவமதித்ததற்காக வேறு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே,

Even now I reiterate the position. I said 'நான் பேசவில்லை'. By this I did not mean any, affrontation to the Chair. With this Sir, I begin . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது இல்லை. நீங்கள் கருதினீர்களோ, இல்லையோ? நீங்கள் முதலில் வருத்தம் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களை அது 'மீன்' பண்ணவில்லையென்று தெரிவித்தார். உங்களை அவமதிப்பதாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்காக உறுப்பினர் வருத்தம் தெரிவித்துக்கொள்ளக்கூடாதா? 'அந்தக் கருத்தோடு சொல்லவில்லை' என்று சொல்லக்கூடாது.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார் . . .

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் 'தாம் பேசவில்லை' என்று கூறி அமர்ந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு எந்த அடிப்படையில் அவரைப் பேசச் சொன்னார்கள் என்பதற்காக ஒரு அடிப்படை வேண்டும். உறுப்பினர் அவர்கள் வருத்தம் தெரிவித்துக் கொண்டு பேசுவதுதான் நல்ல மரபாகும். நல்ல மரபைக் கடைப்பிடிப்பது தான் இந்தப் பேரவையின் கண்ணியமாகும், கடமையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, என்னுடைய கட்சி உறுப்பினருக்காக நான் மன்னிப்பு கோருகிறேன். அவரைப் பேச வைக்க வேண்டும். கட்சியின் தலைவராகிய நானே அவருக்காக மன்னிப்பு கோருகிறேன். (ஆளும் கட்சித் தரப்பில் கையொலி)

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுடைய சார்பில் அவருடைய கட்சித் தலைவர் மன்னிப்பு கேட்டுக்கொண்டார். திரு. டி. மார்டின் அவர்கள் பேசட்டும்.

**(6) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மை தீர்மானமும் அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—** தொடர்ச்சி.

*** திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் தலைவர் இந்த அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறார். அதை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்தப் பேரவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் இந்த அவையில் ஆளும் கட்சியின் சார்பாக உறுப்பினர் திரு. இரா. இளம்வழுதி அவர்கள் ஒரு சில கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். அண்மையில் நடந்த பஞ்சாயத்து தேர்தல்களில் வன்முறைகளும் கொலைகளும் நடந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட வன்முறைகளும் கொலைகளும் நடந்திருக்கின்றன என்றால் அதற்கு இந்த ஆட்சியே முழுப் பொறுப்பு ஆகும். அதிலும் போலீஸ் அமைச்சர் அவர்கள் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அண்மையில் உள்ள ஆந்திர மாநிலத்தில் ஒன்பது நாட்களாக பஞ்சாயத்து தேர்தல்களை நடத்தியிருக்கிறார்கள். நம்முடைய போலீசார் அமைச்சரவைக்குச் சொல்லியிருக்க வேண்டும். 'ஆந்திராவில் ஒன்பது நாட்களாக அதிக போலீசை வைத்துக்கொண்டு பஞ்சாயத்து தேர்தல்களை நடத்தியிருக்கிறார்கள். இங்கு மூன்று நாட்களில் குறைந்த போலீசை வைத்துக் கொண்டு மூன்று கட்டமாக தேர்தலை நடத்துவது சிரமம்' என்று காவல் துறையினர் சொல்லியிருக்க வேண்டும். காவல் துறையினர் சொல்லியதையும் மீறி தேர்தல்களை நடத்தியிருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் கொலைகளும் வன்முறைகளும் நடந்திருக்கின்றன. இந்த நிகழ்ச்சிகளுக்கான முழுப் பொறுப்பையும் இந்த அமைச்சரவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று





சொல்கிறபோது, இது திறமையில்லாத சர்க்காராக இருக்கிறது. திறமையில்லாத அமைச்சரவையாக இருக்கிறது, திறமையில்லாத அமைச்சர்களாக இருக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, உத்தியோக உயர்வுகளிலும், நியமனங்களிலும் வேண்டியவர்களுக்கு சலுகை காட்டப்படுகிறது, பந்தபாச உணர்வோடு நடந்துகொள்கிறது. சமீபத்தில் அசிஸ்டெண்ட் செக்ரெட்டரி மோட்டார் வெகிகல்ஸ் என்ற கெஸடெட் போஸ்ட். இது ஒரு ஸ்டாச்சுடரி போஸ்ட், மோட்டார் வெகிகல்ஸ் ஆக்டை செயல்படுத்தக்கூடிய போஸ்ட். இந்த போஸ்டுக்கு எந்தவிதமான நோட்டிபிகேஷனும் செய்யாமல், அப்ளிகேஷன் 'கால்பார்' பண்ணாமல் எந்தவித அறிவிப்பும் செய்யாமல், கோயம்புத்தூரைச் சேர்ந்த திரு. சின்னச்சாமி என்பவரிடம் மட்டும் அப்ளிகேஷன் வாங்கிகொண்டு, அவரை இந்த போஸ்டில் நியமனம் செய்திருக்கிறது இந்த அரசு. இந்த முறைகேடான செயலுக்கு சட்ட அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன கூறப் போகிறார்கள்?

Article 311 of the Constitution is attracted in regard to this post. It comes under the purview of the Service Commission. It is a statutory post.

சரித்திரத்திலேயே இதுவரை நாம் பார்த்ததில்லை. ஒருவரிடமிருந்து மட்டும் அப்ளிகேஷனை வாங்கிக் கொண்டு எந்த சர்க்காரும் இப்படி நியமனம் செய்தது இல்லை. யார் இந்த உத்தரவை போட்டார்களோ, அவர்கள் யாராக இருந்தாலும், அமைச்சர்களாக இருந்தாலும் அவர்கள் இரண்டு பெரும் பெரிய குற்றத்தை, முறைகேடான குற்றத்தைச் செய்தவர்களாக ஆவார்கள். இந்த முறைகேடான காரியத்தைச் செய்வதற்கு அமைச்சர்கள் தக்க பதிலைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டெப்டி. டிரான்ஸ்போர்ட் கமிஷனர் பதவிக்கு திரு. சுந்தரம் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் முன்பு திரு. ஆதித்தன் அவர்களுடைய பர்சனல் அசிஸ்டெண்டாக வேலை பார்த்தவர். திருநெல்வேலி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு. ரத்தினவேல் பாண்டியன் என்பவருக்கு உறவினர். விதிகளையெல்லாம் மீறி இவருக்கு டெப்டி. டிரான்ஸ்போர்ட் கமிஷனர் பதவி கொடுத்திருக்கிறார்கள். அவர் ஆபிசில் சூப்பிரன்டென்டாக வேலை செய்தவர். இவருக்கு அங்கிருக்கும் அசிஸ்டெண்ட் கமிஷனர்ஸ், ஆர்.டி.ஓ.-க்கள் இவர்களையெல்லாம் 'ஓவர்லுக்' செய்து இந்தப் பதவி தரப்பட்டிருக்கிறது. அந்த அசிஸ்டெண்ட் கமிஷனர்களும் ஆர்.டி.ஓ.-க்களும் இந்த முறைகேடான செயலைப் பார்த்து கண்ணீர் வடிக்க மாட்டார்களா? அவர்களுடைய இதயம் குமுறி எழாதா? இவற்றிற்கெல்லாம் இந்த அமைச்சரவை பதில் சொல்ல வேண்டும்.

அடுத்தபடியாக, திரு. நாமதேவன் என்பவரை டெப்டி. டைரக்டர் என்ற பதவியில் இன்பர்மேஷன் ஆபீசில் போட்டிருக்கிறார்கள். இவர் டூரிஸ்டு ஆபிசராக உதகமண்டலத்தில் இருந்த நேரத்தில் இவர்மீது பல குற்றச் சாட்டுகள் ஏற்பட்டு, கலெக்டர் அவர்கள் அரசுக்கு ரிப்போர்ட் செய்திருக்

கிறார்கள். அப்படிப்பட்டவருக்கு இப்போது 'டபுள் ப்ரமோஷன்' என்ற மாதிரி பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. இவருக்கு மேலாக அசிஸ்டென்ட் டைரக்டர் இருக்கிறபோது அவரை 'ஓவர் லுக்' செய்து இவருக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. குற்றம் செய்தவருக்கு மகுடம் சூட்டுவது போல் இந்த ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது.

அடுத்தபடியாக பேரவைத் தலைவர் அவர்களே, சிடி போலீஸ் டெபுடி கமிஷனராக இப்போது ஐ.பி.எஸ். இல்லாத ராஜதேவன் என்பவரை இந்த அரசாங்கம் நியமனம் செய்திருக்கிறார்கள். சீனியர் ஐ.பி.எஸ். அதிகாரிகளே இல்லை என்ற காரணத்தினாலே இப்படி ஐ.பி.எஸ். இல்லாத மிகவும் ஜூனியராக இருக்கக்கூடிய ஒரு போலீஸ் சூப்பிரண்டை இந்தப் பதவிக்கு நியமித்திருக்கிறார்களா? ஐ.பி.எஸ். அதிகாரிகள் திறமை இல்லாதவர்கள் என்ற முடிவுக்கு இந்த அரசு வந்துவிட்டதா? இதில் அடங்கியிருக்கிற தத்துவம் என்னவென்று கூறவேண்டும்.

அடுத்து பிராங்மலை நடராஜப் பிள்ளை என்பவருக்கு ஒரு க்வார்டருக்கு 80 ஆயிரம் லிட்டர் ஸ்பிரிட் லைசென்சு கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். ஆளும் கட்சி உறுப்பினர்களும் கூட இதுபற்றிய விளக்கத்தை அமைதியாக அமைச்சர்களிடம் இருந்து கோரிப்பெறவேண்டும். அவருக்கும் அமைச்சருக்கும் உள்ள பந்தபாசம் என்பதை இந்தச் சபை அறிய வேண்டும்.

அடுத்தபடியாக, மதுரை நிலையூர் பீட் நம்பர் ஒன்று என்ற கிராமத்தில் தொழிலுக்காக 200 ஏக்கரா நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த 200 ஏக்கரா நிலத்திற்கும் காம்பென்சேஷன் கொடுக்கப்பட்டு அரசு அந்த நிலத்தைக் கையகப்படுத்திவிட்டது. ஆயினும் அந்த இடத்தில் 60 ஏக்கரா நிலத்தை ஒருவருக்கு நிலக்கடலை பயிரிடக் கொடுத்திருக்கிறார்கள். நிலக்கடலை பயிர் செய்தவர் ஒரு ஏக்கராவுக்கு ரூ. 120 என்று குத்தகைப் பணம் கொடுத்திருக்கிறார். இண்டஸ்ட்ரியல் துறையில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்தில் நிலக்கடலைதான் பயிர் செய்யப்படுகிறதா? அல்லது தி.மு.க. ஆட்சியில் இப்படி நிலக்கடலை பயிர் செய்வதுதான் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஒர்க்ஸ் என்பதுதான் முடிவா? இதை விளக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அவர்களுக்கு விளக்கம் தந்தால், இன்னும் வேகமாகப் பேசுவார் என்பதற்காக விளக்கம் தருகிறேன். தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அங்கங்கே ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இதுபற்றி மேல்சபையில் கூட விவாதம் வந்தது. முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கிருஷ்ணசாமி நாயுடு, இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற ராஜாராம் நாயுடு ஆகியவர்கள்—தொழிற்சாலைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களை—தொழில் ஆரம்பிப்பது தாமதமானால் ஏழை விவசாயிகளுக்கு தொழில் ஆரம்பிக்க முன்வருகிற காலம் வரை விவசாயத்திற்கு அளிக்கலாம் என்ற யோசனையைச் சொன்னார்கள். அப்படிக் கொடுப்பதுதான் நியாயம் என்று வாதிட்டார்கள். அதை உண்மையான பெருந்தன்மையோடு இந்த அரசு ஏற்றுக்கொண்டு ஏழை விவசாயிக்கு



விவசாயம் செய்ய குத்தகைக்குவிடப்பட்டது. இப்போது இவர் சொல்வதைப் பார்த்தால் அது கூடத் தவறு என்றால் அதை விட்டுவிடவும் இந்த அரசு தயாராய் இருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** ஏழை விவசாயிக்குக் கொடுத்ததாகச் சொல்கிறார். அந்த ஏழை விவசாயியின் பெயர் என்ன என்று இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் நிலக்கடலையில் வரும் என்றால் 60 ஏக்கராவுக்கு 60 ஆயிரம் ரூபாய் ஆயிற்று. ஆனால் அரசு அவருக்கு ஏக்கருக்கு 120 ரூபாய்க்கு ஏன் கொடுத்தது என்கிற விளக்கத்தையும் அளிக்க வேண்டும். அந்த 'நிலம் கொடுக்கப்படும், ஏலம் கேட்பவர்கள் கேட்கலாம்' என்று ஏலத்தில் விட்டார்களா? ஏலம் விடாது, எந்தவித அறிவிப்பும் இன்றி ஒருவருக்கு ஏக்கருக்கு 120 ரூபாய் விதம் கொடுத்திருந்தால் அது சட்ட விரோதம் இல்லையா? அந்த ஏழை விவசாயியின் மீது அவ்வளவு கருணை பிறக்கக் காரணம் என்ன என்று விளக்கவேண்டும்.

அடுத்தபடியாக, முதல் அமைச்சருடைய ப்ரைவேட் செக்ரடரி வைத்தியலிங்கத்திற்கு டெபுடி கமிஷனர் ஆப் டிரான்ஸ்போர்ட் என்ற பதவி உயர்வு—பேப்பர் ப்ரமோஷன் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள் நோய்வாய்ப்பட்டு மருத்துவ மனையில் இருந்த நேரத்தில் அளிக்கப்பட்டது. ஜி.ஓ. எம்எஸ். நம். 1820, டேடெட் 19—7—1969 தேதியிட்டு 22—1—1968 முதலே ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் போட்டுக் கொடுக்கப்பட்டதே. அந்த இடைக்காலத்திற்கு பாக் பே எவ்வளவு சம்பளம் கொடுக்கப்பட்டது என்பதையும் தெரிவிக்க வேண்டும். இப்படி விதிமுறைகளை மாற்றி மாற்றி காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்களே, இது ஒரு சர்க்காரா? இது ஒரு நல்ல அமைப்பா என்கிற சந்தேகம் எழுகிறது.

அடுத்தபடியாக, ஆலங்குளம் சிமின்ட் பாக்டரிக்கு 7 கோடி ரூபாய் மூலதனமிடப்பட்டிருக்கிறது. ஏழு கோடி மூலதனத்தையிட்டு வேலை முடிவதற்குள்ளாகவே உதய சூரியன் சின்னமிட்டு அமைச்சர்கள் திறந்துவைத்திருக்கிறார்கள். இந்த ஆலங்குளம் சிமின்ட் பார்க்டரியில் கே. வி. பி. கம்பெனியில் வேலைசெய்த முன்னாள் என்ஜினியர் ஒருவர் காசிவிஸ்வநாதன் என்பவர் மாதம் 2,000 ரூபாய் சம்பளத்திற்குப் போடப்பட்டிருக்கிறார். இவர் கே.வி.பி. கம்பெனியின் வேலையை மேற்பார்வையிடுகிறாராம். மாதத்தில் 15 நாட்கள் கூட அங்கே அவர் செல்வது இல்லை. ஏழு கோடி மூலதனமிட்ட சிமின்ட் பாக்டரியில் இப்படி ஒரு நிலைமை ஏற்படுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன?

அடுத்து, டால்மியாபுரம் பைலட் ப்ளான்டை எடுத்துக்கொண்டால் வருடத்திற்கு சுமார் ஏழு லட்சம் நஷ்டம் வந்துகொண்டிருக்கிறது. அந்த டால்மியாபுரம் பைலட் ப்ளான்ட்டுக்கு ராணுவத்தில் இருந்த மேஜர் இராமச்சந்திரன் என்ற என்ஜினியரை வரவழைத்து மாதம் இரண்டாயிரம் சம்பளம் கொடுக்கிறார்கள். சமீபத்தில் அவரை சர்க்கார் செலவில் இந்தோனேஷியாவுக்கு அனுப்பிவைத்திருக்கிறார்கள். அங்கே இருந்து அவர் இந்த பைலட் ப்ராஜெக்டின் நோயைத் தீர்க்க என்ன மருந்து கொண்டுவந்தார் என்று சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சொல்லவேண்டும் என்பதனால் குறுக்கிடுகிறேன். தொழில்துறையில் அரிய பல சாதனைகளைச் செய்திருப்பதாக எல்லோரும் பாராட்டிக்கொண்டிருக்கிற முன்னாள் தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள்தான் ராணுவத்தில் இருந்த இந்த என்ஜினியரை மிகவும் திறமையானவர் என்று கருதினார். இந்த டாம்பியாவும் பைலட் ப்ராஜெக்டும் காங்கிரஸ் ஆட்சிகாலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. நாங்கள் வந்து ஆரம்பிக்கவில்லை. நாங்கள் வந்து இந்த அதிகாரியைப்போடவில்லை. அப்போது ஆரம்பிக்கப்பட்டது. திரு. வெங்கட்டராமன் அவர்கள் அவரைக் கொண்டுவந்தார்கள். இப்போதும் அது அப்படியே நடைபெற்று வருகிறது.

இந்த அதிகாரியை இந்தோனேஷியா அனுப்பியது பற்றிச் சொன்னார்கள். அவர் வெளிநாட்டுக்கு இரகசியமாகச் செல்லவில்லை. இந்தோனேஷியாவில் ஒரு பைலட் ப்ராஜெக்ட் ஆரம்பிப்பதற்கு உதவி செய்ய ஒரு அதிகாரியை அனுப்பும்படி கேட்டிருந்தார்கள். இவர் அனுப்பப்பட்டார். இதை முன்பே நான் சொல்லியிருக்கிறேன். ஏதோ இந்த அரசு தவறாக நடந்துகொண்டது போல கற்பனை செய்துகொண்டு பேசுவது சரியல்ல. இந்த பைலட் ப்ராஜெக்டிற்கு இப்போதுதான் இந்த அரசுக்குத் தொடர்பு ஏற்படவில்லை. முன்பே காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது தொடர்பு—இப்போதும் இருக்கிறது.

**திரு. டி. மார்டின்:** ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனை ஏற்படுத்தி 6 மாதங்களாகின்றன. அதற்கு மானேஜிங் டைரெக்டராக ரெங்கபாஷ்யம், ஐ.ஏ.எஸ். அவர்களை போட்டிருக்கிறார்கள். இந்த 6 மாதங்களாக அவர்கள் விமானத்தில் வெளிமாநிலங்களுக்குச் சுற்றுலா சென்று வந்துகொண்டிருப்பதைத் தவிர வேலை எதுவாகிலும் நடந்திருக்கிறதா என்றால் இல்லை. ஆரம்பித்த சிறுதொழில் என்ன? அபிவிருத்தி செய்த சிறுதொழில் என்ன? ஆயிரத்தி தொள்ளாயிரத்து எழுபத்திஇரண்டு வரையிலும் இந்தச் சுற்றுலா பயணம் தான் நடந்துகொண்டிருக்குமா என்று இந்தச் சபைக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 3—4—1970-இல் இந்த அவையில் தாம் வகிக்கின்ற இலாக்காவைப் பற்றிப் பேசுகின்றபோது "இத்துறையில் கயவர்களும் இருக்கிறார்கள். தவறுகள் செய்பவர்களுக்குத் துணைபோகின்ற கயவர்களும் இருக்கிறார்கள். இரண்டாண்டுகாலமாகவே அவர்களை நான் உன்னிப்பாகக் கவனித்தும் வருகிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தன்னுடைய நிர்வாகத்தில் இருக்கிற துறையில் தவறு செய்பவர்களுக்குத் துணைபோகிற கயவர்கள் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தவுடன் இவர் அந்த போர்ட்போலியோவை வேறு ஒருவருக்கு மாற்றியிருக்கவேண்டாமா? அல்லது அந்தக் கயவர்களைக் கண்டிக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்க வேண்டாமா? யார் அந்தக் கயவர்கள்? அந்தக் கயவர்களுடைய பட்டியலைத் தர வேண்டும். வழக்குகளைப் பிடிக்கிறவர்கள் கயவர்களா? அல்லது வழக்குகளை விடுகின்றவர்கள் கயவர்களா? அல்லது வழக்குகளை விடவேண்டாமென்று உத்தரவு போடுகிறவர்கள் கயவர்களா? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இன்றைக்கு அத்துறையில் உள்ளவர்கள் இரு சிறகை இழந்த பறவை போன்றே இருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்க முடியவில்லை,



நடவடிக்கை எடுக்காமலும் இருக்க முடியவில்லை. இந்த அளவுக்கு நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்திருக்கிற கயவர்கள் யார் என்கிற பட்டியலை இந்த அவைக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டை எடுத்துக்கொண்டால் டெண்டர் விடப்படாமலேயே வீட், மைலோ, ஒயிட் வீட் எல்லாம் மூட்டை மூட்டையாக இஷ்டப்பட்ட தனி வியாபாரிகளுக்கு தூக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் சர்க்காருக்கு வந்திருக்கவேண்டிய லட்சக்கணக்கான ரூபாய் லாபம் வராமல் போயிருக்கிறது. குறிப்பாக

'Proceedings of the Commissioner of Civil Supplies, dated 7th November 1969 under Proceedings No. 33766-69/CS-F.1, dated 7th November 1969 re:

1. Karthikeyan Trading Company, Vellore.
2. K.R.P. Easwari Company, Madras-1.
3. Shree Venkatakrishna Rice Company.
4. Ananda Provisions Stores.'

என்பதாக 2,325 டன்கள் தூக்கிவிடப்பட்டிருக்கின்றன. 23,250 மூட்டைகள் சர்க்காருடைய ஜோவரும், மைலோவும் போய் இருக்கிறது. மூட்டைக்கு 27 ரூபாய் லாபம் கிடைத்திருக்கும் என்றால், சர்க்காருக்கு 6 லட்சத்து 27 ஆயிரத்து 250 ரூபாய் வரவேண்டிய பணம் கொள்ளைபோயிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சூடாகப்பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிட வேண்டியிருக்கிறது. டெண்டர்கள் கால்ஃபார் பண்ணவில்லை என்று சொன்னார்கள். கால்ஃபார் பண்ணினோம். ஆனால் விலை மிகவும் குறைவாகக் கேட்டார்கள். ஆகவே அவர்களுக்கு கொடுப்பதற்கில்லை என்று மொத்தமாகக் கொடுத்துவிட்டோம். எனக்கு சரியாக நினைவில்லை. மத்திய அரசாங்கம் 86 ரூபாய், 86 ரூபாய் 40 பைசா என்று நினைக்கிறேன், அதற்கு மேல் விற்கக் கூடாது என்று சொல்லி இருக்கிறது. டெண்டர்கள் கேட்டவர்கள் 56.60 ரூபாய் கேட்டார்கள் என்று நினைக்கிறேன். அது மிகவும் குறைவாக இருந்ததால் அதற்கு விடவில்லை. பிறகு 86.40 விலை கொடுத்தவருக்கு கொடுக்கப்பட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, இப்படி நினைவில்லை, நினைக்கிறேன் என்று சொல்லுபவர் கடைசியில் அவர் பேசும்போது சரியான கணக்கை கொடுக்கலாமே, திட்டவட்டமாக புள்ளி விவரங்களைக் கொடுக்கலாமே என்று சொல்லுகிறேன். அப்படி இருக்குமானால், இப்படி இருக்குமானால் என்பதெல்லாம் என்ன. . .

**திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக ஆனந்த மாளிகை, சென்னை-1, வெங்கடகிருஷ்ணா கம்பெனிக்கு ஆளுக்கு 100 மெட்ரிக் டன் அரசாங்க கோதுமையை புரொசீடிங்ஸ் எண் 14174-இ1/70 தேதி 24—7—1970 என்ற ஆர்டரில் கொடுத்திருக்கிறார்கள். இது டெண்டர் இல்லாமல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி நீதி விசாரணை செய்யவேண்டுமென்று மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, புரொசீடிங்ஸ், எண். 5073/69-சி, எஸ்./எஸ 2, தேதி 30—9—1969 என்ற ஆர்டரில் முனிராகவரெட்டியார், கொளத்தூர் என்பவருக்கு 20 டன் கோதுமையும் 10 டன் மைலோவும் டெண்டர் இல்லாமலேயே டி.ஆர்.ஓ., செங்கல்பட்டினுல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதற்கடுத்தபடியாக டி.ஆர்.ஓ., காஞ்சிபுரம் ஆர்டர் என் 7784/69-எஸ். 2, தேதி 17—12—1969 கோதுமை அதே முனிராகவ ரெட்டியாருக்கும் தமிழ்நாடு மளிகை என்பவருக்கும் தலா 50 டன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கடைசியாக அரசாங்க கோடவுனையே காலி பண்ணக்கூடிய அளவுக்கு போடப்பட்ட உத்தரவு

'No tender wos called for. Thirty-nine applicants were before the Department .........'

அப்படி இருந்த நேரத்தில், பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புரொசீடிங்ஸ் எண். ஆர். சி. 26611/இ1/70, தேதி 13—5—1970 என்ற ஆர்டரில் சிவில் சப்ளைஸ் கமிஷனரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாருக்கு என்றால் ஸ்ரீ வெங்கடகிருஷ்ணு ரைஸ் கம்பெனிக்கு கொடுத்திருக்கிருர்கள். அவருக்கு சுமார் 1,043 டன்னும், பிறகு அதே ஆனந்த மாளிகைக்கு 1,043 டன்னும் கொடுத்திருக்கிருர்கள். இதனுல் அரசாங்கத்திற்கு 2,86,000 ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆக, இவர்கள் இருவருக்கும் கொடுத்ததைச் சேர்த்து அரசுக்கு 4,17,200 ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** வெள்ளைக் கோதுமையைப் பற்றிச் சொன்னுர்கள். டெண்டர் கொடுக்கவேஇல்லை என்று சொன்னுர்கள். சிவப்பு கோதுமை மக்கி இருப்பது உண்மைதான். தென்னுற்காட்டிலே சிவப்பு கோதுமை 46 ரூபாய்க்கு கேட்டிருக்கிருர்கள். ஆலைக்காரர்கள் கோதுமையை நேரடியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்லி இருக்கிரேம். நஷ்டம் இல்லாத அளவுக்கு இருக்கக்கூடிய கட்டுப்பாடான விலைக்கு விற்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிரேம். வெள்ளைக் கோதுமையை ஹோசூர் நகரத்திலேயிருந்து கேட்டிருக்கிருர்கள். அதைவிட தர்மபுரியில் உள்ள வியாபாரிகள் அதிக விலைக்குக் கேட்டிருக்கிருர்கள். அவர்களுக்குக் கொடுத்திருக்கிரேம். தமிழ்நாடு முழுவதற்கும், இருக்கிற வெள்ளைக் கோதுமையை எப்படி இருக்கிறதோ, அப்படியே எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லாமல் இருக்குமானுல், அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, மக்கிப் போன கோதுமை என்கிருர்கள், மக்கிப் போன பருபபைப் பற்றி சொன்ன நேரத்தில் அதை ஒரு குற்றமாக இந்த அவையில் கருத்து தெரிவிக்கப்பட்டது என்பதைக் கூறிக் கொள்வேன்.

அடுத்தபடியாக, 7 லட்சம் கன்னி பேக்ஸ் (கோணி) வெளிமார்க்கட்டில் ஒரு கன்னி பேகின் விலை ரூ. 2.70 காசு ஆனுல் அதை 1.50 காசுக்கு டெண்டர் இல்லாமல் கன்னி பேக் சப்ளை ம்பெனிக்கு கொடுத்திருக்கிருர்கள். அதற்காக இந்த





அரசு இழந்த தொகை, அனுபவித்த நஷ்டம் 7 லட்சம் ரூபாயாகும். இந்த 7 லட்சம் ரூபாயும் நமக்குக் சேரவேண்டிய பணம்.

(மணி அடிக்கப்பட்டது)

எனக்கு இன்னும் 10 நிமிடங்கள் கொடுங்கள். என்னுடைய நேரத்தில் 10 நிமிஷம் எடுத்துக் கொண்டார்கள்.

அடுத்தபடியாக, ஆவடி சர்கார் கோடவுணில் அங்கே இருக்கின்ற அரசாங்க மைலோ, வீட் இவைகளை ஆலந்தூரில் உள்ள கிருஷ்ணராஜ ரெட்டியார், முத்து கிருஷ்ண ரெட்டியார் இவர்களுக்கு டிஸ்ட்ரிக்ட் ரெவின்யூ ஆபீஸர் அல்லது டிஸ்ட்ரிக்ட் சப்ளை ஆபீஸர் அவர்களுடைய உத்தரவு இல்லாமல் வியாபாரம் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி செங்கல்பட்டில் உள்ள மொத்த வியாபாரிகள் அமைச்சர் அவர்களுக்கு 23—3—1970-ல் மனு செய்திருக்கிருர்கள். குற்றம் யார் செய்தார்களோ அவர்களுக்கு . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி கொடுத்திருக்கிருர்கள். பதில் நாளை வரும் என்று எண்ணுகிறேன். அவசரப்படுகிருர்கள். சொல்லிவிடுகிறேன். சம்பந்தப்பட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிருர்கள்.

**திரு. டி. மார்டின் :** அதிகாரிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல. அந்த மொத்த வியாபாரிகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை நான் மிகவும் தாழ்மையாக கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சென்னையில் பல அரசு ஊழியர்கள் அமைச்சர்களின் பர்சனல் செக்கரட்டிரிகள் சொந்த வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிருர்கள். அதற்கு அரசாங்கத்தினுடைய பர்மிஷன் வாங்கிததான் கட்டவேண்டும் என்று விதி இருக்கிறது என்று அமைச்சர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். குறிப்பாக, எங்கு பார்த்தாலும் லஞ்சம் என்று சொல்லுகிரேம். நம்முடைய விஜிலன்ஸ கமிஷன் ரிப்போர்ட்டும் சொல்லுகிறது. ஒரு உத்தியோகஸ்தர் தன்னுடைய நோன் ரிஸோர்ஸஸ-க்கு மேலாக ஒரு காரியம் அது வீடு கட்டினுலும், சொத்து வைத்திருந்தாலும் அரசுக்குத் தெரிவிக்கவேண்டும்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களின் பர்சனல் செக்கரட்டரியாக இருக்கிற திரு. வைத்திலிங்கம் அவர்களைப் பற்றி சீப் செக்ரட்டரிக்கு இரண்டு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டி ஒரு கடிதம் எழுதினேன். அதில்

'Sir,

Kindly furnish me with the certified copy of the following publio documents :—

1. Loan applications presented to the Government from 1964 to 5th April 1970 by Thiru Vaidyalingam, Private Secretary to the Chief Mnister and the consequent orders passed thereon by the Government.

2. Periodical wealth declaration statements of assets and liabilities filed by the said officer from 1964 to 5th April 1970 . . . ' என்று கேட்டேன். அதற்கு சர்க்கார் கொடுத்த பதில்

' I am to inform you that the Government have carefully considered your request and they regret their inability to comply with it என்று சொல்லுகிறார்கள். ஒரு டெபுடி கலெக்டராக இருந்தவர் வருடா வருடம் ஜனவரி மாதம் ரெவின்யூ போர்டுக்கு தங்களுடைய அஸெட்ஸ் அண்டு லையபிலிடிஸ்ஐ கொடுப்பது தான் முறை. இப்படி கொடுக்காத ஒருவரை வைத்திருப்பதால், இந்த அரசு ராஜினாமா செய்திருக்கவேண்டாமா.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இலாக்காவிற்குத்தான் கொடுக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. மற்றவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று என்ன விதி இருக்கிறது ?

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே,

(மணி அடிக்கப்பட்டது)

அவர்கள் கேட்டதற்கு நான் பதில் சொல்ல வேண்டும்.

(அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்)

**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உறுப்பினர் மார்டின் அவர்கள் பேசிய பேச்சுக்களைக் கேட்கிறவர்களுக்கு அங்கே ஏதோ நடந்தது இங்கே ஏதோ நடந்தது என்ற எண்ணம் ஏற்படக்கூடும். இதைக் கவனிக்கின்ற பத்திரிகையாளர்களுக்கும் அங்கே ஏதோ நடந்தது, இங்கே ஏதோ நடந்தது என்று போடுகின்ற சுவாரஸ்யம் ஏற்படக்கூடும். அவர்கள் சொன்ன விவகாரங்களுக்காகத்தான் விஜிலன்ஸ் கமிஷன் இருக்கிறது. அதிகாரிகள் தவறு செய்யலாம், அந்தக் கமிஷனுக்கு எழுதுவதற்கு சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நமக்குப் பொறுப்பு இருக்கிறது. அவர்களே நேரடியாகத் தொடர்பு கொண்டால், அந்தக் கமிஷன் தீர்ப்பு வழங்குமாறு செய்யலாம். அதற்காகத்தான் அந்தக் கமிஷன் இருக்கிறது, இது ஏற்கனவே இருந்துவருகிற கமிஷன்தான். இதுதான் அவர்கள் பேசியதற்கு என்னுடைய பதில் என்று கருதுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். இவர் எப்படிப் பதில் சொல்லலாம் ? ஒரு அங்கத்தினர் சொன்னால் அப்பொழுது நானும் குறுக்கிடும்படியான நிலை வரும். சபையிலே இருக்கிற உறுப்பினர் ஓப் செக்கரட்டரிக்கு எழுதியதைப் பற்றிக் கேட்பதற்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் எந்தத் தரப்பிலே உள்ள உறுப்பினர்களாக இருந்தாலும் பதில் சொல்வதற்கு உரிமை இருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, this is a 'no-confidence motion' against the Ministry headed by Thiru M. Karunanidhi and not against the hon. Member.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் உறுப்பினர்களை இது பேசுங்கள், இது பேசக்கூடாது என்று கட்டுப்படுத்துவதற்கில்லை. விதிமுறைகளுக்கு அடங்கி நடக்கிற நேரத்திலே யாரையும் நான் கட்டுப்படுத்த முடியாது. பதில் அளிக்க அவர்களுக்கும் உரிமை இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் பேசுகிறார்கள் என்றால் பேசட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை.

THIRU K. VINAYAKAM : Oh! He is talking on the no-confidence motion and making a speach. May God help him

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சிறந்த கனவான்; கண்ணியமானவர். நான் காங்கிரஸ் கட்சியிலிருந்தபொழுதிலிருந்தே அவர்கள் காங்கிரஸ கட்சியிலே இருக்கிறார்கள். நம்முடைய விநாயகம் அவர்கள் எதிலுமே அவசரக்காரர். நான் பேச ஆரம்பித்தேன். அதைக்கூட அவர் கவனிக்கவில்லை. என்ன செய்வது இவர்கள் எல்லாம் அனுபவசாலிகள், வந்து புகுந்த சில கொள்கைகள் அவர்களுடைய நிலைமைகளைக்கூட இப்படி ஆக்கிவிடுகிறது என்பதற்காக நான் பரிதாபப்படக் கூடியவனாக இருக்கிறேன்.

இரண்டு தினங்களாக இந்த மந்திரிசபைமீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தின்மீது விவாதம் எடுத்துவைக்கப்பட்டது. ஆனால், கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே போலீஸ் முறையைக் கண்டித்துத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். நேற்றைய தினம் அந்தக் கட்சியின் உறுப்பினர் தனுஷ்கோடி அவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசிய உணர்விலிருந்து அவர்கள் யார், அவர்களுடைய சூழ்நிலை என்ன, அவர்களுடைய உள்ளம் எத்தகையது என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால் காங்கிரஸ் தரப்பிலிருந்து பேசிய பொழுது அவர்கள் யார், அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் புரிந்து கொண்டோம். சாதாரணமானவர்கள், அழுத்தப்பட்டவர்கள், கேலிசெய்யப்பட்டவர்கள், ஏழைகளாக இருந்தவர்கள் சமுதாய அந்தஸ்தை, அரசியல் அந்தஸ்தை அடைகின்ற நேரத்திலே ஆதிக்கக்காரர்களுக்கு எரிச்சல் வருவது சகஜம். ஆதிக்கத்திலே இருந்து சுரண்டிக்கொண்டே வந்தவர்களுக்கு, அரசியல் அந்தஸ்தை இழக்கக்கூடாது என்ற நிலைமையில் இருந்தவர்களுக்கு, பிரசு மனோபாவம் படைத்தவர்களுக்கு எரிச்சல் வருவது சகஜம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இந்தக் கட்சி உருப்படுமா என்று வாழ்த்தியவர்கள்தான் காங்கிரஸ்காரர்கள். இந்தக் கட்சியிலே உள்ளவர்கள் பேசினால் நாக்கைத் துண்டிப்போம் என்று வாழ்த்துரை வழங்கியவர்கள்தான் அவர்கள். இவ்வளவு சாமானியமானவர்கள், கேலி செய்யப்பட்டவர்கள் இன்றைக்கு ஆட்சிக்கு வந்து இருக்கிறோம் என்ற நேரத்திலே இவர்கள்மீது ஏதாவது அள்ளி வீசலாம் என்ற எண்ணத்திற்கு வந்திருக்கிறார்கள்.

முதலமைச்சர், எங்கள் தலைவர், கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆளுகின்ற இந்த அரசு சாமானியமானவர்களைக் கொண்ட அரசு, இன்னும் சொல்லப் போனால் திரு. கருத்திருமனிடம் யோசனைகள் கேட்டுக் காரியங்கள் செய்கின்ற

நிலையில் உள்ள அரசு. நான் இதைச் சொல்வதற்கு வெட்கப்படவில்லை. ஏழைகளாக இருந்து, எங்களுடைய கொள்கைகளை மக்களிடம் சொல்லி அவர்களுடைய வாக்குகளைப் பெற்று இங்கே வந்திருக்கிறோம். ஏழைகள், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், ஏனோதானோக்கள் என்று சபிக்கப்பட்டவர்கள் நாய்கள், எனவே அப்படி எங்களைச் சபித்தவர்கள் இன்றைக்கு வாழ்த்துரை வழங்குவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் வழங்குவார்கள் என்று எதிர்பார்த்து நாங்கள் வரவில்லை. நீங்கள் கூறுகின்ற கருத்துக்களை மக்கள் மன்றம் ஏற்றுக்கொள்ளாது. எரிச்சலிலே நீங்கள் கூறுவதை மக்கள் மன்றம் உணர்ந்துகொள்ளும். எங்களை எப்பொழுதும் மக்கள் மன்றம் கவனிக்கும். நாங்களும் மக்கள் மன்றத்தைக் கவனித்து மக்கள் மன்றத்திற்குரியவற்றை வழங்க வேண்டுமென்று பாடுபட்டு வருகிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியபொழுது "விவசாயிகளுக்கு இந்த அரசு என்ன செய்தது?" என்று கேட்டார்கள். விவசாயிகளுக்கு இந்த அரசு என்ன செய்யவில்லை? காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக் காலத்தில் உரம் கிடைக்கவில்லை, இரட்டை விலை கொடுத்தால்கூட உரம் கிடைக்காத நிலைமை இருந்தது. கருப்பு மார்க்கெட் இருந்தது. இன்றைக்கு நிலைமை என்ன? உரம் கிடைக்கிறது தாராளமாக. நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் சாகுபடியாளர்களுக்கும் உழவர்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தியிருக்கிறது அரசு. அகில இந்தியாவிலேயும் இல்லாத அளவுக்கு உற்பத்தி இருக்கிறது. கடந்த 1966-67-ஆம் ஆண்டிலே 57 லட்சம் டன் உற்பத்தியாயிற்று என்றால், இப்பொழுது 63 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, எந்த வகையிலே எடுத்துக்கொண்டு பார்த்தாலும் ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமென்ற முறையிலே கோவாப்ரேடிவ் சொஸைடிகள் மூலமாக கடன் நிவாரணச் சங்கங்கள் மூலமாக—முன்பெல்லாம் கடன் கோரி விண்ணப்பம் போட்டால் ஒன்றிரண்டு ஆண்டுகாலம் ஆகும்—இப்பொழுது உடனடியாகக் கடன்கள் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நில வள வங்கிகள் முன்பு 105 தான் இருந்தன, இப்பொழுது 166 நில வள வங்கிகள் இருக்கின்றன. இது சாதனையில்லையா?

அது மட்டுமல்ல. கூட்டுறவு மூலம் நீண்ட காலக் கடன், குறுகிய காலக் கடன் என்ற வகையிலே 1968-69-இல் 44 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இது நன்மை இல்லையா? 1970-71-இல் 62 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன், குறுகிய காலக் கடன் கொடுக்கப்பட்டிருப்பதாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது இது நன்மையில்லை என்று கூறுகிறார்களா?

கல்விக்காக என்ன செய்தார்கள் என்று கேட்டார்கள். காலேஜ் ஏதாவது ஏற்படுத்தினார்களா, புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்களா என்று கேட்டார்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்த நிலைமையைவிட முன்னேறியிருக்கிறது. 1969-70-இல் புதிய எலிமெண்டரி பள்ளிக்கூடங்கள் 511 ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உயர்நிலைப்பள்ளிகள் 1969-70-இல் 200 ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. 1970-71-இல் 253 உயர்





நிலைப்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு மொத்தம் 453 உயர்நிலைப்பள்ளிகள் இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசாலே நிறுவப்பட்டு இருக்கின்றன. கல்லூரிகள் திராவிட முன்னேற்றக் கழக அரசால் 54 ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன இந்த மூன்று ஆண்டுகளிலே. அகில இந்தியாவிலேயே இது பெரிய சாதனை என்று படித்தவர்கள் பாராட்டுகிறார்கள். 54 கல்லூரிகள் நாங்கள் ஏற்பாடு செய்து தந்திருக்கிறோம். கல்லூரிகள் மட்டுந்தானா?

பிற்பட்ட மக்களுக்காக என்ன என்ன சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன? பிற்பட்ட மக்களுக்காக தனியாக ஒரு அமைச்சர், அது மட்டுமல்ல, 1966-67-இல் அவர்களுக்குச் செலவழிக்கப்பட்ட ரூபாய் 154 லட்சம் ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 1969-70-இல் 314 லட்சம் ரூபாய் என்ற அளவிற்கு இரு மடங்காக சலுகைகள் தந்திருக்கிறோம்.

அரிசன ஆதிதிராவிட மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு 1966-67-இல் 4 கோடி ரூபாய் என்ற அளவிற்கு இருந்ததை இப்பொழுது ஐந்தே கால் கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தி கிட்டத்தட்ட ஒன்றேகால் கோடி ரூபாய் அதிகமாக வழங்கியிருக்கிறோம். இது நல்ல காரியம் இல்லையா? மூன்று ஆண்டுக் காலத்தில் 22 அரிசன ஹாஸ்டல்கள் ஆரம்பிக்கப்பட்டு அவர்கள் இலவசமாகச் சாப்பிட்டுவிட்டு படிப்பதற்கு ஏற்றவகையில் உணவுவிடுதிகளை ஏற்பாடு செய்திருக்கிறோம். இது சாதனை இல்லையா?

வரிகளை உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். யாருக்கு வரியை உயர்த்தியிருக்கிறோம்? ரெப்ரிஜிரேட்டர் வைத்திருக்கிறவர்களுக்கு, ரேடியோ வைத்திருக்கிறவர்களுக்கு, கடிகாரம் கட்டிக்கொண்டிருப்பவர்களுக்கு, கார்களில் செல்கின்றவர்களுக்கு வரிகளைப் போட்டிருக்கிறோம். ஆனால் சாதாரணப் முற்பகல் 11-00 பொருள்களுக்கு வரி உயர்வைக் குறைத்திருக்கிறோம். விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால், புஞ்சை நிலங்களுக்கு வரியில்லை என்று செய்தது யார்? முன்னேற்றக் கழக அரசுதானே?

இந்த நன்மைகளை யெல்லாம் எண்ணிப் பார்ப்பதற்குப் பதில், என்ன செய்தார்கள், எந்தச் சாதனையைச் செய்தார்கள் என்று ஒரே வார்த்தையிலே கேட்டுவிட்டால் போதும் என்று கருதுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமங்களில் இருப்பவர்கள், முன்னேற்றக் கழகத்தின் நல்லெண்ணத்தை உணர்கிறார்கள். நாங்கள் ஆட்சிப்பீடம் ஏறியது, ஏதோ ஒரு ஐந்தாண்டுக் காலத்திற்குப் பதவியிலே இருக்கலாம். அந்தப் பதவி முடிவதற்குள் எந்த அளவிற்கு கிடைக்கிறதோ, அதையெல்லாம் சுருட்டிக் கொண்டு போய் விடலாம் என்று நாங்கள் அரசுப் பீடம் வரவில்லை.

எளிதாக இருக்கும் எங்கள் கட்சியின்மீது அவதூறுகள் தூக்கி எறியப்படுகின்றன. எங்கள் பக்கத்திலே சொல்லுவார்கள், ஏழையாக இருப்பவன் ரோட்டிலே நடந்து செல்ல ஆரம்பித்தாலே, கேலியாகப் பேசுவார்கள், பார்த்தாயா, அந்தப் பயல் வெள்ளையும் சள்ளையுமாகப் போகிறான் என்று மேட்டுக்குடியிலே இருப்பவர்கள் பேசுவார்கள். அதைப்போல், நாங்கள் ஆட்சிப்பீடம் ஏறியதும், 138 எம்.எல்.ஏக்கள் இருக்கிறார்களே, 138 எம்.எல்.ஏக்கள் வரலாமா

என்று கருதிப் பேசுகிறார்கள். நன்றாக வெளிப்படையாகவே சொல்லுங்களேன். 138 எம்.எல்.ஏக்கள் வந்தார்கள் என்றால் அவர்கள் அதிகாரிகளைப் பார்க்காமல் இருக்கமுடியுமா? கிட்டத்தட்ட 8,000 பஞ்சாயத்து போர்டுகளில் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தலைவர்களாக வந்திருக்கிறார்கள். அவர்கள் மேலதிகாரிகளைப் பார்க்காமல் இருக்க முடியுமா? கிட்டத்தட்ட 170 பஞ்சாயத்து யூனியன்களை நாங்கள் பெற்றிருக்கிறோம். இங்கேகூட ஒரு வாதத்தை வைத்தார்கள். காங்கிரஸ் ஆளுகின்றபோது, 300 பஞ்சாயத்து யூனியன்களை வைத்திருந்தோம். இப்பொழுது நீங்கள் ஆளும் கட்சியாக இருக்கும்பொழுது 170 பஞ்சாயத்து யூனியன்கள்தானே கிடைத்தது என்று சொல்கிறார்கள். இது வாதமா என்று நான் கேட்க விரும்புகிறேன். அதுதான் எங்கள் நாணயத்தைக் காட்டுகிறது. நீங்கள் அதிகாரத்திலேயிருந்தபொழுது எப்படியாவது 300 இருக்க வேண்டுமென்று பாடுபட்டார்கள். ஆனால் நாங்கள் ஜனநாயக வழியில், கிடைத்தது போதும் என்று இருக்கிறோம். முன்பு நீங்கள் ஆளும்கட்சியாகயிருந்தபொழுது, நாங்கள் 18 யூனியன்களைத்தான் வைத்திருந்தோம். ஆனால் இப்பொழுது 18 என்பது 170 ஆகியிருக்கிறது. முன்பு எங்களுக்கு பஞ்சாயத்து போர்டுகள் 500 அல்லது 600 தான் இருந்தது. ஆனால் இன்றைக்கு கிட்டத்தட்ட 7,000 8,000 என்ற அளவிற்கு ஆகியிருக்கின்றன.

இந்த மாறுதல்களை யெல்லாம் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். முன்னேற்றக் கழக அரசு சில கொள்கைகளுக்காக, சில மந்திரிகளுக்காக ஏற்பட்டதல்ல. மந்திரிகள் மக்களின் பிரதான சேவகர்களாகயிருக்கிறார்கள். தனிப்பட்ட முறையிலே ஏதாவது குற்றங்களிருந்தால், அதை மந்திரிகள் செய்திருந்தாலும் அல்லது சட்ட மன்ற உறுப்பினர்கள் செய்திருந்தாலும் அதை நீங்கள் முதலமைச்சருக்கு எழுதி அனுப்புங்கள். எதிர்க்கட்சிக்காரர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், ஆங்காங்கு தவறுகள் ஏற்படலாம், அவ்வாறு தவறுகள் ஏற்பட்டால் தலைவருக்கு எழுதி அனுப்புங்கள், நாங்கள் அவைகளைப்பற்றி நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, நேற்று சொன்னார்கள். மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு பெரிய பிராந்தி கேஸ் பிடிக்கப் பட்டது என்றும் அதில் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர் ஒருவரின் பெயரைக் கூடக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் உடனே அதைப்பற்றி விசாரித்தேன். மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனில் அப்படிப்பட்ட வழக்கே கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். எனவே குற்றங்களைச் சொல்லும்பொழுது உண்மையைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏதோ கொண்டு வர வேண்டுமென்ற கருத்திலே கொண்டு வரப்பட்டது. வெளியிலே உள்ள மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்திருப்பது எங்களுக்குத் தெரியும். எனவே, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒரு அரசியல் ஸ்டண்ட் என்பதைத் தவிர வேறில்லை என்று கூறி அமர்கிறேன்.





திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய திரு. கருத்திருமன் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதனாலே, சர்க்கார் ஆட்சிப் பீடத்திலேயுள்ளவர்கள் என்ன நன்மைகள் செய்தார்கள் என்பதைக் காட்டுவதற்காக, என்ன தவறுகள் செய்தார்கள் என்பதைக் காட்டுவதற்காக ஒரு சம்பிரதாயத்திற்காகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று நான் கருதுகிறேன்.

1967-தேர்தலுக்குப் பின்னாலே, காங்கிரஸ் ஆட்சிக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, அதிலே அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரானவுடனே, நாங்கள் நிர்வாகத்தைச் சீர்திருத்துவோம், தண்டச் செலவைக் குறைப்போம், வரியைக் குறைப்போம் என்று சொன்னார்கள். அதன்படி அண்ணா அவர்கள் சில இலாக்காக்களை ஒழித்தார்கள், கலெக்டருக்கு அடிஷனல் பி. ஏ. போன்ற அனாவசியமான பதவிகளை ஒழித்தார்கள். எனவே, அப்படி அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னவுடன் மக்கள் அதைப் பெரிதும் வரவேற்றார்கள். ஆனால் இப்பொழுது, எவ்வளவுக்கெவ்வளவு சிக்கனமாக இருக்க வேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்களோ அதற்கு மாறாக அமைச்சர்களின் செலவுகள், சிப்பந்திகளின் செலவுகள் அதிகமாகி விட்டன.

உதாரணமாக எடுத்துக் கொண்டால், அமைச்சர்களின் சம்பளத்தை 1,000 ரூபாயிலிருந்து 500 ரூபாயாகக் குறைத்துக் கொண்டார்கள். பெரிய கார் வேண்டாம், சின்ன கார் போதும் என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது அந்தச் செலவுகளைப் பார்க்கும்பொழுது, சொன்னதற்கும் இப்பொழுது நடைமுறையில் வருவதற்கும் பெரிய மாறுபாடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்திலே பாராளுமன்றத்திலே ஒவ்வொரு மாநிலத்தினுடைய அமைச்சர்களின் செலவுகள், அந்தச் சிப்பந்திகளின் செலவுகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே, 1960-61-இலே 8 அமைச்சர்களாக நம்முடைய தமிழ்நாட்டு அமைச்சரவையிருந்தபொழுது உள்ள செலவு 4.27 இலட்சம் ரூபாய். ஆனால் 1970-71-இலே அமைச்சர்களின் சம்பளத்தைக் குறைத்துக் கொண்ட பிறகு இப்பொழுது செலவு 10.61 இலட்சம் ரூபாய்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மற்ற மாநிலங்களையும் படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவரவர்களே, நம் தமிழ் நாட்டைப் பற்றித்தான் அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிபீடம் ஏறியபோது சொன்னார்கள். அதற்காகத்தான் சொல்லுகிறேனே தவிர, மற்ற மாநிலங்களில் என்ன சொன்னார்கள் என்ற விவரம் தெரியாது. கிட்டத்தட்ட 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் அதிகமாகச் செலவாகி இருக்கிறது. திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராகயிருந்தபொழுது 4 பி.ஏ. க்கள் இருந்தார்கள். அதாவது ஒரு பிரைவேட்

செக்ரட்டரி, 3 பி.ஏக்கள். திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது 4 பி.ஏ.க்கள் வைத்திருந்தார்கள். ஆனால் இப்பொழுது அமைசசர்களுக்குள்ள பி.ஏ. க்களுக்குக் கணக்கு வழக்குகள் கிடையாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் முதலமைச்சருக்கு 10 பி.ஏ.க்கள் டி.ஆர்ஓ. கிரேடிலே (குறுக்கீடு) எட்டு இருக்கும். எனக்குத் தெரிந்து பார்த்த வரையிலே ....

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு. சீமைச்சாமி போன்றவர்கள் நூற்றுக்கணக்கான மனுக்களை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் கொடுத்துக் கொண்டிருக்கும்பொழுது அவைகளைக் கவனிக்க, நிர்வாக காரியங்களுக்காக சில பி.ஏ.க்கள் அதிகமாக்கப்பட்டார்கள். அவர்கள் எந்த மனுவும் கொடுப்பதில்லை என்று உறுதிமொழி கொடுத்தால் நான் பி. ஏ. க்களைக் குறைத்துக் கொள்ளத் தயாராகயிருக்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : மனுக்களைப் பற்றி பிரச்னையில்லை. இப்பொழுது மனுநீதி நாள் என்று ஒவ்வொரு மாதமும் 5-ஆம் தேதி நடக்கிறது. அதற்காக அதிகாரிகளைப் போட்டிருக்கிறீர்கள். நான் இதை யெல்லாம் குற்றமாகச் சொல்லவில்லை. சொன்னது வேறு, செய்வது வேறாக இருக்கிறதே என்பதற்காகத்தான் சொல்கிறேன். முன்பு பெரிய பெரிய இலாக்காக்கள் ஒழிக்கப் பட்டன. ஆனால் இப்பொழுது 1,000, 2,000 ரூபாய் சம்பளம் உள்ள அடிஷனல் சீப்-செக்ரட்டரி என்று போட்டிருக்கிறீர்கள், அவருக்கு என்ன வேலை என்று தெரியவில்லை. அடிஷனல் செக்ரட்டரிஸ என்று வேறு போட்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்கள் தமிழ்நாட்டு செலவைப்பற்றிச் சொன்னார்கள். சுதந்திராக் கட்சி ஆளுகின்ற ஒரிஸ்ஸா மாநிலத்திள்ள அந்த அமைச்சரவைக்கு ஆன செலவு எவ்வளவு என்று கொடுத்திருக்கிறார்கள். அதையும் நான் விளக்கிவிடுகிறேன். 1960-61-இல் 5.29 இலட்சம், இப்பொழுது 15.63 இலட்சம்.

திரு. கரு. சீமைச்சாமி : நான் சொல்வது, செலவைக் குறையுங்கள் என்றோ, பெரிய கார்களிலே போகக் கூடாது என்றோ, இவ்வளவுதான் சம்பளம் வாங்க வேண்டுமென்றோ சொல்லவில்லை. போதுமான அளவிற்கு, 5,000 ரூபாய் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். எனவே, செலவைக் குறையுங்கள் என்று சொல்லவில்லை. தாரதம்மியமாக, சௌகரியத்தை நிலைநாட்டும் முறையில் அவர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்றுதான் சொல்கிறோமே தவிர, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. சொன்னது வேறு, செய்வது வேறு என்றிருக்கிறதே என்பதற்காகத்தான் சொல்கிறேன். உணவு இலாக்கா ஒழிக்கப்பட்டு, ரைஸ்மில்கள் கொடுக்கும் அதிகாரத்தை கலெக்டருக்குக் கொடுத்த பிறகு, 4 செக்ஷன்கள் உண்டாயின. ஒரு கூட்டு செக்ரட்டரி, டெபுடி செக்ரட்டரி, அண்டர் செக்ரட்டரி, அசிஸ்டெண்ட் செக்ரட்டரி என்று இவர்கள் எல்லாம் தேவைதானா என்று கேட்க விரும்புகிறேன். உணவு இலாக்காவை, விவசாய இலாக்காவுடன் இணைந்தால் நல்லது என்று சொல்லிக்கொள்ள் விரும்புகிறேன்.



முதலமைச்சரவர்களுக்கு என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு விஷயத்தைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்பொழுது மாவட்டந் தோறும் நிலமில்லாத ஏழை மக்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டு, ஏழை எளிய மக்களுக்கு, கட்சிமாறுபாடு இல்லாமல், யாரும் நிலம் இல்லாதவர்கள் என்றிருந்தால் பட்டா கொடுக்கப்படுவதை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். எங்கள் ஜில்லாவில் 200, 300 பேர்களுக்குப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருபுவனம் என்ற இடத்தில், நிலமில்லாத சாதாரண விவசாயிகளுக்கு 13 பேர்களுக்கு அரசாங்கப் புறம்போக்கு நிலன்களைப் பட்டா போட்டு நிலங்களைக் கொடுத்தார்கள். பட்டாவை வைத்துக் கொண்டு திருபுவனம் பஞ்சாயத்தில் கிட்டத்தட்ட 7,000 ரூபாய் கடன் வாங்கினார்கள். வேலி மண்டிக் கிடந்த இடங்களில் தென்னம்பிள்ளைகளை வைத்து இப்பொழுது இரண்டு மூன்று வருஷங்களாகின்றன. அவர்கள் இப்பொழுது கரூரிலே இருக்கிறார்கள். பக்கத்திலே உள்ள பெரிய விவசாயிகள், பட்டா கொடுத்தது தப்பு என்று ஆர்.டி.ஓ. விடம் மனும் கொடுத்தார்கள். இவர்களும் ஆர்.டி.ஓ. விடம் சென்றார்கள். எங்களுக்குப் பட்டா கொடுத்தார்கள், அதனால் நாங்கள் லோன் வாங்கி இருக்கிறோம், ஆகவே, பட்டா கொடுத்தது சரி என்று சொல்ல வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். நான் யாரையும் குற்றம் எதுவும் சொல்லவில்லை. யார் யார் தலையீடு என்று தெரியவில்லை. அதை ஆர்.டி.ஓ. ரிஜெக்ட் செய்தார் டி.ஆர்.ஓ. ரிஜெக்ட் செய்தார், போர்டிலும் ரிஜெக்ட் செய்தார்கள். பிறகு நிதியமைச்சர் மதியழகனிடம் வந்து ஸ்டே கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த ஸ்டே ஆர்டர் டெஸ்பாச் பண்ணுவதற்கு முன்னாலேயே அங்கே ரிஜெக்ட் செய்யப்பட்டு விட்டது என்று சொல்லிவிட்டார்கள். இதிலே எங்கோ அரசியல் தலையீடு இருக்கிறது. இதிலே முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்போது கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. பசுமைப் புரட்சி என்று பேசப்படுகிறது. அதைத் தஞ்சையிலும் திருச்சியிலும் மட்டும் செய்வதில் பிரயோசனம் இல்லை. பிற்பட்ட இராமநாதபுரம் ஜில்லாவில் வசதிகளைச் செய்ய வேண்டும். அந்தப் பகுதி பெரும்பாலும் கண்மாய்களைக் கொண்டு விவசாயம் செய்யக்கூடிய பகுதி. கடந்த இரண்டு, மூன்று ஆண்டு காலமாக 5,000 கண்மாய்கள் மராமத்து செய்யப்படாமலே இருக்கின்றன. வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் பற்றி கடந்த எட்டாண்டுக் காலமாகச் சொல்லி வந்திருக்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே இதற்கு வைபவர் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு அனுமதி வழங்கப்பட்டு 10 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டது. ஆனால் இதுவரை எந்த வேலையும் செய்யப்படவில்லை. எக்சிக்யூடிவ் எஞ்சினியரைக் கேட்டால் ஆர்டர் வரவில்லை என்று கூறுகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

சட்ட அமைச்சர் மாதவன் மேல் ஒரு குற்றம் சாட்ட விரும்புகிறேன். பெரிய குற்றச்சாட்டு அல்ல; அவர்கள் சுய நலத்தோடு காரியங்களைச் செய்திருக்கிறார்கள். மின்சார அமைச்சர் அவர்கள் 1970-71-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கப்படும் என்று கூறியிருப்பதை வரவேற்

கிறேன். எங்களுடைய மாவட்டத்தில் 1,500 கிராமங்களுக்கு மின்சாரம் எட்டவில்லை. அந்த வேலையெல்லாம் செய்கிறார்கள். எங்கே செய்கிறார்கள் என்றால் அமைச்சர் அவர்களுடைய தொகுதியில்தான் செய்கிறார்கள். திருப்பத்தூர் தொகுதியைப் பொருத்தமட்டில் அத்தனை காரியங்களும் நடைபெற்றிருக்கின்றன. என்னுடைய தொகுதியில் இருந்த கம்பங்களை எல்லாம் அங்கே தூக்கிக் கொண்டு சென்றார்கள். கோட்டால் அமைச்சர் சொல்லுகிறார் என்று சொன்னார்கள். இதைப் பற்றி யாரிடம் கேட்டாலும் தெரியும், முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிந்திருக்க முடியும். அவர் தொகுதி மாத்திரந்தான் அங்கு இருக்கிறதா? சிங்கம்புணரியில் ஆஸ்பத்திரி, அதற்காக ஜெயலலிதா டான்ஸ் எல்லாம் வைத்தார்கள். சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலும் வந்திருக்கிறது. சிங்கம்புணரியில் 38 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி கட்டுவதற்குச் செயற்குறிப்பு இருக்கிறது. தொடர் செலவு 37,000 ரூபாய்; தொடராச் செலவு 1,12,000 ரூபாய். திருப்பத்தூரில் 12 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இந்தத் தொகையில் 12 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் கட்டலாம். ஆங்காங்கு எட்டு ஏக்கர், பத்து ஏக்கர் என்று கொடுத்து கட்டடங்கள் கட்ட முடியாத நிலைமையில் அமைச்சர் மாதவன் தொகுதிக்கு 12 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அவரை ஒரு சர்வாதிகாரி என்று கூடக் கூறலாம். அமைச்சர் மாதவன் அவர்களுடைய தலையீடு காரணமாக, நாங்கள் எதைச் சொன்னாலும் அவரைக் கேட்டுத்தான் செய்ய முடியும் என்று கலெக்டர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய தொகுதி மக்களுக்காக வாதாடியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். யாராவது என்னுடைய தொகுதியில் ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னால் நான் திரு. சீமைச்சாமி அவர்களுடைய வாதத்தை எடுத்து வைக்க முடியும். அவர் என்னை சர்வாதிகாரி என்று சொன்னார்கள். அவர் அந்த வார்த்தையை உபயோகப்படுத்தக் கூடாது. பதிலுக்கு நான் ஒரு வார்த்தையை உபயோகப்படுத்தினால் காரசாரமாகப் போய் முடியும். அப்படிப்பட்ட வார்த்தையை உபயோகிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: அப்படியானால் இராமநாதபுரம் ஜில்லாவைப் பொருத்தவரை எல்லாம் அவர்தான்—வேறு ஒன்றும் நான் சொல்லவில்லை. எவ்வளவோ பிரச்சினைகள் என்னுடைய தொகுதியிலும் இருக்கின்றன. கொஞ்சம் தலையீடு இல்லாமல் இருந்தால் நல்லது.

சிடி பஸ் ரொம்ப மோசமாக இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சி போனது அரிசியால். அதே போன்று இந்த பஸ்ஸால் உங்களுக்கு உப்படிப்பட்ட நிலை ஏற்பட்டுவிடக் கூடாது. பஸ்ஸில் வரும் புகை தாங்க முடியவில்லை. சப்ளிமெண்டரி பட்ஜெட்டில் மராமத்து இலக்கா அமைச்சர் அவர்களால் போக்குவரத்து இலாகாவின் சீரமைப்புக்காக என்று ரூ. 1,30,000 கோரப்பட்டிருந்தது. சீரமைப்பு என்றவுடன் வரவேற்றோம். ஆனால், உண்மை என்னவென்று பார்த்தால் மூன்று அம்பாசடர் காரும், ஜீப்பும் வாங்குவதற்காக அந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. எதற்காக சீரமைப்பு என்ற பெயரைக் கொடுக்க



வேண்டும்? ரோட்டில் நடந்து போகப் பயமாக இருக்கிறது. பொதுமக்களுக்குச் சவுகரியத்தைச் செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு நல்ல பெயர் வரவேண்டும். முதலமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு கண்காணிக்க வேண்டும்.

தமிழர் படை மதுரையில் இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் சிலையை கோர்ட்டின் எதிரில் திறந்து வைப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் வந்தார்கள். காங்கிரஸ்காரர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். நான் சிலை அங்கு வைத்தது சரியா இல்லையா என்ற பிரச்சினைக்குச் செல்லவில்லை. தமிழர் படையினர் லாரிகளில் வந்தார்கள். போலீஸ்காரர்களும் அப்போது அங்கே இருந்தார்கள். கருப்புக்கொடி காட்ட வந்தவர்களை அடித்தார்கள். ஓட ஓட விரட்டி அடித்தார்கள். முன்பு போலீஸ்காரர்கள் மதுரை நெடுமாறனைக் கைது செய்து லாரியில் கொண்டுசென்றபோது ஒருசிலர் லாரியை மறித்து நெடுமாறனை மீட்போம் என்று சொன்ன நேரத்தில் அடித்தார்கள். அப்போது சட்டசபையில் ஒத்தி வைப்புத் தீர்மானம் கூடக் கொண்டு வந்தேன். முதலமைச்சர் வருகிறபோது காங்கிரஸ்காரர்கள் கறுப்புக் கொடி காட்டினால் காட்டட்டுமே. 1957-ல் முதுகளத்தூர் கலவரம் நடந்தபோது பிரதமர் பண்டித ஜவகர்லால் வரும்போது நாங்கள் கறுப்புக் கொடி காட்டினோம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கறுப்புக் கொடி காட்டுவது அனுமதிக்கப்பட்டது. கறுப்புக் கொடி காட்ட அனுமதிக்கப்படுகின்ற நேரத்தில் ஒரு இடம் ஒதுக்கப்படும். நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் நேரு போன்றவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்ட ஒரு இடம் ஒதுக்கப்பட்டது. அந்த இடத்தில் இருந்துதான் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கறுப்புக் கொடி காட்ட ஏற்பாடு செய்து அந்தத் தலைவர்களைக் கேட்டதற்கு, ஒரு இடத்தில் இருந்து கறுப்புக் கொடி காட்டுவதற்கு ஆட்சேபனை இல்லை என்று சொன்னதற்கு அவர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு எங்கே அண்ணா சிலை திறக்கப்படுகிறதோ அங்கே சென்று ஆர்ப்பாட்டம் செய்வோம் என்றதன் பேரில்தான், அப்படி ஊர்வலமாகப் புறப்பட்டதன் பேரில்தான் அனுமதிக்கப்படவில்லை. அதனால் கறுப்புக் கொடியுடன் ஊர்வலமாகச் சென்றவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். தமிழர் படை என்ற பெயரால் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் நான் சென்ற நேரத்தில் வரவேற்பு அளித்தார்களே தவிர, யாரையும் தாக்கவில்லை. எந்தச் சம்பவமும் நடைபெறவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: அவர்கள் முதலமைச்சர் அவர்களை வரவேற்பதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. அவர்கள் தாக்கவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

போலீஸ் நிர்வாகத்தைப் பொருத்தவரை அரசியல்வாதிகளின் தலையீடு இருக்கிறது. ஐ.ஜியில் இருந்து கீழ் வரை மந்திரிசபையிலிருந்து, பெரிய மட்டத்திலிருந்து சொன்னால்தான் எடுத்துக் கொள்ளுவோம் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை நிச்சயமாகக் கெட்ட பெயரை உண்டாக்கும். சில நாட்களுக்கு முன்பு லட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தில் நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டி அவர்களும், அட்வகேட் ஜெனரல் கோவிந்தசாமி

நாதன் அவர்களும் 'போலீசும் மக்களும்' என்பது பற்றி பேசினார்கள். அங்கே பேசுகிறபோது நீதிபதி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள் :

Mr. Reddy said the officer in-charge of a police station was a very important person, who was clothed with the powers to command unlawful assemblies to disperse under the Criminal Procedure Code.

To his knowledge Mr. Reddy added, this power had not been exercised by a single officer of a police station. The officer invariably took orders from someone higher up. The officer was not allowed to discharge his duties and the poor officer, if he was guided by the law, could not exist, Mr. Reddy said.

என்று சொல்லியிருக்கிறார்கள். அதே போல் அட்வகேட் ஜெனரல் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் மானாமதுரையில் ஒரு கொலை நடந்திருக்கிறது. அதற்குள் நான் போகவில்லை. உண்மையில் அதை யார் செய்திருந்தாலும் அவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. பஞ்சாயத்து தேர்தல்களையொட்டி நடந்த சம்பவம் அது. முதல் அமைச்சர் அவர்கள் தற்செயலாக எப்படியோ இந்தக் கேஸில் சிக்கிக் கொண்டார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முதல் அமைச்சர் அவர்கள் கேஸில் சிக்கிக் கொண்டார்கள் என்று அவர்கள் சொன்னதை அவர்கள் வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர் சிக்கிக் கொண்டார் என்று சொல்வதற்கு எனக்கு நேரமாகாது.

திரு. கரு. சீமைச்சாமி : வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். கன்னியாகுமரிக்கு விவேகானந்தரின் சிலையைத் திறந்து வைக்கச் சென்றபோது அந்த பாராளுமன்ற உறுப்பினர் முதல் அமைச்சர் அவர்களைப் பார்த்தார்கள். அப்படிப் பார்ப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. முதல் அமைச்சர் அவர்கள் போலீசைக் கூப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அது தெளிவாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : போலீசைக் கூப்பிட்டு நான் என்ன சொன்னேன் என்பதைச் சொல்லவேண்டும், என்ன நடந்தது என்று அவர்கள் சொல்ல வேண்டும். பிறகு நான் விளக்கம் சொல்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : எஸ்.பி. ராஜசேகரன் நாயர் விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்போது அங்கு மதுரை அன்பர் எஸ். பி. ஞானசம்பந்தன் போனார். ஒரு எஸ.பி. இன்வஸ்டிகேட் செய்து கொண்டிருக்கும் போது இன்னொரு எஸ்.பி. க்கு அங்கு என்ன வேலை என்று கேட்கிறேன்.

Mr. Rajasekara Nair, Superintendent of Police, Ramanad, who was camping in Manamadurai, rushed. . . . . . . on instructions from the Chief Minister. .'

என்று ஹிந்துவில் வந்திருக்கிறது. ஒருவர் இன்வஸ்டிகேட் செய்து கொண்டிருக்கும்போது இன்னொருவர் அங்குபோவது சரியா என்று கேட்கிறேன்.



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒரு பெரிய கலவரமான சூழ்நிலை ஏற்பட்டு பெருத்த அமளி நடந்து கொண்டிருக்கிற நிலையில், அங்குள்ள போலீஸ் படையால் சமாளிக்க முடியாத நிலை ஏற்படும்போது பக்கத்திலுள்ள எஸ்.பி. துணைக்குப் போய் அமைதிக்குறைவான சூழ்நிலை ஏற்படக்கூடாது என்று பார்த்துக் கொள்ள அதற்காக அவர்கள் அங்கு செல்லவேண்டுமென்று கூறுவது எந்தவிதத்திலும் தவறாகாது.

கன்னியாகுமரிக்குப் போனதுபற்றிச் சொன்னார்கள். கன்னியாகுமரிக்கு சில நேரங்களில் நமது குடியரசுத் தலைவர் அவர்கள் வருகிற காரணத்தினாலே அவர்களை அங்கு சென்று வரவேற்பதற்கும், அங்கிருப்பது முக்கியம் என்பதைக் கருதியும் தலைமை போலீஸ் அதிகாரி—ஐ.ஜி. அவர்கள்—அவர்களும அங்கு வந்தார்கள். என் விமானத்தில்தான் அவர்களும் வந்தார்கள். நான் சென்ற போது எங்களைப் பார்க்க வழக்கம்போல் வருகிற எஸ்.பி. க்கள் விமான நிலையத்திற்கு வந்தார்கள். அப்போது தன் சித்தப்பா கொலையுண்டார் என்ற செய்தியை கண்ணீரோடு என்னிடம் வந்து அந்த நாடாளுமன்ற உறுப்பினர் என்னிடம் சொல்லி அழுது கொண்டிருந்தார்கள். நான் அங்கிருந்த போலீஸ் அதிகாரிகளிடம் சொன்னதெல்லாம், மேற்கொண்டு எந்தவிதமான அமளியும் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதுதான் பத்திரிகைகளில் வந்திருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : தமிழ் நாட்டில் கொலை நடப்பது சகஜம்தான். சமீபத்தில் செல்லம்பட்டியில் ஒரு கொலை நடந்திருக்கிறது. அங்குள்ள இன்ஸ்பெக்டரை மாற்றியிருக்கிறார்கள். இந்த ராஜசேகரன் நாயரையும் மாற்ற ஆர்டர் போகிறது. அவர் மவுண்ட் ஆபூவிற்கு ரிப்ரஷர் கோர்ஸ்க்குப் போகிறாராம். மதுரை பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் அங்கே போயிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யார் உங்களுக்கு இதையெல்லாம் சொன்னார்கள் ? ஊகம் பண்ணி ஜோஸியம் சொல்லக்கூடாது. பேசுவது நேர்மையாகப் பேச வேண்டும், நாணயமாகப் பேச வேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : நீங்கள் சொன்னால் சரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரமாகி விட்டது (மணியடிக்கப்பட்டது).

திரு. கரு. சீமைச்சாமி : குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படத்தான் வேண்டும். எங்கள் கட்சித் தலைவர் . . . .

(மணி அடிக்கப்பட்டு திரு. முனு ஆதி அழைக்கப்பட்டார்கள்.)

இதோடு முடித்துக்கொள்கிறேன். முதல் அமைச்சர் அவர்களுக்கு என் தாழ்மையான வேண்டுகோள். அவர்கள் மாநில சுயாட்சி, கொடி பற்றியெல்லாம் பேசினார்கள். நாட்டில் ஜனநாயகம் இருந்தால்தான் சுயாட்சி, கொடி போன்றவற்றைப் பற்றிப் பேச முடியும். இப்போது இந்தியாவிலுள்ள சூழ்நிலையைப் பார்க்கும்போது இங்கு ஜனநாயகம் செத்துக் கொண்டிருக்கிறது. ஜனநாயகம் காப்பாற்றப் படவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறது. இன்று

சர்வாதிகாரப் போக்கில் மத்திய அரசாங்கம் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு ஆதரவு கொடுக்கக் கூடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஜனநாயகம் இருந்தால் தான் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும். மன்னர்கள் ஒழிப்பு பற்றி . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய அரசுக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவு கொடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். தொடர்ந்து அடிமையாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம். அதை சரி என்று சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்வார் என்று கருதுகிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : மாநில சுயாட்சி, கொடி . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள வேறு சப்ஜக்ட்டுக்குப் போகிறீர் கள். திரு. முனு ஆதி . . . .

திரு. கரு. சீமைச்சாமி : ஒன்று கூறி முடித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியப் பிரதமரின் சர்வாதிகார ஆட்சிக்கு தொடர்ந்து ஆதரவு கொடுத்தால் சுதந்திராக் கட்சியின் ஆதரவு திராவிட முன்னேறறக் கழகத்திற்கு இனிமேல் இருக்கமுடியாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் இதை உங்களிடமிருந்து எதிர் பார்க்கவில்லை. மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கருத்துக்குப் பிறகுதான் இது பற்றி பதில் சொல்லவேண்டியவனாக இருக்கிறேன். ஏனென்றால் தலை ஆடுகிறதா என்று பார்ப்பேனே தவிர வால் ஆடுவது பற்றி கவலைப்படமாட்டேன்.

திரு. கரு. சீமைச்சாமி : தலையா, வாலா என்பது முதல் அமைச்சர் அவர் களுக்கு போகப் போகத் தெரியும் . . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி ஏற்படுவதால் உங்களுக்குத்தான் நஷ்டம், எங்களுக்கு லாபம்.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கடுமையாக எதிர்த்து, இடதுசாரி கம்யூனிஸ்ட்கள் கொண்டு வந்திருக்கிற கண்டனத் தீர்மானத்தையும் எதிர்த்து ஒருசில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது என்றால், அரசின் மீது நம்பிக்கை இல்லை என்பதை ஆதாரங்களோடு காட்டவேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள், 1962-ல் இருந்து 1967 வரையில் எதிர்க்கட்சியாக இயங்குகிற போது எப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது விவாதத்தை நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதன்படி இன்றைக்கு நடக்கிற விவாதத்தைப் பார்க்கிறபோது அதற்கும் இதற்கும் இமயமலைக்கும் கடுகுக்கும் இருக்கிற வித்தியாசம்போல் தெரிகிறது.

நாங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசியபோது, காங்கிரஸ் அரசின் மீது நம்பிக்கையில்லை என்று சொல்கிறபோது ஒரு சில காரணங்களைக் காட்டித்தான் கொண்டு வந்தோம். ஐயனாவரம் பால்பண்ணையில்





என்னென்ன ஊழல்கள் நடந்தன, டயரி ஆபீசரும், மில்க் கமிஷனரும், அந்த இலாகா அமைச்சர் அவர்களும் அதில் எப்படி ஈடுபட்டார்கள் என்பதை எடுத்துக்காட்டி அதிலிருந்து அமைச்சர் அவர்கள் தப்பித்துக் கொள்ள முடியாமல் அந்த அதிகாரியை உடனே அந்தப் பதவியிலிருந்து நீக்கி மற்ற அதிகாரிகளை மூலை முடுக்குகளுக்கு மாற்றினார்கள். அதற்குக் காரணம் நாங்கள் கொடுத்த ஆதாரபூர்வமான குற்றச்சாட்டாகும். ஆனால் இப்போது காங்கிரஸ் காரர்கள் கொண்டு வந்திருப்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. ஏதோ இவர்கள் இங்கு அமர்ந்திருக்கிறார்களே என்று பார்த்துப் பார்த்து வயிற்று எரிச்சல், ஏதோ சொல்லவேண்டுமென்று, ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஆதாரம் ஒன்றும் இல்லாமல் . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்கள் குற்றச்சாட்டுக்கள ஆதாரமற்றவை என்று சொன்னார்கள். தொழிலாளர் அமைச்சர் அவர்கள், அவர்கள் குடும்பத்தில் வீடு வாங்கியிருக்கிறார்கள் ஒரு லட்சம் ரூபாயில், கூட்டுறவுத் துறை அமைச்சர் என்னென்ன வேலைகள் செய்திருக்கிறார்கள் என்று படித்துக் காட்டினேன். இன்னும் சில அமைச்சர்களைப் பற்றி வரப்போகிறது. ஆகவே ஆதாரத்தோடு தான் சொல்கிறோம். அவர்கள் எழுந்து மறுத்திருக்கிறார்கள். மாமனார் கொடுத்தார், மாமியார் கொடுத்தார், பெண்டாட்டி கொடுத்தார் என்று சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே, ஆதாரமற்றவை அல்ல, ஆதாரத்தோடுதான் குற்றஞ் சாட்டியிருக்கிறோம்.

திரு. முனு. ஆதி : நான் சொல்வது, நாங்கள் ஆதாரத்தோடு இந்த அவை யில் எடுத்துக்காட்டி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் கல்யாணம் கட்டிக்கொண்டாலும் உங்களைக் கேட்டுக்கொண்டுதான் கட்டிக் கொள்ள வேண்டுமா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : அது விதண்டாவாதம்.

திரு. முனு. ஆதி : நாங்களும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுகளை எடுத்துக் கூறினோம்.

மார்டின் அவர்கள் சொன்னார்கள் இந்தப் பதவி உயர்வு கொடுத்தார்கள், இவர்களுக்குத் தந்தார்கள், அவர்களுக்குத் தந்தார்கள் என்றெல்லாம் சொன் னார்கள். கக்கன் அவர்களின் பிள்ளைக்கு ஆர்.டி.ஓ. பதவி கொடுத்தார்கள் என்று பகிரங்கமாகச் சொல்லி அது ஒப்புக்கொள்ளப்பட்டது. கக்கன் அவர்களின் பிள்ளைக்கு எல்லோருடைய ஸீனியாரிட்டியையும் தூக்கி எறிந்து விட்டு ஆர்.டி.ஓ. பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாகக் கூறினோம். உங்கள் ஸின்டிகேட் காங்கிரஸ் கட்சித் தலைவர் அப்பா. அவர் பிள்ளைக்கு தரப்பட்டது என்று பகிரங்கமாகக் கூறினோம். ஸாரி, டெப்டி ரெஜிஸ்ட்ரார் பதவி கொடுக்கப்பட்டது என்று கூறினோம்.

அதே நேரத்தில் கழகச் சாதனையைச் சொன்னால், தலைவரவர்களே, ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். சாதனைகளைச் சொன்னால் புரியவும் புரியாது.

[1970 செப்டம்பர் 8

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, இப்போது இருக்கும் அமைச்சரவை, கட்சியைச் சார்ந்தவர்களுக்கு டாக்டராக, எலெக்டிரிசிடி போர்ட் இன்ஜினீராக, ஜட்ஜாக பதவி கொடுத்து இருக்கிறது என்று குற்றச் சாட்டு சொல்ல முடியும்.

திரு. முனு. ஆதி : நாங்கள் கூட எத்தனையோ சொல்லலாம். காங்கிரஸ் கட்சி கொறடா திரு. விநாயகம் அவர்கள் கூட காங்கிரஸ் ஆட்சியில் இருந்த காலத்தில் வடபழனி ஆண்டவர் கோவில் எதிரில் உள்ள புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து இப்போது வியாபாரம் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள், சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவையில் இல்லை. இந்தக் குற்றச்சாட்டை அவர்கள் வரும்போது சொன்னால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சபையில் இருந்திருக்கவேண்டும். அவர் சொல்வதால் தவறில்லை.

திரு. முனு. ஆதி : இதற்கு ஏன் இப்படிச் சத்தம் போடுகிறார்கள் என்று தெரியவில்லை. ஏதோ நாங்கள் சொல்கிற போது கூச்சல் போடுகிறீர்கள் நீங்கள் சொல்லும்போது ஆத்திரப்படாமல் சொல்லவேண்டும். ஏதோ உங்க ளிடமிருந்து நாங்கள் கற்றுக்கொள்ளலாம் என்றால் உங்களுக்கு நாங்கள் எப்படி நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை கொண்டு வருவது என்று கற்றுத்தர வேண்டியிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நீங்களெல்லாம் கற்றுக்கொள்ளும் பிள்ளைகளாக இருந்தால் கற்றுக்கொடுக்க முடியும். ஒன்று சொன்னால் திருப்பி 10 சொல்லு கிறீர்கள்.

திரு. முனு. ஆதி : ஆதாரத்தோடு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வாருங்கள். அது தான் நல்லது. ஒன்றும் இல்லாது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை கொண்டு வருவது நல்லதல்ல. அதற்காகத்தான் இந்த மன்றத்தில் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைத்து அதன் கீழே இந்தக் குறளையும் எழுதி உங்கள் பக்கம் வைத்து இருக்கிறார்கள். "சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க சொல்லிற் பயனிலாச்சொல்". இந்த மாதிரி எழுதிக் கொடுத்தபிறகு ஒன்றுமே ஆதாரம் இல்லாது பேசி, ஆதாரம் இல்லாத குற்றச் சாட்டுகளைச் சொன்னால் எப்படி? மக்கள் உங்களை கவனித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். (பாராட்டொலி). 20 ஆண்டுகால உங்கள் ஆட்சியையும் புரிந்து கொண்டு இருக்கிறார்கள். 3 ஆண்டுகால எங்கள் சாதனையையும் தெரிந்து கொண்டு இருக்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நீங்கள் சொல்கிற சாதனையை மக்கள் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்களா?



[1970 செப்டம்பர் 8

திரு. முனு. ஆதி : நிறைய ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். உங்களுக்கு எங்கள் அமைச்சர்கள் அதிக உரிமை கொடுத்து இருக்கிறார்கள். காமராஜர் காலத்தில் பார்த்து இருக்கிறேன். 1963-ம் ஆண்டிலே குஞ்சன் நாடார் பேசிக் கொண்டிருந்தபோது, அடுத்ததடவை உன்னை வரவிடுகிறேனா பார், உட்கார் என்று இதே வார்த்தை பேசினார், ரிகார்ட் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. என். எஸ். வி. சித்தன் : இதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டும்.

திரு. முனு ஆதி : இது சபை நடவடிக்கைகளில் இருக்கிறது. உறுப்பி னருக்கு தெரியாது போல் இருக்கிறது. அவர்கள் எல்லாம் புதிதாக வந்தவர்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் புதிதாக வந்தவன் என்று அவர் சொல் கிறார். அவருக்குத் தொப்புள் அறுத்த கத்தி என்னிடத்தில் இருக்கிறது.

திரு. முனு ஆதி : புதிதாக வந்தவர்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இது நடவடிக்கை குறிப்புகளில் இருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது) உங்க ளுக்குக் கொடுத்து இருக்கும் சலுகையைப் பார்க்கும்போது எங்களுக்குப் பொறாமையாகக் கூட இருக்கிறது. இதைக் குறிப்பிட்டுச் சொன்னால், வாய்க்கு வந்தபடி ஏதோ பேசினால் எப்படி? (மீண்டும் மணி அடிக்கப் பட்டது) எனக்கு டைம் கொடுங்கள். குறுக்கிட்டு குறுக்கிட்டு நேரம் ஆக்கிவிட்டார்கள்.

இடது சாரி கம்யூனிஸ்ட்கள் காவல் துறையைக் கண்டனம் செய்து தீர்மா னம் கொண்டு வந்து இருக்கிறார்கள். அடக்கு முறை என்று சொன்னார்கள். 20 ஆண்டுகாலம் நாங்களும் கைது செய்யப்பட்டு இருக்கிறோம். நான் ஜாலி யன்வாலா பாக் பார்த்தது இல்லை. ஆனால் அந்த ஆட்சியில் ஜெயிலில் அடித் தார்கள் பாருங்கள், காந்திய பக்தர்கள் . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : உங்கள் கோஷம் பொறுக்க முடியவில்லை.

திரு. முனு. ஆதி : நீங்கள் நடுரோடில் தாக்குறைவான கோஷம் போடு கிறீர்கள். அமைச்சர்களைத் தரக்குறைவாகப் பேசுகிறீர்கள். இதற்கு நடவடிக்கை எடுத்தால் எல்லோரும் ஜெயிலில் இருக்க வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கோஷம் போட உங்களிடம் தான் கற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. முனு ஆதி : நான் இடது சாரி கட்சியினரைச் சொன்னால் உங்களுக்கு ஏன் ஆத்திரம் வருகிறது? அவர்களைப் பற்றி பேசுவதற்கு உங்கள் ஆட்சியில் நடந்ததைச் சுட்டிக்காட்ட வேண்டி இருக்கிறது. ஜெயிலில் மடக்கி மடக்கி அடித்தீர்கள். தொழிலாளர்கள் பிரச்னையில் காவல் துறையினரின் ஆட்களை பக்கத்தில் வைத்துக்கொண்டு அடி அடி என்று அடித்தீர்கள், காந்திய பக்தர்கள், அஹிம்சாவாதிகள் ஆன உங்கள் ஆட்சியில் நடந்தது.

ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனியில் 1958-ம் ஆண்டில் சட்டப்படி ஸ்டே-இன் ஸ்ட்ரைக் செய்தார்கள். 1,500 தொழிலாளர்கள் காந்திய பக்தர்கள் **ஆண்ட காலத்தில் என்ன செய்தார்கள் தெரியுமா? சத்திய சீலர்கள், அஹிம்சா மூர்த்திகள் கேட்டை மூடிக்கொண்டு அடி அடி என்று அடித்தார்கள். அது மாதிரி ஒரு நிகழ்ச்சி இப்போது நடந்து இருக்கிறதா? இதை இடது சாரி** கம்யூனிஸ்ட்கள் சிந்திக்க வேண்டும். சிண்டிகேட் பக்கம் சேர்ந்து விடாதீர்கள். தி.மு.க. ஆட்சியைக் கண்டிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் இப்போது **சேர்ந்து விடுவார்கள்.**

நிலப்பறி இயக்கத்தைப் பற்றி காமராஜரிடம் கேட்டபோது எனக்கு நம்பிக்கையில்லை, ஆதரிக்க மாட்டேன் என்று சொன்னார்கள், ஆனால் தமிழக அரசு சில பேர்களைக் கைது செய்தபோது 'இது நியாயமாண்ணேன், இது அடக்குமுறை இல்லையாண்ணேன்' இப்படி பேசிக்கொண்டு இருந்தார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் : காமராஜர் பேசுகிற மாதிரி பேசிக்காட்டினார்கள். இவர் என்ன நடிகரா?**

**திரு. முனு ஆதி:** நான் உங்கள் உறுப்பினர் திரு. மார்டின் அவர்களிடமிருந்துதான் கற்றுக்கொண்டேன். அவர் பேசுகிறபோது பார்த்து இருந்தால் தெரியும் எப்படி நடித்துக் காட்டினார் என்று.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நடிகரை ஏளனம் செய்கிறீர்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இங்கே நடிகர்கள் இருப்பதால், நடித்துக் காட்டினால்தானே அவர்களுக்குப் புரிகிறது.

**திரு. முனு. ஆதி :** உங்களை மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். **நீங்கள்** 20 ஆண்டுகாலம் நடத்திய அரசியலை மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். வேண்டுமானால் எங்களைக் குறை சொல்லலாம். இனி நீங்கள் வரப்போகிறீர்கள் என்று நினைக்காதீர்கள். நாங்கள்தான் வருவோம். இல்லையென்றால் வேறு யாரும் வரப்போவதில்லை. நாங்கள் வருவது உறுதி. முதலில் கண்ணியத்தைக் **காப்பாற்றுங்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதாரத்தோடு சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள்.**

கலைஞர் அவர்கள் மேல் என்ன குற்றச்சாட்டு, அதற்கான ஆதாரம் என்ன. கலைஞர் முதலமைச்சராக இருக்கிறாரே என்று வயிற்றெரிச்சல் அடையாதீர்கள். **இது மக்கள் கொடுத்த தீர்ப்பு. 'நீங்கள் யார் இதைக் கேட்பதற்கு!** ஆதாரத்தோடு பேசி கண்ணியத்தைக் காப்பற்ற வேண்டும்' என்று கேட்டு, எங்கள் தலைவர் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதால் முடித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** பேரவைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளுக்கும் அதனுடைய தேர்தல் அறிக்கையில் இருப்பவைகளுக்கும் இன்றைக்கு அவர்கள் வகுத்துள்ள கொள்கைக்கும், அமுல் நடத்தும் கொள்கைக்கும் அதிக வித்தியா





சத்தைப் பார்க்க முடிகிறது. முதலாளித்துவப் பிடியைப் போக்கும் முறையில் தொழில் துறையைத் திருத்தியமைப்போம் என்றும் அதே மாதிரி காட்டரசர் வழியில் வந்த நிலச்சுவான்தார்களின் முகாமாக காங்கிரஸ் ஆட்சி ஆகிவிட்டதால் இந்த நிலையைப் பேக்குவோம் என்றும் அந்த தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த இரண்டு பிரதான விஷயங்களை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தத் தேர்தல் அறிக்கையில் அவர்கள் பிரகடனப்படுத்திய கொள்கையை நிறைவேற்றி வருகிறார்களா என்று பார்த்தால், அவர்கள் வேறு திசையை நோக்கிப் போய்க்கொண்டு இருக்கிறார்கள். அந்த முகாம் நிலச்சுவான்தார்கள் முகாமாக மாறிவிட்டது. அந்த முகாமையே ஒழிக்க வேண்டுமென்று கூறியவர்கள் இன்று அந்த முகாமையே நோக்கி அவர்களும் போகும் பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது.

இந்த நிலச்சுவான்தார்களின் கொடுமைகளை எதிர்த்து விவசாயிகள் போராடும்போது விவசாயிகள், விவசாயக்கூலிகள் மிருகத்தனமாகத் தாக்கப்படுவதும், போலீசைக் கொண்டு அவர்கள் போராட்டத்தை அடக்குவதுமான ஒரு கொள்கையை இந்த அரசு கையாண்டு வருகிறது. இக் கொள்கை முதலாளிகளுக்கு நிலச்சுவான்தார்களுக்கு ஆதரவான கொள்கை. இந்த முதலாளிகள், நிலச்சுவான்தார்களுக்கு ஆதரவாக இன்று போலீஸ் பயன்படுத்தப்படுகிறது என்று நான் கூற விரும்புகிறேன். அடுத்தடுத்து தொடர்ச்சியாகப் பல உதாரணங்களை நேற்று இந்த அவையில் பேசும்போது எங்கள் கட்சித் துணைத் தலைவர் வரிசையாக தொழிலாளர்த் துறையிலும், விவசாயக் துறையினும் எப்படி இந்த அரசு நடந்து கொண்டு இருக்கிறது, எந்தக் கொள்கையைப் பின்பற்றி இருக்கிறது என்றும் கூறினார்கள். சட்டத்தை மீறினால், பலாத்காரத்தை உண்டு பண்ணினால் எந்த ஒரு அரசும் சகித்துக் கொண்டு இருக்காது என்று கூறி, சட்டம் மீறப்படுகிறது என்ற காரணத்தைக் கூறி அடக்கு முறை நடைபெறுகின்றது.

நான் கேட்கிறேன். **இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய கட்சி** ஆரம்பத்தில் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது சட்டத்தைப்பற்றி என்ன நினைத்தீர்கள்? உங்களுக்குச் சாதகமாக இருக்கும்பொழுது சட்டத்தைப்பற்றி கவலை இல்லை, சட்டத்தையே கொளுத்தினீர்கள், சட்டத்தையே மீறினீர்கள். ஆனால், இன்றைக்கு மக்கள் தங்களுடைய வாழ்வைப் பாதுகாக்கவேண்டும் என்பதற்**காக, பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டிருக்கும் பல்வேறு மக்கள் பல்வேறு விதத்தில் போராடி, கிளர்ச்சி நடத்தி, தங்களுடைய வாழ்க்கை** நலத்தைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்று இயக்கங்கள் நடத்தும் பொழுது அப்பொழுது சட்டத்தைக் காட்டி, சட்டவிரோதம் என்று சொல்லி முதலாளிக்கு எதிராகச் செய்வது சட்டவிரோதம், நிலச்சுவான்தார்களுக்கு எதிராகச் செய்வது சட்டவிரோதம் என்று சட்டத்தைக் காட்டி போலீஸ் பயன்படுத்தப்படுகிறது. அதன் விளைவு என்ன?

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கூலிகள் அரை லிட்டர் கூலி அதிகப்படியாக வேண்டும் என்று கேட்டதற்கு பூந்தாழங்குடியில் துப்பாக்கிப் பிரயோகம் **நடந்திருக்கிறது.**

டிராக்டர்களை புகுத்துவதினால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும், தங்களுக்கு வேலைக்கு ஒரு வாய்ப்பு வேண்டும் என்ற காரணத்திற்காக அவர்கள் ஒரு இயக்கத்தை நடத்தினால், நிலச்சுவான்தார்கள் அவர்களுடைய அறுவடையை நிதானமான முறையில் நடத்திக்கொள்ளலாம், மகருலை நல்லமுறையில் செய்துகொள்ளலாம், அதற்கு எவ்வளவு போலீஸ் பாதுகாப்பு வேண்டுமானாலும் தருவோம் என்று கூறி தஞ்சை மாவட்டத்தில் உள்ள நிலச்சுவான்தார்களை மகிழவைத்தார்கள்.

இன்றைக்குச் சொல்லப்படுகிறது, நக்சல்பாரிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்குக் கடலூரில் அந்த வட்டத்தில் போலீஸ் நிலையங்கள் அதிகமாக துவக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. துவக்கப்பட்டிருக்கக்கூடிய போலீஸ் நிலையங்களில் என்ன செய்கிறார்கள்? அங்கு இருக்கும் போலீஸ்காரர்கள் பல ஆண்டுகாலமாக, 12, 16 ஆண்டுகாலமாக அங்கே நிலங்களைச் சீர்படுத்தி வைத்து, அரசு நிலங்களைப் பயிரிட்டு வரக்கூடிய விவசாயிகளை அதிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு அந்தப் போலீஸ் பயன்படுத்தப்படுகிறதே தவிர, இந்த மாநிலத்தில் நக்சல்பாரிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்கு எந்த அளவுக்கு ஊடுருவல் ஏற்பட்டிருக்கிறது என்பதை கண்காணிப்பதற்கு அல்ல நிற்கவில்லை. ஆனால் இதைப் பயன்படுத்தி அங்கே உள்ள விவசாயிகளை அப்புறப்படுத்துவதற்கு போலீஸ் பயன்படுத்தப்பட்டுவருகிறது என்பதைத் தான் இந்தச் சமயத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அதேமாதிரி தொழில்துறையைப் பார்த்தால், நேற்று தோழர் திரு. சங்கரய்யா அவர்கள் பல்வேறு உதாரணங்களைக் கொடுத்தார்கள், உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தைப்பற்றி தொழிலாளிகளுக்கு உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வதற்கு உரிமை உண்டு, உள்ளிருப்பு வேலை நிறுத்தம் 8 மணி நேரம் வரையில் செய்யலாம், தொடர்ந்து இருக்கக்கூடாது என்பதுதான் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பு. இதை எதிர்த்து தமிழக அரசு அப்பீல் செய்யவேண்டும் என்று அன்றே கூறினோம். அதைச் செய்யாதது மட்டுமல்ல, அதே சமயத்தில் கோத்தாரி சர்க்கரை ஆலை முதலாளிகள் அங்கு உள்ளிருப்பு வேலை நிறுத்தம் நடந்த போது வெளித் தொழிலாளர்கள் பூராவும் உள்ளே கொண்டுவந்து நாள் கணக்கில் இரவு பகலாக வைத்து இருந்தாரே, அது எந்த சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கேட்கிறேன். இதையெல்லாம் பார்க்கும் பொழுது தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் முதலாளிகளுக்கு ஆதரவாகத் தான் போலீஸ் உபயோகப்படுத்தப்படுகிறது, சட்டம் உபயோகப்படுத்தப்படுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அண்மையில் பாரி அண்டு கம்பெனி நெல்லிக்குப்பத்தில் வேலை நிறுத்தம் நடைபெற்றது. வேலை நிறுத்தம் 61 நாட்களாக அமைதியான முறையில் நடைபெற்றது. எந்தவிதமான அசம்பாவிதமான சம்பவங்களும் நடைபெறவில்லை. முதலாளிகள், அங்கு இருக்கக்கூடிய பாரி நிர்வாகம் பயந்தார்கள். அவர்களால் வேலை நிறுத்தத்தை உடைப்பதற்கு முடியவில்லை. அதே சமயத்தில் சர்க்கரை ஆலையில் வேலைநிறுத்தம் வருகின்றபொழுது, கரும்பு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது உண்மை. எந்த நாட்டில் எந்தச் சர்க்கரை ஆலை



யில் வேலை நிறுத்தம் நடந்தாலும், கரும்பு விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள், இந்த நிலைமைதான் ஏற்படும், அப்போது கடலூர் விஜயம் செய்த மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களை அணுகி கரும்பு விவசாயிகள் கரும்பை அரைக்க வேண்டும் என்று கேட்டதற்கு, அவர்களுக்கு அமைச்சர் என்ன ஆலோசனை கூறினார்கள்? விவசாயிகளிடம் 'நீங்கள் ஆட்களைக் கொடுங்கள், தொழில் நிபுணர்களை கோவாபரேடிவ் ஷுகர் பாக்டரியிலிருந்து நாங்கள் கொடுக்கிறோம், போலீஸ் பாதுகாப்பும் கொடுக்கிறோம் ஆலையை ஓட்டலாம்' என்று ஒரு ஆலோசனையைக் கூறினார்கள். அதைப்பற்றி அறிக்கைகூட விடுத்திருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் இதை ஏதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் தொழிலாளர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளைப் பெற, சட்டபூர்வமாக, அமைதியான முறையில் வேலை நிறுத்தம் நடத்திக்கொண்டிருக்கிற சமயத்தில், அந்த வேலை நிறுத்தத்தை முதலாளிகளோ உடைக்க முடியாத சூழ்நிலையில் இருக்கும்பொழுது, இப்படிப்பட்ட ஆலோசனை கூறியிருக்கிறார்கள். இந்த ஆலோசனை கரும்பு விவசாயிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால் கரும்பு விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் மோதல் ஏற்பட்டிருக்கும். இதனால் ஆதாயம் அடைபவர்கள் பாரி முதலாளிகள் என்பதை இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனித் தொழிலாளர்கள் தொழிற்சாலை மூன்று மாத காலமாக மூடப்பட்டிருப்பதை ஒட்டி அமைதியான முறையில் ஊர்வலம் வந்துகொண்டிருந்தார்கள். அப்படி ஊர்வலம் வரும்பொழுது, தொழிற் சங்கத் தலைவர்களும், அவர்களைச் சார்ந்த தொழிலாளிகளும் கைது செய்யப் பட்டார்கள். இதையெல்லாம் பற்றி நேற்று பலரும் எடுத்துக்காட்டினார்கள். இம்மாதிரி பல அடக்கு முறைச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

நெய்வேலியில் நடந்திருக்கக்கூடிய சம்பவம் பற்றிய விசாரணை அறிக்கை நேற்று மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிறது. நெய்வேலியில் வேலை நிறுத்தம் மே மாதம் 2-ம் தேதி துவக்கப்பட்டது. தொழிலாளர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக ஏற்கனவே முதல் அமைச்சர் அவர்கள் தலையிட்டு அதன் மூலம் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்று தொழிலாளர்கள் கருதுகிறார்கள். அந்த அடிப்படையில் வேலை நிறுத்தம் ஏற்பட்டது சட்ட விரோதமான வேலை நிறுத்தம் என்று இந்த விசாரணை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது, இருக்கலாம் சட்டவிரோதமான வேலை நிறுத்தத்தை எப்படித் தடுப்பது? அங்கு பலாத்காரமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டால், அதைச் சமாளிப்பதற்கு தடுப்பதற்கு வேண்டிய அந்த அளவோடு நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை. நெய்வேலிப் பிரதேசத்தில் தொழிலாளர்கள் இனி வேலை நிறுத்தத்தைப்பற்றியே நினைத்துக் கூட பார்க்கக் கூடாது என்பதற்காக வேலை நிறுத்தம் நடைபெற்ற இடத்தில் மட்டுமல்ல, அந்த விளாண்டு மட்டுமல்ல, 10 மைல்களுக்கு அப்பால் உள்ள பல்வேறு தொழிலாளர்களில் குடியிருப்புப் பிரதேசங்களில் மற்ற பிரதேசங்களிலும் போலீஸார் புகுந்து அக்கிரமான செயல்களைப் புரிந்திருக்கிறார்கள். இதுபற்றி காஸி அவர்கள் விசாரணையில் பல்வேறு சாட்சிகள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள் இந்த அறிக்கை பற்றிப் பின்னாலே வருகிறேன்.

அப்படிப்பட்ட நிலைமையிலே என்ன நடந்தது? துப்பாக்கிச் சூடு அவசியம்தானா? எந்த இடத்தில் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கிறது அங்கிருந்து 10 மைல்களுக்கு அப்பால் இருக்கக்கூடிய மந்தாரக்குப்பம், 6 மைல்களுக்கு அப்பால் இருக்கக்கூடிய தாண்டவக்குப்பம் ஆகிய பிரதேசங்களில் ஏன் சூறையாட வேண்டும் என்று நான் கேட்கிறேன். நாகை, தஞ்சை பக்கத்தில் பல்வேறு போலீஸ் உறவினர்கள் நெய்வேலியில் சூறையாடிய கைகடிகாரங்கள், டைம்பீஸ்கள், டார்ச் லைட்கள் போன்ற பல்வேறு சாமான்களை விற்கிறார்கள் என்று தகவல் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இப்படியெல்லாம் கொடுமையான அடக்குமுறைகள் அங்கே நடந்திருக்கின்றன.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன? முதல் அமைச்சர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை மாற்ற முயற்சித்தால் அது நடக்காது, அந்த ஒப்பந்தத்தை அவர்கள் மீறக்கூடாது, அந்த ஒப்பந்தத்தை மாற்றி அமைக்கக்கூடிய அளவில் ஏதாவது நிகழ்ச்சிகள் நடந்தால், அதைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது என்ற முறையில் முதல் அமைச்சர் அறிக்கையிட்டார் அதன் அடிப்படையில் அடக்கு முறைச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. போலீஸ் ஐ.ஜி. அவர்கள் அங்கே மூன்றும் தேதி இருக்கும்பொழுதே இப்படிப்பட்ட சம்பவங்கள் அங்கே நடந்திருக்கின்றன. இந்த விசாரணை அறிக்கையிலேயே அதுபற்றிக் கூறப்பட்டிருக்கிறது. மே மாதம் 3-ம் தேதி ஐ.ஜி. அவர்கள் அங்கே இருந்தார்கள். ஐ.ஜி. அவர்கள் அங்கு இருக்கும்பொழுதே பல்வேறு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அண்ணா மன்றம் தாக்கப்பட்டதிலிருந்து, நாவலர் மன்றம் தாக்கப்பட்டதிலிருந்து பலவேறு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. பச்சிளங் குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கின்றன. பெண்கள் கற்பழிக்கப் பட்டுள்ளனர். ஜனங்கள் பூராவும் அங்கே அடக்கு முறைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். நீதி விசாரணை வேண்டும் என்று அன்றைக்கும் கூறினோம், இன்றைக்கும் கேட்கிறோம்.

காலி அவர்கள் கூறுகிறார்கள். 18-ம் தேதி காலை நான் இங்கிருந்து புறப்பட்டேன், மாலை 5 மணிக்கு விருத்தாசலம் சென்று அங்கு கொஞ்ச நேரம் காம்ப் செய்தேன். 18-ம் தேதி மாலையே நெய்வேலி சென்றேன். பல இடங்களில் சர்பிரைஸ் விசிட்ஸ் நடத்தினேன். 19, 20, 21-ம் தேதி, விசாரணைக்கு அறிவிப்புக்கொடுத்தேன் என்று. இது போதுமான அவகாசம்தானா? '19-ம் தேதி காலை 9, 10 மணிக்கு விசாரணை ஆரம்பமாயிற்று. பாதிக்கப்பட்ட மக்கள் சுமார் 20 மைல் விஸ்தீரணத்திலுள்ள மக்கள் விசாரணைக்கு வரவேண்டும். அந்த சமயத்தில் ஒரு மாதம், இரண்டு மாதம் அளவுக்குக்கூட அடிபட்ட பேர்கள் வெளியூர் போயிருக்கிறவர்கள் விசாரணைக்கு வரமுடியாத சூழ்நிலையில் விசாரணை துவக்கப்பட்டு, மூன்று நாட்களுக்கு விசாரணை நடத்தி முடித்திருக்கிறார்கள். அது ஒரு புறம் இருக்கட்டும். விசாரணையில் 55-வது சாட்சி, 11-வது சாட்சி சாட்சியம் அளித்திருக்கிறார்கள். 11-வது சாட்சி ஆண்டகுருநாதன், தொழிலாளர் முன்னேற்றக் கழக சங்கச் செயலாளர், 55-வது சாட்சி தாண்டவக்குப்பம் அண்ணா மன்றத்தின் செயலாளர் மணி, மாயாண்டித் தேவரின் மகள், இறந்த தேவன்பின் தகப்பனும் தாயும், தேவன்பு 3 மணிக்கு வீட்டில் இருந்ததாகச் சாட்சியம் அளித்திருக்கிறார்கள். துப்பாக்கிச்சூட்டின்



நேரமே திருத்திக் கூறப்பட்டிருக்கிறது. விசாரணையில் காலி அவர்கள் மெடிகல் ரிபோர்ட்டை வைத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்பதரை, பத்து மணிக்கு அங்கே பிரேதம் சென்றிருக்கிறது, விறைத்துப் போயிருக்கிறது. ஐந்து மணிக்கு முன்னால் செத்திருந்தால்தான் விறைப்பு ஏற்பட்டிருக்கும் என்று மெடிகல் ரிபோர்டின் அடிப்படையில் வைத்து மே 3-ம் தேதி காலை 9 மணிக்கு துப்பாக்கிப்பிரயோகம் இல்லை, டியர் காஸ் தான் வெடிக்கப்பட்டது என்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல் சொல்லியிருக்கிறார்கள். அண்ணா மன்ற செயலாளர், தொழிலாளர் முன்னேற்ற சங்க செயலாளர் அறிக்கை தேவன்புவின் தாயார், தகப்பனார் சாட்சியங்கள் அனைத்தையும் ஒதுக்கிவிட்டு, மெடிகல் ரிபோர்ட்டை அடிப்படையாக வைத்து, இது பற்றி முடிவு செய்திருக்கிறார்கள் திரு. காலி அவர்கள். பல இடங்களில் நடந்திருக்கக்கூடிய தடியடிப் பிரயோகங்கள், துப்பாக்கிச் சூடுகள் ஆகியவைகள் பற்றி சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட முடியாத சூழ்நிலையில் அந்த விசாரணை அமைந்தது சுற்றியுள்ள பல இடங்களிலிருந்து மக்கள் வந்து சாட்சியம் அளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நீ விசாரணை நடத்த வேண்டும் இது பற்றி நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிச் சாட்சியம் சொல்வதற்கு பாதிக்கப்பட்டவர்கள் தயாராக இருக்கிறார்கள். கற்பழிக்கப்பட்ட பெண்கள் உட்பட சாட்சியம்கூறத் தயாராயுள்ளார்கள். காலி அவர்கள் நிகழ்ச்சிகள் நடந்ததை ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் அவர்கள் முடிவுரையில், செய்ததெல்லாம் சரியானது, நியாயமானது, அத்துமீறியது அல்ல, லத்தி சார்ஜ் நியாயமானது, துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானது என்று சொல்லியிருக்கிறார்கள். கடைசியில் அதிகாரிகளைப் பாதுகாக்க வேண்டும் என்று செய்தபோதிலும், தாண்டவக்குப்பத்தில், விசாரணைக்குப் பிறகு தொழில் சங்கப்பிரதிநிதிகள் விஜயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, காலி அவர்கள் தாண்டவக்குப்பத்திற்குப் போனபோது, அங்கே துணிவாக, பகிரங்க விசாரணைபோல் இருந்ததால், மக்கள் நிலைமைகளை எடுத்துச் சொல்லியதன் பேரில், அங்கே மட்டும் போலீ தலையிட்டது தவறு என்று சொல்லி சம்மந்தப்பட்ட டெபுடி சூபரெண்டண்ட் மீது நடவடிக்கை டிபார்ட்மெண்டில் எடுத்தால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். இருபது மைல் சுற்றளவு உள்ள ஏரியாவில், வியாபாரிகள் இருக்கிறார்கள். போலீஸ் தரப்பில் அவர்களையெல்லாம் கட்டாயப்படுத்தி, கடைகளை மூடியது போலீஸ் அத்துமீறி நடந்ததால் அல்ல, தொழிலாளர்களே மூடச் சொன்னார்கள் என்று சொல்லவேண்டும், இல்லாவிட்டால் உங்கள் லைசென்ஸ் போய்விடும் என்று மிரட்டியிருக்கிறார்கள். சாட்சியம் சொல்லவந்த தொழிலாளர்களை போலீஸ் கூறியபடி சொல்லாவிட்டால் வேலைபோய்விடும் என்று பயமுறுத்தினார்கள். மற்றவர்களையும் இப்படித்தான் சாட்சியம் சொல்ல வேண்டும் என்று கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விசாரணையின் அறிக்கை நம் முன் வைக்கப்பட்டிருக்கிறது. தொழில் சங்கங்களும், மக்களும் நிச்சயமாக நெய்வேலியில் பல்வேறு சம்பவங்களைப்பற்றி நீதி விசாரணை நிச்சயமாக வேண்டும் என்று கேட்கிறார்கள்.

(மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அங்கத்தினர் திரு. மார்ட்டின் அவர்கள் பேசும்போது பல குற்றங்களைச் சொன்னார்கள்; அவற்றிற்கு நான் விளக்கங்கள் கொடுத்தேன். அப்பொழுது ஒன்றைமட்டும் சொல்லாமல் இருந்தேன், ரெகார்டுகளைப் பார்க்க வேண்டும் என்று கன்னி பாக்கள் டெண்டர் இல்லாமல் விற்கப்பட்டதால், பல லட்சம் ரூபாய்கள் நஷ்டம் என்றார்கள். அவையிலே அவர்கள் தவறான செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

(திரு. மார்டின் வெளியிலிருந்து தன் இருக்கைக்கு வந்தார்கள்)

வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன். உட்காருங்கள். யாரோ கொடுத்த விவரங்களை வைத்துக் கொண்டு, தவறாக அவையில் சொல்லிவிட்டார்கள். கோணிகளுக்கு டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. 1969-ல் ஆகஸ்ட் மாதத்தில் டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. 46 பைசாவிலிருந்து, 67 பைசாவரையில் கோணிக்கு என்ற அளவில் டெண்டர்கள் வந்தன. சேலத்தில் 100 கே.ஜி. கோணிக்கு 86 பைசா வந்தது. பின்னால் கோகணிகளை எடுக்க மறுத்து விட்டார்கள். அவருடைய பணம் ஃபார்பீட் ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். அதன் பிறகு ஃபுட் கார்ப்பொரேஷனுக்கு எழுதினோம். அவர்களும் கோணிப் பைகள் வேண்டியதில்லை, தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். பிறகு டி.ஸி.எம்.எப்., தஞ்சாவூர் மார்கெடிங் பெடரேஷன் 75 பைசாவிற்கு சேல்ஸ் டாக்ஸ் சேர்த்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளப் பட்டது. அவர்களும் எடுத்துக் கொள்வதாக இல்லை. இந்த சமயத்தில் கோணிப் பைகளை 75 ப்ளஸ் ஸேல்ஸ் டாக்ஸ் கொடுக்கிறேன் என்று ஆஃபர் வந்தது. டெண்டர் ரேட்டை விட அதிகமாக இருந்தால் 75 ப்ளஸ் ஸேல்ஸ் டாகஸ் என்று கொடுத்திருக்கிறோம். 100 கோனிஜி கன்னிகளைப் பொறுத்தவரையில், முதலிலே 204, 241 ரூபாய் என்று இருந்தாலும், கடைசியில் 252.80 ரூபாய் என்று விட்டப்பட்டிருக்கிறது. இதில் முறை கேடு எதுவும் இல்லை. டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. முதலில் 40 பைசா என்றிருந்ததால் வேண்டாம் என்று சொல்லிவிட்டு பின்னால் 75 பைசா தான் கொடுத்திருக்கிறது. எப்படி நஷ்டம் வரும்? தவறான தகவலை அவைக்குக் கொடுத்திருப்பது சரியல்ல என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. கே. விநாயகம் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்ப்ளநேஷன். சபாநாயகர் அவர்களே, நான் அவையில் இல்லாதபோது, அங்கத்தினர் திரு. முனு ஆதி அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறார்கள். சபைமுன் வந்திருக்கிற பிரச்சினை மந்திரிகள்மீது . . .

(திரு. முனு ஆதி லாபியிலிருந்து அவைக்குள் வந்தார்கள்)

Let him come. I want him to be present.

இப்பொழுது இருப்பது மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம். அது விவாதத்தில் இருக்கிறது. என்மீது இல்லை. அப்படிச் சொன்னதுகூட உண்மையாக இருக்குமானால், வருத்தமே இல்லை. நான் சொல்வதை மாண்புமிகு முதல் அமைச்சர் கவனமாகக் கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், 'கோடம்பாக்கத்தில் எனக்குச் சொந்தமாக, மார்கெட்டிற்கு எதிரில் இருப்பது



புறம்போக்கு நிலம் அதை நான் ஆக்ரமித்துக் கொண்டு இருக்கிறேன், அரசாங்கத்தை ஏமாற்றி வருகிறேன் என்பது குற்றச்சாட்டு .' இதில் தவறு என்னவென்றால் நான் வாங்கியது இப்பொழுது அல்ல. அந்த நிலத்தை 1895-ல். அப்பொழுது செங்கல்பட்டு கலெக்டராக இருந்த மிஸ்டர் ஷிப்லி, ஐ.சி.எஸ்., அந்தக் காலத்தில் தாண்டவமூர்த்தி கிராமணி என்பவருக்குக் கொடுத்திருக்கிறார். This is registered in your name என்று உத்தரவு வந்திருக்கிறது. பட்டா வழங்கவேண்டும் என்று தெரியாது. கடிதம் வந்தவுடன், அந்தக் காலத்தில், அப்பொழுது நான் பிறக்க வில்லை. அவையில் இருப்பவர்கள் யாருமே பிறந்திருக்க மாட்டார்கள். அப்பொழுது (குறுக்கீடு) 1895-ம் ஆண்டில், அந்த ப்ரொசீடிங் என்னிடம் இருக்கிறது. (குறுக்கீடு) சொல்வதைக் கேளய்யா. (குறுக்கீடு) சரிதான். 1895-ல் அப்படிவாங்கி, அவருடைய அனுபவத்தில் பல ஆண்டுகளாக இருந்திருக்கிறது. நான் பின்னால் 10 ஆண்டுகளுக்கு முன்பாக அந்த நிலத்தை வாங்கினேன். வாங்கும்போது, குறிப்பிட்ட 4 செண்டுக்கு மாத்திரம் பட்டாயில்லையே, மீதி நிலத்திற்கு உங்களுக்குச் சொந்தம் என்று இருக்கிறதே என்று கேட்டபோது, அது என் அனுபவத்தில் இருந்திருக்கிறது, ஷிப்லி கடிதம் இருக்கிறது என்றார். அந்தக் கடிதம் எல்.டிஸ். ஆனது. எல்.டிஸ். என்ன என்று ரெவின்யூ அமைச்சருக்குத் தெரியும். ஐந்தாண்டுகள் வைத்திருப்பார்கள். Afterwards the files were burn அதைக் காட்டிய பிறகு, இப்பொழுது இருக்கும் கலெக்டர், அதாவது பத்தாண்டுகளுக்கு முன்னே இருந்த கலெக்டர் அவர்களுக்கு ஒரு மனுப்போட்டு, அதை அவர் திர விசாரித்து Land and Survey Act of 1925 என்ற ஆக்டின் கீழே பார்த்த பிறகு, இந்த நிலம் உங்களுக்குச் சொந்தம் என்பது சரியே என்று பட்டா போட்டு எனக்குக் கொடுத்துவிட்டு, அது என் அனுபவத்தில் இருந்து வருகிறது, 10 ஆண்டுகளாக. அது புறம்போக்கு நிலம். நான் எடுத்துக் கொண்டு விட்டேன் என்பதெல்லாம் முற்றிலும் தவறானது. அந்தக் காலத்தில், ஷிப்லி கொடுத்ததை பின்னால் ரெகுலரைஸ் செய்து, நான் வாங்கிய பிறகு எனக்கு ப்ராபர் டாகுமெண்ட் வேண்டும் என்று, செய்திருக்கிறேன். அது நடந்து பத்து ஆண்டுக்கு முன்னே உங்கள் சார்க்காரில் இல்லை (சிரிப்பு) (குறுக்கீடு) அது இப்பொழுது, 10 மாதத்திற்கு முன்னே, அதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. Collector is the competent athority to give patta உங்களிடம் வரவேண்டிய அவசியம் இல்லை. தெரியாது. நியாயமான முறையில் செய்யப்பட்டிருக்கிறது.

Is there anything objectionable in that? I was a petitioner. He heard me, found out that my case was correct and gave me the patta. So, without knowing the facts, if something is said against me, it is not proper. How can he fabricate things and say something aginst me which is not proper?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ராமசந்திரன் . . .

THIRU T. MARTIN : Just now the Hon. Minister gave a clarification. I have made a statement that without calling for tenders, these gunnies were disposed off. I want to bring to the

notice of this House the proceedings, an authorised copy of which I have. Let him answer after that because I have made a statement before this House regarding these gunnies and not some other gunnies. I want to bring to the notice of the Hon. Minister the proceedings of the Commissioner of Civil Supplies Chepauk, Madras-5.

12 00

PRESENT:

THIRU K. DIRAVIAM, I.A.S.,
*Commissioner.*

*Circular No. V. 20283/69-CS., dated 23rd December* 1969.

[*Subject.*—Civil Supplies—Disposal of new 100 Kg. gunnies and sound serviceable gunnies in the district—Appointment of contractor for purchase—Intimation of.]

There is a quantity of nearly 7 lakhs serviceable sound gunnies of 75 Kgs. capacity in various godowns in the district and 100 Kgs. gunnies (new) to the extent of 2 lakhs at South Arcot. Gunny Supply and Company, Madras have entered into an agreement with the Commissioner of Civil Supplies for the purchase of 3½ lakhs of 75 kgs. and 99,000 of 100 Kgs. new gunnies out of these stocks.

The terms of agreement, etc., are being communicated to the District Collector concerned separately for their reference.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நான் பேசியதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகக் கேட்கவில்லை என்று நினைக்கிறேன். ஆங்கிலத்தில் படிக்கிறேன். தமிழ் அவருக்குச் சரியாக வராது, ஆங்கிலத்தில் படித்தால் புரியும் என்று நினைக்கிறேன்.

**திரு. டி. மார்டின்:** நான் படித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** There is no point in going on reading.

**திரு. டி. மார்டின்:** Let me finish reading

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டெண்டர் இல்லாமல் போட்டிருக்கிறதா என்று பார்ப்போமே.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, டெண்டர் விட்டிருக்கிறது. குறைந்த விலைக்குக் கொடுத்துவிடவில்லை. அதிக விலை கிடைத்திருக்கிறது. இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன மறுக்கப் போகிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'டென்டர் இல்லாமலிருக்கிறது' என்று இருக்கிறதா? அந்தப் பகுதியைமட்டும் மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டினால் போதும்.



THIRU T. MARTIN: In the proceedings it is not stated that tender was called for and tender was not coming and therefore it was done.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மார்டின் அவர்களுக்குச் சொல்கிறேன்----நீங்கள் படித்ததில் 'டெண்டர் அழைத்துக் கொடுக்கப்பட்டது' என்று இல்லை. 'டெண்டர் அழைக்காமல் கொடுக்கப்பட்டது' என்றும் இல்லை. அமைச்சர் அவர்கள், 'டெண்டர் வைத்துதான் கொடுக்கப்பட்டது' என்று சொல்கிறார். அதை மறுக்க ஆதாரம் வேறு எதாவது இருந்தால் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. மார்டின் அவர்கள், சில உத்தியோக உயர்வுகள் கொடுக்கப்பட்டதுபற்றிச் சொன்னார்கள். ஏனென்றால், மாலைப் பத்திரிகைகளில் இவையெல்லாம் வந்து, ஏதோ பெரிய தவறு நடந்துவிட்டதாக நாட்டு மக்களிடையே கருத்து ஏற்படக்கூடாது என்பதற்காக நான் இதிலே பதிலாகச் சொல்கிறேன். இங்கே இடையிடையே குறுக்கிட்டுச் சொல்வதைப் பத்திரிகையிலே போடக்கூடாது என்பதைச் சில பத்திரிகைகள் வழக்கமாக வைத்திருக்கிறார்கள். இருந்தாலும், சொல்ல வேண்டிய கடமை என்பதனால் சொல்லிவிடுகிறேன்.

டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்டில் அஸிஸ்டென்ட் எஞ்சினியர் உத்தியோகங்கள் முதலில் நான்கு இருந்தன. அவற்றில் இரண்டை மீண்டும் புதுப்பித்து, டிபார்ட்மென்டைச் சேர்ந்த ஒருவருக்கு பிரமோஷன் கொடுத்துப் போடப்பட்டது. மீதி ஒருவர் உத்தியோகத்தினை டிரான்ஸ்போர்ட் துறையில் மிக்கத் தகுதிபெற்ற ஒருவருக்குத் தற்காலிகமாகத்தான் போடப்பட்டிருக்கிறது. அது நிரந்தரமாக்கப்படவில்லை. நிரந்தமாக்கப்படுவதற்கு வேண்டிய விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படும்.

திரு. சுந்தரம் என்பவரை டெபுடி டிரான்ஸ்போர்ட் கமிஷனராக ஓராண்டிற்கு முன்பு பதவி உயர்வு கொடுக்கப்பட்டது. அவர் டிரான்ஸ்போர்ட் இலாக்காவில் பல ஆண்டுகள் வேலை செய்தவர் என்ற முறையினால் அவருக்கு டெபுடி டிரான்ஸ்போர்ட் கமிஷனர் உத்தியோகம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. நாமதேவன் பற்றிச் சொன்னார்கள். திரு. நாமதேவன் அவர்கள் மீது ஏதோ கடுமையான குற்றச்சாட்டுகளெல்லாம் இருப்பதாகச் சொன்னார்கள். திரு. நாமதேவன் அவர்கள் யார் என்பது பல பேருக்குத் தெரியும். திரு. நாமதேவன் அவர்கள் திரு. மாணிக்கவேல் அவர்களுடைய மருமகன்—திரு. நாமதேவன் மேல் கடுமையான குற்றச்சாட்டு எதுவும் இல்லை. சில அயல்நாட்டுப் பிரயாணிகளைச் சரியாகக் கவனிக்கவில்லை என்று அந்த அயல்நாட்டுப் பிரயாணிகளிடமிருந்து வந்த குற்றச்சாட்டே தவிர வேறொன்றும் இல்லை. திரு. நாமதேவன் அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுத்ததில் விதிமுறைகள் எதுவும் மீறப்படவில்லை.

திரு ராஜதேவன் என்பவரை கிரைம்ஸ் டெபுடி கமிஷனராகப் போட்டதில் தவறு எதுவுமில்லை. அவர் ஐ.பி.எஸ். செலக்ட் லிஸ்டில் இருக்கிறார். எஸ்.பி. கிரேடில் உள்ளவர். டெபுடி கமிஷனர் (கிரைம்ஸ்) உத்தியோகமும் எஸ்.பி. கிரேடில் உள்ளது. ஆகவே, அதிலும் தவறு ஒன்றுமில்லை.

திரு. வைத்தியலிங்கத்தை டெபுடி டிரான்ஸ்போர்ட் கமிஷனராகப் போட்டதில் எந்த விதிமுறைகளும் மீறப்படவில்லை. அண்ணா அவர்கள் இல்லாத நேரத்தில் போட்டுவிட்டதாகச் சொன்னார்கள். மறைந்த முதல் அமைச்சர் அவர்களே அதை அங்கீகரித்திருக்கிறார்கள். திரு. வைத்திய லிங்கத்திற்கு 1969 மே மாதம் முதல் டெபுடி டிரான்ஸ்போர்ட் கமிஷனர் உத்தியோகத்திற்கும் அதிகச் சம்பளம் உள்ள D.R.O. உத்தியோகமும் ரெவினியூ டிபார்ட்மெண்டில் இயல்பாகவே அவருக்கு வந்ததே தவிர, அவருக்கு தனிச்சலுகை எதுவும் கொடுக்கப்படவில்லை. இதுபற்றி முன்பே அங்கத்தினர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதற்கு விளக்கமாக பதில் சொல்லியிருக்கிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, மக்களிடத்திலும் மத்திய ஆட்சியிலும் நம்பிக்கையிழந்த காங்கிரஸ் கட்சியினர் இந்தக் கழக அரசின்மீது நம்பிக்கை இல்லை என்கிற தீர்மானத்தைக் கொடுத்து, அருமை நண்பர் திரு. முனு ஆதி அவர்கள் சுட்டிக்காட்டியது மாதிரி, எந்தவித ஆதாரமும் இல்லாதபடி ஏதோ பேசவேண்டுமென்பதற்காக சில விஷயங்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், அருமை நண்பர் திரு. மார்டின் அவர்கள் 'இந்த அரசாங்கம் தவறான முறையில் சிலருக்கு உத்தியோ உயர்வு கொடுத்திருக்கிறது' என்று சொன்னதற்கு, ஆணித்தரமான விளக்கங்களை எடுத்துச் சொன்னார்கள்.

கடந்த முப்பதாண்டு காலமாக அதாவது 1937-லிருந்து 1967 வரைக்கும் இடையில் சில ஆண்டுக் காலம் தவிர—காங்கிரஸ் ஆட்சிதான் தொடர்ந்து நடந்துவந்தது. அந்த ஆட்சிக் காலத்தில் என்ன என்ன காரியங்கள் நடைபெற்றன, 1967-க்குப் பிறகு இன்றுவரை கடந்த மூன்றாண்டு காலமாக நாட்டிலே எந்தவிதமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதெல்லாம் மக்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த மக்களிடத்தில் நம்பிக்கையிழந்த காங்கிரசார், இந்த மன்றத்தில் ஏதோ ஆதாரபூர்வமாக, நாட்டிலே மக்கள் வாழ முடியவில்லை, உணவுக்கு வழி இல்லை, உடை கிடைக்கவில்லை, வீட்டு வசதி இல்லை என்கிற மாதிரியான சில குற்றச்சாட்டுக்களைச் சொல்வார்கள் என்றால் மக்கள் மன்றத்தில் அவர்களுக்கு மதிப்பு இருக்கும், மரியாதை இருக்கும். ஆனால், ஏதோ பேச வேண்டும் என்பதற்காகப் பேசுகிறார்கள்.

அவர்களுடைய வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், பேசிப்பேசியே தான், அவர்கள் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கம் போயிருக்கிறார்கள். இனி மேல் பேசி பேசி, இந்த மன்றத்தைவிட்டே வெளியே போய்விடும் நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்பதை நான் வருத்தத்தோடு சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறேன் (சிரிப்பு).

ஏதோ உத்தியோக உயர்வுகளெல்லாம் யார் யாருக்கோ கொடுக்கப்பட்டதாக திரு. மார்டின் அவர்கள் இங்கே பேசினார்கள். கடந்த முப்பதாண்டுக் காலத்தில் காங்கிரஸ் ஆட்சியினர் எந்த எந்த அளவுக்கு யார் யாருக்கு உத்தியோகம் கொடுத்தார்கள்என்பதனை ஒருமாதிரியாக திரு. முனு ஆதி



அவர்கள் குறிப்பிட்டார்கள். முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்களுடைய பிள்ளைக்கு எங்கே உத்தியோகம் கொடுத்திருக்கிறார்கள் என்பதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்தோ வேறு யாரிடமிருந்தோ எந்த விதமான பதிலும் இதுவரைக்கும் வரவில்லை, வரவும் முடியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திரு. கக்கன் அவர்களுடைய மகனுக்கு உத்தியோகம் கொடுக்கப்பட்டது, அவருடைய படிப்புத் தகுதி அடிப்படையில் கொடுக்கப்பட்டது. ஆனால், அமைச்சராக இருந்த திரு. கக்கன் அவர்களுடைய மகன் என்ற காரணத்திற்காக அவருக்கு உத்தியோகம் கொடுக்கப்பட்டது என்று நீங்கள் சொல்வீர்களானால், அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, திரு. கக்கன் அவர்களுடைய மகனுக்குத் தகுதியும் இருந்திருக்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதிலே 'லாம்' என்ன? 'இருந்திருக்கலாம்' என்று சொல்லாமல் தெளிவாகச் சொல்லவேண்டும். திரு. கக்கன் மந்திரியாக இருந்தார், என்ற காரணத்திற்காகத்தான் அவருடைய மகனுக்கு உத்தியோகம் கொடுக்கப்பட்டது என்று நீங்கள் சொன்னால், இப்போதே உத்தியோகத்தை ராஜினாமா பண்ணச் சிபார்சு செய்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தகுதியிருந்தால், மந்திரியின் மகனாக இருந்தாலும் உத்தியோகம் கொடுக்கலாம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் ஒத்துக்கொள்ளுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒத்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதை ஒத்துக்கொள்வதாகச் சொல்கிறார்கள். அதைப்போல் மந்திரிகள் அல்லது அவர்கள் உறவினர்களுக்குத் தகுதி அடிப்படையில்தான் உத்தியோகங்கள் தரப்பட்டிருக்கின்றன.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** போலீஸ் இலாக்காவில் டெபுடி கமிஷனர் உத்தியோகத்திற்கு . . . .

**திரு பி. ஜி. கருத்திருமன் :** திரு. கக்கன் மகனைப்பற்றிச் சொல்லிவிட்டு வேறு இடத்திற்குப் போய்விட்டார்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** அதற்காகத்தான் நான் பதில் சொல்கிறேன். அதற்குள் கக்கன், சுப்பன் என்று . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கக்கன், சுப்பன் என்று சொன்னதை வாபஸ் வாங்க வேண்டும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** திரு. மார்டின் அவர்கள் சொன்னது மாதிரி இந்த அரசாங்கத்தில் சில பேருக்குப் பதவி உயர்வுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அதுவும் விதிமுறை

களுக்கு உட்பட்டுத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, விதிமுறையை மீறி எதுவும் கொடுக்கப்பட்டது இல்லை. விதிமுறையை மீறிக் கொடுக்கப் பட்டிருக்குமானால், பாதிக்கப்பட்டவர்கள் வழக்குமன்றத்திற்குப் போக வேண்டும், அதற்குரிய வக்கீலாக ஆஜராக திரு. மார்டின் அவர்களுக்கும் கூட உரிமை இருக்கிறது. ஆனால், பழைய காங்கிரஸ் அரசாங்கத்தில் முன்பு எம்.எல்.ஏ. ஆக இருந்த ஒருவருடைய கணவர் ஒரு சாதாரண குமாஸ்தாவாக இருந்தவர் அந்த உத்தியோகத்திற்கு சீனியாரிடியையும் மீறி, எஜுகேஷனல் க்வாலிபிகேஷனையும் மீறி, ஒரு கெஜட் போஸ்ட் கொடுக்கப்பட்டது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறுக்க முடியாது. அதுமாத்திரமல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பெயரைச் சொல்லுங்கள்.

திரு. ஏ. வி. ஆசைத்தம்பி : திருமதி ராஜாத்தி அவர்களுடைய கணவர், குஞ்சிதபாதம் அவர்கள்.

அடுத்தபடியாக எஸ்.எஸ்.எல்.சி. தகுதியுள்ள அதிகாரி ஒருவர், ஐ.ஏ. எஸ். அதிகாரி அளவுக்கு காங்கிரஸ் ஆட்சியில் உயர்த்தப்பட்டார். இதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மறுக்க முடியாது.. (ஓர் உறுப்பினர்: பெயரைச் சொல்லுங்கள்) அவர் பெயர் திரு. வெங்கடாசலபதி. (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு).

அடுத்தபடியாக, பி.ஏ. தேறாத ஒருவரை, அவர் காங்கிரஸ் தியாகி என்ப தற்காக உத்தியோகத்திற்குக் கொண்டு வந்து, ஐ.ஏ.எஸ். ஆக உயர்த்தியதும் காங்கிரஸ் ஆட்சியில்தான், கழக ஆட்சியில் அல்ல என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணர வேண்டும். அவருடைய பெயரை வேண்டுமானால் சொல்கிறேன்.

கடந்த முப்பதாண்டுக் காலத்தில் நீங்கள் செய்திருக்கிற ஒவ்வொரு காரியமும், ஒவ்வொரு செயலும் விதிமுறைகள் மீறப்பட்டு, க்வாலிபிகேஷன் இல்லாதவர்களுக்கெல்லாம் பதவி உயர்வுகள் கொடுக்கப்பட்ட தன்மைகளாகவே இருக் கின்றன.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, முன்னால் இருந்த தவறுகளை யெல்லாம் எடுத்துக் காட்டுகிறார்கள். தவறு நடந்ததோ, இல்லையோ நான் அந்த ஆட்சி எக்சிக்யூடிவ் ஆபீசில் இல்லை. அவர்கள் தவறு செய்தார்கள், ஆகவே, நாங்களும் தவறு செய்கிறோம் என்பதை நீங்கள் இப்போது ஒப்புக் கொள்கிறீர்களா? நீங்கள் செய்கிற தவறுகளை நீக்குவதற்காகத்தானே நாங்கள் வந்திருக்கிறோம். திருடனைக் கொண்டுபோய் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்னால் நிறுத்தினால் 'அவன் திருடினான், இவன் திருடினான்' என்று கேட்டால் யார் திருடன் என்று அவனே கேட்பது போலாக இருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 'நாங்கள் திருடவில்லை' என்பதை சொல்லிவிட்டுத்தான் பிறகு சொல்கிறோம். நண்பர் ஆசைத்தம்பி அவர்கள், திரு. மார்டின் அவர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் கூறிவிட்டார் என்று சொல்லிவிட்டுத்தான், சொன்னார்கள். நீங்கள் ஆட்சியை எப்படி நடத்தினீர்கள் என்பதை நண்பர் ஆசைத்தம்பி மறந்துவிடவில்லை.



திரு. பி. ஜி. கருத்திருமன் : நீங்கள் என்னவற்றைத் திருத்தினீர்கள். பழைய அமைச்சர்கள் தவறு செய்திருந்தால், குற்றத்தைச் செய்திருந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள். ஆட்சிதான் இப்பொழுது உங்களிடம் இருக்கிறதே, பைல்கள்தான் உங்களிடம் இருக்கிறதே, நடவடிக்கை எடுங்கள். காங்கிரஸ் ஆட்சியில் இத்தனை ஊழல்கள் நடந்திருக்கின்றன, இத்தனை அருகதையற்றவர் களுக்கு உத்தியோக உயர்வுகள் கொடுக்கப்பட்டன என்பதை எடுத்துக்காட்டி இங்கே நீங்கள் நிரூபிக்க வேண்டும். ஏன் நீங்கள் அதைச் செய்யவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மூன்று பேருக்கு தவறான முறையில் உத்தியோக உயர்வு கொடுக்கப்பட்டது என்று திரு. ஆசைத் தம்பி அவர்கள் சொன்னார்கள். அதை இல்லையென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறுக்கிறார்களா?

திரு. பி. ஜி. கருத்திருமன் : நாங்கள் மறுக்கிறோமோ, இல்லையோ, அது எந்த நிலையில் கொடுக்கப்பட்டது என்பதை உணர வேண்டும்; அவைகள் எல்லாம் உத்தியோக விதிகளுக்கு புறம்பாகக் கொடுக்கப்பட்டன என்று சொல்கிறார்கள். அப்போது எதிர்க்கட்சியில் நீங்கள் உட்கார்ந்துகொண்டிருந்தீர்களே, என்ன செய்தீர்கள்? அப்போதே இதைச் சொல்லியிருக்கலாமே? இந்த இந்த விதிகளுக்கு புறம்பாக இன்னின்னாருக்கு பதவிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அப்போது சொல்லியிருந்தால் அந்த மந்திரியை வெளியே அனுப்பி யிருக்கலாமே?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நாங்கள் கேட்டோம். நீங்கள் கேட்கவில்லை. நீங்கள் மெஜாரிட்டியாக இருந்தீர்கள், மக்களே பார்த்து உங்களை வெளியே அனுப்பிவிட்டார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நீங்களும் அப்படி இருந்தால், உங்களையும் மக்கள் வெளியே அனுபபிவிடுவார்கள் (காங்கிரஸ் தரப்பில் கையொலி).

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கண்டிப் பாக ஞாபகததில் வைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் அப்படி கனவுகூட காணாதீர்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். (ஆளும் கட்சித் தரப்பில் கை யொலி).

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், இங்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, இந்த மன்றத்திலிருந்து வெளியே நழுவுவதற்கு ஏதாவது வழிகள் இருக்கின்றனவா என்று நேற்றிலிருந்து முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். (ஆளும் கட்சித் தரப்பினர் கையொலி) நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்தவர்கள், இந்தப் பேரவையிலே உட்கார்ந்துகொண்டு, நீங்கள் சொன்ன கருத்துக்களுக்கு நாங்கள் என்ன பதில் சொல்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். நாங்கள் சொல்கிற கருத்துக்களை தாங்கக்கூடிய சக்தியோடு நீங்கள் இருக்க வேண்டும், இல்லாவிட்டால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, எதையும் தாங்கும்படியான சக்தி எங்களுக்கு இருக்கிறது. உங்களுக்குத்தான் ஆட்டம் கண்டிருக்கிறது. நீங்கள் செய்திருக்கிற செய்கிற தவறுகளையெல்லாம் எடுத்துக்காட்ட ஆறு மாதத்திற்கு ஒரு தரம் நிச்சயமாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவர் அவர்களே, எதையும் தாங்கும் இதயம் உங்களுக்கு இருந்திருந்தால், மூன்று வருட காலத்திற்குள்ளாக நீங்கள் நல்ல எதிர்க்கட்சியாக நாட்டிலே வளர்ந்திருக்க முடியும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் உங்களுக்குப் பேசுவதற்கு எந்த விஷயத்தையும், எந்தப் பிரச்சினையையும் விட்டுவைக்க முடியாதபடி, நாங்கள் ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிறோம். மக்கள் மத்தியில் நீங்கள் படி அரிசியைப்பற்றியோ, பஞ்சத்தைப்பற்றியோ வாய்திறந்து பேச முடியவில்லை. காரணம் கடந்த கால ஆட்சியைவிட, இப்பொழுது எங்கள் ஆட்சியில் கடந்த மூன்று வருடங்களில் உற்பத்தி பன்மடங்கு பெருகியிருக்கிறது. காங்கிரஸ ஆட்சியில் மக்கள் அரிசிக்கு க்யூ வரிசையில் நின்று அல்லல்பட்ட நிலைமை மாறி, இன்றைக்கு பிளாட்பாரங்களில் எல்லாம் தாராளமாக, தரமான அரிசி கிடைப்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறுக்க முடியாது.

மூன்று ஆண்டுக் காலத்திலே மக்கள் சுபிட்சமாக வாழ்கிறார்கள். பொது மக்களிடத்திலே நீங்கள் போய் ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு வழி இல்லாமல், நாங்கள் மக்களுடைய வாழ்க்கையை உயர்த்திக் கொடுத்து விட்டோம். உங்களுக்கு வேறு வழி இல்லாத காரணத்தினால் இந்த நம்பிக்கையில்லாத் திர்மானத்தை இந்தப் பேரவையில் கொண்டு வந்திருக்கிறீர்கள். நண்பர் முனு. ஆதி அவர்கள் சொன்னதுபோல், நீங்கள் ஆதாரத்தோடு பேசினால் கட்டாயம் இந்தப் பக்கத்திலிருந்து பதில் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, நீலகிரி கலெக்டரைப்பற்றி, திரு. மார்டின் அவர்கள் 'ஐந்து வருடமாக அவரை அங்கேயே வைத்திருக்கிறார்கள்' என்று பேசினார்கள்.

THIRU T. MARTIN : Sir, I did not say so . . . .

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : நீலகிரி மாவட்டக் கலெக்டர் நான்கு வருஷமாக இருப்பதற்காக திரு. கருத்திருமன் அவர்கள் என்ன பேசினார்கள் என்று புரியவில்லை. அவருடைய காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நான்கைந்து வருஷமாக கலெக்டர் ஒரே மாவட்டத்தில் தொடர்ந்து இருந்தார்கள் என்பது அவருக்குத் தெரியுமா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : காங்கிரஸ்காரர்கள் அப்படி ஆட்சி நடத்தினார்கள் என்றால், அவர்கள் நடத்திய மாதிரியேதான் நீங்களும் ஆட்சியை நடத்துகிறீர்களா ? அவர்களுடைய வழியிலேதான் நடத்துகிறீர்களா ?

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவர் அவர்களே, ஒரு ஆளை ஒரு இடத்தில் தொடர்ந்து வசித்திருப்பதும், ஒரு ஆளை வேறு இடத்திற்கு மாற்றுவதும் மக்களின் விருப்பத்தைப் பொறுத்தே நடைபெறுகிறது. 'ஒரு அதிகாரி



தொடர்ந்து இங்கேயே இருக்க வேண்டும்' என்று அங்குள்ள மக்கள் விரும்பினால் அந்த மக்களின் விருப்பப்படியே அவர் அங்கே தொடர்ந்து பணியாற்றுகிறார். 'இந்த அதிகாரி தேவையில்லை' என்று அங்குள்ள மக்கள் விரும்பினால், மக்களின் விருப்பப்படியே அவரை இன்னொரு இடத்திற்கு மாற்றுகிறோம். மக்களின் விருப்பப்படிதான் காரியம் நடக்கிறது. நீங்கள்தான் இந்த அரசின்மீது நம்பிக்கையில்லையென்று தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். உங்களைப் பார்த்து மக்கள் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

அடுத்தபடியாக, உணவு இலாகாவைப் பொறுத்தவரையில், பெரிய பெரிய அளவில் லட்சக்கணக்கில் நஷ்டம் வந்துவிட்டது என்ற புள்ளிவிவரத்தைக் காட்டிப் பேசினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரே வரியில் பதில் சொல்லிவிட்டார்கள். 'எல்லாக் காரியத்திற்கும் டெண்டர் கேட்டு விட்டுத்தான் காரியம் நடைபெற்றது' என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அதற்குமேல் பேசுவதற்கு வழியில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

100 ரூபாய் விற்கக்கூடிய சரக்குக்கு 50 ரூபாய்தான் டெண்டரில் வருகிறது. அரசாங்கம் 50 ரூபாய்க்கு அந்தப் பொருளை விற்றால் நஷ்டம்தான் வரும். 100 ரூபாய் உள்ள சரக்கு டெண்டரில் 50 ரூபாய்க்குத்தான் கேள்வி வருகிறது. அந்தப் பொருள் 60 ரூபாய், 70 ரூபாய் என்பதற்கு விற்றால் அரசாங்கத்திற்கு லாபகரமாக இருக்கும்.

நண்பர் மார்டின் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வியாபாரிகள் பல தந்திர உபாயங்களைச் செய்கிறார்கள். ஒரு பொருள் ஏலம் வருகிறது என்றால், எல்லா வியாபாரிகளும் ஒன்று சேர்ந்துகொண்டு, விலை ஏறுதபடி செய்கிறார்கள். குறைந்த தொகைக்கே டெண்டர் கொடுக்க வேண்டியிருக்கிறது. பின்பு லாபத்தில் எல்லோரும் பங்கு போட்டுக்கொள்கிறார்கள். வியாபாரியாகிய எனக்கு இது தெரியும். நண்பர் மார்டின் அவர்களுக்கு இந்தச் சங்கதி தெரியாது. உங்களுடைய பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கும் இது நன்றாகத் தெரியும். ஏனெனில் அவர் என்னுடைய ஊரைச் சேர்ந்தவர்.

ஆக, இம்மாதிரியாக வியாபாரிகள் கூட்டுச் சேர்ந்து அரசாங்கத்தை மோசம் பண்ணவேண்டும் என்கிற காரியத்தில் இறங்குகிறபோது இதைச் சம்பந்தப்பட்ட அமைச்சர் உணர்ந்து அந்த விலைக்குக் கொடுக்கக்கூடாது மேலே ஐந்தோ, பத்தோ லாபம் வருவதுபோலத்தான் விற்கவேண்டும் என்று முடிவு செய்திருப்பாரேயானால் அதற்காக அவரை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராட்ட வேண்டுமே தவிர—நேற்றுமுன்தினம் டெல்லியில் பாராளுமன்றத்தில் ராஜாக்கள் பின்னால் போனார்களே அதுபோல இங்கே வியாபாரிகளின் பின்னால் போகக் கூடாது. போகிறார்கள் என்றால் நாம் என்ன சொல்வது ?

மேலும் இதைப்பற்றி எல்லாம் பேசுவதற்கு இதுதானா இடம்? பேச வேண்டிய இடம் ஒன்று இருக்கிறது—பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி இருக்கிறது. அதன் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் தான். இந்த மாதிரியாக

டெண்டர் கோரப்பட்டதா, டெண்டர்கள் வந்திருந்தால் என்ன அதிக விலைக்கு வந்திருக்கிறது, அந்த டெண்டர் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால் காரணம் என்ன, தனியாருக்கு விற்கப்பட்டிருக்கிறது என்றால் டெண்டர் அமௌண்டுக்குக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டிருக்கிறதா என்பதை எல்லாம் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நடவடிக்கை எடுக்க வழி யிருக்கிறது. அப்படி எல்லாம் செய்யாது இங்கே பெரிய காரியமாக தேவையில்லாத விஷயங்களைப் பேசி—பெரிசுபடுத்தி நாட்டுமக்களுக்குக் காண்பிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் இந்தமாதிரி பேசப்படுகிறதே தவிர வேறு என்ன? உருப்படியாக எந்தக் குற்றச்சாட்டை வைத்தார்கள்?

'கார் கொடுக்கிறார்கள், கார் கொடுக்கிறார்கள்' என்று திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். சென்னையில் வேண்டுமானால் எல்லாக் காரியாலயங்களும் ஓரிடத்தில் இருக்கின்றன. கிராமப்புறங்களை எடுத்துக் கொண்டால் ஒவ்வொன்றுக்கு ஒவ்வோர் இடம் போகவேண்டியிருக்கிறது. தொகுதி மக்கள் தங்களுடைய பிரதிநிதிக்குக் கார் கொடுத்து தங்களுடைய காரியங்களைச் செய்துகொள்வதில் தவறு என்ன? தங்கள் தொகுதிக்கு நலம் ஏற்படுவதற்காக தங்கள் தொகுதி உறுப்பினருக்குக் கார் கொடுத்து பல இடங்களுக்கும் போகச் சொல்லி தங்கள் தொகுதி காரியங்களை நிறைவேற்றிக்கொள்வதில் என்ன தப்பு இருக்கிறது? இதை வைத்துக் கொண்டு என்ன சித்துவிளையாட்டு விளையாடுகிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: நீங்கள் சித்து விளையாட்டு விளையாடுகிறீர்கள். அதிகாரிகளுக்குக் கொடுத்தால் என்ன தப்பு? நான் கேட்கிறேன். அன்பளிப்பு என்று எத்தனைபேர்கள் கார் வாங்கி யிருக்கிறார்கள்? அவை சொத்து விவாக் கணக்கில் வந்திருக்கிறதா? அந்தக் கார்கள் என்ன ஆகியிருக்கின்றன? அவை எல்லாம் என்ன தப்பா என்றால் அவை மாபெரும் தப்பு.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி: மாறும் தப்பைத் தான் எடுத்துச் சொல்ல வேண்டும். ஆதாரமில்லாது எங்களுக்கு டெல்லியில் இருந்து புகார்கள் வருகின்றன, டெல்லியில் இருந்து எழுதியிருக்கிறார்கள். டிரஸ்ட் என்று . . .

திரு. பி. ஜி. கருத்திருமன்: நான் ஆதாரத்தோடுதான் எடுத்துச் சொன்னேன். டீட் இருக்கிறது. டிரஸ்ட் இல்லை என்று சொல்லட்டும், அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று சட்டசபையில் சொல்லட்டும்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி: நான் சொல்வதன் நோக்கம் ஒருவர் அமைச்சராக வந்த பிறகு அதிகாரத்தைப் பயன்படுத்தி இன்ன இன்ன காரியங்களைச் செய்து லாபம் அடைந்திருக்கிறார்கள் என்பதை நிரூபித்தால் பயனுள்ளதாக இருக்கும். கடந்த கால விஷயங்களைப் பற்றி, தனி நபர் விஷயங்களைப் பற்றிப் பேசி இந்த மன்றத்தின் மதிப்பைக் குறைக்கக் கூடாது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: மதிப்பை நீங்கள் தான் குறைக்கிறீர்கள். பழைய காலத்திலே ஒரு மனிதன் திருடனாக இருந்தால், க்ரிமினல் குற்றவாளியாக இருந்தால் பரவாயில்லை என்று அமைச்சராகப்போட்டு விட முடியுமா?



மனிதத் தன்மை இருக்கவேண்டாமா? உயர்ந்தவர்களை, உள்ளத் தூய்மை உள்ளவர்களை, நேர்மையானவர்களைத் தான் போடவேண்டும் என்பதற்கு விதி இருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திருடன் இருக்கக்கூடாது என்றீர்கள். டிரஸ்டு வைத்தவன் கூட இருக்கக்கூடாது என்பது உங்கள் கருத்தா?

திரு. பி. ஜி. கருத்திருமன்: டிரஸ்டு என்று வைத்துவிட்டு அந்த டிரஸ்டு எதற்காக ஏற்படுத்தப்பட்டதோ அதற்கு அந்தப் பணம் போகாது அதன் பணத்தை துஷ்பிரயோகம் செய்துகொள்பவர்கள் கூட யோக்கியமானவர்கள் தானா? மத்திய சர்க்காரில் இருந்தே அவருடைய நடவடிக்கை சரியல்ல என்று அறிவித்திருக்கிறார்கள். டிரஸ்டு என்று வைத்துக்கொண்டு அதன் பணத்தை டிரஸ்டுக்கு உபயோகப்படுத்தாமல் வேறுவழிகளில் உபயோகப்படுத்தியிருக்கிறார் என்று ஜெட்ஜ்மெண்டே இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நேற்று அந்த நீதிபதியின் தீர்ப்பில் இருந்து ஒரு பகுதியை வாசித்தார் எதிர்க்கட்சித் தலைவர். அப்போதே நான் விளக்கம் சொன்னேன். அவர் குறிப்பிட்ட பகுதி என்னிடத்தில் இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது எல்லாம் நீதிபதியின் தீர்ப்பு அல்ல. தீர்ப்பு வேறு. ஆனால் சம்மிங் அப் செய்கிறபோது சிலவற்றைச் சொல்லியுள்ளார். ஒரு அறக்கட்டளையில் இருந்து பணத்தைக் கையாடல் செய்ததாக ராமரத்தினம் என்பவர் மீது வழக்கு. அவர் அந்தப் பணத்தை 1967 தேர்தலுக்குச் செலவிட்டதாகச் சொன்னார். அந்த வாதத்தை நீதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அதில் ஒரு சாட்சியாக வந்தேன். நான் சொன்ன சாட்சியத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதற்காக நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார். 'The suggestion of the appellant is . . .' என்பதாக சம்மிங் அப் செய்து அந்தக் குற்றவாளிக்கு ஒரு வருஷ தண்டனை அளித்திருக்கிறார். அவர் தீர்ப்பு என்று சொல்லியிருப்பது இதுதான். 'The evidence of P.W. 7 must be adopted' ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் வாசித்தது The suggestion of the appellant என்பதுதான். இது குற்றவாளி—அப்பலன்ட்—குறிப்பிட்டது என்று நீதிபதி சொல்லியிருக்கிறாரே தவிர இது தீர்ப்பு அல்ல. (

திரு. பி. ஜி. கருத்திருமன்: நான் படித்தது பூராவையும் படியுங்கள் . . .

That the moneys were taken and then used for election purposes...

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தொடங்கும்போது

'The suggestion of the appellant is that the instructions of P.W. 7 to accused 1 to draw a good portion of the amount in small denominations varying from one to five rupees . . . .'

என்று அந்தக் குற்றவாளி வாதிடுகிறார். அவ்வண்ணம் பணத்தை எடுத்துத் தேர்தலுக்குச் செலவிட்டிருப்பதாக வாதிடுகிறார், என்பதாக வழக்கைப் பற்றி எடுத்துச் சொல்லிவிட்டு The evidence of P.W. 7 must be adopted and accepted'

என்று நான் சொன்ன சாட்சியத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதாகத் தீர்ப்புச் சொல்லியிருக்கிறார். இதுதான் தீர்ப்பு. நான் கொடுத்த சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவருக்கு ஒரு வருஷ தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இங்கே எதிர்க்கட்சித் தலைவர் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் அவரது பத்திரிகையில் கறுப்பு பார்டர் போட்டு கருத்திருமன் சொல்கிறேன்— அறக்கட்டளைக்காக வைக்கப்பட்ட பணத்தை எடுத்து தவறான வழியில் நான் செலவிட்டிருக்கிறேன் என்பதை அவர்கள் வெளியிடட்டும்—அதை வைத்தே அவர் மீது மானபங்க வழக்குத் தொடர்ந்து இவருக்கும் ஒரு வருஷ தண்டனை வாங்கித்தர என்னால் முடியும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, இந்த மிரட்டலுக்கு எல்லாம் பயந்துவிடுகிறவன் நான் அல்ல. மத்திய சர்க்காரில் இருந்தே வந்திருக்கிறது. நான் சொல்கிறேன் 'the creation of such trusts is an evasion of income-tax'. என்பதாக. இல்லை என்று அவர் நிரூக்கட்டும். முதலில் இல்லை என்றார்கள். வெளியில் வந்து பேசுவது என்ன? எங்கே வேண்டுமானாலும் பேசத் தயாராய் இருக்கிறேன். மறுபடியும் 'So it is not applicable to charitable purposes' என்பதாக மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இப்போது கோர்ட்டில் இருக்கிறது. இது மாரல் டர்ப்பிட்யூட்.

அவர் அசகாய சூரர்—பாரட் லா. நான் சாதாரண விவசாயிதான். தப்பைப் பார்க்கிறபோது தப்பு என்று சொல்கிறேன். எனக்கு என்ன பயம்? இதில் என் மானமே இருக்கிறது. அமைச்சர் எனக்கு எச்சரிக்கை விடுகிறார். இதையே நான் அவருக்கு எச்சரிக்கையாக விடுகிறேன் அவர்கள் செய்திருக்கிற தவறு நன்றாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

ற் பகல் 12–30

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தங்களுடைய மானமே இருக்கிறது என்று சொன்னார்கள். நாங்கள் எதிர்க்கட்சித் தலைவருடைய மானத்தைக் காப்பதிலே மிகுந்த ஒத்துழைப்புத் தருவோம். இரண்டு பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னார்கள். ஒன்று

(The hon. Member, Thiru Asai Thampi also stood in his seat.)

THIRU K. VINAYAKAM: Sir, on a point of order. How can two Members stand?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விநாயகம் அவர்கள் அமைச்சர் அவர்கள் எழுந்து நின்று பேசும்போது இன்னொரு உறுப்பினர் எழுந்து நிற்கலாமா என்று கேட்டீர்கள். நீங்கள் எப்படி எழுந்திருக்கலாம்? உட்காருங்கள்.

THIRU K. VINAYAKAM: Then how can I draw your attention . . . .

Mr. DEPUTY SPEAKER: The hon. Member can simply raise his hand and draw my attention.





Thiru K. VINAYAKAM: How can I be sure that I will draw your attention in that way?

Mr. DEPUTY SPEAKER: Surely you can.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பிரச்னையை விவாதிப்பதில் சுவையோடு விவாதிப்போம், சூடில்லாமல் விவாதிப்போம். நம்முடைய எதிர் கட்சித் தலைவர் அவர்கள் இரண்டு பிரச்னைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒன்று கிரிமினல் வழக்கு. அவருடைய நிறுவனத்தில் பணிபுரியும் ஒருவர் பணத்தைத் திருடினார் என்று குற்றச் சாட்டு. அது மிஸ்அப்ரோபிரியேஷன். அதை வழக்கை விசாரித்து அவர் குற்றவாளிதான் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்ன சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். என்று சொன்னார்கள்.

மறுபடியும் வந்திருக்கிற போது அறக் கட்டளைகளைப் பற்றி ஒரு வழக்கு பற்றிச் சொன்னார்கள். இது முன்னாலேகூட வந்திருக்கிறது. இரண்டு காங்கிரஸ் கட்சிகள் இல்லை அப்போது. ஒரு காங்கிரஸ் கட்சிதான் மத்தியிலே ஆட்சியில் இருந்தது. அந்த ஆட்சிதான் அறக்கட்டளை நியமனம் தான் என்று அந்த முறைக்கு விதிவிலக்கு கொடுக்கலாம் என்று அவர்களது உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின் அதைச்செய்யவில்லை நாங்கள் போடவில்லை. அவர்கள் ஒன்றாக இருந்த காலத்திலே போடப்பட்டது. இப்போது அவர்கள் சொன்னார்கள் மறு பரிசீலனை செய்வதாக. நன்றாகச் செய்யட்டும் ஆட்சேபணை இல்லை. நீதி மன்றத்திலே, நீதி மன்றம் பார்த்து மறு பரிசீலனை செய்து அந்த இன்கம்டாக்ஸ் அதிகாரிக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொன்னால் அதையும் சந்திக்க கொஞ்சம்கூட இந்த அரசு தயக்கம் காட்டாது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, அவருக்காக அரசாங்கமே தயாராக இருக்கிறது என்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த அமைச்சரவை அல்லது இந்த அமைச்சர் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது என்று சொன்னால் நான் சொல்லுகிறேன் நான் அத்தனை குறிப்புகளையும் படித்துப் பார்த்தேன். வழக்கைப் படித்துப் பார்த்தேன். வாதி கொடுத்ததைப் படித்துப் பார்த்தேன். பிரதிவாதி கொடுத்ததைப் படித்துப் பார்த்தேன், எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு யார் தவறான தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்று துருவித் துருவிப் பார்த்ததற்குப் பிறகு தெரிந்து கொண்டேன். எல்லாமே சட்டபடி சொல்லக்கூடிய உத்தரவுதான், அந்த உத்தரவு மறுபரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: முதலிலே எக்சம்ஷன் மறுக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் ஏற்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் ஏற்றது தப்பு என்று சொல்லப்பட்டு இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த இரண்டையும் செய்தது சாட்சாத் காங்கிரஸ் ஆட்சிதான். இந்த ஆட்சிக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதே காங்கிரஸ் ஆட்சிதான் இப்போது விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதாவது இந்திரா அம்மையார் ஆட்சியை நன்றாக நடத்துகிறார்கள் என்று ஒத்துக் கொண்டீர்களே அதற்கு மகிழ்ச்சி.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நூற்றுக்கு நூறு தப்பாக இருந்தால் அங்கே எப்படி உட்கார்ந்து கொண்டிருக்க முடியும். ஏதோ 1, 2 சரியாக இருக்கலாம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆக, இப்போது நம்முடைய இந்திரா அம்மையாரை ஆதரிக்கத் தொடங்கிவிட்டீர்கள். நண்பர் பூவராகனுக்கு மகிழ்ச்சியாக இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நேற்றே நான் முதலமைச்சரிடம் கூடச் சொன்னேன். நான் சொன்னதைச் செய்தால் மாலை போடுகிறேன். என்று.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வருமான இலாகாவிலே உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள் நீதி மன்றத்திலே இருக்கிறது. அமைச்சர் அவர்களைப் பற்றி மாரல் டர்பிட்யூட் என்று சொல்லுகிறார்கள். திரு. ஆதித்தனார் அவர்களைப் பற்றிப் பேசுவதானால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மிக்க மகிழ்ச்சி.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர் எனக்கு நண்பர்தான். சிங்கப்பூர் சென்றிருந்தபோது அவரைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டேன். அவரது அறிவு, அவரது திறமை பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். நன்றாகப் பேசுகிறார். நானும் நன்றாகப் பேசுகிறேன். ஆனால் கொள்கையில்தான் வித்தியாசம். அவர் கொஞ்சம் அப்படி, இப்படி. தமிழுக்காகப் பாடுபட்டவர். நாம் தமிழன் என்னும் பட்டம் பெற்றவர். எத்தனையோ கட்சிகளில் இருந்து அனுபவம் பெற்றவர்கள். நான் தப்பு செய்தால் விட்டு விடுவார்களா. தவறு இருந்தால் மூடி மறைக்கக் கூடாது. சந்தேகம் இருக்கிறது என்று நான் சொன்னேன். அதைச் சட்டமன்றத்தில் கூறுவது என்னுடைய கடமை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் அவர் நண்பர். நம் எல்லோருக்கும் அவர் நண்பர். வருமான வரி இலாகாவிலே ஒரு அறக்கட்டளையைப் பற்றி விளக்கம் கேட்டிருக்கிறார்கள். அவ்வளவு தான்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சாதாரண அறக்கட்டளை அல்ல. ஒரு லட்சம் 2 லட்சத்துக்கும் பொருந்தும், 5 ரூபாய்க்கும் பொருந்தும். சும்மாவா இன்வெஸ்டிகேஷனுக்கு விட்டிருக்கிறார்கள். ஏன் இன்வெஸ்டிகேஷனுக்கு வந்தது என்பது தான் பிரச்சினை.



மாண்புமிகு திரு. செ. மாதவன் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு விவரம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம்முடைய வருமான வரி சட்டத்திலே எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஏதாவது பணி புதிய தகவல்கள் கிடைத்தால அதை மீண்டும் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அந்த முறையிலேதான் இவர் சட்டப்படி வாதாடி இருக்கிறார்கள். அமைச்சராக இருந்தால் அந்த உரிமை கூட எங்களுக்குக் கிடையாதா? அறக்கட்டளை எழுதி வைத்துவிட்டு இப்போது தனியாக மக்களுக்குச் சேவைசெய்து கொண்டிருக்கும் அவர்களைப் பார்த்து பேசுகிறீர்கள். எனவே அவருக்கு மாசு கற்பிப்பது நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படி ஒரு இல்லாத விஷயத்தைப் பற்றி விவாதித்தார்கள். அந்தக் கமிஷனரை ஏன் மாற்றவில்லை என்று கேட்டார்கள். ராணிப்பேட்டை சந்தையினுடைய குத்தகையை டெண்டர் மூலமாக எடுத்திருக்கிறார்கள். இந்த கமிஷனர் வருவதற்கு முன்னால் அந்த குத்தகை 13 ஆயிரத்துக்கு மேல் ஏறியதே இல்லை. ஆனால் இவர் வந்ததற்குப் பிறகு அதை ஓப்பன் டெண்டர் வைத்து 78 ஆயிரம் ரூபாய்க்கு அந்தக் குத்தகையை விட்டிருக்கிறார்கள். அதற்காக திரு கருத்திருமன் கட்சிக்காரர்கள் பெட்டிஷன் எழுதியிருக்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதிலே தி.மு.க. காரர்களும் கையெழுத்திட்டு இருக்கிறார்கள்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : ஆக, அந்த அளவுக்கு நாமாக . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர்மேல் இருக்கிற புகார்—இதிலே தி.மு.க. கௌன்சிலர்களும் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆசைத்தம்பி கூறிய கருத்திருமன் கட்சிக்காரர்கள், தி.மு.க. காரர்கள் அல்ல பெட்டிஷனில் கையெழுத்திட்டவர்களைத்தான் குறிக்கும்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : ஆகவே ஏதோ பெரிய தவறு நடந்துவிட்டது ஆகவே நம்பிக்கையில்லை என்று சொல்வது சரியல்ல. நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அரிசி கிடைக்கவில்லை, பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன, அமைதி இல்லை, சட்டம் ஒழுங்கு இல்லை என்று மற்ற ராஜ்யங்களில் இருக்கின்ற தன்மைகளை இங்கே எடுத்துக்காட்டினார்கள் என்றால் அதற்கு நாம் பதில்சொல்ல முடியும். * இத்தனை ஆண்டுகாலமாக சோஷலிஸம் பேசிவிட்டு ராஜமானியத்திற்கு ஆதரவு தருகிறார்கள் என்றால் அது எவ்வளவு தூரத்திற்குப் போகும். எந்த அளவுக்குப் போகும்? ஆனால் நாங்கள் அப்படிச் செய்யவில்லை, காரணம் அண்ணா அவர்கள் எங்களுக்குக் கண்ணியத்தைக் கற்றுக் கொடுத்திருக் நீங்களும் அப்படி நடக்க முயற்சிக்க வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நாங்களும் நடந்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : இந்த மூன்று ஆண்டுக் காலத்திலே சட்டம், ஒழுங்கு இந்த ராஜ்யத்திலே இருப்பதுபோல் வேறு எங்கும் கிடையாது. அவ்வளவு அமைதியாக இருக்கிறது என்று உலகத்திலே உள்ளவர்கள் சொல்

கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அங்கே துப்பாக்கிச்சூடு, இங்கே துப்பாக்கிச் சூடு உங்கள் ஆட்சியிலே நடக்கிறதே என்று கருத்திருமன் பேசினார். இடதுசாரி கம்யூனிஸ்டுகள் பாவம் இப்போது கொஞ்சம் இடறி விழுந்து கொண்டிருக்கிறார்கள் . . . .

**திரு. என். சங்கரய்யா :** இடது சாரி கம்யூனிஸ்டுகள் இடறி விழ மாட்டார்கள். அவர்கள் சுதந்திரமாக மக்களுக்கு நன்மை செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** ரொம்ப சந்தோஷம். ரொம்ப சந்தோஷம். வரவேற்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் என் சந்தோஷத்தோடு வரவேற்கிறார்கள்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** அவர்களும் சேர்ந்து போலீஸ் அடக்குமுறை செய்கிறது என்று சொல்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்து நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எந்த அரசாங்கமாக இருந்தாலும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்குத் துப்பாக்கிச்சூடு, தடியடி நடத்தத்தான் செய்ய வேண்டும். ஆனால் நாங்கள் சுட்டதற்கும், நீங்கள் சுட்டதற்கும் வித்தியாசம் உண்டு. உங்கள் ஆட்சிக் காலத்தில் ஷூட் டு-கில் என்பதுதான் இருந்தது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் சுடுகிறபோது குண்டாக இருந்தது, அவர்கள் சுடுகிறபோது மாலையாக விழுகிறதா ?

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** எங்களுடைய ஆட்சிக் காலத்திலே உயிரைக் காப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே நடந்ததெல்லாம் கொல்வதற்காக சூடு.

நான் ஒரு உதாரணம் சொல்கிறேன். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது மாணவர்கள் ரயில் பெட்டிகளுக்குச் சேதம் விளைவித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். போலீஸ் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருந்தது. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் ரயில் பெட்டிகள் போனால் பரவாயில்லை, பெட்டிகள் செய்துகொள்ளலாம், ஒருவன் உயிர் போய்விட்டால் திரும்பப் பெறமுடியாது எனவே வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். சூட்டிலே இப்படிப்பட்ட அஹிம்சா தத்துவம் இருந்தது. காந்தியைப் பின்பற்றி வருகிறோம் என்று சொல்கிற அவர்களுக்குக் காந்தியைப்பற்றியே தெரியாத நிலையில் தென்னாட்டுக் காந்தியைப் பற்றி எப்படித் தெரிந்திருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அண்ணாதுரை ஆட்சியிலே ஒன்றும் சுடப்படவே இல்லையா ?

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** அது வேறு.

---

மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நடந்ததா, இல்லையா ? சுடப்பட்டு உயிர் போகவில்லையா ?

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** கருத்திருமன் அவர்களுக்குச் சட்ட ஞானம் உண்டு என நினைக்கிறேன். மார்டின் அவர்கள் சொல்வார்கள் சட்டத்திலே இருக்கிறது என்று. சிறிய உதாரணம் சொல்கிறேன். மாணவர்களுக்கும், பஸ் தொழிலாளர்களுக்கும் தகராறு நடந்த நேரத்தில் போலீஸ் கமிஷனர் ஒரு மாணவரை இப்படியா தாஜா பண்ணுவது என்று பத்திரிகையிலே வந்ததைக் காட்டினார்கள் ? சுட வேண்டாமா அடக்க வேண்டாமா என்று எதிர்க்கட்சித் தலைவர் அன்று கேட்டார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மாணவன் முன்னால் அல்ல, யாரோ ஒரு தடியன் இருந்தான். அவன் முன்னால் இருந்தார்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** மாணவனாக இருக்கட்டும், தடியனாக இருக்கட்டும், எல்லோரும் மனிதர்கள்தான். எந்த அளவுக்குச் சட்டம் ஒழுங்கு பராமரிக்க வேண்டுமோ, பராமரிக்க வேண்டும், அதற்குமேல் முடியவில்லையென்றால்தான் சுட வேண்டுமென்ற கொள்கையை வகுத்து இருக்கிறது. இது எந்த வகையிலே தப்பாக இருக்க முடியும். இந்த நாட்டைப் பொறுத்த வரையிலே ஒவ்வொரு கொள்கையையும் எடுத்துக் கொண்டு பார்த்தால் எந்த அளவுக்கு நல்ல ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது என்பது புரியும்.

இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் சமீபத்திலே தங்களுடைய தொழிற்சங்க வேலைகளிலே தொய்வு இருப்பதன் காரணமாக, நாங்கள் புதிய தொழிற்சங்கங்களைத் தொடங்கியிருப்பதன் காரணமாக அவர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மறியல் பண்ணப் போனவர்களைப் பிடிக்கலாமா என்று சங்கரய்யா அவர்கள் பேசினார்கள். முதலாளிகள் போனார்கள் ஏன் பிடிக்கவில்லை என்றார்கள். முதலாளிகள் மறியலுக்குப் போனால் அரசாங்கம் பிடிக்கத்தான் செய்யும். என்னுடைய கட்சிக்காரர்களாக இருந்தாலும் சட்டத்தை மீறினால் கைது செய்யப்படுகிறார்கள், உதாரணத்திற்கு விருதுநகர் சீனிவாசன் கைது செய்யப்பட்டார். எனவே இந்த நிலைமையிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தால் என்ன பொருள் ? இதன்மூலம் இந்த அரசாங்கம் கவிழ்ந்துவிடும், இந்த அரசாங்கம் போய்விடும் என்ற எண்ணம் இருக்குமானால் அவர்களுக்குச் சொல்கிறேன். 1972-லே இப்பொழுதாவது ராம்சுபாக் சிங்குக்குக் கடிதம் எழுதியிருக்கிறீர்கள். முன்பு இந்திராவுடன் தொடர்பு இருந்தது. அந்த ராம்சுபாக் சிங்கிற்கு எழுதிக்கூட முடியாத அளவுக்கு டெல்லியிலே நீங்கள் தொடர்புகொள்ள ஆள் இருக்காது. அந்த அளவுக்குத்தான் உங்கள் நிலைமை இருக்கிறது. இனிமேல் இங்கே வந்து உட்காரலாம் என்ற எண்ணத்தை சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள் கைவிட்டு நாட்டுமக்களுக்கு சேவையிருந்தால் செய்யலாம் என்பதைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, என் கட்சித் தலைவர் இந்த அரசின்மீது கொண்டுவந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முழுமனதாக ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த மூன்றரை ஆண்டுக் காலமாக பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே இந்த ஆட்சியைப் பற்றி தமிழ்நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றி மக்களுடைய உண்மையான பிரதிநிதிகள் என்ற முறையிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறோம். சாதாரண மக்களால்

[திரு. என். எஸ். வி. சித்தன்]

உறுப்பினர்களுக்குக்கூட இந்த ஆட்சியின்மீது நம்பிக்கை இல்லை. இருபது ஆண்டுக் காலத்தில் நாங்கள் செய்த ஒரு சில தவறுகளைச் சுட்டிக்காட்டி அந்த மட்டுமல்ல, எங்களால் மட்டுமல்ல; திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு ஒரு சில தவறுகளின் பின்னணியில் ஆயிரக்கணக்கான தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் எதிர்க்கட்சி ஆவதற்கு 20 ஆண்டுக் காலம் பிடித்தது. திராவிட முன்னேற்றக் கழகம் போகிற போக்கைப் பார்த்தால் மீண்டும் எதிர்க்கட்சியாக வருவதற்கு ஐந்து ஆண்டுகள் போதும் என்று எச்சரிக்கை விடுக்க விரும்புகிறேன்.

இருபது ஆண்டுக் காலத்தில் ஆண்ட காங்கிரஸ் திட்டமிட்ட பொருளாதார அடிப்படையிலே, சீரான,சிறப்பான, நிலையான ஆட்சியைக் கொடுத்தது. இன்றைய ஆளும் கட்சி மிக மலிவான வாக்குறுதிகளைக் கொடுத்ததன் காரணத்தால் ஆட்சிப் பீடம் கைமாறியது. கொடுத்த வாக்குறுதிகள் காற்றிலே பறக்க விடப்படுகிறது, வரிக்கொடுமைகளைப்பற்றி அன்றைக்குப் பேசியவர்களில் இன்றைய ஆட்சியிலே வரிக்கொடுமைகள் உயர்ந்துவிட்டன. வாட்டி வதைக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் என்று சொன்னவர்கள் ஆட்சியிலே வேலையில்லாத் திண்டாட்டம் நீக்கமற நெடிது உயர்ந்துவிட்டது.

குறிப்பாக மாணவர்களிடம் அவநம்பிக்கை தோன்றியிருக்கிறது. விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியிலே இந்த அரசினிடத்தில் அதிருப்தி வளர்ந்து விரிந்திருக்கிறது. அது மட்டுமல்ல ஊழல்கள் எங்கும் நிறைந்து மலிந்திருக்கிறது, லஞ்சம் பெருகியிருக்கிறது. இதைப் பார்க்கும்பொழுது இந்த நாட்டின் விடுதலைக் காகத் தியாகச் செம்மல்கள் தோன்றிய இந்த நாட்டில் கருநாகம் குடிகொண்டு விட்டதோ என்று அச்சப்படுகிறேன்.

எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் இந்த மாமன்றத்திலே, வடார்க்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மைலோ இங்கே சென்னையிலே விற்கப்பட்டதைப்பற்றிப் பேசினார்கள். அன்று அதை எதிர்த்துப் பேசிய உணவு அமைச்சரவர்கள் தனக்கு அதுபற்றித் தகவல் இல்லை என்று கூறினார்கள். பிறகு, எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ராம்சுபாக்சிங்ஜி, அவர்களுக்குக் கடிதம் எழுதி ஆதாரம் காட்டிச் சொன்னார்கள். அப்பொழுது எனக்குத் தகவல் கிடைத்தது 18—4—1970-ஆம் தேதியன்று, இந்த மன்றத்திலே 3-ஆம் தேதி மறுத்துச் சொல்லியிருக்கிறேன் என்று அமைச்சர் சொன்னார்கள். இங்கே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது நிச்சயமாக இந்த அமைச்சருக்குத் தெரிந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஆதாரம் எங்கே, ஆதாரம் எங்கே என்று திரு. மு.று. ஆதி அவர்களும் கேட்டார்கள், திரு. ஆசைத்தம்பி அவர்களும் கேட்டார்கள். அவர்களுக்கு நான் இந்த ஆதாரத்தைச் சமர்ப்பிக்கிறேன். மைலோ விவகாரம் பற்றி 1970-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 21-ஆம் தேதியன்று, தயவுசெய்து நம்பரைக் குறித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். 135/2/70 AE (D) New Delhi Under Secretary to Goveernment of India கடிதம் எழுதியிருக்கிறார்கள். நடைமுறை நிர்வாகப்படி தமிழக அரசு தலைமைச் செயலாளருக்கு அவர்கள் எழுதியிருக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவரவர்களுடைய அனுமதியைக் கேட்டுக்கொண்டு இந்தக் கடிதத்தை நான் படிக்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்ன லெட்டர் அது ? என்னிடம் காண்பித்தீர்களா ?

திரு. என். எஸ். வி. சித்தன் : தங்களிடம் கேட்டுக்கொண்டு படிக்கிறேன். தலைமைச் செயலாளர் அவர்களுக்கு . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கடிதத்தைப் படிப்பதற்கு என்னிடம் முன்பே கேட்டீர்களா ?

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் முழுவதும் படிக்கவில்லை. அதிலேயுள்ள சாராம்சத்தை மட்டும் படித்துவிடுகிறேன்.

I am directed to forward herewith the report. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கடிதத்தைப் படிக்கிறீர்களா ?

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே இவ்வாறாக, இந்தத் தலைமைச் செயலாளருக்குத் திட்டவட்டமாகக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, அவர்கள் மீது, சம்பந்தப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதையும் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். 1970-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 21-ஆம் தேதி தமிழக அரசு தலைமைச் செயலாளருக்கு எழுதப்பட்டிருக்கிறது. இந்த மாமன்றத்தில் ஏப்ரல் மாதம் பேசிய உணவு அமைச்சர் தெரியாது என்று மறுத்திருக்கிறார்கள். ஆகவே, நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன், வேண்டுமென்றே இந்த மாமன்றத்திற்குத் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதைப்பற்றிப் பேசுகிறீர்கள் ?

திரு. என். எஸ். வி. சித்தன் : வடார்க்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மைலோவைப்பற்றி.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கலாம். தனக்குத் தகவல் வரவில்லை என்று 3-ஆம் தேதியன்று சொன்னார்கள். பிறகு 18-ஆம் தேதிதான் தனக்குத் தகவல் வந்திருக்கிறது, தான் ஃபைலில் கையெழுத்துப் போட்டதாகவும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, வேண்டுமென்றே இந்தச் சபைக்குத் தவறான தகவல் கொடுக்க விரும்பினார் என்று கூறுவது முறையல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுபற்றி ஏற்கெனவே பேசியாகியிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஏற்கெனவே ஒரு காரியத்தைப்பற்றி விவாதித்திருந்தாலும்கூட, மறுபடியும் தகவல் கிடைக்கும்பொழுது பேச உரிமையிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எப்படிப் பேசலாம் ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : எப்படிப் பேசலாம் என்று சொல்ல எங்கே ரூல் இருக்கிறது ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல வேண்டும். இந்தத் தலைவர் ஆசனத்திலே உட்கார்ந்திருப்பவர்கள் ஒரு தீர்ப்பைக் கொடுத்த பிறகு அதற்கு எதிராகச் சொல்லுவது நியாயமல்ல. நான், பேசக்கூடாது என்று சொல்லிய பிறகும், பேசலாம் என்று சொல்வது தலைவரின் தீர்ப்பை எதிர்ப்பதாகும். இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையிலே, ஏற்கெனவே உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் அமைச்சரின்மீது உரிமைப் பிரச்னை கொண்டுவந்து, அதன் மீது உண்டான வாதங்களை திரு. மார்டின் அவர்கள் சொல்லி, பிறகு அதன்மீது பொறுப்பிலே உள்ள தலைவரவர்கள் ஒரு தீர்ப்பை அளித்தார்கள். அப்படி ஒரு தீர்ப்பளித்த பிறகு, மறுபடியும் இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசுவது சபாநாயகர் கொடுத்த தீர்ப்பை எதிர்ப்பதாகும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : இந்தப் பிரச்னையிலேயே பிரிவிலேஜ் கொண்டு வந்தால் நீங்கள் சொல்வது சரி. அதற்குமேல் தகவல் வந்தால் சொல்வதற்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : விதி 72-ஐப் பாருங்கள். அதே நடப்புக் காலத்தில் பேரவை முடிவுசெய்த காரியத்தை பெரும்பாலும் கொண்ட தீர்மானமொன்றை மீண்டும் கொண்டுவரலாகாது என்று இருக்கிறது. அதே நடப்புக் காலத்தில் பேரவை முடிவுசெய்த காரியம் என்றிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : உதவி சபாநாயகரவர்களே, அதையே கொண்டு வந்தால், அதாவது பிரிவிலிஜ் கொண்டு வந்தால் சரி. ஆனால் சட்டசபையிலே பேசக்கூடாது என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அப்படியில்லை. விதி 72-இன் பிரகாரம், ஒரு உரிமைப் பிரச்னையை ஒருவர் மீது கொண்டு வந்து, அந்த தொடர்கூட்டத்தில் முடிவு செய்த காரியத்தை, மீண்டும் அந்தத் தொடர் கூட்டத்திலேயே இன்னொரு முறை அதைப்பற்[க் தகவல் கூடுதலாகக் கிடைத்திருந்தால் அதே உறுப்பினர் மீதோ அல்லது அமைச்சர் மீதோ உரிமைப் பிரச்னையைக் கொண்டுவருவதற்கு உரிமையிருக்கிறதா என்று கேட்கிறேன். நான் இப்பொழுது என்ன சொல்கிறேன் என்றால், ஏற்கெனவே சட்டமன்ற தலைவரவர்கள் இங்கு கொடுத்த உரிமைப் பிரச்னையின்மீது ஒரு தீர்ப்பை அளித்த பிறகு இந்தத் தொடர்கூட்டத்திலேயே மறுபடியும் அதைக் கிளப்புவது என்றால் ,ஏற்கெனவே சபாநாயகர் அளித்த தீர்ப்பை அவமதிப்பதாகும், எதிர்ப்பதாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அதே முறையிலே இந்த பிரிவிலிஜைக் கொண்டு வரவில்லை. அட்ஜர்ன்மெண்ட் மோஷன் என்றால் ஒரு முறை கொண்டுவரலாம், பிரிவிலிஜ் மோஷன் என்று ஒரு முறை கொண்டுவரலாம். நோ-கான்பிடன்ஸ் மோஷன் என்றால் 6 மாதங்களுக்கு ஒரு முறை கொண்டுவரலாம். அதைப்போல் மறுபடியும் பிரிவிலிஜ் கொண்டுவரக்கூடாது. அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். உங்கள் தீர்ப்பை மதிக்கிறேன். விஷயத்தை அவர்கள் எடுத்துச் சொல்லுகிறார்கள் என்று பார்க்க வேண்டுமே தவிர . . .





**திரு. முனு. ஆதி** : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். நீங்கள் கொடுத்த தீர்ப்பை மீறிப் மீறிப் பேசுவதால் இதைப் பிரிவிலிஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : பேரவைத் தலைவரவர்களே, நான் கொடுக்கும் தகவல் முற்றிலும் புதிய, அதற்குச் சம்பந்தமில்லாத புதிய தகவல். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், அதற்கு முன்னால் அவருக்குத் தெரியாது, ஏப்ரல் மாதம் 18-ஆம் தேதிதான் கவனத்திற்கு வந்தது என்று சொன்னார்கள். இன்றைக்கு நான் கேட்கிறேன், இது சாதாரண பிரச்னை அல்ல, பெரிய பயங்கரமான, ஊழல், மோசடி நடந்திருக்கிறது. இது சம்பந்தமாக ஜனவரி மாதத்திலேயே, சாதாரண ஆளுக்கு அல்ல, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு வந்திருக்கிறது. தலைமைச் செயலாளர் அவர்கள், 3 மாதங்களுக்குப் பின்னாலே, சட்டமன்றத்திலே காங்கிரஸ் கட்சியினால் அந்தப் பிரச்னை எழுப்பப்பட்ட பிறகுதான், சம்பந்தப்பட்டவர்களுக்கு, இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள் என்றால் சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தகவல் வரவில்லை, தகவல் வரவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தகவல் வந்திருக்கிறது, நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். உணவு அமைச்சரவர்களுக்குத் தகவல் கிடைத்தது 18-ஆம் தேதியன்று, 3-ஆம் தேதி தனக்குத் தகவல் இல்லை என்று கூறுகிறார்கள். எனவே, நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது தொடர்பான பல நிகழ்ச்சிகள் நடைபெற்றதெல்லாம் உண்மைதான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : என்னுடைய கட்சி அங்கத்தினர் சொல்லும் பிரச்னையெல்லாம், இந்தத் தகவல் பிரதம காரியதரிசிக்கு வந்தவுடன், அவர் அமைச்சருக்கு ஏன் தெரிவிக்கவில்லை ? இவ்வளவு நாள் ஏன் காலதாமதம் ? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் ? வியாபாரிகளைப் பற்றிச் சொல்லவில்லை. நிர்வாகத்திலே இவ்வளவு ரொம்ப மெத்தனப் போக்கு நடக்கிறது. முக்கியமான பிரச்னைகள் சீப் செக்ரட்டரிக்கு வந்தவுடனே ஏன் அமைச்சரிடத்தில் நேரில் பார்த்துச் சொல்லவில்லை. ஏன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : ஏன் காலதாமதம் என்பது உங்கள் வாதம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அதுமட்டுமல்ல. இவ்வளவு பெரிய விஷயம் டெல்லியிலிருந்து வந்தவுடனே, பிரதம காரியதரிசி உங்களை நேரில் சந்திக்கவே இல்லையா ? அதற்குப் பிறகு பார்ப்பதே இல்லையா ? செக்ரட்டரிகளெல்லாம் அமைச்சர்களை வீட்டுக்குப்போய் பார்த்து வருவதே இல்லையா, சந்திப்பதே இல்லையா ? சொல்லுங்கள், எல்லாம் தபால் மூலமாகத்தான் வருகிறது என்றாவது சொல்லுங்கள். யார் தப்பாக இருந்தாலும் நடவடிக்கை எடுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள், இப்படிப்பட்ட பெரிய விஷயம், அமைச்சரின் கவனத்திற்கு வராமலே 3 மாதங்களாக இலாக்காவிலேயே இருந்தது என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏதோ பெரிய விஷயம், பெரிய விஷயம் என்று நான் ஏதோ மூடி மறைத்து விட்டேன், இந்த அவைக்குக் கொண்டு வாராமல் மூடி மறைத்துவிட்டேன் என்பதுபோல் சொல்கிறார்கள். நடவடிக்கை எடுத்திருக்கிறோம். என்னுடைய கவனத்திற்கு, இந்த அவையிலே சொல்லிய பிறகு வந்தது என்று சொல்லியிருக்கிறேன். இதை மறைக்க வேண்டிய அவசியமில்லை. இந்த மன்றத்திலே திரு. மார்டின் அவர்கள் கொண்டுவந்த பொழுது தெரியாது என்று சொன்னேன். அதற்குப் பிறகு என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. எனவே, எதையும் மூடி மறைக்கவில்லை, மூடி மறைக்க வேண்டிய அவசியமுமில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அமைச்சரவர்களுக்கு மூடி மறைக்கக் கூடாது என்று ஓரளவிற்கு எண்ணமிருக்கலாம். அதிகாரிகள் ஏன் இப்படிச் செய்தார்கள் என்பதைத்தான் குற்றம் சாட்ட விரும்புகிறோம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதிகாரிகள் மறைக்கவில்லை. நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இன்னொன்றுகூடச் சொல்ல விரும்புகிறேன். அப்பொழுது தான் உணவு இலாக்கா காரியதரிசி அவர்கள் மாறி புதிய காரியதரிசி வந்த நேரம். அந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருந்தார்களே தவிர, நடவடிக்கை எடுக்காமல் இல்லை.

பிற்பகல் 1·00 திரு. என். எஸ். வி. சித்தன் : என்றைக்கு அந்த ஃபைல் வந்தது ? அதற்குப் பின்னால் அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? தொடர்பான நடவடிக்கை என்ன ? இவை பற்றிய முழு ஃபைல்களையும் இம் மாமன்றத்திற்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேசுகிற காங்கிரஸ் நண்பர் எல்லா ஃபைல்களும் மன்றத்திற்கு வரவேண்டுமென்று சொல்லுகிறார். அது முறையல்ல. ஃபைல்களை மன்றத்தில் கொண்டு வந்து காட்டும் முறை எந்த மன்றத்திலும் கிடையாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அதுபற்றிய முழு விவரங்களைக் கொடுத்தால், அந்த டிப்பார்ட்மெண்ட் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற முழு விவரங்களைக் கொடுத்தால் . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விவரங்களைக் கொடுங்கள் என்பார்கள், விவரங்களைக் கொடுத்தால் ஃபைல்கள் வேண்டும் என்பார்கள், பிறகு நீதி விசாரணை வேண்டுமென்பார்கள். நீங்கள் 1972-ல் வரப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, அப்போது வந்து ஃபைல்களைப் பார்த்து வேண்டுமானால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : எதிர்க்கட்சி உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் (சிரிப்பு) அடுத்து வரப் போவதைச் சொல்லுகிறேன். இதுமாதிரி விவரங்களை விஜிலென்ஸ் டிப்பார்ட்மெண்டுக்குச் சொல்ல வேண்டியதுதானே என்று சொன்னார்கள். நான் இங்கே ஆதார பூர்வமாக ஒன்றைக் குறிப்பிடுகிறேன். சீப் எஞ்சினியர் மியாகான்—அமலோர்ப்பநாதன், அசிஸ்டெண்ட்



எஞ்சினியர், பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் எஞ்சினியரிங் டிவிஷனில் வேலை செய்பவர். திருவண்ணாமலை வாட்டர் சப்ளை ஸ்கீமில் நடந்த ஊழலை பற்றி, மியாகான் காண்டிராக்ட் கொடுத்ததில் செய்த ஊழலைப் பற்றி 88,000 ரூபாய் மோசடி செய்யப்பட்டதைப் பற்றி விஜிலென்ஸுக்கு 7—5—1969-ல் அமலோர்ப்பநாதன் எழுதி அனுப்பியிருக்கிறார். அதிலே மகமது என்ற அந்தக் காண்டிடருக்குத் தகுதியில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அப்போது அந்த மியாகான் சென்னையில் பெரிய வீட்டைக் கட்டியிருக்கிறார். அது பற்றி விஜிலென்ஸ் இலாகாவில் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எங்களுக்குத் தெரிந்த விவரங்களைக் கூறுகிறோம். கான்பிடென்ஷியல் ஃபைலில் விவரங்களைக் கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்தவர் எப்படிப்பட்ட உயர்தர அதிகாரியாக இருந்தாலும் இந்த அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? இது வரை அவ்வாறு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தின் முன்னால் வைக்க வேண்டும்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது காங்கிரஸ் ஆட்சியில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்கள் பற்றிச் சொன்னார்கள். தலைவர் அவர்களுடைய அனுமதியின்பேரில் கடந்த 30-ம் தேதி அக்டோபர் மாதம் 1957-ம் ஆண்டு இம் மாமன்றத்தின் முன்னால் மறைந்த முதல்வர் அண்ணாதுரை அவர்கள் பேசிய ஒரு சில பகுதிகளை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

" நீங்கள் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தைப் பயன்படுத்தும் அளவிற்கு எந்த ஜனநாயக சர்க்காராவது பயன்படுத்தி இருக்கிறதா ? நீங்கள் வணங்கும் ஆண்டவன் பேரிலே கேட்கிறேன். நீங்கள் கடைப்பிடிக்கும் காந்திய நெறியின் பெயராலும் கேட்கிறேன். உங்கள் நெஞ்சிலே கைவைத்துச் சொல்லுங்கள். இத்தனை ஆண்டு காலமாக நம் நாட்டில் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் உலகத்திலே எந்த நாட்டிலேயாவது இந்த அளவுக்கு நடந்ததுண்டா ? . . . . .

துருக்கி நாட்டிலே ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததற்கு அந்தக் கட்சிக்கும், மற்றொரு கட்சிக்கும் தகராறு மூண்டு ஏறக்குறைய 7,000 பேர் கலகத்தில் ஈடுபட்டவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அந்தக் கூட்டத்தைக் கலைக்க துருக்கி சர்க்கார் உபயோகப்படுத்தியது துப்பாக்கியை அல்ல. அவர்கள் மீது தண்ணீரை இறைத்து கலைத்திருக்கிறார்கள். அங்கே ஏராளமான கூட்டம் பெரும் கலகம் விளைவித்த போதிலும், அந்தச் சர்க்கார் தீ அணைக்கும் படையின் உதவியினால் கலகத்தைத் தடுக்க அந்த மக்கள் மீது தண்ணீர் இறைத்துத் துரத்தியிருக்கிறார்கள் "

என்று கூறிய அந்தப் பேரறிஞர் அண்ணாவின் வழியில் தோன்றியவர்கள் எத்தனை முறை தண்ணீரை இறைத்து கூட்டத்தைக் கலைத்திருக்கிறார்கள் ?

" சுடுவதற்கு அனுப்பப்பட்ட அதிகாரியும் சுடுவதிலே பழக்கப்படாதவர் அல்ல, அதில் கை தேர்ந்தவர்கள். ஆனால் சுடுவது மிருகங்களையோ, பறவைகளையோ அல்ல, மக்களை என்று நி]வில்கொள்ள வேண்டும். "

என்று அன்று பேசியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆட்சி ஏற்பட்டு கடந்த மூன்றரை ஆண்டுகளில் தமிழகத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்கள் 12-ல் இருந்து 14 வரை இருக்கும் என்று நினைக்கிறேன்.

We will shoot to scare and not to kill'

பெரியகுளத்தில் சில்வார்ப்பட்டியில் சமீபத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. ஷூட் டு ஸ்கேர் என்று முறையிலே முதலிலே ஆகாயத்தை நோக்கிச் சுடவேண்டும். அப்படி ஆகாயத்தை நோக்கிச் சுடாமல், முழங் காலுக்குக் கீழே சுடாமல் எடுத்த எடுப்பிலேயே நேரடியாகச் சுட்ட காரணத் தால் இரண்டு பேர் மாண்டிருக்கிறார்கள். அங்கே கலவரம் ஏற்படக் கூடும் என்று பல மாதங்களுக்கு முன்னாலேயே தெரியப்படுத்தியும், அரசாங்கம் எந்த வித நடவடிக்கையும் எடுக்காததன் காரணமாக துப்பாக்கிப் பிரயோகம் நடந்து இரண்டு பேர் மாண்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னரும் கூட வீட்டுக்குள் புகுந்து பெண்களை மானபங்கப் படுத்தியிருக்கிறார்கள். ஆண்களில் பத்துப் பதினைந்து பேரை ஒவ்வொருவராக வெளியே இழுத்து நையப் புடைத்து கடும் வெயிலில் நிற்க வைத்தார்கள். இதைச் செய்த அதிகாரிகள் அந்த இடத்திலேயேதான் இருக்கிறார்கள், வேறு இடத்திற்கு மாற்றப்படாத நிலைமைதான் இந்த ஆட்சியிலே இருக்கிறது.

திரு. எஸ். பரமசிவம்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பெரியகுளத்திற்குப் பக்கத்தில் உள்ள சில்வார்பட்டி ஷூட்டிங் சம்பந்தமாக நீதி விசாரணை இருக் கிறது . . . .

திரு. என். எஸ். வி. சித்தன்: அது நீதி விசாரணையில் இல்லை என்பதை அந்தத் தொகுதியில் அக்கறை கொண்டிருக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் நீதி விசாரணையில் இருக்கிறது என்று சொன்னது அது வழக்கு மன்றத்தில் விசாரணையில் இருக் கிறது என்பதற்காகத்தான். அதோடு போர்டு மெம்பர் ஒருவரும் விசாரித்துக் கொண்டிருக்கிறார். வழக்கு மன்றத்திலும் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: அது வழக்கு மன்றத்தில் இருக்கிறது என்று எடுத்துச் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு சாதாரண மக்களுக்கு எந்தவித நன்மை யையும் செய்யவில்லை. அமெரிக்காவின் அரசை ஏற்றிருந்த ஆபிரகாம் லிங்கன் ஜனநாயகத்திற்கு ஒரு அருமையான இலக்கணம் வகுத்திருக்கிறார்கள்.

'Government of the people for the people and by the people.'

ஆனால் தமிழகத்தில் நடைபெறுகின்ற இந்த ஆட்சி—

'Government of the D.M.K., for the D.M.K. and by the D.M.K.'

என்ற நிலையில்தான் இருக்கிறது என்று கூறி, இந்த ஆட்சியின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்தி முடிக்கிறேன். வணக்கம்.



திரு. ஏ. ஆர். பெருமாள்: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முழுக்க முழுக்க எதிர்த்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் சித்தன் அவர்கள் ஏதோ ஒரு துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இருபது ஆண்டு கால காங்கிரஸ் கட்சியின் வரலாற்றிலும் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்திருக்கின்றன. அந்த வரலாற்றையெல்லாம் மறந்துவிட்டு சுடப் போகிறோம் என்று அறிவிப்புக் கொடுக்காமலே இப்போது போலீசார் சுட்டார்கள் என்ற வாதத்தைச் சொன்னார்கள்.

உங்களுக்கெல்லாம் நன்றாக ஞாபகம் இருக்கும். நான் அப்போது சட்ட மன்றத்திற்கு வரவில்லை. 1957-ம் ஆண்டு முதுகுளத்தூர் தாலுக்காவில் நடந்த கலவரத்தின்போது நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களை, நடந்த அநியாயங்களை யாரும் மறந்துவிடுவதற்கில்லை. கீழ்த் தூவல் கிராமத்தில் கட்டிளம் காளைகள் ஐந்து பேரை கண்ணை, காலைக் கட்டி வைத்துச் சுட்டுக் கொன்றார்கள். அப்போது நீதிவிசாரணைவேண்டுமென்று நானே கேட்டேன். மறுத்தார்கள். அதற்கு மாறாக அதிகாரியைப் போட்டு விசாரித்தார்கள். கீழந்தை கிராமத்தில் சடங்கு வீட்டில் குழம்பை ஊற்றிப் பிசைந்து கொண்டிருந்த கரங்களோடு பருப்பு உலராத நிலையிலேயே வெளியே இழுத்து வந்து சுட்டுக் கொன்றார்கள். காரிப்பட்டி கிராமத்திலே லாரியைத் தள்ளச் சொல்லிவிட்டு பின்னாலிருந்து சுட்டார்கள். போலீஸ் லாரியில் ஒருவனை ஏற்றிக் கொண்டு போய் வழியிலே அவன் மீது வழக்கு இல்லை என்று கூறி இறக்கி விட்டு அவன் போகும்போது பின்னாலிருந்து சுட்டார்கள். பதினேழு பிணங்கள் விழுந்தன. பதினேழு வீர மறவர் குல பெண்மணிகள் தாலி அறுக்கப்பட்டது. இவ்வளவுக்கும் மேலாக ஐயாயிரம் பேரைச் சிறையில் வைத்தார்கள். 836 பொய் வழக்குகள் போட்டார்கள். அதிலே தண்டிக்கப்பட்டது மூன்றுதான். மீதி அவ்வளவு பேரும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் நெஞ்சமெல்லாம் துடிக்கும் வகை யில் முத்துராமலிங்கத் தேவர் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார். அதிலே, புதுக்கோட்டை நீதிமன்றம் புனிதமான தீர்ப்பைத் தந்தது. முத்துராமலிங்கத் தேவருக்கும், இம்மானுவேல் கொலைக்கும் தொடர்பு இல்லை, சாட்சியம் இல்லை என்று கூறி முத்துராமலிங்கத் தேவர் விடுதலை செய்யப்பட்டார். அரசியலில் மான உணர்ச்சி இருந்திருக்குமானால் அன்று இருந்த காங்கிரஸ் அரசாங்கம் புதுக்கோட்டை நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பின்னால் ராஜினாமாச் செய்துவிட்டு வெளியேறி இருக்க வேண்டும். இவ்வளவு அநியாயங்களைச் செய்தவர்கள்தான், இவ்வளவு கொடுமைகளைச் செய்தவர்கள் தான் இன்றையதினம் பேரறிஞர் அண்ணா வழியில் வந்த கலைஞர் கருணாநிதியின் ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக் கிறார்கள்.

சிந்தித்துச் சிந்தித்துப் பார்த்தேன். எதற்காக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று. இந்தத் தீர்மானத்தின் மூலம் இந்த அரசைக் கவிழ்த்துவிட முடியுமா என்றால் முடியாது. நாங்கள் அரசின் மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அன்று கொண்டு வந்தோம். ஆனால்

எதற்காகக் கொண்டு வந்தோம்? ஆயிரக்கணக்கானவர்கள் செத்து மடிந்தார்கள், முதுகுளத்தூர் தாலுகா மண்ணில் ரத்த ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ஆந்திராவிலிருந்தும், கேரளாவிலிருந்தும் போலீஸ் வரவழைக்கப்பட்டிருந்தது. டாங்குகளும், விமானங்களும் மட்டும் வந்திருந்தால் அது ஒரு போர்க்களமாக இருந்திருக்கும் என்று முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆகவே நாங்கள் அன்றையதினம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தோம்.

ஆனால், இன்று என்ன நடந்து விட்டது இப்படி ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு அப்படி ஏதாவது அசம்பாவிதங்கள் அநியாயங்கள், அத்துமீறிய செயல்கள், துப்பாக்கிப் பிரயோகம் என்று ஏதாவது இத்தீர்மானம் கொண்டு வருவதற்கு மூன்று மாதங்கள், ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடத்திற்கு முன் நடந்திருக்கிறதா? இல்லவே இல்லை. அப்படியானால் எதற்காக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்? தேர்தல் நெருங்குகிறது. 15 மாதங்கள், 14, 13, 12 மாதங்கள் என்று நெருங்கிக்கொண்டே வருகிறது. அது நெருங்க நெருங்க அவர்களது இருதயம் பக் பக் என்று துடிக்கிறது. (ஆரவாரம்.) எப்படியாவது இந்த அரசின் மீது மக்களுக்கு ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்துவதற்காக ஆறு மாதத்திற்கு ஒரு தடவை, ஒரு ஆண்டுக்கு ஒரு தடவை என்று நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கொண்டு வருகிறார்கள். இன்னும் நான்கு கூட்டங்கள் கூடும். நான்காவது கூட்டம்தான் கடைசிக் கூட்டமாகயிருக்கும். ஆகவே மூன்று கூட்டங்களிலும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள், கொண்டு வந்து மக்கள் மனதைத் திருப்ப முடியுமா என்று முயற்சித்துப் பாருங்கள்.

இருபது ஆண்டுகள் ஆட்சி நடத்திய காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் உள்ள தட்ப நுட்பங்களை உணருவார்கள். நான் ஏறத்தாழ முப்பது ஆண்டு காலம் அரசியலில் ஈடுபட்டிருப்பதால் எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே சொல்கிறேன், இந்த அரசை விட வேறு எந்த அரசும் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசை காக்காய் பிடிப்பதற்காக இதைச் சொல்லவில்லை, வேறு ஏதாவது காரியங்கள் நடக்க வேண்டுமென்பதற்காக இதைச் சொல்லவில்லை. யாரையும் தாஜா செய்வதற்காகச் சொல்லவில்லை. மூன்றாண்டுகளுக்கு முன்னர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் தொடங்கப்பட்டு இன்றையதினம் கலைஞர் அவர்களால் நடத்தப்படுகிற ஆட்சியோடு முந்தைய காங்கிரஸ் ஆட்சியை ஒப்பிட்டுப் பார்த்தால் இப்படி ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்த ஆட்சியின் மீது கொண்டு வந்திருப்பது தமிழின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்வது தான் பொருள். (ஆரவாரம்) தமிழ்நாட்டு மக்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்வது தான் பொருள். தமிழ்நாட்டின் மீதே நம்பிக்கை இல்லை என்றுதான் பொருள். (ஆரவாரம்).

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கவர்னர் முன் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள். மற்ற அமைச்சர்கள் அன்றையதினம் தாற்காலிக சபாநாயகராக இருந்த திரு. மூக்கையா தேவர் அவர்கள் முன்னி



லையில் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள். திரு. மூக்கையா தேவர் திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் சீடராவார். ஆகவே, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் அமைச்சரவை முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் முத்திரை போட்டு அமைக்கப்பட்ட ஆட்சியாகும் என்று தென்னாட்டு மக்கள் கருதுகிறார்கள். ஆகவே பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் ஆட்சியைத் தொடர்ந்து வந்திருக்கும் இந்த அமைச்சரவை மீது கொண்டு வரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தமிழ் மீது கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம், தமிழ் மக்கள் மீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம், தமிழ்நாட்டின் மீதே நம்பிக்கையில்லை என்று சொல்லப்படுகிற தீர்மானம் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

**திரு. என். இராசாங்கம்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழக அரசின் மீது, இந்த அரசின் முதல் அமைச்சர் அவர்கள் மீது கொண்டுவரப்பட்டுள்ள இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ள கட்சியினருக்கே நம்பிக்கையில்லை என்றுதான் பொருள்படுகிறது. காரணம், சென்ற ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னால், அதற்கு முன்னால் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் அடிப்படை நோக்கம் ஆட்சியில் ஒழுங்கு இல்லை, அமைதி இல்லை, சட்டமும் அமைதியும் இல்லை, பாதுகாப்பு இல்லை என்று காரணங்கள் காட்டப்பட்டு அதற்குக் காரணம் ஆட்சியினர் போலீஸ் துறையினரின் கைகளை கட்டி விட்டார்கள், அப்படி அவர்கள் கைகள் கட்டுப்பட்டுக் கிடப்பதால் பொது மக்கள் நலனைக் காப்பதில் தவறிவிட்டார்கள், ஆகவே அமைதி இல்லை என்று கூறினார்கள். ஆனால் இன்றுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் முக்கிய அம்சம் போலீஸ் அடக்குமுறை தலைவிரித்தாடுகிறது, என்பதாகும்.

ஆண்டுக்கு ஒரு முறை அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது என்பது அவர்களது வேலையாகயிருக்கட்டும். ஆனால் இன்றைய ஆட்சியில் பொதுவாக பொது மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் பாதுகாப்பு அளிக்கப்பட்டுவருகிறது என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள்.

இன்று இங்குள்ள மக்களில் 75 சதவிகிதத்தினர் தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்பட்ட வகுப்பு மக்களுமாவார்கள். அவர்களது நலனுக்காக இந்த அரசு எந்த அளவிற்கு உதவி வருகிறது என்பதையும் நாட்டு மக்கள் உணருவார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பிற்பட்ட வகுப்பு மக்கள் எப்படி நடத்தப்பட்டார்கள் என்பதை நாடு அறியும், நாட்டு மக்களும் அறிவார்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைச்சரவை, கலைஞர் அவர்களின் அமைச்சரவை பதவி ஏற்றுக்கொண்டவுடன் பிற்பட்ட வகுப்பு மக்களுக்காக என்று ஒரு தனி இலாகாவே அமைத்துக் காட்டியிருக்கிறார்கள். அதன் காரணமாக ஏராளமான மக்கள் தொகை கொண்ட இந்த பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு நல்லமுறையில் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதே போல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகள் இரட்டிப்பாக ஆக்கப்பட்டிருக்

கிறது. ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டிருக்க நேரம் இல்லாததால் குறிப்பிட்ட சிலவற்றைப்பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்கனவே பசுமாடுகள் வாங்குவதற்காக பால் வழங்கும் திட்டத்தின் கீழ் கூட்டுறவுத் துறையிலிருந்து ரூ. 250 கொடுக்கப்பட்டு வந்தது. அதை இப்போது ரூ. 450 க்கு மேல் ஆக்கியிருக்கிறார்கள். உழவு மாடுகள் வாங்குவதற்கு ரூ. 285 கொடுக்கப்பட்டு வந்ததை இப்போது ரூ. 400-க்கு மேல் ஆக்கியிருக்கிறார்கள். உபகாரச் சம்பளம் பொறுத்து, நூற்றுக்கு நூறு, மார்க் அளவில் இல்லாமல், தகுதி என்ற அளவில் இல்லாமல் தாழ்த்தப்பட்ட குடிமகன் என்று தெரிந்தாலே சலுகை வழங்கப்படுகிறது இப்போது. இப்படி வட்டி இல்லாதக் கடன் போன்ற பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டுத் திட்டத்தில் ஹரிஜனக் காலவனிகளில் வீடுகள் கட்டும் திட்டத்திற்காக பணம் ஒதுக்கப்பட்டு திட்டம் தீட்டப்படுகிறது. காங்கிரஸ் அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் பிற்பட்ட வகுப்பு மக்களுக்காகவும் செய்து வந்ததை விட இரண்டு மடங்கு அதிகமாக இந்த அரசு செய்து வருகிறது.

அடுத்தபடியாக, தொழிலாளர் துறையைப் பற்றிக் குறிப்பிடும்போது குறிப்பாக, சென்னை துறைமுகத் தொழிலாளர்களிடையே ஒரு வேலை நிறுத்தம் ஏற்பட்டது. ரெயில்வேயில் ஃபயர்மென் இடையே வேலை நிறுத்தம் ஒன்று ஏற்பட்டது. முதல் அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டவர்களுடன் தொலை பேசி மூலம் பேசி எந்தெந்தக் கோரிக்கைகளை விடுத்து அவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்களோ அந்தக் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றத்தக்க வகையில் சமாதானம் செய்து அவ்வேலை நிறுத்தங்கள் வாபஸ் வாங்கப்பட்டன. அது குறித்து தொழிலாளர் தலைவர்களும் இந்த அரசுக்கு தங்கள் பாராட்டுதலை வழங்கியிருக்கிறார்கள். இதையும் பொது மக்கள் நன்கு அறிவார்கள்.

பின்னர். நெய்வேலியில் ஒரு—வேலைநிறுத்தம் ஏற்பட்டது. அதுபற்றி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கோவிந்தராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள்—அப்போது அங்கு துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது உண்மைதான். 16,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யும் காலத்தில் ஒரு பெரிய அமளி ஏற்படும் போது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது உண்மைதான். அதுபற்றி நான் அவர்களோடு கலந்து பேசி தீர்க்கப்பட வேண்டிய கோரிக்கைகள் பற்றி பேசியிருக்கிறேன், ஒரு நாள் அங்கு தங்கியிருந்தும் பார்த்தேன். அங்கு நடைபெற்ற நிகழ்ச்சி, மற்றவர்களை குறி வைத்து சுட்டே தீரவேண்டும், துப்பாக்கிச் சூடு நடத்தியே தீரவேண்டும் என்று செய்யப்பட்டதல்ல என்பது அவர்களுக்கும் தெரியும். இருந்தாலும் அப்படி நடந்தது வருந்தத்தக்க ஒன்றாகும். இருந்தபோதிலும் மூன்று நாட்களில் அந்தத் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்டு இன்று நல்லமுறையில் அங்கு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு தொழிற்சாலையில் ஒரு வேலை நிறுத்தம் ஏற்படும்போது எவ்வளவோ அசம்பாவிதங்கள் ஏற்படுவது வழக்கம். ஆனால் 16,000 தொழிலாளர்கள் உள்ள அந்தத் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் ஏற்பட்டும் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியால், அரசாங்கம் எடுத்துக்கொண்ட அக்கறை காரணமாக அத்தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்டு இன்றையதினம் நல்லமுறையில் அங்கு வேலைகள் நடைபெற்று வருகின்றன.



இப்படியாக தொழிலாளர்களைப் பொறுத்தவரைக்கும் அரசு தொழிலாளர்களுடன் இருக்கிறது. தொழிலாளர்களின் முன்னேற்றத்தைப் பாதுகாக்க இருக்கிறது என்பதற்கு இதுவே சான்றாகும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எதிர்க்கட்சித் தலைவர்கள் நம்பிக்கை இல்லை என்று சொல்கிறார்கள். பெரும் பெரும் திட்டத்தை 3 ஆண்டுகாலத்தில் தான் மாநில அரசு எந்தவித திட்டக்காலம் இல்லாத நிலையில் எத்தனை கோடி ரூபாய்களுக்கு திட்டத்தை வாங்கித்தந்து இருக்கிறது. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் வேலை ஆரம்பம் ஆகப்போகிறது. சேலத்தில் இரும்பாலை ஆரம்பிப்பதற்கான வேலை துவங்கப்பட இருக்கிறது. இந்த 3 கோடி திட்டத்தை தி.மு.க. அரசு பெற்று இருக்கிறது. இப்படி தமிழ் மக்கள் எந்தக் காலத்திலும் இப்படி கோடிக்கணக்கான மூலதனத்தைப் போட்டு ஆரம்பித்தது இல்லை. அதற்கு இந்த அரசு காரணம். இதை எதிர்க்கட்சித் தலைவர்கள் பாராட்டுவார்கள் என்று நினைத்தேன். அதற்குப்பதிலாக அவர்கள் கண்டனம் தெரிவித்து இருக்கிறார்கள்.

நாங்களும் தான் எதிர்க்கட்சியாக இருந்தபோது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தோம். திரு. ஆசைத்தம்பி பேசியபோது எதிர்க்கட்சியை எந்த அளவு புறக்கணித்தீர்கள் என்பதற்கு உதாரணம் சொன்னார்கள். அமைச்சரின் மகனுக்கு உத்தியோகம் கொடுத்ததைப் பற்றிச் சொன்னார்கள். அவருக்கும் சரிவர விவரம் தெரியாது. உத்தியோகத்திற்காக 3 ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் சர்வீஸ் கமிஷன் பரீட்சைக்குப் போய் இருந்தார்கள். முதல் தரமான மார்க் யார் வாங்கி இருக்கிறார்களோ அவருக்கு உத்தியோகம் கொடுக்கப்படவில்லை. குறைந்த மார்க் வாங்கியவருக்கு உத்தியோகம் கொடுக்கப்பட்டது. அப்படித் தகுதி இல்லாதவருக்கு ஏன் உத்தியோகம் கொடுக்கப்பட்டது என்று பார்க்கிற போது அவர் ஒரு மந்திரியின் மகன், ஆகவே கொடுக்கப்பட்டது என்று குற்றம் சாட்டினோம். எந்த மந்திரி மீது குற்றம் சாட்டினோமோ அவரே எழுந்து ஒரு மந்திரி மகனாக இருந்தால் உத்தியோகம் கொடுக்கக் கூடாதா என்று கேட்டார்கள். மந்திரியின் மகனாக இருந்தால் உத்யோகம் கொடுக்கக்கூடாது என்பதற்காகச் சொல்லவில்லை, 3 ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் எழுதிய பரீட்சையில் குறைந்த மார்க் வாங்கியவனுக்கு கொடுத்தால் தான் சொன்னோம் என்று சொன்னோம். அதுவும் மற்ற 2 ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்திலிருந்து வந்தவர்கள். தாய்தந்தையரைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் உள்ளவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு கொடுக்காமல் ஒரு வசதியில் இருக்கும் பிள்ளைக்கு கொடுத்து இருப்பது நியாயத்திற்கு விரோதமானது என்று சொன்னோம். தவறு என்று ஒப்புக்கொண்டார்கள்.

திண்டிவனம் இராமமூர்த்திச் சொன்னார்கள். ஹரிஜன இல்லாக கமிட்டிகளில் சட்ட மன்ற உறுப்பினர்களைப் போட்டு இருக்கிறார்கள். அவர்கள் இல்லாத நேரத்தில் கமிட்டிகள் கூட்டப்பட்டு முடிவு எடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். எங்களைக் கூடத்தான் அந்தக்கமிட்டியில் போட்டு இருக்கிறார்

கள். அந்த கமிட்டி கூடும்போது உறுப்பினர்கள் வரவில்லை என்பதற்காக நிறுத்த முடியாது. 4 பேர் கோரம் இருந்தால் கூட்டுகிறார்கள். முடிவு எடுக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது).

ஒன்று சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது ஹரிஜன ராஜ்யக்கமிட்டியில் அவர்களே இருந்தார்கள். நாங்கள் 10 பேர் எதிர்க் கட்சியில் இருந்தோம். 10 பேரில் ஒருவரைக் கூட காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கும்போது நியமிக்கவில்லை. இன்றைய நிலைமை என்ன? எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் இன்று ராஜ்யக்கமிட்டியில் இருக்கிறார்கள். ஆகவே இந்த விஷயத்தில் கட்சி பேதம் பார்க்காமல், சமதர்மமாக, ஏற்றத்தாழ்வு பாராமல் எல்லோரையும், இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் எல்லோரையும், ஒவ்வொரு கமிட்டியிலும் நியமித்து இருக்கிறது. எந்த கட்சிக்கண்ணோட்டமோ அல்லது பாரபட்சமோ இந்தஅரசுக்கு இல்லை என்று கூறி, முதல்வர் மீது கொண்டு வந்துள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து முடிக்கிறேன். வணக்கம்.

*** திரு. கே. என். குமாரசுவாமி :** தலைவாவர்களே, எங்களுடைய கட்சியின் பேரில் தமிழகத்தில் போலீஸ் அடக்குமுறையை ஏவிவிட்டதைக் கண்டித்து, சர்க்காரைக் கண்டிக்கிற தீர்மானத்தின் அடிப்படையில் சில வார்த்தைகள் சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன்.

காரணம், நம்முடைய நாட்டிலே ஜனநாயகத்தை மிகவும் ஏற்றுக்கொண்டு இருக்கிற கட்சியைச் சார்ந்தவர்கள் தான் இப்போது ஆட்சியை நடத்து கிறார்கள். எதிர்க்கட்சி வரிசையில் சிலர் உட்கார்ந்து இருக்கிறார்கள். ஜன நாயக நாட்டிலே எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி மக்கள் உரிமையைக் கோருகிற போது ஜனநாயக அடிப்படையிலே அவர்கள் இயக்கங் களை நடத்துவதற்கு உரிமைகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் அவர்கள் உரிமையை வற்புறுத்தி கேட்கவும் உதவுவது அந்த ஜனநாயக மரபு தான் என்பதை மறந்து விடக்கூடாது. உரிமையைக் கேட்கிற ஒரே காரணத்திற் காக அந்த உரிமைகளை அடக்க வேண்டுமென்பதற்காக அடக்குமுறையின் மூலமாக அவர்களுடைய உரிமை மறுக்கப்படுகிறது. அதைத்தட்டிக்கேட்கும் உரிமை எதிர்க் கட்சிகளுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தப் பிரச்னையைப் பற்றி பேச விரும்புகிறேன்.

துப்பாக்கிச் சூடு நடந்தாலும் சரி, போலீஸ் வன்முறை ஏவினாலும் சரி என்பதைப்பற்றி, எந்த சூழ்நிலையில் அது நடைபெற வேண்டும் என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டுமே தவிர இந்த அரசாங்கம் நடத்தியது சரியா அல்லது முந்தைய அரசாங்கம் நடத்தியது சரியா என்கிற வாதத்தைத் தான் இந்த மன்றத்திலே கேட்க முடிகிறதே தவிர எந்த சூழ்நிலையில் அது நடை பெற்றது என்று யாரும் பேசவில்லை. அவர்கள் ஆட்சி நடந்த காலத்தில் என்ன நடைபெற்றதோ அதையெல்லாம் சுட்டிக்காட்டி, அதற்குப் பல சான்று கள் காட்டி அது நியாயம் என்பதை வற்புறுத்தி வந்து இருக்கிறது. அப்படிப் பட்ட நிலைமையிலிருந்து அப்பாற்பட்டு இதைப் பார்க்கவேண்டும்.





1952 வருஷம் கேரளத்தில் திரு. பட்டம் தாணுப்பிள்ளை முதலமைச்சராக இருந்தபோது ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. உடனே தலைவர் லோகியா அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து இருக்கிறது, ஆகவே அரசாங்கம் உடனடியாக ராஜினாமா செய்து விட்டு வெளியே வந்து எந்தச் சூழ்நிலையில் இது நடைபெற்று இருக்கிறது என்று பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறுகிற சூழ்நிலை எந்த ஆட்சி யிலும் ஏற்படும். அது எந்த அடிப்படையில் நடைபெற்றது என்பதை கண்டறிவது ஜனநாயகத்தில் செல்கிற நாட்டின் மரபு. அன்று அதிகாரத்தில் இருந்தவர்கள் இதைப்பற்றி சிந்திக்கவே இல்லை. யார் வந்தாலும் இப்படித் தான் இருக்கும் என்ற சூழ்நிலை இப்போது உருவாகி விட்டது காங்கிரஸ் கட்சியின் தடத்திலே நீங்கள் சென்று கொண்டிருக்கிறீர்கள். தவறு செய்தீர்களே என்று கேட்கிறபோது, நீங்களும் தவறு செய்து கொண்டு இருக் கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். தவறை திருத்திக்கொள்கிற தன்மை நம்மிடத்தில் வரவேண்டும்.

கோவையில் நடைபெற்ற விவசாயிகள் பிரச்னையில் துப்பாக்கிப் பிரயோகம் வன்முறை நடந்து இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏதோ அவர்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்கிற நோக்கத்தோடு விவசாயிகள் இயக்கத்தை ஆரம்பிக்க வில்லை. உரிமை களைக் கேட்டார்கள். அரசாங்கத்தோடு பேசினார்கள். முதலமைச்சரை சந்தித்துக் கேட்டார்கள். இந்தப் பிரச்னையில் விவசாயிகளுக்கு உற்பத்தி செலவு கூடுதல் ஆகிறது. ஆகவே, அரசு இதற்கு ஒரு முடிவு காண வேண்டு மென்று கேட்டார்கள். முதலமைச்சர் ஒரு முடிவை வெளியிட்டார்கள். அந்த முடிவு பாரபட்சமாக இருக்கிறது. முடிவை மாற்றிக்கொள்ளுங்கள். எல்லா விவசாயிகளுக்கும் நன்மை கொடுக்கிற வகையில் முடிவு எடுங்கள் என்று கேட்டார்கள். முடிவு கொடுக்க வில்லை. அவர்கள் தங்களுக்கு வேறு வழி இல்லாமல் நாங்கள் அமைதியான முறையில் எங்கள் கோரிக்கை அடைவதற் காக போராட்டம் நடத்துகிறோம் என்று சொன்னார்கள். உரிமைகளை காக்க போராட்டம் நடத்துகிறோம் என்று சொன்னார்கள், போராட்டம் ஆரம்பித் தார்கள். அவர்களுடைய நிலையைத் தெளிவுபடுத்தினார்கள்.

ஜூன் 15-ம் தேதி நடத்த இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு முன்னாலே 15-ம் தேதி போராட்டத்தை நடத்துவதற்கு முன்னாலே போலீஸ் 144 தடை உத்தரவைப் போட்டார்கள். தடையை மீறி நாங்கள் மறியலில் ஈடுபடுவோம் என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட 17 பேர் விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள், செயலாளர் நாராயணசாமி, வேலுசாமி, எம்.எல்.ஏ. தலைமையில் மறியல் போராட்டத்தைத் தொடங்கினார்கள். அவர்கள் இருவரை மட்டும் கைது செய்தார்கள். விவசாயிகளைக் கலைந்து செல்லுங்கள் என்று சொன் னார்கள். 'நாங்கள் சட்டத்தை மீறினால் கைது செய்யுங்கள்' என்று போலீசை கேட்டார்கள். 'கைது செய்ய உத்தரவு கிடையாது. தடியால் அடித்துக் கலைக்கச் சொல்லி உத்தரவு' என்று சொல்லி இருக்கிறார்கள். யூனியன் சேர்மனுக்கு மண்டையில் அடிபட்டு ரோட்டில் ரத்தம் பீறிட்டது. எக்ஸ் எம்.எல்.ஏ. தடியால் தாக்கப்பட்டு கீழே விழுந்தார்கள். போலீஸ் அடித்த

உடனே விவசாயிகள் ரோடில் படுத்தார்கள். அவர்களை மிதித்து இருக்கிறார்கள். படுத்து இருந்தவர்களை தாக்கி இருக்கிறார்கள். இடுப்பு ஒடிந்து பலர் ஹாஸ்பிடலில் இருக்கிறார்கள். அமைதியான போராட்டம் நடத்தியவர்கள் மீது இப்படி தடி கொண்டு அடிப்பது, கண்ணீர் புகை வீசி கூட்டத்தைக் கலைப்பது தான் ஜனநாயகமா? இது நம்முடைய நாட்டில் ஏற்றுக்கொண்ட வழிமுறைகளுக்கும் தமிழகத்திற்கும் சரியான முறையல்ல என்பதை இந்த மன்றத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 5 நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

பிற் பகல் 1-30 **திரு. கே. என். குமாரசுவாமி :** 5 நிமிடம் தானே கொடுத்து இருக்கிறீர்கள். இன்னொரு நாள் பேசலாமா?

அதே மாதிரி திருப்பூரில் நடைபெற்ற ஒரு மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் 500 பேர்கள் கூடியிருக்கிறார்கள். அவர்கள் தோட்டத்தைவிட்டு வெளியே வர முடியவில்லை. காம்பவுண்டைத் தாண்டி இந்தப் பக்கம் வருவதற்கு முன்னால் போலீஸார் மறியலில் ஈடுபட்டவர்களை தடி கொண்டு அடித்திருக்கிறார்கள், 'தடிகொண்டு அடிப்பதற்கும், துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கும் உத்தரவு, பேசாமல் போய்விடுங்கள்' என்று சொன்னார்கள். 'உங்களுக்கு அடிப்பதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அமைதியாக சத்தியாகிரகம் செய்பவர்களை கைது செய்யவேண்டும், சட்டத்தை மீறினால் கைது செய்யுங்கள், அதற்குத் தயாராக இருக்கிறோம்' என்று சொன்னார்கள். 'தடி கொண்டு தாக்குவது, துப்பாக்கிப் பிரயோகம் செய்வது இதற்குத் தான் எங்களுக்கு மேலிருந்து உத்தரவு வந்திருக்கிறது' என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், 'அமைதியாக போராட வந்தவர்களை தடிகொண்டு அடிப்பதா? துப்பாக்கிப் பிரயோகம் செய்வதா? அப்படி எந்த சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது' தடையை மீறுபவர்களை கைது செய்து சிறையில் அடைக்கவேண்டுமே தவிர, வேறு அடக்கு முறைகளை பிரயோகிக்கக் கூடாது. அத்து மீறியவர்களைக் கைது செய்யவில்லை. என்னையும், இன்னொரு சேர்மனையும் மட்டும் கைது செய்தார்கள். பாக்கியிருக்கிற விவசாயிகள் தோட்டத்தை விட்டு வெளியே வரவில்லை. காம்பவுண்டுக்கு முன்னால் தடிகொண்டு தாக்கியிருக்கிறார்கள். ஒரு பெண்மணியை தாக்கி, மண்டை உடைந்து, கைகால் முறிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. அவினாசியில் சத்தியாகிரகம் செய்ய வந்த தொண்டர்களை அடித்து, கோவிலுக்குள் புகுந்து விவசாயிகளை அடிக்கவேண்டிய நிலைமை என்ன ஏற்பட்டது? தடை மீறியவர்கள் கைது செய்யப்பட்டிருந்தால், இந்தப் பிரச்னைகள் வருவதற்கு நியாயமே இல்லை, அடிபடவேண்டிய அவசியமே இருக்காது, பலர் இறந்திருக்கவேண்டிய அவசியமே இருக்காது, துப்பாக்கிப் பிரயோகத்திற்கு அவசியமே இருக்காது.

மறுபடி 17-ம் தேதியன்று கோவையில் அமைதியான முறையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 15-ம் தேதி பலாத்காரமாக அடித்திருக்கிறார்கள். மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அடித்து ஒன்றும் செய்ய முடியாது





என்று தெரிந்து, பிறகு ஆங்காங்கு கைது செய்திருக்கிறார்கள். 15-ம் தேதியே கைது செய்திருந்தால், பலாத்காரத்தை தவிர்த்திருக்க முடியும். மண்டையடி, கைகால் முறியலை தடுத்திருக்க முடியும்.

19-ம் தேதி ஹர்த்தால் நடைபெற்றது. அமைதியான முறையில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பேர்களும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். அரசாங்கத்தால் கோவை நகரத்தைச் சுற்றி 5 மைலுக்குத் தான் 144 தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறது. போக்குவரத்தே நின்றுவிட்டது. இந்த ஜில்லாவிலே சர்க்கார் இதுவரையில் கண்டிராத அளவிலே ஹர்த்தால் நடைபெற்றிருக்கிற நேரத்தில், எங்கேயோ பெருமாநல்லூரில் நான்கு முக்கு ரோடில் இருந்து 2 பர்லாங் தூரத்தில் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. பெருந்துறைக்கு மேற்கே லாரி போக்குவரத்து கிடையாது. அவிநாசிக்குக் கிழக்கே லாரி போகமுடியாத நிலை. திருப்பூருக்கு வடக்கே லாரி வர முடியாது. இப்படி போக்குவரத்து குலைக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும், வன்முறையிலே கல்லைவிட்டு எறிந்தார்கள் என்ற காரணத்தைக் காட்டி, துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. அதன் விளைவாக மூன்று பேர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு என்ன தடயம் ஏற்பட்டது? என்ன அவசியம் ஏற்பட்டது? அவசியமே இல்லை. துப்பாக்கிச் சூடு ஏற்படவேண்டுமானால் ஏதாவது வன்முறைச் செயல்கள் நடந்திருக்கவேண்டும். பஸ்கள் ஏதாவது கொளுத்தப்பட்டிருக்கவேண்டும், அப்படி ஏதாவது சம்பவம் நடைபெற்றிருக்கவேண்டும். அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

கோவை நகரத்திற்கு 30 மைல்களுக்கு அப்பால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டிருக்கிறது? இதற்கு இடையே நீதி விசாரணை கோரப்பட்டது. எனக்கு முன்னால் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் வேண்டுமென்றே விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் விசாரணையிலிருந்து வித்டிரா செய்து கொண்டார்கள், இந்த விசாரணை தங்களை பாதிக்குமோ என்று அவர்கள் வித்டிரா செய்துகொண்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால், விவசாய சங்கம் அரசாங்கத்தை கோரியது என்ன? நீதி விசாரணை என்று சொல்கிறார்கள். 15-ம் தேதியிலிருந்து 19-ம் தேதி வரையில் தொடர்ச்சியாக நடைபெற்ற சம்பவங்களைக் குறித்து நீதி விசாரணை செய்யவேண்டும் என்று கோரினார்கள். அரசாங்கம் 19-ம் தேதி நடந்த சம்பவத்தை மட்டும் பற்றி நீதி விசாரணை கொடுக்க முடியும், 15 முதல் 19-ம் தேதி வரையில் நடந்த சம்பவங்கள் பற்றி நீதி விசாரணை கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு, இதில் நியாயம் கிடைக்கப் போவதில்லை, எப்பொழுது நியாயம் கிடைக்கிறதோ, அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம் என்று வித்டிரா செய்து விட்டார்கள். இப்பொழுது விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. கடைசியில் முடிவு எப்படி வருகிறது என்று பார்க்கலாம். (மணி அடிக்கப்பட்டது) நான் இன்னும் கொஞ்சம் விஷயங்கள் பேசவேண்டியிருக்கிறது. நான் பின்னால் தொடர்ந்து பேசுகிறேன். எனக்கு 15, 20 நிமிஷங்கள் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவே ஐந்து நிமிஷம் ஆகிவிட்டது. யாருக்கும் 10 நிமிஷத்திற்கு மேலே கொடுக்கவில்லை. சீக்கிரம் சுருக்கமாக முடித்துவிடுங்கள்.

**திரு. கே. என். குமாரசுவாமி :** இந்த நிலைமையிலே துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. இது சரிதானா? இந்த அளவுக்கு நிலைமைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. நீதி விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. இந்த சம்பவங்கள் அவசியமா? சமாதான முறையிலே, அஹிம்சா முறையிலே போராட்டம் நடத்த அனுமதிக்காமல் இருப்பது, போலீஸ் அல்லது அரசாங்கம் அனுமதிக்காமல் இருப்பது, ஜனநாயக மரபுக்கு விரோதமான செய்கை. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மூலம் ஜனநாயக அடிப்படையில் மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்ற நிலை தான் ஏற்படும்.

பெருமாநல்லூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அதற்குப் பின்னால் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை வரவேற்கிறேன். அதற்கு முன்னால் சரியான முறையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தால் இந்த துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டிருக்காது. நீதி விசாரணைக்கு 19-ம் தேதி நடந்த சம்பவம் மட்டும் தான் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்வது முறையாகாது. அதே போலத் தான் நெய்வேலியில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது . . . . (மணி அடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவடைகின்றன. இன்று மாலை 4 மணிக்கு மீண்டும் பேரவை தொடர்ந்து கூடும். முதலில் மசோதாக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவை முடித்த பிறகு, கண்டனத் தீர்மானத்தின்பேரிலும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பேரிலும் விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

பிற் பகல் 1-38 **பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.**

(இடைவேளைக்குப்பின்—மாலை 4-00 மணி)

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை அலுவல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் நிகழ்ச்சிகள் நாளை 9—9—1970-யோடு முடிகின்றன. முடிவுறாத அலுவல்கள் பேரவையின் அடுத்த கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கே. விநாயகம் :** ஸார், ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். அடுத்த கூட்டம் என்றால், பட்ஜட்டுக் கூட்டத்திற்குப் போய்விடுமா அல்லது நடுவில் டிசம்பர், ஜனவரியில் இருக்குமா என்கிற தகவலைக் கொடுக்கவேண்டும் என்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பட்ஜட்டுக் கூட்டத்திற்கு முன்னால் ஒரு கூட்டம் இருக்கும்.



(8) அரசினர் மசோதாக்கள்.

**(அ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—தீர்வை செல்திறன் ஆக்குதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 29/70).**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே,

"1970-ம் ஆண்டு தமிழ் நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (திருத்த, செஸ் வசூலிப்பதைச் செல்திறன் ஆக்குதல்) மசோதாவை * ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்"

என்று நான் முன்னுரைக்கிறேன்.

1959-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 23/1959) தமிழ் நாட்டில் வேளாண்மை விளைபொருள்களை வாங்குவதையும் விற்பதையும் முன்னிலும் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தவும் அங்காடிகளை ஏற்படுத்தவும், அவைகளைச் சிறப்பாக நிர்வகிக்கவும் விற்பனைக் குழுக்கள் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. விற்பனைக் குழுக்களின் முக்கியவருவாய் "செஸ்" மூலம் திரட்டப்படுகிறது. 1959-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 18-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, அறிக்கையிடப்பட்ட வேளாண்மை விளைபொருளை வாங்கும்போது அல்லது விற்பனை செய்யும்போது அவைகள் இந்த "செஸ்" வரியை வசூலிக்கின்றன. மேற்கூறிய விதியின் (3) வது துணைவிதி அவ்வாறு வசூலிக்கப்பட்ட "செஸ்" இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 286-வது பிரிவின் விதித்துறைக்கு உட்பட்டதாக இருக்க வகைசெய்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 286-வது பிரிவின் துணைப்பகுதி '3'-ன்படி மாநிலங்களுக்கு இடையிலான வியாபாரத்திலோ அல்லது வாணிபத்திலோ நாடாளுமன்றம் சட்டம் மூலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அறிவித்துள்ள பொருள்களை எந்த மாநிலமும் விற்பனையின்போதோ அல்லது வாங்கும்போதோ வரிவிதிப்பதையோ அல்லது வரிவிதிக்க அதிகாரமளிப்பதையோ செய்யலாம். ஆனால் அந்த மாநிலச் சட்டம், வரிவிதிப்புமுறை விகிதங்கள், மற்றும் வரியால் ஏற்படுகின்ற விளைவுகள் இவைகளில் நாடாளுமன்றம் சட்டம் மூலம் விதித்துள்ள கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டே செயல்படவேண்டும். இப்பிரிவைப் பயன்படுத்தி நாடாளுமன்றம் 1956-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தை (1956-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 74/1956) இயற்றியது. இது சில பொருள்களை மாநிலங்களுள் வியாபாரத்திற்கோ அல்லது விற்பனைக்கோ முக்கியமானதாக அறிவித்து அத்தகைய பொருள்களை வாங்கப்படுவதன் மீது அல்லது விற்பனை செய்யப்படுவதன் மீது மாநிலச் சட்டங்கள் எத்தகைய கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு வரிகள் விதிக்கலாம் என்பதையும் குறிப்பிடுகிறது.

* 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ம் தேதி சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய மத்தியச் சட்டத்தின் 15-ம் பிரிவு அறிவிக்கப்பட்ட பொருள்களை வாங்கும்போதோ அல்லது விற்கும்போதோ வரிவிதிக்க இரண்டு கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அதாவது, மாநிலத்திற்குள் வியாபாரிகள் செலுத்துகின்ற வரி, அவர்களுடைய பொருள்களின் விற்பனைகளின் மதிப்பீட்டிலோ அல்லது வாங்கும் பொருள்களின் மதிப்பீட்டிலோ இரண்டு சதவீதத்திற்குமேல் இருக்கக் கூடாது (1----7----1966-லிருந்து 3 சதவீதமாகியுள்ளது). அந்த வரி மாநிலத்தில் ஒரு முறைக்குமேல் வசூலிக்கப்படக்கூடாது. 1959-ம் ஆண்டு தமிழ்நாடு 23-வது சட்டத்தின் 18-ம் பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்ட வேளாண்மைப் பொருள்களின் மீது வரிவிதிப்பதும் "செஸ்" வசூலிப்பதும் (இது விற்பனைவரி மூலம் வசூலிக்கப்படுகிறது) 1956-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் 15-வது பிரிவினையொட்டியே இருக்க வேண்டும்.

1964-ம் ஆண்டு ரிட் மனு எண் 458-ல் கூறப்பட்டுள்ள தீர்ப்பை எதிர்த்துச் செய்த 1968-ம் ஆண்டு 468-ம் எண் ரிட் மேல் முறையீட்டில் சென்னை உயர்நீதி மன்றம் முடிவெடுக்கையில் 1959-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டம், 18-ம் பிரிவின் படி நிலக்கடலையின் மீது விற்பனைக்குழு வசூலிக்கும் "செஸ்" சட்டப்படி செல்லாதென்றும் இந்திய அரசிலமைப்புச் சட்டத்தின் 286-வது பிரிவின்படியும் மத்தியவிற்பனைச் சட்டத்தின்படியும், அறிவிக்கப்பட்ட பொருள்கள் சம்பந்தப்பட்டவரை புறம்பானதென்றும் தீர்ப்புக் கூறியுள்ளது. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு 1965-ம் ஆண்டு 4497-ம் எண் ரிட் மனுவில் உயர்நீதிமன்றம் அதே கருத்தை வெளியிட்டுள்ளது

எனவே இந்திய அரசியலமைப்புச் சட்டம் 286-வது பிரிவையும் மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் 15-வது பிரிவையும் ஒத்திருக்கும் வகையில் 1959-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டத்தின் 18-வது பிரிவைத் திருத்தவும், மேற்படி சட்டத்தின் கீழ் "செஸ்" விதிப்பதையும் வசூலிப்பதையும் சட்டப்படி செல்லக்கூடியதாக்கவும் அரசு முற்படுகிறது. தற்போது திருத்தப்பட்டவாறுள்ள மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தின் 13-வது பிரிவினையொட்டி அறிவிக்கப்பட்ட பொருள்களாகவுள்ள அறிக்கையிடப்பட்ட வேளாண்மை விளைபொருள்கள் சம்பந்தமாக மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தின் கீழ் விதித்து வசூலிக்கப்பட்ட "செஸ்" வரியைத் திருத்தியமைக்கவும் மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தின் கீழ் விதித்து வசூலிக்கப்பட்ட கூடுதல் "செஸ்" வரியைத் திருப்பித்தரவும் வகைசெய்யப்பட்டுள்ளன. மேற்சொன்ன செயற்குறிப்புகளைச் செயலுக்குக் கொண்டுவர 1970-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (திருத்த, செஸ் வசூலிப்பைச் செல்திறனுக்கல்) அவசரச்சட்டம் ஆளுநரால் சாற்றப்பட்டது. இந்த அவையில் முன்புள்ள இந்த மசோதா, அவசரச் சட்டத்தைச் சட்டமன்றப் பேரவையின் சட்டத்தால் நீக்கக் கோருகிறது. இந்தப் பிரேரணையை ஏற்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். முருகையன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய மசோதாவை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் வாங்கக் கூடிய செஸ் செல்லாது என்ற உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின் விளைவாக, இன்றையதினம் திருத்தம் வந்திருக்கிறது. இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் நம்முடைய



மாநிலத்திலே நல்ல முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த தானியங்களையும், மற்ற பொருள்களையும், நல்ல விலைக்கு விற்றுக் கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது. அப்படி நல்ல முறையில் விற்றுக் கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருப்பதால், சிப்பந்திகள் செலவுகளுக்காக குறைந்த கட்டணத்தை செஸ் ஆக வசூலிக்கிறார்கள். இது சட்டப்படி செல்லத் தக்கதல்ல என்று உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு அளிக்கப் பட்டதன் காரணமாக, ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் வருவாய் இல்லாமல் செயல்படும் என்பதால் திருத்தம் கொண்டு வந்திருக்கிறது. இந்தத் திருத்தம் நிறைவேறிய பிறகு, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளில் வாங்கக் கூடியவர்கள் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

இந்த செஸ் கொடுப்பதனால்தான் நல்ல முறையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நடக்க முடியும். விவசாயிகளுக்கு என்ன லாபம் என்றால், தாங்கள் உற்பத்தி செய்த எல்லாப் பொருள்களையும் இந்தக் கூடங்களில் நியாயமான விலைக்கு விற்க முடியும். விவசாயிகள் வியாபாரிகளிடத்தில் விற்பனை செய்கிற நேரத்தில், ஒரு மூட்டை 50 ரூபாய்க்கு விற்பதனால் ரூபாய்க்கு 3 பைசா கமிஷன் எடுத்துக்கொள்கிறார்கள். சில மண்டிகளில் இரண்டு பைசா கமிஷனாக எடுத்துக்கொள்கிறார்கள். 50 ரூபாய்க்கு வாங்கக்கூடிய பொருள் வியாபாரிக்கு 51 ரூபாய் ஆகும். ஆனால், விவசாயிக்கு 49 ரூபாய்தான் கிடைக்கிறது. இடையிலே உள்ள இடைத் தரகர்கள் 2 ரூபாய் பெறுகிறார்கள்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே பொருள்களை விற்பனை செய்கிற நேரத்தில் 50 ரூபாய்க்கு ஒரு மூட்டை வெளி மார்க்கெட்டில் விற்கிறது என்றால் கூட 50 பைசாவை வைத்து வியாபாரிகள் வாங்குகிறார்கள். அதிகப்படியான தரகு கிடையாது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விவசாயிகளுக்கு நல்ல சாதனையை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எனது ஊரான திருவண்ணாமலையில் மணிலா காலத்தில் ஒருநாளைக்கு மூவாயிரம், நான்காயிரம் மூட்டைகள் மணிலா வந்துகொண்டிருக்கின்றது. அங்கே விற்றவுடனே விவசாயிகளுக்குப் பணத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் குறைந்த தொகையை செஸ்ஸாக வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரக்கூடிய விவசாயிகளுக்கு சில குறைபாடுகள் இருக்கின்றன. அவர்கள் வண்டி ஓட்டிக்கொண்டு வருகிறார்கள். வண்டிகளை விடுவதற்கு வசதி செய்து தர வேண்டும். மாடுகளின் தீவனத்திற்கும், தண்ணீர் வசதி போன்றவைகளுக்கும் வசதி செய்து தரப்பட வேண்டும்.

மேலும் விவசாயிகள் காலையிலேயே உணவுப் பொருள்களை விற்றுவிட்டால் மாலையிலேதான் அவர்களுக்குப் பணத்தைக் கொடுக்கிறார்கள். விவசாயிகள் மாலையிலே பணத்தை வாங்கிக்கொண்டு தங்களுடைய ஊர்களுக்குப் போய்ச் சேர முடியாது. விவசாயிகள் தங்களுடைய மடிகளில் ஐந்தாயிரம், பத்தாயிரம் ரூபாய் வைத்துக்கொண்டு இரவு நேரங்களில் வெளியே போக முடியாது.

ஆகவே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலே விவசாயிகள் தங்குவதற்கும், அவர்களுக்குப் பாதுகாப்பு செய்து தருவதற்கும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்.

விவசாயிகளிடத்திலே நாம் செஸ்ஸாக வசூலிக்கிறோம். அவர்களுக்கு இன்னும் வசதிகளைச் செய்து கொடுத்தால் இன்னும் சிறந்த முறையில் பாடு பட்டு, தாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய எல்லா தானியங்களையும் அவர்கள் இங்கே கொண்டுவந்து விற்பார்கள். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பொதுவாக நாட்டிலே எல்லாப் பகுதிகளிலும் நன்றாகச் செயல்பட்டால் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும்.

அதேநேரத்தில் அங்கே ஒருசில தவறுகளும் நடைபெறுகின்றன. நான் காயிரம் மூட்டை மணிலா வருகிறது என்றால், சாம்பிளுக்காக பயிறு எடுக் கிறார்கள். பத்து வியாபாரிகள் வந்து பார்க்கக்கூடிய அளவுக்கு பயிறு எடுக் கிறார்கள். மறுபடியும் அந்தப் பயிறு எல்லாம் விவசாயிகளுடைய மூட்டை யிலே போய்ச் சேருகிறதா என்றால் இல்லை. ஒவ்வொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும் இந்தவிதமாக ஐந்து மூட்டைகள், பத்து மூட்டைகள் என்ற அளவில் சேதாரம் ஆக்கப்படுகிறது. அதை மாலையில் ஒன்றாகச் சேர்த்து எடை போடுகிறார்கள். ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் கணக்கில் அது சேர்க்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதேயொழிய, அப்படி நடப்பதில்லை. தவறுகள் நடைபெறுகின்றன. சாம்பிளுக்காக எடுத்த பயிறு கணக்கிலே கொண்டுவரப்படாமல் போய்விடுகிறது. ஆகவே, இதற்கு அரசாங்கத்திலே தனியாக ஒரு விதியைச் சேர்த்துச் செய்தால் நன்றாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பட்ஜெட் நேரங்களில் இதுபோன்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பற்றிச் சட்டமன்றத்திலே அதிகமாக யாரும் பேசுவது கிடையாது. ஒருசிலர் அதை எடுத்துச் சொல்கிறார்கள். ஒரு நாளைக்கு பல லட்சக்கணக்கான ரூபாய் விற்பனை செய்யும் விற்பனைக் கூடத்தில் சேதாரம் எவ்வளவு ஏற்படுகிறது என்பதைக் கணக்கில் கொண்டுவந்து, விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்கு நாம் நிச்சயமாகப் பாடுபட வேண்டும்.

வியாபாரிகள் இந்தமாதிரியான விற்பனைக் கூடங்கள் இருப்பதை எப்படி யாவது ஒழித்துவிட முடியாதா என்று பார்க்கிறார்கள். விவசாயிகளுக்குத் தாங்கள்தான் உதவி செய்வதுபோல் வியாபாரிகள் பிரசாரம் செய்கிறார்கள். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளுக்கு இன்னும் அதிகமான நன்மைகளைச் செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் அரசாங்கத் திற்கும் நல்ல பெயர் ஏற்படும். இடைத்தரகர்கள் இருக்கமாட்டார்கள் என்று சொல்லிக்கொண்டு, இந்த மசோதாவை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் திருத்த மசோதாவை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



வட ஆர்க்காடு மாவட்டத்தில் இப்போது விற்பனைக் கூடங்கள் இருக்கின்றன. இதற்கு செஸ் விற்பனை வசூல் மூலமாக வருமானம் வருகிறது. இதிலே ஒன்று சொல்ல நான் விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மனதிலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் உதாரணமாக மணிலா பயிர் விற்பனை, எங்கு விற்பனை செய்தாலும் செஸ் என்று வசூலித்து விடுகிறார்கள். தனிப்பட்டவர்களிடம் விற்பதைவிட, கூடுதலாக விற்பதற்குத் தான் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இருக்கின்றனவே தவிர, சுங்கம் வசூலிக்கும் இடமாக இருக்கவில்லை. விவசாயிகள் எங்கு விற்கிறார்களோ அந்த இடத்தில்தான் செஸ் வசூலிக்கவேண்டும். மாவட்டம் பூராவிலும் செஸ் வசூலிப்பது பொருத்தமாக இல்லை. இதன்காரணமாக வெல்ல வியாபாரிகள் வழக்குத் தொடுத்து உயர்நீதிமன்றத்திற்குக்கூட போய் இருக்கிறார்கள். ஆகவே, செஸ் வசூலிப்பதை அதிகமாக இல்லாமல், குறைவாக வசூலிக்க வேண்டும் என்று சொல்லி இந்த மசோதாவை ஆதரித்து, வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைப்பற்றிய மசோதாவை ஆதரிக்கக்கூடிய நேரத்தில் அடிப்படையான குறைபாடுகள் பற்றி பொதுமக்களுடைய ஆலோசனைக்கும், விட்டு, அவர்களு டைய அபிப்பிராயத்தையும் கேட்டுக்கொள்ள வேண்டுமென்பதற்காக வேண்டி, என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்உள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-தீர்வை செல்திறன் ஆக்குதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 29/70)"

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-தீர்வை செல்திறன் ஆக்குதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 29/70) நிறைவேற்றப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறை வேற்றப்பட்டது.

* 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ம்தேதி சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 30/70)

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 30/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

1970-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (திருத்தம் தீர்வை செல்திறன் ஆக்குதல்) மசோதாவை ஆலோசனைக்காக முன்னுரைக்கும்போது 1952-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் 18 பிரிவின் (1) உட்பிரிவினைத் திருத்த வேண்டிய அவசியத்தை தக்க காரணங்களோடு விவரமாகக் கூறியிருக்கிறேன். வரி விதிப்பை ( buy ) என்பதற்கு பதிலாக "கட்டணம்" ( fee ) என்று மாற்றினால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 286-வது பிரிவு 1956-ம் ஆண்டு மத்திய விற்பனைச் சட்டம் இவைகளினால் விளைகிற பல சிக்கல்களை ஏற்படா வண்ணம் செய்யலாம் என்று கருதப்பட்டுள்ளது. அதிகப்படியான கட்டணமும் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படியே தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் 18-வது பிரிவின் (1) உட்பிரிவைத் திருத்தி விற்பனைக் குழுவிற்கு "கட்டணம்" விதிக்கும் அதிகாரத்தை அளிக்கவும், அதன் விளைவால் மேற்படி சட்டத்தில் மற்ற விதிகளை மாற்றம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி கருத்துக்களைச் செயலாக்க 1970-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (1970-ம் ஆண்டு தமிழ்நாடு அரசுச் சட்டம் 3/1970) ஆளுநரால் சாற்றப்பட்டுள்ளன.

இந்த அவையின் முன்புள்ள இந்த மசோதா அவசரச்சட்டத்தை, நீக்கக் கோருகிறது. எனவே இந்தப் பிரேரணையை ஏற்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Thiru K. RAMAMOORTHI : Sir, I move the following amendment :—

'That the Bill be circulated for the purpose of eliciting opinion thereon'

Thiru K. VINAYAKAM : Sir, I second it.

Thiru A. A. SUBBA RAJA : Sir, I move the following amendment :—

'That the Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 be referred to a Select Committee consisting of ......... Members of the Assembly.' Names of Members to be furnished later.)

The amendment was duly seconded.



திரு. வி. கே. கோதண்டராமன் : என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள

'That the Bill be circulated for the purpose of eliciting opinion thereon'

என்கிற திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, out of pity of second it.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை மக்களுடைய கருத்தை அறிந்துகொள்ள அவர்களுக்கு முன்வைக்கவேண்டும் என்ற திருத்தத்தை நான் முன்மொழிந்திருக்கிறேன். இதற்கு முன்னால் ஒரு மசோதா கொண்டுவந்தார்கள். அதைச் சட்டமாக நிறைவேற்றிவிட்டோம். ஏற்கனவே வசூலித்த பணத்தை செல்லுபடியாக்க அந்த மசோதா கொண்டு வரப்பட்டதாகையால் எங்களுடைய எதிர்ப்பையும், ஆட்சேபத்தையும் எழுப்பவில்லை. ஆனால் அப்படி அல்ல இந்த மசோதா. இதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சபைமுன் அமைச்சர் அதை வைத்திருக்கிறபோது நானும் சில கருத்துக்களை அவை முன் வைக்க விரும்புகிறேன்.

இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிற விதமே சரியல்ல. நாம் ஒரு மசோதாவைக் கொண்டு வந்து—அது உயர்நீதி மன்றத்திலே செல்லாது என்ற அடிப்பட்டுவிட்டது என்றால் அந்த மசோதாவை செல்லுபடியாக்க நம்முடைய அதிகாரத்தை வைத்து இது கொண்டுவரப்படுகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிற அமைச்சர் அவர்கள் இதற்கான விளக்கத்தையும், காரணங்களையும் சொல்கின்ற நேரத்தில் இந்தச் சட்டம் உயர்நீதி மன்றத்திலே என்ற காரணத்திற்காக இந்த வரிவிதிப்பைச் செல்லுபடியாக்குவதற்காக இன்ன இன்ன விதிமுறைகளின் கீழ் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு நாம் நீதித்துறைக்கு மதிப்பளிக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. இது சரியான போக்கு அல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து அமைச்சர் அவர்கள் பேசும்போது 'செஸ்' என்று இருப்பதை 'கட்டணம்' என்று மாற்றிவிட்டால் இதில் இருந்து பிழைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். சட்டத்தில் இருந்து தப்பிக்கொள்ள அரசே இப்படி நடவடிக்கை எடுக்கத் தொடங்கிவிட்டால் நாம் யாரைக் காப்பாற்றுவது? இந்த மாதிரியான போக்கு, எண்ணம் நியாயமானது அல்ல, ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு வரிவிதிப்பைப் பற்றி இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். பொழுதுபோனால் பொழுதுவிடிந்தால் நாம் விவசாயப் புரட்சியைப் பற்றிப் பேசுகின்றோம். ஆனால் திரும்பத் திரும்ப விவசாயிகளின் மீது தான் வரியைப் போடுகிறோம். இந்த மசோதாவிலும் கூட இந்த வரியை விவசாயிகளும்தான் கட்ட வேண்டியிருக்கிறது. அவர்கள் தான் உற்பத்தியாளர். விற்பனை செய்பவர். வாங்குகிறவர்களும் கட்டவேண்டியிருக்கிறது. ஏற்கனவே விவசாயிகள் விவசாய வருமான வரி கட்டுகிறார்கள். மூலச் சட்டத்தை உயர்நீதி மன்றம் செல்லாது என்று தீர்ப்பளித்தபின் நாம் திருத்த மசோதா கொண்டு வருகிற இந்த நேரத்திலாவது விவசாயிகளுக்கு விலக்கு அளித்திருக்கலாம். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை 1959-இல் இருந்த நிலைமை வேறு, 1970-இல் இருக்கிற நிலைமை வேறு. விற்பனைக் கூடங்களை நிர்வகிக்கின்ற பொறுப்புக்கு

பணம் தேவைப்படுகிறது என்றால் வாங்குகிறவர்களிடத்தில் இந்தக் கட்டணம் வாங்கினால் போதுமானது. விவசாயிகளின் மீது போடவேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கு விலக்களிக்க ஒரு அரிய வாய்ப்பு இருந்தும் அதை இந்தச் சர்க்கார் நழுவவிட்டிருக்கிறது.

மாலை 4·30 அடுத்து கட்டணமாக நூற்றுக்கு 45 பைசா அதிகபட்சமாகவும், குறைந்த பட்சம் 20 பைசாவும் விதிக்கவேண்டும் என்று இருக்கிறது. இதனால் வியாபாரிகள் பாதிக்கப்படமாட்டார்கள். என்றாலும் சாதாரண ஏழை எளிய விவசாயிகள் குறைந்தபட்சம் 20 பைசா கட்டணத்தைக் கட்டும் படியான நிலைமை ஏற்பட்டே தீரும். ஆக, எல்லாவகையிலும் விவசாயிகள் மீது தான் வரி விதிக்கப்படும் என்பதற்கு இந்த ஒரு மசோதாவே போதும். இப்போதைக்கு இது குறைந்த பட்சம் 20 பைசாதான் என்றாலும் நாளாவட்டத்தில் விற்பனை வரி மசோதாவைப் போல இதுவும் கூடிக்கொண்டே போவதற்கு இது ஒரு வழிகோலியாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்பது எங்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆனால் வரியைக் கொடுங்கள் என்று சொல்லுகிறீர்கள். ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த நெல்லை விற்பனை செய்வதில் எவ்வளவோ கஷ்டம் இருக்கிறது. இடைத் தரகர்களை ஒழிக்க முடியவில்லை. நாங்கள் ஆட்சியிலே இருந்தபோது ஏன் ஒழிக்கவில்லை என்று நீங்கள் கேட்கலாம். நீங்கள் என்ன செய்கிறீர்கள், என்று அறிய விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் மிக அழகாக இந்த சாம்பிள் எடுப்பதைப் பற்றிச் சொன்னார். அதோடு மட்டுமல்ல மிகச் சாதாரணமாக விவசாயிகள் இந்த நிலைக்கு ஆளாக நேரிடுகிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இது தவிர்க்கப்படவேண்டும். அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தாகவேண்டும்.

பல வியாபாரிகள் விவசாய நெல்லை கொண்டு போய் விற்பனைக் கூடங்களில் விற்க இயலாத அளவுக்குத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய பகுதியான திண்டிவனத்தில் 4, 5 பேர்களாக சேர்ந்து அந்த விவசாயிகளை மிரட்டி அவர்கள் கொண்டு வருகிற நெல்லை விற்பனைக் கூடங்களுக்கு கொண்டு போக முடியாத அளவுக்கு அவர்களையும் அடிப்பது திருடுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி எடுத்த அந்த நெல்லை கொண்டு போய் கள்ள மார்க்கட்டிலே விற்கக்கூடிய அளவிலே இருக்கிறது. இது போலவே விழுப்புரத்திலும் பல இடங்களில் இப்படி நடந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வரி விதிப்பை நாம் வைப்பதற்கு முன்பாக பொது மக்களின் கருத்தை அறியவேண்டுமென்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இன்றுள்ள சமுதாய அமைப்பிலே நீதிமன்றங்கள் அளிக்கக் கூடிய தீர்ப்பை அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றோ அல்லது அப்படியே விட்டுவிடவேண்டுமென்றோ நான் ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. காரணம் இன்றைக்கு பொது மக்களுக்கு சாதகமான முறையில் எந்த அளவுக்கு எந்தெந்த துறையில் அமல் படுத்த வேண்டுமென்ற எல்லா



தீர்ப்புகளையும் நாம் அமல் படுத்தி அதற்கு வேறு விதமான முறையில் சட்டத்தை அமல் படுத்தவேண்டுமென்ற அடிப்படையில் உள்ள நிலைமைகளைத் தான் நாம் பார்க்கக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். அப்படிப் பார்க்கக்கூடிய நோத்திலே நமக்கு மணிலா வந்திருக்கிறது. இந்தப் பிரச்சினை உயர்நீதி மன்றத்திற்குச் சென்று சர்க்காருக்கு விரோதமான முறையிலே தீர்ப்பு ஏற்பட்டதற்குப் பிறகு அதை வேறு ரூபத்திலே இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த குறிப்பிட்ட பொருள் மணிலாப் பயிர். மணிலாப் பயிறுக்கு எத்தனை வரிகள் இருக்கின்றன என்று நான் சொல்லாமலேயே அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எண்ணெய்க்கு 3 சதவிகிதம், பிண்ணாக்குக்கு 3 சதவிகிதம், மணிலா பயிருக்கு 3 சதவிகிதம் வரி போடப்பட்டிருக்கிறது. அது மத்திய சர்க்கார் போட்டாலும் சரி, அல்லது ராஜ்ய சர்க்கார் போட்டாலும் சரி, அதற்கு மேலும் அப்பயிருக்கு மார்க்கட்டிங் கமிட்டி விதிக்கிறது ஒரு வரி. கடலைக்கு, பொட்டுக்குக் கூட வரி போடப்போவதாக கேள்விப்படுகிறேன். அது உண்மையா, இல்லையா அமைச்சர்தான் சொல்லவேண்டும். ஆகவே ஒரு பொருள் மீது போட பல்வேறு வரிகளை விதிக்கக் கூடிய நிலைமையிலே அந்த அளவுக்கு பாதிக்கிறது. தேங்காய் மேல் வரி போட்டோம், உடனே எடுக்கப் பட்டது.

இந்த மணிலாப் பயிர் மீது வரி போடுகிறோம் என்று சொல்லக் கூடிய நோத்திலே அது 'கமர்ஷியல் கிராப்ஸ்' அதாவது வியாபாரப் பொருள் அப்படி என்று சொல்லலாம். அது எண்ணெயாக மாறுகிறது, சோப்பாக மாறுகிறது, பிண்ணாக்காக ஆகிறது. ஆனால் தேங்காய் கொப்பரை எண்ணெயாக மாறுகிறது, அந்த எண்ணெ சோப்பாக மாறுகிறது. அந்த சோப்பு உபயோகப் படுத்தப் படுகிறதா, இல்லையா? அந்த நிலைமையிலே வேறு வியாபாரப் பொருள்களை உபயோகப்படுத்துகிற சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால் அந்தப் பொருள்களுக்கு டாக்ஸ் போடுங்கள் என்ற அர்த்தம் ஆகிறது. அதற்காகத்தான் போடப்படுகிற வரி அதை வசூல் செய்கிற அளவுக்கு விவசாயி பாதிக்கப்படுகிறான். அதுவும் மார்க்கட்டிங் என்று சொல்லிவிட்டு அது தனிப்பட்ட வியாபாரிகள் வாழ்வை பாதிக்கக்கூடிய அளவுக்கு அந்த பிரைவேட் வியாபாரிகளை அப்படியே விட்டு விடவேண்டுமா? சில பகுதிகளில் மட்டும் அல்லது யார் வந்துகேட்கிறார்களோ அவர்களுக்கு மட்டும் விலக்கு என்று இருக்குமானால் இந்த மார்க்கெட்டிங் ஒழுங்காக நடக்குமா?

இன்றைக்கு பஞ்சாப், அரியானா இங்கெல்லாம் கம்ப்பல்சரி மார்க்கெட்டிங் இருக்கிறது. இன்னும் எந்தெந்த ராஜ்யத்திலே இருக்கிறதோ எனக்குத் தெரியாது. அமைச்சர்தான் சொல்லவேண்டும். ஏற்கெனவே நான் பத்திரிகையில் பார்த்தேன், அது கைவிடப்பட்டதா? இல்லை யாராவது வியாபாரிகள் வந்து தகராறு பண்ணி வற்புறுத்தி அதற்குப் பிறகு கைவிடப்பட்டதா? என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே கம்ப்பல்சரி மார்க்கெட்டிங் கொண்டு வருவதன் மூலமாகத்தான் விவசாயம் ஒழுங்காக நடைபெறும். அந்த விவசாயிகள் பலன் அடைவார்கள், என்பதை பொதுமக்கள் காணக்கூடிய அளவுக்கு சூழ்நிலை ஏற்படமுடியும். அப்படி கம்ப்பல்சரி மார்க்கெட்டிங் வரக்கூடிய நேரத்திலே நாம் என்ன செய்யவேண்டியிருக்கிறது? தனிப்பட்ட முதலாளிகள் சரக்குக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள் என்று சொன்னால் 75 சதவிகிதம் முன்தொகை

கேட்கிறார்கள். அப்படி நாமும் விவசாய அபிவிருத்திக்காக வேண்டி ஒரு பொருள் விற்பனை செய்யக்கூடிய அளவு அந்தப் பொருள் மீது 75 சதவிகிதம் அட்வான்ஸ் பணம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும். அப்போதுதான் தனிப்பட்ட வியாபாரிகளிடத்திலே 75 சதவிகிதம் கேட்டால் 100 தருகிறேன் என்று சொல்வார்கள். நாம் 100 கொடுத்தால் அவர்கள் 150 தருகிறேன் வா என்று சொல்வார்கள். இது ஒரு ஸ்டேட் டிரேடிங் மாதிரி இருக்கிறது. அது விவசாயிகளுக்கு விரோதமாக வரக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே இந்த முறையிலே கம்ப்பல்சரி மார்க்கெட்டிங் முறையைக் கொண்டு வருவதன் மூலமாகத்தான் விவசாயிகள் பலன் காணமுடியும்.

அதே மாதிரி நெல்லை எடுத்துக் கொண்டால் விளைகின்ற நெல்லில் 5 சதவிகிதம் இந்த மார்க்கெட்டிங்குக்கு வருகிறதா என்று பார்த்தால் சந்தேகம் தான். ரெடியாக கொடுக்கிறார்கள் என்றால் அவர்கள் கள்ள மார்க்கெட்டில் கொள்ளை லாபத்திற்கு விற்பதை நாம் ஒன்றும் பண்ணுவதற்கில்லை, என்ற நிலைமைதான் இருக்கிறது. இது முறையா, இது நியாயமா? ஆகவே, இந்த கம்ப்பல்சரி மார்க்கெட்டிங் கொண்டு வருவது மட்டுமல்ல, விவசாயி உற்பத்திப் பண்ணுகிற எந்தப் பொருளாக இருந்தாலும் அந்த மார்க்கெட்டிங் கமிட்டிக்கு வரவேண்டும். அது முட்டையாக இருந்தாலும், அல்லது கோழியாக இருந்தாலும், மாடாக இருந்தாலும் அல்லது ஆடாக இருந்தாலும், அமைச்சர் அவர்கள் சிரிக்கிறார்கள், அவர்கள் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளலாம். பஞ்சாப், அரியானாவில் அப்படித்தான் நடக்கிறது. ஆக அத்தனையும் மார்க்கெட்டிங் கமிட்டிக்கு வரக்கூடிய சூழ்நிலை உண்டாகிறது.

இன்றும் என்ன நிலைமை? தனிப்பட்ட வியாபாரிகள் ஒவ்வொரு மூட்டையிலும் சாம்பிள் என்ற பெயரில் கொஞ்சம் மணிலாப் பயிரை எடுக்கிறார்கள். அதுமாத்திரமன்றி இடையிலும் தட்டிவிடுகிறார்கள். 100 கிலோ இருக்க வேண்டுமென்றால் 110 கிலோ எடை போடுவான் இல்லையென்றால் 90 கிலோ எடை போடுவான். ரொம்ப மோசமான நிலைமை இருக்கிறது. எந்த விதத்தில் வரி போட்டாலும் அந்த வரியை பில்லில் காண்பிப்பதில்லை. வேறு ரூபத்தில் எடுக்கக்கூடிய அளவுதான் இருக்கிறது. இவ்வளவையும் பொதுமக்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கக்கூடிய அளவுக்கு விட வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறேன். கம்ப்பல்சரி மார்க்கெட்டிங் முறையை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மசோதாவைத் தவிர இன்னொரு மசோதாவையும் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதும், கண்டனத் தீர்மானத்தின் மீதும் விவாதம் நடக்க வேண்டியிருப்பதால், இந்த மசோதாவின் மேல் பேசுகின்ற உறுப்பினர்கள் கூடுமான அளவு குறைந்த அளவு பேசும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவிற்குக் கொடுக்கப்பட்ட ஸ்டேட்மென்ட்ஸ் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸை பார்க்கும் போது—



"Under sub-section (1) of section 18 of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959), market committees levy cess by way of sales tax on any notified agricultural produce bought or sold in the notified market area... ...

By virtue of this Article the Parliament has enacted the Central Sales Tax Act, 1956......

the tax payable by any dealer inside the State shall not exceed two per cent (three per cent from 1st July 1966) of the sale or purchase thereof and such tax shall not be levied at more than one stage in a State ...

The High Court while disposing of Writ Appeal No. 468 of 1968 against the judgment in Writ Petition No. 458 of 1964 held that the levy of cess on groundnut by the market committee under section 18 of Tamil Nadu Act 23 of 1959 was illegal and unconstitutional........."

என்று சொல்லியிருக்கிறார்கள். புதிதாக வரி ஒன்றும் இல்லை. போடுகின்ற வரியை சட்டப்படி வசூலிக்க முடியாத நிலையிலே 'ஃபீ' என்று மாற்றியிருக்கிறார்கள். டாக்ஸ் என்பதற்கும் ஃபீ என்பதற்கும் டெபனிஷன் ஹைகோர்ட்டிலே சொல்லி இருக்கிறார்கள். டாக்ஸ் என்பது "பர்டன் ஆப் தி பீப்பிள்". நகரசபைக்கு வீட்டு வரியைக் கொடுப்பதாகச் சொன்னால், வீட்டு முன்னால் வாருகால் இல்லை, லைட் போடவில்லை என்றெல்லாம் கேள்வி கேட்க முடியாது. அதேநேரத்தில் 'ஃபீ' என்று சொன்னால்—'It is burden on the people' என்றுதான் ஆகும். டாக்ஸ் என்பதை எடுத்துவிட்டு ஃபீ என்று போடுவதன் மூலம் நீங்கள் மாட்டிக் கொள்ளும் நிலைமைதான் இருக்கிறது. சட்டப்படி வசூலிக்கும் ஃபீக்குத் தகுந்தபடி இன்ஸ்டிட்யூஷன்களுக்கு சர்வீஸ் செய்து கொடுக்க வேண்டும். நாளைக்கு ஒருவர் ஃபீ ஆக கலெக்ட் பண்ணி இருக்கிறார்கள், இதற்குண்டான வேலை செய்யவில்லை என்று சொன்னால் அன்றைக்கு கோர்ட்டில் இந்த மசோதா நிற்குமா என்பதை யோசிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் லா டிப்பார்ட்மெண்டை எல்லாம் கலந்திருக்கக்கூடும். அவர்கள் என்ன அபிப்பிராயம் சொன்னார்கள் என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் கூற வேண்டும். இதற்கும் மேலாக—You have not rendered service and it is not Compensationing the fee.

என்று சேலஞ்சு பண்ணினால் என்ன பண்ண முடியும்? அமைச்சர் அவர்கள் இதைப் பற்றிச் சரியான விளக்கத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமருகிறேன்.

**திரு. மா. பா. சாரதி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த திருத்தத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் நடைபெறக்கூடிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் நல்ல முறையில் விவசாயிகளுக்கும் அதே நேரத்தில் வியாபாரிகளுக்கும் பயன்பட்டு வருகிறது. அங்கு செஸ் முறையில் வரி அடாவடித்தனமாக வாங்கப்படுவதாகக் கூறி அதிலே ஒழுங்கீனங்கள் இருக்கின்றன என்று கூறி

வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கு வியாபாரிகளுக்கு ஆதரவாக முடிவாகிவிட்டது. மற்ற இடங்களில் மணிலாப் பயிரை விற்பனை செய்யக் கூடாது, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மட்டுந்தான் விற்பனை செய்யப்பட வேண்டும், அதுமட்டுமல்லாமல் எந்தெந்தப் பொருள்கள் இந்த விற்பனைக் கூடத்தில் விற்கப்பட வேண்டுமென்று உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கிறதோ, அவ்வளவும் விற்பனைக் கூடத்திற்கு வந்து சேர்ந்துதான் விற்கப்பட வேண்டும். அதன்மூலம் விற்பதால் விவசாயிகளுக்கு எவ்வளவோ நன்மையாக இருக்கிறது. இப்போது கட்டணமாகப் போடுவதால் விவசாயிகளுக்கும் நன்மை இருக்கிறது, வாங்குபவர்களுக்கும் நன்மை ஏற்பட்டிருக்கிறது. நூறு மூட்டை மணிலாப் பயிரை மற்ற மார்க்கெட்டில் வாங்க வேண்டுமென்றால், 500 ரூபாய் அதிகம் கொடுத்தால்தான் வாங்க முடியும்.

மதிப்பிற்குரிய முருகையன் அவர்கள் கூறியது போல் திருவண்ணாமலை, வேலூர், ஆற்காடு, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நல்ல முறையில் நடைபெற்று வருவதால், நண்பர் சுப்பராஜா அவர்கள் சொன்னது போல், இந்தக் கட்டணத்தை சட்ட நூலுக் கத்திற்கேற்ப வசூலிப்பதில் ஆட்சேபணை இருக்கமுடியாது என்ற என்னுடைய கருத்தை கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, விவசாய விளைபொருள்கள் அங்காடிகள் திருத்த மசோதாவின் மீது சில திருத்தங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இந்த வரி சேல்ஸ் டாக்ஸ் என்ற பெயரால் தான் அழைக்கப்படுகிறது, எவ்வளவோ ஆண்டு காலமாக விதிக்கப்பட்டு வரு கிறது. இதை வாங்குவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன, ஆகவே, இதை வாங்கக்கூடாது என்று ஹைகோர்ட்டில் தீர்ப்புக் கொடுத்து விட்டார்கள். அப்படியானால் ஏற்கெனவே வசூலித்த பணத்தையெல்லாம் அவரவர்களுக்குச் கொடுத்துவிட வேண்டும். அதைக் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் 'செஸ்' என்பதை கட்டணம் என்று மாற்றிவிட்டால் ஏற்கெனவே வாங்கப்பட்ட பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டாமென்ற முறையில் அரசாங்கம் இதைக் கொண்டு வந்திருக்கிறது.

கட்டணம் என்று சொல்லி சிலவற்றை வசூலிக்கிறோம். அது மிகக் குறைந்த அளவுதான் இருக்கிறது முன்பு செஸ் என்ற முறையில் 100 ரூபாய்க்குப் பொருள்கள் வாங்கினாலும், விற்றாலும் 50 புதுக்காசுகள் கட்ட வேண்டுமென்று போட்டிருந்தோம். இப்போது அது 25 காசாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பல வசதிகள் உற்பத்தி யாளர்களுக்குச் செய்து தரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் சொல்லியது போல் எல்லா விதமான வசதிகளும் செய்து கொடுத்து வருகிறோம் என்பதை அங்கத்தினர்களே உணருவார்கள். தரமான பொருள்களை வாங்கி விற்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நிறுவையிலும் கூட தவறுகள் ஏற்படா வண்ணம் ஒழுங்கான முறையில் செய்து தரப்பட்டிருக்கிறது. பணத்தை வாங்கிக் கொண்டு போகிறவர்களுக்கு ஒழுங்காகப் பட்டுவாடா செய்யப்படு கிறது. கொண்டு வருகிற விவசாய தானியத்தை உலர்த்த, சுத்தம் செய்ய,



கொட்டி வைத்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்து தரப்படுகின்றன. தொலைபேசி மூலம் வியாபாரிகளுடன் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கொண்டு வந்த தானியங்களை ஒரு வாரம், பத்து நாட்களுக்கு வைத்திருந்து விற்கவில்லை என்றால், திரும்ப எடுத்துச் செல்லுவததில் கஷ்டங்கள் இருப்பதால் அடுத்த சந்தையில் விற்கும் வகையில் குறுகிய காலத்திற்கு அங்கேயே வைத்துக் கொள்ளுவதற்கு வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

இவைகளை எல்லாம் செய்து கொடுத்துக் கொண்டுதான் வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் கோதண்டராமன் அவர்கள் கட்டாயமாக எல்லாப் பொருள்களையும் இங்கு கொண்டு வந்து விற்கவேண்டும் என்று சட்டத்தை இன்னும் மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல் இங்கும் கொண்டு வர வேண்டும் என்று சொன்னார்கள். அந்த நல்லெண்ணத்தோடு அதை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அது நிச்சயமாக வரும் என்று நானும் நம்புகிறேன். வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் மசோதா பற்றிப் பேசும்போது ஆடுகள், மாடுகள் என்றெல்லாம் சொன்னார்கள். அதற்காகத் தான் நான் சற்று சிரித்தேன். வேளாண்மை விளைபொருள்களை அத்தனையும் இங்கு கொண்டு வந்து விற்கவேண்டுமென்று சொன்னார்கள். அப்படி ஒழுங்கான முறையில் அங்காடிகள் வழி விற்கவேண்டுமென்பதை அரசாங்கம் உணருகிறது. அதை ஆலோசித்து வருகிறது.

இந்த செஸ் என்பது வரி அல்ல. ஆகவே, அதைக் கட்டணம் என்ற பெயர் மூலம் குறைந்தளவில் வசூல் செய்து தரவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் கூறியதுபோல் சட்டத்துறை இதை நல்லமுறையில் பரிசீலனை செய்துள்ளது. செஸ் என்பதை 'ஃபீ' என்று ஆக்கவேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறது. இதில் ஏதாவது ஒழுங்குப் பிரச்சினை அல்லது சட்டப் பிரச்சினை வந்து மீண்டும் வியாபாரிகள் வழக்கு போடுவார்களே என்ற அச்சம் உறுப்பினர் அவர்களுக்குத் தேவையில்லை. அப்படி வந்தாலும் அதைப் பார்த்துக்கொள்ள சட்ட இலாகா இருக்கிறது. ஒரு திருத்த மசோதா கொண்டுவருகிறபோது எல்லாவற்றையும் ஆலோசனை செய்துதான் கொண்டுவரப்படுகிறது என்று எடுத்துக் கூறி பொறுக்குக்குழுவிற்கு விட வேண்டுமென்று அவர்கள் திருத்தம் கொடுத்திருந்தாலும், இதன் அவசியத்தை உணர்ந்து அதை வலியுறுத்தாத காரணத்தினால், என் நன்றியைக்கூறி கொடுக்கப்பட்டுள்ள திருத்தத்தை திரும்பப் பெற்று இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—**

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 30/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற் றப்பட்டன.

குறுந்தலைப்பு முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, "இந்த மசோதா நிறைவேற்றப்படவேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் வண்டிகளைக் கேட்டுப் பெறுதல் மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 32/70).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் வண்டிகளைக் கேட்டுப் பெறுதல் மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 32/70)-வை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள மேதகு ஆளுநரவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) ஒரு மசோதா என்ன காரணத்திற்காகக் கொண்டுவரப்படுகிறதாகச் சொல்லப்படுகிறதோ, அக்காரணம் இல்லாத சூழ்நிலையில் அம்மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள அவசியமின்மை குறித்து.

**திரு. க. இராமமூர்த்தி :** On a point of Order இந்த மசோதா குறிப்பிட்ட ஒரு காரணத்தை முன் வைத்து அதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ பகுதியில் இந்த மசோதா என்ன காரணத்திற்காகக் கொண்டுவரப்படுகிறது என்பதை விளக்கி இருக்கிறார்கள்.

The Government have received information about the proposal of the private operators to take their vehicles off the road on the 15th August 1970. Such stoppage of motor vehicles would have caused considerable inconvenience to the public. It was therefore considered necessary to provide uninterrupted service to the public. As the number of motor vehicles available with the Government were not sufficient for the purpose, it was necessary to take power to requisition the motor vehicles belonging to private operators.

இந்த மசோதாவினுடைய நோக்கம் இன்றையதினம் நிறைவேறிவிட்டது. ஏனென்றால் ஆகஸ்ட் 15-ம் தேதியை நாம் கடந்துவிட்டோம். இந்த அவசரச் சட்டத்தை என்ன காரணத்திற்காகக் கொண்டுவருகிறார்களோ, அந்த சூழ்நிலை ஏற்படவில்லை. ஆகவே இந்த மசோதா 'it is infructnous.' ஆகவே அவசியம் இல்லாத சூழ் கருவிலேயே சிதைந்து விட்டமாதிரியாகும். ஆகவே அவசியம் இல்லாத சூழ்நிலையில் இந்த மசோதா இன்றையதினம் கொண்டுவரப்படுகிறது. என்ன காரணத்திற்காக இது கொண்டுவரப்படுகிறது என்று சொல்கிறோமோ, அந்தக் காரணம் இன்றையதினம் நாட்டில் இல்லை. என்ன காரணத்திற்காக இது கொண்டுவரப்படுகிறது என்று சொல்லப்படுகிறதோ, அந்தச் சூழ்நிலை இன்றைய தினம் நாட்டில் இல்லாத நிலைமையில் இப்படி ஒரு மசோதாவைக் கொண்டு



வருவதற்கு வழியே இல்லை. ஆகவே இந்த மசோதாவை மன்றம் ஏற்றுக்கொள்வதற்கில்லை, ஆய்வு செய்வதற்கு எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை என்ற ஒழுங்குப் பிரச்சினையை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

THIRU K. RAMAMOORTHI : The Bill is not in order. What is stated in the 'Statement of Objects and Reasons' is already over.

MR. DEPUTY SPEAKER : It is not against the proceedings of the House. ப்ரொசீடிங்ஸ்ஸுக்கு எதிராக இல்லையே.

THIRU K. VINAYAKAM : I claim your attention to what I am going to say. There is no political justice in this kind of political measure. There is no political morality in this Bill because the purpose is to serve as a Damocles' Sword among heads of private owners. Private owners threatened that they would withdraw their fleet strength from the roads on a certain date. Talks were held and a reapproachment was effected between the two, viz., Government and the various fleet owners.

One thing more, Sir. This is to serve as a Damocles' Sword on private operators. Why should we the Legislative Assembly be made a scape-goat to pass this kind of measure which is designed to threaten the various bus operators in this part of the country with the Damocles' Sword, saying 'if you misbehave we are going to bring this into operation. That should not be the object of any Government. There is no political morality in this Bill. I am sorry to say there is no purpose in this Bill.

For instance Mr. Deputy Speaker, they may say we have already passed an ordinance. If you don't bring in a Bill within six months the ordinance automatically lapses. When such is the case why should you bring in a Bill of this type before the House? My impression is you better wait. Let us see the reaction of the bus operators. If they are going to threaten again, if they are going to put the Government in an inconvenient position, then your Governor is always there. you can go and ask him to pass an ordinance. (interruption) I know you have got a brutal majority, stream-rolling majority. You can bring in any measure and pass it and we are in a depleted strength we were 50 and it is true we are only 40 now. But we 40 legislators are the persons who will be against the Bill. I am only trying to appeal to the Government. I appeal, I entreat, I implore—please see what will be the reaction in the country. Simply because you are 138 strong, don't try to bring in a measure like this and pass a measure like this. Please examine whether it is necessary to have this Damocles' Sword. Let the country know why there should be a legislation of this type. For my part I say there is no justification for bringing a measure of this type at the present moment.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை இம்மன்றம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்கமுடியாது. திரு. விநாயகம் அவர்கள் தனிப்பட்ட பஸ் முதலாளிகளுக்காக சிறந்த முறையில் வாதாடியதற்காக என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மசோதாவின் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸில் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. இதை எடுத்துக்கொள்வதை ஆட்சேபித்துப் பேசிய இரு உறுப்பினர்களும் வழக்கறிஞர்கள். இந்த மசோதாவின் அவசியத்தை அவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

The Government had received information about the proposal of the private operators to take their vehicles off the road on the 15th of August 1970. Such stoppage of motor vehicles would have caused considerable inconvenience to the public

அப்படிப்பட்டதொரு நிலைமை ஏற்பட்டிருக்குமானால், பொதுமக்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்பட்டிருக்கும். அப்பேர்ப்பட்ட அசௌகரியங்கள் ஏற்படக்கூடாது என்பதற்காக பஸ் முதலாளிகளின் எண்ணம் நிறைவேறினால் பொது மக்களுக்கு கஷ்டம் ஏற்படும் என்பதால்தான் இந்த மசோதாவைக் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

It was therefore considered necessary.

ஆகவே, இந்த மசோதாவைக் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்பட்டதே தவிர, வேறு இல்லை. ஒருவேளை திரு. விநாயகம் அவர்கள் பஸ் முதலாளிகளுக்கு அதிக லாபம் வேண்டும் என்று கருதினால், அதை வெளிப்படையாகச் சொல்லியிருக்கலாமே தவிர, இந்த மசோதாவை எடுத்துக்கொள்வதற்கில்லை என்று சொல்வது நியாயம்அல்ல.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாலை 5-00 Thiru K. RAMAMOORTHI : Sir, our objection is to the principle underlying the Bill. The necessity for the Bill has already lapsed and there is no threat of strike now and so there is no necessity for the passing of this Bill.

ஆகவே நான் இந்த மசோதா கொண்டு வருகிற முறை . . . .

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** பில் வரவேண்டியது தேவையா, தேவையில்லையா என்பதைப் பற்றி நீங்கள் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் இந்த மசோதா கொண்டு வந்திருப்பது முறையாக இருக்கிறதா? முறை இல்லையென்றால், எப்படி முறையில்லை என்று சொல்ல வேண்டும். வேறுவிதமான கேள்வி இப்போது எழுப்ப முடியாது.

**திரு. க. இராமமூர்த்தி :** எந்தக் காரணத்திற்காக கொண்டுவந்து இருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள் அந்த காரணங்கள் ஆகஸ்ட் 15-ந் தேதி என்று மட்டும் காட்டி இருக்கிறார்கள். வேறு காரணம் சொல்லவில்லை. இனிமேல் ஸ்ட்ரைக் வரப்போகிறது அதற்கு என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. அதற்கு 'ப்ரொடக்ஷன்' தேவை. இப்படிப்பட்ட நிகழ்ச்சி பின்னால் நிகழலாம். அதற்கு 'ப்ரொடக்ஷன்' பின்னாலே தேவையா, தேவை இல்லையா என்பது வேறு விவாதம். இதில் எந்த விதமான 'பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.



**திரு. க. இராமமூர்த்தி :** பின்னாலே இப்படி ஏற்படலாம் என்ற அச்சம் இதிலே தெரிவிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** அது தேவையில்லை. பில் கொண்டு வந்த விதத்தில் ஏதாவது முறைகேடுகள் இருக்கிறதா? இந்த பில் கொண்டுவருவதற்கான ஒரு நிகழ்ச்சியை, ஒரு காரணமாகக் காட்டி இருக்கிறார்கள். அந்தக் காரணம் பில் 'டிராப்ட்' பண்ணுகிற நோக்கில் தேவை இல்லாமல் போயிருக்கலாம். இப்படிப்பட்ட தேவை பின்னாலே கூட இருக்கலாம். டிராப்ட் செய்ததிலே என்ன தவறு? இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. தேவையா தேவையில்லையா என்பதைப் பிறகு பார்த்து சொல்லிக்கொள்ளலாம்.

**திரு. க. இராமமூர்த்தி:** ஆகஸ்ட் 15-ல் நடந்தது என்று சொன்னால், பின்னாலே நிறைவேற்றப்பட்ட பிறகு பார்க்கும்போது செப்டம்பர் 9-ம் தேதி 8-ம் தேதி உட்கார்ந்து கொண்டு 15-ம் தேதி ஆகஸ்ட் மசோதா நிறைவேற்றி இருக்கிறார்கள் என்று எங்களையும் சேர்த்து சந்தேகிக்கும் நிலைமைவரும் இனி மேல் நடக்கபோகும் நிகழ்ச்சிக்கு கொண்டு வாருங்கள் அது தான் நல்லது. But that is not mentioned in the Bill.

Thiru K. VINAYAKAM : Sir, the point is that the drafting is very awkward and bad and it is not in order. It contemplates some future trouble. The reference to the expression "15th August" is not necessary and they should have dropped it. The framers of this Bill have not taken into consideration the fact that they should not submit to this House this kind of inconvenient Bill and we should not be a prey to these temptations and that is all.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** இந்த மசோதா கொண்டுவந்த நோக்கம், காரணம் இவற்றைச் சொல்வது அந்த மசோதாவின் அங்கமாக ஆகுமா? மசோதாவின் அங்கமாக ஆவதில்லை. அது 'பில்' அல்ல. ஏன் கொண்டு வருகிறோம் என்பதை விளக்கும் குறிப்புதான். உங்களுக்குத்தெரிந்து இருக்க வேண்டும். இதிலே எந்த விதமான 'பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

**8. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.**

**(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் வண்டிகளைக் கேட்டுப்பெறுதல் மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 32/70)**

The Hon. Thiru S. J. SADIQ PASHA : Mr. Speaker, Sir I beg to move—

'That the Tamil Nadu Requisitioning of Motor Vehicles Bill, 1970 (Legislative Assembly Bill * No. 32 of 1970) as passed by the Tamill Nadu Legislative Assembly be taken into consideration.'

Sir I have brought forward this Bill to replace the Tamil Nadu Requisitioning of Movable Property Ordinance, 1970 (Tamil Nadu Ordinance No. 1 of 1970) which was promulgated by the Governor on the 14th August, 1970.

The Government had received information about the threat of the private operators to take their vehicles off the road on the 15th August, 1970, such stoppage of motor vehicles would have caused

*Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 3rd September 1970.

considerable inconvenience to the public. It was, therefore, considered necessary to provide uninterrupted service to the public. As the number of motor vehicles available with the Government was not sufficient for the purpose, it became necessary to take power to requisition the motor vehicles belonging to private operators.

The Tamil Nadu Requisitioning and Acquisition of Immovable Property Act 1956 (Tamil Nadu Act XLII of 1956) provided for the requisitioning of acquisition of only immovable property. This Act does not provide for the requisitioning of movable property. Legislation providing for the requisitioning of movable property was, therefore, necessary. Hence, to enable the Government to requisition the motor vehicles belonging to private operators, the Tamil Nadu Requisitioning of Movable Property Ordinance, 1970 (Tamil Nadu Ordinance 1 of 1970), was promulgated by the Governor on the 14th August, 1970.

The private operators, however, deferred their threatened strike fixed for 15—8—1970. It is considered that it would be better if the Government arm themselves with the powers as provided in the Ordinance to meet such strikes by bus or lorry or taxi operators in future.

In the Ordinance the term "movable property" has been defined so as to mean a motor vehicle, any movable property ancillary or incidental to the maintenance and control of such motor vehicle and any right in or over such motor vehicle or movable property.

Since the purpose of the Ordinance is only to requisition motor vehicles the short title of the proposed Bill has been suitably modified as the Tamil Nadu Requisitioning of Motor Vehicles Bill, 1970". As already stated, the Bill seeks to replace the said Ordinance Sir, I request the House to accept the motion.

Thiru K. RAMAMOORTHI: Sir, I move the following amendment:—

'That the Tamil Nadu Requisitioning of Motor Vehicles Bill, 1970 be referred to a Select Committee consisting of ...Members of the Assembly.' (Names of Members to be furnished later.)

Thiru R. PONNAPPA NADAR: Sir, I second it.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: திரு. இராமமூர்த்தி, அடுத்து பெரிய விவாதம் இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: இது ரொம்ப முக்கியமான மசோதா. இதைக் கொஞ்சம் பின்னாலே கூட வைத்துக்கொள்ளலாம்.

நாம் தான் இன்னும் ஒரு மாதத்தில் கூடப்போகிறோமே,

மாண்புமிகு பேரவைத்தலைவர்: ஒரு மாதம் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. மேலே கூட ஆகலாம்.



திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இந்த மசோதா மீதான என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தி என்னுடைய கட்சியின் சார்பில் என்னுடைய கட்சியின் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த வரைக்கும், இந்த மசோதா இப்படிப்பட்ட ரூபத்தில் கொண்டுவரப்பட்டு இருப்பதை விட திராவிட முன்னேற்றக்கழக அரசு மிக தைரியமாக, துணிச்சலாக இந்த நாட்டிலே இருக்கிற பஸ போக்குவரத்தை நாங்கள் தேசிய மயம் ஆக்குகிறோம் என்ற ஒரு சட்டத்தை அவசரச்சட்டமாக இருந்தாலும் சரி, ஒரு மசோதாவாக கொண்டு வந்து சட்டமாக நிறைவேற்றி இருந்தாலும் சரி, மிகுந்த மகிழ்ச்சியோடு அவர்களோடு ஒத்துழைப்புத் தந்து இருப்போம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் எங்களை கேலியும் கிண்டலும் செய்து விட்டு, இன்று டில்லி செல்கிற பாதையில் சென்று கொண்டு இருக்கிறார்கள். அந்த நிலைமையில் இந்த மசோதா இந்த அவையின் முன்னாலே வைக்கப்பட்டு இருக்கிறது.

நம்முடைய அவையிலே ஒரு பிரச்னை வந்தது. டெல்லி பாராளுமன்றத்திலே இந்த அரசு மான்ய ஒழிப்பு மசோதாவைப் பற்றி விஷயம், அது பற்றிய சம்பவங்கள் எழுப்பப்பட்டது. நாங்கள் அரசு மான்ய ஒழிப்பை எதிர்க்கவில்லை. அந்த ஒழிப்பிற்குப் பேரம் பேசுகின்ற நிலைமையில் அந்தச் சட்டம் உருவாகி இருந்ததை வைத்து, அதை வைத்துக்கொண்டு அரசு அவர்களை மிரட்டவும், அந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு தங்கள் அரசியல் செல்வாக்கை அல்லது அவர்களுடைய அரசியல் கட்சிக்கு, அரசியல் நோக்கங்களுக்குப் பணம் பறிக்கிற ஒரு மசோதாவாக அது ஆகிவிட்டது, அதற்கு நாம் ஆளாகக் கூடாது என்பதற்காக எங்கள் தலைவர் காமராஜர் அரசு மான்ய ஒழிப்பு மசோதாவை எதிர்த்தார். இன்றையதினம் அதே அடிப்படையில் சென்று கொண்டு இருக்கும் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் இந்த பஸ்களை எடுத்துக் கொள்வதைப்பற்றி அதே மாதிரி ஒரு மசோதாவைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். தனிப்பட்ட பஸ் முதலாளிகளை எந்த நேரத்திலும் மிரட்ட முடியும் என்ற எண்ணத்தை உள்ளடக்கி இந்த மசோதா அவையின் முன்னாலே கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இதைப்பேசுகிற நேரத்தில் எங்களுக்கு கவனம் இருக்கிறது, நிச்சயமாக காங்கிரஸ் தரப்பிலிருந்து நாங்கள் பஸ் முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கி கொண்டு பேசுகிறோம் என்று வெளியே சென்று திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் ஒரு வேளை பேசலாம். ஆனால் நியாய பூர்வமாக, உணர்ச்சி பூர்வமாக நிச்சயமாக சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இப்படிப்பட்ட மசோதாக்கள் ஜனநாயகத்தை குழி தோண்டி புதைப்பதற்கு ஒப்பாகும். இதை இந்த நாட்டு மக்களுக்கும், இந்தப் பேரவையின் கவனத்திற்கும் கொண்டு வர நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த மசோதாவின் பல்வேறு அங்கங்கள் மிக அதிகமான அதிகாரத்தை அரசுக்குத் தந்து இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, 16-வது பிரிவைப் பொறுத்தவரைக்கும் "Protection of action taken in good faith" என்று இருக்கிறது. அந்த பஸ்களை எடுத்துக்கொள்வதற்கு அரசு குறிப்பிட்ட காரியங்களுக்காக, அல்லது சில நாட்களுக்காகவோ, சில மணி நேரத்திற்காகவோ, எடுத்துக்கொள்வதற்கு, எடுக்கப்படுகிற நடவடிக்கைக்கு அது செல்லுபடி ஆக்குகிற ஒரு அங்கமாக ஒரு பிரிவு அதிலே தரப்பட்டு இருக்கிறது. அந்தப் பிரிவின்படி அந்த அதிகாரி 'குட் ஃபெய்த்' என்ற ஒரு இரண்டு வார்த்தைகளை வைத்துக் கொண்டு எதைச்

செய்தாலும், அது சட்ட சம்மதம் பெற்றதாக கருதப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. அதிகாரிகளைக் கொண்டு, இந்த நாட்டினுடைய பிரஜைகளை, தனிப்பட்டவர்களை, குடி மக்களை மிரட்ட முடியும் என்ற நிலைமையை இந்த மசோதாவின் 16-வது பிரிவு நிச்சயமாக அரசுக்குத் தருகிறது.

அது மட்டுமல்ல 17-வது பிரிவைப் பொறுத்த வரைக்கும் 'பார் ஆஃப் ஜுரிஸ்டிக்ஷன் டு சிவில் கோர்ட்ஸ்' என்ற ஒரு நிலைமை, அதாவது இதனால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லக் கூடாது என்ற அதிகாரத்தை, வரம்பற்ற அதிகாரத்தை இந்த மசோதா அரசுக்குத் தருகிறது. இது தேவை தானா? நிரந்தரமாக எப்பொழுமே ஓடிக் கொண்டிருக்கிற இடம் நீதிமன்றம். நீதி மன்றத்திற்குப் போகாதே என்று சொல்வது ஜனநாயகம் இல்லாத சர்வாதிகார நாட்டில் ஒரு வேளை வரவேற்கக்கூடிய ஒன்றாக இருக்குமே தவிர, ஜனநாயகத்தை வைத்துக் கொண்டிருக்கிற, ஜனநாயகத்தை நிரந்தரமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிற நம்முடைய நாட்டில் இப்படிப்பட்ட மசோதாக்களைத் திரும்பத் திரும்பக் கொண்டு வருவோமேயானால், அது நம் நாட்டிற்குச் செய்கின்ற மிகப் பெரிய துரோகமாகும் அல்லது கெடுதல் ஆகும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவுத் துறையில் இது போன்ற மசோதாக்களைக் கொண்டு வந்து, நீதிமன்றத்திற்கே செல்லக் கூடாது என்று தடை விதித்து, நாடெங்கிலும் உள்ள கூட்டுறவு சங்கங்கள் ஊழலுக்கு இருப்பிடமாகவும், பிறப்பிடமாகவும் அமைந்துவிட்டதை நாம் காண்கிறோம். இது போன்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு, இந்த அரசு அமுல்படுத்துகிற நேரத்தில், கோர்ட்டுக்குச் செல்லக்கூடாது என்ற ஒரு கண்டிப்பை உண்டாக்குவோமானால், உரிமையை பறிப்போமானால், நம்மை அறியாமலேயே நம்மைச் சார்ந்தவர்கள் ஊழல் செய்வதற்கும், நம்முடைய அதிகாரிகள் இந்தச் சட்டத்தின் பாதுகாப்பின் கீழ் கண்டதைச் செய்வதற்கும், தவறுகளைச் செய்வதற்கும் இது வாய்ப்பு அளிக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். இதையே அவர்கள் திருப்புவார்கள். 'அதிகாரிகளிடம் நம்பிக்கை இல்லை, பாருங்கள் காங்கிரஸ்காரர்களுக்கு' என்று சொல்வார்கள். அது அல்ல. இரண்டொரு அதிகாரிகள் தவறு செய்தால் கூட, அந்தத் தவறுக்கு அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும்படியான சூழ்நிலை வரும். அம்மாதிரி சூழ்நிலையை உண்டாக்குவது தவறு என்பதை ஜனநாயக சர்க்கார் நிச்சயம் உணர்வார்கள் என்பதை நான் நம்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பஸ்களை எடுத்துக் கொள்கிற முறை பற்றி 9-வது பிரிவிலே சொல்லப்பட்டிருக்கிறது, அதாவது 'அப்பீல்ஸ் ஃப்ரம் ஆர்டர்ஸ் ஆஃப் ரெகுவிஸிஷனிங். அதைக் கொஞ்சம் படித்துப் பார்க்க வேண்டும். அது மாத்திரமல்ல. 7-வது பிரிவில் 'பிரின்ஸிபிள்ஸ் அண்டு மெதெட்ஸ் ஆஃப் டிட்டர்மினிங் காம்பென்சேஷன்' பற்றி, அதாவது எப்படி இந்த பஸ்களை எடுத்துக் கொண்டு நஷ்ட ஈட்டுத் தொகை தருவது என்பதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

(c) the Government, may in any particular case nominate a person having expert knowledge as to the nature of the motor vehicle ". . .

என்பதைச் சொல்லி, யாரை வைப்பார்கள், எப்படிப்பட்ட அதிகாரிகளை வைப்பார்கள், அந்த அதிகாரிகள் எப்படிச் செயல்படுவார்கள் என்று தெரியாது.



இந்த அரசுக்கு விரோதமாக, இந்த அரசு விரும்பாத இந்தத் துறையில் இருக்கிற வல்லுனர்கள் நியமிக்கப்படுவார்களா? அல்லது ஒரு வேளை அவர்களுடைய கட்சியைச் சார்ந்த, அந்தப் பகுதியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கு வேண்டாத பஸ் முதலாளியாக இருந்தால், அவருடைய கதி என்ன? அவர்களை எப்படி இந்த மசோதாவை எடுத்துக் கொண்டு இந்த அரசு மிரட்ட முடியும் என்பதைத் தான் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இந்த மசோதாவிற்கான தேவை பூர்த்தியாகிவிட்டது. 1970-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதி இந்த மசோதாவின் தேவை பூர்த்தியாகிவிட்டது. அதற்குப் பிறகு இந்த மசோதா இன்றைக்குக் கொண்டுவரப்படுவதற்குக் காரணம், இந்த அரசு 1972 வருகிறதே என்று நடுங்கிக் கொண்டிருக்கிற நிலைமையைத் தான் இது காட்டுகிறது. இந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு (சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் 'நோ, நோ') ஆமாம். இந்த மசோதாவை வைத்துக் கொண்டு பஸ் முதலாளிகளைத் தங்கள் பக்கம் திருப்புவதற்கு, அவர்களை மிரட்டுவதற்கு முடிந்தால், தங்கள் கட்சிக்குப் பல்வேறு ரூபங்களிலே லாபம் பெறுவதற்கு இந்த மசோதா இந்த நேரத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

பஸ் முதலாளிகளை ஒழித்துவிடுவோம், பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்கிவிடுவோம் என்றெல்லாம் சொன்னீர்கள். என்ன செய்தீர்கள்? அதையெல்லாம் விட்டுவிட்டு பஸ் முதலாளிகளை வளர்த்துவிட்டு, அதிகமான பஸ் முதலாளிகளை இந்த நாட்டில் உருவாக்கிவிட்டு, அவர்கள் மீது ஒரு கத்தியை வைத்துக் கொண்டு மிரட்டிக் கொண்டே இருக்கிறீர்கள். அவர்கள் தவறிப் போய் அந்தப் பக்கம் போய்விட்டால், இந்த அரசுக்கு விரோதமாக இருப்பார்களேயானால், காங்கிரஸ்காரர் என்று தோற்றம் அளித்தால் கூட, இதோ எங்களிடம் சட்டம் இருக்கிறது என்று காட்டுவதற்கு அவசரம் அவசரமாக 1972-க்கு முன்பு இந்த மசோதாவைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு தி.மு.க. வந்துவிட்டது என்ற நிலைமையை தான் இந்த மசோதா காட்டுகிறது.

ஆகவே, நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் தி. மு. க. அரசாங்கம் இருக்கலாம், நாங்களே திரும்பவும் ஆட்சிக்கு வரலாம், காலம் நெருங்கிவிட்டது, இப்படிப்பட்ட நேரத்தில் நீங்களும், நாங்களும் சேர்ந்து பாதுகாக்க வேண்டிய, காப்பாற்ற வேண்டிய ஜனநாயகத்திற்கு எதிரான இது போன்ற மசோதாக்களை நாம் வரவேற்கக் கூடாது, எதிர்க்க வேண்டும் என்று சொல்லி, தி.மு.க. வினரும் என்னை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. விநாயகம்: இந்த மசோதாவின் நோக்கத்தை நாங்கள் எதிர்க்க மாட்டோம். ஏன் இப்பொழுது எங்களுடைய எதிர்ப்பை இதற்குத் தெரிவிக்கிறோம் என்றால், இதுவரையில் தேசியமயமாக்குகின்ற கொள்கையை எங்களிடமிருந்து தான் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். தேசியமயமாக்குவதை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதில்லை. தேசியமயமாக்கினால் திறமையாகச் செயல்பட வேண்டும் என்பது தான் நோக்கம். இதுவரையில் தேசியமயமாக்கப்பட்ட விஷயங்களெல்லாம் லாபகரமாக நடக்கிறதா? அதே நேரத்தில் அரசாங்கத்திற்கு வர வேண்டிய வருமானம் வருகிறதா, எல்லோருக்கும் திருப்திகரமாக

நாம் நடத்துகிறோமா என்பதை யோசிக்க வேண்டும். இன்று ஆட்சியில் இருக்கிறோம். ஆகையால் தேசியமயமாக்கிவிட்டோம் என்று சொல்லி, விட்டுவிட்டுப் போவதில் லாபம் இல்லை, பயனில்லை. உங்களுக்கும் பயனில்லை, பிரயாணிகளுக்கும் பயனில்லை. அதிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளுக்கும் பயனில்லை.

ஆதலால், எங்களுடைய கருத்து என்ன வென்றால், தொழிலாளர்கள் சரிவர வேலை செய்யவில்லை, 25 பேர்களுக்கு மேல் பஸ்களில் ஏற்றமாட்டோம் என்று அவர்கள் கூறினால், கலைஞர் அவர்கள் போய் 'இது மாதிரி தகராறு செய்தால் எல்லாவற்றையும் முதலாளிகளிடம் தந்துவிடுவேன்' என்று அங்கே மிரட்டுகிறார். பிறகு இங்கே வருகிறார், முதலாளிகளிடம் வருகிறார். '15-ம் தேதி பஸ்களை ஓட்டாமல் நிறுத்தினால், இதையெல்லாம் தேசியமயமாக்கிவிடுவேன்' என்று மிரட்டுகிறார். 'வாட் இஸ் திஸ் டபிள்டங்டு ஆர்குமெண்டு?' 'டபிள் டங்கு' என்று ஆங்கிலத்தில் சொன்னால் அது எவ்வளவு காரமானது தெரியுமா? அது உங்களுக்குப் புரியாது. இரு நாக்கு படைத்த ஆர்குமெண்டு என்று தமிழில் சொன்னால் குதிப்பீர்கள், ஆங்கிலத்தில் இருப்பதால் சும்மா இருப்பீர்கள். (குறுக்கீடு) 'ஆல் ரைட், ஐ டு நாட் வாண்ட் டு அஃபெண்டு யு.'.

தேசியமயமாக்குவது என்றால் முறையாகச் செய்ய வேண்டும், மிரட்டக் கூடாது. எங்களிடத்தில் சக்தி இருக்கிறது, இதற்கு ஒரு மசோதாவைக் கொண்டு வருகிறோம் என்ற நிலையில் கொண்டுவரக் கூடாது. உங்களுக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்றெல்லாம் அவர்களை மிரட்டுவீர்கள் என்று நாங்கள் சந்தேகப்படுவதில் என்ன தவறு? அதனால் தான் சொல்கிறேன். இப்பொழுது வேண்டாம். தேசியமயமாக்குகிற சக்தி நமக்கு எப்பொழுதும் இருக்கிறது. இம்மாதிரி சட்டம் இல்லையென்றால், இம்மாதிரி ஒரு மசோதா கொண்டுவருவதற்கு வழியில்லாவிட்டாலும் கூட, கவர்னரிடம் சொல்லி இரண்டு மணி நேரத்தில் வேண்டுமென்றால் இது சம்பந்தமாக ஒரு ஆர்டினன்ஸ் போட்டு விடலாம், அப்படி ஒரு ஆர்டினன்ஸ் கொண்டு வரமுடியும். எனக்குத் தெரியும், அவர்கள் இன்னும் அமைச்சர்களுக்கு விளக்கமாகச் சொல்லியிருந்தால், இந்த வாதத்திற்கே இடமில்லை. 'நாங்கள் வாபஸ் பெற்றுவிட்டோம், இனிமேல் செய்ய மாட்டோம்' என்று அவர்கள் சொல்லியிருந்தால், திரு. விநாயகம் திரு. ராமமூர்த்தி அவர்களின் வாதம் சரி என்று இங்கு அமைச்சர் அவர்கள் வாதிக்கலாம். 'தே ஹாவ் டெம்பாரிலி போஸ்ட்போண்டு திஸ் ஸ்ட்ரைக்' என்று தான் சொன்னார்கள். இதை அப்படியே விட்டிருந்தால் தலைவர் அவர்களே என்னிடம் சொல்லியிருப்பார். அவர்கள் இப்படிச் சொல்கிறாரே, விநாயகம் என்று சொல்லியிருப்பார். 'ஐ ஹாவ் ஆன்டிசிபேடட் ஹிம்.' அவர் எழுந்து சொல்வார் என்று எனக்குத் தெரியும். அதற்குத் தான் முன்னதாகவே நானே சொல்லிவிட்டேன். பிரைவேட் முதலாளிகள் ஏதோ வீம்புக்கு போராடுகிறார்கள் என்பது இல்லை. அவர்களும் வாழவேண்டும், அவர்கள் குடும்பமும் வாழவேண்டும், அவர்களுக்கு வருவாயும் வரவேண்டும். அந்தச் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு திருத்தி அமைத்துக்கொள்கிற மனப்பான்மை அவர்களுக்கு வந்திருக்கிறது. பழைய பரம்பரையிலே, முன்பு இருந்ததைப் போலவே அவர்கள் இருக்கவில்லை. ஏன் அவர்களை மிரட்டவேண்டும்? பயமுறுத்தவேண்டும்? ஆங்கிலத்தில் சொன்னால், why hang the Damocle's Sword upon their heads



அதைச் செய்தால், இதைச் செய்வோம் என்று ஏன் மிரட்டவேண்டும்? அப்படி மிரட்டுவதைவிட தைரியமாக அரசாங்கமே எடுத்துக் கொள்ளலாமே? அவர்களை அழைத்து, நாங்கள் எடுத்துக்கொள்கிறோம், காம்பென்சேஷன் கொடுக்கிறோம் என்று முறையாக சொல்லிவிடுங்கள். மக்களுக்கு பயன்படட்டும். ஆனால் சரிவர நடக்கவில்லை என்று நீங்களே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள், ஒத்துக்கொண்ட பிறகு ஏன் இந்தப் பிடிவாதம் பிடிக்கவேண்டும் என்பது தான் என்னுடைய கேள்வி.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்ற, மாண்புமிகு திரு. ராமமூர்த்தியின் திருத்தத்தை ஆதரித்து, ஓரிரு கருத்துக்களைக் கூறுவதற்கு முன் வருகிறேன்.

இந்த மசோதா அதிகமான அதிகாரத்தை அரசாங்கத்திற்குக் குவித்துக் கொடுக்கும் முறையில் இருக்கிறது. தனியார் சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கு அதிகமான அதிகாரம் குவியலாக இருக்கிறது இந்த மசோதாவில். காம்பன்சேஷன் முறையைப் பற்றிக் கூறும்போது, ஆர்பிட்ரேடர் நடுவர் என்பவருக்கு அதிகாரம் வழங்கி, தீர்ப்பு வழங்கவேண்டும் என்று சொல்லுகிறது. அக்ரிமெண்ட் படி அவார்ட் கொடுக்கலாம்; அது இல்லாவிட்டால், நடுவர் தீர்ப்புக்கு விட்டுவிட வழி வகை செய்திருக்கிறது. ஆனால், பொதுவாக இந்த மசோதாவைப் பார்க்கும் போது, கொடுத்திருக்கிற அதிகாரங்கள் அதிகமாக இருக்கின்றன. அமிதமாக இருக்கிறது. தனிப்பட்டவர்களுடைய சொத்துரிமையைப் பாதிக்கும், எக்ஸ்ப்ரோப்ரியேடரியாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன். ஒருவருடைய சொத்தைக் கையகப்படுத்த, காம்பன்ஸேஷன், நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிறது. ஆனால், இந்தச் சட்டப்படி, அந்த வழிமுறைகளைப் பின்பற்றியிருக்கிறார்களா, அந்த முறை அடிப்படையாக இந்த மசோதாவில் இருக்கிறதா என்றால், இல்லை என்று துணிச்சலாகக் கூறமுடியும். அதிலும் ஸிவில் ப்ரொஸீசர் கோட் ஒரு சில காரியங்களுக்கு பாதகமாகும் என்ற முறையில் இதிலே கூறியிருக்கிறது.

இந்த மசோதாவில், திரு. ராமமூர்த்தி கூறியதுபோல், 'போனஃபைடி' ஆக அந்த அதிகாரிகள் கடமையை நடத்துகிறார்கள், 'குட் ஃபெயித்', என்றால், அப்பொழுது அவர்மீது எந்தவிதமான வழக்கும் கிடையாது. உதாரணமாக, நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும், வழக்குத் தொடர முடியாத அவல நிலை இருக்கிறது.

பதின்மூன்றாவது ஷரத்தைப் பார்த்தால், ஒரு இடத்தில், 'The competent authority or officer may enter any premises and inspect any motor vehicle.' என்று அந்த கிளாசில் கூறியிருக்கிறது.

பொதுவாக இதிலே அதிகமான அதிகாரம் கொடுத்திருக்கிறது. வீட்டில் எந்த இடத்திலும் செல்லுவதற்கும், சோதனை நடத்துவதற்கும் உரிமைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. பொதுவாகப் பார்க்கும்போது, இந்த மசோதாவில் பல அம்சங்கள் இருக்கின்றன. ஒரு வேளை இம்ப்ரூவபிள்ஸ் ரிக்விஸிஷன் ஆக்டை மாடலாக வைத்துக் கொண்டு இந்த மசோதாவைத் தயாரித்திருக்கலாம். இருந்தாலும், விரிவாகச் செய்வது நல்லதொரு முடிவு

காண்பது சாலச் சிறந்ததாக இருக்கும். அதோடு இன்னும் பல காரியங்களையும் முன்னிட்டு, இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று வன்மையாகக் கூறி, அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இந்த மசோதாவை இந்தச் சபையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லிய நேரத்தில் தெளிவாக, பஸ் அதிபர்கள் They have only deferred not dropped it, என்று சொல்லி ஏற்கனவே அவசரச் சட்டம் போட்டிருப்பதை சட்டமாக்க இந்த மசோதா தேவை என்பதையும் சொல்லி, இந்த மசோதாவை சபையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர்கள் தேசியமயமாக்கும் கொள்கை பற்றிக் குறிப்பிட்டார்கள். நம்முடைய அரசு தேசியமயமாக்கும் கொள்கை அடிப்படையில் சில காரியங்களைச் செய்திருக்கிறது. எழுபத்தி ஐந்து மைலுக்கு மேல் உள்ள வழித்தடங்களை எடுக்க வேண்டும் என்ற முறையில் எடுத்திருக்கிறது. அது தொடர்ந்து செயல்பட அரசு தக்க நடவடிக்கை எடுக்கிறது, அப்படிப்பட்ட கருத்தை வலியுறுத்தி வருகிறது. அது இந்த அவைக்கும் உறுப்பினர்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமமூர்த்தி சில விதிகளைக்காட்டி, குறைபாடுகள் இருப்பதாகச் சொன்னார்கள். குறிப்பாக 16-வது விதியை சுட்டிக் காட்டி, Protection of action taken in good faith என்றிருப்பதில் அரசாங்க அதிகாரி நல்லெண்ணத்தோடு எடுக்கிறதற்கு பாதுகாப்பு கொடுத்திருப்பதைச் சொன்னார்கள். நல்லெண்ணத்தோடு செய்வதற்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டியதுதான். 'குட் ஃபெயித்'-தில் இல்லாவிட்டால், Malafide அல்லது bad faith என்றால், ராமமூர்த்திற்குத் தெரியும்,ஹைக்கோர்ட்டுக்குப் போகலாம் Good faith இல்லாமல் bad faith ஆக இருந்தால், அப்பொழுது கூட கோர்ட்டுக்குப் போகலாம். அந்த உரிமைஇருக்கிறது.

17வது பிரிவில் நஷ்ட ஈடு பற்றிச் சொன்னார்கள். சொல்லும்போது, ஆர்பிட்ரேடர்கள் நியமிக்கும்போது, கட்சிக்காரர்களை நியமித்து விடுவார்கள் என்றார்கள். கட்சிக்காரர்களைப் போடவேண்டும் என்று சொல்லப் படவில்லை. அப்படி எண்ண வேண்டிய அவசியம் இல்லை. ஏழாவது விதியைப் பொறுத்த வரையில் Principles and method of determining compensation.

அந்தப் பூராகிளாஸையும் படித்துக் காண்பித்திருந்தால், விளக்கம் கிடைத்திருக்கும்.

Where any motor vehicle is requisitioned under this Act there shall be paid compensation the amount of which shall be determined in the manner and in accordance with the principles hereinafter set out, that is to say.

(*a*) where the amount of compensation can be fixed by agreement, it shall be paid in accordance with such agreement:

இரு சாராருக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால், அந்த அடிப்படையில் நஷ்டஈடு கொடுக்கலாம்.



(*b*) Where no such agreement can be reached, the Government shall appoint as arbitrator a person who is or has been or is qualified for appointment as a Judge of a High Court.

ஹைகோர்ட் ஜட்ஜ் நியமனத்திற்கு தகுதியுள்ளவர் நியமிக்கப்படலாம். திரு. ராமமூர்த்தி கூட ஹைக்கோர்ட் ஜட்ஜாக வரலாம், அவரும் நியமிக்கப் படலாம். ஜட்ஜ் ஆக தகுதியுள்ளவர்கள் நியமிக்கப்படலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. (Interruption) Don't we will appoint him also?

(*c*) the Government, may. in any particular case nominate person having expert knowledge as to the nature of the motor vehicle requisitioned, to assist the arbitrator and where such nomination is made, the person to be compensated may also nominate an assessor for the same purpose.

அரசாங்கம் மாத்திரம் நாமினேட் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆர்பிட்ரேடாராக ஒரு எக்ஸ்பர்ட்டை நியமனம் செய்வது, அரசாங்கம் நியமிக்கலாம், அந்த நஷ்ட ஈடு பெறுகிறவரும் நியமிக்கலாம் என்று இருக்கிறது. எனவே, நஷ்ட ஈடு விதி முறைகள் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. எந்த விதமான தவறும் ஏற்பட்டுவிடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, அவசர காலங்களில் சட்டத்தை உருவாக்கி, கோர்ட்டுக்கு போகும் அவசியம் இல்லாமல் இருப்பது பற்றிச் சொன்னார்கள். அவசரகாலத்தில் கோர்ட்டுக்குப் போவதும், அங்கே காலதாமதம் ஆவதும் ஆக இருந்தால் பொது மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையில் தவறிவிடுவோம். இந்தச் சட்டத்தின் முக்கியமான நோக்கமே பொது மக்களுக்கு ஏற்படும் கஷ்டத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதுதான். பொது மக்களுக்கு, 'எசன்சியல் சர்வீஸ்' போக்குவரத்து பாதிக்கப்படக் கூடாது என்பது நோக்கம். அந்த நோக்கத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அதிகாரத்தை இந்த மசோதாவின் மூலம் எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப் படுகிறது. வேறு ஒன்றும் தவறான எண்ணம் கொள்ள வேண்டாம். அதிகாரிகள் நல்ல முறையில் பணியாற்றுவார்கள். பணியாற்றி வருகிறார்கள்.

இந்த சட்டத்தின் அவசியத்தைப் பற்றி முன்பே கூறியிருக்கிறேன். ஆகவே, இந்த மசோதாவை மன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, கொள்கை அடிப்படையில், இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போகவேண்டும் என்று நான் விரும்பினாலும். பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய சங்கடங்களை தவிர்க்கவே இந்த மசோதா என்று அமைச்சர் உறுதியளிப்பதால், அந்த உறுதியை நம்பி, மசோதா வேறு விதமாகப் பயன் படுத்தப்படமாட்டாது என்று நம்பி, என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தவில்லை.

திரு இராமமூர்த்தியின் திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி.

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் வண்டிகளைக் கேட்டுப் பெறுதல் மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 32/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2-முதல் 21-வரையில் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் வண்டிகளைக் கேட்டுப் பெறுதல் மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 32/70) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்' என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**9. அரசினர் தீர்மானங்கள்.**

(அ) உறுப்பினர்கள் சொத்துவிவரம் தெரிவிக்கும் படிவத்தில் திருத்தம்.

மாலை 5-30 **மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்ற உறுப்பினர்களின் சொத்து பற்றிய விவரங்களைத் தெரிவிப்பது குறித்து ஏற்கெனவே தீர்மானத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் 'விவரக் கணக்குகள் கொடுப்பதற்கான நடைமுறை' என்ற தலைப்பின்கீழ் (2) பத்தியில்,

'ஏப்ரல் 30-ம் நாள்' என்ற சொல்லுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, 'செப்டம்பர் 30-ம் நாள்' என்ற சொல்லையும், இலக்கங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு 1950-ம் ஆண்டு பருத்தி போக்குவரத்து விதிகளில் **திருத்தம்.**

THE HON. DR. (THIRUMATHI) SATHIAVANIMUTHU : Sir, I move—

"That the following draft rule to be issued by the State Government under section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923) substituting the existing rule 7 of the Tamil Nadu Cotton Transport Rules, 1950 be approved as required by section 8 of the said Act".

DRAFT NOTIFICATION.

In exercise of the powers conferred by section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the Tamil



Nadu Cotton Transport Rules, 1950, the same having been approved by Resolutions of both the Houses of the Legislature as required by section 8 of the said Act :—

AMENDMENT.

In the said rules, for rule 7, the following shall be substituted, namely :—

"7. Any Police Officer in uniform not below the rank of a Head Constable or any officer of the Agricultural Department not below the rank of an Agricultural Extension Officer or any Officer of the Commercial Taxes Department not below the rank of an Assistant Commercial Tax Officer who has reason to believe that any cotton not covered by a licence, is carried in a vehicle, vessel or on the pack animal, may stop and search such vehicle, vessel or the load on such pack animal which is not covered by a licence, or require the driver of such vehicle or pack animal to drive the same to the nearest Police Station for the purpose of seizing the cotton carried in such vehicle or pack animal. In the case of a vessel the Police Officer or the Officer of the Agricultural Department or the Commercial Taxes **Department** may require the driver of the vessel to arrange for the immediate transport of the cotton carried in such vessel to the nearest Police Station for the purpose of satisfying himself that no cotton, which is not covered by a licence, is carried in such vessel and for the purpose of seizing the same if carried in such vessel. The Police Officer or the officer of the Agricultural Department or the Commercial Taxes Department seizing the cotton shall prepare a list of the same and deliver a copy thereof to the driver of the vehicle, vessel, or pack animal as the case may be".

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. We seem to have passed the previous Bill without going through the second and third readings. You asked whether Thiru Ramamurthy was pressing his amendment and he withdrew it and then the Bill was passed without going through the second and third reading stages. Sir, we made a mistake and we should not be ashamed to own the mistake and then go back to the second and third reading stages.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது முடிந்து இன்னொரு தீர்மானம் நிறைவேறிவிட்டது. நீங்கள் அப்பொழுதே பாயிண்ட் ஆஃப் ஆர்டர் கொண்டு வந்திருக்கவேண்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, you must credit me with some intelligence. The second reading has not been gone through and the third reading also has not been gone through. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் படித்து விட்டேன். பிரிவுகள் 2 முதல் 21 வரையில் நான் படித்துவிட்டேன். அவை நிறைவேற்றப்பட்டன என அறிவித்தும் இருக்கிறேன்.

வேளாண்மை-அரிசனநல அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**6. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும் அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு 11 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நாளையதினம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்த தலைவரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மட்டுமே பேசப்போவதாக இருப்பதால், இந்த 11 உறுப்பினர்களும் இன்றைக்கு முடித்துக்கொள்ள வேண்டும். எவ்வளவு நேரம் வரையில் இந்தப் பேரவையை நடத்தலாம் என்பதை பேரவையே முடிவு செய்யலாம். இந்த 11 உறுப்பினர்களும் காலையிலே, பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிறவர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இரவு 7-30 மணி வரையில் கூட்டத்தை நடத்தலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரவு 7-30 மணி வரையில் பேரவைக் கூட்டம் நடைபெறும். முதலில் திரு. கே. ஆர். நல்லசிவம் அவர்கள் பேசுவார்கள்.

**திரு. க. ர. நல்லசிவன் :** பெருமதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நாங்கள் கொடுத்திருக்கிற கண்டனத் தீர்மானத்தின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த இருபதாண்டுக் காலமாக ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி 2,300 இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறது. இதையெல்லாம் வைத்துத்தான் மக்கள் 1967-லே அவர்களை நாட்டிலே முழுமையாக வெளியேற்ற முயற்சி எடுத்துக்கொண்டார்கள். கடந்த மூன்றரை ஆண்டுக் காலமாக ஆட்சி புரிந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகமும் அதே பாதையைப் பின்பற்றக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். கடந்த காலத்தில் ஆட்சி செய்த காங்கிரஸுக்கு இணையாக நாங்களும் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறோம் என்று சொல்வது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்னால் கோவை மாவட்டத்தில் விவசாயிகள் போராட்டம் நடைபெற்றது எல்லோருக்கும் தெரியும். போலீசார் எத்தகைய முறையில் அத்துமீறி நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார்கள், அதன்பின் என்ன நடந்தது என்பதையெல்லாம் இந்த மன்றமும் பொதுமக்களும் அறிவார்கள். கட்சிப் பற்று இல்லாத விவசாயிகள் சங்கம் இந்தப் போராட்டத்தை நடத்தியது. சாத்வீக முறையில் போராட்டத்தை நடத்துவதாகச் சொல்லி, போராட்டத்தை நடத்தியது. எனக்கு நேரடியாகத் தெரிந்தவரையில் சொல்கிறேன். அந்த இயக்கத்திலே அரசாங்கமானது ஜனநாயகப் பூர்வமாக பங்கெடுத்துக்கொண்டிருந்தால், துப்பாக்கிப் பிரயோகமே நடந்திருக்காது. இந்த விவசாயிகளின் போராட்டம் பொதுஜனங்களின் கண்ணுக்குத் தெரியக்கூடாது, இந்த இயக்கத்தையே பொதுஜனங்களிடத்திலிருந்து மறைக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் தன்னுடைய அடக்கு முறையை அவிழ்த்துவிட்டு விட்டது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் போராட்டத்தை 15—6—1970, 17—6—1970, 19—6—1970 ஆகிய மூன்று நாட்களிலே, மூன்று தடவையாகப் பிரித்து நடத்த விவசாயிகள் சங்கம் முடிவு செய்தது. 15-ம் தேதியன்று கோவை மாவட்டத்தில் விவசாயி





கள் சங்கத்தின்கீழ் ஆயிரக்கணக்கில் மறியல் செய்வதாகச் சொல்லப்பட்டிருந்தது. அன்றைக்குப் போலீசார் எந்தவித காரணமும் இல்லாமல் மறியல் செய்த விவசாயிகளை அடித்துக் காயப்படுத்தினார்கள்.

அதுமட்டுமல்ல, கோயம்புத்தூர், அவனாசி, பல்லடம், திருப்பூர் போன்ற பகுதிகளில் எங்கெல்லாம் மறியல் செய்வதாக இருந்தார்களோ அங்கெல்லாம் போலீசார் போய் மறியல் செய்வதற்காக இருந்த விவசாயிகளை அடித்தார்கள். ஒன்று மட்டும் சொல்லிக்கொள்கிறேன். இங்கு அவர்கள் இல்லை, அவர்களுடைய கண்ணுக்கு முன்பாக பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் போலீசாரால் அடிக்கப்பட்டனர். இந்த நாட்டிலே மக்களோ அல்லது அரசியல் கட்சிகளோ சாத்வீகமான முறையில் போராட்டம் நடத்தினால், அதை அரசு சட்ட பூர்வமான முறையில்தான் சமாளிக்க வேண்டுமே தவிர, போலீஸ் தங்களுடைய கையில் இருக்கிறது என்பதற்காகப் பலாத்கார முறையில் இறங்குவது என்று முடிவு செய்துவிட்டால், இந்த நாட்டிலே ஜனநாயகம் நிலைக்காது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதற்கு முன்பிருந்த காங்கிரஸ் அரசாங்கமும், தன்னுடைய கையிலே ஏகபோக அதிகாரம் இருக்கிறது, போலீஸ் இருக்கிறது என்ற எண்ணத்தில்தான் மக்களை அலட்சியப்படுத்தி ஆட்சி செய்து, பல துப்பாக்கிப் பிரயோகங்களைச் செய்தது. மக்களே பார்த்து அந்த ஆட்சியை அனுப்பி வைத்துவிட்டார்கள்.

அடுத்தபடியாக, போலீஸ் துப்பாக்கிச் சூடு எங்கே நடந்தாலும் 'போலீசார் மீது மக்கள் கல்லைத் தூக்கிப் போட்டார்கள்' என்ற ஒரேவிதமான காரணம்தான் திருப்பித் திருப்பிச் சொல்லப்படுகிறது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், 1967-க்குப் பிறகு மக்கள் கல்லைத் தூக்கிப் போட்டு, எத்தனை போலீஸ்காரர்கள் செத்துப் போனார்கள், எத்தனை போலீஸ் அதிகாரிகளுடைய மண்டை உடைந்தது என்ற கணக்குச் சொல்ல முடியுமா? ஏதோ பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றனவே தவிர, போலீசார் பக்கத்தில் சிறு சேதமும் நடப்பதில்லை. இப்படியே ஆட்சியினர் போய்க்கொண்டிருந்தால் முன்பிருந்த அரசாங்கத்திற்கு என்ன கதி வந்ததோ, அதே கதிதான் இதற்கும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமீபத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டம் நடைபெற்றது. எல்லா அரசியல் கட்சிகளும், பத்திரிகைகளும் அவர்களை ஏதோ கொள்ளைக்காரர்கள் போல் பாவித்து எழுதினார்கள். சட்டபூர்வமாக என்பதற்குமேல் யார் அதிகமாக நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்களோ அதைக் கைப்பற்றுவது என்பதுதான் அந்தக் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம், நாட்டிலே நமக்கு முன்னால் பலாத்கார இயக்கம் வெகு வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆளும் கட்சிக்கு மட்டும் அல்ல, எங்களுக்கும் இதில் சிரத்தை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். போராட்டம் நடத்துவது கம்யூனிஸ்ட் கட்சியாக இருக்கலாம், சோஷலிஸ்ட் கட்சியாக இருக்கலாம். சட்டத்திற்கு மேற்பட்டதைக் கைப்பற்றுவது என்று திட்டமிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, சிலர் 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்திருக்கிறார்கள், நியாயமற்ற முறையில் வைத்திருக்கிறார்கள், அதைக் கைப்பற்ற வேண்டும், அதற்குத்தான் இந்தக் கிளர்ச்சி

என்றெல்லாம் திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் வாதாடுகிறார்கள். 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாக இருந்தாலும், பினாமி முறையில் பயன்படுத்துவதை நானும் ஏற்றுக்கொள்ள மாட்டேன், இந்த அரசும் ஏற்றுக்கொள்ளாது, நாங்கள் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகமும் ஏற்றுக்கொள்ளாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 15 ஸடாண்டர்டு ஏக்கருக்கு மேல் உள்ளதை எடுத்துக்கொள்ள வேண்டும், அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சட்டமன்றத்தில் ஆளும் கட்சிக்கு வலியுறுத்திச் சொல்லும் உரிமை திரு. நல்லசிவன் அவர்களுக்கும் இருக்கிறது. நல்ல எதிர்க்கட்சிக்கும் இருக்கிறது. அப்படியில்லாமல், நிலத்திலேபோய் அதைப் பறிப்பது, மீட்பது என்ற முறைகளிலே அவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் மறியல் போன்ற காரியங்களில் ஈடுபட்டு, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். அதை விட்டுவிட்டு, எங்கே நிலம் இருக்கிறதோ அங்கே நிலப்பறி கிளர்ச்சி நடத்துவது வன்முறையில் கொண்டுபோய் விடுமா, இல்லையா என்பதைத் திரு. நல்லசிவன் அவர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**திரு. க. ர. நல்லசிவன் :** அதாவது மத்திய அரசாங்கம் மாநில அரசாங்க அமைச்சர்களைக் கூப்பிட்டு நிலச்சீர்திருத்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு சீக்கிரமாக விவாதிக்கப்போவதாக அறிவித்திருப்பதாக அறிகிறேன். இந்த அளவுக்கு அந்தத்துறையில் ஒரு வேகம் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது என்றால் அதுதான் எங்கள் நிலப்பறி இயக்கத்தின் நோக்கம்.

கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரையில் 15, 17 தேதிகளில் நிலத்தைக் கைப்பற்றப்போவதாக அறிவித்திருந்தார்கள். ஆனால் 9-ஆம் தேதி வாக்கிலேயே பல இடங்களில் அவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். அதுமட்டுமல்ல. அந்த இயக்கத்தில் சேராதவர்கள், கம்யூனிஸ்டு அல்லாதவர்கள் பலரும் கைதுசெய்யப் பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கம்யூனிஸ்டு அல்லாத பல பேர் கைது செய்யப்பட்டார்கள் என்கிறார். எவ்வளவுபேர் என்று சொல்லமுடியுமா?

**திரு. க. ர. நல்லசிவன் :** நான் சில ஊர்களைப் பொறுத்துக் கணக்கிட்டால் மூவாயிரம் பேர் கைது செய்யப்பட்டிருக்கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டுப் பேசுவதாகக் கருதுகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** அவர்களால் சொல்ல முடியாமல் இருக்கலாம். நான் சொல்ல வந்தது எல்லாம் 9-ஆம் தேதியே, அவர்கள் சட்டத்தை மீறுத போதே கைது செய்தது நல்லது அல்ல. சட்ட விரோதமான காரியங்களை அவர்கள் செய்தார்கள் என்றால் அதற்காகக் கைது செய்திருந்தார்களானால் இந்த நாட்டில் ஜனநாயக சக்திகள் முறையாகச் செயல்பட வாய்ப்பிருந்திருக்கும். ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் இன்றைக்கு எதிர்க்கட்சியாக மாறி வந்து உட்கார்ந்திருப்பது இத்தகைய ஒரு போக்கினால்தான். அவர்களை எதிரே உட்கார வைத்துக்கொண்டு "நீங்கள்" செய்யவில்லையா நாங்கள் செய்கிறோம் என்பதான போக்கு அறவே கைவிடப்பட வேண்டும்.



திராவிட முன்னேற்றக் கழகம் இன்று ஆட்சிப்பொறுப்பில் இருக்கிறது. பஞ்சாயத்துத் தேர்தல்களைப் பொறுத்தவரையில் அவர்கள் திட்டவட்டமாகக் கட்சி ரீதியில் கலந்துகொள்ளப்போவதில்லை என்றிருந்தால் மற்றக் கட்சிகளும் கூட ஒரு உடன்பாட்டுக்கு நிச்சயமாக வந்திருக்கக்கூடும். ஆனால் இன்றைக்கு ஏற்பட்ட நிலைமை ஊருக்கு ஊர் கட்சி, மாவட்டத்திற்கு மாவட்டம் கட்சி. இதில் ஏதாவது ஒரு வரைமுறை இருக்கவேண்டும். மற்றதற்கு எல்லாம் உச்சவரம்பு கட்டுவதுபோல பதவிக்கும்கூட உச்சவரம்பு கட்டவேண்டும். பாராளுமன்ற உறுப்பினராக இருக்கக்கூடியவர்கள், சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடியவர்கள் பஞ்சாயத்துத் தேர்தலுக்கும் நிற்கக்கூடாது என்ற நிலை சட்ட பூர்வமாகவாவது ஏற்படுத்தவேண்டும். ஒரே ஆள் பாராளுமன்ற உறுப்பினர், பஞ்சாயத்து உறுப்பினர், பஞ்சாயத்து யூனியன் சேர்மென் இப்படி எல்லாம் நிற்பது, போட்டியிடுவது என்றால் இதன் காரணமாக ஏற்பட்டிருக்கிற கட்சிப் பூசல்கள் கணக்குவழக்கில்லை. நான்கூட கல்வி அமைச்சர் அவர்கள் இது போன்ற ஒரு கருத்தை வெளியிட்டார்கள் என்று பத்திரிகையில் பார்த்தேன். அந்த முறை பின்பற்றப்படாத காரணத்தினால் காங்கிரசில் இரண்டு கட்சி, தி.மு.க. வில் இரண்டு கட்சி என்பதாக இப்போது ஊர்தான் இரண்டுபட்டு கொந்தளித்துக்கொண்டிருக்கிறது.

அடுத்தபடியாக, எங்கேபார்த்தாலும் சிலைகள் வைத்தல். வெள்ளைக்காரன் வைத்தான், காங்கிரஸ்காரன் வைத்தான், நாங்களும் வைக்கிறோம் என்ற போக்கு சரியானது அல்ல. இதை மாற்றவேண்டும். அவர்களுடைய உயர்ந்த கருத்துக்களை எல்லாம் மக்களிடையே பரப்புவது உயர்ந்ததாக இருக்கும். அதைவிட்டு சிலைகள் வைக்கிற போக்கு சரியானது அல்ல. அதைப்போலவே ஆடம்பரமான பிறந்தநாள் விழாக்கொண்டாடுவது, க்ரீடம் வைத்துக்கொள்வது இதெல்லாம் மக்கள் மத்தியிலே மிகுந்த அருவருப்பைத்தான் கொடுத்திருக்கிறது. நான் கிராமப்பகுதிகளில் இருந்து வருகிறேன். அதனால் உங்களுக்குச் சொல்கிறேன். ஆடம்பர விழாக்களை நிறுத்தவேண்டும். இவை கடுமையான அருவருப்பை உண்டுபண்ணியிருக்கிறது.

அதற்கடுத்தபடியாக முதல் அமைச்சர் அவர்கள் கொடிப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். மன்னர்களுக்குக் கொடியிருந்தது. ஜனாதிபதிக்குக் கொடியிருந்தது, படகுக்குக் கொடியிருக்கிறது என்றெல்லாம் சொல்லி கொடி கேட்பது முறையல்ல. நான் கதர் போடுகிறேன் என்றால் காங்கிரஸ்காரன் அல்ல. என்னைக் காங்கிரஸ்காரன் என்று நினைந்து ஏற்படுத்துகிற அவமதிப்பைக் கூட இந்தக் கதர்போடுவதனால் நான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்காக நான் கதர்ப் பொருளாதாரத்தை எதிர்க்கவில்லை, அதைப்போல நீங்கள் எல்லாம் ஒன்றை ஏற்றுக்கொண்டுவிட்டீர்கள். நமக்கெல்லாம் தேசியக் கொடி, உலகெல்லாம் தெரிந்த கொடியிருக்கிறது. அதை விட்டு இந்தத் தனிக் கொடிப் பிரச்சினையை இப்போது இழுக்கக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, காவேரியைப் பொறுத்தவரையில் 1968-லேயே ஒரு ஒத்திவைப்புத்தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். அதிலிருந்தே நாம் கவனமாக இருந்திருக்கவேண்டும். இல்லையென்றாலும் இந்தப் பிரச்சினையை நமது முதல்

[திரு. க. ப. நல்லசிவன்] [1970 செப்டம்பர் 8

அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தம்முடைய உரிமையை அவர்கள் பாதுகாத்துக்கொடுக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று பம்பு செட்டுகள் காவேரி வாய்க்கால்களில் வைக்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதைப் பாராட்டுகிறேன். என்றாலும் ராஜ பாளையம் வாய்க்கால், புகலூர் வாய்க்கால் ஆகிய இடங்களில் பம்புசெட்டுகள் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். இங்கே இவர்கள் தண்ணீர் திருடினார்கள் என்று வழக்குப் போடுகிறார்கள். 'இவர்கள் தண்ணீர் திருடர்கள் அல்ல' என்று தீர்ப்புக்கொடுத்துவிட்டார்கள். அதையும் கவனிக்கவேண்டும். இதற்கு ஏதாவது ஒரு ஒழுங்குமுறையை வைத்துக்கொள்ளவேண்டும்.

காந்திஜி இந்தத் தேசத்திற்கு எளிமையான வாழ்க்கையையும், ஆடம்பரமற்ற வாழ்க்கையையும், தியாக வாழ்க்கையையும் ஏற்படுத்திக்கொடுத்தார்கள். அத்தகைய ஆடம்பரமற்ற, தியாக வாழ்க்கை நம்முடைய எல்லாச் செயல்களிலும் பிரதிபலிக்கவேண்டும்.

'கிண்டி ராஜ்பவனில் மானகுட்டி துள்ளிவிளையாடுகிறது' என்பது பெருமைக்குரியது அல்ல. அங்கே மனித குட்டிகள் துள்ளிவிளையாடவேண்டிய காலம் வந்தாகவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. என். இராமச்சந்திரன்: சபாநாயகர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்துப்பேச வாய்ப்பினைத் தந்ததற்காக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். சாதாரணமாக காரில் போகிற ஒருவனது காரைப் பறித்துக்கொள்ள சிலர் பலூனை வெடித்து காரில் கோளாறு ஏற்பட்டதாக அதை நிற்க வைத்து உள்ளே இருக்கிறவர்களை வெளியே இழுத்து எறிந்துவிட்டு காரைப் பறித்துக்கொள்ள முயற்சிக்கும் பைத்தியக்காரத்தனம் போலத்தான் இருக்கிறது இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை. கண்ணினும் நல்லன், கற்றறிவில்லாதார் உண்ணும் நீரிலும் உயிரிலும் உதவக் கூடிய உத்தமத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள். அப்படிப் பேரறிஞர் அண்ணாவிடம் பயிற்சி பெற்று அவரைப் போல ஆட்சி நடத்திவரும் கலைஞர் அவர்களைக் குறை கூறுவது பைத்தியக்காரத்தனமேயாகும்.

ஆதாரங்கள் இருந்தால் யார் யார் பேரில் என்னென்ன குற்றம் என்பதைப் புள்ளிவிவரத்துடன் கணக்குக் காட்டுங்கள். அமைச்சர்கள் பற்றியும் சட்ட மன்ற உறுப்பினர்கள் பற்றியும் குறைகூறுவது, மாலை 7 மணிக்குப் பிறகு நீங்கள் கடற்கரைக்குச் சென்று கடலை நோக்கிப் பார்ப்பீர்களேயானால் ஒரு சிறிய பூனை போனால்கூட உங்களுக்கு நன்றாகத் தெரியும். திரும்பி வருகின்ற நேரத்தில் பெரிய யானை நின்றால்கூட உங்களுக்குத் தெரியாது. காரணம் தண்ணீரில் நின்று பார்க்கின்ற நேரத்தில் தெரிகின்ற விளக்கு வெளிச்சத்தில் ஒன்றுமே பார்க்கமுடியாது. ஆகவேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகள் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லை.



[திரு. கே. என். இராமச்சந்திரன்] [1970 செப்டம்பர் 8

கண்டனத் தீர்மானம் போலீஸ் நிர்வாகம் சரியல்ல என்பது. மாணவர்களைக் குருவிகளைச் சுடுவது போன்று சுட்ட நேரத்தில் அவர்களுக்காக அறிஞர் அண்ணா அவர்கள் இரவு பகல் பாராமல், தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் நடந்த போராட்டத்தின்போது, சோகமே உருவாக இருந்த நேரத்தில் அவருக்கு உறுதுணையாக கலைஞர் அவர்கள் இருந்தார்கள். ஆகவே அவர்களுடைய ஆட்சியிலே உள்ள போலீசாரை அகில இந்தியாவிலும் பாராட்டுகின்ற அளவில் உலகிலேயே தமிழகப் போலீசாருக்குத்தான் அதிகப் பாராட்டுக்கள் உள்ளன. வடநாட்டிலே பல கொள்ளைகளையும் கொலைகளையும் செய்த கொள்ளைக் கட்டத்தினர் முடிவில் தமிழகத்திலே வந்து சிக்கினார்கள்.

இப்படிக் குற்றச்சாட்டுகளைச் சொல்லிச் சொல்லி 1972-லே நீங்கள் ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்று கனவு காணுகிறீர்கள். ஒன்றாக இருந்த உங்கள் கட்சி இன்றையதினம் உடைந்து இருக்கிறது. அத்தகைய நிலைமையை நீங்கள் எங்களிடம் எதிர்பார்க்காதீர்கள். 139 பேராக இருந்த நாங்கள் இப்போது 140 ஆக ஆகியிருக்கிறோம். எங்களுக்குள் எந்தவித கருத்து வேறுபாடுகள் என்றைக்கும் இருக்கப்போவதும் ஏற்படப்போவதும் இல்லை.

இருமொழிக்கொள்கையை இந்த நாட்டுக்கு வேண்டும் என்று சொன்னோம். அப்போது எதிர்க்கட்சியிலே உட்கார்ந்திருந்த காங்கிரஸ்காரர்கள் அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை. அவர்களுக்குத் தெளிவில்லாத காரணத்தால் அவ்வாறு அன்றையதினம் உட்கார்ந்திருந்தார்கள்.

அடுத்து கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக காங்கிரஸ்காரர்களால் கொண்டு வரமுடியாத, திறமைமிகு வெங்கட்டராமன் அவர்களால் முடியாத சேலம் உருக்காலையை இன்றையதினம் கலைஞர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். துர்காபூர் உருக்காலைக்கும், பிலாய் உருக்காலைக்கும், எத்தனை செலவுகள் நிலக்கரியைக் கொண்டுவருவதற்கு ஆகிறது என்பதை எடுத்துக் காட்டி, அதைவிடக் குறைவான செலவிலே சேலம் உருக்காலையை அமைக்க முடியும், நெய்வேலி நிலக்கரியைக் கொண்டு என்று தெள்ளத் தெளிவாக, அழுத்தமாக, ஆணித்தரமாக இந்திரா காந்தி அம்மையாரிடம் தெரிவித்து தஸ்தூர் கம்பெனி ரிப்போர்ட்டை அமல்படுத்தக்கூடிய சூழ்நிலை இன்று இருக்கிறது. இதை எல்லாம் பார்த்து பொறுத்துக் கொள்ள முடியாத காங்கிரஸ் நண்பர்கள், நம்மைப் பார்த்துக் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் பாராட்டினாலும்சரி அல்லது பழி சொன்னாலும்சரி மக்களுக்காக நன்மைகளைச் செய்ய நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு நீங்கள் எவ்வளவு பழி சொன்னாலும் மக்களுக்கு நாங்கள் செய்துள்ள சாதனைகளைப்பற்றி நீங்கள் மறைக்க முடியாது. மக்கள் இப்போது எங்கள் பக்கம் இருக்கிறார்கள். ஆகவே, நாங்கள் மக்களால் விரும்பப்படுகின்றோம். எனவே நாங்கள் மக்களுக்கு நல்லமுறையில் சேவை செய்ய அவர்கள் தங்களுடைய ஆதரவை எங்களுக்குத்தர காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மக்கள் உங்கள் பேரில் நம்பிக்கை வைக்கப் போவது இல்லை என்று சொல்லி எனக்கு வாய்ப்புத் தந்ததற்காக நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. தோ. மு. நல்லசாமி :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, குறுகிய காலம் இருக்கிற காரணத்தினாலே இந்த அமைச்சரவையின்மீது உள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களை குறிப்பிடும் போது ஒரே ஒரு பிரச்சனையை மட்டும் மிகத் தெளிவாக கூற விரும்புகிறேன்.

நான் பயிர் தொழிலைத் தொழிலாகக் கொண்டவன். விவசாயிகள் பிரச்சினை ஏதாவது என்றால் கூர்ந்து கவனிப்பது வழக்கம். அந்த அடிப்படையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு கோவை ஜில்லா விவசாயிகள் சங்கம் நடத்திய கிளர்ச்சி விஷயத்தைப்பற்றிப் பல்வேறு பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது, அதிகாரிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் கூறியதிலிருந்து அங்கே என்ன நடந்தது என்பதைச் சரியாக யாரும் சொல்லவில்லை. நான் விவசாயிகள் கொண்ட குழு ஒன்றை ஊர் ஊராக அனுப்பி என்ன நடந்தது என்பதை அறியும்படி கேட்டுக் கொண்டேன். அவர்கள் சொன்ன தகவலின் படி போலீசார் அங்கே மிகவும் பலாத்காரமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அறிக்கை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடி, கோவை ஜில்லாவில் அதிகமாக மின்சாரம் உபயோகப்படுத்தக் கூடிய நிலை இருக்கிறது. தென்னார்காடு, வடார்க்காடு அல்லது தஞ்சாவூர் ஜில்லாவைப்போல இல்லை எங்களூரில் உள்ள கிணறுகள்.

மாலை 6-00 குனிந்து பார்த்தால் தலையில் கட்டியிருக்கும் துணி கிணற்றுக்குள்ளே விழுந்துவிடும் அவ்வளவு ஆழமான கிணறுகள். முந்திய காலத்தில் ஏற்றம் போட்டுத் தண்ணீர் பாய்ச்சினார்கள். மக்கள் நல அரசாங்கங்கள் அமைந்த பிறகு மின்சாரத்தைத் தண்ணீர் இறைக்க அதிகமாகப் பயன்படுத்தினார்கள். அப்படிப் பயன்படுத்துகிற மின்சாரத்திற்கு 8¼ பைசா மின் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. அதுவே அதிகமாகக் கருதப்பட்டு 1968 அக்டோபர் மாதம் அதைக் குறைக்கவேண்டுமென்று மனுக் கொடுத்தார்கள். அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அதோடு, 8¼ பைசா என்று இருந்ததை 10 பைசா வாக 1—1—1970 முதல் ஆக்கியதோடுகூட 20% சர்சார்ஜும் விதிக்கப் பட்டது. இந்த நிலைமைகளை விவசாயிகள் உணர்ந்து இதைப்பற்றிக் தகுந்தவர் களிடம் சொல்லவேண்டுமென்று 17—1—1970-ல் மகஜர் மூலமாக முதலமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கையைத் தெரிவித்தார்கள். 30—1—1970-ல் மின் சாரத் துறை அமைச்சரிடமும், மின்சார போர்டு சேர்மனிடமும் கோரிக்கை தரப்பட்டது. 4—2—1970-க்குள் மின் கட்டணத்தைக் குறைக்காமல் போனால் நாடு பூராவும் எழுச்சி ஏற்படும் நிலைமையும், புரட்சி ஏற்படும் நிலையும் உண்டா கும் என்று அமைச்சர்களுக்குப் பணிவோடு தெரிவித்தார்கள். 23—2—1970-ல் கோவை கலெக்டர் அவர்களை 20,000 விவசாயிகள் சந்தித்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். 13—3—1970-ல் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் அடையாள உண்ணா விரதம் இருந்தார்கள். 18—3—1970-ல் 20,000 விவசாயிகள் மறியல் போராட் டத்தில் ஈடுபட்ட நேரத்தில் 350 பேரைமட்டும் கைது செய்தார்கள், மீதி பேர் எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பினார்கள். 27—3—1970-ல் கலெக்டர் அவர்கள் மூலமாக முதலமைச்சரைச் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. சங்கப் பிரதிநிதிகள் முதலமைச்சரைச் சந்தித்துப் பேசி நல்ல முடிவு வரும் என்று



எதிர்பார்த்தார்கள். ஆனால், 75 அடிக்குக் கீழே உள்ள கிணற்றுக்கு 9 பைசா என்றும், அதற்கு மேல் குறைவாக உள்ள கிணற்றுக்கு 10 பைசா என்றும் முதலமைச்சர் அறிக்கை வந்தது. கோவையில் பத்தாயிரம் விவசாயிகள் அடங்கிய கூட்டம் நடந்தது. 14—4—1970-ல் மறியல் செய்ய முடிவு செய்து மேற்படி முடிவை அறிந்த சர்க்கார் தரப்பில் 15-ம் தேதி பெருந்துறைத் தொகுதித் தேர்தல் வர இருப்பதால் இந்தப் பிரச்சினை நீங்கிவிடும் என்று உத்தேசமாகச் சொல்லப்பட்டது. ஆனால் ஒன்றும் மாறுதல் ஏற்படவில்லை. 27—4—1970 மின்துறை அமைச்சரைச் சந்தித்து விவசாயிகள் கூறியிருக் கிறார்கள். 9—5—1970-ல் பதினைந்தாயிரத்திற்கு மேற்பட்ட வண்டி, வாகனங் கள், பல்லாயிரக்கணக்கான சைக்கிள்கள் ஊர்வலம் நடந்தது. ஒரு லட்சம் விவசாயிகள் கலந்து கொண்டார்கள். 18-ம் தேதி மறியல் செய்வதாகவும், 20-ம் தேதி ஹர்த்தால் செய்வதாகவும் முடிவு செய்யப்பட்டது. 13—5—1970-ல் முதலமைச்சரைச் சந்தித்துக் கூறினார்கள். 18-ம் தேதி சங்க நிர்வாகிகள். முதலமைச்சரைச் சந்தித்து மூன்று நாட்களுக்குள் முடிவு எடுக்காவிட்டால் 31—5—1970-ல் விவசாயிகள் கூட்டம் கூடி மேல் நடவடிக்கையை முடிவு செய்யும் என்று கூறினார்கள். 31—5—1970 விவசாயிகள் கூட்டத்தில், 15—6—1970, 16—6—1970 ஆகிய இரண்டு நாட்களும் மறியலும் 19—6—1970 அன்று ஹர்த்தாலும் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. சாத்விகமான முறையிலே ஆயிரக்கணக்கான விவசாயிகள் அதிலே ஈடுபட்டார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, சாத்வீகமான முறை யிலே மறியல் செய்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டார்கள். அந்தச் சங்கத்தின் தலைவர் நாராயணசாமி அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் ‘இதற்கு இணங்காவிட்டால் வன்முறையில் ஈடுபடுவோம்; அதற்கு அரசாங்கந்தான் பொறுப்பு’ என்று எழுதியிருக்கிறார். இதுதான் சாத்வீகமான மறியலா ?

**திரு. தோ. மு. நல்லசாமி :** அந்தப் போராட்டத்தை அடக்க அடக்குமுறை செய்யப்பட்டது என்பதை இந்தப் படங்கள் விவரிக்கும். இதைச் சபாநாயகர் அவர்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வன்முறையில் ஈடுபடுவோம் என்று கூறி விவசாயத் தொழிலாளர் சங்கத் தலைவர் நாராயணசாமி கடிதம் எழுதியிருக் கிறாரே, அதைப் பற்றி உறுப்பினர் அவர்கள் என்ன கூறுகிறார் ?

**திரு. தோ. மு. நல்லசாமி :** ஆரம்பத்திலேயே சொன்னேன், நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்னிடம் தந்த தகவல்களை வைத்துச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எனக்கு அந்த விவசாயச் சங்கத் தலைவர் நாராயணசாமி எழுதிய கடிதம் என்னிடத்தில் இருக்கிறது. அதிலே ‘வன் முறையில் ஈடுபடுவோம்’ என்று எழுதியிருக்கிறாரே, நீங்கள் சாத்வீகமான முறையில் மறியல் என்று சொல்லுகிறீர்களே, அந்தக் கடிதத்தைப்பற்றி என்ன கூறுகிறீர்கள் ?

திரு. தோ. மு. நல்லசாமி : அந்தச் சங்கத் தலைவருக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் இடையே என்ன கடிதப் போக்குவரத்து நடந்தது என்று எனக்குத் தெரியாது. நான் அறிந்த வரையில் சாத்வீகமான போராட்டந் தான் நடத்தினார்கள். போலீசார் அடக்குமுறையைக் கையாண்டார்கள்.

1,250 விவசாயிகளை 16—6—1970-ல் கைது செய்தார்கள். 19-ம் தேதி 144 தடை உத்தரவு போடப்பட்டது. பொருமாநல்லூர் என்ற இடத்தில் கூடியிருந் தவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. மூன்று பேர் உயிரிழந் தார்கள். இந்தச் சூழ்நிலையில் நான் இந்த அரசாங்கத்தைப் பார்த்துக் கேட்க விரும்புவது எல்லாம் இது ஒரு மக்கள் நல சர்க்காரா அல்லது போலீஸ அரசாங்கமா என்றுதான் கேட்க விரும்புகிறேன். அரசு இந்தக் கேள்விக்குச் சரியான பதிலைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, நம்பிக்கையில்லாத் தீர்மா னத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இடதுசாரிக் கம்யூனிஸ்டு கட்சி யின் சார்பாக மதிப்பிற்குரிய சங்கரய்யா அவர்கள் கொடுத்த கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்று நம்முடைய நாட்டில் போலீஸ் நடவடிக்கை எந்த மாதிரி இருந்துகொண்டு வருகிறது என்பதைப்பற்றி இந்தத் தீர்மானத்தைக் கொடுத்த எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக, இந்த ஆட்சி வந்த காலத்தில் போலீஸ் கொள்கையில் மாற்றம் ஏற்படும் என்று மக்கள் நம்பினார்கள். ஆனால் இன்று நடைமுறையில் கடந்த மூன்று வருஷகாலத்தில் அந்தச் சாதாரண மக்கள், உழைக்கக்கூடிய மக்கள், ஏழைத் தொழிலாள மக்கள், தங்களுடைய கோரிக்கைகளுக்காக, நியாயமான உரிமைகளுக்காகக் கிளர்ச்சிகள் செய்யக் கூடிய காலத்தில் போலீஸ் எந்த மாதிரியான முறைகளைக் கடைப்பிடித்தது என்பதைப் பார்க்கும்போது இந்தக் கொள்கையில் எந்த விதமான மாற்றமும் ஏற்படவில்லை என்பதை எல்லோரும் உணர்ந்து கொண்டார்கள். அப்படி நடந்த பல அடக்குமுறைகளைப்பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டார்கள். நான் இப்போது நடந்த நிலப்பறிப் போராட்டம்பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நிலப்பறிப் போராட்டம் எதற்காக நடத்தப்பட்டது என்பதுபற்றி அனை வருக்கும் தெரியும். இன்று பல நில சீர்திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப் பட்டும் எந்த நிலமும் மிச்சப்படாமல், ஏழைகளுக்கு நிலம் கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நிலப் பிரபுக்கள் சட்டத்தையும், அரசாங்கத்தையும் ஏமாற்றி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார்கள். அந்த வகையிலே உள்ள ஏராளமான நிலத்தை ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டு மென்பதற்கான ஒரு போராட்டம் அகில இந்தியா பூராவிலும் தொடங்கப்பட்டு தமிழகத்திலும் நடைபெற்றது. அதற்காக நடந்த 9-ம் தேதி முதல் 15-ம் தேதி வரை ஆங்காங்கு பொதுக் கூட்டங்கள் நடத்தி, எவ்வளவு நிலங்கள் நிலப் பிரபுக்களிடம் குவிந்து கிடக்கின்றன, அந்த நிலங்களை ஏழைகளுக்கு எடுத்துக் கொடுக்க அரசாங்கம் எப்படித் தவறி விட்டது என்பதைப்பற்றியெல்லாம் விளக்கிச் சொல்லத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் 9-ம் தேதிக்கு முன்னா லேயே, 8-ம் தேதி இரவோடு இரவாக ஆறாயிரத்துக்கும் அதிகமான கட்சித்



தலைவர்களையும், விவசாயச் சங்க ஊழியர்களையும் ஜெயிலில் அடைத்துவிட் டார்கள். அவர்கள் மேல் சதி செய்ய முயற்சித்தார்கள் என்ற வகையில் பல விதமான கேஸ்கள் போடப்பட்டன. அவ்வளவு பேரையும் முன்கூட்டியே கைது செய்யப்பட்ட பிறகும் ஆறாயிரத்திற்கும் அதிகமான பேர் 15, 16, 17-ம் தேதிகளில் போராட்டத்தில் பங்கு கொண்டிருக்கிறார்கள்.

எங்கேயாவது ஒரு வன்செயலோ அல்லது பலாத்காரமோ எங்கள் சார்பி லிருந்து தொடக்கப்பட்ட இயக்கத்தில் நடத்தப்பட்டதா என்பதை நிரூபிக்க முடியுமா? போலீஸ் இந்த நிலப் போராட்ட இயக்கக் காலத்தில் எத்தகைய காரியங்களைச் செய்திருக்கிறது என்பதைப்பற்றி ஒன்றிரண்டு சம்பவங்களைப் பற்றிமட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

1970 ஆகஸ்ட் மாதம் பத்தாம்தேதி அன்று திருச்சி மாவட்டத்தில் துறையூரில் ரங்கராஜ், சுந்தரம் என்பவர்களை அங்குள்ள சப் இன்ஸ்பெக்டர் பூட்ஸ் காலால் உதைத்திருக்கிறார்கள். போராட்டம்பற்றி வைக்கப்பட்டிருந்த தட்டியை எடுக்கவேண்டுமென்று சொல்லிப் பலாத்காரமாக அந்தத் தட்டியை எடுத்து அதை தீயிட்டுக் கொளுத்தி இருக்கிறார்கள். கடையநல்லூரில் ராமசாமி, அக்பர், முய்தீன் போன்ற 29 தோழர்களை பிடித்துச் சந்தேகக் கேஸ் போட்டு அவர்களை அடைத்து விட்டார்கள். திருச்சியில் அன்னவாசல் என்ற இடத்தில் 8-8-1970-ல் வீட்டில் இருந்தவர்களை, போராட்டத்திற்குப் போகாத அழகிரி ராமனையும், திருவேங்கடம், சுந்தரம் என்ற இந்த மூன்று பேர்களையும் சபாஸ்டின் என்பவர் அவர்கள் வீடுகளுக்குச் சென்று பிடித்து அந்த மூன்று பேர்களின் வேஷ்டியையும் உரிந்து நிர்வாணமாகவே அவர்களை அவர்கள் வீடு களிலிருந்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது.

நேற்றையதினம் நண்பர் தனுஷ்கோடி அவர்கள் வலிவலத்தில் உள்ள நிலை மைபற்றிப் பேசினார்கள். அங்குள்ள பெரிய மனிதர்களுக்கு ஆதரவாக போலீஸ் செயல்பட்டு வருகிறது என்பதைச் சொன்னார்கள். அங்கு சத்தியா கிரகம் செய்யப் போன நாற்பது பேர்களையும் போலீஸ் அடித்து அவர்களின் மண்டைகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றி மதிப்பிற்குரிய சுப்பையா, எம்.எல்.ஏ. அவர்கள்கூட அமைச்சர் அவர்களுக்குத் தந்தி மூலம் தகவல் அனுப்பியுள்ளார்கள். கோவை மாவட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. ஆன என். கே. பழனிசாமி அவர்களையும் ஐந்து பஞ்சாயத்துத் தலைவர்களையும் கைதுசெய்து பழனிசாமி அவர்கள் யூனியன் சேர்மன் தேர்தலுக்கு நிற்கப் போகிறார் என்பதைத் தெரிந்துகொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக் கும் ஒருவரை சேர்மனாகக் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்களைத் தேர்தலுக்கு முன்கூட்டியே கைதுசெய்திருக்கிறார்கள். அவர்கள் எந்த எந்த ஊர்களில் இருக்கிறார்கள். இன்று அவர்கள் கைதுசெய்யப்பட்டு ப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எந்த ஊர்களில் இருக்கிறார்கள் என்பதை அறிய பலாத்காரப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். இன்று அவர்கள் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டை நீடிக்க கோவையிலிருந்து திருப்பூருக்கு அவர்கள் எல்லோரையும் கையில் விலங்குகள் மாட்டி கொண்டுசெல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஏ. கே. சுப்பையா அவர்களின் வீட்டிற்குச் சென்று அங்கு வேலை பார்த்து வந்த அனைவரையும் கைதுசெய்தாகிவிட்டது. அவர் தம்பி, மருமகன், அவரது சிறிய தகப்பனார் இப்படி அனைவரையும் பிடித்து கைதுசெய்தாகிவிட்டது. பின்னர் 16—8—1970-ல் லாரியோடு 15 போலீஸ்காரர்கள் அவர்கள் வீட்டிற்குச் சென்று சுப்பையா அவர்களின் மனைவியாரைப் பார்த்து உங்களை அரஸ்ட் செய்ய நாங்கள் வந்திருக்கிறோம், லாரியில் ஏறுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அம்மாள் அந்த போலீஸ்காரர்களைப் பார்த்து எங்கள் வீட்டுக்காரரை கைது செய்துவிட்டீர்கள்,. என்னையும் கைது செய்கிறீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களை லாரியில் ஏற வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். உடனே அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மிராசுதார் கல்யாண ராம ஐயர் அவர்கள் வந்து சொல்லி அந்தச் சம்பவம் நடக்கவிடாமல் சப்தம் செய்து அனுப்பியிருக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் 8-ம் தேதி முதல் 17-ம் தேதி வரையில் ஜனநடமாட்டம் இன்றி போலீஸ் ஆட்சி மாதிரி இருந்தது என்று சொல்லப்படுகிறது. மன்னார்குடியில் வடபாதிமங்கலத்தில் ஒரு தெருவில் உள்ள ஆண்களை எல்லாம் கைது செய்திருக்கிறார்கள். அங்குள்ள பெண்களை கேவலமாகப் பேசி போலீஸ் ரௌடிகளோடு சென்று உங்கள் புருஷன்மார்களைப் பிடித்துவிட்டோம், நீங்கள் ஊரை விட்டு ஓடவேண்டுமென்று பயமுறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் விரட்டப்பட்டிருக்கிறார்கள். அப்போது ஒரு பெண் போக முடியாது என்று பதில் சொல்ல அப்பெண்ணின் மண்டை உடைக்கப்பட்டு அப்பெண் இன்று கூத்தான்குடி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இன்று ரிமான்டிற்காக கூட்டிக்கொண்டு போகும் முறையில் திறந்த லாரிகளில் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத வகையில் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சோளக் கஞ்சி கொடுக்கப்பட்டு அவர்கள் பலர் வயிற்றுப்போக்கில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ரிமான்ட்க்கு கொண்டு போகும் காலத்தில் அவர்களை சொந்தமாக வாங்கி சாப்பிடச் சொல்லி இருக்கிறார்கள். ஆக, பொதுவாக போலீஸின் கொள்கை நாட்டிலே இன்று ஏழை எளிய மக்கள், தொழிலாளர்கள், விவசாய மக்கள், இவர்களின் போராட்டம் என்றால், உழைக்கக்கூடிய மக்கள், தொழிலாளர்கள் இவர்கள் மீது இவர்கள் எந்தப் போராட்டத்தில் ஈடுபட்டாலும் அது கோவையாக இருந்தாலும் சரி அல்லது நெய்வேலியாக இருந்தாலும் சரி பலாத்கார முறையில் அவர்கள் மேல் போலீஸ் நடவடிக்கைகள் எடுக்கின்றன என்பதைச் சொல்வதற்காகத்தான் இவற்றை கூறுகிறேன். இப்படி பலவிதங்களில் நடைபெறுகின்றன.

மதுவிலக்கு கேஸ்களை எடுத்துக்கொள்வோம். குடிக்கிறவர்களை விட்டுவிட்டு அப்பாவி சேரி மக்களை, குடிக்காதவர்கள் பலரைப் பிடித்துச் சென்று கேஸ் போடுகிறார்கள், கேஸ்கள் போடவேண்டுமென்பதற்காக. இப்படி போலீஸாரின் அடக்கு முறைக் கொள்கை இருக்கிறது. கோவில்பட்டியில் ஒரு மில் முதலாளி கதவடைப்பு செய்யும்போது அந்த அநியாயத்தை எடுத்துச் சொல்வதற்காக தொழிலாளர்கள் கூட்டம் போடுவதற்கு, ஊர்வலம் செல்வதற்கு 144 தடை உத்தரவு போடப்பட்டது. பொது மக்களிடம் உண்மையை விளக்க



வேண்டும், ஏன் போராட்டம் நடத்தப்படுகிறது என்பதைப் பற்றி பொதுமக்களிடம் விளக்குவதற்காக வாய்ப்பளிக்காமல் முன்னதாகவே அவர்களைப் பிடித்து பலவித வழக்குகள்போட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்த போலீஸ் அடக்கு முறைக் கொள்கை மாறவேண்டுமென்றுகூறி இந்தக் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் முன்மொழியப்பட்டு அவையில் பரிசீலிக்கப்பட்டு வருகிற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

எதிர்க்கட்சி அணியில் இருக்கக்கூடியவர்கள், குறிப்பாக ஸிண்டிகேட் காங்கிரஸ் அணியில் இருக்கக்கூடியவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்வது திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக வந்துவிட்ட நிலைமைக்குப் பின்னால் சொல்கிறார்களா என்று கேட்டால் அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்கக் காலத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் அத்தனையிலும் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி வந்தவர்களாவார்கள். அப்படியுள்ள காங்கிரஸ் இயக்கத்தில் உள்ளவர்கள் இன்றையதினம் எதிர்க்கட்சிக்கு வந்துவிட்ட நிலையில் காலையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல் சில ஊர்களில் வருடம் ஒன்றுக்கு திருவிழா வருவதைப் போல் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை இந்த அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து, காரணம் இருக்கிறதோ இல்லையோ நிச்சயமாக அப்படிக் கொண்டு வந்து பேச இருக்கிறோம் என்று சுட்டிக்காட்டினார்கள்.

அவர்கள் எப்படிக்கருதினாலும் இன்றையதினம் தமிழ்நாட்டில் இருக்கிற நான்கு கோடிக்கு மேற்பட்ட மக்களும், 1967 பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆளும்கட்சியாக ஆக்கிவிட்டவர்கள் ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அதன் அரசையும், குறிப்பாக கலைஞர் அவர்களின் தலைமையில் இயங்குகிற தமிழக அரசை, தமிழக மக்களுக்காக அரசு செய்து வருகிற நல்ல காரியங்களை நம்பிக்கையோடு பாராட்ட முன் வந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டுக்கு முன்னால் தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி ஏற்பட்டபோது மத்திய அரசிடமிருந்து பதினாறு கோடி ரூபாய்க்கு மேல் பணத்தைப் பெற்று, வாதாடிப் பெற்று, ஒரு உயிரைக் கூட இழக்க சம்மதிக்காமல் மிக எளிதாக அவர்களுக்கே உரித்தான சாமர்த்தியமான முறையில் மத்திய அரசிடமிருந்து அத்தொகையைப் பெற்று நிலைமையை சமாளித்துக் காட்டியிருக்கிறார்கள். அதைக் கொண்டும் நாட்டுமக்கள் கலைஞர் அவர்கள் தலைமையில் இயங்குகிற நல்லாட்சியை நம்பிக்கையோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. சென்னை மாநகருக்கு காவேரியில் இருந்து குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டத்தை, ஏறத்தாழ 21 கோடி ரூபாய்க்கு மேல் செலவழியக்கூடிய திட்டமாகயிருந்தாலும் அதைச் சரிப்படுத்தித்தான் தீருவேன் என்ற அடிப்படையில் நம் முதல் அமைச்சர் அவர்கள் அதற்காக பாடுபட்டு வருகிறார்கள், அத்திட்டத்தை துரிதமாக முடிக்க வேண்டுமென்று. எவ்வளவோ கேலிகள் பேசப்பட்டாலும், எவ்வளவோ அவதூறுகள் கிளப்பப்பட்டாலும்

அவற்றிற்கு செவி மடுக்காமல் சென்னை மாநகரில் உள்ள லட்சோப லட்சம் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தை, வீராணம் ஏரியிலிருந்து குடி தண்ணீர் கொண்டு வருகிற திட்டத்தை நிறைவேற்றி வருகிற இந்த அமைச்சரவையை, இந்த நல்ல அரசை நாட்டு மக்கள் நம்பிக் கொண்டுதானிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. சென்னை மாநகரத்தில் இருக்கும் கூவம் சீரமைப்புத் திட்டத்தை மிகச் சிக்கல்களுக்கு இடையில், பல தொல்லைகளுக்கு இடையில் மிகச் சிறப்பான திட்டமாக உருவாக்கி இருக்கிறார்கள். அந்தத் திட்டம் எப்போது முடியும் என்று நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

பெருமதிப்பிற்குரிய விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த ஆட்சியில் நம்பிக்கை வைக்கவில்லை என்று சொன்னார்கள். அது எவ்வளவு பொருத்தம் இல்லாதது என்பது அவர்களுக்கே கூட நன்றாகத் தெரியும். அவர்கள் கூட இந்த நாட்டை ஆண்ட காலத்தில் ஒன்றும் செய்யவில்லை என்று நான் சொல்ல மாட்டேன். சில பல சட்டங்களை விவசாயிகளுக்குச் செய்து இருந்தாலும் விவசாயிகள் மவாட்டமான தஞ்சை மாவட்டத்தில் அதுவும் கீழத்தஞ்சையில் விவசாயிகளின் கூலி நிர்ணயச் சட்டத்தை, கணபதியாப்பிள்ளைக் குழு கொடுத்த சிபார்சின் பேரில், முதல்வர் அவர்கள் அந்த கூலி உயர்வு சட்டத்தை உருவாக்கி கிழக்குத் தஞ்சை விவசாயப் பெருங்குடி மக்களிடத்தில், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களிடத்தில் அவர்களுக்கு இருக்கும் நல்ல நம்பிக்கையை நிலை நாட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்', நிலம் இல்லாத விவசாயிகளுக்கு தமிழகத்தில் கடந்த 1—1½ ஆண்டு காலத்தில் ஏறத்தாழ 2½ லட்சம் ஏக்கர் நிலத்தை நிலம் இல்லாத விவசாயிகளுக்கு வழங்கி இருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் உள்ளவர்கள் உழுது வாழ்ந்து கொள்வதற்கு ஏறத்தாழ 2¼ லட்சம் ஏக்கர் நிலத்தை கழக அரசு இலவசமாக பட்டா வழங்கி இருப்பதை தமிழக மக்கள் நம்பிக்கையோடு பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு லட்சம் குடும்பங்களுக்கு குடி இருப்பதற்கு மனைகளை இலவசமாக வழங்கி இருக்கிறது. இதைப்போலவே உச்சவரம்பு சட்டத்தில் 10 ஸ்டாண்டர்டு ஏக்கராக இருந்ததை 15 ஆக குறைத்ததோடு அல்லாமல் அதற்கு முன்னாலே ஆண்டு வந்த மதிப்பிற்குரிய காங்கிரஸ் இயக்கத்தில் இருப்பவர்கள் கொண்டு வந்த உச்சவரம்புச் சட்டத்தில் இருந்த பல விதி விலக்குகளை பரிசீலித்து ஆலோசனை தருவதற்கு குழு ஒன்றை அமைத்து, அதிலே மதிப்பிற்குரிய மாற்றுக்கட்சியினரையும் நியமித்து, அதில் எவற்றை நீக்கிவிடலாம் என்று சொல்வதற்கு உரிய நிலைமையில் அந்தக் குழுவை அமைத்து இருக்கிறார்கள். அந்தக்குழு சொல்லப்போகிற சிறப்பான அம்சங்களை, அதை நிறைவேற்றப் போகிற தமிழக அரசின் சாதனைகளை மக்கள் நம்பிக்கையோடு பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்த விதிவிலக்குகளை எவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்றப் போகிறது இந்த அரசு என்று உன்னிப்பாக கவனித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இதற்கு முன்னாலே யாருமே சொல்ல தைரியம் இல்லாத, நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு 1971-72 ஆண்டுக்குள் தமிழகத்திலே இருக்கிற எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி தரும் வாய்ப்பை நிச்சயம் தனது அரசு உருவாக்கித்தர இருக்கிறது என்று தலை நிமிர்ந்து நம்முடைய கலைஞர் அவர்கள்



அறிவித்து இருக்கிறார்கள். அந்த மின்சார வாரியத்தில் பணியாற்றிக் கொண்டு இருக்கும் 71,000 தொழிலாளத் தோழர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 14 கோடி அதிகமாக செலவு வந்து இருக்கிறது என்றாலும் தமிழகத்தை ஒளிமயமான தமிழகமாக மாற்றுவதற்கு 4 கோடி ரூபாயைக் கொடுத்து இருக்கிறார்கள்.

இதையெல்லாம் பார்க்கிற தமிழக மக்கள், இதனை மட்டுமல்ல, இதற்குப் பிறகு இன்னும் செய்ய இருக்கிறார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இதற்கு முன்னாலே அமைந்திராத ஒரு புதிய துறையை நமது கழக அரசு உருவாக்கி இருக்கிறது. தமிழகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள், மிகவும் சமுதாயத்திலே ஒதுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் நிலைகளை உயர்த்த அவர்களுக்காக ஒரு தனி பிற்பட்டோர் நலத் துறை அமைத்து, அதற்கு என் தனி அமைச்சரை உருவாக்கி, பிற்பட்டோர் நலனைக் கவனிக்க குழு அமைத்து, அது மாநிலம் முழுவதும் (மணி அடிக்கப்பட்டது) சுற்றிப்பார்த்து பிற்பட்டோரின் நிலையை முன்னேற்ற அறிக்கை அளித்து இருக்கிறது. இதை இந்த மன்றத்தில் உள்ளவர்கள் அறிவார்கள். நாட்டில் உள்ளவர்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். கலைஞர் அவர்களை நல்ல நம்பிக்கையோடு பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நம்பிக்கையைக் கண்டு சகிக்காதவர்கள், அந்த நம்பிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு [illegible] இல்லாதவர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை [illegible] கொண்டு [illegible] இருக்கிறார்கள். நான் முதலிலேயே சொன்னமாதிரி, [illegible] நம்பிக்கை இல்லா[illegible] தீர்மானம் 6 மாதத்திற்கு ஒரு முறை வரும் ஒ[illegible]க்கு என்பதை இன்றை[illegible]ம் மக்கள் புரிந்து கொண்டு இருக்கிறார்கள்.

ஒன்றை மட்டும் சொல்லி [illegible]க்கிறேன். மதிப்பிற்குரிய மாற்றுத் தரப்பில் இருக்கிற தோழமைக்கட்சி[illegible] சேர்ந்தவர்கள் கண்டனத் தீர்மானத்தை தந்து இருக்கிறார்கள். போல[illegible] இலாக்காவைப் [illegible]த்தவரையில் நல்ல மாற்றம் இருக்கும் என்று கருதி[illegible] இ[illegible] என்று சொல்கிறார்கள். ஒன்றை மட்டும் சொல்வேன். இ[illegible]ம் முதலமைச்சராக இருக்கும் கலைஞரிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள், அதைப்போலவே பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அந்தக் காலத்தில் இருந்த காங்கிரஸ் ஆட்சியால் அதிகமாக தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். விசாரணை இல்லாமலே சிறைக்கூடத்தில் பல மாதங்கள் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். தடுப்புக்காவல் சட்டத்தை உபயோகித்து சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். அதே நேரத்தில் இன்று இருக்கும் அரசு அப்படி நிச்சயமாகச் செய்யவில்லை. (மணி அடிக்கப்பட்டது).

ஒன்றைமட்டும் சொல்லி உரையை முடிக்கிறேன். எவ்வளவோ பெரியவர்கள் தடுப்புக்காவல் சட்டத்தைப்போட வேண்டுமென்று வலியுறுத்தி இருந்தாலும், எத்தகைய ஏளனமாக பேசி இருந்தாலும், அதைப் பிறப்பிக்காமல், அந்தத் தடுப்புக்காவல் சட்டத்தை அமல்படுத்தாமல் அந்த நிலப்பறி இயக்கத்தை மிகத் திறமையாக சமாளித்தார்கள். இப்படி ஏழைகளுக்கு உழைக்கும் தன்மையில் இருக்கும் முதலமைச்சரை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா என்று கேட்டு, இந்தக் கண்டனத் தீர்மானத்தை கண்டித்து என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

[1970 செப்டம்பர் 8

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அவையின் முன்னால் பிரேபித்து இருக்கிற நம்பிக்கை இன்மைத் தீர்மானத்தின் மீது என்னுடைய நம்பிக்கை இன்மையை எதிர்த்து நான் சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1967-வது ஆண்டு பொதுத் தேர்தலிலும், அதற்குப் பின்னால் நடைபெற்ற பல்வேறு இடைத்தேர்தலிலும் இந்த நாட்டு மக்களால் நம்பிக்கை இல்லை என்று தெளிவாக ஓட்டளித்து துரத்தப்பட்டவர்கள், அதே மக்களுக்கு மத்தியில் நம்பிக்கை பெறுவதற்கு இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லாத தீர்மானத்தை நம்முடைய மதிப்பிற்குரிய எதிர்க்கட்சியின் தலைவரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் சென்ற முறை இந்த அவையில் அவர்களுடைய நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை தெரிவிக்கிற நேரத்தில் சில பிரச்னைகளை அடிப்படையாக வைத்து இதன் மீது நாங்கள் இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கை இன்மையைத் தெரிவிக்கிறோம் என்று கூறினார்கள். ஆனால் இன்று அவர்கள் அப்படிக் கூறவில்லை. கூறவில்லை என்பதற்கு நான் நினைக்கிற காரணம், இன்னின்ன பிரச்னை மீது தான் தெளிவான நம்பிக்கை இல்லை என்று கூறுகிற அளவுக்கு அவர்களுக்கு இந்த அமைச்சரவை மீது குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்குரிய ஒரு வாய்ப்பு இல்லை என்று நான் நினைக்கிறேன். அல்லது தெளிவு இல்லை. தெளிவு அற்ற ஒரு நிலையில் ஓட்டுமொத்தமாக நம்பிக்கை இல்லை என்ற பெயரில் ஒரு தீர்மானத்தை அவர்கள் கொண்டு வந்து பல்வேறு பிரச்னைகளை அடிப்படையாக வைத்து நாட்டு மக்களை குழப்புவதன் மூலம் அவர்களது நம்பிக்கையைப் பெற முடியுமா என்று நினைக்கிறார்கள். அப்படி நினைப்பார்களானால் நிச்சயமாக அவர்கள் அதில் தோல்வி கண்டுவிடுவார்கள் என்று எச்சரிக்கை செய்கிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய சென்னை நகர மக்களுக்கு காவிரித் தண்ணீரைக் கொண்டு வருகிற மிகச் சிறப்பான உயர்ந்த நோக்கத்தோடு தாகத்தோடும் தவிப்போடும் இந்த சென்னை நகர மக்களெல்லாம் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கும் வீராணம் திட்டத்தை, அது செயல்படுகிற முறையை குறை கூறினார்கள். அப்படிக் குறை கூறுகிற நேரத்தில் எதை அடிப்படையாக வைத்து அவர்கள் கூறுகிறார்கள் என்று 2 நாட்களாக நடைபெறுகிற விவாதத்தின் போது வீற்று இருந்து கேட்கிறேன். தெளிவான குற்றச்சாட்டுகளைக் கூறவில்லை. அப்படிக் கூறுவார்களானால் நிச்சயமாக அவர்களை ஆதரிக்கலாம் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் ஆதரிக்கக்கூடிய அளவுக்கு அதுதான் குற்றம் என்று மதிப்பிற்குரிய நம்பிக்கை இன்மை தீர்மானத்தைப் பிரேரேபித்த தலைவர் கூறவில்லை.

ரூ. 21,50,000 அந்த வீராணம் ஏரித்திட்டம். அதில் பைப் லைன் புதைப்பது ஒரு பகுதி. நில ஆர்ஜிதம் செய்வது ஒரு பகுதி. நீர் ஏற்று நிலையத்தை அமைத்துத் தருவது ஒரு பகுதி. சற்றேறக்குறைய 17 கோடி ரூபாயை அவர்கள் தலைமைப் பொறியாளரின் அறிக்கை மீது நன்கு பரிசீலிக்கப்பட்டு யார் குறைந்த டெண்டரை தந்து இருக்கிறார்களோ அவர்களுக்கு அந்த பைப் தயாரிக்கும் பொறுப்பை கொடுத்து இருக்கிறார்கள். நம்பிக்கை இன்மையைக் கூறுகிற நேரத்தில் இந்த அடிப்படையில் இதன் பேரில் நம்பிக்கை இல்லை என்று அவர்கள் கூறுவார்களானால் நாம் ஆதரிக்கலாம். ஆனால் குறைந்த டெண்டரின்



1970 செப்டம்பர் 8] [ஹாஜி ம. மு. பீர்முஹம்மது]

மீது நாட்டு மக்களின் பணம் வீண் விரயம் ஆகி விடக்கூடாது என்ற நன்நோக்கத்தோடு சென்னை நகர மக்களுக்கு சிறப்பாக நீர் தரும் பணிக்கு செய்கிற சேவை மீது நம்பிக்கை இல்லை என்றால், இந்த நல்ல காரியம் நிறைவேற்றப்பட்ட பின்னர் சென்னை நகர மக்களின் வாக்குக்காக அடுத்த பொதுத் தேர்தலில் தமிழக மக்களிடத்தில் வருவதற்கு வாய்ப்பாக இருக்காதே என்ற காரணத்தால் அவர்கள் நம்பிக்கை இல்லை என்று கூறுகிறார்கள் என்று நினைக்கிறேன். மாலை 6-30

அதுமட்டுமின்றி கூவம் மணக்கின்றது, கூவம் மணக்கின்றது, அது மணக்க, மணக்க கரை மணக்கின்றது. ஒரு காலத்தில் நாட்டிலுள்ளவர்கள் பார்ப்பதற்கே மிக அசிங்கமான ஒரு இடமாக இருந்த கூவம் நதிக்கரை ஓரம் இன்று நாட்டு மக்கள் மத்தியில் தன்னுடைய எழிலை, இந்த அரசு செய்திருக்கிற ஏற்றத்தை, எடுத்துக்காட்டுகிறது. கூவம் நதியில் மிக அமைதியாக, ஒரு காலத்தில் படகில் சென்று, தம்பதிகளும், வாலிபர்களும் சென்னை நகரத்தைச் சுற்றிவருகிற சிறப்பான நிலையை இந்தக் கூவம் நதி தீரம் அடுத்த பொதுத் தேர்தலின்போது அடைந்துவிடும், அதனால் அவர்களுக்கு யாரும் வோட்டு தந்துவிடக்கூடாதே என்பதற்காக கூவம் நதித் திட்டத்தின் மீது குறை கூறுகின்ற காட்சியை நான் பார்க்கிறேன். 1½ கோடி ரூபாய் அதற்கு மொத்த மதிப்பீடு. ஏறக்குறைய ரூ. 85 லட்சம் செலவு செய்திருக்கிறார்கள். அந்த மொத்த மதிப்பீட்டுத் தொகையை செலவு செய்வதற்கு முன்னாலேயே, இன்று சென்னை நகரத்திற்கு வருகின்ற மக்கள் இந்தக் கூவம் நதிக் கரை ஓரத்தில் அமைந்திருக்கிற அழகிய பூங்காவை, அந்தப் பூங்காவிலே மகுடியை கையிலே வைத்து ஊதுகின்ற ஒரு பாம்பாட்டியினுடைய தோற்றத்தை, அந்தத் தோற்றத்திற்கு முன்னால் நின்று படம் பிடித்து ஆடுகின்ற பாம்பை பார்க்கின்றார்களே, அந்தக் காட்சி அவர்களுடைய சாதனையாக அமைந்துவிடக்கூடாது என்கின்ற காரணத்தினால் கூவம் நதி சீரமைப்புத் திட்டத்தின் மீது குறை கூறுகிறார்கள் என்று கருதுகிறேன். அதனால் இவர்களுடைய நம்பிக்கையின்மையை ஆதரிக்க முடியவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் துப்பாக்கிச் சூட்டைப்பற்றி கூறினார்கள். இந்த அவையிலே உறுப்பினர்கள், நம்முடைய திருச்சி நகரத்தில் பொன்மலையிலே நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தின்போது 11 தொழிலாளர்களைச் சுட்டுக்கொன்றார்கள். அம்மணி அம்மாள் போன்றவர்களை தாலியை இழக்கச் செய்தார்கள், பொட்டு இழக்கச் செய்தார்கள், பூ இழக்கச் செய்தார்கள், பொலிவு இழக்கச் செய்தார்கள், இந்த நாட்டில் தனக்கு ஒரு பதி இருக்கிறார் என்கின்ற நிலையை மாற்றி அமைத்தார்கள். அவர்கள் இந்தத் துப்பாக்கிச் சூட்டைப்பற்றி கூறுகிறார்கள். எதை அடிப்படையாக வைத்து கூறுகிறார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. சிறைச்சாலையில் பிடித்து அடைத்து வைத்த நேரத்தில் 22 பேர்களை சுட்டுக் கொன்று வெளியே பிரேதங்களைப் போட்ட நேரத்தில் இல்லாத நிலையிலே, இப்பொழுது இவர்கள் மனிதாபிமானத்தோடு துப்பாக்கிப் பிரயோகம் என்று கூறுகிறார்களே, அது, எது என்று எனக்குத் தெரியவில்லை. அதே நேரத்தில் நம்முடைய பார்வேர்டு பிளாக் கட்சித் தலைவர் அவர்கள் கீழத்தாலம் சம்பவத்தை எடுத்துரைத்த நேரத்தில் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கேட்டுக் கொண்டிருந்ததுமட்டுமில்லை. அவர்களுக்கு பதில் சொல்ல முடிய

வில்லை. மனிதாபிமானத்தோடு, மதாபிமானத்தோடு ஒரு பிரச்னையை நான் உங்களிடத்தில் விரித்துரைத்து, என்னுடைய உரையை நான் நிறைவுபடுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

ஜமீலா என்ற எங்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்த பெண்மணி தஞ்சை நகரத்தில் உள்ள தகாத போலீஸ்காரர்களால் கற்பழிக்கப்பட்டு, உயிர்வதை செய்யப்பட்ட நிலையில் உயிர் நீத்திருக்கிறார் என்ற பிரச்னையை நாட்டு மக்கள் மத்தியில் கிளப்பிக்கொண்டிருக்கிற காட்சியை நான் பார்க்கிறேன். இங்கே கூட கவன ஈர்ப்புத் தீர்மானம் வருவதற்கு முன்னாலேயே காவல் துறை அமைச்சரிடத்தில் எங்கள் கட்சியினர் தந்த தகவல்களை அடிப்படையாக வைத்து விவரத்தை எடுத்துக் கூறினேன். அவர்கள் நான் விசாரணைக்கு உத்தரவிடுகிறேன், அதற்குப் பிறகு முடிவைத் தெரிவிக்கிறேன் என்று தெரிவித்தார்கள். அதை காவல் துறையினரைப் பொறுத்தவரையில் திருடர்களோடும், அயோக்கியர்களோடும், பிற நிலையிலே உள்ளவர்களோடும் பழகுகின்ற அவர்களிடத்தில் அந்தப் பழக்க வழக்கத்தை அடிப்படையாக வைத்து சில சூழ்நிலைகள் உருவாகின்றன என்கின்ற மனோ தத்துவ உண்மையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதே நேரத்தில் அவர்களிடம் மனிதாபிமானத்தோடு கூடிய, மற்றவர்களை மதிக்கின்ற ஒரு நிலையை அரசு ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பெண் கற்பழிக்கப்பட்டது உண்மை என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. 7 அவுன்ஸ் சுக்கிலமும் சுரோநிதமும் அந்தப் பெண்மணியிடமிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. வாயில் நஞ்சு ஊற்றப்பட்டிருப்பது பிரேத பரிசோதனையின்போது தெரிந்தது என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. இதை அடிப்படையாக வைத்து நஞ்சு குடித்து ஜமீலா செத்துவிட்டாள் என்று பஞ்சாயத்தார்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்து, மனிதாபிமானத்தோடு கூடிய நிலையில் ஒரு முடிவை அரசு எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டு மக்களினால் தெளிவாக நம்பிக்கையில்லை என்று கூறப்பட்ட கட்சியினால் கொண்டு வரப்பட்டிருக்கிற நம்பிக்கையின்மை தீர்மானத்தை எதிர்ப்பதோடு, உங்களோடு யார் கூட்டாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், 1972-ம் ஆண்டுத் தேர்தலில் உதய சூரியனும், பிறைச் சந்திரனும் இணைந்து நின்று ஒன்றுபடுவதன் மூலம் ஆளுகின்ற வாய்ப்பை இறை அருளால் நாங்கள் பெற்றுத் தருவோம், இந்த ஆட்சிக்கு துணை புரிவோம், துணை வருவதற்கு இருக்கிறோம் என்று கூறி, என்னுடைய உரையை நிறைவுபடுத்திக்கொள்கிறேன்.

* **திரு. வி. எஸ். கோவிந்தராசன்**: பேரவைத் தலைவர் அவர்களே, கழக அரசின் மீது சிண்டிகேட் காங்கிரஸ் தரப்பிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய கருத்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் சிண்டிகேட் காங்கிரஸ் பகுதியிலிருந்து வந்திருப்பது ஒரு வகையிலே எங்களுக்கு லாபக்கணக்குத் தான். ஏனென்றால் அது மக்கள் நம்பிக்கையை 1967-ல் இழந்துவிட்ட ஒரு இயக்கம். அவர்கள்





மீது நம்பிக்கை இழந்துவிட்ட காரணத்தினால், எங்கள் மீது நம்பிக்கை வைத்து, இந்த மன்றத்திற்கு எங்களை அனுப்பியிருக்கிற மக்கள் சமுதாயம் அந்த நம்பிக்கையை எங்கள் மீது தொடர்ந்து வைத்திருக்கவேண்டுமென்றால், காங்கிரஸ் கட்சியின் நம்பிக்கையின்மை எங்கள் மீது இருக்கவேண்டும், நாங்கள உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாகிவிட்டால், பொது மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக ஆகமாட்டோம். ஆகவே, ஒரு வகையிலே காங்கிரஸ் தரப்பில் நம்பிக்கையில்லை என்ற தீர்மானம் கழக அரசுக்கு லாபக் கணக்குத் தான்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது என்று சொன்னால், அதற்கான திட்டவட்டமாக சில குற்றச்சாட்டுகளை வைத்து, இன்னென்ன காரணத்திற்காக நம்பிக்கையில்லை என்று சொல்லவேண்டும். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படி திட்டவட்டமாக எந்தக் குற்றச் சாட்டையும் சொல்லாமல் வழக்கமாக கடந்த 3½ ஆண்டு காலத்தில் இந்த மன்றத்தில் அவ்வப்பொழுது என்ன நிர்வாக குறைபாடுகள் இருப்பதாக அவரால் கூறப்பட்டதோ அதே கதம்ப நிகழ்ச்சியைத்தான் இந்த நிகழ்ச்சியிலும் நடத்தியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன? ஒரு வேளை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் அவர்களுக்கே நம்பிக்கையில்லையோ என்று தான் கருதவேண்டியிருக்கிறது. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரலாமென விதி இருக்கிறது. அதை கடைபிடிக்கத்தான் நம்பிக்கையின்மைத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது என்று கருதுகிறேன். அப்படிக் கொண்டு வராவிட்டால், அவர்களைச் சார்ந்தவர்கள், வெளியே இருப்பவர்கள் அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லிவிடுவார்கள் என்ற ஐயத்தின் காரணமாக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற குற்றச்சாட்டுகள் விசித்திரமாக இருக்கின்றன. சட்ட அமைச்சர் சிறையிலே ஒரு தலைவரை சந்தித்தார், அதனால் நம்பிக்கையில்லை என்கிறார்கள். சட்ட அமைச்சர் ஒரு தலைவரை சிறையிலே சந்தித்தார், அதனால் நம்பிக்கையில்லை என்று தீர்மானம் எந்த வகையில் பொருத்தம் என்பது எனக்குப் புரியவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் ஒரு உதாரணம் சொன்னார். பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப்பாக்கு காசுக்கு எட்டு என்று சொன்னார்கள். அந்த முறையில் தான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அவர்கள் காட்டுகின்ற காரணங்களும் அமைந்திருக்கின்றன.

சிண்டிகேட் காங்கிரஸ் தரப்பில் எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்ட ஒரே குற்றச்சாட்டு 'இந்த அரசு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றவில்லை, தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றவில்லை' என்பது தான். சபாநாயகர் அவர்களே, நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைக் கேட்கின்ற அருகதை சிண்டிகேட் காங்கிரஸுக்கு இல்லை என்பதை அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். யார் அந்தத் தேர்தல் அறிக்கையை ஒப்புக்கொண்டு, எங்களோடு தோள் கோர்த்து நின்று, நாங்கள் வெற்றிபெறுவதற்கு துணையாக, வாய்ப்பாக, இந்த மன்றத்திற்கு வர உதவிகரமாக இருந்தார்களோ அவர்கள் தான் இதைக் கேட்பதற்கு அருகதை உடையவர்களே தவிர, யார் எங்கள் தேர்தல் அறிக்கையிலே நம்பிக்கையில்லாதவர்களோ, யார் அதை எதிர்த்துப் பேசினார்களோ, அது சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னார்களோ அந்த காங்கிரசார் இன்று ஏன் அதை நிறைவேற்றவில்லை என்று கேட்பது, அவர்களுடைய எண்ணத்தில்

மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதையும், அவர்கள் அன்று கூறியதற்கும், இன்று கூறுவதற்கும் முரண்பாடு இருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல, துப்பாக்கிப் பிரயோகங்கள் பற்றிச் சொன்னார்கள். இந்த மன்றத்திலே காங்கிரஸ்காரர்கள் அதைச் சொல்லலாமா? என்று பல உறுப்பினர்கள் ஆதாரத்தோடு, அழகாக எடுத்துச் சொன்னார்கள். நானும் பல சம்பவங்களை விளக்கி நேரத்தை வீணாக்காமல் ஒன்றைமட்டும் சொல்கிறேன். சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள் துப்பாக்கிச் சூடு பற்றிப் பேசுவது, கசாப்புக்காரன் அஹிம்சை பற்றிப் பேசுவது போலத்தான் ஆகும்.

போலீஸ் நடவடிக்கைகளைப் பற்றி கண்டனத் தீர்மானம் தோழமை கட்சியிலிருந்து கொண்டு வந்திருக்கிறார்கள். போலீஸ் நடவடிக்கை மூலம் கழக அரசு முதலாளிகளுக்கு ஆதரவாகவும், தொழிலாளிகளுக்கு எதிராகவும் இருக்கிறார்கள் என்று சொல்லுவது சரியில்லை. அது தவறானது, முறையற்றது. தி.மு.க. எதிர்க் கட்சியில் இருந்த போதும், ஆட்சிக்கு வந்த பிறகும், தொழிலாளிகளுக்கு ஆதரவாகத்தான் இருந்து கொண்டு வருகிறது. ஆனால், பொது உடைமை நண்பர்களுக்கு, அவர்களிடம் ஏற்பட்டிருக்கும் மாறுதல் காரணமாக மாறாகத் தெரிகிறது. அண்மையிலே, திராவிட முன்னேற்றக் கழக தொழிற் சங்கம், தொழிலாளர் முன்னேற்றப் பேரவை என்ற மத்திய ஸ்தாபனம் ஏற்பட்டதால் அவர்களுக்கு மனத்தாங்கல் இருக்கிறது. பன்னெடுங்காலமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் எந்தச் சங்கத்தில் வேண்டுமானாலும் இருக்கட்டும் என்று அனுமதி தந்து வந்தது. மற்ற அரசியல் தலைவர்கள் அதைக் காப்பாற்றாமல், கட்சி சார்பில் தொல்லைகள் வந்தன. எங்கள் தோழர்கள் கட்சிப் பாகுபாட்டின் காரணமாகப் பாதிக்கப் பட்டார்கள். எங்களுக்கு என்று ஒரு தனிக் கூடாரம் அமைத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. பொது உடைமைக் கட்சிக்கு எதிராக அமைக்கப் பட்ட முகாம் அல்ல. வன்முறை தலைதூக்கும் போது, அரசு நடவடிக்கை எடுக்கிறது என்றால், பொது மக்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அதன் காரணமாக சில பல நேரங்களில் நடவடிக்கை எடுக்கிறது. அதைத் தவறாக பொது உடைமைக் கட்சி நினைக்கக் கூடாது. எதிர்க் கட்சிக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவை நடக்கவில்லை.

பேறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி பாட புத்தகத்தில் வருவது சரியல்ல என்று சொன்னார்கள். பேறிஞர் அண்ணாவை விட பாட புத்தகத்தில் இடம் பெறுவதற்கு தகுதி படைத்தவர் வேறு யார் என்று கேட்கவிரும்புகிறேன். இந்த நாட்டை, தமிழ் மண்ணை, தமிழின் சிறப்பை தமிழ்க்கலை இவைகளையெல்லாம் அகில இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் புகழ்கொடியை உயர்த்திய மாபெரும் மேதை அண்ணாவின் பெயர், வரலாறு பள்ளிக்கூட புத்தகங்களில் வரக்கூடாது என்று கூறுவது கடைந்தெடுத்த கட்சிக் காழ்ப்பு உணர்ச்சி அல்லாமல் வேறு என்ன? பெரியார் போன்ற சிந்தனைச் சிற்பிகளின், அறிவுலக மேதை அண்ணாவின் சரித்திரங்கள் பாட புத்தகங்களில் இன்னும் அதிகமா க இடம் பெறவேண்டும். பேறிஞர் அண்ணாவின் கட்டுரைகள் கல்லூரிகளில் பாடமாக வரவேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.





சிண்டிகேட் காங்கிரஸ் மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி பற்றியும், தனிக்கொடி பற்றியும் குறிப்பிட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசினார்கள். இப்பொழுது சமயம் இல்லை என்கிறார்கள். அதிலிருந்து, பிறகு ஒரு சமயம் இருக்கிறது என்று ஒப்புக் கொண்டதற்கு நன்றி.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுது சமயம் இல்லை என்று நான் சொல்லவில்லை. நான் எதிர்த்துப் பேசியிருக்கிறேன். எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்று சொன்னேன்.

**திரு. வி. எஸ். கோவிந்தராசன் :** இப்பொழுது சமயமில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார். குறிப்பு புத்தகத்தைப் பார்க்கலாம். (குறுக்கீடு) உட்கார்ந்து கொண்டு சட்டம் சொல்லவேண்டாம். சபாநாயகர் சொன்னால் ஏற்றுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுதும் சொல்லுகிறேன். எச்சரிக்கையோடு தயவுசெய்து இருக்கவேண்டும் என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. வி. எஸ். கோவிந்தராசன் :** மாநில சுயாட்சி என்பதை பூகோள ரீதியாக ஒத்துக் கொண்டே ஆகவேண்டும். இந்திய அரசியல் சட்டத்தைச் செய்தவர்கள் (பெடரல்) கூட்டு அமைப்பு என்ற முறையில் தான் செய்தார்கள் (யூனிடரி) ஒரு எஃகு கூடு அமைப்பில் வைக்கவில்லை. ஆனால் கடந்த 20 ஆண்டு காலமாக, பெயரளவில் தான் பெடரலே அல்லாமல், உண்மையில் ஓர் யூனிடரி அமைப்பாகவே தான் இருந்து வந்திருக்கிறது.

இந்த நாட்டில் மொழி வாரி மாநிலங்கள் பிரிக்க வேண்டும் என்ற காலத்தில், காங்கிரஸ் நண்பர்கள் எதிர்த்தார்கள். அப்படியிருந்தும், பிற்காலத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவு எடுக்க வேண்டிய நேரத்தில் எடுக்காததால், பொட்டி ஸ்ரீராமுலு மறையவும், விஜயவாடாவில் கலகம், பொருட்சேதம் ஏற்பட்டதன் விளைவு, ஆந்திர மாநிலம் வந்தது. பின்னால் குஜராத் அதே முறையில் பிரிந்தது காலத்தோடு மொழிவாரி மாநிலங்கள் பிரிந்திருக்குமானால், மாநிலங்களுக்கிடையே கசப்பு வளர்ந்திருக்காது.

அதே போல், மாநில சுயாட்சி-மத்தியத்தில் கூட்டாட்சி என்பதில் எல்லோரும் ஒத்துழைத்துப் பெற்றால், ஜீவனுள்ள உண்மையான கூட்டாட்சி மலரும்.

இதை ஒட்டிய கொடிப் பிரச்சினை பற்றியும் சொல்கிறேன் எதிர்க் கட்சித் தலைவர், மாநில சுயாட்சி ஒரு பூதம், கொடி அதன் அடையாளம் என்று சொன்னார்கள். அதே நேரத்தில், இதெல்லாம் ஒன்றும் புரியவில்லை, ஒன்றுமே புரியவில்லை என்றார்கள். ஒன்றுமே புரியாத அவருக்கு பூதம் என்று எப்படித் தெரிந்தது? மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பூதம்தான். மிரண்டிருக்கிற கண்ணுக்கு பூதமாகத் தெரிகிறது. கொடி இந்த நாட்டில் பலதரப்பினருக்கும் இருக்கிறது. சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட முதல் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த சியாம பிரசாத் முகர்ஜி, இந்து மகா சபையின் கொடியைத் தான் காரில் போட்டிருந்தார். அதேபோன்று, சட்ட

அமைச்சர் டாக்டர் அம்பேத்கார், அவருடைய கட்சிக் கொடியைப் போட்டுக் கொண்டு சென்றார். இப்படிப் பழைய வரலாறுகள் இருக்கின்றன. காஷ்மீருக்கு தனிக் கொடி இருக்கலாம் என்றால், குமரி முனையில் ஏன் மறுப்பு? திரு. ம. பொ. சி. அவர்கள் பல கருத்துக்களை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். அவைகள் ஏதும் மறுக்கப்படவில்லை.

அது மாத்திரமல்ல; கொடி, தனிக் கொடி என்று பேசினார்கள். அது சரியல்ல. மாநிலத்தின் அடையாளக்கொடி கோபுரம் இருக்கிறது. மத்திய சர்க்காரைப் பிரதிபலிக்க தேசியக்கொடியும் அதிலே இருக்கிறது. மாநிலத்திற்கு கோபுரச்சின்னமும், மத்தியத்திற்கு மூன்று சிங்க சின்னமும் ஒதுக்கப்பட்டிருப்பதால் எந்தக் கெடுதலும் ஏற்படாதபோது, மாநிலக் கொடியால் மட்டும் ஆபத்து என்பதற்கு என்ன ஆதாரம்?

ஆக, இவைகளெல்லாம், அரசு செய்யும் நல்ல காரியங்களை புரிந்துகொள்ளாமல் சொல்லுவது, கழக அரசால் சாதிக்கப்பட்ட நல்ல காரியங்கள் பல்வேறு இருக்கின்றன. அவைகளை விவரிக்க நேரமில்லை. சிண்டிகேட் காங்கிரசாருக்குத்தான் நம்பிக்கை இல்லை; தமிழ் நாட்டில் வாழும் நான்கு கோடி மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது இந்த அரசாங்கத்தின்மீது. பல்வேறு தரப்பினருக்கும் நம்பிக்கை இருக்கிறது, பல நல்ல காரியங்களை அரசு செய்து இருப்பதால். அப்படி மக்கள் ஆதரவைப் பெற்று நடக்கும் இந்த சர்க்கார் மீது நம்பிக்கை இல்லை என்று சிண்டிகேட் காங்கிரஸ் கொண்டுவந்திருக்கும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முழு மனத்தோடு வெறுத்து, எதிர்க்கிறேன்.

* திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் கொண்டு வந்துள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து, சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டு விதமாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம். ஒன்று கொள்கை அடிப்படையில் மூன்று ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படவில்லை என்று எதிர்க்கலாம்.

அதற்கு அடுத்தபடியாக, நிர்வாகத்தில் ஊழல்கள் பற்றி சொல்லலாம். முக்கியமாக பொறுப்பான எதிர்க் கட்சி கொள்கை அடிப்படையில், இந்த மூன்று ஆண்டுகளில் ஒருவிதமான முன்னேற்றமும் இல்லை, அதனால் கண்டிக்கத் தக்கவர்கள் என்று சொல்லலாம். அப்படிச் சொல்லவில்லை. முக்கியமாக நிர்வாகத்தில் இருக்கிற சிறு கேடுகளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது, எதிர்க்கட்சியாக இருக்கும் நண்பர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். கொள்கை அடிப்படையில் முன்னேற்றம் இல்லை என்பதானால், தேர்தலுக்கு ஒரு வழி ஏற்படலாம், தனக்குச் சாதகமாக வழி ஏற்படலாம். ஆனால் கொள்கை அடிப்படையில் பார்த்தால், மூன்று ஆண்டுகளில் பல நல்ல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. முதலில் நிலச் சீர்திருத்தம்.

அடுத்தபடியாக பி.யு.சி. வரையில் இலவசக் கல்வி. மூன்றாவதாக, கொள்கை அளவில் எல்லாக் கிராமங்களுக்கும் மின் விசை வசதி செய்யப்படுகிறது.



நான்காவதாக, பாக்வர்ட் கிளாஸ் கமிஷன் செயல் பட்டுக்கொண்டிருக்கிறது.

ஐந்தாவது, எல்லாக் கிராமங்களிலும் நகரசபைகளிலும் தண்ணீர் வசதி செய்து கொடுக்கவும், ட்ரெயினேஜ் வசதி செய்து கொடுக்கவும், வாட்டர் சப்ளை அண்ட் ட்ரெயினேஜ் போர்ட் என்று நிறுவியிருக்கிறார்கள்.

ஆறாவதாக காவிரி நீர்ப்பாசனத் திட்டங்கள், மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக 78 கோடி ரூபாய் அளவில் திட்டங்கள் போடப்பட்டு, அதற்காக உலக பாங்கியிடம் பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

ஏழாவதாக ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மென்ட் போர்டு அமைக்கப்பட்டு, சிறுதொழில்களின் வளர்ச்சிக்காக வழி செய்திருக்கிறார்கள்.

எட்டாவதாக மணலி பெட்ரோ-கெமிகல்ஸ் இண்டஸ்ட்ரீஸுக்காக 100 கோடி ரூபாய் அளவில் திட்டத்திற்கு வழி செய்திருக்கிறார்கள்.

ஒன்பதாவதாக கோயில்களில் உள்ள உபரிநிதியை எடுத்து, கல்விக்காக செலவழிக்க வழி செய்திருக்கிறார்கள்.

பத்தாவதாக ரேஷன் ரத்துச் செய்யப்பட அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

அதுதவிர, மத்திய ஆட்சியுடன் சுமுகமான உறவுமுறைகளை ஏற்படுத்தி, அதன்மூலமாக சேலம் உருக்காலை, வீராணம் ஏரித் தண்ணீரை சென்னை நகருக்குக் கொண்டு வருதல், கூவம் நதி அபிவிருத்தித் திட்டம், மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றவற்றிற்கு வழி வகுத்திருக்கிறார்கள். மேலும் எங்கள் பகுதியில் கருப்பா நதித் திட்டத்தை 1 கோடியே 85 லட்சம் ரூபாய் அளவில் உருவாக்க வழி செய்திருக்கிறார்கள்.

மற்றும் கடானா-ராமாநதித் திட்டம், ஹைட்ரோ எலக்ட்ரிகல் ஸ்கீம் போன்றவையெல்லாம் நடந்து வருகின்றன. கொள்கை அளவில் இவைகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அரசு கொள்கையளவில் நல்ல அபிவிருத்தித் திட்டங்களைச் செய்திருக்கிறதா, இல்லையா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் மூன்று ஆண்டுகளில் அவர்கள் தங்களுடைய கொள்கைத் திட்டங்களை நல்ல முறையில் செயல்படுகிறார்கள். இந்த அரசினர் கொள்கைத் திட்டங்களை வைத்திருக்கிறார்களா இல்லையா, செயல் முறையில் கொண்டு வந்திருக்கிறார்களா, இல்லையா என்பதைத் தான் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, நிர்வாகச் சீர்கேடு இருப்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளவேண்டும். நிர்வாகத்திலுள்ள சீர்கேடுகளைத் திருத்துவதற்காக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேவையில்லை. நிர்வாகச் சீர்கேடுகளைத் திருத்துவதற்காக பலவிதமான வழிமுறைகள் இருக்கின்றன, பல இலாகாக்கள் இருக்கின்றன. நிர்வாகச் சீர்கேடுகளைத் திருத்துவதற்காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை என்பதைச் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். வரவு செலவுக் கோரிக்கையில்—பட்ஜெட்டில்—விவாதிக்கலாம்.

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [1970 செப்டம்பர் 8

எங்கள் பகுதியில் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட சீஃப் செகரடரி அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிப்ரவரி மாதத்தில் அனுப்பி வைத்தார்கள். அவர் வந்து அந்த இடங்களைப் பார்வையிட்டுவிட்டுப் போனார். அதன் பிறகு இன்று வரையில் அந்தப் பகுதிகளில் ஒன்றுமே திட்டப் பணிகள் செய்யப்படவில்லை. இதைப் பார்க்கும்போது அந்தப் பகுதி மக்கள் ஆளும் கட்சியை குறை சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அடுத்தபடியாக, மாவட்டங்கள்தோறும் நீர்ப்பாசன மாநாடு போடப் பட்டது. ஆனால் மேல் நடவடிக்கை ஒன்றும் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதைக் கவனித்து தக்க வழிவகைகளைச் செய்வார்கள் என்று கருதுகிறேன். இந்த மாதிரியான நிர்வாகச் சீர்கேடுகளைத் திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள **வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.**

மற்றும், 'சீரமைப்பு' என்ற பெயரால் பல இலாகாகளில் சீரமைப்பு வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. முன்பு கால்நடை இலாகா சீரமைக்கப்பட்டது. இந்த சீரமைப்புத் திட்டத்தினால் ஒருவித பிரயோஜனமும் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். 'ஸ்டேட் லைவ்ஸ்டாக் போர்டில் கூட இதை எடுத்துச் சொன்னேன். இதைப் பரிசீலனை செய்வதற்கு வழி செய்ய வேண்டும்.

இதேமாதிரியாக, பொதுப்பணி துறையில் 'ரீ ஆர்கனைசேஷன்' செய்யப் பட்டது. பொதுப்பணி நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கிற சிக்கல்கள் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். இந்தச் சீரமைப்பினால் மக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். இதனால் மக்களுக்கு ஒருவித பிரயோஜனமும் ஏற்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நேரத்தில், 'இரண்டு ஆண்டுகள் வரையில் பொறுத்திருந்து பார்க்கலாம், நன்மை கிடைக்காவிடில் அதைத் திருத்தலாம்' என்று சொன்னார்கள்.

அடுத்தபடியாக, கல்வி இலாகாவை எடுத்துக்கொண்டால், **1967-68-ல்** இலவசக் கல்வி திட்டம் வந்தது. ட்யூஷன் ஃபீஸ் 60 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். ஆனால் சில தனிப்பட்ட கல்லூரிகளுக்கு 80 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். அரசின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படாமல், விதிமுறைகளுக்கு விரோதமாக நடந்துகொண்ட கல்லூரிகளுக்கு 80 ரூபாய் ட்யூஷன் பீஸ் கொடுக்கிறார்கள். ஆனால் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடந்து வந்த கல்லூரிகளுக்கு 60 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். ஏன் இந்த பாகுபாடு என்பது தெரியவில்லை. இந்த பாகுபாட்டை எடுத்துவிட வேண்டும். அறுபது ரூபாயோ, எண்பது ரூபாயோ, எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பதைத் தீர்மானித்து, எல்லாக் கல்லூரிகளுக்கும் ஒரேவிதமாக ட்யூஷன் ஃபீஸ் கொடுக்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மின்சார இணைப்பு சம்பந்தமாக ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களில் நீர் இறைப்பதற்காக மின்சாரம் கொடுப்பதில் அதிக காலதாமதம் ஆகிறது. அந்தத் துறையில் லஞ்சம் அதிகமாகத் தாண்டவ



1970 செப்டம்பர் 8] [திரு. ஏ. சுப்பையாமுதலியார்]

மாடுகிறது. அமைச்சர் அவர்கள் கவனித்து உடனடியாக நீர் இறைப்பிற்கு மின்சார இணைப்பு கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாவட்டங்கள்தோறும் 'மனுநீதி வாரம்' என்று கொண்டாடுகிறார்கள். மாவட்டக் கலெக்டர்கள் இதை நடத்துகிறார்கள். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அமைச்சர்கள் வெளியூர்களுக்குப் போகும்போது, அந்தப் பகுதிகளிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகியோர்களைக் கூப்பிட்டு, மக்களுடைய குறைகள் என்ன என்று கேட்டால், மக்களுடைய பிரதிநிதிகளுடன் நல்ல தொடர்பு ஏற்படுத்த முடியும். மாவட்டக் கலெக்டர்கள் ஏதோ 'குட்டி ராஜா' மாதிரி சர்வாதிகாரம் நடத்துகிறார்கள். அவர்களைத் தட்டிக் கேட்பதற்காகவாவது அமைச்சர்கள் வெளியூர் செல்லும்போது, அந்த இடத்தில் மக்களுடைய குறைகளைத் தீர்க்கக்கூடிய மாதிரி ஒரு மாநாடு கூட்ட ஏற்பாடு செய்தால் மிகவும் நன்றாக இருக்கும், மக்களுடன் நல்ல தொடர்பும் ஏற்பட வசதியா இருக்கும், மாவட்ட ஆட்சியாளருக்கும் நல்ல அக்கறையும் பொறுப்பும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, கோட்டையில் உள்ள அமைச்சர்களை சட்டமன்ற உறுப்பினர்கள் சந்தித்து குறைகளை எடுத்துச் சொல்வதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிக் கொடுத்து சந்தர்ப்பம் அளித்தால் இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இந்த அரசு நிர்வாகத்திலுள்ள சீர்கேடுகளை முதலில் திருத்திவிட்டால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆறு மாதத்திற்கு ஒரு தடவை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தாலும், இந்த அரசுக்கு பயம் இல்லை. நிர்வாகம் சீர்திருந்தினால் உங்களுக்கு நல்லது, பொதுமக்களுக்கும் நல்லது என்று கூறிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி** : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபையிலே கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் இரண்டையும் பார்க்கும்போது, நான் கண்டனத் தீர்மானத்தையொட்டி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, இன்று இரண்டு நாட்களாக நடைபெற்று வருகின்ற விவாதங்களைப் பார்க்கும்போது உண்மையிலேயே ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்கிற விவகாரங்களைப் பார்க்கிறபொழுது, எங்கள் பக்கத்தில் சொல்லும் பழமொழிதான் நினைவிற்கு வருகிறது. 'பிறந்த வீட்டுப் பெருமையை உடன்பிறந்தாளிடம் சொன்னதுமாதிரி' என்று சொல்வார்களே, அதுபோல இருக்கிறது. 'உங்கள் ஆட்சியில் நீங்கள் சுடவில்லையா? எங்கள் ஆட்சியில் நாங்கள் சுட்டால் என்ன?' என்ற நிலைமையில் தான் விவாதம் வருகிறது. கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளிலே ஆட்சியின் நிலைமையையும், ஆட்சியிலுள்ளவர்களின் பேச்சையும் பார்க்கும்போது, 'நாங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், ஏழைகளின் முன்னேற்றத்திற்காகவும் தான் நாங்கள் தொண்டு செய்கிறோம்' என்று சொல்கிறார்கள். மக்களும் இதை உண்மை என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் மூன்றில் ஒரு பங்காக இருக்கின்ற தாழ்த்தப்பட்டவர்களுடைய வாழ்க்கைத்தரமானது முதலில் எப்படி இருந்ததோ, அதிலிருந்து

கொஞ்சமும் மேல்நிலைக்கு வளரவில்லையென்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஏதோ பெரும் போக்காக இதைச் சொல்லிவிடவில்லை. எவ்வளவு கொடுமைகளையும் துன்பங்களையும் நாங்கள் அனுபவித்துக்கொண்டு வருகிறோம் என்பதற்கு ஒரு பட்டியலே இருக்கிறது. ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தஞ்சாவூர் ஜில்லா, ஒர்த்தநாடு தாலுகா, திருவோணம் யூனியன், ஆதனக் கோட்டை என்ற கிராமத்தில் அரிஜனங்கள் சமமாக சாமி கும்பிடச் சென்றார்கள் என்பதற்காக அடித்துத் துன்புறுத்தப்பட்டு, ரோடுகளிலேகூட அரிஜனங்கள் நடமாட முடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறது. இது குறித்து போலீசில் புகார் கொடுத்தும் முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

அடுத்தபடியாக தஞ்சாவூர் தாலுகா, கந்தர்வக்கோட்டை தொகுதி மருங்குளம் கிராமத்தில் அரிஜனங்களுக்கு மண்ரோடு ஒன்று சர்க்காரில் ஆர்ஜிதம் செய்து ஐந்து வருடம் ஆகியும், அந்த ரோட்டின்மீது அரிஜனங்கள் நடக்க முடியவில்லை. ஜாதி இந்துக்களின் தொல்லை அதிகமாக இருக்கிறது. அந்த ரோடில் ஆதித் திராவிடர்கள் செல்லக்கூடாது என்பதற்காக ரோட்டில் வீடு கட்டிக் கொண்டு, ரோடு வேண்டாம் என்று கூறினால்தான், எழுதிக் கொடுத்தால்தான் கிராமத்தாருடன் சேர்த்துக்கொள்வோம். அப்போதுதான் கடையிலே சாமான்கள் கொடுக்க முடியும் என்ற முறையில் கொடுமைப் படுத்தி வருகிறார்கள். இது குறித்து வெல்பேர் ஆபீசரிடம் சொன்னேன். கொஞ்சம் பொறுத்துப் பாருங்கள், பின்னர் பார்க்கலாம் என்று சொன்னார்கள்.

அங்கே என்ன நடக்கிறது? 'ரோடில் வரமாட்டோம் என்று எழுதிக்
இரவு 7-00 கொடுத்தால்தான் கிராமத்தில் சேர்த்துக்கொள்வோம்' என்கிறார்கள். இது பற்றிய தகாறில் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று புகார் செய்தால் அங்கே இருக்கிற போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு நல்ல யோசனையைத் தெரிவிக்கிறார். "இந்த மருங்குளத்திற்கு பற போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்த வேண்டியது தான்" எனத் திட்டாமல் திட்டுகிறார். இதுபற்றி நான் 30---4---1970-ல் எஸ்.பி.-க்குக் கடிதம் எழுதி விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன்.

அடுத்து, பட்டுக்கோட்டை தாலுகா ஆலத்தூர் கிராமத்தில்--எம்.எல்.ஏ. திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களுடைய ஊர்----ஆதித் திராவிடர்கள் சாமி கும்பிட காவடி எடுத்தார்கள். அதற்காக 21----4----1970-ல் சாதி இந்துக்கள் அவர்களை அடித்து இம்சித்திருக்கிறார்கள். புகார் போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. முடிவு என்ன? "உங்கள் எம்.எல்.ஏ-யிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு ஊருக்குள் போங்கள்" என்கிறார் வேறு எவ்வித நடவடிக்கையும் அடித்தவர்கள் மீது எடுக்கப்படவில்லை.

அதேமாதிரி ஓரத்தநாடு தாலுகா பிள்ளையூர் கிராம ஆதித் திராவிடர்கள் சாதி இந்துக்களுடைய கூட்டத்திற்கு பறை அடிக்கவில்லை என்பதற்காக 6--7--1969-ல் ஆதித் திராவிடர்களை அடித்திருக்கிறார்கள். ஆடுமாடு சாமான்



களைக் கொள்ளியிட்டிருக்கிறார்கள். உடனடியாக போலீசுக்குத் தெரியப் படுத்தப்பட்டிருக்கிறது. வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கே ஒரு வீட்டையே கொளுத்தி விட்டார்கள். வழக்கு நடந்தது. தாங்கள் ஜயித்துவிடுவோம் என்று அவர்கள் திருவிழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் வழக்கு தோற்றுவிட்டது. தண்டனை கிடைத்த ஆத்திரத்தில் எதிரிகள் ஆதித்திராவிட மக்கள் வசிக்கும் தெருவுக்குள் புகுந்து அந்தப் பெண்களை எல்லாம் துன்புறுத்தி கற்பழித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக போலீசில் புகார் பண்ணி யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 2--5--1970 தான் இந்த அநாகரிகமான சாதிக்கொடுமை இழைக்கப்பட்டிருக்கிறது. ஒரு மாதமாகியும் ஆதித் திராவிட மக்கள் வீட்டைவிட்டு வெளியே வர பயந்து நடுங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

அதே மாதிரி பாப்பாநாடு, திருமங்கலகோட்டை ஆகிய இடங்களிலும் ஆதித்திராவிட மக்களுக்கு சர்வசாதாரணமாக துன்பம் இழைக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கஷ்டங்களை எல்லாம் பார்க்கும்போது எந்த ஆட்சி வந்தாலும் எங்களுடைய துன்பத்தை நீக்குவதாக இல்லை என்றே தோன்றுகிறது. தி.மு.க. ஆட்சியில் எங்கள் துன்பம் நீங்கும் என்று எதிர்பார்த்து ஏமாந்து தான் போயிருக்கிறோம்.

இந்த பஞ்சாயத்துத் தேர்தல் சமயத்தில் மாயவரத்தில் மிக ருசிகரமான ஒரு சம்பவம் நடந்தது. மாயூரம் வட்டார கீழ மாப்படுகை ஆதித் திராவிட தெருவைச் சார்ந்த வி. ராகவன் என்பவரை 3----8----1970-ல் மாயூரம் தலைமைக் காவல் நிலையத்தில் வைத்து சித்திரவதை செய்து கொன்றிருக்கிறார்கள். இதுபற்றி எஸ்.பி-க்கு ரிப்போர்ட் பண்ணி விசாரணை நடக்கிறது. ஆனால் மாயூரம் வட்டம் நகர தி.மு.கழகம் பொட்டவெளியைச் சேர்ந்த ராகு என்கிற ராகவன் அவர்கள் கட்சியைச் சேர்ந்தவன் இறந்ததாக நோட்டீஸ் போட்டு வேண்டுமென்றே தவறான பிரச்சாரம் செய்தது. இந்த ஆள் உயிரோடு இருக்கிறவன். அவனைப் பிடித்து இழுத்து வந்து 'உயிரோடு இருக்கிற இவனை செத்ததாக தி.மு.கழகம் நோட்டீஸ் போட்டு சித்திரவதை செய்யப் பட்டு கொலை செய்யப்பட்ட ஆதித் திராவிட மகன் ராகவன் சாவை மறைக்க திரை கட்டிற்று. தி.மு. கழகத்தவர்களே இப்படிச் செய்வதைப் பார்க்கிற போதுதான் முதுகளத்தூரில் இமானுவேல் காலம் தொட்டு இன்றுவரையும் துன்புறுத்தப்படுகிறவர்கள் ஆதித்திராவிடர்கள்தான். ஜெயிலுக்குப் போகிற மக்கள் இவர்களைத் தவிர வேறு யாருமில்லை. பூந்தாழங்குடியில் இறந்தான் பக்கிரி. எங்கே துப்பாக்கி சூடு என்றாலும் சாகிறவர்கள் ஆதித் திராவிட மக்கள் தான் என்று தெரிகிறது. ஆயினும் எல்லாக் கட்சியினர்களும் எங்களுக்கு நன்மை செய்வதாகவே சொல்கிறார்கள்.

இன்னும் முக்கியமானதொரு செய்தி, இதைப்பற்றி எல்லோருக்கும் அனுப்பியிருக்கிறோம். ஜனாதிபதிக்கே அனுப்பியிருக்கிறோம். சேலத்தில் நடந்த சம்பவம். தஞ்சை மாவட்ட குடவாசலைச் சேர்ந்த புஷ்பவல்லி என்ற பெண் 11—7—1970-ல் சேலத்திற்கு ஆக்சிலரி நர்சிங் மிட் ஒய்ப் கோர்ஸ் இண்டர் வியூக்காகப் போயிருக்கிறார். ஒரு ரிக்ஷாவில் போகும்போது 3 கல்லூரி மாணவர்கள், மற்றும் ஒரு மூவர் ஆக ஆறு பேர்களாகச் சேர்ந்துக்கொண்டு

கல்லூரி கட்டிடத்திற்குள் அந்தப் பெண்ணை கடத்திச்சென்று கற்பழித்திருக்கிறார்கள். ரிக்ஷாக்காரர் போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்து அந்த 3 கல்லூரி மாணவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். மற்ற மூவரைப்பற்றி இதுவரை தகவலே இல்லை. கைது செய்யப்படவும் இல்லை. ஒரு ரிக்ஷாக்காரருக்கு இருக்கிற பண்புகூட—யோக்கியதாம்சம் கூட இன்றைக்கு ஒரு மாணவருக்கு இல்லாமல் போய்விட்டது. அந்த அளவுக்கு இந்த ஆட்சி போய்க்கொண்டிருக்கிறது.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்:** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு உறுப்பினர் புஷ்பவல்லி என்று பெயர் சொல்கிறார். இந்த வழக்கு கோர்ட்டில் இருக்கிறது. இது முறையா என்று கேட்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி:** சர்வ கட்சி ஆக்ஷன் கமிட்டி கொடுத்துள்ள மகஜரை வைத்துக்கொண்டுதான் சொல்கிறேன். இது எல்லோருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

அடுத்து, திருச்சியில் இருந்து இன்று கிடைத்த தகவலைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.* திருச்சி மாவட்டம் திருமயம் தாலுக்கா ஏம்பல் கிராமத்தில் ஒரு 30 தலைக்கட்டுகள் ஆதித் திராவிட மக்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் கொடுக்கல் வாங்கல் உண்டு. கொடுத்த பணத்தை ஆதித் திராவிடர்கள் கேட்டார்கள் என்பதற்காக அவர்கள் அடித்துத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். புதுப்பட்டி சப்-இன்ஸ்பெக்டருக்கும் புகார் கொடுத்திருக்கிறார்கள். புதுக்கோட்டை டி.எஸ்.பி-க்குத் தந்தி கொடுத்திருக்கிறார்கள். இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சியின் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்கள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து மந்திரி சபையின் மீது ஓரிரு குற்றச்சாட்டை சுமத்த கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

முதலில் அண்மையில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தலைப்பற்றிய ஊழல்களை பல உறுப்பினர்களும் இந்த மன்றத்தில் சுட்டிக் காட்டினார்கள். குறிப்பாக தென் மாவட்டங்களில் நடந்த முறைகேடுகளைப் பற்றி நான் இங்கே கூற முற்பட்டிருக்கிறேன்.

நமது மதிப்பிற்குரிய கூட்டுறவு அமைச்சர் அவர்கள் தென் மாவட்டங்களில் பஞ்சாயத்துத் தேர்தல் சமயத்தில் செய்திருக்கிற காரியங்கள் பல, அவற்றை எல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல இப்போது நேரமில்லை. பொதுமக்கள் அத்தனை பேரும் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அத்தனை பேர்களும் மறக்கமாட்டார்கள். மறக்கவும் முடியாது. பலவிதமான உணர்ச்சியைத் தூண்டிவிட்டார்கள். "நான் உங்கள் ரத்தத்தின் ரத்தம் அல்லவா, தசையின் தசை அல்லவா, நான் தவழ்ந்து வளர்ந்த இடம் இதுதானே" என்றெல்லாம் கருணைபொங்கச் சொன்னதை ஆட்சேபிக்கவில்லை. அவர்களது பண பலம் எவ்வளவு தூரம் விளையாடிற்று என்பது எங்களுக்குத் தெரியும். குறிப்பாக விளவங்கோடு பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தலில் நடந்ததை மறக்கவே முடியாது. அங்குள்ள பிரதிநிதிகள் உடந்தையாக இருக்கவில்லை என்பதை இவண் முன்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.



இன்னொரு விஷயத்தைப்பற்றியும் கூற விரும்புகிறேன். இந்தத் தேர்தல் எத்தகைய கருத்தைப் பிரதிபலிக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 1972-லே காற்று எந்தத் திசையை நோக்கி அடிக்கும் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு. —

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 1972-லே காற்று யார் பக்கம் அடிக்கும் என்பதற்கு, ஒரு ஒன்றியத் தலைவர் கூட இல்லாத கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போது 4 ஒன்றியத் தலைவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். இதிலே இருந்து 1972-லே யார் பக்கம் காற்று வீசும் என்று தெரிகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** 1972-லே நாங்கள் உங்கள் கட்சியை சந்திக்கத் தயாராயிருக்கிறோம். அதற்கு ஆட்சேபணை இல்லை. பஞ்சாயத்துத் தேர்தலிலே அங்கு என்ன நடந்தது என்று அந்தப் பக்கத்து மக்களைக் கேட்டாலே தெரியும். திரு. ஆதித்தனார் அவர்கள் தென் மாவட்டங்களில் முகாமிட்டுக் கொண்டு பஞ்சாயத்துத் தேர்தலுக்காக பல காரியங்கள் செய்தார்கள். குறிப்பாக குமரி மாவட்ட மக்கள் அவர் செய்த காரியங்களை மறக்கமாட்டார்கள். அவர் அடிக்கடி முகாம் செய்வது அரசாங்க வேலைக்காக போகிறார்களா, அல்லது கட்சி வேலைக்காகப் போகிறார்களா என்பதை விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அரசாங்கப் பணத்தைச் செலவழித்து தேர்தலை நடத்தி எங்களுக்குப் பழக்கம் இல்லை. ஒருவேளை பழைய ஆட்சியில் அவ்வாறு இருந்திருக்கலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பழைய ஆட்சியில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இந்தத் தேர்தலிலே நடந்தது என்ன என்பதை அந்தப் பக்கத்திலே உள்ளவர்களைக் கேட்டால் தெரியும். விளவங்கோடு கிராமத்தில் அவர் செய்ததை விளக்குவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, போலீஸ் நிர்வாகத்தைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நெய்வேலி சம்பவத்தைப் பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. நெய்வேலியில் நடந்த நிகழ்ச்சிகளில் ஒரு சம்பவம்—கடந்த மே மாதம் 4-ம் தேதி 9 மணிக்கு நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கு குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். நாவலர் மன்றத்தில் புகுந்து போலீசார் "இதுதான் அண்ணா அடி, இதுதான் கருணாநிதி அடி, இது எம்.ஜி.ஆர். குத்து" என்று வெறியாட்டம் ஆடியிருக்கிறார்கள். அதுபற்றிக் கூட இந்த ரிப்போர்ட்டிலே இருக்கிறது. உண்மைகள் மறைக்கப்படவேண்டிய தேவையில்லை. அவர்களைக் கண்டிக்க முடியவில்லை. இந்த மாதிரி நிகழ்ச்சிகளில் அதைக் கட்டுப்படுத்த ஒரு வரம்பு இருக்கிறது. அதைக் கண்டிக்கவேண்டுமென்று தான் கூற விரும்புகிறேன்.

இதிலே இருக்கிற ரெக்கம்மன்டேஷனிலே 18-வது பிரிவில் திரு. கோவிந்தராஜன் அவர்கள்கூட சொன்னார்கள். அவர்கள்மீது டிப்பார்ட்மெண்டல் ஆக்ஷன் எடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் செய்தால் டிப்பார்ட்மெண்டல் ஆக்ஷன். மற்றவர்கள் செய்தால் உடனே பிராசிகூஷன், என்ற நீதி இருக்கிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

பேசுகிறவர்களைப் பார்த்துக்கேட்கிறேன். இதுதான் கடமை, கண்ணியமா, கட்டுப்பாடா? இதைப் பற்றி மக்கள் முடிவு செய்வார்கள், என்பதை நான் இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மானுமதுரையில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அங்கு அந்த பப்ளிக் பிராசிகூட்டர் அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு போயிருக்கிறார். அது இன்வெஸ்டிகேஷனில் இருக்கும்போதே எதற்காக அவர் அங்கு போயிருக்கிறார் என்பதை ஆழ்ந்து கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள் பிராசிகூட்டர்களாகத்தான் இருக்கவேண்டுமே ஒழிய பெர்சிகூட்டர்களாக இருக்கக் கூடாது. அவர்களுக்கிடையில் — தகராறு நீதிமன்றத்தில் இருக்கின்றபோது அவர்களை சந்திப்பது சரியல்ல. அதற்கு ஒரு **தனி** அதிகாரியை நியமனம் செய்யவேண்டும் " It may hamper the investigation of the case "

அடுத்தபடியாக, கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு கல்லூரி இருக்கிறது. ஒரு ஆர்ட்ஸ் காலேஜ் நிறுவப்பட்டிருக்கிறது. அதற்கு மேலவை உறுப்பினராக இருப்பவர், திரு. சங்கரலிங்கம் எம். எல்.சி. அவர்கள் முதல்வராக இருக்கிறார். முன்பு அவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்தார்கள். இப்போது கட்சிமாறி ஆளும் கட்சியில் சேர்ந்து உறுப்பினராகி இருக்கிறார்கள். அவரை அந்தக் கல்லூரி முதல்வராக ஆக்குவதற்கு இந்த அரசாங்கம் என்ன என்ன காரியங்களைச் செய்திருக்கிறது? அவரை மதுரை யூனிவர்சிடி சிண்டிகேட் உறுப்பினராக நாமினேடட் மெம்பர் ஆக நியமனம் செய்திருக்கிறார்கள். மேலும் இதற்காக ஆரன் விளா என்ற இடத்தில் அவருக்கு, அந்தக் கல்லூரிக்கு கட்டடம் கட்டுவதற்காக நிலம்--புறம்போக்கு நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதற்காக அறிஞர் அண்ணா பெயரில் கல்லூரியை அமைக்கக் கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் இது நியாயம் தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த மாதிரி அரசியலில் கட்சி விட்டு கட்சி மாறிக்கொண்டிருக்கிற சங்கரலிங்கத்தைப் போன்றவர்களை அரவணைப்பது நியாயம் தானா என்பது நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். 40 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை அவருக்காக **அந்தக்** கல்லூரிக்காக அரசாங்கம் பரிந்துரை செய்துள்ளது. இப்படி ஆளும் **கட்சிக்** காரர்கள் செய்து கொண்டு போனால் மக்கள் என்ன நினைப்பார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: இதேபோல தூத்துக்குடியில் காமராசர் கல்லூரி கட்டுவதற்காக அறிஞர் அண்ணா அவர்கள் மிகுந்த சிபாரிசு செய்து 30 ஏக்கர் நிலத்தை கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்**: ஆனால் அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அடிக்கடி கட்சி விட்டு கட்சி மாறுகிறவர்களுக்கும் இப்படி செய்ய வேண்டுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: தி.மு.க.-விலே இருந்து வந்த எத்தனை பேர்களை நீங்கள் சேர்த்துக் கொண்டீர்கள்? தேசிய இயக்கத்திலே நாங்கள் எல்லாம் பாடுபட்டவர்கள் என்றெல்லாம் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்**: நாங்கள் எல்லாம் தேசிய இயக்கத்திலே எப்படி இருந்தோம், எப்படி செயல் பட்டோம் என்பதை மக்களிடத்திலே கேட்டால் தெரியும்.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: நான் பொன்னப்ப நாடார் அவர்களுடைய தியாகத்தைக் குறைத்து மதிப்பிடவில்லை. அவர்கள் தேசிய இயக்கத்திலே கலந்து கொண்டு விடுதலை வாங்கிக் கொடுத்ததை நான் மதிக்கிறேன். ஆனால் மற்றவர்களை மதிக்கிற பண்பை அவர்கள் மறந்து விடக்கூடாது. அறிஞர் அண்ணா அவர்கள் கூட சொல்லியிருக்கிறார் "எங்களுடைய வெற்றியின் ரகசியமே நாங்கள் மாற்றாரை மதித்தது தான்."

ஆனால் ஒரு கட்சியிலே இருந்து எதிர் கட்சிக்குப் போவது அது காங்கிரசாக இருந்தாலும், மற்றக் கட்சிகளாக இருந்தாலும், தவறு இல்லை. காங்கிரசில் சேரும் வரை அதைத் தூற்றிக்கொண்டிருந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து உங்களிடத்திலே வந்த பிறகு நாங்கள் தான் சுதந்திர இயக்கத்திற்குப் பாடுபட்டவர்கள். இந்த கருணாநிதிக்கு சுதந்திரத்தைப் பற்றி என்ன தெரியும், என்றெல்லாம் பக்கம் பக்கமாக அவர்கள் எழுதுவதைப் படித்து நாங்கள் விலா நோகச் சிரித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் அன்றைக்கு அவர்கள் எங்கள் கட்சியில் இருந்து உங்கள் கட்சிக்கு வரும்போது எங்கள் கட்சியின் மூலம் பெற்ற பதவிகளை வைத்துக் கொண்டுதான் உங்கள் கட்சிக்கு வந்தார்கள். அதையும் மறந்துவிடக் கூடாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்**: தனிப்பட்டவர்கள் மீது பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கலாம். அவர்கள் உங்கள் கட்சியில் இருந்து காங்கிரஸ் கட்சிக்கு வந்து விட்டார்களே என்ற ஆத்திரம் இருப்பது நியாயந்தான்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: அப்படியானால் சங்கரலிங்கம் எங்கள் கட்சிக்கு வந்துவிட்டதால் உங்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டிருப்பது நியாயந் தான்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்**: இந்த மாதிரியானவர்களுக்குச் சலுகை கொடுப்பதில் சற்று நிதானமாக இருக்க வேண்டும். 40 ஏக்கர் நிலம் என்ன காரணத்திற்காகக் கொடுக்கப்பட்டது. அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொடுப்பார்களா என்பதை உற்றுக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

நமது அரசாங்கம் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ரெகமன்டேஷன்லை சரியான முறையில் ஏற்றுக் கொள்ளுவதில்லை. குறிப்பாக, 1968-ம் ஆண்டில் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் பக்கம் 39-ல் ஒரு விஷயத்தைப் பற்றி எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. ஒரு ஜெயில் வார்டனுக்கு என்ன பனிஷ்மென்ட் கொடுப்பது என்பதைப் பற்றி அதிலே முடிவு செய்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் கொடுத்த பரிந்துரையை இந்த அரசு ஏற்காமல் அதற்கு விபரீதமான முடிவு செய்தார்கள். அதைப் பற்றிக் கூறியிருக்கும் வாசகத்தை தங்கள் அனுமதியோடு வாசிக்க முற்படுகிறேன்.

' This was not a case which involved a matter of policy where any imperative reason existed for not accepting the commission's advice '.

அதற்கு மாறாக பலவிதத்திலும் வேற்று விதமான தீர்ப்பானது ஏற்பட்டிருக்கிறது என்று பல பகுதிகளிலே இன்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் பதவி ஏற்ற பிறகுதான் இந்த மாதிரியான காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

இந்த அரசாங்கம் வந்தவுடன் பதநீர் இறக்க லைசென்ஸ் வாங்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அதற்கு 50 ரூபாய் லைசென்ஸ் கட்ட வேண்டுமென்றிருப்பதை எடுத்துவிட வேண்டுமென்று பல பகுதிகளில் இருந்தும் கடிதங்கள் அனுப்பினார்கள். இந்த உத்தரவு எங்கள் பக்கத்தில் இருப்பவர்களைப் பெருமளவில் பாதித்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு 7, 8 நாட்களுக்கு மேலாகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இன்னொரு விஷயம். எங்கள் பகுதியைச் சார்ந்தவர்களை சென்னையில் கண்டக்டர்களாகத் தேர்வு செய்வதில்லை. இதைப் பற்றிப் பலமுறை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறேன். நீங்கள் தனிக் கொடி எல்லாம் கேட்பது போல் ஒருவேளை நாங்களும் தனி ராஜ்யம் கேட்க வேண்டுமென்ற அளவுக்கு நிர்ப்பந்தப்படுத்துவது போல் இருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவில் இருந்து வந்தால் மலையாளியாக இருக்கிறார், அல்லது மலையாளம் கற்றிருக்கிறார் என்ற காரணத்திற்காகப் புறக்கணிக்கப்படுவது அரசியலமைப்புச் சட்டத்திற்கே விரோதமானது. புறம்பானது என்ற கூற விரும்புகிறேன்.

பிலைபீல்டுமென் பல நாட்களாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள் (குறுக்கீடு) அதைப் பற்றி ரூல் 41 மோஷன் கொடுத்திருக்கிறேன். அவர்களுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. உடனடியாக அதிலே நடவடிக்கை எடுக்கவேண்டும். உயிரோடு போராடிக் கொண்டிருக்கின்ற அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் செய்யப்படவில்லையானால் உயிர் நீக்கும் நிலைமையில் இருக்கிறார்கள். அதிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அரசாங்கத்தின்மீதும், அமைச்சரவைமீதும் நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

இரவு 7-25 **மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அலுவல்கள் இன்று இந்த அளவோடு முடிவடைந்து மீண்டும் நாளைக் காலை 9 மணிக்கு பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

### 10. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் —

### *A. Statutory Rules and Orders.*

@ 282. Notification issued with G.O. Ms. No. 202, Public (Services-A), dated the 3rd February 1970 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 published at pages 759 to 768 of Part I of the Tamil Nadu



Government Gazette, dated the 9th June, 1954, as subsequently amended [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

@ 283. Notification issued with G.O. Ms. No. 3602, Agriculture, dated the 4th December 1969, in regard to specifying the area of the Thoduvatty Market as notified market area for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959) [Laid on the Table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959.]

### *B. Reports, Notifications and Otehr Papers.*

£ 75. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1970 (L.A. Bill No. 37 of 1970).

£ 76. The Tamil Nadu Co-operative Societies (Second amendment) Bill 1970 (L.A. Bill No. 38 of 1970).

---

@ Laid on the Table of the House on 7th September 1970.

£ Despatched to Members on 6th September 1970.

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

### புதன்கிழமை, 1970 செப்டம்பர் 9.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Admission of Industrial workers to Engineering Courses.*

* 315 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to admit Industrial workers to Engineering courses; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) -வும் (இ)-ம். ஒரு விவர அறிக்கை சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

*Demands of Elementary School Teachers.*

* 316 Q.—DR. H. V. HANDE:
THIRU T. MARTIN
THIRU N. KITTAPPA:
Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether it is a fact that the Hon. the Minister for Education has announced at the Tamil Nadu Elementary School Teachers' Federation meeting on 30th December 1969 that the demands of the teachers such as House Rent Allowance, Free Medical Service, Marriage Loan, etc., will be considered by this Government; and

(b) if so, whether any scheme has been evolved and the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி, இலவச மருத்துவ வசதி, வருங்கால வைப்பு நிதியிலிருந்து பண்டிகைக்கும் கைத்தறி ஆடை வாங்கவும் முன் பணம், மலைப்பகுதியில் தங்கியிருப்பவர்களுக்குக் குளிர்க்காலப்படி இவைகள் வழங்கப்பட்டுள்ளன.

---

* 458–457-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

*திரு. டி. மார்டின் :* தலைவர் அவர்களே, தனியார் துறை ஆசிரியர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஸாலரி கொடுக்கவேண்டியதைச் சர்க்கார் கொடுத்து வருகிறது. அந்த முறையில் ஆசிரியர்களுக்கிடையே பேதம் இல்லாத முறையில் இந்தத் தனியார் துறை பள்ளி ஆசிரியர்களுக்கும் திருமணக்காலக் கடன் கொடுத்து உதவுவதற்கு அரசாங்கம் முற்படுமா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் இத்தகைய வசதிகள் கிடைக்கக்கூடிய வகையில்தான் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. திருமணக் காலக் கடன் வசதி செய்வது பற்றி அதன் முழுக் குறிப்புகளையும் ஆராயும்படி இயக்குநர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். அவர்களைக் கலந்து ஆணை இன்னும் வெளியிடப்படவில்லை. விரைவில் வெளியிடப்படும்.

*திரு. என். கிட்டப்பா :* ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற இலவச மருத்துவ உதவியைப் பெறுவதற்கு காலதாமதமாவதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்க முற்படுமா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அவர்கள் அரசாங்க மருத்துவ மனைகளில், மருந்தகங்களில் இலவச மருத்துவ வசதி பெறுவதற்கான வசதிகளைச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்கான ஆணை போய்ச் சேர்ந்திருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. போய்ச் சேர்ந்திருக்கவேண்டும். எழுபத்திரண்டு ஆசிரியர்கள் புதிதாகப் பலன் பெறுகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### *Representations by non-teaching staff of Madras City Aided Secondary Schools*

* 317 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether Madras City Aided Secondary School Non-teaching staff have made some representations to the Government on 29th December 1969 detailing their grievances; and

(b) if so, what they are?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* (அ) இல்லை. ஆனால் 28—12—1969-ம் நாள் நடந்த சங்கத்தின் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களடங்கிய, 1—1—1970 தேதியிட்ட முறையீடு ஒன்று கிடைக்கப் பெற்றது.

(இ) குறைகள் முக்கியமாக மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளி அலுவலர்களின் பணிமுறைகளைப் பற்றியது. அவைகளில் சில ஒத்துக் கொள்ளப்பட்டன, இன்னும் சில பரிசீலனையிலிருக்கின்றன.

Thiru K. VINAYAKAM : These non-teaching staff of these aided schools have been agitating for this kind of concession to be given to them on a par with teaching staff of some institutions. May I know from Government what was the reason for the inordinate delay in complying with the request whereas the



Financial implications involved if these concessions were given on a par with teaching staff would be highly negligible and would not cost much to the coffers of our State?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களுக்கு ஆசிரியர்களுக்கு இருப்பதைப்போன்ற எல்லாச் சலுகைகளும் அல்லது நிலைமைகளும் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை. மற்றப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களுக்கு என்னென்ன வசதி வாய்ப்புகள் இருக்கின்றனவோ அவற்றைப் பிற பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. அவர்கள் சில பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதில் 'க்ராண்ட் ஆஃப் பென்ஷன்' தனியார் பள்ளிகளில் இருப்பவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது ஆய்வில் இருக்கிறது. இதைப் பரிசீலிக்கத் தனிக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதை ஆராய்ந்து அவர்கள் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

protection of last pay drawn on 31st March 1964

31—3—1964-ல் கொடுத்திருக்கிறார்கள். அது ஆய்வு செய்யப்பட்டு 10—3—1970-ல் ப்ரொட்டக்ஷன் கொடுக்கலாம் என்று உத்தரவு இடப் பட்டிருக்கிறது.

extension of liberalised love rules

இதுவும் அத்தனிக் குழுவிற்கு விடப்பட்டிருக்கிறது, அதன் அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது.

grant of weightage for past service on transfer from one school to another school

இதுவும் ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு இயக்குநர் அவர்கள் அதைப் பற்றிச் சிபார்சு செய்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதுபற்றி விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

fixation of the scale, to non-teaching staff. declared in Director's proceedings.

இதுவும் ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

the clerks of schools with 10 years service may be given the pay of Upper Division Clerk

என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவும் அத்தனிக் குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டிருக்கிறது.

Payment of special allowance to head clerks

ப்ரொட்டக்ஷன் இருக்கிற அளவிற்கு இதையும் அளிக்க வசதி செய்யப் பட்டிருக்கிறது.

Non-teaching staff working if connection with S.S.L.C. public examination may be given higher rates of allowance

என்று கேட்டிருக்கிறார்கள். இதுவும் கமிஷனர் ஆஃப் கவர்ன்மெண்ட் எக்ஸாமினேஷன்ஸிடம் கொடுக்கப்பட்டு அவர்களது ஆய்வில் இருந்து வருகிறது. அவர்களிடம் இருந்து சிபார்சு வந்தபிறகு அதுபற்றி நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும்.

watchmen, gardners, scavengers may be given city compensatory allowance as in the case of permanent establishment

என்று கேட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தில் இந்த காட்டிகரியில் இருப்பவர்களுக்குத் தரப்படுவதில்லை.

service security and other benefits enjoyed by the teaching staff may be extended to non-teaching staff

என்கிறார்கள். முதலில் குறிப்பிட்டுள்ளபடி ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற சலுகைகள் எல்லா ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களுக்கும் தருவதற்கு இல்லை. எதை எதை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை பரிசீலிக்க இதுவும் தனிக் குழுவிற்கு விடப்பட்டிருக்கிறது. அவர்கள் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

The pay scale fixed by Government for Government servants may be given to non-teaching staff in aided schools

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பே கமிஷன் அறிக்கை வந்த பிறகுதான் இது பரிசீலனைக்கு எடுக்கப்படும். ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளும் சில இருக்கின்றன. மற்றவை பரிசீலனையில் இருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH: Even in small villages the teachers have to pay higher rent for houses and they have to pay a considerable amount from their meagre pay towards rent. Lady teachers are given Government houses for their dwellings but with regard to male teachers they are not given quarters even . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களைப் பற்றிய கேள்வி. ஆசிரியரைப் பற்றிய கேள்வி அல்ல.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, அரசினர் உதவி பெறும் தனியார் பள்ளியைப்பற்றி பரிசீலிப்பதற்காக உள்ள கமிட்டியின் ரிபோர்ட் எப்போது வெளிவரும்? பஞ்சாப் மாநில அரசு இப்போது சமீபத்தில் தனியார் பள்ளி சம்பந்தமாக ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்து இருக்கிறது. அது போன்ற உடனடி அவசரச் சட்டத்தை இந்த அரசு கொண்டுவருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அந்தக்குழு இப்போது ஆய்வு நடத்திக்கொண்டு இருக்கிறது. விரைவில் அதனுடைய அறிக்கை வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தக் காரணத்தால் அவசரச் சட்டத்திற்கு இடமில்லை.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவரவர்களே, இப்போது நான்-டீச்சிங் ஸ்டாஃப் என்று பணி புரிந்து வருபவர்களுக்கு அநேக பள்ளிக்கூடங்களில் சம்பள விகிதத்தில் வித்தியாசம் இருக்கிறது. அந்தச் சம்பள விகிதத்தை பொறுத்தவரையில் ஒரு அவசர உத்தரவைப் பிறப்பித்து எல்லாப் பள்ளிகளிலும் ஒரே சீரான சம்பளம் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தப் பிரச்னையைப்பற்றி ஆய்வு செய்யவும் அந்தக் குழுவினிடத்தில் விடப்பட்டு இருக்கிறது. அந்த அறிக்கையின் ஆலோசனையின்பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். பல்வேறு பள்ளிகளில் அவர்களுக்கு வசதிக்கேற்றபடி சம்பளம் கொடுத்து



இருக்கிறார்கள். அந்தச் சம்பள விகிதங்கள் வரைமுறை படுத்தப்பட்டு, ஒழுங்குபடுத்தக் குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. குழு ஆராய்ந்து தந்த அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 318, 319, 320, 321, 322 ஆகியவை பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

### *Loan scholarships to students of Veterinary College.*

*323 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether loan scholarships have been discontinued for the students of the Veterinary College from this year; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### மாவட்ட அளவில் சிறு தொழில்களுக்கான குழு

*324 வினா—திரு. சு. துரைசாமி:
திரு. கே. விநாயகம்: } மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில்களுக்கு உதவ மாவட்டந்தோறும் ஆலோசனைக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) சிறு தொழில்கள் நிறுவுவது குறித்து மாவட்டங்களிலுள்ள பல்வேறு அதிகாரிகளால் ஒப்புதல் வழங்குவதிலும், உரிமம் வழங்குவதிலும் ஏற்படுகின்ற காலதாமதத்தைக் கண்டுபிடித்து நீக்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், அரசுச் சார்புள்ளவர்களையும், அரசுச் சார்பற்றவர்களையும் உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்றை அமைக்குமாறு தொழில் துறையின் (சிறப்பு) 13-5-1970-ம் நாளிட்ட 1125-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலை நிறுவுவது குறித்துப் பெறப்பட்டுள்ள மனுவின் பேரில் இரண்டு வாரங்களுக்கும் மேலாக முடிவு ஏதும் எடுக்காமல் இருக்கிற மாவட்ட துறை அதிகாரி, ஒவ்வொருவரும், அக்காலதாமதத்திற்குச் சரியான விளக்கத்துடன் மேற்சொன்ன குழுவின் நாட்டத்திற்கு அதைக் கொண்டுவருவதற்குப் பொறுப்பாளியாவார். பாதிக்கப்பட்ட தொழில் முனைவர்களும், காலதாமதமான நேர்வுகள் குறித்து நேரடியாக இக்குழுவின் தலைவருக்கு எழுதலாம்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, தொழில்களைத் துவக்கும் நேரத்தில் தொழிற்சாலைச் சட்டத்தின் அடிப்படையில் சில விதிவிலக்குகள் தரவேண்டும். தொழிற்சாலை துவக்குகிற நேரத்தில் தொழிற்சாலைச் சட்டத்தின் அடிப்படையில் ஏதேனும் சிறிது சலுகை அக்குழு சிபார்சு செய்தால், அதை விலக்க அந்தக் குழுவுக்கு அதிகாரம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சட்டத்தில் விதிவிலக்கு அளிப்பது அரசாங்கத்தின் வேலை. அரசாங்கத்திற்குக் குழு சிபார்சு செய்தால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas the initiative to start Small-scale Industries in our State is becoming very slimmer and slimmer and whereas there is no improvement in the industrial advance of our State, what concrete steps do the Government propose to take to accelerate the economic improvement of our State instead of constituting Advisory Committees which would do only more paper work?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டில் சிறு தொழிற்சாலை வளர்ச்சி இல்லை என்று கனம் அங்கத்தினர் முடிவுக்கு வந்து கேட்டு விட்டார்கள். ஆனால் எங்கே பார்த்தாலும் எல்லா அமைச்சர்களும் தமிழ் நாட்டிலேதான் அதிகமாகத் தொழில் தொடங்க உரிமம் பெற்று வருகிறீர்கள் என்று சொல்லி வருகிறார்கள். இப்போது இந்தக் குழுவின் பொறுப்புக் காலதாமதம் ஆவதைத் தவிர்ப்பதற்காக ஒவ்வொரு சிறு தொழிற்சாலையும் எந்தெந்த மாவட்டங்களில் கிராமங்களில் ஏற்படுகிறதோ, அதில் காலதாமதத்தை தவிர்த்து அந்தத் தொழில் அதிபர்களுக்கு உதவி செய்ய ஆரம்பிக்கப்படுகிறது. புதிய தொழில்கள் ஏராளமாகத் தொடங்குவதற்குப் பல வித உதவிகள் தரவேண்டும். மின்சாரம் தருவது, தண்ணீர் வசதி அளிப்பது, நிலம் ஆர்ஜிதம் செய்து தருவது இதுபோன்ற வசதிகளை "infra-structure for Industrial Development" என்று சொல்வார்கள். அதை மாநில அரசு செய்கிறது. அதை செய்யத் தவறியதாக யாரும் சொல்லவில்லை. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் சிறு தொழில்கள் ஒவ்வொரு ஆண்டும் அதிகமாக ஆகிறது. இதை நாட்டு மக்கள் நம்புகிறார்கள். நண்பர் விநாயகம் மட்டும் நம்ப மறுக்கிறார்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether all the districts in our State are having Small-scale Industries Advisory Committees?

THE HON. THIRU S. MADHAVAN : Yes, Sir.

**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே, இந்தச் சிறு தொழில் ஆரம்பிப்பதில் இருக்கும் கஷ்டமெல்லாம் மாவட்ட சுகாதார அதிகாரியிடத்தில் அனுமதி பெறுவதிலும், மின்சார வாரியத்தில் அனுமதி பெறுவதிலும் மிகவும் சிரமமாக இருக்கிறது. இதைத் தளர்த்தி பஞ்சாபில் ஒரு சட்டம் கொண்டுவந்து இருக்கிறார்கள். அதைப்போல் இங்கேயும் தளர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதற்காகத்தான் அந்தந்த துறையைச் சார்ந்த மாவட்ட அதிகாரிகளை அந்தக் குழுவில் அங்கத்தினராக நியமித்து இருக்கிறோம். மாவட்ட சுகாதார அதிகாரி இருக்கிறார். மின்சார வாரியத்தைச் சேர்ந்த மாவட்டப் பொறியாளர் இருக்கிறார். பாக்டரி சட்டத்தில் இருக்கும் சங்கடங்களைப் போக்கி அனுமதி தருவதற்காக பாக்டரி இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அவர்கள் எல்லாம் இருந்து பார்க்கிறார்கள். அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் சட்டங்கள் மிகவும் கடினமாக இருக்கின்றன என்ற



காரணத்தால் சிறு தொழில் ஆரம்பிப்பதற்கு கொஞ்சம் தயக்கம் ஏற்படுகிறது. இந்த உண்மையை அரசாங்கம் உணருகிறது, இதைப்பற்றி என்ன முடிவு செய்யலாம் என்று Small Scale Industries Advisory Board சில ஆலோசனைகளைக் கூறி இருக்கிறது. அந்த ஆலோசனைகளை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

**திரு. கே. என். குமாரசுவாமி :** தலைவரவர்களே, இந்த சிறு தொழில் என்னென்ன ஆரம்பிக்கலாம் என்பதற்காக பட்டியல் இருக்கிறதா? அந்த பட்டியலில் உள்ள தொழில்கள் ஆரம்பிப்பதற்காக மூலப்பொருள்கள் தமிழ் நாட்டில் கிடைக்கிறதா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பட்டியல் ஏற்கெனவே இருக்கிறது. அது மத்திய சர்க்காரில் இப்படி இப்படி என்று வகுத்து இருக்கிறது. மூலப் பொருள்களைப் பொறுத்தவரையில் அதைக் கொடுக்கும் சக்தி மாநில அரசுக்கு இல்லை. நேற்றுக்கூட நான் சிறு தொழில் அதிபர்களை அழைத்து புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காகத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டபோது அவர்கள் நாங்கள் தொழிற்சாலை ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் மூலப்பொருள்கள் தேவை என்று சொன்னார்கள். இன்னும் பல்லாயிரக்கணக்கான இன்ஜினியர்கள், டிப்ளமா ஹோல்டர்கள், கிராப்ட்ஸ்மேன் ஐ.டி.ஐ. பயின்றவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள முடியும், அதற்குத் தயாராக இருக்கிறோம், தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள்களைத் தர தயாராக இருக்கிறீர்களா என்று கேட்டார்கள். நான் பதில் சொல்லவில்லை. அந்த அதிகாரம் என்னிடத்தில் இல்லை. நாங்கள் அதற்காகத்தான் 12, 13 தேதிகளில் மாநாடு நடத்துகிறோம். அங்கத்தினர் அங்கு வந்து நல்ல யோசனைகளைக் கூறலாம்.

### சிறு தொழில் துவக்குவது குறித்துப் பயிற்சி.

*** 325 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் சிறு தொழில் துவக்குவது எப்படி என்பதைச் சொல்லித்தர ஓர் நிலையம் துவங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலில் முனைபவர்களுக்குப் புதிய முறையில் தொழில் துவக்குவது, புதிய தொழில் பிரிவுகள் துவக்குவது, அவற்றை ஏற்படுத்தக்கூடிய இடம், ஆகியவற்றைப்பற்றி தொழில் வணிகத் துறை தற்போது அறிவுரை வழங்குகிறது. சென்னையிலுள்ள சிறு தொழில் பணிமனை நிறுவனமும் Small Industries Service Institute சிறு தொழிற் பிரிவுகளுக்கு நவீன தொழில் நுட்ப முறைகளைப்பற்றியும், நவீன யந்திரங்களையும், கருவிகளையும் பயன்படுத்துவதைப்பற்றியும் அறிவுரை வழங்குதலுடன் செய்முறையிலும் அறிவுரை அளித்து வருகிறது. புதியதாக நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு சிறு தொழில் முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள்களில் ஒன்று, மாநிலத்தில் கூடுதல் சிறு தொழில்கள் ஏற்படுவதற்கு வேண்டிய வழிவகைகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் தொழில் துவங்க முனைபவர்களுக்கு தொழில் நுழைக்க உதவிகள் அளித்தல்.

அக்கழகம் வேண்டிய அலுவலர்களை நியமித்து விவரங்களைத் தயாரிப்பதற்கு முயற்சிகள் எடுத்து வருகிறது.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, சிறு தொழில் துவக்க வேண்டுமென்று பலர் விரும்புகிற நேரத்தில் அவர்களுக்குத் தக்க ஆலோசனைகளை சொல்லித் தருவதற்கும், தொழில் துறையில் அனுபவமும் பயிற்சியும் தருவதற்கும் ஏதாவது புதிய அமைப்பு முறை ஏற்படுத்த அரசு முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன். .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மகாராஷ்டிரத்தில் இப்படிப்பட்ட முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது. குஜராத் மாநிலத்திலே இப்படிப்பட்ட முயற்சி எடுத்து இருக்கிருர்கள். இதைப் பின்பற்றி நம்முடைய மாநிலத்திலே அந்த முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்ற முறையில் தொழிலைத் தொடங்கு பவர்கள் என்னிடத்தில் கேட்டு இருக்கிருர்கள். அதற்குத் தேவையான தொழில் அனுபவம் எங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். தொழிலைப் பற்றி ஆராய்ச்சிசெய்து ஒரு 'பீசிபிள் ரிபோர்ட்' அது பொது வாக எப்படி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று சொல்வது. சிறு தொழில் வாரியத்தில் இப்படி 'பீசிபிள் ரிபோர்ட்' கொடுப்பதற்கான பணிகளை அனுபவம் மிக்கவர்கள் செய்துகொண்டு இருக்கிருர்கள். டெக்னிகல்-நோ-ஹௌ யோசனைகள் கொடுத்துக்கொண்டு இருக்கிருர்கள். இதைக் கண்டித்து திரு. மார்டின் பேசினுர் என்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.

### புதுத்தொழில்கள் தொடங்குவதில் காலதாமதம்

* 326 **வினு—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

புதிய தொழில்களைத் தொடங்க லைசென்ஸ் கிடைப்பதில் உள்ள கால தாமதத்தைத் தவிர்க்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** முடிவு எடுக்கப்படாமல் மத்திய அரசிடம் உள்ள நேர்வுகள் குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டி மாநில அரசு இந்திய அரசுடன் கடிதப் போக்குவரத்தை மேற்கொண் டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க லைசென்ஸ் கிடைப்பதற்கு உள்ள காலதாமதத்தைத் தவிர்க்க, ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தை நிர்ணயித்து, அதற்குள் அனுமதி வழங்குவது என்பதுபற்றி அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நம்முடைய மாநிலத்தில் தொழில் வளர்ச்சி ஆலோசனைக் குழு அண்மையில் கூடியபொழுது, தொழில் அதிபர் களெல்லாம் தொழில் முயற்சிக்கு அனுமதி வாங்குவதிலே தடைகள் இருப் பதினுல் மிகவும் பாதிக்கக்கூடிய நிலை இருக்கிறது என்று சொன்னுர்கள். அதைப் பரிசீலிக்கத் தனிக் குழு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் குழு அனுமதி பெறுவதிலே என்னென்ன காரணங்களினுல் கால தாமதம் ஏற்படுகிறது என்பதைப்பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதிலும்கூட, ஐ.டி.ஆர். ஆக்ட் மத்திய அரசின் சட்டத்தின்கீழ் அனுமதி கொடுக்கிற காரணத்தினுல், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்குக்



கடிதம் எழுதுவது, நேரடியாக அங்குள்ள அமைச்சர்களோடு கலந்து பேசுவது இப்படித்தான் நாங்கள் வற்புறுத்திக்கொண்டு வருகிருேம். உண்மையான காலதாமதத்தைப் போக்க வேண்டும் என்ற நல்ல உணர்ச்சி மத்திய அரசுக்கு விரைவிலே ஏற்படும் என்று நம்புகிறேன்.

### தொழில் வளர்ச்சிக்கென தனி நில ஆர்ஜிதச் சட்டம்

* 327 **வினு—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைத் தீவிரப்படுத்தும் பொருட்டு 'தனி நில ஆர்ஜிதச் சட்டம்' இயற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆம். தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக் காக, "மராட்டிய தொழில் வளர்ச்சிச் சட்டம், 1961" அடிப்படையில் நில ஆர்ஜிதம் செய்வதற்கான சட்டம்பற்றிய ஒரு செயற்குறிப்புப் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது எப்பொழுது நிறைவேறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பரிசீலனை முடிந்ததற்குப் பின்னுலே.

**திரு. கே. பி. எஸ். மணி:** தற்காலிகமாகக் கிராமாந்திரங்களில் சிறு கைத் தொழில்களை ஆரம்பிக்கின்றவர்களுக்குப் பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்து யூனியன்களுக்கு உள்ள சிறிய இடங்களை ஆர்ஜிதம் செய்துகொள்ள யூனியன் அல்லது டி.டி.சி-க்கு அனுமதி கொடுக்குமா அரசாங்கம்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நில ஆர்ஜிதச் சட்டத்தின்கீழ் இப்பொழுது செய்து வருகிருேம். கடைசியாக இதை இப்பொழுது ரெவின்யூத் துறை நிறைவேற்றி வருகிறது. புதிய சட்டப்படி தொழில் வளர்ச்சிக்கு என்று தனியாக ஒரு நடைமுறை, ப்ரொஸீஜர், பின்பற்றினுல் எளிதான முறையில் தாமதமின்றி உடனடியாக நிலங்கள் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்குமா என்பதுபற்றி இந்தச் சட்டத்தில் ஆராய்ச்சி செய்கிருேம். ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமங்கள்தோறும் இதைச் செய்வதற்கு என்ன முறைகளைப் பின்பற்றலாம் என்பதைச் சட்டத்தை உருவாக்கும்பொழுது ஆலோசித்து வருகிருேம்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** இந்த நில ஆர்ஜிதச் சட்டம் என்ருல் என்ன? அதற்கு விளக்கம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சட்டம் வரும்பொழுது விளக்கமாகப் பேசலாம்.

### *Driving Schools*

* 328 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal pending before the Government to start driving schools by the traffic police in Tamil Nadu; and

(b) whether any such driving school will be started by the traffic police in Madras City in this year?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) இல்லை. எனினும் மாநகரங்கள், நகரங்கள் அனைத்திலும் வலவர் பயிற்சிப் பள்ளிகள் நிறுவ வேண்டும் என்ற சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரின் கருத்து ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டிரைவிங் ஸ்கூல் ஆரம்பிப்பதன் வழியாக, சென்னையிலே இப்பொழுது பஸ் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய பெரிய பெரிய விபத்துக்களைத் தடுக்கக்கூடிய அளவில், உடனே போலீஸ் தரப்பில் ஒரு டிரைவிங் ஸ்கூல் ஆரம்பித்து, ஸ்டேட் டிரான்ஸ் போர்ட் பஸ்களில் உள்ள டிரைவர்கள் அத்தனை பேர்களுக்கும் பீரியாடிகலாக ஒரு சில நாட்களுக்காவது அந்த டிரைவிங் ஸ்கூலில் பயிற்சி அளித்து, நடைபாதை விபத்துக்களைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** டிரைவிங் ஸ்கூல் ஆரம்பிக்க வேண்டும் என்ற பிரச்னை 1965-ம் ஆண்டில் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுதிருந்த தொழில் அமைச்சர் அதைப்பற்றிப் பரிசீலித்து, சென்னை, கோவை, திருச்சி ஆகிய இடங்களில் அமைக்கலாம் என்ற கருத்தை அவர் ஏற்றுக்கொள்ளாமல், திருச்சி, கோவையில் ஆரம்பிக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பொழுது கிடைத்திருக்கிற விபரங்களின்படி, கோவையில் நடைபெற்ற டிரைவிங் பள்ளியில், 1968 டிசம்பர் 1969 ஜூன் ஆகிய இரண்டு ஆண்டுகளில் ஒருவரும் டிரைவிங் ஸ்கூலுக்கு வராத நிலைதான் இருந்திருக்கிறது. பல தனியார், டிரைவிங் ஸ்கூல்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றை அரசாங்கம் அனுமதிக்கலாமா என்று இப்பொழுது ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் நடைபெற்ற டிரைவிங் ஸகூல்பற்றி எந்தவிதமான அறிவிப்பும் அதிகமாக இல்லை என்ற காரணத்தினால் அங்கே டிரைவர்கள் வராமல் இருந்திருக்கலாம். ஆனால், சென்னையைப் பொறுத்தமட்டில், சென்னையில் ஸ்டேட் டிரான்ஸ் போர்ட் பஸ்களில் ஏற்படுகின்ற விபத்துக்களை நீக்குவதற்கு, சிறிய அளவிலாவது போலீஸ் தரப்பில் ஒரு டிரைவிங் ஸ்கூல் ஏற்பாடு செய்து, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிரைவர்ஸ் அத்தனை பேர்களுக்கும் அங்கு பயிற்சி அளிக்க அரசு முற்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள், ஹெவி டிரைவிங் லைசென்ஸ் உள்ளவர்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை.

### *Bus fares in Kanyakumari district*

*329 *Q*.—THIRU J. JAMES : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether this Government has increased the bus fare after the routes were nationalised in Kanyakumari district; and

(*b*) if so, how much?





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) 1968-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறைப் பணிகளில் கட்டணங்களை மாற்றியமைக்கும்பொழுது நாகர்கோயிலில் இருந்து 10 மைல் சுற்றளவுக்கு அப்பால் கிலோமீட்டர் ஒன்றுக்கு 2 காசிலிருந்து 2.5 காசாக இத்துறையின் கன்னியாகுமரிப் பிரிவிலும் கட்டண வீதங்களை அரசு மாற்றியமைத்தது. நாகர்கோயிலின் 10 மைல் சுற்றளவுக்கும் சென்னை மாநகரக் கட்டண வீதங்கள் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இரண்டு தடவை கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும், மூன்றாவது தடவை கட்டணத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்தில் ஒரு குறிப்பு இருப்பதாகத் தெரிகிறது. அதைப் பொது மக்கள் வெறுக்கின்ற காரணத்தினால், இப்பொழுது இருக்கிற அந்த எண்ணத்தைக் கைவிட அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதைப்பற்றிய தகவல் இப்பொழுது தருவதற்கில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த ஃபேர் எல்லாம் கூட்டுவது சம்பந்தமாக பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. குறிப்பாக, மலைப் பகுதிகளிலே ஓடுகிற பஸ்களிலே ஒரு கட்டணம், கடலோரப் பகுதிகளிலே ஓடுகிற பஸ்களிலே இன்னொரு கட்டணம் என்று வித்தியாசம் இருக்கிறது. இதை ஒருமைப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கட்டண விகிதத்தை மாற்றுகின்ற ஆலோசனை இப்பொழுதில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கருத்தைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆட்சேபணை இல்லை.

### திருமானூருக்கு அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம்

*330 வினா—**திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், திருமானூர் அருகே கொள்ளிடம் ஆற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டும் வேலை எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்பணிக்கான ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு 20—10—1969 அன்று பணி தொடங்கியது. திருமானூர் பக்கத்தில் நீர்ப்பாய்ச்சல் இருந்ததால், விளாங்குடி பக்கத்திலிருந்து பணி துவக்கப்பட்டது. 22 பாலத் தூண்களுக்கான 22 கிணறுகளில், எல்லா பாலத் தூண்களுக்கான விளிம்புக் கட்டைகள் அமைக்கப்பட்டு, 115 அடி ஆழத்திற்கு காரை பூசப்பட்டுள்ளது. இப் பணி விரைந்து நிறைவேறி வருகின்றது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்தத் திருமானூர், விளாங்குடிப் பக்கத்தில் அமைக்கக்கூடிய பாலமானது திருச்சி, தஞ்சை மாவட்டங்களை இணைக்கின்ற பாலமாக இருப்பதினால், போக்குவரத்திற்கு

வசதியாக இருக்கும். இதற்கு எஸ்டிமேட் தொகை எவ்வளவு? சில காலமாக வேலை கொஞ்சம் சுணக்கமாக நடைபெறுகிறதே, இதை விரைவுபடுத்த அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தப் பாலத்திற்கு எஸ்டிமேட் தொகை ரூ. 52 லட்சம். இதைத் தரைமட்ட பாலமாக அமைக்கலாமா, அல்லது உயர்மட்ட பாலமாக அமைக்கலாமா என்று பரிசீலிக்கப்பட்டு, உயர்மட்ட பாலம் அமைக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இரண்டு ஆண்டு காலத்திற்குள் முடிக்குமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. துரிதமாக முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். கருப்பையா: இந்தப் பால வேலை நடந்துகொண்டிருக்கும் பொழுது கிணறு தோண்டுகிற சமயத்தில் இரண்டு ஐம்பொன் சிலைகள் அங்கிருந்தது கண்டுபிடிக்கப்பட்டன. அந்தச் சிலைகளை இப்பொழுது எங்கே வைத்திருக்கிறார்கள்? இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப்பற்றித் தகவல் என்னிடம் இல்லை. பொன் கிடைத்தால் வைத்துக் கொள்ளலாம்.

### தண்டராம்பட்டு அருகில் ஆலையாற்றின் குறுக்கேயுள்ள பாலம்

*331 வினா.—திரு. கே. சகாதேவக் கவுண்டர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-தாணிப்பாடி போகும் நெடுஞ்சாலையில் தண்டராம்பட்டு கிராமத்திற்கு அருகில் ஆலையாற்றின் மேல் கட்டப்பட்டுள்ள பாலத்தை புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திருவண்ணாமலை-தாணிப்பாடி சாலையில் 34/5-வது மைலில் உள்ள பாலத்தைத் தற்போது புதுப்பிப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சுமார் நான்கு ஆண்டுக் காலமாக இந்தப் பாலம் பழுதடைந்துவிட்டது என்று போர்டு எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. வாகனங்களை நிறுத்தவேண்டும் என்று போர்டு எழுதி ஒட்டிவைக்கப்பட்டிருக்கிறது. நான்கு ஆண்டுக் காலமாக இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாலம் நாளுக்கு நாள் அதிகமாக மோசமாகப் போய்க்கொண்டிருக்கிற காரணத்தினால், பொது மக்களுக்கு எந்தவிதமான ஆபத்தோ, விபத்தோ ஏற்படாத வகையில், இனிமேலாவது அந்தப் பாலத்தை புதுப்பிப்பதற்கு இந்த அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிற குறிப்பின்படி பாலம் நல்ல முறையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பாலத்தைப் புதுப்பிப்பதற்குச் செயற்குறிப்பு இல்லை. இருப்பினும் அங்கத்தினர் கருத்தை மறுபடியும் தலைமைப் பொறியாளருக்கு அனுப்பி, அறிக்கை கேட்டு, நடவடிக்கை எடுக்கலாம்.



திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலைப் பகுதியில் செய்யாறு பகுதியில்தான் அதிகமாக பாலங்கள் கட்டப்படுகின்றன. மற்ற இடங்களை ஏன் கவனிக்கவில்லை என்பதை அரசு சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தேவையுள்ள, அவசியமான இடங்களில் வேலை நடக்கிறது.

### *Visit of Minister to Vallur Anicut*

* 332 *Q.*—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Minister for Public Works directed action to be taken against officials during his visit to Vallur Anicut in Ponneri taluk about 30th October 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) 29—10—1969 அன்று மாண்புமிகு (பொதுப்பணிகள்) அமைச்சர் வல்லூர் அணைக்கட்டிற்குச் சென்று பார்வையிட்டார். அப்போது "பலகை அடைப்புகள்" வழியே நீர் கசிந்து செல்வதைக் கண்டார். அந்தத் தவற்றுக்குப் பொறுப்பான அதிகாரி மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு (பொதுப்பணிகள்) அமைச்சர் பொன்னேரியில் உள்ள பொதுப் பணித்துறை உதவிப் பொறியாளருக்கு உத்தரவிட்டார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: என்ன நடவடிக்கை என்று சொல்ல முடியுமா? நடவடிக்கை நிறைவேற்றப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்தப் பகுதியிலே சுற்றுப் பயணம் முன்னறிவிப்பு இன்றி செய்தபோது, பார்வையிடப்பட்டது. லீகேஜ் ஆப் வாட்டர் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. விசாரணை நடந்து, அந்த சூப்ரெண்டெண்டெண்ட் தவறு செய்திருக்கிறார் என்று கண்டுபிடிக்கப்பட்டு, அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு, சார்ஜ் ஃப்ரேம் செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

### *Building of Panchayat Union School at Tirumangalam*

* 333 *Q.*—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Sundaradas Choultry building at Thirumangalam in which the Panchayat Union School is being run is in a state of disrepair; and

(*b*) if so, when it will be repaired?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) திருமங்கலம் சுந்தரதாஸ் சத்திரத்தில் நடைபெற்று வந்த ஊராட்சி ஒன்றிய பள்ளி அதற்கென கட்டப்பெற்றிருக்கும் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது.

[1970 செப்டம்பர் 9

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடத்திலேதான் நான் அறிந்தவரையில் இன்னமும் அந்தப் பள்ளி இருக்கிறது. சுந்தரதாஸ் சத்திரத்தை விட்டு மாற்றப்படவில்லை. ஆனால் மாற்றியாகிவிட்டது என்று அமைச்சர் கூறுகிறார்கள். எந்தந்த் தேதியில் மாற்றப்பட்டது என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மதுரை மாவட்டத்தின் ஆட்சியாளர் நிரந்தரக் கட்டிடத்தில் உயர்நிலைப் பள்ளி இருப்பதாகவும், தற்போது ஊராட்சி ஒன்றியப் பள்ளி உயர்நிலைப் பள்ளி நடைபெறும் கட்டடத்திற்குச் சென்றிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். எந்தத் தேதியில் என்ற விவரம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தில் உயர்நிலைப் பள்ளி நடைபெறுகிறது; உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்குப் போகவில்லை. சுந்தரதாஸ் சத்திரத்தில்தான் நடக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி மாற்றப்படவில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? கொண்டு வரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியை 10—3—1970-ல் கொடுத்தார்கள். அப்போதுள்ள நிலையில் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது உறுப்பினர் சொல்வதை வைத்து விசாரணை செய்கிறேன்.

### நெருஞ்சிக்குடி ஆற்றின் குறுக்கே பாலம்

*334 வினா— புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியில் பனையப்பட்டி, பனையூர், குடிமங்கலம் பகுதிகளிலிருந்து இராராபுரம், கூடலூர்ப் பகுதிகளுக்குச் சென்று வரத்தக்க அளவில் எக்காலத்தும் போக்குவரத்திற்கேற்ப கூடலூர் ஆற்றின் (நெருஞ்சிக்குடி ஆறு) குறுக்கே பாலமொன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### கீழ் ராதாம்பூருக்கு அருகில் மணவாய்க்காலின் குறுக்கே பாலம்

*335 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, காட்டுமன்னார் கோவில் யூனியனைச் சேர்ந்த கீழ் ராதாம்பூர் கிராமத்துக்கு அருகில் உள்ள மணவாய்க்காலில் வண்டி வாகனங்கள் செல்லும் அளவுக்கு ஒரு பாலம் அமைத்துத்தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?



1970 செப்டம்பர் 9]

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) தற்சமயம் இம்மாதிரி கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### கதர் சிட்டங்களுக்கான விலை

*336 வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்க கதர் உற்பத்தி நிலையங்களில் கதர் சிட்டங்கள் எந்த அடிப்படையில் கொள்முதல் செய்யப்படுகின்றன?

(இ) கதர் சிட்டங்கள் கொள்முதல் செய்யும் விதங்களில் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசம் ஏதாவது இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடத்திவரும் கதர் உற்பத்தி நிலையங்களில், நூற்பதற்காகக் கொடுக்கப்படும் 1 கிலோ எடையுள்ள பஞ்சுக்கு பொதுவாக 30 மெட்ரிக் சிட்டங்கள் பெறப்படுகின்றன.

(இ) இல்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: அரசிடமிருந்து வாங்கப்படும் நூலுக்கு என்ன விலை? அம்பர் நூலுக்கு என்ன விலை? கைராட்டைச் சிட்டம் நூலுக்கு என்ன விலை? கட்டாயமாகப் பஞ்சு வாங்கவேண்டும் என்று அந்தத் துறை வற்புறுத்துகிறது. அதை நிறுத்துவதற்கு அரசு முன்வருமா? மேலும், அந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் ஒரே சமயத்தில் கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் பணிகள் முழுவதையும் உள்ளடக்கிக் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அம்பர் சர்க்காவின் நூல் விலை 35 காசு; கிஸான் ராட்டை சிட்டத்திற்கு 50 காசு. 20 சதவிகிதம் கையடைத் தொகையாகச் சரிக்கட்டப்படுகிறது. கதர் துணியாகத் தரப்படுகிறது. சென்ற ஆண்டில் கோவை மாவட்டத்தில் வறட்சி ஏற்பட்டிருந்ததன் காரணமாக 20 சதவிகிதம் என்பது 10 சதவிகிதம் ஆகக் குறைக்கப்பட்டது. 5-7-1969 முதல் 4-1-1970 வரை ஆறுமாத காலத்திற்கு வேறு மாவட்டங்களுக்கு விரிவு படுத்தப்பட்டு, வைப்புத் தொகை அதிகப்படுத்தப்பட்டு ஊதியத்தை மிச்சப்படுத்த ஊக்கம் அளிக்கப்பட்டது. கிசான் ராட்டைகளை, டெக்ஸ்டேல் ராட்டைகளுக்கு மாற்றுவதால், கதர் உற்பத்தி அதிகமாகி, மேலும் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, இந்தக் கதர் சிட்டங்களை உற்பத்திசெய்ய ஏழை எளிய அரிசனங்களுக்கு ராட்டைகளை இலவசமாகக் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மா.முத்துசாமி :** கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் தனியாக இயங்கும் அகில இந்திய அமைப்பு. அது பணத்தைக் கொடுக்கிறது, மானியமாகவும், கடனுகவும். அந்த வாரியம் இந்தவிதமான உதவி கொடுப்பதாகத் தெரியவில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, கிசான் ராட்டையில் நூற்கும் நூலும், அம்பர் ராட்டை நூலும் வித்தியாசமாக இருக்கிறது. இரண்டையும் கலந்து கதர் நெய்வதால், தரம் குறைகிறது. தரம் உயர, வலிவு அதிகமாக, கிசான் ராட்டைகளையே கொண்டுவருவதன் மூலம் கதர் உற்பத்தி செய்கிற சிறு தொழில் நசிக்காமல் இருப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை அரசு உணருகிறதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அது ஒரு தவருன கருத்து. உற்பத்தி செய்வது மேலும் அதிகமாகும். பலருக்கும் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். கிசான் ராட்டை மூலம் நூற்பதைவிட டெக்ஸ்டூல் ராட்டை மூலம் நூற்பதில் மூன்று மடங்கு அதிகமாக ஊதியம் பெற வாய்ப்பு இருக்கிறது. வேலை அதிகரிக்க, மார்க்கெட்டில் போட்டி போட, நாம் புதுமைகளைக் கையாள வேண்டியதாக இருக்கிறது.

### தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி

337 விரு.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விருவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் நிர்வாக குழுவில் அந்த வங்கியின் ஊழியர் ஒருவரை பிரதிநிதியாக சேர்க்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** இல்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிர்வாகக் குழுவில் அங்கு பணியாற்றும் ஊழியர் ஒருவரை நியமிப்பது வங்கிக்கு வசதியாக இருக்கும் என்பதை அரசாங்கம் யோசனை செய்து சேர்த்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** தலைவர் அவர்களே, அப்படி ஊழியர்களை நியமிப்பதற்கு சட்டத்திலும் விதிகளிலும் இடம் இல்லை.

### *Tirunelveli District Co-operative Society, Tuticorin*

* 338 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that the Joint Registrar of Co-operative Societies, Tirunelveli had addressed in June 1968 the President of the Tirunelveli District Co-operative Society Limited, Tuticorin to take action on grave financial irregularities in its working; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** (அ) & (இ) இந்தச் சங்கத்தின் தலைவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், இது நீதி விசாரணையில் உள்ளது.



DR. H. V. HANDE : I am not going into merits or demerits of the case when it is sub-judice. Will the Hon. Minister be pleased to tell us the details of the amounts under which these irregularities were found, whether a deficit in stock of paddy in Nanguneri branch to the extent of Rs. 21,190.75 was found, whether a payment has been made by means of fraudulent voucher to a gentleman Thiru Ponnuswami for rice mill construction to the extent of Rs. 15,146.60 and several other irregularities totalling Rs. 69,665 were discovered by Joint Registrar? If so, may I know whether the amount has been recovered?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** தலைவர் அவர்களே, இது கூட்டுறவு காரியத்தையொட்டி இருக்கிறது. விதிகளில், "the question must not relate to a matter which is under adjudication" என்று இருக்கிறது. இது நீதிமன்றத்தின் விசாரணைல் இருப்பதால், இதற்குப் பதில் அளிக்கக் கூடாது என்று இருப்பதால், இதற்குப் பதிலளிக்கவில்லை. இதே கேள்வியை ஒரு மாதத்திற்குப் பறகு கேட்டால் எல்லாத் தகவல்களையும் விவரமாகக் கொடுக்க முடியும்.

THIRU K. VINAYKAM : On a point of Order, Sir. The Hon. Speaker has admitted this question and also tabled this question for answer. Already you have also rendered a decision that even after FIR has been filed, that it is not sub-judice. What is there if the case is pending in the High Court? Why should the Hon. Minister come under the umbrage that it is sub-judice? Mr. Speaker has already admitted the question with the consent of the Hon. Minister.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி அனுமதிக்கப்பட்டபோது, வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. கேள்வி முன்கூட்டியே கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்கு 'விவரம் இல்லை' என்றோ, 'விடை இல்லை' என்றோ சொல்லலாம். அனுமதிக்கப்பட்ட கேள்வியைப்பற்றிப் பேச வேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, நான் வழக்கைப்பற்றிப் பேசவில்லை. கோர்ட்டுக்குப் போவதற்கு முன்னுலே இந்த சர்க்கார் ஸ்டே ஆர்டர் போட்டது தெரியுமா, இல்லையா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது புரிந்து கொள்ளக்கூடியதாக இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, புரிய வைக்கிறேன். ஏற்கெனவே இந்தத் தவறுகள் எல்லாம் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்குப் பிறகு, சர்க்காரோ, அமைச்சரோ தலையிட்டு, சம்பந்தப்பட்ட திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்களுக்கு ஸ்டே ஆர்டர் கொடுத்தது உண்டா, இல்லையா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** இது கூட்டுறவு சட்டத்திலுள்ள விதிகளின்கீழ் விசாரணை நடத்தி செய்யக்கூடிய காரியம். இதிலே அரசாங்கப்

தலையிடுவது இல்லை. "ஷோ காஸ்" நோட்டீஸ் கொடுத்தவுடனே கோர்ட்டில் வழக்குத் தொடுத்திருக்கிறார். அதையொட்டிய விவரங்கள் ஒரு மாதத்திற்குப் பிறகுதான் தருவதற்கு இயலும். கோர்ட் நடவடிக்கைகளைப் பற்றி இங்கே விவாதிப்பது சரியாக இருக்காது என்பதாலும், அப்படிச் செய்தால் கோர்ட்டை அவமானப்படுத்திய குற்றமாக இருக்கும் என்பதாலும்தான் ஒரு மாதத்திற்குப் பிறகு விவரம் தருகிறேன் என்று சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, சர்க்கார் ஸ்டே ஆர்டர் கொடுத்ததா, இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, 65-வது விதிப்படி சர்க்கார் ஸ்டே ஆர்டர் கொடுக்கவே முடியாதே !

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 'அப்படி கொடுக்கவே முடியாதே' என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டாம். நான் கேட்பதற்கு நேரடியாகப் பதில் சொல்ல வேண்டும். ஸ்டே ஆர்டர் கொடுத்திருந்தால் 'ஆம்' என்று சொல்லவேண்டும். இல்லையென்றால், இல்லை என்று நேரடியாகப் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், உறுப்பினர்கள் கேட்கக்கூடிய கேள்விக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம், பதில் சொல்லாமலும் இருக்கலாம் என்று விதி இருக்கிறது. அப்படி இருக்கும்போது பதில் சொல்லித்தான் ஆக வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுவது நியாயமா ?

DR. H. V. HANDE : I am not at all going to the matter which is sub-judice or to the Judicial aspect. I request the Hon. Minister to pay careful attention to this. Is it not a fact that this was discovered as early as June 1968 and later on about three or four months ago I put the question. In view of the fact that this was discovered as early as June 1968, what steps have been taken by this Government to get back the amount. Usual procedure under the Co-operative Societies Act is, whenever somebody has defaulted, when it is discovered, immediately the amount is got back, it should be re-imbursed. This had been discovered in June 1968 and what steps had been taken by Government to get back the amount?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இது யாரையும் காப்பாற்றுவதற்காக முயற்சிக்கிறேன் என்ற எண்ணம் துளிக்கூட தேவையில்லை. சம்பந்தப்பட்டவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது இல்லை. நடைமுறை எப்படி என்றால் ஆடிட் தவறு இருந்தால் 65-வது விதியின்படி ஓர் விசாரணை நடத்தி, ஓர் விரிவான அறிக்கை கொடுத்து மேல் நடவடிக்கை எடுப்பது என்று இருக்கிறது. முதலில் ஐயப்பாடு ஏற்பட்டவுடனே விரிவாக ஆராய்ந்து அறிக்கை கொடுக்கும்படி கேட்டுக்கொண்டது அரசு அல்ல, பதிவாளர்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இதில் சர்க்கார் தீவிரமாகத் தலையிட்டு தீவிரமாக நடவடிக்கை எடுப்பார்களா ?



**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தீவிரமாகவும், துரிதமாகவும் அந்த மனுவைப் பைசல் செய்ய வேண்டும். வழக்கு முடியவேண்டும். ஒரு மாதத்திற்குப் பிறகு கேட்டால் விவரம் தருகிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்போது சட்டசபையைக் கூட்டுங்கள், கேட்டுக்கொள்கிறோம்.

### *Memorandum from Parry's Employees' Union, Ranipet.*

* 339 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state whether a memorandum, dated 18th March 1970 has been received from the Parry's Employees' Union, Ranipet, regarding the declaration of National Holidays?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, அந்த மனு 16—3—1970-ம் தேதியிட்டதாகும். உறுப்பினர் அவர்கள் கூறுகிற மாதிரி 18-ம் தேதியிட்டது அல்ல.

DR. H. V. HANDE : May I know from the Hon. Minister the details?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, ராணிப்பேட்டையிலுள்ள பாரி கம்பெனி தொழிலாளர் சங்கம் இரண்டு கோரிக்கைகளை மனுவில் குறிப்பிட்டிருக்கிறது. முதல் கோரிக்கை என்னவென்றால், தற்போதைய விடுமுறையுடன் கூடுதலான விடுமுறையாக 'மே தினத்தை' விடுமுறையாக அளிக்கவேண்டும். மற்றொரு கோரிக்கை என்னவென்றால், தேசீய விடுமுறை, விடுமுறை நாட்களில் வருமானால் அதற்குப் பதிலாக மற்றொரு நாள் கட்டாயமாக விடுமுறை அளிக்க தகுந்த முறையில் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பதாகும்.

DR. H. V. HANDE : May I know whether it is a fact that they made a request that when 'May Day' is declared a holiday it erodes into other Hindu Festivals? When these holidays like Gandhiji's birth day, etc., are given they are National Holidays. But when holiday for 'May Day' is given, the other Hindu Festival holidays are reduced. If so, will the Government see that this holiday for 'May Day' does not affect other Hindu Festival holidays which these labourers are already enjoying?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் திருத்தம் வேண்டும்பொழுது தெளிவாகச் செய்யலாம். இப்போது தமிழ் நாட்டிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு ஒன்பது நாட்கள் கட்டாயம் விடுமுறை விடப்படுகிறது. அதில் நான்கு நாட்கள் தேசிய விடுமுறை, ஐந்து நாட்கள் பண்டிகைவிடுமுறை நாட்களாகும். இந்தப் பண்டிகை நாட்கள் ஐந்து எவை எவை இருக்கவேண்டுமென்பதைக் குறித்து, தொழிற் சங்கத் தலைவர்களும், தொழிலதிபர்களும் கூடிப் பேசி முடிவு செய்து கொள்ளலாம் என்று சட்டம் சொல்கிறது. இப்போது பல்வேறு தொழிற்சாலைகளிலே இந்த முறையில் நல்ல முடிவு கண்டு இருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ஒன்பது நாட்கள் விடுமுறை விடவில்லையானால், அப்பொழுது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

### மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வேலை நிறுத்தம்

*340 வினா.—கோளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 1969-ம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் வேலை நிறுத்தம் நடந்ததா ?

(இ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** (அ) ஆம். இந்த ஆலையில் 28—11—69 முதல் 10—12—69 முடிய ஒரு வேலை நிறுத்தம் நடந்தது.

(இ) சென்னை 3-வது தொழிலாளர் துறை அலுவலரின் நிலுவையிலிருந்த கோரிக்கைகளைத் தீர்ப்பதில் நிர்வாகத்தின் தரப்பில் தாமதம் ஆனதால் வேலைநிறுத்தம் செய்ய நேர்ந்தது என்பது தொழிலாளர்கள் சங்கத்தின் வாதம். சங்கத்தலைவர் மதுராந்தகத்தில் நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வந்த சமயத்தில் அவருக்குப் போக்குவரத்து வசதி கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டதே வேலை நிறுத்தத்திற்கு உடனடி காரணமாகும்.

**திரு. கோளத்தூர் கோதண்டம் :** வேலைநிறுத்தம் நடைபெற்ற நேரத்தில் வேறு தொழிலாளர்களை வைத்து வேலை நடத்தினார்களா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** இந்தத் தொழிற்சாலையில் 469 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அறுபது பேர்கள்தான் வேலைக்குப் போகவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. பின்னால் வேலை நிறுத்தம் சுமுகமாக முடிந்துவிட்டது.

### *Tank Bund Poramboke lands in Peravallur*

*318 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the land T.S. No. 382/1 measuring 110.72 acres of Peravallur village, North West Taluk, Madras was transferred from Tank Bund Poramboke to house-sites:

(b) whether the hut dwellers of Muthuvelar Kudiyiruppu (Agaram) in the above land S. No. 382/1 were evicted on 12th July 1968 by the Tahsildar, North-West, Madras, without any prior intimation;

(c) whether the above land has subsequently been taken over by the Madras Housing Unit of the State Housing Board for allotment of house-sites to the Tamil Nadu Secretariat Association, the Tamil Nadu Non-gazetted Officers Union and The Tamil Nadu Last Grade Government Servants' Association; and

(d) if so, the action taken to rehabilitate the original hut dwellers?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) இல்லை.





(உ) இல்லை.

(ஊ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Sir, may I know whether representation was received from this Association with regard to irregularities and if so, the action taken by the Government to set right the irregularities alleged to have been mentioned in the representation?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சில பேர்கள் அந்த இடத்தில் போய் முத்துவேலப்பர் குடியிருப்பு என்றும், அகரம் பொதுநல மன்றம் என்றும் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். இது எல்லாம் 1969-இல் நடந்தது. இந்த நிலத்தை அரசாங்கம் அரசாங்க ஊழியர்களுக்கு குடியிருப்பு மனைக்காக பட்டா செய்துகொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தது. அதற்குள்தான் ஒருவர் அந்த நிலத்தை தமக்குச் சொந்தமானது என்று சில பேர்களுக்கு கூறுபோட்டு விற்கவும் ஆரம்பித்தார். வாங்கினவர் குடிசைபோட முயன்றார். அரசாங்கம் டிரஸ்பாசர்கள் என்ற முறையில் அவர்களை அப்புறப்படுத்தி, வழக்கும் தொடர்ந்திருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, in a number of places some persons go and put up some flag or other and say that that particular area belong to them and then they sell the lands there. It is only after their sale that the Government wake up and say that they belong to them. So, will the Government put up a board with the inscription that they are poramboke lands and that they belong to them, so that no such fraudulent transactions could take place?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எந்த போர்டு இருந்தாலும் ஏமாறுகிறவர்கள் இருக்கிறவரை ஏமாற்றுகிறவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். ஏமாறுகிறவர்கள் குறைந்தால் எல்லாம் சரியாகிவிடும்.

### திருப்பூர் நகராட்சிப் பள்ளிக்கு இடம்

*319 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி மன்றம், பள்ளிக்கு இடம் கேட்டு விண்ணப்பித்தது சம்பந்தமாக திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினர், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு 1369 ஆகஸ்டு மாதத்தில் ஓர் விண்ணப்பம் தந்தாரா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) திருப்பூர் நகராட்சிப் பள்ளிக்கென விண்ணப்பிக்கப்பட்ட திருப்பூர் நகரம், நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த T.S. 705/2 எண் கொண்ட இடத்தை ஆக்ரமிப்பு செய்திருப்பவரை வெளியேற்றுவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் உயர்நீதி மன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

**திரு. சு. துரைசாமி :** உயர்நீதி மன்றத்தில் இருக்கிற அந்தத்தடையை நீக்கி விரைவில் அந்த இடத்தைப் பள்ளிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அரசாங்கம் அந்த ஆக்கிரமிப்பை அகற்றி, அந்த இடத்தை பள்ளிக்குக் கொடுக்கவேண்டும் என்றுதான் டி.ஆர்.ஓ. பரிந்துரை செய்திருக்கிறார். ஹைகோர்ட் ஸ்டே எடுக்கப்பட்டவுடன்தான் என்க்ரோச்மெண்டை அகற்ற அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும்.

## Licence for cotton transport

320 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Government of Tamil Nadu has increased the fee for renewal of annual general licence for Cotton transport from Rs. 200 to Rs. 300 a year; and

(b) if so, why?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ)-உம் (இ)-உம் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் இது குறித்து விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம்: இந்த பருத்தி ஏற்றுமதி செய்வதற்கு 200 ரூபாயாக இருந்த பீசை 300 ஆக உயர்த்தியிருப்பதனால் அரசாங்கத்திற்கு வருகிற மொத்த லாபம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அனுப்பப்படுகிற பருத்தியின் தரத்தைப் பரிசோதித்தல், செலவுக்கணக்கைச் சரி பார்த்தல் போன்ற பல வேலைகளுக்குச் சர்க்கார் அதிகாரிகளைப் போடவேண்டியிருக்கிறது. ஆகவேதான் 200-இல் இருந்து 300-ஆக பீஸ் உயர்த்தப்பட்டதே தவிர தவிர வேறு இல்லை.

## Cocoa plantations

* 321 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether a large number of acres are to be brought under Cocoa plantations in this State during 1970-71; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: கொக்கோ பயிருக்குத் தேவையான மழை வளம், நிலவளம் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிறது. அது அதிக வருவாய் உள்ள பயிர். ஆகவே ரப்பர் தோட்டம் போன்று கொக்கோ ப்ளாண்டேஷனுக்கும் திட்டம் வகுக்க அரசாங்கம் முன்வருமா?

---

457-458-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கரா பரப்பில் கொக்கோ பயிரிட கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் மூலமாக ஒரு திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது அவர்களது ஆய்வு முடிந்த பிறகு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கன்னியாகுமரி மாவட்டத்தில் கொக்கோ பயிரிடுகிறவர்களுக்கு வட்டி இல்லாக் கடனைக் கொடுத்து ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போது 300 ரூபாயிலிருந்து இரண்டாயிரம் வரை கடனைக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். வட்டி இல்லாமல் கொடுக்கிற திட்டம் இல்லை.

திரு. மு. ச. சிவசாமி: நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் கொக்கோ பயிர் வெற்றிகரமாக வருவதால் நெல்லை மாவட்டத்திலும் கொக்கோ ப்ளாண்டேஷனை ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நெல்லை மாவட்டத்தைப்பற்றிய குறிப்பு இல்லை.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது: தனியார் காடுகளில் சந்தன மரத்தோடு கொக்கோ மரத்தையும் பயிரிடுகிறார்கள். அது போலவே சர்க்கார் காடுகளிலும் பயிரிட முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆலோசிக்கலாம்.

## தமிழ்நாட்டில் ராடார் சாதனம்

* 322 வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புயல் வருவதை முன் கூட்டியே அறிவிக்கும் வகையில் ராடார் சாதனம் நிறுவ இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் உத்தேசித்துள்ளதா?

(இ) எந்தெந்த இடங்களில் நிறுவப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம், தமிழ்நாட்டின் கிழக்கு கடற்கரையோரமாக இரு ராடார்களை நிறுவ இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் யோசித்துள்ளது.

(இ) 1971-ம் ஆண்டு சென்னை நுங்கம்பாக்கத்தில் ஒரு ராடாரும் 1972-ம் ஆண்டு நாகப்பட்டினத்தில் மற்றொரு ராடாரும் நிறுவப்படும்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: புயல் வருவதை முன்கூட்டியே அறிவிக்கக்கூடிய ராடார் சாதனத்தை, மீனவர் சமுதாயம் பெருவாரியாக வசிக்கும் கன்னியாகுமரியில் நிறுவ இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இந்தப் பகுதிகளில் ஆறு ராடார்களை நிறுவவேண்டும் என்று தீர்மானித்து, அவைகளில் ஒன்றை ஆந்திரத்திலுள்ள விசாகப்பட்டினத்தில் நிறுவி இருக்கிறார்கள். நமது தமிழ்நாட்டில் நுங்கம்பாக்கத்தில்

ஒன்றும், நான் முன்பே கூறிய நாகப்பட்டினத்தில் ஒன்றும் நிறுவ இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் அதற்குரிய நடவடிக்கை இன்னும் எடுக்கவில்லை.

*Lifting of Milo and Wheat stocks*

* 3 *Private Notice Question*—THIRU P. G. KARUTHIRUMAN: Will the Hon'ble Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether the Government and the Hon'ble the Food Minister have received any representation in March 1970, from the wholesalers in Chingleput district that Milo and Wheat stocks were lifted by the wholesalers of Alandur from the Government Avadi Godown without the order of the District Supply Office, Chingleput and District Revenue Office, Chingleput;

(*b*) if so, the action taken thereon; and

(*c*) the quantum involved in the same?

THE HON. THIRU P. U. SHANMUGHAM:

(*a*) A representation was received in March 1970, alleging that two wholesalers had taken deliveries of wheat without the orders of the District Revenue Officer or District Supply Officer with the connivance of certain lower officials.

(*b*) The petition was referred to the Collector of Chingleput for enquiry and the Collector has sent a report after preliminary investigation;

(*c*) A verification of the records has revealed seven cases of unauthorised deliveries of wheat and milo involving 90 tonnes of wheat and 60 tonnes of milo. Action is being taken against the officials responsible for the irregularity.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இவ்வளவு பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டிராமல், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இதைத் தவிர்த்திருக்கலாம் அல்லவா? சர்க்கார் அஜாக்கிரதையினுல்தான் அப்படி நடந்தது என்பதை அரசு உணருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, பொறுப்பு இருந்த காரணத்தால்தான் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பொறுப்பு இல்லாத காரணத்தால் பொறுப்பு இல்லாமல் பேசுவது எங்கள் பழக்கமல்ல. பொறுப்போடு நடந்துகொண்டதால்தான் உரிய நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எத்தனை டன் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறது? அதன் மதிப்பு எவ்வளவு ரூபாய் என்று சர்க்காருக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஏற்கனவே நான் அளவுதான் சொன்னேன். பணத்தைப்பற்றிய விவரம் இல்லை. 90 டன் கோதுமை, 60 டன் மைலோ என்று குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (■) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினராகல் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. அவையுரிமைக் கேள்விகள்

### (அ) திருச்சி சிறையிலிருந்த உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையாவிடமிருந்து பெற்ற கடிதத்தை பேரவையில் பயன்படுத்தியது குறித்து சட்ட அமைச்சர் திரு. மாதவன் மீது எழுப்பப்பட்ட பிரச்னை

* **திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் 30—8—1970-ம் நாள் திருச்சி சிறைக்குள் வந்து என்னிடமிருந்து பெற்ற கடிதம் பற்றியும், பின்னர் அந்தக் கடிதம் 31—8—1970-ம் நாளன்று இந்தச் சட்டப் பேரவையில் பயன்படுத்தப் பட்ட முறைபற்றியும், உரிமைப் பிரச்சினை எழுப்ப நான் விரும்புகிறேன்.

31—8—1970-ம் நாள் எனது கடிதத்தை முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் படித்துக்காட்டிய பின்னர்தான், அமைச்சர் திரு. மாதவன் 30--8--1970-ம் தேதி திருச்சி சிறைக்கு வந்து என்னை நேராகச் சந்தித்துக் கடிதத்தைப் பெற்ற நோக்கம் எனக்குத் தெளிவாயிற்று.

29—8—1970-ம் நாள், திருச்சி சிறை கண்காணிப்பாளர் என்னிடம் வந்து, '30—8—1970-ம் நாள் அமைச்சர் மாதவன் வந்தால் நீங்கள் அவரைச் சந்திக்க விரும்புகிறீர்களா?' என்று கேட்டார். அதற்கு நான் இசைவு தெரிவித்தேன்.

அதேபோன்று, 30—8—1970 அன்று அமைச்சர் வந்தபொழுது நான் என்னுடைய கட்சியைச் சேர்ந்த வேறு மூவருடன் சிறைக்குள் அமைச்சர் மாதவனைச் சந்தித்து, எங்களுக்கு சிறையில் செய்யவேண்டிய வசதிகளைப் பற்றிய கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை அமைச்சர் கையில் கொடுத்தேன். அந்த மகஜரில் ஒரு பாராவில், எங்களை விடுதலை செய்யவேண்டுமென்பதை வற்புறுத்தியிருந்தேன்.

வழக்குகளை வாபஸ்பெற்று, நிலப்போராட்டம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுகிற அந்தப் பாராவில் கண்டுள்ள விஷயங்களைத் தனியாக ஒரு கடிதம் எழுதிக் கொடுங்கள் என்று அமைச்சர் மாதவன் கோரினர்.

நான் அதேபோன்று, எங்களுடைய கட்சியின் முடிவுப்படி போராட்டம் 15--8--1970-லிருந்து 17--8--1970 வரை என்பதை விளக்கி, எனவே எங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று எழுதிக் கொடுத்தேன்.

"இனிப் போராட்டம் நடைபெறுது" என்றும் வாக்கியத்தை சேருங்கள் என்றார்.

மூன்று நாட்கள் மட்டுமே நடந்து முடிந்துள்ள போராட்டம் இனி நடைபெறுது என்று என் சொல்ல வேண்டும் என்று கேட்டேன்.

"உங்களுடைய மன்னார்குடி தீர்மானத்தில் கதிர்களை அறுப்பது போன்ற வன்செயல்கள் தொடரும் என்று உள்ளதே" என்று அமைச்சர் வினவினர்.

எங்களுடைய தீர்மானம் எதிலும், அந்தமாதிரி வன்செயல்களுக்கு இடம் இல்லை என்று நான் மறுத்தேன்.

இந்த அர்த்தத்தில்தான் 'போராட்டம் இனி தொடராது' என்று எழுதுங்கள் என்றார். எனவே எங்களுடைய தீர்மானத்தை விளக்குகின்ற முறை என்று நம்பி, அமைச்சர் கோரிய வாசகத்தையும் பின்னர்தான் அதே கடிதத்தில் சேர்த்தேன்.

அந்தக் கடிதத்தை சட்டமன்றத்தில் படித்து, நான் "இனி போராட்டம் நடைபெறாது" என்று உறுதிமொழி கொடுத்துள்ளதாக, அதாவது, முதல் அமைச்சர் ஏற்கனவே அறிவித்துள்ள உறுதிமொழி மன்னிப்புக்கோரிக்கை போன்றது என்று பொதுமக்களுக்குப் பொருள்படும்படி எனது கடிதம் பயன் படுத்தப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் ஒருவரை சிறைக்குள் வைத்துவிட்டு, அவரிட மிருந்து அரசின் அடக்குமுறைச் செயல்களுக்கு அனுகூலமான "உறுதிமொழி" ஒரு அமைச்சர் நேரில் சென்று பெறுவது, பார்லிமெண்டரி ஜனநாயகத்தின் வரலாற்றில் இதுதான் முதல் நிகழ்ச்சியாகும்.

இந்த மன்றத்தில், எனது கட்சி உட்பட, பிரஜா சோஷலிஸ்ட், சம்யுக்த சோஷலிஸ்ட், மார்க்ஸிஸ்டு ஆகிய நான்கு கட்சிகள் சார்பில் அடக்குமுறைக் கொள்கையைக் கண்டிக்கின்ற தீர்மானம் அறிமுகம் செய்துள்ளபொழுது, அதற்கு எதிரான முறையில் எனது கடிதத்தைப் பயன்படுத்தும் உள் நோக்கத்துடன், என்னிடமிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளது.

இந்த உள்நோக்கத்துடன்தான், அமைச்சர் மாதவனின், 30--8--1970-ம் நாள் திருச்சி சிறையில் என்னை வந்து சந்திக்க விரும்பிய முயற்சியும் என்பது, எனக்கு பின்னர்தான் தெளிவாயிற்று.

சிறையில் இருக்கும் என்னிடமிருந்து அமைச்சர் நேரடியாக வந்து கடிதத்தைப் பெற்றது,

எனக்கு அறிவிக்காமல் அதை இந்த மன்றத்தில் பயன்படுத்தியது,

அந்தக் கடிதத்தின் நல்லெண்ண விளக்கத்தை, உறுதிமொழி போன்று திரித்துக் கூறியது,

ஆகிய மூன்று செயல்களும், இந்த சபையின் உரிமையையும், நான் சுதந்திரமாகச் செயல்படும் உரிமையையும், பறிக்கும் வகையில் அமைச்சர் மாதவன் எடுத்துள்ள நடவடிக்கையாகும்.

என்னையும், எனது கட்சியையும் இழிவுபடுத்துகின்ற நோக்கத்துடன் அமைச்சர் மாதவன் எடுத்துள்ள நடவடிக்கை, உண்மையிலேயே இந்த மன்றத்தை இழிவுபடுத்துவதாக முடிந்துள்ளது.

மேலும், கண்டனத் தீர்மானத்தைப்பற்றி இந்த மன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாகச் செயல்படுவதைத் தடுக்கும் நோக்கம் கொண்டது.

அமைச்சர் மாதவன் அவர்களின் இந்தச் செயல் தனி மனிதனின் நாணயத்திற்கு முரணானது என்பது மட்டுமின்றி, இந்த சபையின் சுதந்திரத் திற்கு எதிரானது.





உரிமைக் குழு விசாரணை செய்தால், சந்தேகத்திற்கிடமின்றி அமைச்சர் மாதவன் அவர்களின் உரிமை மீறிய செயல்களை நிரூபிக்க சான்றுகள் உள்ளன.

எனவே, இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவின் விசாரணைக்கு சிபார்சு செய்ய இந்த மன்றத்தில் நான் முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ஒரு சாதாரண பிரச்சினை, பெரிய அரசியல் பிரச்சினையாக மாற்றப்பட்டு விட்டது என்பதையும், கனம் அங்கத்தினர் திரு. சுப்பையா அவர்களுடைய நிலையை யும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அவர்களுடைய கட்சியில் எப்படிப் பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. உண்மையிலேயே நான் அதற்காக வருத்தப்படுகிறேன். ஆனால், சட்டமன்ற அங்கத்தினராக இருந்தாலும், சிறைச்சாலைக்குள்ளே இருக்கும் போது சட்டப்படி அவர் கைதி. அரசாங்கத்தோடு, அமைச்சர்களோடு தொடர்பு கொள்ள, மனுக்கள் எழுதியனுப்ப அவர்களுக்குப் பூரண உரிமை உண்டு. அவர்களே அவருடைய அறிக்கையில் நடந்தவற்றை---அவருடைய பெருந்தன்மையை சொல்லிவிட்டார்கள். இடையிலே 'நோக்கம்' என்று சொன்னார்கள். உரிமைப் பிரச்சினைக்குத் தேவை என்ற காரணத்தாலோ என்னவோ அந்த வார்த்தைகளையெல்லாம் இணைத்துக்கொண்டார்கள் என்று நான் கருதிக்கொள்கிறேன்.

அவரே சொன்னதுபோல, நான் சிறைச்சாலைக்குப் போவதற்கு முன்னாலேயே அவர்கள் மனு தயாரித்து, விடுதலை செய்யவேண்டும் என்ற வேண்டுகோளை அதிலே இணைத்திருந்ததாக அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அவர்களுடைய நல்ல பண்பை அது காட்டுகிறது. அது உண்மை. படித்துப் பார்த்தவுடன், இதைப் பொறுத்த அளவுக்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே வலதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியினுடைய பாராளுமன்ற உறுப்பினரிடத்தில் சொல்லியிருந்த செய்தியை திரு. சுப்பையா அவர்களிடத் தில் சொன்னேன். நிலப்பறி இயக்கம் மேற்கொண்டு நடத்தப்படாது என்ற உறுதியை வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி தெரிவித்தால், விடுதலை செய்வதைப் பற்றிப் பரிசீலிக்கின்றேன் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதைமட்டும் நீங்கள் தனியாக எழுதிக் கொடுத்தால் நான் முதலமைச்சர் அவர்களிடத்தில் சேர்ப்பிக்கத் தயாராயிருக்கிறேன் என்று சொன்னேன். திரு. சுப்பையா அவர்கள் நல்ல நோக்கத்தோடு, நல்ல எண்ணத்தோடு, இப்படி யெல்லாம் அரசியல் பிரசாரத்திற்குப் பயன்படுத்தப்படும் என்று அவர்கள் கொஞ்சம்கூடக் கருதாமல் எழுதிக்கொடுத்தார்கள். அவர்களுடைய நல்ல எண்ணத்திலே எனக்குக் கொஞ்சங் கூட மன வேறுபாடே கிடையாது.

விடுதலை செய்யவேண்டும் என்று அவர்கள் முதன்முதலில் எழுதினார்கள். "எங்கள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்" என்று எழுதினார்கள். அதற்குக் காரணம், 15, 16, 17 தேதிகளில் நடந்திருந்த நிலப்பறி இயக்கம் முடிந்துவிட்டதால் கைதுசெய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நான் அப்பொழுது விளக்கிச் சொன்னேன். இதையே உங்களுடைய பாராளு மன்ற உறுப்பினர் முதலமைச்சரிடத்தில் சொன்னார்கள். அப்பொழுது அவர்

களிடத்தில் விளக்கினோம். உங்கள் மன்னார்குடித் தீர்மானத்தில், கதிர்களை அறுக்கலாம், ஊர்வலத் தொண்டர்கள் நிலத்தைப் பண்படுத்துவார்கள், நிலத்திலே வேளாண்மை செய்வார்கள் என்ற வார்த்தைகள் இணைக்கப்பட்டிருக்கின்றபடியால், பின்னர் தொடரும்போல் தெரிகிறது; தொடராது என்று சொல்லிவிட்டால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று முதலமைச்சர் சொன்னதை அவர்களிடத்தில் சொன்னேன். அதற்குப்பிறகு, மேற்கொண்டு இயக்கம் நடத்தப்படாது என்று அவர்கள் இணைத்துத் தந்தார்கள். அப்பொழுதுகூட உள்நோக்கம் இருப்பதாக எனக்குக் கொஞ்சங்கூடத் தெரியவில்லை. அதை இந்த மன்றத்தில் முதலமைச்சர் அவர்கள் படித்து, ஒரு இயக்கத்தைச் சார்ந்த ஒரு முக்கியமான உறுப்பினர், இந்த மன்ற உறுப்பினர், அந்த இயக்கத்திற்குத் தலைவராக இருக்கக் கூடியவர், இப்படிப்பட்ட ஒரு உறுதியைத் தந்திருப்பதால் இதுதான் அந்தக் கட்சியின் கொள்கை என்று அரசாங்கம் உணர்ந்து, விடுதலை செய்யவேண்டும் என்று அவர்கள் அறிவித்தார்கள்

ஆனால், எங்களுடைய துர்ப்பாக்கியமோ, அல்லது வலதுசாரிக் கம்யூனிஸ்டுகளினுடையது துர்ப்பாக்கியமோ, அந்தக் கம்யூனிஸ்டுக் கட்சி இப்படிப்பட்ட தீர்மானத்தைப் போட்டிருக்கிறது. அதை எங்களிடத்தில் சேர்ப்பதில் கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது. இல்லாவிட்டால், அதையும்கூட வாசித்துக் காண்பித்திருக்கலாம். அதுவும் பத்திரிகையில் வந்திருக்கிறது. அதற்கும் நண்பர் சுப்பையா அவர்கள் எழுதிக் கொடுத்ததற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

" The Executive Committee of the Tamil Nadu C.P.I. to day urged the State Government to release unconditionally . . . "

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : பத்திரிகைச் செய்தியை நம்பக்கூடாது என்று . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் பத்திரிகையிலிருந்து நேற்று படித்திருக்கிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாகக் காட்டலாமா ? இதுவரை தாங்கள் ஆட்சேபணை பண்ணியிருக்கிறீர்கள். பத்திரிகை பொழுதுபோக்கு என்று சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அனுமதியோடு பத்திரிகையிலிருந்து படித்துக்காட்டலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : நேற்று முன்தினம் திரு. இராமமூர்த்தி அவர்கள் பத்திரிகையிலிருந்து படித்துக் காட்டினார்கள். நேற்று திரு. பொன்னப்ப நாடார் படித்துக்காட்டினார்கள்: திரு. சீமைச்சாமி அவர்களும் படித்துக்காட்டினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. சங்கரய்யா கூட என்னிடம் அனுமதி பெற்றார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : நான் அனுமதி பெறவில்லையா ?





**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அனுமதி பெற்றதை நான் மறுக்கவில்லை. பத்திரிகையில் வந்த செய்தியை ஆதாரமாக வைத்துக்கொண்டு, சட்டசபையில் அதை உபயோகப்படுத்தக்கூடாது என்று, அப்படி ஒரு முடிவு இல்லை. பத்திரிகைச் செய்தியைப் பேரவைத் தலைவரின் அனுமதிப்பெற்றுப் படிக்க வேண்டும். அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் ரொம்ப அக்கறை காட்டுகிறார்கள். எனக்கு வந்த தகவல் கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது. இல்லாவிட்டால் அதையும்கூட முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் அறிவித்திருப்பார். ஒரு மாநில கமிட்டி, ஒரு செயற் குழு தீர்மானம் போட்டிருக்கிறது. நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம் பெருந்தன்மையாக என்று சொல்லுகிறார்கள். இந்தச் சட்டமன்ற உறுப்பினர் இந்த இயக்கத்திற்குத் தலைவராக இருப்பதால் அவர் கடிதத்தைப் படித்தால் தவறு இல்லை என்று படித்திருக்கிறார்கள்.

" About 12,000 prisoners who were arrested during the land grab-agitation should be released. "

அதுமட்டுமல்ல. இன்னொன்றும் சொல்லியிருக்கிறார்கள்.

' In a resolution adopted today the Executive said that the statement of the Chief Minister in the Legislative Assembly on August 25th that the agitation continued in the State was not correct. '

இந்தப் போராட்டம் தொடருகிறது என்று சொல்வது சரி அல்ல என்று அவர் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நண்பர் சுப்பையா அவர்கள் தொடருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரையில் எந்த வித உள்நோக்கமும் கிடையாது. சட்டமன்ற உறுப்பினருடைய நல்ல பண்பை ஏற்றுக் கொள்ளுகிறேன். அவர்களுடைய கருத்தை மதிக்க வேண்டுமென்ற முறையில் எல்லோருக்கும் உள்ள உரிமை அவருக்குக் கொடுக்கப்பட்டது. மனுக்களை அதிகாரிகளிடத்தில் கொடுக்கலாம். அந்த மனுக்கள் எல்லாம் வந்து கொண்டே இருக்கின்றன. திரு. கலியாணசுந்தரம் கூட ஜெயிலில் இருந்து மனுக்களை அனுப்பியிருக்கிறார்கள். அது வேறு சம்பந்தமான மனுக்கள். மனுக்கள் கொடுப்பதில் தவறு இல்லை. அதை ஏற்றுக் கொண்டு அதை ஆதாரமாக எடுத்துக் கொண்டு விடுதலை செய்வது என்று அரசாங்கம் முடிவு எடுத்தது.

வலதுசாரிக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்களுடைய தியாகத்தைப் பற்றியும், குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலே இருந்து வருகின்ற திரு. சுப்பையா அவர்கள் பண்பிலும் கொஞ்சம்கூட மாற்று கருத்து உள்ளவர்கள் அல்ல. தியாகம் செய்து சிறையில் இருந்தபோது எப்படியாவது வெளியே ஓடி வந்துவிட வேண்டுமென்று செய்தார் என்று யாரோ கருதுகிறார்கள். ஆனால் நண்பர் சுப்பையா அவர்கள் கருதவில்லை. ஆகவே அப்படிக் கருதுவது தவறு.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருதுகிறார்களா? கருதமாட்டார்கள் என்று நன்றாகத் தெரியும். நான் பார்த்தேன், அவர் பேசும்போது நண்பர் சுப்பையா அவர்களுக்காக வாதாடுகிறோம் என்று கருதிக் கொண்டு வாதாடி

னார்கள். ஆனால் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அவர்கள் படித்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். பேரவைத் தலைவர் அனுமதியோடு படிக்கிறேன்.

" Another charge Mr. Karuthiruman made against Ministers related to Mr. Madhavan, the Law Minister. He said that the Law Minister met the C.P.I. leader Mr. A. K. Subbiah in the Central jail at Tiruchirappalli and coerced him to write a letter to the Government pleading for the release of persons taken into custody in connection with the land grab movement '.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடிக் குற்றச்சாட்டுக்களைக் கூறுவது வழக்கம். இன்று பத்திரிகைகள் எல்லாம் அவருக்காக வாதாடக்கூடிய பெருந்தன்மை தமிழ்நாட்டிலே இப்போது வந்திருக்கிறது. நான் தேடித் தேடிப் பார்த்தேன். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்களா என்று பார்த்தால் அப்படி ஒன்றும் இல்லை. அவர் கண்ணியம் மிக்கவர். பத்திரிகைக்காரர்கள் அப்படியெல்லாம் போடவேண்டுமென்று விரும்புகிறார்கள். பத்திரிகையிலே போடுவதால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய பலம் பெருகிவிடாது. பிரபலமான பத்திரிகை, நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லியதைப்போல மதிப்பு மிக்கப் பத்திரிகையில் போட்டிருக்கிறது. நாங்கள் உரிமைப் பிரச்சினை கூட கொண்டு வரலாம். இதெல்லாம் சாதாரண பிரச்சினை. பத்திரிகைகள் வெளியிலுள்ள மக்களிடத்திலே பிரச்சினைகளைப் பெரிதாக்கிக் காட்டுகின்றன. நமது எதிர்க் கட்சித் தலைவர் இங்கு என்ன பேசுகிறார் என்று நமக்குத் தெரியாதா? ஆனால் இரவு வீடு சென்று பத்திரிகையில் பார்த்தால் பயங்கரமாக இருக்கிறது. பத்திரிகைகள் தவறான பிரசாரங்கள் செய்கின்றன. இப்படியெல்லாம் மக்களிடத்திலே தவறான பிரச்சாரங்களை செய்யவேண்டாம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். கொயர்ஸ் என்று போட்டிருக்கிறார்கள். விநாயகம் அவர்கள் ஏதோ சொல்லுகிறார்கள். யாரையும் தூண்டிவிட வேண்டாம். சட்டமன்ற உறுப்பினர் கொடுத்ததை நானும் என் கையோடு எடுத்துவரவில்லை. அதை டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் இடத்திலே கொடுத்துவிட்டு வந்தேன். டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இதில் மாசு கற்பிக்கவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதிலே ஏதாவது கிடைக்குமா என்று பார்க்கவேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, சட்ட அமைச்சர், சட்டம் படித்தவர், என்னைப் பற்றி பெருமைப்படச் சொன்னாரே, நான் அவரைப் பற்றி சொல்லவேண்டாமா? பத்திரிகையில் செய்தியாக போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கையெழுத்துப் போட்டார்கள். ஆனால் கட்டாயப்படுத்தவில்லை என்று சொன்னார்கள். இது அமைச்சர் லெவலில் போய் சாதாரணமாகக் கெஞ்சுவது என்றில்லை. அதிகமாக வற்புறுத்தாமல் கேட்டால்கூட போட்டுவிடுவார்கள். திருக்குறளில் கூட—

"வேலொடு நின்றான் இடுவென் றது போலும்
கோலொடு நின்றான் இரவு"



வேலைப்பிடித்தவன் வீதியிலே யாசிக்கும்போது அவன் கையில் உள்ள வேலைப் பார்த்துத்தான் அவனுக்குப் பிச்சைப் போடுகிறார்களே ஒழிய மனமாற போடுவதில்லை. அதனால் தான்—

"வேலொடு நின்றான் இடுவென் றது போலும்
கோலொடு நின்றான் இரவு"

என்று வள்ளுவர் கூறி இருக்கிறார். ஆகவே 'கொயர்ஸ்' என்பது இதைவிட வேறு ஒன்றும் இல்லை. கையில் இருக்கும்படியான வேல்தான் 'கொயர்ஸ்' என்பது.

கையெழுத்துப் போடுவதற்கு முன்பு அந்த வாக்கியத்தைச் சேருங்கள். என்று சொன்னதாகத் தகவல் வந்தது. இப்பொழுது சட்டமன்ற உறுப்பினரே ஏற்றுக்கொண்டார்கள். இதிலே அமைச்சர் போய் செய்யவேண்டிய அவசியம் என்ன வந்தது? தானாக அவர் செய்தால் நாங்கள் வரவேற்றிருப்போம். எந்தமாதிரியான செக்ஷன்படி கேஸ் போட்டிருக்கிறார்கள். 129 (பி), 307. பெரிய தப்பு செய்திருக்கிறார்கள். இதனால் இவர்களை வெளியிலும் விடமுடியாது, ஜாமீனும் கொடுக்கமுடியாது. இவர்களை வெளியில் விட்டால் என்ன நினைப்பார்கள்? 'கொயர்ஸ்' என்பது இல்லை என்று சொன்னார்கள், அமைச்சர் போய் கேட்பது 'கொயர்ஸ்' தான் என்பது சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. கலெக்டர் போய் நன்கொடை கேட்கிறார். பொதுக் காரியங்களுக்குக் கேட்கிறார். சர்க்கார் காரியங்களுக்காகக் கேட்கிறார். அவர் என்ன மிரட்டியா கேட்கப்போகிறார். அவரைப் பார்த்த உடனே கொடுத்துவிடமாட்டாரா? இதைக் கொயர்ஸ் என்று சொல்ல வேண்டாமா? ஆகவே அமைச்சர் போய்த்தான் தீரவேண்டுமென்ற அவசியம் இல்லை. கையெழுத்துப் போடுவதற்கு முன் இதைச் சேர்த்துக் கொடுங்கள் என்று சொல்வது முறையாகாது. அவர்கள் கட்சி மறுபடியும் போட்டிருக்கிற தீர்மானத்தைப் பார்க்க வேண்டும். இதிலே பிரச்சினை என்னவென்றால் உரிமை மீறித்தான் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் கொண்டுவந்த உரிமைப் பிரச்னைமீது அவர் கூறத் தவறியவைகளையும், ஒரு வேளை கூற மறந்தவைகளையும், எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் திருச்சி சிறைச்சாலைக்குச் சென்றபொழுது மாத்திரமல்ல. கைது செய்யப்பட்ட வலதுசாரிக் கம்யூனிஸ்டுகள் நிலப்பறி இயக்கத்தில் ஈடுபட்டவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று பலமுறை பலர் என்னிடத்திலே கேட்டிருந்தார்கள். குறிப்பாக பூபேஷ் குப்தா அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். அவர்கள் அந்தக் கடிதத்தில் அஹமது என்ற நாடாளுமன்ற உறுப்பினரை, அஹமது எம்.பி. அவர்களை அனுப்பியிருக்கிறேன், அவர்களிடத்திலே பேசவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தின்படி அஹமது எம்.பி. அவர்கள், அவர்களும் அந்த கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்றுதான் கருதுகிறேன், என்னைச் சந்தித்தார், அனைவரையும் விடுதலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். போராட்டம் நடத்துகின்றவர்கள் போராட்டத்தினாலே ஏற்படுகின்ற விளைவு

க்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். என்ன என்ன விளைவுகள் ஏற்படும், சிறைச்சாலை, தண்டனை இவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும். போராட்டத்தை விட்டு விட்டோம், விடுதலை செய்யுங்கள் என்று வெளியே இருப்பவர்கள் கேட்பார்களானால்—விடுதலை செய்யுங்கள் விடுதலை செய்யுங்கள் என்று வெளியிலே இருப்பவர்கள் முழங்குவார்களானால்—அர்த்தம் உண்டு. அப்படித்தான் அஹமது அவர்கள் கேட்டார்கள். நான் அவர்களிடம் சொன்னேன், உங்களுடைய போராட்டம் கைவிடப்பட்டதாகத் தெரியவில்லை, போராட்டம் தொடர்ந்து நடைபெறுமென்று தெரிகிறது. அதுவும் உங்களுடைய நிலப் பறிப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் நிலப்பறி என்றால் நிலத்தைத் தொட்டுவிட்டு வந்துவிடுவது என்ற அளவிலே நடைபெற்று விடுவதல்ல, நிலத்தைப் பறித்து, நிலத்தை மீட்டு—மீட்பு என்றால் மீண்டும் பெற முடியாது—மீட்கப்பட்ட நிலத்திலே சாகுபடி செய்வார்கள் என்று இருக்கிறது. எனவே போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது என்றுதான் அர்த்தம். அந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறாது என்று உங்கள் கட்சியின் சார்பில் எழுதித்தந்தால் பரிசீலிக்கிறேன் என்று சொன்னேன்.

அப்பொழுது சட்டத் துறை அமைச்சர் அவர்களும் என்னுடைய அறையிலே இருந்தார்கள். திருச்சி சிறைச்சாலையில் நிறைய கைதிகள் இருந்த காரணத்தினால் அங்கேயுள்ள செல்களில் அடைக்கமுடியாத நிலைமையில் ஏறத்தாழ ஒரு லட்சம் ரூபாய் செலவில் கொட்டகைகள் போடப்பட்டு வசதிகள் அளிக்கப்பட்டன; அப்படி செய்துகொடுக்கப்பட்ட வசதிகளும் போதவில்லை என்று தெரிவிக்கப்பட்ட காரணத்தினாலே அதைப் பார்த்து வருவதற்காக அங்கே சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சென்றார்கள். சென்ற அமைச்சர் அவர்களிடத்திலே சுப்பையா அவர்கள் எழுதிக் கொடுத்ததற்குப் பிறகு இன்னொரு வரியைச் சேருங்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், என்று குற்றஞ்சாட்டினார்கள். சிறைச்சாலையிலே இருக்கின்ற கைதியே விடுதலை செய்யுங்கள் என்று எழுதிக்கொடுத்திருப்பது எந்தவகையிலே பொருத்தம்? வெளியே இருக்கக்கூடியவர்கள் விடுதலை செய்யுங்கள், விடுதலைசெய்யுங்கள் என்று முழங்கினால் இயக்கம் ஆகிறது, ஜனசமுத்திரம் திரண்டெழுந்து போராட்டத்திலே ஈடுபட்டவர்களை விடுதலைசெய்யுங்கள் என்று சொன்னார்கள் என்றால் சரி. ஆனால், கைதியாக இருப்பவரே விடுதலை செய்யுங்கள் என்று எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

சட்ட அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் சந்தித்தபொழுது போராட்டம் தொடர்ந்து நடைபெறாது என்று எழுதிக்கொடுத்தால் கவனிக்கிறேன் என்று சொன்னார்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். எனவே அவர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள், அதற்கிணங்க அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கட்டாயப்படுத்தி எழுதிக்கொடுத்தார் என்பது சரியல்ல. ஏனென்றால் கம்யூனிஸ்டுகள் மிகுந்த உறுதி வாய்ந்தவர்கள். உடலிலே ஒரு சொட்டு ரத்தம் இருக்கிறவரையிலும் தங்களுடைய கொள்கைகளை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். கருத்திருமன் அவர்கள் கட்டாயமாக எழுதி வாங்கினார்கள் என்று சொல்வது அமைச்சர் மாதவன் அவர்களைக் குறைத்துச் சொல்வதல்ல, திரு. சுப்பையா அவர்களை இழிவுபடுத்துவதாகும். திரு. சுப்பையா அவர்கள்



தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகள் சங்கத் தலைவராக இருக்கிறார். நல்ல பண்பாளர், தியாகங்கள் செய்தவர், அஞ்சாதவர், பலமுறைகள் சிறைச்சாலைக்கு சென்றவர், அவர் கட்டாயப்படுத்தியதால் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் எப்படியாவது வெளியே போனால் போதும் என்று செய்தார் என்று ஆகும். அவருடைய கட்சி அவர்மீது உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிறது. அதற்காக இங்கே உரிமைப் பிரச்னை கொண்டுவந்திருக்கிறார்.

எதற்காக உரிமைப் பிரச்னை? அவர் எழுதிக் கொடுக்காததை அமைச்சர் இங்கே சொல்லியிருந்தால் அது உரிமைப் பிரச்னையாகும். அவர் எழுதிக் கொடுத்த கடிதம் குறித்துத்தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஏதாவது இருந்தால் அமைச்சர் அவர்கள் தவறாகச் சொன்னார் என்று உரிமைப் பிரச்னை வரும். ஏன் அவர்மீது மட்டும், என்மீதேகூட உரிமைப் பிரச்னை கொண்டுவந்திருக்கலாம். எழுதிக் கொடுத்த கடிதத்தைப் படிப்பது உரிமைப் பிரச்னையாகாது. எழுதிக் கொடுத்தது உண்மை, எழுதிக் கொடுத்ததைப் படித்தது உண்மை, எனவே இதிலே எந்தவிதமான உரிமைப் பிரச்னையும் வராது, ஆகவே இதிலே உரிமைப் பிரச்னைக்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர்கள் எழுதிக்கொடுத்த கடிதத்தைப் படித்ததாகச் சொன்னார்கள். அதிலே ஆட்சேபணை கிடையாது. அதை பப்ளிஷ் பண்ணலாமா? சட்டசபையிலே படிக்கலாமா? அவரிடமிருந்து அதற்கு பெர்மிஷன் வந்ததா? நான் எழுதிக்கொடுத்ததைச் சட்டசபையில் படிப்பதற்கு அனுமதி வழங்கியிருக்கிறேன் என்று அவர் சொல்லியிருக்கிறாரா? அவரையே கேட்டுவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஏதாவது அறிவிப்புச் செய்யவேண்டுமென்றால் சட்டசபை நடைபெற்றுகொண்டிருக்கின்ற நேரத்திலே சட்டசபையிலேதான் செய்யவேண்டுமென்ற மரபை நாம் ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறோம். அப்படிச் செய்யாவிட்டால் உங்களிடமிருந்து எவ்வளவு கண்டனங்கள் வரும் என்று எனக்குத் தெரியும். நான் டெல்லிக்குப் போய்வந்த நேரத்திலே மைசூர் மாநில அமைச்சரோடு பேசலாமா என்பதைப்பற்றி, செய்தியை நிருபர்களிடத்திலே சொல்லலாமா என்று நான் அவர்களிடம் கேட்டுக்கொண்டுதான் சொன்னேன். ஏனென்றால் எதிர்க் கட்சித் தலைவர்களையெல்லாம் கலந்துகொண்டுதான் முடிவு எடுத்திருக்கிறோம். அதைப்பற்றிச் சட்டசபையிலே அறிவிக்கவேண்டுமா அல்லது நிருபர்களிடத்திலே சொல்லிவிடலாமா என்று எதிர்க்கட்சித் தலைவரை நான் கேட்ட நேரத்திலே, இது சாதாரண விஷயம் சொல்லிவிடலாம் என்று சொன்னார்கள். அதற்குக்கூட உங்களிடம் அனுமதி பெற்றுத்தான் சொன்னேன். 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு அவர்கள் ஒப்புக்கொண்டால் சந்திக்கலாம் என்பதைப்பற்றி அவர்களுக்கு தரக்கூடிய மதிப்பு, தரப்பட வேண்டிய மதிப்பு, தந்தாகவேண்டிய மதிப்பு என்ற முறையிலே கேட்டுக்கொண்டுதான் செய்யப்பட்டிருக்கிறது. பத்தாயிரம் பேர்களை விடுதலை செய்யக்கூடிய விஷயம் என்பதால்தான் சட்ட-

சபையிலே சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. "ஏன் விடுதலை செய்கிறார்கள்?" என்று கேட்டால் என்ன செய்வது என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்பதைச் சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திரு. சுப்பையா அவர்கள் அதற்கு அனுமதி கொடுத்தார்களா என்பதை அவர்களையே கேட்டுவிடலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது கான்பிடன்ஷியல் என்று போடவில்லை. சட்டசபையிலே கொடுக்கக் கூடாது என்று அவர் சொல்லவில்லை. ரகசியமாக விடுதலை செய்யவேண்டுமென்று சொல்லக்கூடிய அளவுக்கு அவர் தாழ்மை மனப்பான்மை படைத்தவரல்ல. துணிச்சல் உள்ளவர். அந்தக் கட்சியிலே வந்த உரிமைப் பிரச்னையைச் சமாளிக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்னையின்மீது தாங்கள் தீர்ப்புக் கொடுப்பதற்கு முன்னால் மற்றக் கட்சிகளுக்கு தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு சில சமயங்களில் வாய்ப்புக்கொடுக்கும் முறை முன்னாலே பின்பற்றப்பட்டிருக்கிறது. எனவே அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை, இல்லை. அப்படி இல்லை. நம்முடைய சுப்பையா அவர்கள் கொடுத்திருக்கிற உரிமைப் பிரச்னையை இரண்டு வகைகளிலே ஆராயவேண்டும். எப்படி உரிமை மீறிய நிகழ்ச்சி வரும் என்பதற்கு லோக்சபையிலே தெளிவான வழிகாட்டி இருக்கிறது. 1966-லே

'It is well established and recognised that any attempt by improper means, e.g., intimidation, threats or coercion, to influence Members of Parliament in their Parliamentary conduct is a breach of privilege and contempt of the House . . . .'

என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது அமைச்சர் மாதவன் அவர்கள் கடிதம் வாங்கிய முறையில் எந்தவிதமான வற்புறுத்தலோ அதிகாரத்தைக் காட்டியதோ இருப்பதாகக் கூறவில்லை. ஆகவே அப்படிப் பட்ட நிகழ்ச்சியில்லை என்பது முதலிலே தெளிவாகிறது. இரண்டாவதாக அவர் கொடுத்த கடிதம் இங்கே திருத்தி வெளியிடப்பட்டதா என்றால் அதுவும் இல்லை. ஆகவே, இந்த நிலைமையும் தெளிவாகிறது. இந்த நிலைமையை யொட்டி எந்தவிதமான உரிமை மீறிய நிலைமையும் இல்லை என்பது தெளிவாகிறது.

'in their Parliamentary conduct is a breach of privilege . . '

என்று இருக்கிறது. திரு. சுப்பையா அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே ஆற்றவேண்டிய பணிபற்றியது அல்ல அது, அவர்களுடைய அரசியல் கட்சி பற்றிய நிகழ்ச்சி. அப்படி ஏதாவது நடந்திருந்தால் அது இந்த அவையின் உரிமையை மீறிய நிகழ்ச்சியாகாது. சட்டமன்றத்திலே ஆற்றவேண்டிய பணிகளிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்பட்டால் உரிமை மீறிய நிகழ்ச்சி ஆகும். ஆகவே இதன் காரணமாக, எந்தவிதமான உரிமையும் மீறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



(ஆ) நவசக்தி நாளிதழ் தவறான தகவல் வெளியிட்டது குறித்து.

(இ) நவசக்தி நாளிதழ் பேரவை நிகழ்ச்சிகளைத் திரித்தும், ஒரு பகுதியை மட்டும் வெளியிட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. வீராசாமி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை அவர் இப்பொழுது விளக்கலாம்.

THIRU N. VEERASWAMI : Mr. Speaker, Sir, I seek your consent to raise the following question of privilege under rule 184 of the Assembly Rules, namely, the publication of proceedings of the House under the caption

"தவறான தகவல் தருகிறார் நெடுஞ்செழியன்"

in the issue, dated 9th September 1970 of 'Navasakthi'.

It has been stated in the publication that the Hon'ble Minister for Education has given a misleading information and ascribes motive and that he has done so because the concerned person is a near relative of the Education Minister and a close friend of the Chief Minister and thereby casts redection on the Members of the House.

THIRU N. VEERASWAMI : Sir, under Rule 184 of the Assembly Rules, I give notice of my intention to raise a matter of privilege, namely, in regard to the publication in the Tamil Daily 'Navasakthi', dated 9th September 1970 of a garbled or partial report of the proceedings of the Legislative Assembly, dated 8th September 1970.

While the text of the speech made by the Hon'ble Member Thiru T. Martin in regard to the alleged sale of gunny bags has been fully published in the above issue, whereas the statement made by the Hon'ble the Minister for Food and Commercial Taxes in reply thereto has not been published.

As publication of garbled or partial report of proceedings with intent to injure individuals has been treated as breach of privilege, I request you to kindly permit me to raise the matter in the House.

தலைவரவர்களே, இந்த மன்றத்தில் இரண்டு நாட்களாக இந்த ஆட்சியின் மீது நம்பிக்கையில்லை என்று எதிர்க்கட்சி கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தின் மீது விவாதங்கள் நடைபெறும் நேரத்தில் பல உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். அதில் உறுப்பினர் திரு. ராமச்சந்திர துரை அவர்கள் பேசுகின்ற நேரத்தில், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் மீது மாசு கற்பிக்கும் வகையில் ஒரு செய்தியைச் சொன்னார்கள். நாகப்பட்டினம் தாலூக்கா கீவளூரில் உள்ள ஒரு உயர்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு ஏதோ தவறான தேர்ச்சி கொடுக்கப்பட்டது என்று குற்றம் சாட்டினார்கள். இப்படிப் பட்ட குற்றச்சாட்டு இந்த மன்றத்திற்கு வெளியிலேயும் சொல்லப்பட்டது. அப்படிச் சொல்லப்பட்ட நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள், ஒரு

கூட்டத்திலே பேசும்பொழுது தெளிவாகக் கூறினார்கள், அப்படி எந்தத் தவறும் நடைபெறவில்லை, அப்படி நடந்திருக்குமானால் தகுந்த நடவடிக்கை எடுப்போம் என்று கூறினார்கள்.

அவர் சொன்ன வாக்குறுதிப்படி, மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் அதிகாரிகள் அதைப்பற்றி பரிசீலனை செய்யும்படி உத்தரவிட்டார்கள். அதிகாரிகள் அங்கு சென்றார்கள். அங்கு நடந்தவைகளைப்பற்றித் தகவல் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமச் சந்திரதுரை அவர்கள் இந்த மன்றத்திலே பேசுகின்ற நேரத்தில், மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் விளக்கம் தந்தார்கள். அப்படி எந்தக் காரணத்தைக் கொண்டும், எந்த அடிப்படையிலும் தவறுகள் நடைபெறவில்லை என்றும், அங்கு என்ன நடந்தது என்றும் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஒவ்வொரு பள்ளியிலும் இதற்கு முன்னால் இருந்த ஆட்சியிலும் நடைபெற்றிருக்கிறது என்று அந்த விதிமுறைகளை விளக்கிச் சொன்ன நேரத்தில், அதை வெளியிடும் பத்திரிகைள், அமைச்சர்களுக்கு மாசு கற்பிக்கும் நோக்கத்தில், அதைத் திரித்துக் கூறவேண்டுமென்ற அடிப்படையில், இந்த அரசாங்கத்திற்குக் களங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சில செய்திகளை வெளியிடும் நேரத்தில், குற்றச்சாட்டுக்குப் பதில் சொன்ன கல்வி அமைச்சர் சபைக்குத் தவறான சில தகவல்களைக் கொடுத்திருக்கிறார் என்று வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்திலே தகவல் கொடுக்கப்படுவதை ஒரு தவறு என்று சுட்டிக்காட்டியிருப்பது உள்ளபடியே உரிமை மீறிய செயலாகும். அதற்கும் மேலாக, மாண்புமிகு கல்வியமைச்சரவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கும் பொதுமக்களிடையே மாசு கற்பிக்கும் வகையில் இன்னொரு கட்டத்தில், சம்பந்தப்பட்ட தி.மு.க. செயலாளர் கல்வியமைச்சர் நெடுஞ்செழியனுக்கு நெருங்கிய உறவினர் என்பதும் முதல்வர் கருணாநிதிக்கு ஆப்த நண்பர் என்பதும் கவனிக்கத் தக்கது என்று பிரசுரித்துள்ளது. உள்ளபடியே இல்லாத ஒன்றை இட்டுக்கட்டி, நடைபெறாத நிகழ்ச்சியை நடந்ததாகச் சொல்லி, மக்கள் மத்தியிலே தவறான எண்ணத்தை உண்டு பண்ண வேண்டுமென்று, தவறான தகவல்கொடுத்த நவசக்தி மீது உரிமைப் பிரச்னை எழுந்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், நேற்று இந்த மன்றத்தில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்மீது வேறொரு பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் எழுப்பினார்கள். உணவு இலாக்காவில் பல தவறுகள் நடந்துவிட்டன என்று சொன்னார்கள். அதைப்பற்றிப் பேசும்நேரத்தில் ஆதாரங்களோடு சொல்ல வேண்டுமென்றுகூடச் சொன்னார்கள். அதைப்பற்றி இந்தப் பத்திரிகை, தி.மு.க. நிர்வாகத்தில் உணவு இலாகாவில் ஊழலோ ஊழல் கோணிகள் விற்பனையிலும் கொள்ளையோ கொள்ளை என்று தலையங்கமிட்டு இந்தச் செய்தியைப் பிரசுரித்திருக்கிறது. இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் தன்னிடத்திலே உத்தரவு இருப்பதாகச் சொல்லி படித்த நேரத்திலே, மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் விளக்கம் சொல்வதைப்போல், என் நினைவு சரியாக இருக்குமானால் என்று சொல்லி, தவறான தகவலைத் திருத்திக் கொள்ள வேண்டும். மக்கள் மத்தியிலே போய்ப் பரவக் கூடாது என்ற அந்த நல்லெண்ணத்தில் விளக்கம் அளித்தார்கள்.





உடனே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஆவேசப்பட்டு, இருக்கலாம், போகலாம் என்று ஏன் சொல்ல வேண்டுமென்று குறுக்கிட்டுச் சொன்னார்கள். உடனே மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் ஓடோடிச் சென்று தகவல்களைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். மைலோ விற்றதிலே முறைப்படிதான் விற்கப்பட்டது, சட்டப்படிதான் விற்கப்பட்டது, எந்தத் தவறும் நடைபெறவில்லை, டெண்டர் வரவழைக்கப்படவில்லை என்பது தவறு, டெண்டர் வரவழைத்தோம் அது குறைந்த விலைக்கு வந்தது என்றெல்லாம் விளக்கம் தந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பத்திரிகையில் இங்கே சொல்லப்பட்ட அந்தக் குற்றச்சாட்டுகளைப் பிரசுரிப்பதில் நமக்கு எந்தவிதமான ஆட்சேபணையுமில்லை. ஆனால் அமைச்சர்கள்மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்கள், புகார்கள் கூறும் நேரத்தில் அந்தத் தகவல்களைப் போடும்நேரத்தில், அதற்கு அமைச்சர்கள் கொடுக்கும் விளக்கத்தையும், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு என்ன பதில் கொடுத்தார்கள் என்று அவைகளையும் பிரசுரித்திருந்தால் மக்கள் அதை ஏற்றுக்கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட தவறான தகவலைக் கொடுத்தால் பத்திரிகை மீது நம்பிக்கையில்லாமல் இருக்கக்கூடும். எனவே, அமைச்சர் அதற்குப் பதில் சொன்ன அந்தப் பகுதியை, அமைச்சர் சொன்ன பதிலை, கொடுத்த அந்த அறிக்கையைப் பிரசுரிக்காமலிருந்ததால் இந்தப் பத்திரிகை மீது உரிமை மீறிய செயல் இருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட செயல்களினால், திருத்திக்கூறி பப்ளிஷ் செய்வதெல்லாம் தவறு என்று சொல்லி, நாம் எந்த விதிமுறையை இந்தச் சட்டமன்றத்தில் பயன்படுத்துகிறோமோ அந்த மேஸ் பார்லிமெண்டரி பிராக்டிஸ் புத்தகத்திலே மிக விளக்கமாக, 118-வது பக்கத்திலே

Analogous to the publication of libels upon either House is the publication of false or perverted or of partial and injurious reports of debates or proceedings of either House or committees of either House or misrepresentations of the speeches of particular members.

என்று சொல்லிவிட்டு இந்தத் தவறான தகவல் தருதல், திரித்துக் கூறுவது போன்ற செய்திகளை வெளியிடக்கூடாது என்பதற்கும் சொல்லியிருக்கிறார்கள். 126 பக்கத்திலே

Wilful misrepresentation of the proceedings of Members is an offence of the same character as a libel.

On 22nd April 1699 the Commons resolved, " That the publishing the names of Members of this House and reflecting upon them and misrepresenting their proceedings in Parliament, is a breach of the privilege of this House and destructive of the freedom of Parliament ".

என்று சொல்லி நாம் எந்த விதிமுறைகளைப் பயன்படுத்துகிறோமோ அந்த மேஸ் பார்லிமெண்டரி பிராக்டிஸ் புத்தகத்திலே விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்தப் பத்திரிகை, இந்த ஆட்சியின்மீது மாசு கற்பிக்க வேண்டும், அமைச்சர்கள் மீது களங்கத்தை ஏற்படுத்த வேண்டும், இந்த மன்றத்திலே நடைபெறும் தகவலைத் திரித்துக்கூற வேண்டும், சட்டமன்றத்தை அவமதிக்க

Chingleput which have been cultivated and suppose a newspaper publishes that the Hon. Minister has said that there were only 500 acres in Chingleput which have been cultivated, if such a factual error has been committed by any newspaper, then we can take that paper to task by means of a privilege motion in this House.

But here, let us see the context in which this motion has been brought. What has happened? I do not hold any brief for that paper for the manner in which it has reported or for the manner in which it has reported only one aspect and not reproduced the reply of the Hon. Minister. It is unfortunate. But we must consider that there are other papers also which do not publish the whole thing. Mr. Vinayakam mentioned about 'Murasoli' and said how only accusation against him had been printed and not his reply. Unfortunately, I find one tendency. Whenever a reply is given by Government putting the Opposition into discomfiture, that reply is published. But when Opposition puts the Government in discomfiture, that reply is not published. That is what we find. If the Hon. Member were to expect all of us to peruse all the papers like Dinathanthi, Malaimurasu, etc., and see whether they had reported me properly and if not, bring in a motion against them, then I say we will have no time for all those things. They are all party papers. Even the Hon. Minister for Finance has a paper which gives its opinion. What I say is, they are entitled to give their party's view.

We must note one thing here. If we are doing like this, we will be eroding into the rights of the Press. That is what I want this House to note. That is the most important point. On a similar occasion previously I have stated that the fourth estate should have enough freedom and that freedom should not be eroded. If that freedom is eroded, by any action of ours, it is a risky thing (interruption). Let me complete. This is an important thing. There is a resolution before the House and I must be given sufficient time to speak on this important issue. May I request you, Hon. Speaker, to quote any single instance in any part of the country, any part of the world, where instructions have been given by the Hon. Speaker to the press to report in a particular manner? Then it will be interesting for us. You can enlighten us on that point.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த இடத்திலாவது பேரவைத் தலைவர் இப்படித்தான் வெளியிட வேண்டுமென்று பத்திரிகையாளர்களுக்கு ஆணையிட வழி இருக்கிறதா என்று கேட்டார்கள். விதிகளில் தெளிவாக இருக்கிறது. இந்த அவையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை இப்படித்தான் வெளியிட வேண்டுமென்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன.

இரண்டாவது, பத்திரிகைகளுடைய உரிமை பற்றிக் கூறினார்கள். பத்திரிகைகளின் உரிமையில் தலையிடுவதாக முன்பேகூட ஒரு முறை கூறியிருக்கிறார்கள். பத்திரிகையின் உரிமையில் யாரும் தலையிடவில்லை. அவையில்



நடைபெறும் நிகழ்ச்சிகளைப் போடுகின்ற நேரத்தில், நீங்கள் இப்படித்தான் போட வேண்டும். அப்படிப் போடக் கூடாது என்று எந்த நேரத்திலும், பேரவைத் தலைமை ஆணையிட்டது இல்லை. செய்திகளைப் படிக்கின்ற நேரத்தில் படிக்கின்றவர்களுடைய உள்ளத்திலே உறுப்பினர்களைப் பற்றியோ, அமைச்சர்களைப் பற்றியோ தவறான கருத்து வரக்கூடிய நிலை---நடைபெற்றது ஒன்றாக இருக்க, வெளியிடும் செய்தி காரணமாகப் படிக்கின்றவர்கள் உள்ளத்தில் அமைச்சர்களைப் பற்றியோ, உறுப்பினர்களைப் பற்றியோ தவறான கருத்து உண்டாகும் வகையில் வெளியிடுவது உரிமை மீறிய பிரச்சினை. அப்படிப்பட்ட முறையில் வெளியிடக் கூடாது என்றுதான் பேரவைத் தலைவர் ஆணையிட்டிருக்கிறாரே தவிர, இப்படித்தான் செய்திகளை வெளியிட வேண்டுமென்று எப்போதும் ஆணையிட்டது கிடையாது. பத்திரிகைகளுக்கு அதிலே உரிமை இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்த உரிமை எல்லோருக்கும் வேண்டுமல்லவா? 'கருத்திருமன் பேச கூட்டம் கலைந்தது' என்று தினத்தந்தி பத்திரிக்கையில் வெளியிடுகிறார்கள். அது சரியா ? பாக்கி இருக்கும் பத்திரிகைகளுக்குத் தர்ம, நியாயம் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து அது உரிமை மீறியதா இல்லையா என்பதற்குத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த முறை எல்லாப் பத்திரிகைகளுக்கும் சொல்லுகிறேன். பத்திரிகை அறத்தை எல்லாப் பத்திரிகைகளும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 'கருத்திருமன் பேச கூட்டம் கலைந்தது' என்று சட்டசபை நிகழ்ச்சி பற்றி எந்தப் பத்திரிகையிலும் போட்டதாகத் தெரியவில்லை. அப்படிப் போட்டிருந்தால் உரிமைப் பிரச்னையை எழுப்ப அவர்களுக்கு உரிமை இருக்கிறது. வெளியிலே நடைபெற்ற விஷயங்களைப் பற்றி எவ்வளவோ எழுதுகிறார்கள். எவ்வளவோ விவகாரங்கள் வருகின்றன, எவ்வளவோ விமர்சனங்கள் செய்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதைப் போல் சட்டசபை விஷயங்களைப் பற்றிக்கூட யார் யார் எவ்வளவு திறமையாக நடந்து கொண்டார்கள், யார் யார் திறமையாக வாதிட்டார்கள், யார் யார் எப்படி எப்படி பதில் சொன்னார்கள் என்பதைப் பற்றியெல்லாம் கூட பத்திரிகைகளில் விமர்சனம் செய்கிறார்கள். அதில் தலையிட நாங்களோ அல்லது சபாநாயகர் அவர்களோ நிச்சயமாக விரும்ப மாட்டோம். அது அவரவர்கள் உரிமை.

ஒரு பெரிய குற்றச்சாட்டு ஒரு அமைச்சர்மீது சாட்டப்படுகிற நேரத்தில் அதற்கு அமைச்சர் அவர்கள் அளிக்கிற விளக்கத்தையும் அதோடு அந்தப் பத்திரிகையில் போடவேண்டும், அது எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் சரி, அது எங்கள் கட்சிப் பத்திரிகையாக இருந்தாலும் சரி அல்லது உங்கள் கட்சிப் பத்திரிகையாக இருந்தாலும் சரி அவற்றையும் சேர்த்து வெளியிட வேண்டும். நாவலர் அவர்கள், கல்வி அமைச்சர் அவர்கள் தந்த ஒரு விளக்கம், அது இந்தச் சபைக்குத் தவறாகத் தரப்பட்டுள்ள விளக்கம் என்று ஒரு பத்திரிகை வெளியிடுவது முறையா? என்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சட்டசபைக் கூட்டத்தைப் பற்றியல்ல, வெளியே நடந்ததைப் பற்றி என்று சொன்னார்கள். கடைசியாக நான் தான் பேசினேன். நான் பேசிய பிறகு கூட்டம் கலைகிறது. அதை அவர்கள் அப்படிப் போடுகிறார்கள். 'கருத்திருமன் பேசக் கூட்டம் கலைந்தது' என்று போட்டிருக்கிறார்கள். இந்தப் பத்திரிகைகளில் விளம்பரம் வந்து எனக்கு ஒன்றும் ஆக வேண்டியதில்லை, மக்களைச் சந்திக்க நான் தயாராயிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிற நேரத்தில் மட்டுந்தான் அல்லது கண்டனத் தீர்மானம் வருகிற நேரத்தில் மட்டும்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடைசியாகப் பேசுவார்கள். அப்போதும்கூட அமைச்சர்கள் குறுக்கிட்டு கடைசியாக உரையாற்ற இடமிருக்கிறது. ஆகவே, எப்போதும் நான்தான் கடைசியாகப் பேசுவது என்று சொல்வது சரியல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் . . . .

மாண்புமிகு திரு. மு கருணாநிதி : சபாநாயகர் அவர்கள் கூட்டம் கலைந்தது என்று அறிவித்த பிறகு கருத்திருமன் என்னுடன் பேசுகிறார்கள், அது உண்மைதான்.

MR. SPEAKER : "So long as the debates are correctly reported, the orders which prohibit their publication are not enforced; but when they are reported *mala fidde*, the publishers of newspapers are liable to punishment . . ."

கீழே நிகழ்ச்சிகள் நிறைய இருக்கின்றன. வேண்டுமானால் பார்த்துக் கொள்ளலாம்.

DR. H. V. HANDE : Sir, I will finish my point in two minutes. Just now the Hon. Speaker has probably quoted from May's Parliamentary Practice. The Hon. Speaker has got powers to punish *mala fide* reporting. Therefore, the question now is . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "Mala fide" - -யா இல்லையா என்று பார்த்து அது உரிமையை மீறியதாகும், உரிமையை மீறி இருக்கிறது என்று தலைவர் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து உரிமைக் குழு முடிவு செய்யட்டும். பிறகு அதை விவாதிக்கட்டும். ஆகவே நான் ஒரு தீர்ப்பு கொடுத்துவிட்ட பிறகு அதன்மீது பேசக்கூடாது.

DR. H. V. HANDE : The Hon. Speaker must keep a vigilant eye. The point is . . .

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர். தலைவர் அவர்கள் தீர்ப்பளித்து விட்ட பிறகு, தீர்ப்பளித்து விட்டேன் என்று சொன்ன பிறகு மீண்டும் மீண்டும் ஒரு உறுப்பினர் அதைப் பற்றிப் பேசுவது சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள், தீர்மானத்தின் மீது பேசுகிறார்கள்.



DR. H. V. HANDE : Sir, I am not competent at all to discuss the judgment of the Hon. Speaker. Now, it is only on the motion moved by my Hon. friend, Thiru Rama Arangannal that I would suggest a practical solution. There are a number of party papers which are trying to misrepresent things and it is the duty of the Hon. Speaker to punish . . .

MR. SPEAKER : It is not the duty of the Speaker.

உரிமை மீறிய நிகழ்ச்சி இருந்தால் உறுப்பினர் அவர்கள் அதை என் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமே தவிர, நாட்டிலே வருகிற பத்திரிகைகள் எல்லாவற்றையும் பார்த்து எங்கெங்கே உரிமை மீறப்பட்டிருக்கிறது என்று பார்ப்பது பேரவைத் தலைவரின் வேலை அல்ல, அது உறுப்பினர்களின் கடமை. அப்படிக் கொண்டு வந்தால் உரிமை மீறப்பட்டிருக்கிறதா இல்லையா என்று பார்த்து முடிவு செய்வேன்.

DR. H. V. HANDE : Even now to-day what is the position? Supposing a paper publishes only the statement of the Hon. Minister and not my speech.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைமுன் முன்மொழியப் பட்டிருக்கும் தீர்மானத்தையொட்டிப் பேசுங்கள்.

DR. H. V. HANDE : Sir, it is connected with the motion. Supposing a paper publishes tomorrow only the statement of the Hon. Chief Minister and the hon. the Leader of the Opposition and not my speech. The Speaker may construe it as a sort of *mala fide* intention. But my point is that this House is not armed with sufficient powers to dicate to the Press what to report and what not to report. That is my submission.

* திரு. என். சங்கரய்யா : இப்போது உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தைப் பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த நாட்டில் இன்று பாராளுமன்ற நிகழ்ச்சிகளைப் பற்றி வெளியிடும் நேரத்தில் பாராளுமன்றத்தில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளை வெளியிடும் பத்திரிகை நிருபர்களுக்கு அதிக சுதந்திரம் அளிக்கப்பட்டிருப்பதாக அங்குள்ள நிருபர்கள் கூறுகிறார்கள். பாராளுமன்றத்தில் நடக்கக் கூடிய நிகழ்ச்சிகளை அவர்கள் எவ்வாறு விமர்சிக்கிறார்களோ அதே முறையில்தான் செய்திகளை அவர்கள் வெளியிடுகிறார்கள். அங்கு நடந்தவற்றை அப்படியே கூற வேண்டுமென்ற நிபந்தனை அவர்களுக்கில்லை. உதாரணமாக, ஹிந்துவில் ஜி. கே. ரெட்டி அவர்கள்தான் செய்திகளை—அங்கு நடந்ததை அப்படியே அவர்கள் கூறவில்லை. அவர்கள் எப்படி விமர்சிக்கிறார்களோ அப்படித்தான் செய்திகள் பிரசுரிக்கப் படுகின்றன. அந்த முறையில் நாட்டில் இன்று பெரிய பத்திரிகைகள், சிறிய பத்திரிகைகள் பல இருக்கின்றன. கட்சி சார்பான பத்திரிகைகளும் இருக்கின்றன. ஒரு உறுப்பினர் பேசினால், இவரும் பேசினார் என்று ஒரே வார்த்தையில் போட்டுவிடுகிறார்கள், அதுவும் உண்மைதான். ஆகவே இந்த அடிப்படையில் போடவேண்டும் என்று ஒரு கோட்பாட்டை ஏற்றுக்கொண்டாலொழிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பல்வேறு பத்திரிகைகள் பற்றிய உரிமை மீறல்.

பிரச்னையை இங்கு கிளப்பவேண்டிவரும். ஆகவே அவர்களுடன் கலந்து பேசி சட்டமன்றத்தில் நடக்கிற விஷயங்கள் பற்றி செய்திகள் வெளியிடும்போது இந்த விதமாக இருக்கவேண்டும் என்றதொரு கோட்பாட்டை உருவாக்கி பிறகு அது மீறப்பட்டால் அதைப் பற்றிக் கவனிப்பது நன்றாகயிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்போது பத்திரிகைகளுக்கு இருக்கிற சுதந்திரம் அப்படியே இருக்கட்டும். இப்படித்தான் வெளியிடவேண்டும் சட்டசபை நிகழ்ச்சிகளை என்று நாம் வழி காட்டத் தேவையில்லை. நான் இந்த விஷயத்தில் எதிர்பார்ப்பதெல்லாம் நடைபெறும் நிகழ்ச்சிகளைப்பற்றி வெளியிடும்போது அதைப் படிக்கிறவர்களின் உள்ளங்களில் ஒரு குறிப்பிட்ட உறுப்பினரை அல்லது ஒரு குறிப்பிட்ட அமைச்சரைப்பற்றித் தவறான எண்ணம் வரக்கூடிய நிலையில் வெளியிடக் கூடாது. ஒரே வார்த்தையில் இவரும் பேசினார் என்று போடுவதில் எந்தவிதமான உரிமையும் மீறி விடவில்லை. எங்களுக்கு இடம் இல்லை என்று சொல்லலாம். அது எந்த விதமான மாசையும் உண்டாக்கிவிடாது. ஒரு உறுப்பினர் குற்றஞ்சாட்டிச் சொல்லும்போது அமைச்சர் அவர்கள் அதற்கு விடை அளித்திருக்கும் நிலையில் அந்தக் குற்றச்சாட்டை மட்டும் பெரிதாகப் போட்டுவிட்டால் அமைச்சர் அவர்கள் விடை அளிக்கவில்லை, இந்தத் தவறை அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்ற எண்ணம் படிக்கிறவர்களின் உள்ளத்தில் ஏற்படும். ஆகவே, இரண்டையும் போடவேண்டும். அவர்கள் எப்படிப் போட வேண்டும் என்பதைப்பற்றி வழிகாட்ட வேண்டியதில்லை. அவர்களுக்குள்ள உரிமை அப்படியே இருக்கட்டும்.

THIRU K. VINAYAKAM : Please hear our point of view, I am suggesting a formula. One accusation has been made by one hon. Member in this House and the concerned Hon. Minister has rebutted it properly. But that was not reported by one party paper. Now I also want to bring it to your notice that the motion before the House could be taken up after hearing what I have got to say in regard to this matter. For instance, 'Murasoli' did not publish the personal explanation given be me in regard to the charge unjustly levelled by one hon. Member belonging to that party's paper. There are papers who do not publish the proceedings of this House impartially. So, I suggest that your sermon just now given to the Press is enough. Why should we take action against that paper which has not wilfully committed any mistake. I suggest that the motion may be withdrawn and your suggestion given to the press may be taken note of for future guidance. If it is not withdrawn, we will be compelled to proceed with the next logical step, namely, demand of a poll.

**திரு. க. இராமமூர்த்தி**: Sir, on a point of Order. இந்த உரிமைப் பிரச்னையைப் பொறுத்தவரையில் எல்லா நிகழ்ச்சிகளையும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இதிலே Point of Order என்ன இருக்கிறது?



**திரு. க. இராமமூர்த்தி** : இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரைக்கும் பேசிய பேச்சு அதற்கு அமைச்சர்களின் பதில் இரண்டும் வெளியிடப் பட வேண்டுமென்ற நிலைமை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இதிலே என்ன point of Order இருக்கிறது?

**திரு. க. இராமமூர்த்தி** : இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஒருவர் பேசி முடித்த 2 மணி நேரத்திற்குப் பிறகு அமைச்சர் பதில் கூறுகிறார். அதற்குள்ளாக நிருபர்கள் பத்திரிகைகளுக்கு ரிபோர்ட் அனுப்பி விடுகிறார்கள். .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இதிலே point of Order இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல்** : பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய தீர்மானத்தைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் கொண்டு இருக்கிற கருத்து பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

பத்திரிகை சுதந்திரம், பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம் இவைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எங்களுடைய கட்சிக்கு இல்லை என்று எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இங்கே நடைபெறுகிற டிபேட் குறிப்புகளை பத்திரிக்கையில் வெளியிடுவது பற்றி நமக்கு ஆட்சேபனை இல்லை. நேற்றையதினம் கூட ஒரு பிரபலமான பத்திரிகையில் 'மினிஸ்டரின் மாரல் டர்பிடியுட்' என்று போட்டு இருந்தார்கள். அதற்காகக் கூட உரிமைப் பிரச்னை கொண்டு வரவில்லை. அந்தப் பத்திரிகையில் வந்து இருக்கும் விஷயம் சபையில் நடந்த ஒரு நிகழ்ச்சி, அந்த நிகழ்ச்சியை உள் நோக்கம் கொண்டு . . .

**திரு. க. இராமமூர்த்தி** : நான் மட்டும் பேசக்கூடாது என்றால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவர் தீர்மானம் கொண்டு வந்ததால் அவருக்கு பேச நேரம் கொடுத்தேன். உங்கள் தலைவர் பேசிவிட்டார்.

**திரு. இராம. அரங்கண்ணல்** : நண்பர் இராமமூர்த்தி அவர்கள் எதற்கெடுத்தாலும் அவசரப்படுகிறார்கள்: நான் தீர்மானத்தை மூவ் செய்து இருக்கிறேன். தலைவர் பேசி இருக்கிறார். நான் பேசுகிறேன்.

ஒரு உள் நோக்கத்தோடு இந்தச் செய்தி வெளியிடப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறேனே ஒழிய எப்படி வேண்டுமானாலும் எழுதட்டும். அதனைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. அக்கறைப்படுவது இல்லை. சபையின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறேனே ஒழிய பத்திரிகை சுதந்திரத்தைப் பறிப்பதற்காக அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. இராம. அரங்கண்ணல் அவர்களின் தீர்மானத்தை இப்போது வாக்கெடுப்புக்கு விடுகிறேன்.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"That the two matters referred to by the Hon. Member Thiru N. Veeraswami be referred to the Committee of Privileges."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

DR. H. V. HANDE : We want division.

(மணி அடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது திரு. இராம. அரங்கண்ணல் அவர்களுடைய தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது. தீர்மானத்தை ஏற்போர் எழுந்து நிற்க வேண்டுகிறேன் . . . தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்க வேண்டுகிறேன். (தீர்மானத்தை ஏற்போரும், மறுப்போரும் தனித்தனியே எழுந்து நின்று இருக்கைகளில் அமர்ந்த பிறகு, தீர்மானத்தை ஏற்போரின் எண்ணிக்கையைக் காட்டிலும், மறுப்போரின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பாராஜா :** நாங்கள் 4 பேர் நியூட்ரலாக இருக்கிறோமே அறிவிக்க வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான்கு உறுப்பினர்கள் நடுநிலைமை வகிக்கின்றனர் என அறிவிக்கின்றேன்.

### 3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### வெள்ளர்கோடா கிராமத்தில் நக்சல்பாரிகள் ஒரு வீட்டில் புகுந்து 5 பேர்களைக் கொலை செய்ததுபற்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், க. இராமமூர்த்தி, ஜே. ஜேம்ஸ் ஆகிய மூவரும், நேற்றைய தினம் கோளஎல்லைக்கு அருகில் பிச்சிர்காடு எஸ்டேட் அருகில் வெள்ளர்கோடா என்னும் கிராமத்தில் 8—9—1970 அன்று ஒரு வீட்டில் ஆயுதம் தாங்கிய நக்சல்பாரிகள் புகுந்து 3 குழந்தைகள் உள்பட 5 பேரைப் படுகொலை செய்த, இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை விவாதிப்பதற்காகப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று 42-வது விதியின்கீழ் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்கள். இப்போது அவையின் விவாதத்தில் இருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்மீது இது பற்றிக் கருத்து தெரிவிக்கும் வாய்ப்பு இருப்பதால் நான் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

### 4. அரசினர் தீர்மானம்

### விதி 41 (3) ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், 41-வது விதியின் (3)வது உட்பிரிவின் படி, அதாவது, ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



### 5. கவன ஈர்ப்பு

### (அ) சுந்தரராஜபுரம் கிராமத்தில் அரிசனங்களின் வீடுகள் தீயினால் எரிக்கப் பட்டதும், நிவாரண நடவடிக்கைகள் குறித்தும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை திரு. ஏ. அ. சுப்பாராஜா அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. ஏ. அ. சுப்பாராஜ :** தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். "இராமநாதபுரம் ஜில்லா இராஜபாளையம் சப்-தாலுகா சுந்தரராஜபுரம் கிராமத்தில் வசிக்கும் அரிசன மக்களது 122 வீடுகள் 23—8—1970-ல் தீயினால் எரிந்து அதனால் வீடுகளின்றித் தவிக்கும் அரிசன மக்களுக்கு கொடுக்கவேண்டிய உடனடி நிவாரணமும்; நிரந்தரமாக எளிதில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக்கொள்ள தக்காவிக் கடன் அளிப்பதும் பற்றி"

THIRU HON. THIRU K. A. MATHIALAGAN : A fire accident took place at about 2-30 p.m. on 23rd August 1970 in Sundararajapuram village of Rajapalayam sub-taluk, Ramanathapuram district. The fire was purely accidental. In the fire accident 117 houses belonging to the poor Harijans were destroyed by fire. Besides this, two grocery shops, one tailoring shop and one cattle shed were completely destroyed. There was no loss of human life, but five persons sustained minor injuries and were admitted in the Government hospital at Rajapalayam. Their condition is not serious and they are progressing now. Also, one cow, three goats and ten hens were burnt to death. The total loss is estimated at Rs 55,342.00. The Collector of Ramanathapuram sanctioned a sum of Rs. 9,120 towards cash and clothing relief to the 117 families affected by the fire accident.

The Deputy Tahsildar, Rajapalayam made local arrangements for free distribution of rice to the victims, whose houses were destroyed by fire. No proposal for the grant of Thakkavi loans to the fire affected victims, for the construction of permanent fire-proof tenements has been received by the Government.

The Collector of Ramanathapuram has also recommended the sanction of a sum of Rs. 1,260 as a special relief towards the payment of cash relief to the 42 families at the rate of Rs. 30 per house for re-thatching the roofs of their houses, which were dismantled as a precautionary method to arrest the spreading of fire and the matter is under consideration of the Government.

**திரு. ஏ. அ. சுப்பாராஜா :** தலைவரவர்களே, இந்த தக்காவி லோன் கொடுப்பது சம்பந்தமாக அங்கே பஞ்சாயத்திலே புல் பைனான்ஸ் ஸ்கீமாக இருந்தால்தான் கொடுப்பதற்கு இல்லை. ஸ்பெஷல் கேசாக இருந்தால் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அங்கே இருக்கும் அரிசன மக்கள் அன்றாடம்

உழைக்கக் கூடியவர்கள். குறைந்தபட்சம் ரூ. 1,000 கொடுத்தால்கூட நல்ல விதத்தில் சௌகரியமாக இருக்கும். அங்கே இதற்கு முன்பு ஸ்பெஷல் கேஸ் என்று சொல்லி பஞ்சாயத்திலே ரூ. 100, 200 தக்காவி லோன் கொடுத்திருக்கிருர்கள். தயவுசெய்து நிதி அமைச்சர் அவர்கள், ஏதாவது பரிகாரம் கொடுத்து தக்காவி போல் ஸ்பெஷல் கேஸாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அது அரசாங்கத்தைப் பொறுத்த பிரச்னை அல்ல. அது கொள்கை அளவில் உள்ள பிரச்னை. இப்படி தக்காவி லோன் கொடுக்க ஆரம்பித்தால் நிதி நிலைமை சரி இருக்காது. அப்படிக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இல்லை.

(ஆ) பொத்தக்காலன்விளை கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்தினுல் மக்கள் பாதிக்கப்பட்டது குறித்து.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தாலுக்காவில் சாத்தான்குளம் தொகுதியிலுள்ள பொத்தக்காலன்விளை கிராமத்தில் 26-8-1970-ல் பெரும் தீ விபத்து ஏற்பட்டு ஏராளமான வீடுகள் எரிந்தும், மிகுந்த பொருட் சேதம் ஏற்பட்டும் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்".

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, a fire accident took place at 10 a.m. on 26th August 1970 in Pothakalanvilai, hamlet of Santhavinallur village. Sathankulam sub-taluk, Tirunelveli district. The fire accident was purely accidental. In the fire accident, eight houses were destroyed. All the eight victims are reported to be coolies. There was no loss of human lives or cattle in the fire accident. The total estimated loss of the eight victims are reported to be Rs. 4,000. A cash grant of Rs. 80 has been sanctioned to each of the eight victims of the fire accident.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமத்தில் இந்தத் தீ விபத்தினுல் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் பெரும்பாலோர் அகதிகள். இலங்கையிலிருந்து இங்குவந்து பனைமரத் தொழிலை செய்யக்கூடியவர்கள் ரொம்ப அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினுல், சாதாரணமாக கொடுக்கக்கூடிய ரூ. 80 என்பதை கொஞ்சம் அதிகமாக்கி, இவர்கள் இலங்கையிலிருந்து வந்த அகதித் தொழிலாளர்களாக இருக்கிற காரணத்தை வைத்து, முதல் அமைச்சர் அவர்களின் க்ஷேமநல நிதி அல்லது வேறு நிதியிலிருந்து உதவி செய்வதற்கு நிதி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: We need not club the rehabilitation of Ceylon repatriates with the fire accident. We can consider it separately.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. எம். ராஜா அவர்கள் இருக்கையில் இல்லை. ஆகவே, அடுத்த தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறேன்.



(இ) இராஜபாளையம் ஸ்ரீ ஷண்முகர் மில்ஸ் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வாழ்வளிப்பது குறித்து

திரு. ஏ. அ. சுப்பராஜா: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் ஜில்லா, இராஜபாளையம் நகரிலுள்ள ஸ்ரீ சண்முகர் மில்ஸ் என்ற நூற்பாலை 18-7-1970-ல் மூடப்பட்டதின் காரணமாக வேலையிழந்து தவிக்கும் 410 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வாழ்வளிப்பதற்கு அந்த மில்லை அவசரமாக திறக்கும்பொருட்டு அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, Sree Shanmugar Mills, Rajapalayam, is under closure with effect from 18th July 1970. Financial difficulties and labour troubles are stated to be the reasons for the closure. Even though the licensed capacity of the mills is, 13,200 spindles, the installed capacity is 10,156 spindles only.

The concerned officers discussed the case with the management and tried to persuade the management to revive the mill. But the management is not prepared in reopen the mills on the ground that the loss sustained during the last 6 years since the time they took the mills on lease in 1964, is as high as Rs. 15 lakhs, and that they are not in a position to pay even their Employees' State Insurance/Employees' Provident Fund contributions and electricity consumption charges. As there is no prospect of the mills being re-opened by the present management and as the workmen numbering nearly 400 have been thrown out of employment, the Government are examining whether the Government of India may be moved for an investigation of the affairs of the mill under the Industries (Development and Regulation) Act, 1951, and for taking over the mills under that Act.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரை கேட்டு அது வரும் வரையில் இவர்களுடைய வாழ்க்கை என்ன நிலையில் இருக்கும் என்று சொல்லமுடியாத சூழ்நிலையில் அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களோடு அரசாங்கம் பேசி, அரசாங்கமும் ஒத்துழைத்து பண உதவி செய்யப்படுமானுல், அவர்களே இருந்து நடத்துவதற்கு இசைவைத் தெரிவித்திருக்கிருர்கள். அப்படி இண்டரிமாக அரசாங்கமே ஓரளவுக்கு உதவி செய்து, அவர்களோடு பேசி அந்த மில்லை ஓட்டுகின்ற நிலையை ஏற்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த ஆலைக்குச் சொந்தக்காரர்களும், தொழிலாளர்களும் சேர்ந்து இப்படிப்பட்ட ஒருமித்த முடிவுக்கு வருவார்களேயானுல், அதைப்பற்றி பரிசீலிக்கலாம். அப்படியில்லை என்று சொல்லிவிட்டால், சட்டப்படி நடவடிக்கை எடுப்பது தவிர வேறு வழியில்லை.

### (ஈ) நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்திற்குமுன் நீக்கப்பட்ட தேனீ களப்பணியாளர் உண்ணா நோன்பு

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Local Administration to a matter of urgent public importance, namely, the hunger strike on 31st August 1970 at 10 a.m. before the Collectorate at Nagercoil by the retrenched Bee Fieldmen who were proposed to be appointed in the panchayats and panchayat Unions and such of those persons who are in possession of conductors licences and badges to be absorbed in the State Transport Department pursuant to Government Memo. No. 39503/E-67-68, Rural Development and Local Administration Department, dated 4th August 1969.

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் சிலவற்றில், தேனீ வளர்ப்பு நிறுவனங்கள் மூடப்பட்டதால், தேனீ களப்பணியாளர் பலர் வேலை நீக்கத்துக்குள்ளாயினர். வேலை வாய்ப்பிழந்த தேனீ களப்பணியாளர்களில் பள்ளியிறுதியாண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களை எழுத்தர்களாகவும், தேர்ச்சி பெறாதவர்களை இளநிலை எழுத்தாளர்களாகவும் மாற்று வேலை கொடுத்து நியமிக்க அரசு உத்தரவிட்டது. அரசினர் அளித்த இச்சலுகையை எல்லாப் பஞ்சாயத்து ஒன்றியங்களின் ஆணையர்கள், தேனீ களப்பாணியாளர்கள் கவனத்திற்கு கொண்டுவா கிராம வளர்ச்சி இயக்குநர் கோரப்பட்டார்.

கிராம வளர்ச்சி இயக்குநர் சில தேனீ களப்பாணியாளர்கள் நடத்துநர் லைசென்சும், சின்னமும் வைத்திருப்பதால் அவர்களை அரசினர் போக்கு வரத்துத் துறையில் நடத்துநர் வேலை கொடுக்கவேண்டுமென்று பரிந்துரைத்தார். அதன் பேரில் அரசு வேலை இழந்த தேனீ களப்பாணியார் களில் நடத்துநர் லைசென்சும், சின்னமும் உடையவர்களை வேலை தேடித்தரும் நிறுவனங்களில் பதிவு செய்து கொள்வதில், அவர்களுக்கு 3-வது இடம் கொடுக்கவும் அரசு உத்தரவிட்டது. கிராம வளர்ச்சி இயக்குநரும் இச்சலுகையை தேனீ களப்பாணியாளர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள், கவனத்திற்குக் கொண்டுவர கோரப்பட்டிருக்கிறார்.

அரசினரின் தொழில் உதவிச் சட்டத்தின் கீழ் தேனீ வளர்ப்புத் திட்டத்துக்கு ரூ. 2,000 வரை கடன் வழங்கப்படுகிறது. வேலை வாய்ப்பிழந்த தேனீ களப்பணியாளர் இந்த வாய்ப்பை பயன் படுத்திக்கொண்டு, தனியாக தேனீ விற்பனையாளர்களாகவும் என்றும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வோரின் விண்ணப்பங்களுக்கு, முதலிடம் கொடுக்கப்படவேண்டும் என்றும், தொழில் வணிக இயக்குநருக்கு உத்திரவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அரசினரின் இச்சலுகைகளை, வேலையிழந்த தேனீ களப்பணியாளர், ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்கள் ஆகியோரது கவனத்துக்கு கொண்டு வரவேண்டும் என்றும் கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் கோரப் பட்டிருக்கிறார்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த உண்ணா நோன்பு கைக்கொண்டவர்களை கைது செய்திருக்கிறார்கள் போலீஸார். அதன் மீது ஏதாவது தகவல்



வந்து, அதற்கு ஏதாவது நடவடிக்கை இந்த இலாகாவிலிருந்து எடுக்கப் பட்டிருக்கிறதா? அப்படியிருந்தால் அதைப்பற்றி விவரம் கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி:** இது பற்றிய தகவல் எதுவும் இப்பொழுது இல்லை.

### (உ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நில அடைமான வங்கிகள் விவசாயிகளுக்கு கடன் தொகைகள் அளிக்காததும் அரசு எடுத்துள்ள நடவடிக்கையும்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள நில அடைமான வங்கிகளில் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக விவசாயிகளால் கோரப்பட்ட கடன்கள் முறைப்படி அனுமதிக்கப்பட்டும், கடன் தொகை அளிக்கப்படாத நிலையில் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை பற்றிய அவசரப் பொது முக்கிய மான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து கடன்கள் வழங்குவதற்கு தமிழ்நாட்டி லிருக்கிற கூட்டுறவு மாநில நிலவள வங்கியிடம் நிதி வசதியின்மை ஒரு போதும் தடையாக இருந்ததில்லை. உண்மையில், கடன் வழங்கத் தன்னிடம் நிதி உபரியாக இருப்பதாகவே அவ்வப்பொழுது அம்மாநில வங்கி அறிவித்துள்ளது. இந்த மாநில வங்கி இந்த வருடம் ஏப்ரல் முதல் ஜூலை வரையில் ரூ. 3 கோடி 70 லட்சம் கடன் வழங்கியுள்ளது. இதில் 17 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நிலவள வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நிதி பற்றாக்குறை காரணமாக நிலவள வங்கி கடன் வழங்குவதை நிறுத்தியுள்ளது என்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வங்கிகள் உட்பட, எந்த வங்கியிடமிருந்தும் எவ்விதமான முறையீடும் கிடைக்கவில்லை. மாறாக, மாநில வங்கியிடமுள்ள ரூ. 3.5 கோடி ரொக்க வசதி பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அதோடு ரூ. 4.49 கோடி வரை நிதி வசதியும் இந்த வங்கிக்குக் கிடைக்கும். ஆக மொத்தம் 8 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு கடன் உதவியாக வினியோகம் செய்து கொண்டிருப்பதால், நடைமுறை விதிகளைத் தளர்த்த வேண்டும் என்றும், கிராமப் புறங்களில் நில வள வங்கிகளைப் பெருக்கவும் சிறிய சிறிய விவசாயி களுக்கு கடன் உதவி கொடுக்கவும், நீர்ப்பாசன கூட்டுறவு சங்கங்கள் அமைக்கவும் அரசினர் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

**திரு. ஏ. அ. சுப்பையா:** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மாநில நிலவள வங்கியிடம் பணம் செலவழிக்க முடியாத நிலை என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையில், டி.டி.ஸி.-யில் கூட இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது, அவர்களுக்கு ரிசர்வ் பாங்கியிலிருந்து பணம் வரவில்லை என்று தான் நிலைமைகள் இருக்கின்றன. இப்பொழுது கொடுத்த தகவல்படி ஒரு வருஷம் குறைந்ததால் இப்பொழுது அதிகப்பட்டிருக்கிறது என்பதற்கு மகிழ்ச்சி.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** அதைச் சொல்ல வேண்டிய இடம் டி.டி.சி. இல்லை. நில வள வங்கிக் கமிட்டி, கலெக்டர் தலைமையில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. மாதம் ஒரு முறை கூட்டம் நடக்கிறது. குறைகள் இருந் தால், அந்தக் கூட்டத்தில் சொல்ல வேண்டும்.

### 6. அமைச்சரின் விளக்க உரை

**கோவை நகராட்சி ஆணையர் நடத்திய ஏலங்களில் ஏற்பட்டுள்ள வருமானக் குறைவுப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டது குறித்து உள்ளாட்சி அமைச்சரின் விளக்கம்.**

***மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகராட்சி ஆணையர் நடத்திய ஏலங்களில் வருமானம் குறைவு ஏற்பட்டதாக டாக்டர் ஹாண்டே அவர்கள் சில குற்றச்சாட்டுக்களைக் கூறினார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்களில் முக்கியமானவை எட்டு இனங் களைப் பற்றியனவாம். 1970-ல் இந்த எட்டு இனங்களிலும் கிடைத்த ஏலத் தொகை, இதே இனங்களில் சென்ற ஆண்டு கிடைத்த தொகை, கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த இனங்களில் கிடைத்த சராசரி வருமானம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஏலம் விடப்பட்ட இனங்களின் விவரம். | 1970-ல் கிடைத்த ஏலத் தொகை. | சென்ற ஆண்டைய ஏலத் தொகை | கடந்த 5 ஆண்டு களில் சராசரி வருமானம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. தியாகி குமரன் மார்கெட் | 83,500 | 1,32,000 | 83,225 |
| 2. தியாகி குமரன் மார்கெட் வண்டிப்பேட்டை. | 84,100 | 1,32,000 | 80,485 |
| 3. பன்னீர்செல்வம் மார கெட். | 66,010 | 74,999 | 59,802 |
| 4. மௌலானா முகமதலி மார்கெட், | 78,100 | 46,036 | 56,387 |
| 5. உக்கடம் லாரிப்பேட்டை | 80,025 | 1,13,000 | 76,585 |
| 6. உக்கடம் ஆடு அறுவை மனை. | 33,999 | 29,102 | 33,935 |
| 7. தியாகி குமரன் மார்கெட் மிதிவண்டி நிலையம். | 10,099 | 11,901 | 11,065 |
| 8. கழிவு நீர்ப் பண்ணை | 2,03,025 | 4,12,352 | 2,55,308 |
| கூடுதல் .. | 6,38,858 | 9,54,390 | 6,56,575 |

இவற்றிலிருந்து சென்ற ஆண்டில் கிடைத்த வருமானத்தை விட இவ் வாண்டில் ரூ. 3.15 இலட்சம் குறைந்திருப்பது தெரிகிறது. கடந்த 5 ஆண்டு களின் சராசரி வருமானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த வேறுபாடு சற்றேறக்குறைய 18,000 ரூபாய்கள் தான்,





சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு ஏலத்தொகை குறைந்ததற்கான காரணங்கள் இங்கே விளக்கப்படுகின்றன. ஏலங்கள் பகிரங்க ஏலங்கள் ஆகும். எந்த ஒரு நபரும் ஏலத்தில் பங்கு கொள்வதோ அல்லது தாம் விரும்பியவாறு ஏலம் கோருவதோ தடுக்கப்படவில்லை. ஆயினும் 1969-70-ஆம் ஆண்டில் இருந்ததைப் போன்று 1970-71-ஆம் ஆண்டில் போட்டி தென்பட வில்லை. 1969-70-ல் இவ்வினங்களில் ஏலம் எடுத்தவர்கள் பெரு நஷ்டத்திற்கு ஆளானர்கள் என்று வெளிப்படையாகவே பேசப்பட்டது. தியாகி குமரன் மார்க்கெட் கடைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகைகள் மீதான வழக்குகளும் இருந்தன. இக்காரணங்களால் ஏலத்தில் போட்டி மனப்பான்மை இயற்கை யாகவே குறைந்து தென்பட்டது. ஏலத்தின் போக்கை கவனித்தால் இவ்வினங் களில் மறு ஏலம் நடத்துவதன் மூலம் மேலும் ஆதாயம் கிடைக்க இடமில்லை என ஆணையர் உணர்ந்தார். எந்த இனங்களில் மறு ஏலத்தின் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்ற நிலை இருந்ததோ அந்த இனங்களுக்கு மறு ஏலம் நடத்தியுள்ளார்.

1970 பிப்ரவரி 24, 25 ஆம் தேதிகளில் இந்த ஏலங்கள் நடத்தப்பட்டன. ஒரு சிலர் மேற்கூறியவற்றில் 1, 2, 5 ஆகிய இனங்களுக்கு மறு ஏலம் நடத்த வேண்டுமென 16—3—1970 அன்று ஆணையரிடம் வந்து கோரினர். அதற்குள் ஏலங்கள் முடிந்து ஏலத்தொகைகளும் உறுதி செய்யப்பட்டன. ஏல நோட் டீசில் மறு ஏலம் கோருவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள கெடு நாட்கள் இரண்டு. ஆனல், விண்ணப்பதாரர்கள் இக்கெடுவைக் கடந்து விண்ணப்பித் திருந்தார்கள். எனவே, ஆணையர் இவ்விண்ணப்பங்களைத் தள்ளுபடி செய்ய வேண்டியதாயிற்று.

கழிவு நீர் பண்ணையிலுள்ள 27 பகுதிகளுக்கு 1970 பிப்ரவரி 25 ஆம் நாள் அன்று ஏலம் நடத்தப்பட்டது. அன்று 20 பகுதிகளுக்கு மட்டுமே ஏலம் கோருபவர்கள் இருந்தார்கள். மீதியிருந்த ஏழு பகுதிகளுக்கும் 1970 மார்ச் 9-ம் நாளன்று புதிய ஏலம் நடத்தப்பட்டது. இந்நிலையில் இவ்வினத்திற் கான ஏலத்தில் குறையேதும் கூறுவதற்கில்லை. சென்ற ஆண்டு பெய்த பெரு மழை காரணமாகச் சுற்று வட்டாரத்தில் நிறையப் புல் கிடைத்ததால் நகராட்சிக் கழிவு நீர்ப் பண்ணையில் விளைந்த புல்லுக்கு அதிக கிராக்கி ஏற்படவில்லை.

மேலும் இவ்விடத்திலிருந்த புற்கட்டைகள் 10 ஆண்டுகளுக்கு முன்பாகப் பயிர் இடப்பட்டனவாகும். எனவே அதிலிருந்து கிடைக்கக் கூடிய தொகை படிப்படியாகக் குறைந்து வந்தது. இவ்வினத்தில் ஏலத்தொகை குறைந்த தற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

நகராட்சி ஆணையர் இந்த ஏலங்களில் சட்டத்திற்குட்பட்டே நடந்துள்ளார். அவருடைய வரம்புக்கு மேற்பட்ட செயல்களில் அவரைக்குறை கூறுவதில் பயனில்லை. அவர் தம் கடமையைச் செவ்வனே செய்துள்ளார். வருமானத்தில் குறைவு ஏற்பட்டுள்ளதென்றால் அது இன்றைய மார்க்கெட் நிலவரத்தைப் பொறுத்ததேயன்றி, அவருடைய கவனக் குறைவால் அல்ல. ஏலங்கள் பகிரங்கமான ஏலங்கள் என்றும், யாரும் ஏலத்தில் கலந்து கொள்

வதோ அல்லது விரும்பியவாறு ஏலம் கோருவதோ தடுக்கப்படவில்லை என்பதும் மீண்டும் தெளிவாக்கப்படுகிறது. இச்சூழ்நிலையில் இவ்வேலத்தில் தவறேதும் நடைபெற்றிருப்பதாகத் தென்படவில்லை.

(டாக்டர் ஹாண்டே எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் விதி 82-ன் கீழ் அளித்துள்ள இந்த அறிக்கையின்மீது கேள்விகளுக்கு இடமில்லை.

## 7. அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் —தொடர்ச்சி.

THIRU K. VINAYKAM: May I know Sir, who are going to be the speakers now?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பூவராகன், திரு. ம. பொ. சி. இரண்டு தலைவர்களும் பேசுவார்கள்.

THIRU K. VINAYAKAM: On a point of information, Sir. This No-Confidence Motion was moved by four people of my party and the Censure Motion was moved by a Member of the Communist Party. So five Members of this House have moved, four, one motion and another one motion. All of them have been given an opportunity to express their views. I am not questioning your ruling. It was pertinent and right. I did not move the motion. I was under the impression that I will be given an opportunity to speak. Even this morning the Chief Minister gave me a tacit indication that I may be permitted to speak. But I now understand, that the Hon. Speaker, in consultation with others, had withdrawn my name and that I may not be allowed to speak.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவரை கல்ந்து கொண்டு செய்யவில்லை.

**திரு. கே. விநயகம்:** பத்துநிமிஷம் போதும். பத்துநிமிஷத்தில் ஹெவன்ஸ் விழுந்துவிடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுவல்ல பொருள். உங்களுக்கு நேரம் கொடுத்தால் மற்றவர்களும் கேட்பார்கள்.

THIRU K. VINAYAKAM: Are you going to throttle me and gag my mouth by not allowing me to speak? I was one of the sponsors of the motion.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விநயகம் பல ஆண்டுகளாக சட்டசபையில் பணியாற்றியவர்கள். பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கவில்லை என்பதற்காக இப்படி சொல்வது சரியாகாது.

THIRU K. VINAYAKAM: Sir, the expression "throttling" means in this context, not permitting a person to speak . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது மணி 11½ ஆகிறது. இன்னும் இரண்டு மணி நேரத்தில் கூட்டத்தை முடிக்க வேண்டும். ஒன்றி



ரண்டு தலைவர்களும் தீர்மானங்களை முன்மொழிந்தவர்களும் பேச வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச வேண்டும். மீண்டும் விளக்கம் அளிக்கத் தேவை ஏற்படின் விளக்கம் அளிக்க வேண்டும். நேரம் இல்லை. ஆகவே இரண்டு கட்சித் தலைவர்களை மட்டும் பேச அழைக்கிறேன்.

**திரு. கே. விநயகம்:** தலைவர் அவர்களே, நேரம் இல்லாதது என்னுடைய தவறு அல்ல. நண்பர் இராம. அரங்கண்ணல் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நண்பர் விநயகத்திற்கு எத்தனை முறை சொல்வது? நீங்கள் பாராளுமன்ற முறை தெரிந்தவர் . . .

THIRU K. VINAYAKAM: Sir, according to the understanding reached by the Hon. Chief Minister, the Hon. Leader of the Opposition and myself, I would be allowed to speak to-day. If you are not going to allow me to speak, what does that mean?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்களுக்குள் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொண்டிருக்கலாம். உங்களுடைய பேச்சு பேரவைத் தலைவரைக் கட்டுப்படுத்தாது. நீங்கள் முன்பு சட்டமன்றத்தில் இருந்தவர், பார்லிமென்டரி முறை தெரிந்தவர். உங்களுக்கு இது தெரியவில்லையென்றால் என்ன அர்த்தம்? நீங்களும் முதலமைச்சர் அவர்களும் சேர்ந்து பேசிக்கொள்வது உங்களுக்குள் உள்ள விவகாரம்.

THIRU K. VINAYAKAM: Sir, after all I am a limb of the organization and I am fighting for the Organization.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. கே. விநயகம் அவர்கள் உட்கார வேண்டும். திரு. கோ. பூவராகன் அவர்களைப் பேசுவதற்கு அழைக்கிறேன்.

**திரு. கோ. பூவராகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல காரியத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் 'பிள்ளையார் சுழி' போடுவது என்று சொல்வார்கள். அதுபோல நான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசத் தொடங்கியவுடன், திரு. கே. விநயகம் அவர்கள் ஒரு 'பிள்ளையார் சுழி' போட்டுவிட்டார்கள்.

முதலாவதாக, கண்டனத் தீர்மானம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்தப் பேரவையில் எந்தச் சமயத்தில் எதற்காக கொண்டுவரப்பட்டது? இதனைக் கொண்டு வந்ததனால் ஏதாவது பயனுள்ள காரியங்கள் நடைபெற்றனவா என்பதையெல்லாம் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிறபோது ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். ஆளும் கட்சியில் உள்ள உறுப்பினர்கள்—சிலர் முற்போக்கு எண்ணம் உடையவர்களாக இருப்பார்கள், சிலர் பிற்போக்கு எண்ணம் படைத்தவர்களாக இருப்பார்கள்—கொள்கை ரீதி[illegible]க இயங்கவில்லையென்றால், ஆளும் கட்சியில் உள்ளவர்களை சிந்திக்க [illegible]க்கும்படியான ரீதியில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க் கட்சி கொண்டு வர வேண்டும். இங்கே கொடுத்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலும்,

கண்டனத் தீர்மானத்திலும் அப்படிப்பட்ட விஷயங்கள் இல்லை. இந்தத் தீர்மானங்களால் ஆளும் கட்சியில் இருக்கின்றவர்கள் தங்கள் பூசலை மறந்து இன்னும் நெருக்கமாக வந்துகொண்டிருக்கிறார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் இன்னும் அதிக ஒற்றுமையுடன இருக்க இந்த தீர்மானம் வழி செய்திருக்கிறது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எப்போதும் ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பது இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலிருந்து நமக்குத் தெரிகிறது. (ஆளும் கட்சித் தரப்பில் கையொலி) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆள்கின்ற கட்சிக்கு ஆதரவு தருவதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சார்ந்திருக்கும் கட்சி முன்பு ஏதோ பத்து அம்ச திட்டத்தை வைத்திருந்தது. ஆனால் இப்போது ஒரு அம்ச திட்டத்தைத்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஒரு அம்சம் திட்டம் என்னவென்றால், யார் எல்லாம் மத்திய அரசாங்கத்திலே நல்ல காரியங்கள் செய்கிற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ, யார் யார் அவர்களுக்கு ஆதரவாக இருக்கின்றார்களோ அவர்களை எதிர்ப்பது என்பது தான். யாருடைய ஆதரவையாவது பெற்று, மத்திய ஆட்சியில் இருப்பவர்களை கீழே இறக்குவது என்பதுதான் அவர்களது திட்டம். பத்து அம்ச திட்டத்தை வைத்துக் கொண்டிருந்தவர்கள் இன்றைக்கு ஒரு அம்ச திட்டத்தோடு உலாவிக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டு தினங்களாக இந்தப் பேரவையில் இந்த விவாதம் நடைபெற்று வருகிறது. 'எங்கள் கட்சியைக் கவிழ்ப்பதற்காக தமிழ்நாடு அரசாங்கத்திற்கு 14 கோடி, 18 கோடி ரூபாய் என்ற அளவில் அந்த அம்மையார் கொட்டிக் கொடுக்கிறார்கள்' என்ற முறையில்தான் போகும் இடங்களில் எல்லாம் அந்த அம்மையாரைப்பற்றிப் பஜனை பாடுகிறார்கள் (சிரிப்பு). அவர்களுடைய பேச்சுக்கள் எல்லாம் நாட்டுக்கு உகந்ததாக, நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதாக, முற்போக்கு காரியங்களுக்கு ஆதரவு கொடுப்பதாக இருக்கின்றனவா என்றால் இல்லையென்ற பதில்தான் கிடைக்கும்.

இதற்கு அடிப்படையான காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். இங்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததற்கு ஏதாவது அடிப்படை காரணம் அவர்களுக்கு இருக்கும். இந்த ஆட்சியின் கட்சி அங்கத்தினர்கள் மத்திய அரசாங்கத்திலே அரசுக்குச் சாதகமாக வாக்களிக்கிறார்கள், மத்திய அரசைக் காப்பாற்றுகிறார்கள், மத்திய அரசாங்கத்தில் அரசின் கொள்கையிலே, லட்சியத்திலே ஒன்றாக இருக்கிறார்கள் என்ற கோபம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். ஒன்றை மட்டும் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மக்களுக்கு நல்லவைகளை-யார் செய்தாலும் அவர்களை ஆதரித்து வாக்களிக்கிறார்கள். அம்மையார் அவர்கள் நல்ல காரியம் செய்தால் இவர்களுடைய ஆதரவு அம்மையாருக்குக் கிடைக்கும். அம்மையார் நல்ல காரியங்கள் செய்யாவிடில் இவர்களுடைய ஆதரவு அம்மையாருக்குக் கிடைக்காது. ஆகவே, இந்த ஆட்சியின் கட்சி அங்கத்தினர்கள் மத்திய அரசை ஆதரிக்கிறார்களே, மத்திய அரசைக் கவிழ்க்க முடியவில்லையே என்ற கோபம்தான் அவர்களை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரச்



செய்திருக்கிறது. 'எங்களுக்கு அரசியலே வேண்டாம். நாங்கள் முற்றும் துறந்த முனிவராகிவிட்டோம், எல்லோரும் இன்புற்றிருப்பதுவே அல்லாமல் வேறு ஒன்று அறிவேன் பராபரமே' என்று பஜனை பாடிக்கொண்டு, இருந்தவர்கள் இன்றையதினம் யார் யாரோடு கூட்டுச் சேர்ந்தால் மத்திய அரசைக் கவிழ்க்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கட்சி என்றால் அது நல்ல திட்டத்தோடு, நல்ல கொள்கையோடு இயங்க வேண்டும்.

ஒரு வருஷத்திற்கு முன்னால் பார்த்தால் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்றார்கள். இன்றைக்கு அதே ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைத் தடை செய்யாதீர்கள் என்கிறார்கள் . .

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. How is this matter relevant? It is not relevant. R.S.S. is not a party represented in this House. I am not going to allow this kind of thing to be discussed here . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் என்ன சொல்கிறார்? அவர் முன்னாலே எவ்வளவு பொறுப்போடு இருந்தார் என்பதை இப்போது எடுத்துச் சொல்கிறாரா?

**திரு. கோ. பூவராகன் :** நான் சொல்வதைக் கொஞ்சம் அவசரப்படாமல் கேளுங்கள். (ஆளும் கட்சித் தரப்பில் கையொலி)

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கேட்பதற்குத்தானே நாங்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறோம்.

**திரு. கோ. பூவராகன் :** அதனால்தான் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள். இல்லாவிட்டால் வெளியேதான் இருக்க வேண்டும். (கையொலி)

தலைவர் அவர்களே, ஆர். எஸ். எஸ். காரர்கள் யார் என்பதை எல்லோரும் அறிந்துக்கொள்ள வேண்டும். நேருஜியின், காந்திஜியின் படங்களை தங்களுடைய பூட்சு கால்களால் வைத்து அவமானப்படுத்தியவர்கள், சுதந்திர நாட்டிலே அவர்கள் இன்னும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களோடு சேர்ந்துகூட மத்திய அரசாங்கத்தைக் கவிழ்க்கத் தயாராக இருக்கிறோம் என்கிறார்கள். அரசாங்கத்தைக் கவிழ்க்க பேயோடு வேண்டுமானாலும் கூட்டு சேர்ந்துகொள்வோம் என்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பேயை வைத்துத்தான் அவர்களை கவிழ்க்க வேண்டும். யாரையும் வைத்து அவர்களைக் கீழே தள்ள முடியாது. (காங்கிரஸ்கட்சி தரப்பில் கையொலி)

**திரு. கோ. பூவராகன் :** நேற்று நண்பர் திரு. கரு. சீமைச்சாமி சொன்னார்கள். "இந்திரா காந்தி அம்மையாருக்கு நீங்கள் ஆதரவு கொடுத்தீர்கள் என்றால் எங்கள் ஆதரவு உங்களுக்குக் கிடையாது" என்றார்கள். அவர்கள் எந்தக் குடும்பத்தில் வந்தவர்கள்? மூன்று தலைமுறையாக இந்திரா காந்தி அம்மையாரது குடும்பம் இந்த நாட்டிற்குச் செய்திருக்கும்படியான தியாகங்கள் என்ன, சேவைகள் என்ன என்பதை இந்த நாடே அறியும். தங்களுடைய

சொத்துக்கள், சுகங்கள் அனைத்தையும் அந்தக் குடும்பம் நாட்டுக்காக அர்ப்பணித்திருக்கிறது. எது இந்த நாட்டுக்கு நல்லது, எது இந்த நாட்டுக்குக் கெட்டது என்பதை அம்மையார் அவர்கள் நன்கு அறிவார்கள். இந்த நிலையில் முற்போக்குச் சக்திகள் பிற்போக்குச் சக்திகள் என்றெல்லாம் மாறி முற்போக்குச் சக்திகள் நாட்டுக்கு நலம் தரும் காரியங்களை ஆதரிக்கிறார்கள் என்றால் பெரும் தலைவர்கள் எல்லாம் சண்டைபோடுவது ஒருவருக்கொருவர் இருக்கிற மனக்கசப்பில் பேசுவது மக்களிடையே நல்லெண்ணத்தை வளர்க்காது. கடந்த இரண்டு தினங்களாக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்த அவையில் கொண்டுவந்து பேசிய நேரத்தில் இன்னாருக்கு வேலை போட்டுக் கொடுக்கப்பட்டது, இன்னாருக்கு வேலை கொடுக்கவில்லை என்ற குறிப்பு வைத்துப் பேசுவது. . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : வேலை கொடுக்கவில்லை என்று குறிப்பு வைத்துப் பேசுவது என்பது உள்நோக்கம் கற்பிப்பதாக ஆகாதா?

திரு. கோ. பூவராகன் : நம்பிக்கை இல்லாத் தீர்மானம் எப்படி விவாதிக்கப்படவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். எல்லோருக்குமே பயனுள்ளதாக அமையக்கூடும். ஆளும் கட்சியில் இருப்பவர்களை தனிப்பட்ட முறையில் மனக்கசப்புடன் பேசுவது, திரும்ப அவர்கள் பேசுவது எல்லாம் இந்தக் கட்சிக்காரர்கள் நம்முடைய பொதுவாழ்வைக் கருத்தில்கொண்டு செயல்படவில்லை என்கிற தப்பான எண்ணத்தையே மக்களிடத்தில் வளர்க்கும். அவர்கள் அவரவர்களுடைய சொந்த லாபத்தில் தான் கருத்தைச் செலுத்தி வருகிறார்கள் என்ற எண்ணம் வளர்ந்து ஜனநாயக மரபுக்கு உகந்தது அல்ல, ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத சூழ்நிலையை வளர்ப்பதற்கு நாம் செயல்படக் கூடாது. அரசாங்கம் எப்படி நடந்துகொள்ளவேண்டும், எதிர்க்கட்சிகள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்கு நல்ல மரபுகளை நாம் ஏற்படுத்தவேண்டும்.

மனாலியில் சில தவறுகள் நடந்துவிட்டன, சில அதிகாரிகள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் மீது முதல் அமைச்சர் தீவிரமாக நடவடிக்கை எடுக்க ஆலோசித்து வருகிறார்கள். நாம் அவர்களுக்கு உதவியாக கருத்துக்களை எடுத்து வைக்கவேண்டுமே தவிர நாம் பேசுகிற பேச்சுக்கள் அவர்களுடைய உற்சாகத்தைக் குலைப்பதாக இருக்கக் கூடாது. அந்த விஷயத்தை முதல் அமைச்சர் அவர்கள் நல்லமுறையில் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் கல்விப்-பிரச்சினையை எடுத்துக்கொண்டால் ஒரே ஒரு விஷயத்தை முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டுவருகிறேன். ஒரு கல்லூரிப் ப்ரொபசர் ஜனநாயக முறையில் நடக்கிற காரியங்கள் எல்லாம் தப்பு, அது தப்பு, இது தப்பு என்பதாக சென்னையில் நடக்கிறவற்றை தப்பு என்று சொல்கிற வேதாந்தம் பேசிக்கொண்டு எதற்கு இருக்கிறார் என்று தெரியவில்லை. இந்தப் புத்தகத்தைப் பாருங்கள். இதை கல்வி அமைச்சருக்கே கொடுக்கிறேன். அதில் எழுதியிருக்கும்படியான விஷயங்களைப் பாருங்கள். இதுதான் கல்லூரிப் ப்ரொபசரின் வேலையா? இதை எல்லாம் அரசு கண்காணிக்கவேண்டும்.

அடுத்து, எங்கே பார்த்தாலும் லஞ்சம் தாண்டவமாடுகிறது என்கிறார்கள். என்னதான் அரசு விஜிலன்ஸ் கமிஷன்போட்டு நடவடிக்கை எடுத்தாலும் இந்தத் தப்பை திருத்த முடியாது. பொதுமக்கள், சட்டசபை உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து ஒழைத்தால்தான் இதுபற்றி நல்லதொரு சூழ்நிலை உருவாகும். பாடப் புத்தகங்களில் கூட முன்பு காந்தியார் படம் இருந்தது. இப்போது அது அகற்றப்பட்டு வேறு அரசியல் தலைவர் படம் வந்துவிட்டது என்று சொல்லவில்லை என்ன என்னவோ படங்கள் இருக்கின்றன. இது சரியல்ல.



அடுத்து போலீஸ் இலாக்காவைப் பற்றிச் சொன்னார்கள். அங்கங்கே அத்துமீறி செயல்கள் நடக்கிறபோது அரசாங்கமும் அதைப்பற்றி விசாரணை செய்ய ஏற்பாடு செய்கிறது. ஆனால் நான் சொல்வது என்னவென்றால் இன்வெஸ்டிகேஷன் விங் சரியான முறையில் செயல்பட்டால் ஆரம்பத்திலேயே பல அத்துமீறிய செயல்களை அடக்கிவிடலாம். தவறான காரியங்கள் செய்பவர்கள் யாராக இருந்தாலும் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள இந்த அரசு முன்வரவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவித்து ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு திராவிட முன்னேற்றக் கட்சியின் மீது என்றைக்கு நம்பிக்கை இருந்திருக்கிறது என்று தெரியவில்லை. இந்தத் தீர்மானம் அவரது கட்சியின் கருத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறதே தவிர வெளியில் உள்ள வாக்காள மகாஜனங்களின் அபிப்பிராயத்தை இந்தத் தீர்மானம் பிரதிபலிப்பதாகத் தெரியவில்லை. தீர்மானத்தில் குறிப்பிடாத சில கருத்துக்களை அவர்கள் தம் சொற்பொழிவில் எடுத்துச் சொன்னார்கள். உண்மையில் நான், ஆளும் கட்சிக்கும் பிரதான எதிர்க் கட்சிக்குமிடையே இந்தத் தீர்மானத்திற்கு போர்க்களமாக இந்த மன்றம் அமைந்திருப்பதைத்தான் பார்க்கிறேன். நான் மூன்றாவது நிலையில் இருந்து நடுநிலைமையில் இருந்து பார்க்கிறபோது தீர்மானத்தில் மட்டும் அல்ல, அதைக் கொண்டுவந்தவருடைய சொற்பொழிவிலும் ஏன் இந்தத் தீர்மானம் வந்தது என்பதற்கான காரணம் தெளிவாக சொல்லப்படவில்லை என்பதை உணர்கிறேன்.

அவர்கள் தம்முடைய சொற்பொழிவில் இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லை என்று தெரிவிப்பதற்கு குறிப்பிட்ட காரணங்களில் ஒன்று முதல் அமைச்சர் தனிக்கொடி கேட்கிறார் என்பது. தமிழ்நாட்டுக்கு என்று தனிக்கொடி ஏன் வேண்டும் என்பதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் ஆயிரம் ஆயிரம் உபமானங்கள் அடுக்கடுக்கிச் சொல்லிவிட்டார். இதுவரை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சரி, இந்தக் கொடி கூடாது என்று சொல்கிற பெருந்தலைவர்களும் சரி ஏன் கூடாது என்பதற்கான காரணத்தை தெளிவாக மதிப்பிட்டுக் கூறியதாகத் தெரியவில்லை. மற்ற, மற்ற சமஷ்டி நாடுகளில் எல்லாம் எப்படி இருக்கிறது? அங்கங்கே தனிக்கொடி இல்லையா? அதனால் ஏதாவது விபரீதங்கள் விளைந்திருக்கின்றனவா? சொல்லவேண்டும். பொதுக் கூட்டத்தில் பேசுவதுபோல பேசினார்களே தவிர ஏதாவது குறிப்பிட்ட ஆதாரங்களை எடுத்துவைத்தார்களா என்றால் இல்லை. அவருக்குத் தெரியாது என்று நான் சொல்லமாட்டேன். தெரிந்ததை எடுத்துச் சொல்ல முடியாத பலவீனத்தில் இருக்கிறார் என்பதுதான் என்னுடைய உறுதியான கருத்து. மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் கடைசியாகப் பேசுகின்றபோது அமெரிக்கா போன்ற, சோவியத் ருஷ்யா போன்ற, ஆஸ்திரேலியா போன்ற சமஷ்டி மாநிலத்திற்கு

எல்லாம் தனித்தனி கொடியிருக்க இங்கே ஏன் இருக்கக் கூடாது என்பதற்கு காரணம் சொல்லவேண்டும். அந்த நாட்டுச் சூழ்நிலை வேறு, இந்த நாட்டுச் சூழ்நிலை வேறு என்றால் அகல, நீளத்தில் சூழ்நிலை வேறு என்கிறார்களா என்று கேட்கிறேன்.

மூன்றாவதாக அவர் சொன்னக் குற்றச்சாட்டு ஊழல். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் மார்டின் அவர்களுக்கு உடனடியாக தெளிவாக விடையளித்து வந்து படித்துக் காட்டினார்கள். அதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். காந்தி அடிகளைப் பின்பற்றி பொது வாழ்க்கையை நான் நடத்துகிற காரணத்தாலே, தனி நபர் பொது வாழ்க்கையை நான் நடத்துகிற காரணத்தாலே, தனி நபர் பொது வாழ்க்கையில் நல்ல யோக்கியதையுடன் இருக்கவேண்டுமென்பதை நம்பி ஏற்றுக்கொண்டு முடிந்த வரையில் வாழ்ந்து வருகின்றவன், எனவே ஆளும் கட்சியை சேர்ந்தவர்கள் அதே நிலையில் பின்பற்ற வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

காங்கிரசில் நான் இருந்த வேளையில்கூட அமைச்சர்களுடைய ஊழல்களை, தவறுகளை வெளிப்படையாகச் சொன்னதன் காரணமாகத்தான் என்னை ஜீரணிக்கமுடியாமல் கக்கிவிட்டார்கள். எனவே அதை இந்த ஆட்சியிடத்திலும் சொல்வதற்கு எனக்குத் தயக்கம் இல்லை. அந்த சுதந்திரத்தை நான் இழந்துவிடவில்லை. நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் எல்லாம் அனுமானங்களாகத் தான் இருந்தனவே ஒழிய அத்தாட்சியாக இல்லை என்பதை நான் கூர்ந்து கவனித்தேன். அத்தாட்சியாக இருந்திருந்தால் அவர்கள் என்னுடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெறலாம் என்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆனால், அவர்கள் அடுத்தடுத்துக் கொண்டு வருகிறார்கள் சீசனுக்கு ஒரு தீர்மானம் கொண்டு வருகிறார்கள். போனதடவைக் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குப் பிறகு என்ன புது நிலைமை இருக்கிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு நாம் வாதத்திற்காக ஒப்புதல் அளிக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது இந்த இடத்திற்கு யார் வருவது? என்பதை முடிவில் பதிலளிக்கும்போது எதிர்கட்சித் தலைவர் அவர்கள் தெளிவாக பதில் சொல்லவேண்டும். அவர்கள் நிலை எதிர்காலத்திலே நம்பிக்கை அளிப்பதாக இல்லை என்று சொல்லிவிட விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எனக்கு இருக்கிறதோ இல்லையோ, அவருக்கு ஒன்றும் கிடைக்காது என்பதை அவர் உணரவேண்டும்.

திரு. ம. பொ. சிவஞானம் : ஒப்புக் கொள்ளுகிறேன். நான் ஆள விரும்பாத கட்சியைச் சார்ந்தவன். எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் என்ன நிலைமைக்கு இப்போது வந்திருக்கிறார்கள்?

திரு. பி. ஜி. கருத்திருமன் : நிச்சயமாக ஒரு கட்சியை விட்டுக் கொடுத்து இன்னொரு கட்சியின் சின்னத்தில், உயிரேபோனாலும் நிற்கமாட்டேன்.



திரு. ம. பொ. சிவஞானம் : அவர் பெரியவர், பெரிய கட்சியைச் சேர்ந்தவர், சொல்லிவிட்டார்கள். ஏற்கனவே நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது ஒரே கட்சியாக இருந்தார்கள். இப்போது 'ஓ' காங்கிரசாகவும் 'ஆர்' காங்கிரசாகவும் இருக்கிறார்கள். போனதடவை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தபோது நாடு முழுவதிலும் ஒரே கட்சியாக இருந்தபோது அவர்கள் கொண்டு வந்த போது, நாம் சிந்திக்க இடம் இருக்கிறது. இப்போது அந்த நம்பிக்கை இல்லை. பத்து மாநிலத்தில் ஆளும் கட்சியாக இருந்தவர்கள் இப்போது 2 ராஜ்யங்களில்தான் இருக்கிறார்கள்; அதிலும் ஒன்று ஆட்டம் கண்டிருக்கிறது. அன்று தீர்மானம் கொண்டு வந்தபோது இந்த அவையில் 50 பேர்களாக இருந்தவர்கள் இப்போது 40 பேர்களாக சுருங்கி விட்ட நிலை. இன்னும் ஓராண்டுக்குள் என்ன நிலைமையோ, யார் அறிவார்கள்? எனக்குத் தெரியாது.

காந்தியடிகள் சொல்லியிருக்கிறார் 'எந்த பலம் போனாலும் எனக்குப் பெரியது அல்ல. ஆனால் தரம் முக்கியம் என்று சொன்னார்'. கொள்கைகளில் உறுதியாக இருக்கிறவர்கள் என்றால், அரச மானிய ஒழிப்பை ஏன் எதிர்க்க வேண்டும்? அரச மானியம் சலுகைகள் மூலம் அரசர்களுக்கு, அவர்களுடைய நாய்க்கு, பூனைக்கு, ஆட்சிக்கு மக்கள் வரிப்பணத்திலே சலுகைகள் வேண்டுமா? அந்த ராஜமானிய ஒழிப்பை எதிர்க்கிறார்கள், காந்தி அடிகள் நடத்திய சுதந்திர இயக்கத்திற்கு எதிராக, விரோதிகளாக இருந்தவர்கள் அவர்களுடைய நாய்க்கும், பூனைக்கும், ஆட்டுக்கும், மாட்டுக்கும், யானைக்கும் மக்கள் வரிப் பணத்திலிருந்து சலுகைகள் பெற்றுக் கொண்டார்கள். அதை ஆதரிக்கிற கட்சியை காங்கிரஸ் கட்சியாக காந்திய கட்சியாக எனக்கு ஏற்றுக்கொள்ள மனமில்லை, என்று உறுதியாக நான் சொல்ல விரும்புகிறேன். உங்கள் பெயரே சந்தேகத்திலே, உங்கள் கொடியோ சந்தேகத்திலே, உங்கள் சின்னம் சந்தேகத்திலே, நீதிமன்றத்திலே தீர்ப்பு அளிக்கவேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, ஆளும் கட்சியான தி.மு. கழகத்தைப் பற்றி இவர் முன்பு சொன்ன பொன் மொழிகள் எல்லாம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. இப்போது இவர் ஏன் அவர்களோடு சேர்ந்திருக்கிறார் என்பது எனக்குப் புரிகிறது.

திரு. ம. பொ. சிவஞானம் : நண்பர்கள் பகைவர்களாக மாறுவது வேறு, கொள்கைகளை மாற்றிக் கொள்வது வேறு. அன்பருக்கு அரசியல் தெரியும் என்ற நம்பிக்கையில் சொல்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எனக்கு அவர்களுடைய அரசியலும் தெரியும்.

திரு. ம. பொ. சிவஞானம் : சுதந்திரா கட்சியைச் சேர்ந்த தலைவர் திரு. சீமைச்சாமி அவர்கள் சொன்னார்கள். மத்தியில் உள்ள ஆட்சிக்கு இவர்கள் ஆதரவு தருவார்களானால் அவர்கள் ஆதரிப்பதை நிறுத்திவிடுவோம் என்று. தி. மு. க. மாநில சுய ஆட்சி கோருவதும், சோஷலிஸ்ட் கொள்கையை ஏற்றுக் கொள்கிறோம் என்ற முறையிலே தேர்தல் பிரகடனத்திலே விஞ்ஞான சோஷலிசம் மாநிலங்களில் சுய ஆட்சி என்ற விஷயங்கள், தமிழ், தமிழர் வாழவேண்டுமென்ற கொள்கை தேர்தல் பிரகடனத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மத்திய ஆட்சியை ஆதரிக்கிறார்கள் என்றால் தனிப்பட்ட கட்சிச் சண்டைக்கு இடம் இல்லை. சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதைப் புனராலோசனை செய்யவேண்டுமென்றுக் கேட்டுக் கொண்டு இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுரேந்திரன், நீங்கள் 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, என் பெயரால் இங்கே வைக்கப்பட்டிருக்கும் போலீசார் அடக்குமுறை காரணமாக உள்ள இந்த அரசாங்கத்தின் கொள்கையை எதிர்க்கும் கண்டன தீர்மானத்தின் மீது சில காரணங்களை மட்டும் கூற விரும்புகிறேன். அப்படி இந்தக் காரணங்களைக் கூற விரும்புகிற நேரத்தில் ஒன்றிரண்டு காரணங்களைச் சொல்வதற்கு சபாநாயகர் அவர்கள் நேரத்தை அதிகமாக கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

போலீசார் மூன்று அரசாங்கங்களில் இருந்ததை நான் பார்த்திருக்கிறேன். முன்பு இருந்த காங்கிரஸ் அரசாங்கத்திலே இந்தப் போலீஸ் இலாகாவும், அதற்கு முன்பு இருந்த அன்னிய ஆட்சியின் போது அமைத்துக் கொண்ட அமைப்பே ஆகும். இதே அமைப்புத்தான் இன்றைக்கும் இருந்து கொண்டு வருகிறது. அவர்கள் தங்கள் ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்வதற்கு போலீஸ் இலாக்காவைத்தான் பயன்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் ஜனங்களிடத்திலே நட்பாகவும், நாணயமாகவும் பொறுப்பு உணர்வுடன் நடந்து கொள்வதற்குப் பதிலாக அந்தக் காலத்தில் ஜனங்களுக்கு பாதுகாப்பு இருப்பதற்குப் பதில் பாதகங்கள்தான் இருந்தன. அதற்குப் பின்பு வெள்ளையர்கள் போனதற்குப் பின்னால் சுதந்திர பொறுப்பை ஏற்ற காங்கிரஸ் இடத்திலே கொடுத்த உடன் அந்தக் கட்சி அனைவருக்கும் சுதந்திரம் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அந்தப் பொறுப்பை சரியாக செய்யாத காரணத்தினால் அவர்கள் தங்களுடைய அதிகாரத்தை பாதுகாப்பதற்காக போலீசாரை பயன்படுத்தி வந்தனர். அவர்களை மாற்றி 1967-ல் தோற்றுவிக்கப்பட்ட அரசுதான் இந்த தி. மு. க. அரசு, என்பதை நினைத்துப் பார்க்க விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட அந்த அரசு முன்பு நடந்ததைப்போன்று காரியங்களைத்தான் செய்கிறார்கள் என்று சொன்னால் அதைக் கண்டிக்காமல் இருப்பதற்கில்லை. நானும் என்னுடைய கட்சியும் இந்த அரசாங்கம் வருவதற்கு உறுதுணையாக இருந்தோம். முந்தைய அரசு அநாகரீகமான அரசாக இருந்ததால் அதை மாற்றி நாகரிகமான அரசாக இதை சொல்லிக் கொண்டு வந்தோம். இதுவும் அநாகரீகமான பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. உதாரணமாக போலீஸ் நடவடிக்கை, குறிப்பாக சேலத்தில் நடந்த ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

சேலத்திலே 11—7—1970 அன்று ஒரு கற்பழிப்புச் சம்பவம் நடந்தது. புஷ்பவல்லி என்ற பெண் தஞ்சையிலிருந்து 11—7—1970 அன்று சேலத்திற்கு வந்தாள். அப்படி வந்த பெண் அரசாங்க பஸ்ஸிலே வந்தாள். அந்த பஸ் இரண்டு மணி நேரம் காலதாமதமாக வந்த காரணத்தினாலே சேலத்திற்கு அந்தப் பெண் வந்து சேருவதற்கு இரவு 11 மணி ஆயிற்று. அந்தப் பெண்



ஆக்ஸிலரி நர்ஸ் இண்டர்வியூவுக்காக வந்தாள். பதினெட்டு வயதான அரிசனப் பெண் அவள். அந்தப் பெண் சைக்கிள் ரிக்ஷாவில் ஏறி வந்துகொண்டிருந்த பொழுது சேலம் அரசினர் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் அந்த சைக்கிள் ரிக்ஷாக்காரரை அடித்துவிரட்டிவிட்டு பெண்ணைக் கூட்டிச்சென்று கற்பழித்திருக்கிறார்கள். அந்தச் செய்தியை அந்த சைக்கிள் ரிக்ஷாக்காரர் போலீஸில் சொல்லி அந்த இன்ஸ்பெக்டர் வந்தபொழுது அந்தப் பெண் நிர்வாணமாகக் கிடந்தாள். அவளுடைய மார்பிலேயும் முகத்திலேயும் காயங்கள் இருந்திருக்கின்றன. அங்கே இன்ஸ்பெக்டர் வந்தவுடன் மூன்று பேர்கள் ஓடிவிட்டார்கள். மூன்று பேர்களை கைதுசெய்து அந்தப் பெண்ணையும் போலீஸ ஸ்டேஷனுக்குக் கொண்டுவந்தார்கள். அந்தப் பெண்ணை இரவு முழுவதும் போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருந்தார்கள். அப்பொழுதே வைத்தியப் பரிசோதனைக்கு அனுப்பி இருக்கலாம். காலையிலேதான் அனுப்பப்பட்டிருக்கிறது. சரியாகப் பரிசோதனை செய்யாமல் மறுபடியும் வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இந்தக் காரியத்தைச் செய்த மாணவர்கள் இரண்டு பேர்கள் இன்னும் ஒருவர் ஆகிய மூன்று பேர்கள்மீதும் வழக்கு 341, 304, ஐ. பி. சி. யின்கீழ் பதிவுசெய்து அன்று ஞாயிற்றுக்கிழமை மாஜிஸ்திரேட்டிடமிருந்து அனுமதிபெற்று ஜாமீனிலே விட்டுவிட்டார்கள். இன்றைக்கு மதுவிலக்குச் சட்டம் இருக்கிற நேரத்திலே குடித்தவர்கள் கைது செய்யப்பட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றால் ஜாமீனிலே விடலாம் என்று விதி இருக்கிறது. காலையிலே பிடித்தால் மாலைவரை வைத்திருந்து 25 ரூபாய் 100 ரூபாய் பணம் வாங்கிக்கொண்டு ஜாமீனிலே ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் விடுகிறார்கள் என்பதை உறுதியாகச் சொல்லமுடியும். சாதாரணமான வழக்குகளிலே அவ்வளவு நேரம் ஆகிற பொழுது கற்பழிப்பு வழக்கிலே காலையிலேயே அதுவும் ஞாயிற்றுக்கிழமையன்று இரண்டு பேர்களும் ஜாமீனிலே விடப்பட்டார்கள். இந்தப் பிரச்னை ஊரெல்லாம் தெரிந்ததற்குப் பிறகு செக்ஷனை மாற்றி 366, 376, 511 ஐ.பி.சி. யில் வழக்குப்போட்டு கைது செய்தார்கள், என்று தெரிகிறது. இதற்குப் போலீஸார் குற்றவாளிகளுக்கு உடந்தையாக இருந்திருக்கிறார்கள், ஆதரவாக இருந்திருக்கிறார்கள். மூன்று பேர்கள் கைது செய்யப்படவேண்டும், கைது செய்யப்படவில்லை என்று அங்கேயுள்ள எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் சொல்லியிருக்கிறார்கள் . . .

(திரு விநயகம் அவர்கள் பேச அழைக்கப்பட்டார்)

சபாநாயகர் அவர்கள் கண்டனத் தீர்மானம் நான் கொண்டு வந்திருக்கிறேன். கொண்டுவந்ததற்குப் பயன் இல்லாமல் போய்விடும். இரண்டு விஷயங்களை மட்டும் சொல்லிவிடுகிறேன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே 7, 8, 9 தேதிகளில்தான் இத்தீர்மானங்கள் மீது விவாதம் என்றும் 7ம் தேதி மட்டும் மாலையில் விவாதம் வைத்துக் கொள்ளலாம் என்றும் இருந்ததை 8-ம் தேதி மாலையும் வைத்துப் பேசி இருக்கிறோம். இன்னும் போதவில்லையென்றால் எப்படி? இன்று காலையோடு முடிக்கவேண்டுமென்று முடிவு செய்துவிட்டோம். நீங்கள் பேசத் தொடங்கிய நேரத்திலேயே ஐந்து நிமிடங்களில் முடித்துவிட வேண்டுமென்று சொன்னேன்.

[Thiru K. Vinayakam] [1970 செப்டம்பர் 8

(திரு. கே. விநாயகம் பேச அழைக்கப்பட்டார்)

திரு. எம். சுரேந்திரன்: அது சரியானதல்ல என்று நினைக்கிறேன். எனவே நான் வெளியேறுகிறேன்.

(திரு. எம். சுரேந்திரன் அவையிலிருந்து வெளியேறினார்).

THIRU K. VINAYAKAM: Sir, while I commend this 'no-trust motion' to the House, let me make it clear that I have no personal malice against any Minister individually. Sir, the news is growing in the country that almost all the Ministers have tendered their resignations and given them to the Hon. Chief Minister. Such being the real thing, I do not know how they can function here as Ministers. Hon. Chief Minister may repeat the argument that it is a party affair. Yes, it is a party affair but unfortunately you are the ruling party, you are ruling the State and you are responsible to the legislature also (interruption) I used the word 'unfortunately' if you like it, have it or otherwise leave it. Whether you like it or not, or take it or not, it is there. It is rumoured that all Ministers have sent their resignation letters to the Chief Minister. Then how on earth you can function here as a cohesive Cabinet unit? There is no mutual trust amongst you. Individual Ministers are casting aspersions against one another. That is the very reason why we have thought of bringing this no-confidence against the Cabinet. I will concentrate on a few points.

Veeranam project is going to be implemented and water is going to be brought to Madras. How is it to be handled by Government? The distance from Veeranam to Madras is about 132 miles. Water will have to be drawn at Veeranam from Cauveri and led through pipes to Madras City. What is the pipe that has to be used is a scientific matter. It is a technical matter. The present contractor is going to make use pre-stressed hume pipes. The information prevalent in the country is that pre-stressed concrete pipes are better in quality. Such being the case you are going to take up a project that is going to be of immense use to the country with these inferior pipes. Did you think for a moment whether pre-stressed concrete pipes are better than these types? Did you calculate what would be the loss if pre-stressed concrete pipes were put? It would hardly be some lakhs, a few lakhs, say Rs. 50 lakhs at the most. Is it such a big thing in a scheme costing crores of rupees? First, there was the lower tender. You were tempted to accept it. But they went on revising the tender. If the highest tender was accepted, if pre-stressed concrete pipe was put, it would have meant only Rs. 50 lakhs more. But that was not done. You are going to have these pipes. Will they last long? They have to withstand the tremendous atmospheric pressure? Can they withstand the pressure? Have you thought of all these? The pressure would be enormous. Can these pipes last for long?



1970 செப்டம்பர் 9]

In my opinion even for five years they may not last. That is my information. I may be wrong. I want the Hon. Minister to explain to the House or let the Hon. Chief Minister explain that my allegation is wrong. Let him prove that I am wrong.

The method of granting the tender is also questionable. The tenderer goes on telling the country that he had got the tender even before the sanction has been given by the Minister. The Minister, while emplaneing a foreign plan says that the tender has been given to so and so. On the Minister's return, a party is got up. The Builders' Association of India gives a party and there the Minister announces that the Chief Minister has given his consent. That means there is a time-lag. How this tenderer got the information that he is the successful tenderer? I do not want to make any allegation against any particular Minister. We must keep these things in secret. They are official secrets. If information leaks out, it means there is somebody against you even in the Government. The secret leaks out. That is why we say we have no trust in you, you will not be able to keep secrets, and you will not be able to govern properly. So far as Veeranam is concerned, it is good water is brought to Madras from Cauveri. But see how the project has been handled?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டெக்னிகல் விஷயம் பற்றிச் சொன்னதாலே அதைப்பற்றி விளக்கம் சொல்லிவிட்டால் தெளிவாகிவிடும் என்று நினைக்கிறேன். இதிலே இரண்டு விதங்கள் இருக்கின்றன.

ஒன்று vertical casting of pipes என்பது. இன்னொன்று horizontal spinning of pipes என்பது vacuum process என்றால் சூன்யத்தில் ஏதோ செய்வது என்பதல்ல

The vacuum technique is but a minor part of the manufacture of pre-stressed concrete pipes in that it is applied only for hastening the consolidation of the concrete mix poured into moulds by drawing of the excess water which under the processes, is done by adopting different methods like steam-curing.

தொழில் நுணுக்க முறையிலே தயாரிக்கப்பட்ட குழாய்களைப் பற்றி வாட்டர் போர்டு சேர்மன், அந்த செயலாளர்

Professor Ramaswamy, Director of Central Building Research Institute, Roorkee and Dr. Varghese, Head of Department. Civil Engineering, Indian Institute of Technology, Madras

ஆகிய இரண்டு நிபுணர்களையும் கலந்து பேசித்தான் முடிவெடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த இரண்டு நிபுணர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

Both of them stressed that in the matter of selecting the best type of pre-stressed concrete pipes, it is the end product with which we should concern ourselves and not with any mid-process like

vacuum, which is but an incidental step in the manufacture of pre-stressed concrete pipes. In fact they pointed out that if anything the vacuum process added to the strength of the concrete and made for quicker manufacture of pipes by shortening the curing time.

எனவே, நிபுணர்கள் கருத்தும் கேட்டுத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. இந்த வேகுவம் பைப்பைப்பற்றிச் சிலர் குற்றம் சொல்கிறார்கள். நாங்கள் கேட்டவரையில், நாங்கள் பார்த்தவரையில், டெகரான் நாட்டில் 11 ஆண்டுகளாகியும் வேகுவம் பைப் குழாய்கள் சாட்டிஸ்பேக்டரியாக இருப்பதாகக் கூறுகிறார்கள். இத்தாலிய நாட்டிலும் வேகுவம் பைப்பிலே 7 ஆண்டுக் காலமாக 'வித்தவுட் எனி இன்டரப்ஷன்' அந்த வேகுவம் குழாய்கள் வேலை செய்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பரிசீலித்த பிறகுதான் முடிவிற்கு வந்திருக்கிறோம்.

லோயஸ்ட் டெண்டருக்குக் கொடுக்கப்பட்டதைக் குற்றமாகச் சொல்லப்பட்டது. சுமார் 1¼ கோடி ரூபாய் அதாவது ஒரு கோடியே 25 இலட்சத்துச் சொச்ச ரூபாய் வித்தியாசமிருக்கிறது. பெருமளவிற்கு வித்தியாசமிருப்பதால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருக்கும் பிரச்னையெல்லாம் தரமுள்ள குழாய்களாக இருக்கின்றனவா, டெக்னிக்கல் பீசிபிலிட்டியா என்று பிரச்னைகளை ஆராய்ந்து இருக்கிறோம். நம்முடைய அதிகாரிகள், நம்முடைய பொறியாளர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அமைச்சர்களே மட்டும் உட்கார்ந்து முடிவு செய்துவிடவில்லை. நிபுணர்கள் கருத்தும் கேட்கப்பட்டிருக்கிறது, பொறியாளர்கள் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் பேசியிருக்கிறார்கள். எல்லாம் பரிசீலித்து திட்டவட்டமான முடிவிற்கு வந்தபிறகுதான் லோயஸ்ட் டெண்டருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

இன்னொன்றும் சொன்னார்கள். 'டெண்டர்களைப்பற்றி முன்கூட்டியே எப்படிச் சொல்லலாம்?' என்று. அரசாங்க உத்தரவு போட்டு ஜி.ஓ. ஆகிறது. அது சம்பந்தமாக காண்டிராக்டருக்குப் போகிறது. அமைச்சரவை முடிவெடுத்ததற்குப் பிறகு, முதலமைச்சர் முடிவெடுத்தபிறகு, சொல்லப் பட்டிருக்கிறதே தவிர, அதற்கு முன்னாலே சொல்லவில்லை. அப்படிச் சொன்னதாகக் கூறுவது தவறு என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, குற்றச்சாட்டு என்று சொல்லும் நேரத்தில், இன்னின்ன விதிமுறைகளை மீறியிருக்கிறது என்று சொல்லி விளக்கம் கொடுக்கலாம். பொதுவாகச் சொல்லிக்கொள்கிறார்கள், நண்பர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள், கட்சிக்காரர்களுக்குக் கொடுத்து விட்டார்கள் என்று தவறான குற்றச் சாட்டுக்களைச் சொல்வது, உறுப்பினருக்காகச் சொல்லவில்லை, கட்டுப்பாடாகச் சொல்லப்படும் தவறான கருத்துகூட உண்மையாகிவிடும் என்பது தத்துவமாகும். அதற்காகத்தான் கூறுகிறேன், இதில் தவறு எதுவும் இல்லை என்று திட்டவட்டமாகக் கூறுகிறேன். வீராணம் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும் முறை, டெண்டர் விட்ட முறை, ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை, இவைகளில் எந்தவிதமான தவறும் கிடையாது. சந்தேகத்திற்கு இடமும் கிடையாது. அப்படி ஏதாவது ஒரு சந்தேகம் இருந்தால், ஆதாரத்தோடு சொல்வார்களேயானால் அதைப்பற்றி விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.





THIRU K. VINAYAKAM : Sir, I do not want to waste the time of the House. Now that the Hon. Minister has explained the position, I want to know whether there were differences of opinion between two technical officers namely, the Chief Engineer (Public Works Department) and the Chief Engineer (Public Health), to whose jurisdiction this matter relates. They must have brought it to the notice of the Water and Drainage Board. Without their consent this has been allowed to be carried out. Also another aspect of the matter is that after granting the contract, what was the necessity for our Hon. Minister to go to Greece and other Western countries, to inspect all those things. You have already committed yourself to it and you are going to execute it and what you are going to learn about it in foreign countries? Of course, the money—a few hundreds of rupees—spent by the Hon. Minister on that account is not a big thing. But my point is that you must have gone there and learnt it before entering into that contract. That must have been a correct procedure. Also, why did you take a representative of the contractors along with you to foreign countries to inspect all those things? That is the point I am driving at ...........

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்காக விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இரண்டு தலைமைப்பொறியாளர்களிடையே கருத்து வேறுபாடு இருந்ததாகச் சொன்னார்கள். அப்படி இல்லை. இந்தத் திட்டத்தை நடைமுறையில் செயல்படுத்துவதைப்பற்றி தலைமைப் பொறியாளர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டிய பொறுப்பு வாட்டர் சப்ளை போர்டுக்கு இருக்கிறது. அதில் தலைமைப் பொறியாளரின் அறிக்கையை ஆராய்ந்து ஏற்றுக்கொண்டு, பிறகு அரசாங்கம் முடிவிற்கு வந்தது.

ஏன் வெளிநாட்டிற்குப் போயிருக்க வேண்டுமென்று கேட்டார்கள். அரசாங்கம், பெரிய திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காக வேலை செய்கிறது. அந்தநேரத்தில், 'tender provisionally accepted subject to technical feasibility' என்று 16 கோடி ரூபாய்க்கான ஒரு திட்டத்தைப்பற்றி அரசாங்கம் அக்செப்ட் செய்து கொண்டது. அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று வெளிநாட்டிற்குப் போய்ப் பார்த்து, இந்தக் குழாய்கள் தரமுள்ளவைதானா, உறுதியானவைதானா, நீர் அழுத்தத்தைத் தாங்கக் கூடியவைதானா என்று ஆராய வெளிநாட்டிற்குப் போக வேண்டுமென்று எண்ணினோம். அப்படிப் போகும்பொழுது, ஃபாரின் கொலாபரேஷனைச் சேர்ந்த நம்முடைய நாட்டைச் சேர்ந்த காண்டிராக்டர்கள் அங்கே வந்தார்கள். அந்தக் கம்பெனியைச் சார்ந்தவர்கள் எங்களை அழைத்துக் காண்பித்தார்கள். இவைகளைப்பார்த்து திட்டவட்டமான முடிவிற்கு வந்த பிறகு, கடைசியாக இந்த டெண்டருக்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம்.

ஃபாரின் கண்ட்ரீஸுக்குப் போனதில் தவறில்லை. இந்தப் பிரச்னையை நன்கு அறிந்துகொள்வதற்கு வெளிநாட்டு வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநாயகம் அவர்கள் இரண்டு நிமிஷத்தில் முடித்துவிடுங்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, I will leave it at that because I want elucidation on some other points.

Sir, the Ministry while functioning for the last three years seem to have lost the confidence of different categories of people. —Our society consists of many groups of people. For instance, take the case of students. The students who had so much confidence in you are now in a pell-mell as you do not have any clear idea about your language policy. You want the students to take to Tamil medium only and that is not liked by the students. So, there is heart-burning and they seem to be discontented over that policy and consequently now they are all interested in staging a walk-out or strike. Every day some college or university is closed for some reason or other. At this rate what would happen to our educational policy ? That is the point to be considered.

Now, take the case of women. Have they confidence in you? Many instances have been brought to the notice of this House and I do not want to waste the time of the House by referring to them in detail. One such instance related to the death of Jamilla of Thanjavur. These instances have made the women-folk ponder as to why they have committed the mistake of voting you to power.

Then I come to teachers. Rosy promises were made to them at the time of elections that their lot would be improved. When we put interpellations about them you say financial difficulties stand in the way of redressing their grievances.

Next I come to essential commodities. You have promised the people that their prices would come down when you come to power. Now what has happened? Prices have soared up. In regard to this matter also you seem to have lost the confidence of the middle class people.

Now, take the case of workers. There has been shooting of workers and it started from the Wimco Factory to the Neyveli Project and ended in the shooting of agriculturists. After all what did the agriculturists ask for? They asked for a small reduction in the electricity tariff. You have resorted to police firing by saying that you have to maintain law and order. This is not a convincing argument just to gain confidence of these people. By resorting to police firing you have lost the confidence of the people, and that is why we have brought forward this motion of no-confidence.



Lastly one more point. Even small landlords, you do not leave. You interfere with them and you create a situation wherein there is choas. What is the picture you have in the country today? Because of your policies, nobody is coming forward to start any small-scale industry in the State. No small entrepreneur is coming forward, because of your labour policy. If there is an industry and if there is a union, then your people come and start another D.M.K. union and there is no law and order. At that rate how can any entrepreneur come forward to start any industry in the State?

I do not want to waste more of your time, Sir, I shall finish. Agitations have been going on. They are not at any low ebb. Even teachers, belonging to my tribe (You know, Sir, what I mean) have come forward travelling by bus from Kanyakumari to Periyarthidal to voice forth their grievances. Have you redressed anybody's grievance? No. You do not have patience to meet anyone. We made the same mistake previously and the result is what you see, we are sitting in the Opposition. You are also making the same mistake. You are not meeting the legitimate demand of any one. I need not say what will be your fate.

With these words I support the no-confidence motion and I commend it for the acceptance of the House.

■ மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பில் ( . . .) பூவராகன் மன்னிக்கவும் ( . . .) சிண்டிகேட் காங்கிரஸ கட்சியின் சார்பில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றும், ஏனைய கட்சிகளின் சார்பில், குறிப்பாக இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையில் கண்டனத் தீர்மானம் ஒன்றும் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டு அந்தத் தீர்மானங்களின் மீது 36 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் இதற்கு முன்பு ஒருமுறை நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் இங்கே கொண்டுவரப்பட்டது. அப்போது அவர்கள் 50 பேர்களாக இருந்தார்கள். அவர்கள் எங்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த பிறகு, அவர்கள் மீது நம்பிக்கையில்லை என்று எட்டு பேர்கள் அவர்களை விட்டு விலகிச் சென்று விட்டார்கள். இப்போது மிச்சமிருக்கும் 42 உறுப்பினர்களைக் கொண்ட பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் எங்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்று எடுத்துக் காட்டுவதற்கு அவர்களுக்கு எந்த அளவு பயன்படுகிறதோ, அதே அளவுக்கு எங்கள் மீது இந்த நாடும், இந்த மன்றத்திலே உள்ள பெரும்பான்மை உறுப்பினர்களும் நம்பிக்கை கொள்ளுகிறார்கள், மேலும் நம்பிக்கை கொள்ளுவார்கள், நம்பிக்கை கொள்ளுவதற்கான காரணங்கள் இவை இவை என்று எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பத்தையும் எங்களுக்கு அளிக்கிறது.

ஏனென்றால், குறைகளை வெளியிடங்களில், பொதுக்கூட்டங்களில் எடுத்துச் சொல்லுகிற நேரத்தில், அந்த இடத்திலே வந்து மறுத்துரைப்பதற்கு, நேரடியாக விளக்கங்கள் அளிப்பதற்கு எங்களால் இயலாத நிலையில் என்னென்ன குற்றங்களோ சாட்டப்பட்டு விடலாம். ஆனால் அவைகள் எல்லாம் நேருக்கு நேர் விவாதிக்கப்படுகின்ற நேரத்தில் நாங்கள் நேரடியாக விளக்கங்களை அளிப்பதாலே தமிழ் நாட்டில் இருக்கும் நான்கு கோடி மக்களும் உண்மைகளை உணருவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்ற காரணத்தால்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒருவகையிலே எங்களுக்குச் சாதகமான முறையில் பயன்படுகிறது என்ற வகையில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற கட்சியினர், எங்களை, இந்த அரசை அல்லது இந்த அரசினுடைய அதிகாரத்தின்கீழ் இயங்குகின்ற காவல் துறையின் போக்கைக் கண்டித்து பலத்த விவாதங்களை இங்கே நடத்தியிருக்கிறார்கள். அவர்கள், இந்த அரசு காவல் துறைப் பொறுத்தவரையிலே மேலும் நல்ல திருத்தங்களைச் செய்து, இப்போது தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஏற்பட்டு விடுகின்ற சில அசம்பாவிதங்களைக் கூடத் தடுத்து, நல்ல முறையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, இடதுசாரி எண்ணமுடைய ஆட்சி வலுப்பெற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் காரணமாகத்தான் இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி, வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சி, பி. எஸ். பி., எஸ். எஸ். பி., ஆகிய கட்சிகளின் சார்பில் இன்று கண்டனத் தீர்மானம் கொண்டு வந்திருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, நான் அதனையும் மறுத்து, அல்லது வன்மையாகக் கண்டித்துப் பேச முற்பட எண்ணிடவில்லை.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில், மாண்புமிகு புதிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பூவராகன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், கொள்கைகளைச் சொல்லித் தாக்கினார்களா, நடைமுறைத் திட்டங்கள், நாங்கள் வகுத்திருக்கிற வேலை முறைத் திட்டங்கள் இவைகளில் இருக்கும் தவறுகளைச் சொல்லித் தாக்கினார்களா என்றெல்லாம் பார்த்தால் இல்லை. குறிப்பாக, அமைச்சர்கள் அல்லது அளிக்கப்பட்ட அலுவல்கள் அல்லது கார் பரிசளிப்பு விழாக்கள் என்ற இந்த வகையிலேதான் எதிர்க்கட்சியில் இருந்து பெரும்பாலான தாக்குதல்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் அடிப்படையிலே இடம் பெற்றன என்பதனை இந்த மன்றத்திலுள்ள நாம் அனைவரும் நன்றாக அறிவோம்.

அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வெளியிடப்பட்ட நேரத்தில் எல்லாம் அந்தந்தப் பொறுப்புக்குரிய அமைச்சர்கள் எழுந்து தக்க விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். அந்த விளக்கங்கள் அத்தனையும் பத்திரிகா தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்று போக்குக் கொண்ட எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டன. 'பத்திரிகா தர்மத்தைப் பற்றிக் கவலை இல்லை, எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு இழுக்கை உண்டாக்க வேண்டும், இவர்கள் ஆளுவதா? இவர்கள் யார்? சாதாரணமானவர்கள், சாமானியமானவர்கள். ஆளுவதற்குத் தகுதிப்படைத்த அந்தஸ்துள்ள குடும்பங்களில் பிறக்காதவர்கள்; பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ளவர்கள் ஆண்டாண்டு காலம் அடிமைப்படுத்தப்பட்ட சமுதாயத்தின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள்; இன்று ஆளும் கட்டிலை அலங்கரிப்பதா? என்று ஆத்திரம் கொண்ட சில ஏடுகள் வேண்டுமானால் நாங்கள் அவ்வப்போது அளித்த



விளக்கங்களை எல்லாம் வெளியிடாமல் மறைத்திருக்கலாம். அவர்களையும் நான் தாக்கிட விரும்பவில்லை. எங்களை ஆளாக்கிய அண்ணன் கற்றுத் தந்த மொழியின்படி 'வாழ்க அவர்கள்' என்று வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நானோ அல்லது அமைச்சர்களோ கூட பதில் சொல்லத் தேவையில்லை என்ற அளவில் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அரிய பல உண்மைகளை வெளியிட்டு, அழுத்தந்திருத்தமான பதில்களை அளித்திருக்கிறார்கள். அந்த வகையில் மிகத் திறமையோடு வாதாடிய ஆளும் கட்சி உறுப்பினர்களையெல்லாம் நான் சட்டசபையில் உள்ள ஆளும் கட்சியின் தலைவன் என்ற முறையில் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் மிகுந்த கண்ணியத்தோடும், இந்த அவையின் மரபு கெடாத வகையிலும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசிய காங்கிரஸ கட்சியின் உறுப்பினர்கள், கண்டனத் தீர்மானத்தின் மீது பேசிய மற்றக் கட்சியினர், இந்த இரண்டு தீர்மானங்களையும் ஆதரிக்காத நிலையிலே பேசிய வேறு கட்சியினர் அத்தனை பேரும் இந்த அவையின் மரபு காப்பாற்றப்பட வேண்டுமென்பதிலே அழுத்தமான நம்பிக்கை வைத்து விவாதங்களிலே கலந்து கொண்டதற்காக அவர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நம்பிக்கை இல்லை என்று தெரிவித்து விடுகின்ற காரணத்தால், வெளியில் இருக்கும் தமிழ் நாட்டு மக்கள் எங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லி விடுவார்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோ அல்லது எதிர்க்கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்களோ எண்ணுவது சரியாகாது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட சட்டமன்றத்தில் 7--3---1970 அன்று பேசுகின்ற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "பிற மாநிலங்களில் கூட்டணி ஆட்சிகள் நடைபெறுகின்றன, திடீரென்று கவிழ்கின்றன; இடையிலே யார் மந்திரிசபை அமைப்பது என்ற நிலை எல்லாம் இருக்கும்போது இங்கே ஒரே ஆட்சி, நிலையான ஆட்சி இருக்கிறது. இதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள் நிலையான ஆட்சி தொடர்ந்து இருக்கும் என்ற நல்ல நம்பிக்கையுடன் அவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். ஆகவே, அந்தப் பாராட்டை அவர்கள் நிச்சயமாகத் திரும்பப் பெற மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.,

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு தமிழ் நாட்டு பெருமக்கள், வாக்காளப் பெருமக்கள் இந்த கட்சியின் மீது அல்லது இந்தக் கட்சியோடு தோழமை கொண்டிருக்கிற கட்சிகள் மீது அளவு கடந்த அன்பினைச் செலுத்தினார்களா இல்லையா, நம்பிக்கை வைத்தார்களா இல்லையா என்பதை நாம் உன்னிப்பார்த்திட எவ்வளவோ அளவுகோல்கள் இருக்கின்றன.

நாங்கள் அரசுப் பொறுப்பேற்று ஆறு ஏழு மாதங்களில் தென் சென்னை பாராளுமன்ற இடைத் தேர்தல் வந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் அந்தத் தொகுதியிலிருந்து பதவி விலகியதால் ஏற்பட்ட அந்த இடைதேர்தலில், இவர்களுக்கு எப்படியோ மக்கள் தப்பித் தவறி வோட்டு போட்டுவிட்டார்கள்,

[திரு. மு. கருணாநிதி] [1970 செப்டம்பர் 9

இந்தக் தேர்தலில் மக்கள் இவர்களைத் தோற்கடித்து விடுவார்கள் என்றெல்லாம் பேசப்பட்டன. ஆனால் தென் சென்னை பாராளுமன்ற இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நின்ற வேட்பாளர் அபரிமிதமான வாக்குகளைப்பெற்று பெரிய வெற்றியை அடைந்தார்கள். அது ஆறுவது மாதத்தில் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் கொண்டிருந்த நம்பிக்கைக்கு ஒரு சான்றாகும்.

அதைத் தொடர்ந்து தென்காசியில் நடைபெற்ற இடைத் தேர்தல். அது காங்கிரஸ் கட்சியின் இடமாக இருந்தாலும் 500 வாக்குகள் வித்தியாசத்தில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் தோற்றிருந்தாலும் பிறகு நடைபெற்ற தென்காசி இடைத் தேர்தலில் ஏறத்தாழ 20,000 வோட்டுகள் வித்தியாசத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அங்கு வாகை சூடியது என்பது மக்கள் கழகத்தின் மீது கழக அரசின் மீது வைத்துள்ள நம்பிக்கைதான் காரணமாகும்.

பின்னர் சாத்தூரில் நடைபெற்ற இடைத் தேர்தல். அங்கு எங்கள் தோழமைக் கட்சிக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு அளித்தது. அங்கேயும் தோழமைக் கட்சியான சுதந்திராக் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது என்பதை அனைவரும் அறிவீர்கள்.

மாநகராட்சி மன்றத்திலும் இந்த ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்றபிறகு திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்கிற அளவிற்கு பெரும்பான்மையான இடங்களைப் பெற்றதையும் யாரும் மறந்திருக்க முடியாது. நகராட்சி மன்றங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஏழெட்டு இடங்கள்தான் அங்கு இருந்தன, இப்போது ஐம்பதுக்கு மேற்பட்ட நகராட்சி மன்றங்களில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் வீற்றிருக்கிறார்கள். இது மக்களுக்கு இந்த அரசின் மீதுள்ள நம்பிக்கைக்கு அடையாளம்தான்.

புதுவை மாநிலத்தில் ஒரு காலத்தில் நாங்கள் போட்டியிட்டு கட்டிய பணத்தைக் கூட திரும்பப் பெறமுடியாத நிலை இருந்ததும் உண்மை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு இங்கே அமைந்த பிறகு புதுவை மாநிலத்தில் நடைபெற்ற இடைத் தேர்தலில் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகமும் வலது சாரி கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து ஒரு கூட்டணி ஆட்சி உருவாகி முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் அங்கு முதல் அமைச்சராக வீற்றிருக்கிறார்கள் என்பதும் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி நல்லமுறையில் நடைபெறுகிறது என்கிற அந்த இனிய காற்றின் வாடை அங்கே வீசிய காரணத்தினால்தான் புதுவையில் முன்னேற்றக் கழகத்திற்கு அப்படிப்பட்ட வெற்றி கிடைத்திருக்கிறது.

ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஏதேதோ பட்டியல்களை எல்லாம் போட்டுக் காட்டுகிறார்கள், தவறான கணக்குகளை எல்லாம் காட்டுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இது கட்சி சார்பில் நடைபெறுவதல்ல என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் கட்சிக் கணக்கைக் காட்டுவதாகச் சொன்னார்கள். எனது பணிவான வேண்டுகோளை அவர்கள் ஏற்றுக்கொண்டு இரண்டு கட்சிப் பத்திரிகைகளையும் எடுத்து தேதிவாரியாக அவர்கள் பார்க்கட்டும். ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்தல் நடைபெற்ற நேரத்தில் காங்கிரஸுக்கு வெற்றி, காங்கிரசுக்கு வெற்றி என்று முதலில் அப்படிச் செய்திகளை வெளியிட்டவை காங்கிரஸ்



1970 செப்டம்பர் 9] [திரு. மு. கருணாநிதி]

கட்சிப பத்திரிகைகளா அல்லது கழக ஏடுகளா என்பதை அவர்களே எடுத்து ஆராய்ந்து பார்ப்பது நல்லது. அப்படிச் செய்திகள் வெளிவந்த பிறகுதான் கழக ஏடுகளிலும் அப்படிச் செய்திகளை வெளியிட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 178 இடங்களைப் பெற்றிருக்கிறது. அவர்களில் எட்டு அல்லது பத்து பேர்கள் கழக ஆதரவோடு வெற்றி பெற்ற சுயேச்சைகளாக இருக்கலாம். இப்படி 178 பேர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சொல்வது உண்மை அல்ல, உண்மைக்கு மாறாகச் சொல்கிறார்கள் என்றெல்லாம் மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லியும் மக்கள் நிலைமையைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதினால் இப்போது ராம்சுபாக் சிங்-ஐக் கொண்டு சொல்லச் சொல்லி அவர்கள் ஓர் அறிக்கை விட்டபிறகு அதற்கு நான் தந்த விபரப்படி 178 பேர்கள் வென்றிருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறார்களா? இல்லை என்றால் இன்னும் இரண்டு நாட்களில் மாநில சுயாட்சி மாநாட்டில் அவர்கள் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறார்கள். அதன் பிறகாவது நம்புவார்களா, இல்லை, ஆள் மாறாட்டம் செய்து விட்டார்கள், இவர்கள் அந்த ஆட்கள் இல்லை என்று சொல்வார்களோ என்னவோ எனக்குத் தெரியாது.

ஆகவே, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தலில் இருந்து இந்த அரசின்பால் மக்களுக்கு நல்லவகையில் நம்பிக்கையிருக்கிறது என்பதை மக்கள் நல்ல முறையில் மெய்ப்பித்திருக்கிறார்கள். இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மூலம் பேசிய நேரத்தில் துப்பாக்கிச் சூடுகள் பற்றியெல்லாம் பேசப்பட்டது. கண்டனத் தீர்மானத்திற்கு ஆதரவாக எழுந்துநின்று அதற்குப் பிறகு அதையொட்டிப் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், என் அருமை நண்பர் கருத்திருமன் அவர்கள் பேசும்போது போலீஸ் அடக்குமுறை அத்து மீறி விட்டது, அத்துமீறி விட்டது என்றெல்லாம் சொன்னார்கள்.

இருபதாண்டுக் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்கள் எவ்வளவு என்றால்—கிடைத்திருக்கிற தகவலை வைத்துச் சொல்கிறேன், இன்னும் சேகரித்தால் அதிகமாகக் கிடைக்குமே தவிர குறையாது—103 துப்பாக்கிப் பிரயோகங்கள். அந்த அரசு கொடுத்த கணக்கின்படியே அதில் ஏற்பட்ட சாவு 155 பேர்கள். ஆக 108 முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்து 155 பேர்களைக் கொன்று குவித்த அந்தக் கட்சி இன்றையதினம் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்து கொண்டு கழக ஆட்சியில் துப்பாக்கிப் பிரயோகம் அத்துமீறி விட்டது என்று பேசுவது நியாயமாகாது.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான் செய்தார்கள் என்றால் அதை நீங்களும் செய்யலாமா என்று கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் கேட்கலாம். கம்யூனிஸ்ட்கள் ஆண்ட கேரளாவில், தோழர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் ஆட்சி செலுத்திய நேரத்தில் 58 ஜூலை முதல் 59 ஜூலை முடிய ஒரு ஆண்டுக் காலத்தில் நான்கு துப்பாக்கிப் பிரயோகங்கள், 19 பேர்கள் சாவு. அதே கேரளத்தில் 1967 முதல் 1970 வரையில் இந்த மூன்றாண்டுக் காலத்தில் 15 துப்பாக்கிப் பிரயோகங்கள் 19 சாவுகள் ஏற்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறவில்லை என்று நான் மறுக்கவில்லை. நடைபெற்றிருக்கிறது. தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் அந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது என்பதையும் அப்படி நடைபெற்ற நேரத்திலெல்லாம் அரசுக் கட்டிலில் வீற்றிருக்கும் நாங்கள் அதிர்ச்சியடைந்திருக்கிறோம் என்பதையும், ஆனால் முன்பெல்லாம் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்ற நேரங்களில் அதைப் பற்றி அவர்கள் அதிர்ச்சியடையாமல், "சுடுகிற இடத்திற்குப் போனால் சுடாமல் என்ன செய்ய வேண்டும்?" என்கிற அளவிற்குப் பதில்கள் தரப்பட்ட ஆட்சி அந்தக் காலத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. எவ்வளவோ கிளர்ச்சிகள் நடைபெற்றன.

தொழிலாளர்கள் பற்றிச் சொன்னார்கள், தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட பிறகு கிளர்ச்சிகள் நடைபெற்றன என்று. இதில் வேடிக்கை என்னவென்றால், குறிப்பிட்ட சில கிளர்ச்சிகளும் தொழிலாளர்களின் கோரிக்கைகள் இந்த அரசால் கவனிக்கப்பட்டு அவர்களுடைய முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பேச்சுவார்த்தைகள் முடிவுற்று அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகுதான் தொடங்கியிருக்கின்றன. இதை மிக நன்றாக உணருவீர்கள் என்று கருதுகிறேன்.

மின்சார வாரிய ஊழியர்களை எடுத்துக் கொள்ளுங்கள். மின்சார வாரிய ஊழியர்கள் ஊதிய உயர்வு வேண்டுமென்று கேட்ட நேரத்தில் நான் அவர்களோடு நான்கைந்து நாட்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தி, மின்சார வாரியத் துறை அமைச்சர் அவர்கள், நான், வாரியத் தலைவர் அவர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள்—அதில் கழகப் பிரதிநிதிகளும் உண்டு, வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பிரதிநிதிகளும் உண்டு—ஆக எல்லோரும் கூடி பேச்சுவார்த்தை நடத்தி பத்து பதினைந்து ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த ஊதியத்தினை அவர்களுக்கெல்லாம் போதும் போதும் என்கிற அளவில் உயர்த்திக் கொடுத்து அதன் காரணமாக 4 கோடி ரூபாய் அதிகச் செலவை மின்சார வாரியம் ஏற்றுக்கொள்கிற அளவிற்கு அவர்களுடைய முறையீடுகள் கவனிக்கப்பட்டிருக்கின்றன.

ஊதிய உயர்வை அறிவித்தபோது என்னுடைய கையைக் குலுக்கிவிட்டு நன்றி தெரிவித்து விட்டுச் சென்ற பொறியாளர்கள் இரண்டு நாட்களில் எல்லாம், என்ன காரணமோ நான் அறியேன், அவர்கள் திடீரென்று வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம் என்றார்கள். எல்லோரும் அல்ல. பொறியாளர்கள் மாத்திரம். இரவு 12 மணிக்கு வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்றார்கள் ஆனால் மாலை 5 மணிக்கே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு மின் விளக்குகள் எல்லாம் எல்லா நகரங்களிலும் அணைந்து போகிற அளவிற்கு ஒரு கொடிய செயலில் ஈடுபட்டு யாரும் வந்து இயந்திரத்தை மறுபடியும் இயக்க முடியாத அளவிற்கு அவைகளைப் பாழ்படுத்திவிட்டு அவர்கள் வெளியேறினார்கள். அப்படி ஒரு சதித்திட்டம் நடைபெற்றால் இந்த அரசு பார்த்துக் கொண்டிருக்குமா என்று நிருபர்கள் கேட்ட நேரத்தில் சதித் திட்டங்களை இந்த அரசு அனுமதிக்காது, சதித் திட்டங்களை இரும்புக் கரங்களைக் கொண்டு அடக்குவோம் என்று சொன்னேன். அப்படிச் சொன்னதில் சில அரசியல்வாதிகள் சதித்திட்டங்களை எடுத்துவிட்டார்கள், இரும்புக் கரத்தை மாத்திரம் பிடித்துக் கொண்டார்கள்.



சதித்திட்டங்கள் நடைபெற்றால் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவோம் என்று சொன்னேன். முன்னாலே சொல்லப்பட்ட வார்த்தைகளை விட்டு விட்டு, இரும்புக் கரம் என்பதை மட்டும் வைத்துக்கொண்டு, விவசாயிகள் போராட்டமா, இரும்புக்கரம், நிலப் பறி இயக்கமா இரும்புக்கரம், இப்படி எந்த போராட்டம் நடைபெற்றாலும் இரும்புக் கரம், இரும்புக்கரம் என்று இந்த இரும்புக்கரம் கொஞ்ச நாள் மிக அதிகமாக அரசியல் வட்டாரத்தில் புழக்கத்தில் இருந்தது. ஆனால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? 9 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒன்பது பேர் கைது செய்யப்பட்டார்கள். உடனடியாக அவர்கள் வேலைக்குத் திரும்புவதற்கு, எழுதிக் கொடுத்த பிறகு அத்தனை பேரும் மன்னிக்கப்பட்டு, அத்தனை பேரும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டு இருக்கிறார்கள். அவர்கள் யாரும் பழி வாங்கப்படவில்லை பழி வாங்குகிற செயலில் அந்த வாரியம் ஈடுபடவில்லை. ஆகவே, இதிலே மிகுந்த இரக்கச் சுபாவத்தோடு பார்க்கவேண்டும். இது பொதுமக்களின் பிரச்னை. இது மிக மிக முக்கியமான விஷயம் நம் உபயோகத்திற்குத் தேவையான ஒன்று. ஆகவே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது அபாயம் என்று கருதியதால் அவர்கள் கைது செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டவர்கள் அத்தனை பேரும் விடுதலை செய்யப்பட்டார்கள். ரூ. 4 கோடி அளவுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்ட பிறகு அவர்களது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு தான் சில அரசியல் நோக்கங்களுக்காக அந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதை அனைவரும் மிக்க பெருந்தன்மையோடு ஒப்புக்கொள்ளவேண்டும்.

இதைப்போலவே நெய்வேலியில் நடைபெற்ற போராட்டத்தில்கூட நெய்வேலித் தொழிலாளர்கள் அங்கே போராட்டம் நடத்துவதற்கு முன்பு என்னைச் சந்தித்தார்கள். அப்போது நான் கண் வலியால் மிகவும் வேதனைப் பட்டுக்கொண்டு இருந்தேன். மூன்று நான்கு நாட்கள் உட்கார்ந்து பேசி 92 லட்சரூபாய் அளவுக்கு அவர்களுக்கு ஊதியம் உயர்த்துவதற்கான நிலை உருவாக்கப்பட்டது. மே 1-ம் தேதி அவர்கள் விழாவைக் கொண்டாடிவிட்டு, அன்றையதினம் ஏற்பட்ட சில சந்தேகங்களின் காரணமாக மறு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். பிறகு அவர்களே ஒப்புக்கொண்டார்கள், அந்த வேலை நிறுத்தம் சட்ட விரோதம் தான். நாங்கள் சட்டப்படி அறிவிப்பு செய்யவில்லை என்று சொன்னார்கள். அந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட சில அசம்பாவிதத்தால் போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்கள். தேவன்பு என்றவர் இறந்து விட்டார். உள்ளபடியே இந்த அரசிலே இருக்கிற அத்தனைபேரும் ஆழ்ந்த அனுதாபத்தோடு அதற்கு வருத்தம் தெரிவித்தோமே, தவிர போராடினார்களா, தேவன்பு சுடப்பட்டாரா, சரிதான் என்று போலீசைத் தட்டிக்கொடுக்கவில்லை. விசாரணை வைத்தோம். அப்படி வைக்கப்பட்ட விசாரணை அறிக்கையிலே கூட குறிப்பிட்ட அதிகாரி கும்பத்திலே போய் நுழைந்தது தவறு என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது. அந்த விசாரணை அறிக்கையை ஏற்றுக் கொள்வோம் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை விவசாயிகள் கிளர்ச்சியைப் பொறுத்தவரையில் அவர்களுடைய கோரிக்கைகளை அரசு அறியும். அதில் என்ன சங்கடங்கள் இருக்கிறது என்பதும் தெரியும். இது பற்றி திரு. புவாரகன் அவர்கள் என்னிடத்தில் வந்து பேசினார்கள். அவர் அமைச்சராகப் பதவியில் இருந்த காரணத்தால் அவர்

களிடத்தில் இருக்கிற சங்கடங்களை விளக்கினேன். திரு. மன்றாடியார் தலைமையில் விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வந்தார்கள். ஒரு முடிவை வெளியிட்டோம். அதற்குப்பிறகு இதே அவையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ‘பாதி கிணறு தாண்டி இருக்கிறீர்கள் என்றாலும் பரவாயில்லை, முழுக் கிணறு தாண்டுகள்’ என்று சொல்கிற அளவுக்கு நான் அந்த விவசாயிகள் பிரச்சினையைக் கவனிக்க முடியாது என்று மறுத்து விட வில்லை. அவர்களுக்கு மான்யமாகக் கொடுப்பது பல கோடி ரூபாயாக ஆகிறது. 75 அடிக்குமேலே உள்ள கிணற்றிற்கு 3 பைசாவும், அதற்குக் குறைவாக உள்ள கிணறுகளுக்கு 10 பைசா வசூலிக்கலாம் என்று சொன்னோம்.

விவசாயச் சங்கத்தின் செயலாளர் எனக்கு எழுதிய கடிதத்தில் என்ன குறிப்பிட்டு இருந்தார். அந்தக் கடிதத்தில், நீங்கள் அந்தச் சலுகை அளித்து இருப்பதற்கு நன்றி, ஆனால் 75 அடி ஆழத்திற்குமேல் உள்ள கிணறுகள் கோவை மாவட்டத்தில் 15 சதவிகிதம் இருக்கின்றன. ஒன்பது பைசா வீதம் 85 சதவிகிதம் பயன் அடைந்து இருக்கின்றனர். ஆகவே இந்த மீதமுள்ள 15 சதவிதக் கிணறுகளுக்கும் 9 பைசாவாக ஆக்கவேண்டுமென்று கேட்டார்கள். உங்கள் மாவட்டத்திற்கு மட்டும் 9 பைசா என்று நிர்ணயிக்க முடியாது, தமிழகத்திலே இருக்கிற வேறு பல மாவட்டங்களிலும் இது போன்று குறைக்க வேண்டிவரும், அதன் காரணமாக மேலும் சில கோடி ரூபாயை இழக்க நேரிடும். இப்போது தேவையில்லை. கொஞ்சம் பொறுத்து இருங்கள் என்று சொன்னேன். அவர் பார்த்துவிட்டுச் சென்ற சில நாட்களுக்குள் ஓர் அறிக்கை விட்டார்கள். வன்முறைக் கிளர்ச்சியில் ஈடுபடுவோம் என்று எழுதினார்கள். அதற்குப்பின்னாலே அவர்களே, அது தவறு என்று குறிப்பிட்டு கடிதம் எழுதிவிட்டு, கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்.

அந்தக் கிளர்ச்சியின் காரணமாக 3 பேர் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானார்கள் என்ற செய்தி வந்தது. மூன்று பேர் என்ன, 30 பேர் செத்தாலும் பரவாயில்லை என்ற அளவுக்கு இந்த அரசு இல்லாமல், இதை அரசு கௌரவப் பிரச்சினையாகப் பார்க்காமல், ஆணவத்தோடு பதில் சொல்லாமல், 3 பேர் உயிர் துப்பாக்கிக் குண்டால் பறிக்கப்பட்டது என்று செய்தி வந்ததும் உடனடியாக நீதி விசாரணை, வைக்க வேண்டுமென்று கேட்பதற்கு முன்னாலே, வைக்கப்பட்டது. நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட்டது. வாங்கமறுத்தார்கள், அல்லது மறுக்கும்படி செய்யப்பட்டார்கள். நஷ்ட ஈடு கேட்காமலேயே நஷ்ட ஈடு வழங்குவதற்கு இந்த அரசு முன் வந்தது. அவர்களுக்கு அனுதாபம் காட்டினோம். தவிர்க்க முடியாத அளவுக்கு இந்தத் துப்பாக்கிச் சூடு ஏற்பட்டு விட்டது என்று உணர்கிறோம். அந்த உணர்வுடன் ஏற்கெனவே ஆண்டு கொண்டு இருந்த காங்கிரஸ் ஆட்சி, காங்கிரஸ் ஆட்சி என்று சொன்னால் திரு. சுருக்கிருமன் அவர்கள் பக்தவத்சலம் என்று நினைக்கலாம், ஆனால் மதிப்பிற்குரிய திரு. காமராஜர் காலத்திலிருந்து நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சி, அப்படிப்பட்ட உடனடியாக செய்யவேண்டிய காரியங்களை செய்து இருக்கிறதா, வரலாறு உண்டா, என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

நிலப்பறி இயக்கம், அதிலே போலீசார் அடக்குமுறை என்று சொன்னார்கள். நிலப்பறி இயக்கம் என்று சொன்ன உடனே கம்யூனிஸ்ட்கள் கோபித்துக்கொள்ளப்போகிறார்கள். நில மீட்சி இயக்கம் என்று அவர்கள் பெயர் கொடுத்து இருக்



கிறார்கள். அந்த நிலப்பறி இயக்கத்தை இந்தியா முழுவதிலும் நடத்துவது என்று திட்டமிட்டார்கள். தமிழ் நாட்டிலும் நடத்தப்போகிறோம் என்று சொன்னார்கள். நடத்துவதற்கு முன்பு எத்தகைய வேகமான அறிக்கைகள் வந்தன. கருணாநிதியின் இரும்புக்கரம் என்ன செய்கிறது பார்ப்போம் என்று அறைகூவல் விடப்பட்டது. இவ்வளவுக்கும் பிறகு அந்த நிலப்பறி இயக்கத்தை 15-ம் தேதி நடத்தப்போகிறோம் என்று சொன்னார்கள். எந்த 15-ம் தேதி, ஆகஸ்ட் 15-ம் தேதி. இந்தியா சுதந்திரம் பெற்ற நாளில். பிரிட்டிஷ்காரனிடத்தில் இருந்து இந்தியாவை மீட்ட நாளில் நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தைப் பறிப்பதற்கு திட்டம் வகுத்தார்கள். அதற்கு பாதயாத்திரை ஏற்பாடு செய்தார்கள்.

அந்தப் பாதயாத்திரை என்பது பிரசாரத்திற்கு எனச் சொல்லப்பட்டதே தவிர, அது வெறும் பிரசாரத்திற்கு மட்டும் அல்ல என்பதும் ஆங்காங்கு நிலப்பறி இயக்கத்தில் ஈடுபடுவதற்கு ஆட்களை திரட்டுவதற்காக என்று அறிந்து காவல் துறை வெகு உன்னிப்பாகக் கண்காணித்து நடவடிக்கை எடுத்தார்கள். அப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளிலும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் எந்த வித மதிப்புக் குறைவாகவும் நடத்தப்படவில்லை. எந்த அசௌகர்யமும் ஏற்படாத அளவுக்குப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சிறைச்சாலை அதிகாரிகளுக்குச் சொல்லப்பட்டது.

திரு. கல்யாணசுந்தரம், திரு. மணலி கந்தசாமி அவர்களும் ஏற்கெனவே உடல் நிலை சரியில்லாதவர்கள். திரு. கல்யாணசுந்தரம் அவர்களுக்கு சுவாச நோய் உண்டு. சட்டமன்றத்திலே தான் கொஞ்சம் கஷ்டப்பட்டு எழுந்து நின்று பேசுவார். மற்றப் பொதுக்கூட்டங்களில் பேசுகிறபோது உட்கார்ந்து கொண்டு தான் பேசுவார். மணலி கந்தசாமி அவர்களும் உடல் நலம் சரியில்லாதவர்கள். மிகுந்த கவனிப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். அவரைத் திருச்சியிலிருந்து சென்னைக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். என்னைப் பாளையங்கோட்டைக்கு போலீஸ் லாரியில் ஏற்றிச் சென்றதைபோல் அவரை அழைத்து வராதீர்கள் காரில் அழைத்து வாருங்கள் என்று சொன்னேன். அவர் பெரிய காரில் டி.ஐ.ஜி காரில் அழைத்து வரப்பட்டார். இங்கே சென்னை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தகுந்தமுறையில் அவர் கவனிக்கப்பட்டார்.

அது மாத்திரம் அல்ல, அந்த இயக்கத்திலே ஈடுபட்ட கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் யாராவது பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலுக்குப் போட்டியிட இருந்தாலும், ஓட்டளிக்கவேண்டியவர்களாக இருந்தாலும், இந்த அரசு அவர்களை வர ஒட்டாமல் செய்யவேண்டுமென்று எண்ணி இருந்தால் அவர்களை வெளியே விடாமல் செய்து இருக்க முடியும். ஆனால் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் நாங்கள் அந்தத் தேர்தலில் அவர்கள் ஈடுபட வழி வகை செய்து அவர்கள் அத்தனை பேரையும் விடுதலை செய்தோம். தேர்தலில் கலந்து கொண்டார்கள். கைது செய்யப்பட்ட காரணத்திற்காக, சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட காரணமாக அந்த யூனியன் தலைவர் தேர்தலில் யாரும் தோல்வி அடையவில்லை. அவர்கள் குறித்து வைத்த இடங்களில் நிச்சயமாக அவர்கள் வெற்றி பெற்று இருக்கிறார்கள்.

இந்த இயக்கத்தை இங்கே நடத்துவதற்கு எத்தனையோ வாதங்களை எடுத்துச் சொல்லும் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் இந்த இயக்கம் கேரளத்தில் நடைபெற்ற போது என்ன முறைகள் கையாளப்பட்டன, காவல் துறையினர் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று மிகத் தாழ்மையோடு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், தோழமைக் கட்சி என்ற முறையோடு நான் கேட்கிறேன்.

கேரளத்தில் புதிய நிலச் சீர்திருத்தச் சட்டம் ஜனவரி முதல் தேதியன்று அமுலுக்கு வந்துள்ளது. அங்குள்ள இடது கம்யூனிஸ்டுகள் தாங்களாகவே நிலங்களைக் கைப்பற்றிக்கொண்டு குடிசைகளைப் போட்டார்கள். அவர்களை வலது கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சி கைது செய்தது. இது இரண்டாம் தேதி நடைபெற்றது. பிறகு ஜனவரி நான்காம் தேதி ஆலப்புழை மாவட்டத்தில் புறம்போக்கு நிலத்தில் போடப்பட்ட 700 குடிசைகளை கேரளப் போலீஸ் பிரித்தெறிந்தது. இப்பொழுது நடைபெற்றால் எத்தனை பத்திரிகைகளில் எத்தனை விதமான படங்கள் வெளிவந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஜனவரி மூன்றும் தேதியன்று எரணாகுளம் திருவாணியூரில் மார்க்சிஸ்டு ஆக்கிரமிப்பாளர்கள் நடத்திய கிளர்ச்சியில் போலீசார் தடியடி நடைபெற்றது. ஏழு பேர்களுக்குப் பலத்த காயம். பிப்ரவரி ஐந்தாம் தேதியன்று கேரளச் சாலைப் போக்குவரத்து கார்ப்பரேஷன் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள், 1300 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் அச்சுத மேனன் ஆட்சியில்.

அச்சுதமேனன் அவர்கள் என்ன சொன்னார்கள்? துரதிருஷ்டவசமான நிகழ்ச்சிகளின் காரணமாகப் போலீஸார் சில இடங்களில் தடியடிப் பிரயோகத்தையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொள்ள நேர்ந்தது. ஏதேனும் ஒரு அரசியல் கட்சி வன்முறையில் ஈடுபடும்படி வேண்டுகோள் விட்டால், அதற்குத் தலைமை தாங்கவும் செய்தால் அதை அரசாங்கம் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது என்று சொன்னார். கேரளாவின் முதல் அமைச்சர், வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அங்கே அப்படி சொல்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கிற வலதுசாரி கம்யூனிஸ்டு நண்பர்கள் நாங்கள் வன்முறையில் ஈடுபட்டால் எங்களை அடக்கலாமா, ஒடுக்கலாமா என்று கேட்கிறார்கள்.

அது மாத்திரமல்ல. குடிகிடப்புக்காரர்கள் ஆளுக்கு 10 செண்டு நிலத்தை வேலி போட்டுக்கொண்டார்கள், ஆளுக்கு 10 செண்டு நிலத்தை எடுத்துக் கொண்டார்கள். இடது கம்யூனிஸ்ட்டுகள் அப்படி வேலி போட்டுக் கொண்டார்கள். வலதுசாரிக் கம்யூனிஸ்டு அதை அங்கே எப்படி அணுகியிருக்கிறது, அந்த ஆட்சி எப்படி அணுகியிருக்கிறது? 50,000 வழக்குகள் பதிவு இங்கே 10,000 பேர்கள் என்று சொன்னார்கள். திரு. நல்லசிவன் அவர்கள் அதில் 3000 பேர்கள் அவர்களே அல்ல, வேறு சாலையில் இருந்தவர்களைப் பிடித்து விட்டார்கள் என்று சொன்னார்கள். சரியாகக் கணக்குத் தெரியாது. 10,000 பேர்கள் என்று அவர்கள் பெருமையோடு சொன்னார்கள். 50,000 பேர்களின் மீது வலதுசாரி கம்யூனிஸ்டு ஆட்சி வழக்கு போட்டது. 1200 பேர்கள் போலீஸ் அடக்கு முறைக்கு ஆளானார்கள். போலீஸ் முகாமில் 200 பேர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள். இவைகளையெல்லாம் இங்கிருந்து வெளியிடப்



படுகிற தீக்கதிர் என்ற பத்திரிகை 23—3—1970 அன்று எழுதியிருக்கிறது என்பதையும் நான் கம்யூனிஸ்டு கட்சி நண்பர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஏதோ தமிழ் நாட்டில் விதிவிலக்குகளையெல்லாம் ரத்து செய்யவில்லை, தமிழ் நாட்டில் நிலப்பிரபுக்களினுடைய பக்கத்தில் தி. மு. க. அரசு ஓடிக்கொண்டிருக்கிறது. விதிவிலக்குகள் ரத்து செய்யப்படவேண்டும் என்று சாதாரண பாமர மக்களிடையே நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் உண்மை என்ன? கேரளத்தில் இடதுசாரி கம்யூனிஸ்டு ஆண்ட நேரத்திலும் கேட்கிறேன், வலதுசாரி கம்யூனிஸ்டுகள் ஆண்ட நேரத்திலும் கேட்கிறேன், அங்கே உள்ள நிலைமை என்ன? அங்கே விதிவிலக்கு நிலங்களுக்கு உண்டு. கோவில்கள், மடங்கள், மசூதிகள் இவைகளின் நிலங்களுக்கு உச்ச வரம்புச் சட்டத்தில் அங்கே விதிவிலக்கு உண்டு. தனிப்பட்டவர்களுடைய காடுகளுக்கு விதிவிலக்கு உண்டு. ஆலைகளின் நிலங்களுக்கு விதிவிலக்கு உண்டு. மலைத் தோட்டங்களுக்கு விதிவிலக்கு உண்டு. பொது டிரஸ்டுகளுக்கு அங்கே விதிவிலக்கு உண்டு. ஆனால் இங்கே மாத்திரம் நாங்கள் விதிவிலக்கு இருப்பதை எதிர்த்துத் தான் இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம், நடத்துகிறோம் என்று கூறுவது முறையல்ல என்பதை நான் இந்தக் கிளர்ச்சி இப்பொழுது முடிவுற்றுவிட்டாலும் கூட ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஒவ்வொரு கிளர்ச்சியின்போதும் நடைபெற்றிருக்கிற போலீஸ் நடவடிக்கை மீது இந்த அரசு உரிய நடவடிக்கை 3, 3½ ஆண்டு காலமாக எடுத்திருக்கிறதா, இல்லையா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். கீழ்வெண்மணி சம்பவம் கொடுமையான சம்பவம். அந்தச் சம்பவம் நடைபெற்ற நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் இரண்டு நாட்களுக்கு உணவு கூட அருந்தாமல் உறங்காமல் அவர்கள் இருந்த காட்சியை நாமெல்லாம் பார்த்திருக்கிறோம். அவர்களோடு பேசிய மதிப்பிற்குரிய திரு. ராமமூர்த்தி, எம். பி. அவர்கள் அண்ணா அவர்களுக்கு ஆறுதல் கூறுகிற அளவுக்கு அன்று அவர்கள் சோர்ந்து கிடந்ததை யாரும் மறந்துவிடக்கூடாது. அப்படிப்பட்ட கீழ்வெண்மணி சம்பவத்திற்கு தி. மு. க. ஆட்சி காரணம் என்று கூடச் சொல்கிறார்கள். அதற்காகக் காங்கிரஸ் சார்பிலே கண்டனத் தீர்மானம் கொண்டுவந்த நேரத்தில் திரு. சங்கரய்யா அவர்கள் அந்தக் கண்டனத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது, காங்கிரஸ் அதைக் கொண்டு வந்திருப்பது அரசியல் லாபத்திற்கேதவிர, வேறு அல்ல, கண்டனத் தீர்மானத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்று திரு. சங்கரய்யா அவர்கள் கூறியது எனக்குப் பசுமையாக ஞாபகத்தில் இருக்கிறது. அதை அன்றைக்குக் கூட அவர்கள் நினைவு படுத்தினார்கள்.

ஆகவே, அரசியல் லாபத்திற்கு வெண்மணி சம்பவத்தை யாரும் பயன்படுத்தக்கூடாது. அது எதிர்பாராத வகையில் ஏற்பட்டுவிட்ட ஒரு சம்பவம். அந்தச் சம்பவத்தை ஒட்டி தஞ்சை மாவட்டத்தில் அமைதி நிலவ வேண்டும் என்ற அடிப்படையில் அங்கே கணபதியாப் பிள்ளை கமிஷன் நியமிக்கப்பட்டது. கீழ்வேண்மணியில் நடைபெற்றது முடிந்த காரியம் என்று நாங்கள் சும்மா இருந்துவிடவில்லை. உடனடியாக, பிரச்னையைக் கவனித்து, ஆராய்ந்து தஞ்சைத் தரணியில் அமைதி நிலவ என்ன வழிவகைகளைக் காணலாம் என்பதற்காக கணபதியா பிள்ளை கமிஷன் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷன் தந்த பரிந்

முறையின்படி நியாயக் கூலி நிர்ணயிக்கப்பட்டு, இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் ஒரு அமைதியான சூழ்நிலை உருவாகி இருப்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

துப்பாக்கிப் பிரயோகம் எதுவாக இருந்தாலும், அதில் நீதி விசாரணை வைக்க இந்த அரசு தயங்கியது இல்லை என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு. அரவங்காடு துப்பாக்கிப் பிரயோகம் குறித்து நீதி விசாரணை வைக்கப்பட்டு, மாவட்ட நீதிபதி திரு. கணேசன் அவர்கள் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு, அவரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

சென்னையில் மாணவர்கள் பஸ் தொழிலாளர்கள் மோதல் ஏற்பட்டபொழுது, ஜஸ்டிஸ் சோமசுந்தரம் அவர்களால் நீதி விசாரணை வைக்கப்பட்டு, அவர்கள் செய்துள்ள பரிந்துரைகளின்படி ஆயிரக்கணக்கான ரூபாய் மாணவர்களுக்கு நஷ்டஈடாகத் தரப்பட்டிருக்கிறது. அந்தப் பரிந்துரையை இந்த அரசு மறுத்துவிடவில்லை. ஏற்றுக்கொண்டு, பாதிக்கப்பட்ட மாணவர்கள் அத்தனை பேர்களுக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்ட ஈடாக அரசு கொடுத்திருக்கிறது.

உடையார்பாளையம் துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக ஜஸ்டிஸ் ராமப்பிரசாத ராவ் அவர்களைக் கொண்டு நீதி விசாரணை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. பெருமாநல்லூரைப் பொறுத்தவரையில், முன்னாள் உயர்நீதி மன்ற நீதிபதி திரு. ராமகிருஷ்ணன், ஐ.ஸி.எஸ். அவர்கள் நீதி விசாரணைக்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால், நான் கேட்கிறேன். ஒரு பெரிய நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து, இந்த மன்றமே அதிர்கின்ற அளவுக்கு அன்றைய தினம் பேசப்பட்டது. ஒரு நிகழ்ச்சி, 1957-ம் ஆண்டு நடைபெற்ற முதுகுளத்தூர் சம்பவம். முதுகளத்தூர் சம்பவத்தில் வயல்வெளியில் மிதந்த பிணங்கள் எத்தனை? அங்கே வைக்கோல் போரில் கருண்டு விழுந்த குழந்தைகள் எத்தனை? தாலி அறுத்தவர்கள் எத்தனை பேர்? நான் தேவர்கள், அரிசனங்கள் என்று பிரித்துப் பேச விரும்பவில்லை. இந்தச் சமுதாயத்து மக்கள், தமிழ் நாட்டுப் பெருங்குடி மக்கள்! முதுகளத்தூர் சீமையிலே மக்களின் ரத்த ஆறு ஓடிற்று. பயிர்கள் பேரில் இருப்பது நீரா அல்லது ரத்தமா என்று வித்தியாசம் தெரியாத அளவுக்கு முதுகளத்தூரில் 40 நாட்களுக்குமேல் கொடுமையான சம்பவம் நடந்தது.

ஐந்து மறவர்கள் ஒரு கோவிலின் வாயிலில் கை கட்டப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, போலீஸ் எதிரில் நிறுத்தப்பட்டு, சுடு என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, 1, 2, 3, 4, 5 என்று எண்ணப்பட்டு, ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் ஒருவராகச் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இப்படி ஐந்து மறவர்குல மாணிக்கங்கள் முதுகளத்தூரில் உயிர்நீத்தனர். ஆதித்திராவிட மக்கள் வைக்கோல் போரில் கொளுத்தப்பட்டார்கள்கொலை செய்யப்பட்டார்கள். என்ன கேட்டோம்? கம்யூனிஸ்டு தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் அப்பொழுதிருந்த அவர்கள் ஆட்சியில் நீதி விசாரணை கேட்ட நேரத்தில், காமராஜ் சர்க்கார் அதற்கு இணங்கியதா? காமராஜர் அவர்கள் அதற்கு இணக்கம் தெரிவித்தாரா? இங்கே தான் அமர்ந்திருந்தார் காமராஜர்



அவர்கள் அப்போது. அவர் பக்கத்தில் இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் என்ன சொன்னார்? எடுத்ததற்கெல்லாம் நீதி விசாரணை என்றால், போலீஸார் தங்கள் கையிலே துப்பாக்கியையே தூக்கமாட்டார்கள், தங்கள் கடமையைச் செய்ய மாட்டார்கள் என்று சொன்னார்கள். இப்பொழுது நீதி விசாரணை வைத்திருக்கிறோம். நாற்பது நாள் நடைபெற்ற அமளி, ரத்தப் புரட்சி, அப்படிப்பட்ட முதுகளத்தூர் சம்பவத்திற்கு ஒரு நீதி விசாரணை வைக்கப்பட்டதா? காமராஜ் தலைமையில் இருந்த காங்கிரஸ மந்திரிசபை இதை மறுத்துவிட்டது என்பதையும் நான் இங்கே ஞாபகப்படுத்துகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, நான் அன்றும் ஆளும் கட்சி கொறடாவாக இருந்தேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அப்பொழுது தி. மு. க. அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்தார்களா என்று கேட்க விரும்புகிறேன். இப்பொழுது இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு அவர்களுக்கு பரிந்து பேசுகின்ற முதல் அமைச்சர் அவர்கள் அப்பொழுது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து, வோட்டுப் போட்டிருக்கலாமே? அவர்கள் அப்பொழுது அப்படிச் செய்யவில்லையே?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நீதி விசாரணை வைத்தார்களா என்று நான் கேட்கிறேன். காமராஜ் அவர்களின் மீது மாத்திரம் நம்பிக்கையிலலாத் தீர்மானம் இருக்கிற காரணத்தினால், அண்ணா அவர்கள் பெருந்தன்மையோடு சொன்னார்கள், அப்பொழுதே சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை, ஆகவே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடுநிலைமை வகிக்கிறேன் என்று குறிப்பிட்டு, இறுதியாகப் பேசும்பொழுது நீதி விசாரணை வேண்டும் என்று கேட்டார்கள். அப்பொழுது நீதி விசாரணை நீங்கள் வைக்கவில்லையே என்று நான் கேட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது வோட்டு அளிக்கவில்லையே என்று அவர் கேட்கிறார். நீதி விசாரணை வைக்கவில்லை என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறேன் நான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முறைப்படி நீதி விசாரணை வேண்டும் என்று சொன்னால் அப்பொழுது நீங்கள் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் பேரில் வோட்டுப்போட்டிருக்கவேண்டும். நீதி விசாரணை கேட்பது என்றால், அவர்கள் எடுத்த நிலை என்ன? யாராக இருந்தாலும் சரி. ஏற்கனவே சொன்னார்கள். குழப்பம் இருந்தாலும் சரி, சர்க்காரில் தவறுகள் நடந்தாலும் சரி, அதைத் தடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். இன்று அச்சுத மேனன் அவர்களுக்கும் மறவர்களுக்கும் பரிதாபப்படுபவர்கள் அன்று ஏன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பேரில் வோட்டுப் போடவில்லை என்பது தான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பழைய சட்டசபை நடவடிக்கைகளையெல்லாம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் படித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் என்ன பேசினார்கள்? எப்பொழுது வெளி நடப்புச் செய்தார்கள் என்று கேட்கிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த காங்கிரசே இப்போது அவசரப்பட்டு வெளியேறிடுவோம் என்றபோது, அமைச்சர் மாதவன் அப்பொழுது தடுத்து நினைவூட்டவில்லை யென்றால், வெளியேயே போயிருப்பார்கள், கண்டனத் தீர்மானத்தின் கருத்துக்களை வற்புறுத்தினோம். அதன்

பிறகு (குறுக்கீடு) நான் கேட்பது அந்தப் பிணங்கள் யார்பாக, தேவராக இருந்தாலும், ஹரிஜன ஏழை மக்களாக இருந்தாலும் சரி, பிணங்களின் சார்பில் கேட்கப்பட்ட நீதி விசாரணை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்கிற குற்றச் சாட்டைச் சொல்லுகின்றேன். வேறொன்றுமில்லை. துப்பாக்கிச் சூடு நடக்கலாம். சந்தர்ப்பங்களைப் பொறுத்து நடக்கலாம். தவறாக நடக்கலாம். அதைக் கேட்டால், அப்படித்தான் சுடுவோம் என்று சொல்லிய ஆட்சி அப்போது இருந்தது, ஐயோ, நடந்துவிட்டதே, நீதி விசாரணை நடத்துவோம் என்கிற ஆட்சி இப்பொழுது இருக்கிறது என்று அந்த வித்தியாசத்தை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று சொன்னேன், வேறில்லை.

போலீஸ் காவலில் இறந்தவர்கள் பற்றியெல்லாம் கூறப்பட்டது. பல முறை கண்டித்திருக்கிறோம். போலீஸ் லாக்அப்பில் இறந்து போவதை எதிர்க் கட்சியில் இருந்தபோதும், இப்பொழுது ஆளுங் கட்சியில் இருக்கும்போதும், கண்டிக்கிறோம். ஆளும் கட்சியில் வந்தபிறகு போலீஸ் லாக்அப்பில் செத்துவிடலாம் என்று அனுமதி கொடுத்து உத்தரவு போடப்பட்டதா? ஒரு பெண் கைது செய்யப் பட்டால், உடனடியாக போலீஸ் லாக்அப்பில் வைக்கக் கூடாது, சப்-ஜெயிலுக்கு அனுப்ப வேண்டும் என்று போட்டிருக்கும் உத்தரவு பற்றி திரு. சங்கரய்யா பேசும்போது நினைவு படுத்தினார்கள். ஜமீலா அம்மையார் வழக்கின் காரணமாக போலீஸ் அதிகாரிகள், இப்பொழுது வேலையில் இல்லாமல், சஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறார்கள். மாயவரத்தில் ராகவன் என்பவர் இறந்தார். உடனடியாகத் தஞ்சாவூரில் இருக்கின்ற மருத்துவர் பிரேத விசாரணை நடத்தினார். அதற்குப் பிறகு தவறு இருப்பதைக் கண்டு, போலீஸ் அதிகாரி ஸஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறார். ஆகவே, இந்த அரசு போலீஸ் லாக்அப்பில் இறந்தார்கள் என்றால் போலிக் காரணங்களைச் சொல்லி, தற்கொலை செய்துகொண்டார், அல்லது இயற்கையாகச் செத்து விட்டார் என்று சொல்லவில்லை. உண்மையிலேயே அவர்கள் இயற்கையாகக் கூட இறந்திருக்கக்கலாம். சில இடங்களில் உண்மையில் கொடுமை இழைக்கப் பட்டிருந்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சில நேரங்களில் இயற்கையாகக் கூட செத்து விடலாம். சில நேரங்களில் தூக்கு மாட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால் எப்படியிருந்தாலும், எடுத்துச் சொல்லப்படும் விஷயங்களில் அலட்சியம் காட்டாமல், உண்மைகளை ஆராய, விசாரணை நடத்துகிறது இந்த அரசு. இரண்டு உதாரணங்களை அண்மையில் நடந்தவற்றைச் சொன்னேன். மாயவரத்தில் ராகவன் வழக்கு, தஞ்சாவூரில் ஜமீலா அம்மையார் வழக்கு, ஆக இரண்டும்.

அடுத்து, ஆமத்தூர் கொடுமையைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எனக்குக் கிடைத்த தகவல் படி, கடந்த பிப்ரவரி 7-ம் தேதி இரவு 9 மணிஅளவில், காட்டுக் கருப்பன் என்ற அரிஜன் கிராமச் சாவடியில் தூங்கிக் கொண்டிருந்த போது அவர் அரிவாளால் தாக்கிக் கொலை செய்யப் பட்டார். இவ்வழக்கில் சம்மந்தப்பட்டதாகக் கருப்பண்ணன், அவரது மகன் அய்யாவு, அவருடைய மனைவி கருப்பாயி ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டனர். ஆனால் குற்றவாளிகள் அல்ல என இராமநாதபுரம் செஷன்ஸ் நீதிபதியால் விடுவிக்கப் பட்டனர். இறந்தவரும் குற்றம் சாட்டப்பட்டவர்களும் அரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள். இறந்தவர் குற்றம் செய்வதையே வழக்கமாகக் கொண்ட ஒரு பதிவு செய்யப் பட்ட குற்றவாளி. இதற்கு முன் 16 முறை



தண்டிக்கப் பட்டவர். சாதி இந்துக்கள் வசிக்கும் இடத்தில் வீடு வாங்கியதன் காரணமாக ஆமத்தூரில் எந்த அரிஜனனும் கொலை செய்யப்படவில்லை என இராமநாதபுரம் மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் உண்மையான தகவல்கள் இருக்குமானால், எதிர்க் கட்சித் தலைவர் தேடிக் கொடுத்தால், அதுபற்றி விசாரித்து, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, இன்னொன்று. முதலில் சிறிய குற்றச்சாட்டுகளைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன். பெரிய குற்றச்சாட்டுகளுக்குப் பின்னால் வருகிறேன். சில்லரைக் குற்றச் சாட்டுக்களுக்கு பதில் சொல்லிவிடுகிறேன்.

கார்களைப் பற்றிச் சொன்னார்கள், எம்.எல்.ஏ. க்கள் பரிசு அளிப்பு விழாக்கள் நடத்துகிறார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. எம்.எல்.ஏ., எம்.எல்.சி. களுக்கு இந்தக் கார்கள் பொறுத்தவரையில், சர்க்காருடைய 'அலாட்மெண்ட்' 1967 லிருந்து, 1970 வரையில் சுமார் 159 கார்கள் தரப்பட்டிருக்கின்றன. இவற்றில் முன்னேற்றக் கழகத்தினருக்கு சுமார் 100 கார்களும், காங்கிரஸ்காரர்களுக்கு 28 கார்களும், சுதந்திராக் கட்சிக்காரர்களுக்கு 7 கார்களும், பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்கு 5 கார்களும், இடது கம்யூனிஸ்டுகளுக்கு 3 கார்களும், தமிழ் அரசுக் கழகத்திற்கு 2 கார்களும், குடியரசுக் கட்சி, கே. பி. எஸ். மணிக்கு ஒரு காரும், வலது கம்யூனிஸ்ட் கட்சி, ஏ. கே. சுப்பையாவிற்கு ஒரு காரும், சுயேச்சைகளுக்கு 5 கார்களும் அலாட் செய்யப் பட்டிருக்கின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன்: எங்கள் கட்சியில் யாரும் கார் வாங்கவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் சொன்னது 'அலாட்மெண்ட்' தான். இனிமேல் வேண்டுமானால் வாங்காமல் இருங்கள் அது வேறு.

திரு. வி. கே. கோதண்டராமன்: நீங்கள் சொன்னது வாங்கியிருப்பது, வாங்கியிருப்பது என்று.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை. அலாட்மெண்ட் எப்படி போடப் பட்டது என்று சொன்னேன். நாங்களேவா வலுவிலே போட்டோம். நீங்கள் கேட்டுத்தானே அலாட்மெண்ட் போடப்படும். கேட்காமல் போடமுடியுமா? கேட்கப்படுகிறது. அதற்கு அலாட்மெண்ட் போடப்படுகிறது.

இன்னொரு குற்றச்சாட்டு எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார்கள் அனுமதி பெறாமலே விற்றுவிடுகிறார்கள் என்று. 15 எம். எல். ஏ. க்கள் மறுபடியும் விற்பதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி விநாயகம் கூட விற்பதற்கு அனுமதி . . . .

திரு. கே. விநாயகம்: நான் விற்கமாட்டேன் என்று இன்னும் வைத்திருக்கிறேன். வெளியே போய்ப் பாருங்கள் இருக்கிறது. (சிரிப்பு.)

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அனுமதி கேட்டிருக்கிறார், ஆகவே அனுமதியில்லாமல் விற்றுவிடுவதாகக் குற்றம் சாட்டப்பட்டதால், விநாயகம் கூட அனுமதி கேட்டிருக்கிறார் என்று உங்களைக் காப்பாற்றும் அளவில் சொல்கிறேனே அல்லாமல் வேறில்லை.

**திரு. கே. விநாயகம்:** அன்பளிப்பு பற்றித்தான் இப்பொழுது கேள்வி.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பொது மக்கள் கொடுத்த பணத்தில் கார்களை வாங்குகிறார்கள். திருவெறும்பூர் சுவாமிநாதனுக்குக் கூட ஒரு கார் பொது மக்கள் கொடுத்து, காமராஜ் அவர்களால் அளிக்கப் பட்டிருக்கிறது, அவர்களாக வாங்க முடியாதவர்கள், ஏதோ பெரும் பணக்காரர்கள், எம்.எல்.ஏ. வாக இருக்கிறீர்கள். சொந்தப் பணத்தில் வாங்குகிறீர்கள். எங்கள் தரப்பில் இருக்கிறவர்கள் ஏழை, எளியவர்கள்; ஆகவே, பொது மக்கள் பணம் வசூலித்துக் கொடுத்து கார் வாங்குகிறார்கள்.

பிறகு அதிகாரிகள் நீண்ட நாளாக ஒரே இடத்தில் இருக்கிறார்கள் என்றார்கள் . . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நீண்ட நாளாக சில இடங்களில் இருக்கிறார்கள், இன்னும் சில இடங்களில் அடிக்கடி மாற்றுகிறார்கள். இதன் காரணமாக அட்மினிஸ்ட்ரேஷன் சரியாக இல்லை, ஒழுங்காக இல்லை என்பது குற்றச்சாட்டு. நீண்ட நாளாக என்று சொல்லிப்போட்டு, 4, 5 பேர்களைப் பிடித்துக் காட்டி விட்டுப் போவது சரியில்லை. சில பேர்கள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். மற்ற இடங்களில் லீவில் போய்வந்தாலும், அந்த இடத்திற்கே போகிறார்கள். அதைச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரைப் பற்றிச் சொன்னார்கள். நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் 4 ஆண்டுகளாக நீடிக்கப்பட்டிருக்கிறார். ஒரு காரணம், அங்கே நக்ஸல்பாரி நடவடிக்கை இருப்பதாகக் கண்டு, தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்பது ஒன்று. இரண்டாவது, அந்தப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் ஆக்ரமிப்பு நடந்திருப்பதால், அதுபற்றி அவர் தகவல் சேகரித்திருப்பதால், இன்னொரு மாவட்ட ஆட்சித் தலைவரைப் போட்டால் இவருடைய அனுபவங்களைப் பெற முடியாது என்றும் இவரை மாற்றவில்லை. இதுவரையிலும் பதவியில் அங்கேயே வைக்கப் பட்டிருக்கிறார். உங்கள் ஆட்சியில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருந்த சரித்திரமே கிடையாதா? ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சியில் பல மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் இருந்திருக்கிறார்கள். திரு. வேதநாராயணன், தஞ்சை மாவட்டத்தில் 62 முதல் 66 வரையில் 4 ஆண்டு காலம் இருந்திருக்கிறார்; திரு. சொக்கலிங்கம், ஐ.ஏ.எஸ. திருச்சியில் 63 முதல் 67 வரையில் கலெக்டராக இருந்திருக்கிறார். திரு. அம்பாசங்கர், கன்னியாகுமரி மாவட்டத்தில் 3½ ஆண்டுகள் இருந்திருக்கிறார். திரு. குலாம் முகம்மது பாட்சா திருச்சியில் 4 ஆண்டுகாலம் இருந்திருக்கிறார். திரு. பிரபாகர், ஐ.ஏ.எஸ்., ராமநாதபுரம்-மதுரையில் 4 ஆண்டுகள் இருந்திருக்கிறார். இதைத் தவிர, 1960 முதல் 1967 வரையில், காங்கிரஸ் ஆட்சியில், போலீஸ் துறையில் பல அதிகாரிகள்



மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பதவியில் நீட்டிக்கப் பட்டிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் அப்படியிருந்தவர்கள் 19 அதிகாரிகள்; அவ்வாறு ஒரே இடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருந்திருக்கிறவர்கள், இந்த ஆட்சியில் நீடிக்கப்பட்டிருப்பவர்கள் ஏழு பேர்கள்.

ஆனால் இந்த ஆட்சியில் அப்படி நீடிக்கப்பட்டிருப்பவர்கள் 7 பேர்கள்தான். ஆனால் அந்தக் காலஅளவில் ஏறக்குறைய 19 அதிகாரிகள் காங்கிரஸ் ஆட்சியில் ஒரே இடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அதிகாரிகளைப்பற்றிக் கூறிய குற்றச்சாட்டு ஒன்றும் பிரமாதமானது அல்ல. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர இது ஏற்றது அல்ல என்பது அவருக்கே தெரியும். பல குற்றச்சாட்டுகளில் இது ஒரு சிறிய குற்றச்சாட்டு என்றுதான் எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் கருதுவார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, கூவம் நதித் திட்டத்தைப்பற்றிப் பேசினார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட, தற்போது வழக்கமாகப் படிக்கும் பத்திரிகையைப் பார்த்துவிட்டுப் பேசியிருக்கிறார். கூவம் சீரமைப்புத் திட்டத்தைப்பற்றி ஒருவர் சொல்லியிருக்கிறார். "இது ஒரு நல்ல திட்டம். 70 ஆண்டுகளுக்கு முன்னால், இன்றைக்கு 80 ஆண்டுகளுக்கு முன்னால் ஆங்கிலேயர்கள் அந்தத் திட்டத்தை உருவாக்க முனைந்து அது இயலாத திட்டம் என்றோ, என்னவோ அதை விட்டுவிட்டார்கள். 1958-ல் நாடு சுதந்திரம் அடைந்து 11 ஆண்டுகளுக்குப் பின்னால், இந்தத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று 114 லட்சம் ரூபாய் அளவில் ஒரு திட்டம் போட்டு 1962-ல் செயல்படக்கூடிய திட்டம் என்று ஆகி, பிறகு 1968-69-ல் தொடங்கப்பட்டுள்ளது என்றும் இதனுடைய வரலாற்றைப்பற்றி தலைமைப் பொறியாளர் கூறினார்கள். இது ஒரு நல்ல திட்டம், நிறைவேற்றப்பட வேண்டும்", என்று காங்கிரஸ் கட்சியின் முன்னாள் உறுப்பினர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் மேலவையில் கூறியிருக்கிறார்கள். இதைத்தான் 'மணக்கிறது, மணக்கிறது, கூவம் மணக்கிறது' என்று நாம் சொன்னோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சற்று அழுத்தமாகவும் குத்தலாகவும் 'கூவம் மணக்கிறது, மணக்கிறது', என்று சொன்னார்கள். அது பலருடைய மூக்கைப் பொறுத்த விஷயம். (சிரிப்பு) கூவத்திலுள்ள பழைய நாற்றம் அப்படியே இருக்க வேண்டுமென்று யாராவது சொல்வார்களா? கூவம் நதியை சீர்திருத்தம் செய்ய வேண்டுமா, வேண்டாமா? கூவம் நதியிலே ஆண்டாண்டுக் காலமாக குடியிருந்த கொசுக்கள்தாம் இந்தச் சீர்திருத்தத்தை வேண்டாமென்று சொல்லும். அடுத்தபடியாக 'கூவம் நதித் திட்டத்திலே ஊழல். வீராணம் திட்டத்திலே ஊழல், எங்கும் ஊழல், எதிலும் ஊழல், பைல்களைக் கொண்டு வா', என்றெல்லாம் பேசினார்கள். கூவம் நதித் திட்டத்தைப்பற்றி வந்திருக்கின்ற குற்றச்சாட்டுக்களை பத்திரிகைகளில் மிகப் பயங்கரமாக எழுதுகிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட அதைப் பார்த்துவிட்டுத்தான் இப்படிப் பேசியிருக்கிறார் என்று கருதுகிறேன்.

'மிகப் பயங்கரமான ஊழல் நாற்றமெடுக்கும் கூவம் சீரமைப்புத் திட்டத்தைக் கைவிட்டுவிட திராவிட முன்னேற்றக் கழக அரசு முடிவெடுத்துள்ளதாகத் தெரிகிறது. இதற்கு முன் உதாரணமாக வரும் ஜனவரி வரை

யில் கூவம் வேலையைக் கைவிட்டுவிட அரசு உத்தரவு அனுப்பியுள்ளது. 1 கோடியே 36 லட்சம் ரூபாய்க்குத் திட்டம் என்று கூறி, பின் 2 கோடி ரூபாய் வரையில் நீளும் என்ற நிலையிலுள்ள சென்னை-கூவம் சீரமைப்புத் திட்டம் என்பது ஒரு மாபெரும் ஊழல் களஞ்சியமாகும்', என்று ஒரு பத்திரிகை எழுதியதை வைத்து டாக்டர் ஹாண்டே பேசுவது முறையல்ல. கூவம் சீரமைப்புத் திட்டத்தைக் கைவிட்டுவிட அரசு முடிவு எடுத்துள்ளதாகச் சொல்வது உண்மையல்ல.

எடுத்துக் கொண்ட வேலைகள் இட்டிய திட்டப் பிரகாரம் செவ்வனே நல்ல கண்காணிப்புடன் நடந்து கொண்டிருக்கின்றன. வரும் ஜனவரி வரையில் கூவம் வேலையைக் கைவிட அரசு உத்தரவு அனுப்பியுள்ளது என்று சொல்வது சரியல்ல. திட்டத்தின் மதிப்பீடு 1 கோடியே 10 லட்சம் ரூபாய். இது 2 கோடி ரூபாய் வரையில் நீளும் என்று சொல்வதும் உண்மையல்ல. இப்பொழுதுகூட 500, 600 வேலையாட்கள் மும்முரமாக கூவம் ஆற்றில் வேலை செய்துகொண்டிருக்கின்றார்கள். மழை பெய்ததன் காரணமாக இரண்டொரு இடங்களில் கரைகளில் போடப்பட்டிருந்த ஸ்லாப்கள் விழுந்துவிட்டன. இரண்டொரு இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டன. இதற்கு 2 கோடி ரூபாய், 3 கோடி ரூபாய் வரையில் செலவாகியிருக்கிறது என்று தவறான பிரசாரம் செய்கிறார்கள். நாம் போட்ட திட்டம் 1 கோடியே 10 லட்சம் ரூபாய். நாம் இதுவரைக்கும் செலவு செய்தது 61 லட்சம்தான். கூவம் ஊழல், கூவம் ஊழல் என்று சொன்னது அவர்களுடைய அரசியல் பேச்சுக்கு உதாரணமாக இருக்கும் என்பதைத் தவிர வேறென்ன சொல்வது?

கூவம் திட்டத்தினைப்பற்றி இப்படிப் பேசுகிறார்களே, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட வீடூர் நீர்த் தேக்கத் திட்டம் என்னவாயிற்று? 1959-ம் ஆண்டு 89 லட்சம் ரூபாய் செலவில் இந்தத் தேக்கம் கட்டப்பட்டது. 1966-ம் ஆண்டு பெய்த மழையில் அது உடைந்து, மேற்கொண்டு 22 லட்சம் ரூபாய் செலவிட்டு புதுப்பிக்கப்பட்டது. அது உடைந்ததால் 20 ஏக்கர், 30 ஏக்கர் வரையிலும் மணல் மேடிட்டுப் போன காரணத்தினால் அந்த நிலங்களின் சொந்தக்காரர்களுக்கெல்லாம், இந்தப் புதிய அரசு பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை நஷ்ட ஈடாக கொடுத்திருக்கிறது. அதைப்போல, கூவத்தில் எங்கேயோ மழையினால் இரண்டு காங்கிரீட் ஸ்லாப்ஸ் சரிந்துவிட்டதற்கு, கூவம் நாற்றம் அடிக்கிறது என்கிறார்கள். நாம் சில திட்டங்கள் போடுகிறோம். சில நேரங்களில் தவறுகள் ஏற்படுகின்றன. அதற்காக திட்டமே ஊழல், ஊழல் என்று பேசுவது முறையல்ல. வீடூர் நீர்த் தேக்கத் திட்டம் ஐந்தாறு ஆண்டுகளுக்குக் கூட நீடிக்காமல் போய் இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, வீடூர் நீர்த் தேக்கம் உடைந்தது, திட்டத்தில் ஏற்பட்ட குறையின் காரணமாக அல்ல, அதை சூபர்வைஸ் செய்த என்ஜினியர் செய்த தவறின் காரணமாகத்தான் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு.)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அடுத்தபடியாக, வீராணம் திட்டத்தைப் பற்றி திரு. கே. விநாயகம் அவர்கள் காரசாரமாகப் பேசினார்கள். அதற்கு மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் பதில் சொன்னார்கள். வீராணம்



திட்டத்தைப் பொறுத்தவரையில், சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நாங்கள் தருகின்ற பதில் இந்த மாமன்றத்திற்குப் பயன் உள்ளவையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மூன்று நிறுவனங்கள் சுழற்சி முறையில் செய்யப்பட்ட பிரிஸ்டெரஸ்ட் கான்கிரீட் குழாய்களையே தாங்கள் பயன்படுத்துவதாக டெண்டரில் குறிப்பிட்டிருந்தன. இந்த முறையில் தயாரிக்கப்பட்ட கான்கிரீட் குழாய்கள்தான் உறுதியானவை என்பதும், நீடித்து உழைக்கக் கூடியவை என்பதும், நீர் அழுத்தத்தால் விரைவில் கெட்டுப் போகாதவை என்பதும் உலகறிந்த உண்மைகள். உலகெங்கும் இம்மாதிரியான நீர் கொண்டுவரும் திட்டத்திற்கு சுழற்சி முறையில் தயாரிக்கப்பட்ட கான்கிரீட் குழாய்களைத்தான் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, கிடைக்கப்பட்ட டெண்டர்களில் மூன்று நிறுவனங்கள் சுழற்றல் முறையையும், மற்ற இரண்டு நிறுவனங்கள் செங்குத்தாக வார்க்கும் முறையையும் பின்பற்றி குழாய்கள் தயாரிக்கின்றன. சூன்ய முறை கான்கிரீட்டை தண்ணீரை உறிஞ்சுவதற்கு மட்டும் பயன்படுத்துகிறார்கள். இரண்டு பக்கமும் தகடு இருக்கும், உள்ளே சூன்யமாக இருக்கும். அப்படி பலபேர் எழுதியிருக்கிறார்கள். தண்ணீரை சிமெண்ட் பைப்பிலிருந்து உறிஞ்சி விடுவதற்கு, காய வைப்பதற்குப் பதிலாக இது இருக்கும். இந்த வெற்றிட முறை தண்ணீரை உறிஞ்சுவதற்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது. இது சூன்ய முறையாக இருப்பதால்தான் இதற்கு 'வேக்குவம்' என்று பெயரிட்டார்களேயொழிய, வேறு விதத்தில் இந்தக் குழாய்கள் தயாரிப்பதில் எந்த வித்தியாசமும் கிடையாது. அப்படி தண்ணீரை உறிஞ்சுவதினால் சீக்கிரமாக குழாய்களை அவற்றின் வார்ப்படங்களிலிருந்து எடுத்துவிடலாம் என்றும், அப்படித் தயார் செய்யப்பட்ட குழாய்கள் 11 சதவிகிதத்திலிருந்து 48 சதவிகிதம் கூடுதலாக உறுதியானவை என்றும் செய்முறையினால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் சுழற்சி முறையில் தயார் செய்யப்பட்ட குழாய்கள்தான் உறுதியானவை, நீடித்து உழைக்கக்கூடியவை, உலகெங்கும் இம்மாதிரியான குழாய்களைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது உண்மைக்குப் புறம்பானது.

வேக்குவம் முறையும் கையாண்டு தயாரித்த குழாய்களும் நீர் கொண்டுவரும் திட்டங்களில் ஏராளமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். ஈரானிலும், சார்டினியாவிலும், கிரேக்க நாட்டிலும் இப்பேர்ப்பட்ட குழாய்களை அநேக வருடங்களாகப் பயன்படுத்தி வருகிறார்கள். இன்றைக்கும் நமக்கு வேண்டிய குழாய்களைவிட பெரிய விட்டமுள்ள குழாய்கள் டெஹ்ரானிலும், சார்டினியாவிலும் இந்த முறையையொட்டித் தயார் செய்து உபயோகிக்கிறார்கள். பெரிய விட்டமுள்ள குழாய்கள் தயாரிக்க மேலே சொல்லப்பட்ட செங்குத்தான முறையையே கையாள வேண்டும் என்பது நிபுணர்களது கருத்து. இரண்டு விதங்களையும் பயன்படுத்தலாம், அவைகளில் வித்தியாசம் ஒன்றுமில்லை. இரண்டு விதத்திலும் தயார் செய்த குழாய்கள் திருப்திகரமானவையே என்கிற உண்மை வெளிநாட்டு சுற்றுப் பிரயாணத்திலிருந்து தெரிகிறது.

அடுத்த குற்றச்சாட்டு என்னவென்றால், மற்ற நிறுவனங்களுக்கு எவ்வளவு தொகைக்கு டெண்டர் கொடுத்தார்கள்? அவை ஏற்கப்படாத காரணம் என்ன? ஏற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்களுக்கும், நிராகரிக்கப்பட்ட

டெண்டர்களுக்கும் தொகையில் இருந்த வித்தியாசம் என்ன? என்று கேட்டார்கள். இதையெல்லாம் வெளியிட வேண்டுமென்ற அவசியம் இல்லை. அதற்கு பதில் நாம் ஏற்றுக்கொண்டுள்ள டெண்டர் அதற்கு அடுத்துள்ள டெண்டரை விட ரூபாய் ஒரு கோடியே இருப்பது நான்கு லட்சம் குறைந்தது. இது மிகமிகக் கணிசமான தொகை. குறைந்த தொகையைக் கேட்டுள்ள காண்ட்ராக்டர்கள் தயார் செய்யப்போகும் குழாய்கள் தரத்திலும் வலுவிலும் உயர்ந்தவை, நீடித்து உழைக்கக் கூடியவை. இதில் எள்ளளவும் ஐயப்பாடில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லலாம். இதை நிரூபிக்க ரோமாபுரியிலிருந்தும் டெஹ்ரானிலிருந்தும் நற்சான்றுகள் கிடைக்கப்பெற்றன. அயல்நாடுகளுக்குச் சென்று திரும்பிய நமது குழுவும் இதைப்பற்றிப் புகழ்ந்து பேசி இருக்கிறார்கள்.

அதற்கடுத்த குற்றச்சாட்டு, "குறைவான டெண்டர் கொடுத்தவர்களிடம் மட்டும்தான் அரசாங்கம் பேச்சு வார்த்தையே நடத்தியதாகச் சொல்லப்படுவது. அதிகத் தொகைக்கு டெண்டர் கொடுத்தவர்கள் உபயோகிப்பதாகச் சொன்ன சுழற்சிக் குழாய்கள் தரம் பற்றியும் நீடித்த உழைப்பு பற்றியும் அரசு அக்கறை காட்டவில்லை" என்பதாகும்.

இதற்குப் பதில் குறைவான டெண்டர் கொடுத்தவர்களோடுதான் அவர்களின் டெண்டரைப்பற்றி பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்பது விதிமுறைகளில் தலையாயது. குறைவான டெண்டர் நிராகரிக்கும் வரையில் மற்ற டெண்டர் கொடுத்தவர்களோடு எந்தவிதமான பேச்சு வார்த்தை வைத்துக்கொள்வது ஆட்சேபகரமானது. ஒழுங்கு முறைக்குப் புறம்பானது. நாம் கடைக்கொண்ட முறையில் பரிசீலனை செய்த விதத்தில் யாதொருவிதமான தவறும் இல்லை.

அடுத்த குற்றச்சாட்டு "குறைவான டெண்டர் கொடுத்தவர்களோடு அரசு பேரம் நடத்தியபோது நூற்று எண்பது லட்சம் ரூபாய்க்கான அந்நியச் செலாவணியை நூற்று இருபது லட்சமாகக் குறைத்துக் கொள்ள அந்த டெண்டர் கொடுத்தவர்கள் சம்மதித்தார்களாம். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை போட்டார்களாம். பதினைந்து கோடியே 60 லட்சத்துக்கான தங்களுடைய டெண்டர் தொகையில் மேலும் தொண்ணூறு லட்சத்தை உயர்த்திக் கொடுக்க அரசு ஒப்புக்கொண்டால், அந்நியச் செலாவணித் தேவையினை நூற்று இருபது லட்சமாகக் குறைத்துக்கொள்ளச் சம்மதித்தார்களாம்" என்பதாகும்.

இது உண்மைதான். குறைவான டெண்டர் கொடுத்த திருவாளர்கள் சத்திய நாராயணா பிரதர்ஸ ரூபாய் 181 லட்சம் அந்நியச் செலாவணி கேட்டிருந்தார்கள். குழாய்களும், ரப்பர் வளையங்களும், வார்ப்படங்களும் தயார் செய்வதற்கு வேண்டிய தளவாடங்களும் யந்திரங்களும் இவைகளைத் தயார் செய்யக் கூடிய பொறியியல் நிபுணர்களையும் அந்நிய நாடுகளிலிருந்து கொண்டு வருவதற்கு வேண்டி இந்தத் தொகையைக் கேட்டிருந்தார்கள். மத்திய அரசு நமது வீராணம் குடிநீர் திட்டத்திற்கு அனுமதி அளிக்கின்ற சமயத்தில், நமது திட்டம் நிறைவேறுவதற்கு வேண்டிய அந்நியச் செலாவணி எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்க வேண்டும் என்றும், அப்படிக் குறைக்கின்ற சமயத்தில் டெண்டர் தொகை 25 சதவிகிதம் வரைக்கும் கூடுதலானாலும் ஒத்துக்கொள்ளலாம் என்கிற ஒரு நிபந்தனை குறிப்பிட்டிருந்தார்கள். ஆகையினால்தான் குறைந்த டெண்டர் கொடுத்த திருவாளர்கள் சத்தியநாராயணா





பிரதர்ஸ் அவர்களை தாங்கள் கோரி இருக்கிற அந்நியச் செலாமணித் தொகையை குறைக்க வேண்டும் என்று கேட்க, அவர்கள் பரிசீலனை செய்து அந்நியச் செலாவணியை 120 லட்சமாகக் குறைத்துக்கொள்ள முடியும். ஆனால் இந்தத் தொகைக்குப் பதிலாக ரூபாய் 90 லட்சம் கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்று கோரினார்கள். அதற்கு அவர்கள் கொடுத்த காரணங்கள தாங்கள் அமைக்கப் போகும் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய இரும்பு சாமான்களும், தளவாடங்களும, இயந்திரங்களும், லாரி, டிராக்டர் போன்ற ஊர்திகளும் மேல் நாட்டிலிருந்து கொண்டு வருவதற்காக ரூபாய் 181 லட்சம் கோரி இருந்ததாகவும், அதற்குப பதிலாக நமது நாட்டிலேயே முடிந்த வரைக்கும் மேலே சொல்லப்பட்ட இனங்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்போவதாகவும், அதனால் கூடுதலாக நிதி செலவாகும் என்றும் சொல்லியிருக்கிறார். இது உண்மையா என்று பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. இரும்பு எஃகு சாமான்கள் வெளி நாட்டிலிருந்து கொண்டு வருவதற்கும், நமது நாட்டிலேயே வாங்குவதிலும் விலையில் ஏராளமான வித்தியாசம் இருக்கிறது என்பது சந்தேகமேயில்லை. உதாரணமாக எஃகு கம்பிகள் நமது நாட்டிலேயே வாங்கினால் டன் ஒன்றுக்கு ரூபாய் 4,000 ஆகும். இந்த விலைக்கும் நமக்கு வேண்டிய அளவுக்கு எஃகுக் கம்பிகள் கிடைப்பதில்லை. வெளிநாடுகளிலிருந்து வாங்கப்பெற்றால் விலை டன் ஒன்றுக்கு ரூபாய் 1,800 ஆகும். இதைப்போலவே எஃகுத் தகடுகளும் இதர சாமான்களும் உள்நாட்டிலிருந்தே வாங்கவேண்டுமென்றால் அதிக விலை கொடுத்துவாங்க வேண்டியிருக்கிறது. ஆகவேதான் அவர்கள் டெண்டர் தொகை 90 லட்சம் கூடுதலாகக் கேட்டதை ஒப்புக்கொண்டோம். அதே நேரத்தில் அவர்கள் அந்நியச் செலாவணியில் ரூபாய் 60 லட்சம் குறைத்துக் கொண்டது மிகவும் விரும்பத்தக்கதாகும்.

மற்ற டெண்டர் கொடுத்த நிறுவனங்கள் எவ்வளவு அந்நியச் செலாவணி கேட்டார்கள், அவர்கள் டெண்டர் தொகை எவ்வளவு என்று கேட்கப்பட்டது, அந்த விவரங்களையும் நான் இப்போது கொடுத்துவிட விரும்புகிறேன்.

இந்திய ஹியூம் பைப் நிறுவனம் கொடுத்த டெண்டர் தொகை ரூ. 17,79,17,785. அவர்கள் கேட்ட அந்நியச் செலாவணி ரூ. 80 லட்சம்.

கேரளா ப்ரேமா பைப் நிறுவனம் கொடுத்த டெண்டர் ரூ. 18,57,47,674. அந்நியச் செலாவணி ஏதுமில்லை.

சத்தியநாராயணா பிரதர்ஸ் ரூ. 16,55,87,300-க்கு டெண்டர் கொடுத்தார்கள். இவர்கள் கோரிய அந்நியச் செலாவணி ரூ. 1,20,00,000.

தாராப்பூர் அண்டு கம்பெனி கொடுத்த டெண்டர் ரூ. 18,60,07,003. இவர்கள் கோரிய அந்நியச் செலாவணி ரூ. 1,50,00,000.

யூனிவர்சல் பைபிங் கன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்த டெண்டர் ரூ. 21,02,24,327. இவர்கள் கோரிய அந்நியச் செலாவணி ரூ 80,95,374.

நீலகண்டன் ப்ரதர்ஸ் ரூ. 23,03,94,156-க்கு டெண்டர் கொடுத்தார்கள். அந்நியச் செலாவணி ஏதும் கோரவில்லை.

எஞ்சியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் கொடுத்த டெண்டர் ரூ. 12,64,65,644. இவர்கள் ஸ்டீல் எஃகு தகடு விலை தவிர குழாய்கள் மட்டும் என்பதற்கு ரூ. 40,00,000 அந்நியச் செலாவணி கோரினார்கள்.

ஸ்டுவர்ட்ஸ் அண்டு லாயிட்ஸ் கொடுத்த டெண்டர் ரூ. 52,44,000 ஆகும். வளைவுகள் மாத்திரம் தான் இவர்கள் கொடுத்தது. அந்நியச் செலாவணி ஏதும் இல்லை. இவற்றை எல்லாம் கேட்ட பிறகு நீங்களோ நாங்கள் எந்த, டெண்டரைத் தேர்ந்தெடுத்திருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்த குற்றச்சாட்டு குறைந்த டெண்டர் கொடுத்தவர்களுக்கும் அதைவிட அதிகமான டெண்டர் கொடுத்தவர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத் தொகை சில லட்சங்கள் தான் என்பது. முன்பே நான் சொன்னேன். அது சரியல்ல. 1¼ கோடி வித்தியாசம் இருந்திருக்கிறது. இது கணிசமான தொகை. மேலும் வாக்குவம் குழாய்கள் உறுதியானவை என்பதற்குப் போதுமான நற்சான்றிதழ்கள் இருக்கின்றன என்று சொன்னேன்.

அடுத்து, முற்றிலும் புதியதான ஒருவருக்கு இந்த காண்டிராக்டை விடுவானேன் என்று கேட்கப்படுகிறது. சத்தியநாராயணா பிரதர்ஸ் எங்களுக்கு ஒன்றும் வேண்டியவர் அல்ல. மேலும் புதியவரும் அல்ல. பழைய காங்கிரஸ் ஆட்சியிலேயே பலதரப்பட்ட க்வார்டர்ஸ் ஆவடியில் கட்டுவதற்காக 6 கோடி ரூபாய் செலவில் அவருக்கு காண்டிராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிறகு ஸ்மால் ஆர்ம்ஸ் பிராஜக்ட் கட்டுவதற்கு ரூ. 50 லட்சத்தில் ஒரு வேலை, ராயபுரம் ஆர்.எஸ். ஆர். எம். மருத்துவமனை கட்ட ரூ. 50 லட்சம், சென்னை, திருச்சியில் தானியக் கிடங்கு கட்ட ரூ. 1¼ கோடி இப்படி 45 வேலைகள் சுமார் 21 கோடி ரூபாய்க்கு பழைய ஆட்சியிலேயே கொடுக்கப்பட்டு, இவர்கள் அந்த வேலைகளை எல்லாம் முடித்திருக்கிறார்கள்.

சத்தியநாராயணா பிரதர்ஸ் கொடுத்த டெண்டர் ரூ. 16½ கோடியாக இருக்க தாராபூர் அண்டு கம்பெனி கொடுத்த டெண்டர் ரூ. 18⅓ கோடிக்கு மேல் இருந்தாலும் அவர்களுக்குக் கொடுத்திருந்தால், அப்போது என்ன சொல்வீர்கள்? எதற்காக தாராபூர் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது? இவரைவிடக் குறைந்த டெண்டர் கொடுத்தவர் இல்லையா? இந்த தாராப்பூர் கம்பெனி முன்பே சரியான முறையில் நடந்துகொள்ளவில்லை என்பதாக ஜட்ஜ்மெண்டு வழங்கப்பட்டிருப்பது தெரியாதா என்றெல்லாம் கேட்டீர்கள். குற்றம் சாட்டுவீர்கள்.

ஆகவே தான், குறைந்த டெண்டர் எதுவோ அதுதான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவரும் முன்பே பல வேலைகளை எடுத்து முடித்துக்கொடுத்திருக்கிற திறமை வாய்ந்தவர்கள்தான். எங்களுக்கும் அவருக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி பொதுவாகக் கூறப்பட்ட பெரிய குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் நான் விளக்கம் தந்திருக்கிறேன். மற்றவற்றுக்கு அவ்வப்போது அமைச்சர்கள் எடுத்துக் கூறினார்கள்.



தொழிலாளர்களுக்குரிய சாதனைகளைப் பற்றி திரு சங்கரய்யா பேசினார்கள். அவர்களது பேச்சில் பெரும்பகுதி போலீஸ் துறையைப் பற்றிய கண்டனம் இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிலாளர் கொள்கை சரியாக இல்லை என்று எடுத்துச் சொன்னார்கள்.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலும் இந்த அரசு வேலை வாய்ப்பை அளிப்பதில் 1969-ம் ஆண்டில் மின்வாரியம், பொதுப்பணித் துறை ஆகியவற்றில் 430 பேருக்கு வேலைகள் அளித்திருக்கிறது. 1967-ம் ஆண்டில் 44,375 பேர்களுக்கும், 1968-இல் 41,581 பேர்களுக்கும், 1969-இல் 42,770 பேர்களுக்கும் தொழில் தேடித்தரும் ஸ்தாபனத்தின் மூலம் வேலைகள் வாங்கித் தரப்பட்டு இருக்கின்றன. இவர்களில் 5,024 பேர்கள் டிப்ளமா பெற்றவர்கள்; 2,315 பேர் எஞ்சினியரிங் பட்டதாரிகள். 3,739 பேர் சிறுதொழில் கற்றவர்கள்.

தொழில்துறையில் மூடப்பட்டிருந்த 35 ஆலைகளில், 17 ஆலைகளை இந்த அரசு 1969 ஆம் ஆண்டில் மீண்டும் திறந்துள்ளது. இதில் நான்கு ஆலைகளை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகமே மேற்கொண்டுள்ளது. இதனால் பத்தாயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு வசதி கிட்டியுள்ளது என்பதில் இருந்தே திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர்கள் அரசுதான் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 'வளர்க தொழில், வாழ்க தொழிலாளர்' என்பதும், தொழிலாளர், அரசு, தொழில் அதிபர்கள் பேச்சுவார்த்தை மூலம் குறைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்பதும் தான் இந்த அரசின் கொள்கையாகும்.

இது தொழிலாளர்களுடைய அரசு என்பதற்கு அடையாளமாக மே தினத்தைக் கொண்டாட வேண்டுமென்று ஊதியத்துடன் கூடிய கட்டாய விடுமுறை நாளாகச் செய்து இருப்பது இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

தொழிலாளர் கிளர்ச்சிகளை அரசு அடக்குவதாக திரு. சங்கரய்யா அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்த அரசு முதலாளிகளின் பக்கம் போகிற அரசு என்றும் குறிப்பிட்டார்கள்.

பஸ் முதலாளிகள் வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்தவுடனே இந்த அரசு அவர்கள் பக்கம்போய் "நீங்கள் சொல்கிறபடியே ஆகட்டும், உங்கள் கோரிக்கைக்கு இணங்குகிறோம்" என்று சொல்லவில்லை. அவசரச் சட்டம் போட்டு அவர்கள் வேலைநிறுத்தம் செய்ய முடியாது செய்ததில் இருந்தே இந்த அரசு முதலாளிகளின் பக்கம் கூட்டுப் போகவில்லை என்பதை திரு. சங்கரய்யா அவர்களே தம் மனச்சாட்சிப்படி உணர்வார்கள் என்பதை அவரிடத்தில் நான் கொண்டிருக்கிற நட்பு உரிமை காரணமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில்துறையைப் பொறுத்தவரை இந்த அரசு வைதிக மனப்பான்மையைக் காட்டவில்லை. தொழில் வளம் பெருக வேண்டும், தனியார் முதலீடு செய்கிறார்கள், அரசு முதலீடு செய்கிறது, இரண்டும் இணைந்த ஜாயிண்ட் செக்டார் வேண்டுமென்று விரும்புகிறோம். இதைச் சொன்னால் நாங்கள் எங்கோ உள்ள தொழில் அதிபர்களை அழைப்பதாக—மாதவன் வடநாடு சென்று தொழில் அதிபர்களோடு குலாவுகிறார் என்பதாகக் கூறுகிறார்கள்.

திரு. சங்கரய்யா அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர்களது கட்சியைச் சேர்ந்த இ.எம்.எஸ். அவர்கள் அவர்களது மாநிலத்திலே வந்து தொழில் ஆரம்பிக்க பிர்லாவை அழைத்திருக்கிறார். பிர்லாவை இ.எம்.எஸ். அழைத்தார் என்றால் தன் மாநிலத்தில் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும் என்பதற்காக. ஒரே கொள்கையில் பிடிவாதமாக இல்லாமல் மாநிலத்தில் தொழில் பெருக வேண்டும், மாநிலத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்று செய்கிற முயற்சிகளை நாம் கேலி செய்யவோ, கிண்டல் செய்யவோ அவசியம் இல்லை. அதுபோன்ற முயற்சிகள் பாராட்டப் படத்தான் வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

பி. ப. 1-30 அதுமாத்திரமல்ல. கம்யூனிஸ்ட் நாடான ரஷ்யாவிலிருந்து பியட் கார் தொழிற்சாலையை ஆரம்பிக்க அழைப்பு. பொதுவுடைமைப்பற்றி பேசுகிற ரஷ்ய நாட்டிலே கூட இன்றைக்கு ஒரு தனிப்பட்ட பியட் கார் கம்பெனியைத் தான் அழைத்திருக்கிறார்கள். ஆக அங்கே ஒரு தனியார் துறையின் மூலம் தான் பியட் கார் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்கிறேன்.

அடுத்து, நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசு விவசாயிகளுக்கு ஒன்றும் செய்யவில்லை, மாணவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, என்.ஜி.ஓ.க்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். அவர்களுக்குப் பின்னாலே பேசிய அவர்களைச் சார்ந்தவர்களும் கேட்டார்கள். அதிக விவரங்கள் சொல்வதற்கு நேரம் இல்லாத காரணத்தால் சில விவரங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1967-68-ல் 57.6 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி இடையில் ஏற்பட்ட பயங்கர வறட்சிக்குப் பிறகும் 1969-70-ல் 63.62 லட்சம் டன் உணவு அதிகமாக உற்பத்தியாகி இருக்கிறது. அதன் காரணமாக உணவுக் கட்டுப்பாட்டை ரத்து செய்து இருக்கிறோம். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன சொன்னார்கள்? இது ஒரு அரசியல் ஸ்டன்ட், இன்னும் கொஞ்ச காலத்திற்குப் பிறகு மீண்டும் கொண்டு வந்து விடுவார்கள் என்று சொன்னார்கள். நானும் சொன்னேன். அவசியம் ஏற்பட்டால் மீண்டும் வர வேண்டும் என்று சொன்னால் கௌரவப் பிரச்சினையைப் பார்க்காமல் மீண்டும் கொண்டு வந்து விடுவோம் என்று சொன்னேன். கடவுள் கிருபையால் அத்தகைய நிலை ஏற்படவில்லை. (கே. விநாயகம்: உங்களுக்கு அதில் நம்பிக்கை இருக்கிறதா?) பயப்பட வேண்டாம் கடவுள் உங்கள் பக்கத்தைவிட்டு வெளியே போய் ரொம்ப நாள் ஆகிறது. கடவுளை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோமா என்பது பிரச்சினை இல்லை. நம்மைக்கடவுள் ஏற்றுக் கொள்ளுகிறாரா என்பதுதான் பிரச்சினை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அது கடவுள் பிரச்சினை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கடவுள் ஏற்றுக் கொள்ளுகிற வகையில் நாங்கள் காரியங்களைச் செய்கிறோம். உங்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை 1967-லேயே பார்த்தோம்.

நிலவள வங்கிகள் மூலம், முன்னைவிட அதிகக் கடன் உதவி கொடுக்கப்படுகிறது. மேலும், கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்களின் மூலம் சிறு சிறு நிலச் சுவான்தார்கள், கொஞ்சம் கொஞ்சமாக நிலம் வைத்திருக்க கூடியவர்கள்



எல்லாம், கூட்டுறவு முறையில் அவர்களுக்குப் பாசன வசதி செய்து கொடுப்பதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. வறட்சி நேரத்திலும் சுமார் 18 கோடி ரூபாய் செலவு செய்ததன் மூலம் 13,400 சிறிய, பெரிய நீர்ப்பாசன ஏரிகளும், அவற்றைச் சேர்ந்த கால்வாய்களும் தூர் எடுக்கப்பட்டன. 5,500 சாலை வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. 683 மண் வளப்பாதுகாப்பு வேலைகள், 821 குடி மராமத்து வேலைகள், மாநிலம் முழுவதிலும் 34,625 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டதோடு, புதிய கிணறுகளும் தோண்டப்பட்டன. அதே சமயத்தில் ஒரே நேரத்தில் 8 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமப் புற மக்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

விநாயகம் அவர்கள் மாணவர்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். மாணவர்கள்—தொழிலாளர்கள் கிளர்ச்சியின்போது மாணவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களுக்கு நஷ்ட ஈடு தரப்பட்டது. முதல் ஆண்டு பி.எல். தேர்வு பெறாவிட்டாலும் இரண்டாவது ஆண்டு தொடர்ந்து படிக்க அனுமதிக்க வேண்டும் என்று சட்டக் கல்லூரி மாணவர்கள் எழுப்பிய கோரிக்கையை ஏற்றுக் கொள்வதில் இந்த அரசு எந்தவிதத் தடையும் செய்யவில்லை. எந்தவிதமான தயக்கமும் காட்டவில்லை.

நேற்றைய முன்தினம் ஹவுஸ் சர்ஜன்களுடைய பிரச்சினைகளையும், அவர்களோடு ஒரு மணி நேரத்திற்கு மேல் உரையாடி, அவர்களுடைய கோரிக்கைகளும் கூடுமானவரையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி என்று ஆக்கியிருக்கிறோம். பின்தங்கிய மாணவர்களுக்கு 50 சதவிகிதம் மார்க்கு வாங்கினால்தான் உதவிப்பணம் மற்ற ஸ்காலர்ஷிப் கிடைக்கும் என்பதை மாற்றி, 45 சதவிகிதம் மார்க்கு வாங்கினாலே அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும் என்று ஆக்கியிருக்கிறோம். அதைப் போலவே மிகவும் பின்தங்கிய வகுப்பில் உள்ளவர்களுக்கு 45 சதவிகிதம் என்று இருந்ததை 40 சதவிகிதம் என்று மாற்றியிருக்கிறோம். இதனால் அரசுக்கு 2 கோடி ரூபாய் அதிகச் செலவாகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அகவிலைப் படி மற்றவர்களுக்கு அளிக்கப்படும்போதெல்லாம் ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. நகர ஈட்டுப் படித் திட்டம் மானியம் பெற்றுவரும் பள்ளியாசிரியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. அவ்வப்போது அளிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி உள்ளாட்சிப்பள்ளி ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

மானியம் பெறும் பள்ளியாசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு பெற வசதி அளிக்கப்பட்டுள்ளது. நிலையான பதவியில் உள்ள ஆசிரியர் ஒருவர் ஈட்டிய விடுப்பு பெறும் வகையில் விதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரையில் இல்லாத சலுகை இது.

ஒவ்வோர் ஆண்டும், ஹையர் கிரேடு பதவிகளை செகண்டரி கிரேடு பதவிகளாக மாற்றி வேலை வாய்ப்பை அதிகரித்திருக்கிறது. 1967-68-ல் 5,000 ஆசிரியர்களுக்கும் 1968-69-ல் 3,000 ஆசிரியர்களுக்கும், 1969-70-ல் 3,000 ஆசிரியர்களுக்கும் இந்தப் பயன் கிட்டியுள்ளது.

ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்கும் விஷயத்தில் 1955-ம் ஆண்டிலிருந்து ஒரு தேதி நிர்ணயித்து, முன்பிருந்த அரசு உத்தரவிட்டுள்ளது. அதற்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு மாத்திரமே இந்த ஊதியம் உண்டு என்றிருந்தது. இதனால் அந்தத் தேதிக்கு முன்னால் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் பாதிக்கப்படுவர். அந்தத் துயரைத் துடைக்கும் வகையில் புதிய அரசு 1968-ம் ஆண்டு, 1955-க்கு முன்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் ஓய்வு ஊதியத் திட்டம் என்று வரையறுத்தது.

குடும்பப் பென்ஷன் திட்டம் 1—4—1969-க்கு பிறகு தனியார்த் துறைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டது. பி.டி. ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இவர்கள் மேல் படிப்புப் படித்து, பி.ஏ., பி.டி., எம்.ஏ. எம்.லிட். போன்ற பட்டங்கள் பெற்றால், அவர்களுக்கு இரண்டு அட்வான்ஸ் இன்கிரிமென்ட் கொடுக்கும் திட்டம் இதைப் புதிய அரசில் அமலுக்கு வந்துள்ளது.

அதைப்போலவேதான் என்.ஜி.ஓ. க்களுக்கு நகர ஈட்டுப் படியை அரசு வழங்கியுள்ளது. சம்பள ஆணைக்குழு ஒன்றை நியமித்தது.

அரசுப் பணியாளர்களின் இரகசியக் குறிப்போடு முறையை மாற்றி பகிரங்கக் குறிப்பேடு முறையை அமல்படுத்த இந்த அரசு முடிவெடுத்துள்ளது.

அரசுப் பணியாளரது மகன், மகள் ஆகியோரது திருமணங்களுக்கென அரசுப் பணியாளர்களுக்கு முன்பணம் வழங்கும் திட்டம் ஒன்றை அமலாக்கியுள்ளது.

அரசுப் பணியாளர்கள் மேற்கொண்டும் சட்டக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளில் படிப்பதற்காக வருங்கால வைப்பு நிதியிலிருந்து தொகை பெறுவதற்கு அரசு அனுமதித்துள்ளது.

மாதம் ரூ. 250 க்கு மேற்பட்டு சம்பளம் பெறும் அரசுப் பணியாளர்களுக்குப் பட்டினப்பாக்கம், பீட்டர்ஸ் சாலைக் குடியிருப்பில் அரசு வாடகை வீட்டு மனைகளைக் கட்டியுள்ளது.

கீழ்நிலை எழுத்தர்கள் விரும்பியவாறு அவர்களது பதவிப் பெயரை இளநிலை உதவியாளர்கள் என மாற்ற அரசு ஆணையிட்டுள்ளது.

போலீசார் நலனுக்கென போலீஸ் ஆணைக்குழு ஒன்றை நியமித்திருக்கிறது.

பின்தங்கியோர் நலன்களை அறிய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது ஊதியக் குழு அமைக்கப்பட்டு, அதன் பரிந்துரைகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன.

1972-ஆம் ஆண்டுக்குள் மின்னொளி இல்லாத கிராமங்களே இருக்கக் கூடாது என்று தீவிரமாகத் திட்டமிடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகிறது.

குடி தண்ணீர்த் திட்டத்திற்காக 20 கோடி ரூபாய் அளவிற்குச் செலவாகும் திட்டத்தை மேற்கொண்டு அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அதுமட்டுமல்ல. எங்களுடைய கட்சிக்கு, கழகத்திற்கு செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். தியாகிகளுக்கு, 1966-ஆம் ஆண்டில், காங்கிரஸ் ஆட்சியிலிருந்த நேரத்தில், தியாகிகளுக்கு 50 ரூபாய் மாதம் தோறும் உதவியளிக்க



வேண்டுமென்ற முறையைக் கொண்டு வந்தார்கள். பிறகு ஆட்சிக்கு வந்த நாங்கள், இது கூடாது என்று எண்ணியிருந்தால், கழகத்திலிருந்து இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குச் சென்றவர்களுக்குத்தான் இது தரப்பட வேண்டுமென்று எண்ணியிருந்தால், அந்தச் சட்டத்தை மாற்றி புதுச்சட்டத்தைப் போட்டிருக்கலாம்.

ஆனால், அறிஞர் அண்ணாவின் பரம்பரையிலே வந்த நாங்கள், அப்படி எண்ணத் துணியாது, 1966-ம் ஆண்டில் தியாகிகளுக்குக் கொடுத்த மொத்த ரூபாய் 3,057. அதாவது ஒரு ஆண்டில் 107 பேருக்குத்தான் தியாகிகள் பணம் கொடுக்கப்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, 1967-68-ல் 11 லட்சத்து 11 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தி, 1968-69-ல் 24 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் என்று உயர்ந்து, 1969-70-ல் 32 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்தது. 1970-71-ல் 35 லட்சத்து 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்துவதைப் பற்றி மதிப்பிட்டுக் கொண்டிருக்கிறது. ஆக, ஓராண்டுக் காலத்தில், 107 பேர்களுக்குத்தான், காங்கிரஸ் ஆண்ட காலத்திலே காங்கிரஸ் தியாகிகளுக்கு 50 ரூபாய் தரப்பட்டது. ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு 6,002 காங்கிரஸ்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு மாதந்தோறும் 200 ரூபாய் உதவித் தொகையாக அளிக்கப்பட்டு, அவர் அது போதாது என்று இரண்டு நாட்களுக்கு முன்பு கேட்டு, 250 ரூபாய் தர வேண்டுமென்று கேட்டு, அதுவும் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

இதேபோன்று பரலி நெல்லையப்பர் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கி வருகிறோம்.

அது மட்டுமல்ல, கட்டபொம்மன் குடும்பத்தைச் சேர்ந்த 5 குடும்பத்தினர்களுக்கு உதவி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். கட்டபொம்மன் சிலையைத் திறந்து வைக்கத்தான் அவர்கள் போனார்களே தவிர, முதலமைச்சராக இருந்தபொழுது கட்டபொம்மன் இருந்தான், கெட்டான் போ என்று சொல்லி விட்டார்கள். இப்பொழுது கட்டபொம்மன் குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு உதவிப்பணம் கொடுத்து வருகிறது.

என்ன சாதித்துவிட்டீர்கள், என்ன சாதித்துவிட்டீர்கள் என்று கேட்டார்கள். சேலம் இரும்பாலைத் திட்டத்தைப் பெற்றது சாதனையில்லையா? அது காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே திட்டமிடப்பட்டிருக்கலாம். அதற்காக திரு. வெங்கட்டராமன், நிதியமைச்சராகயிருந்த திரு. சுப்பிரமணியம் ஆகியவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. காமராஜ் அவர்கள் ஒத்துழைத்ததற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன் ஆனால் வராமலிருந்த அந்தத் திட்டத்தை வரக்கூடிய அளவிற்குச் செய்த பெருமை எங்களுடையதுதானே?

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகமாக இருந்தது, ஆழ்கடல் துறைமுகமாக மாற்றப்பட்டது எங்கள் காலத்தில்தானே? முன்னேற்றக் கழகமும், தோழமைக் கட்சிகளும் எழுச்சிநாள் போராட்டம் நடத்தி, பிறகு தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் அல்ல, அது ஆழ்கடல் துறைமுகம் என்று அறிவிக்கப்பட்டது. தூத்துக்குடி உரத் தொழிற்சாலை ஏற்படவில்லையா?

கல்பாக்கத்தில் இரண்டாவது கட்டமாக 200 மெகாவாட் அதிகமாகப் பெறவில்லையா ?

3 சர்க்கரைத் தொழிற்சாலைகளுக்கான புதிய அனுமதியைப் பெறவில்லையா ?

இப்பொழுது உணவு அமைச்சரவர்கள் ஒரு தகவலைத் தருகிறார்கள். நீண்டகாலமாக அல்மாதி என்ற இடத்தில் முர்ரா எருமைப் பண்ணை அமைக்க வேண்டுமென்று கேட்டு வந்து, அதற்கு இப்பொழுது மத்திய சர்க்காரின் ஒப்புதல் கொடுக்கப்பட்டிருக்கிறது. 4 ஆண்டுகளுக்கு 82.91 இலட்சத்திற்கு மத்திய சர்க்காரும் ஒப்புதல் கொடுத்திருக்கிறது. இதையும் முன்னேற்றக் கழகத்தின் சாதனை என்று நீங்கள் ஒப்புக்கொள்ள மாட்டீர்களா ?

ஆகவே, இவைகளிலெல்லாம் நாங்கள் முழுத் திருப்தி அடைந்து விட்டோமா என்றால் இல்லை. இன்னும் செய்ய வேண்டிய வேலைகள் ஏராளம் இருக்கின்றன. ஆனால், அவைகளுக்கு, இருக்கின்ற அதிகாரங்கள் போதாது என்பதுதான் எங்களுடைய வாதம். தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு. ம.பொ.சி. அவர்களின் வாதமும் ஆகும். அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டால் கூடாது, கூடாது என்று சொல்கிறீர்களே, ஏன் ? வறட்சி நிவாரணத்திற்காகப் பணம் கொடுக்காதே, கொடுக்காதே என்று சொல்கிறீர்களே, ஏன் ? அதிகாரங்கள் கொடு என்று கேட்டால் கொடுக்காதே, கொடுக்காதே என்று ஏன் இந்த சுக்கிராச்சாரியார் வேலை செய்கிறீர்கள் ? சுக்கிராச்சாரியார், மாவலி தாரை வார்க்கும்பொழுது கெண்டியில் அடைத்துக்கொண்டு, தர்ப்பையினால் குத்தப்பட்டு என்ன ஆனார் ? உதாரணத்திற்காகப் புராணக் கதையைச் சொல்லுகிறேன்.

ஆகவே, ஏன் இப்படி இடையிலே நின்று கொடுக்காதே கொடுக்காதே என்று சொல்லவேண்டும் ? வழி மறைத்திருக்கிறது, சற்றே விலகியிரும் பிள்ளாய் ! அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறோம் என்றால் அது உங்களுக்கும் சேர்த்துத்தான், வருங்கால சந்ததியினருக்காகவும் சேர்த்துத்தான், நான்கு கோடி தமிழக மக்களுக்கும் சேர்த்துத்தான் கேட்கிறோம்.

தனிக் கொடி கேட்டதைப்பற்றி கூறுகிறார்கள். மலேசியாவிலிருந்து இந்தக் கொடிகள் வந்திருக்கின்றன, பாருங்கள் (அவைக்குக் காட்டப்பட்டன). தமிழகத்தைவிட குறைவான மக்கள் கொண்ட மலேசியா, அந்த மலேசியாவிலிருந்து வந்த கடிதத்திலே, தமிழகத்தைவிட சற்றுக் கூடுதலான நிலப்பரப்பையும், தமிழகத்தின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியை மட்டுமே மக்கள் தொகையாகக் கொண்ட சின்னஞ்சிறிய நாடாகிய எங்கள் மலேசிய நாட்டில் பதின்மூன்று மாநிலங்கள் இருக்கின்றன என குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாநிலமும் சற்றேறக்குறைய தமிழகத்திலுள்ள ஒரு மாவட்ட அளவுக்கு சின்னஞ்சிறியதாக இருக்கும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி முதலமைச்சர்கள், அமைச்சர்கள் இருக்கிறார்கள். தனித்தனி சட்டமன்றங்கள், தனித்தனிக் கொடிகள், தனித்தனி சின்னங்கள் இருக்கின்றன. மைய அரசுக்கென்று தனிக்கொடி—தேசியக்கொடி, தனிச்சின்னம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதோ இருக்கிற கொடிகள், இங்கே அடித்தவை அல்ல, மலேசியாவில் அடித்தவை.





திரு. சிமைச்சாமி அவர்கள்கூட கோபமாக, இனிமேல் நீங்கள் இந்திரா காந்தியை ஆதரித்தால் நாங்கள் உங்களோடு இருக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். ராஜாஜியிடம் அனுமதி வாங்கித்தான் சொன்னேன் என்று கூறியிருக்கிறார்கள். ராஜாஜி கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், சிமைச்சாமி அவர்களே, சுதந்திராக் கட்சியின் தலைவர் என்ற முறையில், இங்கேயிருக்கும் தலைவர் என்ற முறையில் அவர்களையும், மூத்த தலைவர் திரு. ராஜாஜி அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். 200 பேர் ராஜாக்கள், அந்த ராஜாக்களுக்கு மானியம் கொடுக்க வேண்டாமென்று மட்டும் சொன்ன குற்றத்திற்காக தி.மு.க. வுடன் சேர மாட்டோம் என்று சொல்லிவிட்டு, சிண்டிகேட்டுடன் சேரும் ராஜாஜி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நான்கு கோடி தமிழ் மக்களின் வாழ்வை, மொழியை, உரிமையை, அவர்களின் வளத்தை, அவர்களின் எதிர்காலத்தை, நாட்டை அழிக்கும் இந்தி ஆதிக்கத்திற்கு ஓட்டுப்போட்ட சிண்டிகேட் காங்கிரசோடு சேர ராஜாஜி அவர்கள் முன்வருவார்களா ? 200 ராஜாக்களுக்கு மானியம் வேண்டாமென்று நாங்களும், இடது சாரிக் கட்சிகளும் அங்கிருக்கும் இந்திரா காந்தி அம்மையாரை ஆதரித்தது சரியா, தவறா என்று சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். ராஜாஜி அவர்கள் இதைப்பற்றி ஒரு முறைக்கு இரு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய திரு. கருத்திருமன் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் உள்ளபடியே இந்தச் சபையில் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. அவரே கூட ஒருவேளை நல்ல மனது வைத்து, இவ்வளவு விளக்கத்திற்குப் பிறகு, இவ்வளவு சாதனைகளைக் கேட்டபிறகு, அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டாலும் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

போலீஸ் துறையைப்பற்றி இடது சாரி கம்யூனிஸ்ட் கட்சியினரும், மற்ற இடதுசாரிக் கூட்டணியிலேயுள்ளவர்களும் பேசினார்கள். அவர்களும், திரு. பூவாரகன் போன்றவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களும் ஆராயப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். போலீசுக்கு வக்காலத்து வாங்கி நான் என்றைக்கும் பேசமாட்டேன் என்று நன்றாகத் தெரியும். ஆகவே, திரு. சங்கரய்யா அவர்களையும் திரும்பப் பெறுமாறு கேட்டுக் கொண்டு இந்த அளவில் முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். மாண்புமிகு தலைவரவர்களே, வயிற்றில் அதிகமாகப் பசியிருப்பதால் விவாதத்தைச் சரியாகக் கேட்க முடியவில்லை. தயவு செய்து மனிதாபிமான உணர்ச்சியோடு பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** செவிக்கு உணவில்லாதபோது சிறிது வயிற்றிற்கும் ஈயப்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நான் பேசிய கருத்துக்களுக்குச் சரியான பதிலை முதலமைச்சர் அவர்கள் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சு செகரடேரியட்டில் உள்ள ஒரு செகரடரியைக் கூப்பிட்டுப் பேசச் சொன்னால் பேசுகின்ற பேச்சாகத்தான் இருந்ததே தவிர, நான் சொன்னவற்றுக்குப் பதில் இல்லை.

இந்தத் தீர்மானத்தின் மீது பலபேர் பேசினார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்களும் பேசினார்கள். 1967 தேர்தலில் மக்கள் எங்களை ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள், எங்களைக் கேட்க உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று கேட்டார்கள். எவ்வளவு மக்கள் உங்களுக்கு ஓட்டுப் போட்டு அனுப்பினார்கள் என்பதைப் பற்றி நான் புள்ளிவிவரத்தோடு சொல்ல ஆசைப் படுகிறேன். (ஆளும் கட்சியில் உள்ளவர்களின் குறுக்கீடுகள்).

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும் போது யாரும் குறுக்கிடவில்லை. அதே போன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போதும் யாரும் குறுக்கிடாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளு கிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* தலைவர் அவர்களே, ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மிகுந்த அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும். அது தான் இந்த மன்றத்தின் மரபு. நான் ஏற்கனவே எடுத்துச் சொன்னது போல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நிறைந்த மதிப்பையும், மரியாதையையும் அளித்து அமைதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* 1967 தேர்தலின்போது 159 லட்சம் வாக்காளர்கள் ஓட்டுப் போட்டார்கள். அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தனியாக வந்தது 40 சதவிகிதந்தான். இந்திய தேசிய காங்கிரசுக்கு வந்தது 42 சதவிகிதம். உங்களுக்கு 61 லட்சம் வாக்காளர்கள்தான் வாக்களித்திருக்கிறார்கள். எங்களுக்கு 62 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்திருக்கிறார்கள். பாக்கி ஏனைய கட்சிகளுக்குப் போயிருக்கிறது. கூட்டணி என்ற நிலையிலே 138 அங்கத்தினர்கள் உங்கள் கட்சிக்கு வந்து இன்று ஆட்சி புரிகிறீர்கள். 62 லட்சம் வாக்காளப் பெருமக்கள் சார்பாக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இங்கு இருக்கும்படியான 41 அங்கத்தினர்களை வைத்தோ, பிரிந்து போன 8 அங்கத்தினர்களை வைத்தோ அல்ல. பொது மக்களுடைய நிலையைப் பார்த்து அவர்கள் சொல்லும்படியான புகார்களை எடுத்துச் சொல்ல இதை வாய்ப்பாகக் கொண்டு பேசுகிறோம். நாங்கள் வெறும் 41 பேர் என்று சொல்லுவது பொருத்தமற்ற வாதம். உங்களுக்கு 1967-ல் இருந்த செல்வாக்கு இப்போது இருக்கிறதா? நீங்கள் மனச்சாட்சியின் பேரில் பதவியேற்றவர்கள், ஆகவே, மனச்சாட்சியின்படி சொல்லுங்கள். இப்போது முதலமைச்சர் அவர்கள் கடவுள் மேல் நம்பிக்கை வைத்திருப்பதாகச் சொல்லு கிறார்கள்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கூட்டணி நண்பர்கள், அவர்களுடன் இருந்தவர்கள், இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி, வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சி, பிரஜா சோஷலிஸ்டு கட்சி, சோஷலிஸ்டு கட்சி ஆகியவர்கள் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்களும் போலீஸ் தீர்மானத்தைப் பற்றிக் கண்டனத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இப்போது கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஏன் ஒரே வரியில் கொண்டு வந்தேன்? இதற்கு முன்பு கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் 11 விஷயங்களைக் குறிப்பிட்டு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தேன். ஆனால் இப்போது குற்றச்சாட்டுகள் இன்னின்ன என்று





குறிப்பிட்டுச்சொல்ல முடியாத அளவுக்குப் பெருகியிருக்கின்றன. பெரிய பட்டியலே இருக்கிறது. அப்படிக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத நிலையிலே உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்ற நிலையிலே ஒரு வரியிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

சில அங்கத்தினர்கள் சொன்னார்கள்—பாராளுமன்றத்திலே ராஜாக்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த பிரிவிலேஜஸ் அண்டு ப்ரிவி பர்ஸை ஒழிப்பதற்கு மசோதா கொண்டு வந்தபோது எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எப்படி அந்த மசோதாவுக்கு எதிராக ஓட்டளிக்கலாம் என்று கேட்டார்கள். அந்த நிலையில் நாங்கள் எப்படி முற்போக்குவாதிகள் என்று சொல்லிக் கொள்ள முடியும் என்றும் கேட்டார்கள். அதற்கு ஒரு விளக்கம் கொடுக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். அந்த ராஜாக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற மானியத்தை ஒழிக்க வேண்டுமென்பது அகில இந்திய தேசிய காங்கிரசின் 11 அம்சத் திட்டத்தில் ஒன்று.

ஆனால், ஏன் நாங்கள் எதிர்த்து ஓட்டுப் போட்டோம்? நாங்கள் ஏற்கனவே முடிவு செய்தது போல் மன்னர்களுக்குக் கொடுக்கும்படியான நஷ்ட ஈட்டையும் அந்த மசோதாவிலே குறிப்பிட வேண்டும், மசோதாவிலேயே அது இடம் பெற வேண்டுமென்று குறிப்பிட்டோம். ஆனால் ஆட்சியில் இருக்கக்கூடிய பிரதம அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மசோதா ஏமாற்றக் கூடியதாக இருந்தது. அரசியல் சட்டம் 363-வது பிரிவின்படி கொடுக்கப்பட வேண்டிய நஷ்ட ஈட்டைச் சர்க்கார் பார்த்துச் செய்யும் என்று அந்தச் சக்தியை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். அரசியல் நோக்கத்திற்காக அந்த அதிகாரத்தை அவர்களிடம் வைத்துக் கொண்டார்கள். அரசர்களை மிரட்டி அவர்களுக்கு ஆதரவாக இருக்கச் செய்யலாம் என்று அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காகத் தான் நாங்கள் எதிர்த்தோமே தவிர, மன்னர்களுக்குப் பின்னால்—நாய்களுக்குப் பின்னால், பேய்களுக்குப் பின்னால், என்றெல்லாம் என்னென்னமோ சொன்னார்களே—அவ்வாறு நாங்கள் போகவில்லை. முற்போக்குக் கொள்கை கொண்ட நீங்கள் சுதந்திராக் கட்சியுடன் சேர்ந்து கொள்ளவில்லையா? நீங்கள் செய்தால் கொள்கை, நாங்கள் செய்தால் கொள்கை இல்லையா?

நமது பூவராகன் அவர்கள் அருமையான சித்தாந்தங்களை எல்லாம் சொன்னார்கள். அவர் கொண்டு வந்தது எல்லாம் ஆதாரவுதான். ப்ரிவிலேஜஸ் மோஷன் கொண்டுவந்தபோது சர்க்காரோடு சேர்ந்து ஓட்டுப் போட்டார்கள். மனச் சாட்சியோடு செய்தால் அந்தமாதிரி ஓட்டுப் போடுவார்களா? இதை விட உதாரணம் என்ன வேண்டும்?

*திரு. கோ. பூவராகன் :* எனக்கு மனசாட்சி இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அதுகூட இல்லை.

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* எனக்கு மனசாட்சி இல்லையென்றாலும் ஆண்டவன் இருக்கிறான். இவருடைய மனசாட்சி எங்களுக்கு வேண்டவே வேண்டாம். இவர்கள் எல்லாம் ஆண்டுதான் நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். இவர் தகவல்

இலாக்கா அமைச்சராக இருந்துதான் எங்களை இங்கு கொண்டு வந்து வைத்தார்கள். வெட்கம் இல்லாமல் பேச வேண்டாம். காங்கிரஸ் வீழ்ச்சிக்கு யார் அடிப்படை?

திரு. கோ. பூவராகன்: வெட்கம் இல்லாமல் இப்படிப்பட்டவர்களை எல்லாம் தலைவராக வைத்துத்தான் இந்தமாதிரி கதி ஏற்பட்டிருக்கிறது. வெட்கம் இருந்திருந்தால் ஏற்கனவே நல்லவிதமாக முடிந்திருக்கும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: ரொம்ப நன்றி. நல்லவேளை எங்களை விட்டுப் பிரிந்து போனார்களே, எங்களைப் பிடித்த ஏதோ ஒன்று தொலைந்தது (குறுக்கீடு) நான் குறுக்கிட அனுமதிக்க மாட்டேன்.

திரு. கோ. பூவராகன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். இதே தலைவர் தான் தி.மு.க. கட்சியை இந்திரா காந்தி ஆட்சி கவிழ்க்க முயற்சித்தாலும் காப்போம் என்றார். இப்போது அவரே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து கவிழ்க்க முயற்சிக்கிறார்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: நல்ல காரியங்கள் எந்தச் சர்க்கார் செய்தாலும் நாங்கள் ஆதரிப்போம். எந்தக் கட்சி என்று அக்கறை இல்லை. முதலவரே குறிப்பிட்டார்கள். 'வேறு மாநிலங்களில் கூட்டணி ஆட்சி இருந்து குழப்பங்கள் ஏற்படுகின்றன; இங்கே ஒரே ஆட்சி அமைந்திருக்கிறது' என்பதற்காக நான் பாராட்டியதாகக் கூறினார்கள். நிலையான ஆட்சிக்குத்தான் பாராட்டுதலே தவிர, நல்ல ஆட்சி என்பதாலே பாராட்டவில்லை. இந்தியாவில் மற்ற மாநிலங்களில் உள்ள கட்சிகள் இருக்கும்படியான நிலையில் இங்கே ஒருகட்சி ஆட்சி அமைந்திருக்கிறது, அதற்காகப் பாராட்டுத் தெரிவித்தேன்.

முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது முதுகுளத்தூரில் நடந்தது பற்றிச் சொன்னார்கள். நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது அதைப் பற்றியெல்லாம் பேசியிருக்கிறீர்கள்.

இப்போது பொறுப்புள்ள முதல் அமைச்சராக இருக்கிறார்கள். முதுகுளத்தூர் சம்பவத்தைப் பற்றி ஒரு என்க்வயரி போடப்பட்டிருந்தது. அந்த ரிப்போர்ட்டை அவர்கள் படித்திருக்கவேண்டுமென்று ஞாபகப்படுத்திக் கொள்கிறேன்.

Revenue Board Member Sri Ramakrishnan as appointed to inquire into the Mudukulathur incidents.

நான்கு பேர்களை கட்டி வைத்துச் சுட்டார்கள் என்று சொன்னார்கள்.

He has reported that there was no such incident, hands were tied and police shot them.

இது அவர்களுடைய ரிப்போர்ட்டில் இருக்கிறது. அந்த அறிக்கையை இவர்கள் நம்பவில்லை என்றால் இந்தச் சர்க்கார் வைக்கும் அறிக்கைகளையும் நாங்கள் நம்ப வேண்டியதில்லை. ஒரு ஐ.ஸி.எஸ். அதிகாரி, ஒரு போர்டு மெம்பர் போயிருக்கிறார், திரு. ராமகிருஷ்ணன் போயிருக்கிறார். அப்படியிருக்க இப்படி அபாண்டம் சுமத்துகிறார்களே. நீதி விசாரணை வேண்டுமென்பதை மறுத்திருக்கலாம். ஆனால் அங்கு நடந்ததைப் பற்றி, அது நடந்ததா இல்லையா என்பதைப்



பற்றி ஒரு ஐ.ஸி.எஸ். அதிகாரி சென்று விசாரித்து அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள், அது சர்க்காரிடம் இருக்கிறது. ஆகவே ஏதாவது சொல்வது என்றால் காங்கிரஸுக்கு களங்கம் கற்பிப்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

இருபது ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் 108 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்தன, 150 பேர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நன்றி. இதே திராவிட முன்னேற்றக் கழகம் முன்பு பிரசாரம் செய்யும்போது, 1967-ல் இவர்கள் சொன்ன கணக்கு இறந்தவர்களின் தொகை 4,401 என்பதாகும். எங்கேயிருந்து அந்தக் கணக்கு கிடைத்ததோ, தெரியவில்லை. அத்தான் குண்டடிப்பட்டுச் செத்தான் என்றெல்லாம் படம் போட்டு பிரசாரம் செய்தார்கள். இப்போது 150 என்று சொல்கிற நிலைக்கு வந்துவிட்டார்கள். (குறுக்கீடு) இப்போது 'ஆல் இந்தியா' என்பார்கள், பின்னர் ஆல் வேர்ல்ட் என்பார்கள், பின்னர் போன யுத்தத்தில் இறந்தவர்களையும் சேர்த்து என்பார்கள், அது உங்களுடைய தனிப்பட்ட வாதமாகும். துப்பாக்கிப் பிரயோகத்தினால் 150 பேர்கள் இறந்துபோனார்கள் என்று சொன்னார்கள். அப்போது இவர்கள் என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள்?

நாங்கள் வந்தால் துப்பாக்கிச் சூடு நடந்தினால் அது மாலையாக வந்து விழும், போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றால் அங்கு சந்தனக் கிண்ணம் இருக்கும், குங்குமம் இருக்கும், வெற்றிலை பாக்கு இருக்கும் என்றெல்லாம் சொன்னார்கள். இருக்கிறது. யாருக்கு இருக்கிறது? திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு இருக்கிறது.

நான் ஒரு முக்கியமான குற்றச்சாட்டைச் சொன்னேன், அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லியிருக்கலாம். முன்னால் எல்லாம் காரியதரிசிகள் குறிப்புகள் எழுதுவார்கள், அது அமைச்சர்களிடம் வரும். வந்தவுடன் வேண்டுமென்றால் அமைச்சர்கள் அதை மாற்றிக்கொள்வார்கள். ஐ.ஸி.எஸ். காரர்கள் பச்சை மையில் எழுதிக்கொண்டிருப்பார்கள். ஒரு குறிப்பு அமைச்சர் இடம் வந்தது. அதில் அவர் . . . No doubt more green ink has flown but I differ from him.
என்று எழுதி வைத்திருக்கிறார்கள். அவசியம் என்றிருந்தால் குறிப்புகளை மாற்றி எழுதியிருக்கிறார்கள். ஆக, அப்போது அதிகாரிகள் சுதந்திரமாக வேலை செய்வதற்கு இடம் கொடுத்திருந்தார்கள் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

சிலயிடங்களில் அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். ஊட்டியில் உள்ள கலெக்டர் பற்றிச் சொன்னேன். உடனே முதல் அமைச்சர் அவர்கள் ஒரு பட்டியலை எடுத்துக்கொண்டு பேசினார்கள். நல்ல அதிகாரிகள் நிறைய இருப்பதைப் பற்றி ஆட்சேபனை சொல்லவில்லை. இந்த ஊட்டி கலெக்டர் நல்லவரா என்ன? ஒரு தடவை சொன்னாராம். எதிர்க்கட்சித் தலைவர் என் என்னை வந்து பார்க்கவில்லை என்று சொன்னாராம். ஒரு வருடத்திற்கு முன்பு சொன்னார். அப்படிப்பட்டவர்களை வைத்துக் கொண்டிருப்பதற்காகச் சொன்னேன். அதிகாரிகளை சீக்கிரமாக மாற்றவும் கூடாது, அதிக நாட்கள் வைத்திருக்கவும் கூடாது. அதுதான் மூன்று வருடங்கள் என்று வைத்திருக்கிறார்கள்.

எதற்கெடுத்தாலும் முன்பு நீங்கள் செய்யவில்லையா, ஆகவே நாங்களும் செய்கிறோம் என்று சொல்வது ஒரு வாதம் அல்ல. மாஜிஸ்ட்ரேட் கோர்டில் ஒரு திருடன், "அவன் திருடவில்லையா, இவன் திருடவில்லையா, ஆகவே நான் ஏன் திருடக் கூடாது?" என்று சொல்வது சரியா என்று கேட்கிறேன். உங்கள் சாதனைகளை எடுத்துச் சொல்லுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை.

சங்கரியைப் பார், தென்காசியைப் பார், பெருந்துறையைப் பார், மூகையூரைப் பார், பார் பார் பட்டணம் பார் என்கிறார்கள். கூவம் ஆற்றைப் பார், அதில் ஓடும் போட்டைப் பார், வீராணத்தைப் பார், அதில் போகும் குழாய்களைப் பார், அதற்கு மேலே கொடியைப் பார், பந்தலைப் பார், என்கிறார்கள். ஐயா, முதல் அமைச்சர் அவர்களே, நான் சொல்கிறேன், விவசாயிகளுடைய வயிற்றைப் பார், ஏழை மக்களின் மனத்தைப் பார், குழந்தைகளின் வயிற்றைப் பார் என்று. ஆகவே மேலே பார், அண்டையில் பார், ஸைடில் பார் என்றெல்லாம் சொல்லாமல் பிரச்னைகளைப் பாருங்கள் என்று சொல்கிறேன். ஆண்டவன் உங்கள் பக்கத்தில் இருப்பதாகச் சொல்கிறீர்கள், ஆண்டவன் எல்லாப் பக்கத்திலும் இருப்பான். எந்தப் பக்கத்தில் எப்படி வேண்டுமானாலும் இருப்பான். ஆண்டவன் பொல்லாதவன்.

"ஒன்றேயெனின் ஒன்றேயாம், பலவென்றுரைக்கின் பலவேயாம், அன்றேயென்னின் அன்றேயாம், ஆமென்றுரைக்கின் ஆமேயாம், தன்றே நம்பி குடிவாழ்வோம்,நமக்கேன் இங்கு பிழைப்போமே". ஆகவே, நாங்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டுகிறோம்.

கூவம் நதித் திட்டம் பற்றி விவசாயிகள் என்ன நினைக்கிறார்கள்? கிராமத்திலிருந்து ஒருவன் வந்தான். வந்து இங்கு நடக்கும் ஒரு கிரிக்கட் பந்தயத்தைப் பார்த்தான். பார்த்துவிட்டு என்ன நினைத்தான்? பத்து பேர்கள் பந்து விளையாடுவதற்கு இவ்வளவு பெரிய இடமா, நான் உழுவதற்கு ஒரு ஏக்கர் இருந்தால் எவ்வளவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று நினைத்தானாம். அவனைப்போல் நானும் ஒரு பட்டிக்காட்டான்தான். இந்தக் கூவம் நதித் திட்டத்திற்காகச் செலவிடப்படும் ஒரு கோடி ரூபாயில் ஆயிரக்கணக்கான பம்ப் செட்களை விவசாயிகளுக்குக் கொடுப்பார்களேயானால் விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும். இப்போதுதானா இந்தக் கூவம் திட்டத்திற்கு அவசரம்? மக்களுக்கு உணவு போடும் திட்டத்தில் கவனம் செலுத்தாமல் கூவம் நதித் திட்டத்தில் பணத்தை இப்போது போடுவதற்கு அவசியமே கிடையாது.

கூவம் நதித் திட்டத்தில் யார் யாருக்கு டெண்டர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன? திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

வீராணம் ஏரித் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது ஏன் ஒருவருக்கே கொடுத்தார்கள்? நான்கு பேர்களுக்குப் பிரித்துக்கொடுத்திருக்கலாமே? இதற்காகவுள்ள குழாய்கள் செய்யும் பொறுப்பை சர்க்காரே ஏற்றுக்கொண்டிருக்கலாமே என்று தான் கேட்கிறோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இவருக்குக் கொடுக்கவில்லையா, இப்போது மட்டும் ஏன் கேட்கிறீர்கள் என்கிறார்கள். சத்திய நாராயணா பிரதர்ஸ்க்கு கொடுத்தது 5 அடி டயமீட்டர், பிறகு கொடுத்தவர்





6 அடி டயமீட்டர். ஆகவேதான் சொல்கிறோம். இவற்றிற்கெல்லாம் ஒரு விசாரணை தேவை. என்னைத் தவறாக நினைத்துக்கொள்ளக்கூடாது. உங்களைக் காப்பாற்றிக் கொள்ளவுந்தான் சொல்கிறேன்.

நாங்கள் ஆளும் கட்சியாக இருந்தபோது எவ்வளவோ விசாரணைகளுக்கு அனுப்பியிருக்கிறோம். எருக்கஞ்சேரி பற்றி கேட்டுக்கொண்டிருந்தார்கள், விசாரணை நடத்தினார்கள். பி.ஏ.ஸி. யில் கூட விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் அது உங்கள் கையில் கொடுக்கப்பட்டது. நீங்கள் தீவிர நடவடிக்கைகள் எடுக்கவேண்டியதுதானே. 60,000 ரூபாயை யார் ஏமாற்றினார்களோ அவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

பாராளுமன்றத்தில் இன்று உங்கள் கட்சித் தலைவராக இருக்கக்கூடிய அன்பழகன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை மாஜி ஐ.ஜி. ராஜரத்னம் முதலியார் மேல் கொண்டு வந்தார்கள். அதைப் பற்றிய விவரங்களை குறிப்புகளைப் பார்த்தால் தெரியும். அதுபற்றி விசாரணை நடத்தியபோது சாட்சி சொல்லாமல் இருந்துவிட்டார். விசாரணை வேண்டுமென்று கேட்டு ஒரு ஜட்ஜைப் போட்டு விசாரணை செய்யக் கூடிய சமயத்தில் அவர் சாட்சியம் சொல்லாது போய் விட்டார்.

ஆகவே என்னவோ பொறுப்பு இல்லாத குற்றச்சாட்டை சாட்டுவதற்காகவும், போக்கு இல்லாத நிலையில் சொல்லவில்லை.

நேற்று ஒரு அமைச்சர் சொன்னார்கள். ஜாக்கிரதை, உங்களை கோர்ட்டுக்கு கொண்டு போவேன், நீங்கள் கோர்ட்டுக்கு வாருங்கள் அங்கே பார்க்கலாம் என்று சொன்னார்கள். காங்கிரஸ்காரர்கள் பேசினால் நாங்கள் ஆணவத்தோடு பதில் கூறவில்லை என்று முதலமைச்சர் சொன்னார்கள். நேற்று அமைச்சர் சொன்னது என்ன? அது ஆணவத்தைத் தவிர வேறு என்ன என்று குற்றச்சாட்டு சாட்டுகிறேன். டெல்லியிலிருந்து வந்த கடிதத்திலிருந்து சொன்னேன். கோர்ட் கொடுத்த தீர்ப்பிலிருந்து சொன்னேன். தவறு இருக்கிறது என்று சொன்னேன். கோர்ட்டிலே சந்திக்கத் தயாரா என்று கேட்டார்கள். நான் எந்த இடத்திலும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். மக்கள் மன்றத்திலா அல்லது வேறு எங்காவது, எங்கிருந்தாலும் சந்திக்கத் தயார். என்ன கோபத்தோடு பேசினார்கள்? அமைச்சர்கள் தாங்கள் இருக்கும் நிலையில் தெளிவாக இருக்கவேண்டும். இப்படிக் கோர்ட்டில் கேஸ் போட்டுவிட்டு, பிறகு அவர்கள் அமைச்சரவையில் இருப்பார்களானால் அது நல்லதல்ல. அது மரபு அல்ல.

எங்கள் காங்கிரஸ் கட்சியை எவ்வளவு குற்றம் சாட்டியிருக்கிறீர்கள். திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார், பைனான்ஸ் மினிஸ்டராக இருந்தார். தவறான குறிப்புக்காக வெளியேற்றப்பட்டார். டி.டி.கே. ஒரு குறிப்பை வெளியிட்டார் என்பதற்காக வெளியேற்றப்பட்டார். கே. டி. மாளவியா என்பவர் சிராஜுடீன் கம்பெனியில் 10,000 ரூபாய் பெற்று ரசீது இல்லாததால் சந்தேகப்பட்டு வெளியேற்றப்பட்டார். ஏதோ எங்களுக்குள்ளே கருத்து மாறுபாடு இருந்தாலும் கூட அந்த நல்ல பாரம்பர்யத்தில் வந்தவர்கள். அதற்கு நாங்கள் பெருமைப்படுகிறோம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அத்தகைய அமைச்சர்களை வெளியேற்றிவர்கள் இந்தக் குற்றச்சாட்டுகளைச் சாட்டுகிறோம். அமைச்சர்களின் மீது விசாரணை நடத்த வேண்டும். அமைச்சர்களின் சொத்துக்கணக்கை விசாரிக்க வேண்டும்.

என்ன பதில் சொல்லி விட்டார் மதிப்பிற்குரிய தொழிலாளர் அமைச்சர் அவர்கள்? வீடு வாங்கி இருப்பதாகச் சொன்னார்கள். மனைவி பேரில் இருக்கிறது என்று சொன்னார்கள். பிறகு என்ன சொன்னார்கள்? எனக்கு சொத்து இருக்கிறது. என் மாமனாருக்கு 5 வீடு இருக்கிறது என்று சொன்னார்கள். பிராபர்ட்டி ஸ்டேட்மெண்ட்டைப் பார்த்தேன். அதில் இவருடைய பங்கு 1/5 பங்கு என்று இருக்கிறது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ரூ. 5,000 கூட கிடையாது. இவர் வீடு வாங்க வேண்டுமானால் அமைச்சரான பின்தான் வாங்கவேண்டுமோ? மாமனாருக்கு இருக்கும் 5 வீட்டில் ஒரு வீட்டை இவருக்குக் கொடுக்கலாமே? இவருடைய மாமனாருக்கு 5-6 பெண்கள் இருக்கலாம், எல்லாருக்கும் இப்படி வீடு வாங்கிக்கொடுத்து இருக்கிறாரா என்பது சந்தேகம் தான். நான் எக்மோர் பெனிஃபிட் சொசைடியில் கடன் வாங்கினேன் என்று சொல்கிறார். ஒரு அமைச்சர் கடன் வாங்கிக்கொண்டு, இந்தமாதிரியான 'வான்ட்ஸ்' நிலையில் இருந்தால் எப்படி அமைச்சராகப் பணியாற்ற முடியும்? The ministers should be above wants.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவேண்டும். கடந்த சில நாட்களாக என்னுடைய பொது வாழ்வுக்கு சோதனைக் காலமாக இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் தவறான பிரசாரத்தைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். நான் என்னுடைய சொத்துக்கணக்கை கொடுத்து இருக்கிறேன். இந்த ஆண்டு கொடுத்து இருக்கும் சொத்துக் கணக்கை வைத்துத்தான் எதிர்க்கட்சித் தலைவர் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். போன வருஷம் கொடுத்த சொத்துக்கணக்கில் வீடு வாங்குவதற்காக ரூ. 42,000 பேங்கில் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறேன். 60,000 ரூபாய் கடன் வாங்கி அந்த வீடு வாங்கப்பட்டது. அது பழைய வீடு. எந்த விசாரணைக்கும் தயாராக இருக்கிறேன். இதைப் போய் பெரிதாகக் கொள்ளவேண்டாம். எனக்கு சென்னையில் வீடு இல்லை. ஆகவே, வீடு வாங்கிக்கொடுக்கப் பட்டது. என் சகலர்களுக்கும் வீடு வாங்கித்தரப்பட்டு இருக்கிறது. இதிலே எந்தவிதத் தவறுகளும் இல்லை. நான் அமைச்சராவதற்கு முன்பே இதற்காக பேச்சுவார்த்தை இருந்தது. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் நான் எதையும் ஏற்றுக்கொள்ளத் தயார். நிரூபிக்க முடியாவிட்டால், அதற்கான நடவடிக்கைகளை ஏற்க அவர் தயாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இருக்கும் குற்றச்சாட்டைச் சொல்கிறேன். அதை விசாரிக்க வேண்டியது முதலமைச்சர் அவர்களுடைய கடமை. ஏற்றுக் கொள்ளத் தயாரா என்றால், ஏற்றுக்கொள்ளத் தயார். நீங்கள் வாங்கி இருக்கிறீர்கள். அது எப்படி வாங்கப்பட்டது என்பதைப்பற்றி விசாரிக்க வேண்டியது முதலமைச்சர் கடமை. நீங்கள் உடனே மறுத்து இருக்க வேண்டும். என்னுடைய வாழ்க்கையில் அந்தமாதிரித் தவறை நான் செய்யவில்லை என்று சொல்லத் தயாரா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தயார், தயார் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** குரலே சரியாக இல்லையே! தைரியமாகச் சொல்ல வேண்டும். இப்படிச் சொல்வதற்கு எனக்கே மனம் சங்கடமாக இருக்கிறது. உண்மையாகவே இந்த விஷயங்களை அதிகமாகப் பேசக்கூடாது என்று நினைக்கிறேன். என்னுடைய நிலை இப்படி ஆகிவிட்டதே என்று வருத்தப்படுகிறேன். இப்படி பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். மவுண்ட்ரோடில் போனால் இடிக்கிறார்கள். என்ன, சார், நீங்கள் கேட்க மாட்டேன் என்கிறீர்களே என்று சொல்கிறார்கள். கேட்டால்தான் என்னை மனிதன் என்று மதிப்பார்கள் போல் இருக்கிறது.



புதிதாக வந்த மின்சார அமைச்சர் வீடு வாங்கி விட்டதாகச் சொல்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. நம்முடைய நிதி அமைச்சர் பற்றிக் கூட நேற்றுச சொன்னார்கள். தம்பி மேலே, மனைவி பேரில் எத்தனை அமைச்சர்கள் வீடு வாங்கி இருக்கிறார்கள்!

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் இப்படி எல்லாம் பேசக்கூடாது. நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால் அதற்கு பொறுப்பான பதிலைச் சொல்ல கடமைப்பட்டு இருக்கிறோம். ஆனால் நீங்கள் இப்படிச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. ஏதாவது இருந்தால் முறையாகச் சொல்ல வேண்டும். இப்படி மவுண்ட்ரோடில் சொல்கிறார்கள் என்று சொல்லக்கூடாது. அப்படிச் சொல்வது எதிர்க்கட்சித் தலைவருக்கு முறை அல்ல.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இடையே குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மின்சார அமைச்சர் கூட வீடு வாங்கி இருக்கிறார் என்று சொல்கிறார்கள். நான் எங்கேயும் வீடு வாங்கவில்லை. அந்தக் குற்றச்சாட்டை நிரூபித்தால் இந்த மன்றம் சொல்லும் எந்தத் தீர்ப்புக்கும் தயாராக இருக்கிறேன். பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் நிரூபிப்பதற்குத் தகுந்த ஆதாரத்துடன் தயாராக இருக்கிறாரா? என்று இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மவுண்ட்ரோடில் சொல்கிறார்கள் என்பதை மன்றத்தில் சொல்லக்கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள் என்று . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பேரவை. மவுண்ட்ரோடு அல்ல. இந்தப் பேரவையில் பொறுப்பான ஆதாரங்கள் இல்லாமல் பேசக்கூடாது. மவுண்ட்ரோடில் பேசுகிற பேச்சை இங்கே பேசக்கூடாது. ஆதாரத்தோடு பேசவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்கள் கட்சிக்காரர்கள் குழாயடியில் பேசியதை எல்லாம் இங்கு பேசி இருக்கிறார்களே, அது மவுண்ட் ரோடு அல்லவா. சபாநாயகர் அவர்களே, இதுமாதிரி மவுண்ட் ரோடு என்று என்னை இழிவு செய்யாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் உங்களை மவுண்ட்ரோடு என்று சொல்லவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மவுண்ட்ரோடில் பேசுவதை இங்கு பேசக்கூடாது என்றுதான் சொன்னேன். இந்தப் பெரு மன்றத்தை மவுண்ட்

ரோடாக மாற்றி விடாதீர்கள் என்றுதான் சொன்னேன். குற்றச்சாட்டு சொல்ல உரிமை இருக்கிறது. ஆதாரத்தோடு சொல்லுங்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்த உலகத்தில் இருக்கும்படியான நிலை இப்படி இருக்கிறது. நாட்டை ஆள்பவர்கள் நல்லவர்கள் என்று சொல்லும்படி இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். வேறு எந்த நோக்கமும் கிடையாது. எந்தவிதமான குற்றமும் இல்லாத வகையில் இருக்கவேண்டும். அதற்காகத்தான் முதலமைச்சர் அவர்களே ஒரு கமிஷன் போட்டு மந்திரிகள், எம்.எல்.ஏ. க்கள் எல்லோருடைய சொத்து விவரத்தையும் எடுங்கள் என்று சொன்னேன்.

மதிப்பிற்குரிய முதலமைச்சர் சொன்னார்கள், 15 பேருக்கு கார் கொடுக்கப் பட்டு இருக்கிறது, இன்னின்னாருக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். இதற்கு எல்லாம் விசாரணை தேவை. ஒரு பத்திரிக்கை ஒரு எம்.எல்.ஏ. வின் போட்டோவைப் போட்டு சொத்துக் கணக்கு எல்லாம் போட்டு இருக்கிறார்கள். ஆளும் கட்சி எதிர் கட்சி என்பதற்காகச் சொல்லவில்லை. யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அமைச்சர்கள் கடன் வாங்கிற நிலைக்கு அப்பாற்பட்டு இருக்கவேண்டும்.

இதற்கெல்லாம் உடனடியாக இரண்டு, மூன்று மாதங்களில் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கமிஷன் போட்டு, இதைத் தீர விசாரித்து முடிவு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று இருக்கின்ற நிலை என்ன? சட்டத்தி லிருந்து தப்பித்துக்கொள்ளலாம். மனைவி பேரில் எழுதிவைத்துவிட்டு, மகன் பேரில் எழுதிவைத்து விட்டு, என் பெயரில் ஒன்றுமில்லை என்று சொல்லிவிட லாம். இவர்கள் பதவிக்கு வந்தபிறகு இவர்களுடைய சுற்றத்தார் பேரில் இருந்தாலும் கூட, அது தவறுதான். அசெட்ஸ அண்டு லயபிலிடீஸ் ஸ்டேட் மெண்ட் மட்டும் இங்கே கொடுத்துவிட்டால் பிரயோசனம் கிடையாது. தீவிர மாக 'புரோப்' செய்யவேண்டும். உயர்ந்த அதிகாரிகளைப் போட்டு இதுபற்றி விசாரணை செய்யவேண்டும். அதற்காகத்தான் நான் இதை மிகவும் தீவிர மாகச் சொல்கிறேன். ரூ. 500 சம்பளம் என்று சொல்லிக்கொண்டு, ரூ. 500-ல் வாழ்க்கை நடத்திவிட முடியுமா? நாம் நடத்தும்படியான வாழ்க்கையை நினைத்துப் பார்க்கவேண்டும். இது போதுமா என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஒன்றை மட்டும் நான் சொல்வேன். சில பேர்களுக்கு, சிகரெட் பழக்கம் உள்ளவர்களுக்கு மாதத்திற்கு ரூ. 500 கூடச் செலவாகும். இந்த நிலையை யெல்லாம் பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும். மக்களிடம் போய் நாங்கள் செலவைக் குறைத்துக்கொண்டு விட்டோம் என்று சொன்னால் எப்படி? முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பாக்கி இருக்கும்படியான மாகாணங்களை ஒப்பிட்டுப் பாருங்கள் என்று கூறினார்கள். ரூ. 3½ லட்சம், 4 லட்சம் காங்கிரஸ் ஆட்சியில் செலவானது என்றால், இப்பொழுது ரூ. 500 சம்பளம் இருக்கும் பொழுது ரூ. 1¾ லட்சம் அளவில் தானே இருக்கவேண்டும். ஏன் அது ரூ. 10½ லட்சத்திற்கு வந்திருக்கிறது? இதை ஏன் நான் கேட்கக்கூடாது? ஆகவே, இதுமாதிரியான நிலையிலே என்ன சொல்லிக்கொண்டிருக்கிறோம்? ரூ. 10½ லட்சம் மந்திரிகளின் டிராவலிங் அலவன்ஸ் முதலிய இனங்களுக்கு செலவாகிக் கொண்டிருக்கிறது.



சில சமயங்களில் முதல் அமைச்சர் அவர்கள் காமராஜ் அவர்களை உதாரணம் காட்டுகிறார்கள். 'மாநில ஆட்சிக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட டோம், நான் பேசுவதற்கு முன்னாலேயே காமராஜ் அவர்கள் சொல்லிக்கொண் டிருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட காமராஜ் அவர்களையே மிகவும் கேவலமாகவும், இழிவாகவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சபாநாயகர் அவர்களே, நீங்கள் மணியை சுட்டிக்காட்டினால் பிரயோசனம் இல்லை. நானே அவர்கள் பேசிய விஷயங்களுக்கெல்லாம் பதில் சொல்லவேண்டும். நானே பசியோடு பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

காமராஜ் அவர்கள் என்ன சொன்னார்கள்? மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று இந்த முதல் அமைச்சர் கேட்டுக்கொண்டிருக் கிறாரே, பிரதம மந்திரி அவர்கள் எல்லா முதல் அமைச்சர்களையும் கூப்பிட்டு வைத்து, என்ன வேண்டும் என்று கேட்டு, தீர்ப்பு செய்தால் என்ன என்று தான் சொன்னார். மக்கள் குறைகளை உணர்ந்தவர்கள் காமராஜ் அவர்கள். மக்களுடைய நாடியைப் பிடித்துப்பார்த்தவர்கள் காமராஜ் அவர்கள். உங்களை இந்த நிலைக்குக் கொண்டுவந்ததே அவர்கள்தான். அவர்கள்தான் அடித் தளம் கட்டினார்கள் உங்களுக்கு. காமராஜ் அவர்கள் அப்படி அடித்தளம் கட்டவில்லையென்றால், நீங்கள் ஆடிப்போயிருப்பீர்கள். இதைக் கொஞ்சம் நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

காமராஜ் அவர்கள் பிரின்ஸஸ் பர்ஸ் அபாலிஷன் பில்லுக்கு ஆதரவாக வோட் போடவில்லை என்று சொன்னால், எந்த நிலையில் போடவில்லை? அங்கு இருக்கும்படியான ராஜாக்கள் நிலைத்திருப்பதற்காக அல்லது ராணிகள் நிலைத் திருப்பதற்காக அல்ல. எங்கள் காங்கிரஸ் போட்ட திட்டப்படி காம்பென் சேஷன், நஷ்டஈடு பற்றி அந்த மசோதாவிலே சேர்த்து இருக்கவேண்டும், அப்படியில்லை என்பதற்காகத்தான் அதை எதிர்த்து வோட்டு போட்டார்கள். அதை வைத்து அவர்களிடம் நாட்டை ஆளும்படியான இந்திரா காங்கிரஸார், இந்திரா அம்மையார் பேரம் பேசக்கூடாது. அதை வைத்து மிரட்டி சலுகைகளைப் பெறுவதற்குத்தான் ஆளும் காங்கிரஸ் இப்படி ஒரு தகிடுதத்தம் பண்ண ஆரம்பித்திருக்கிறார்கள். 'தி பில் ஈஸ் டிஃபெக்டிவ்' என்பதனால் தான் அதற்கு ஆதரவாக வோட்டு போடவில்லை. ராஜாக்களுக்கு மானியம் கொடுக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் அதை எதிர்த்து வோட்டுப் போட வில்லை. இதுபற்றி தவறான பிரசாரம் செய்கிறீர்கள். (சிரிப்பு) நீங்கள் சிரிக் கிறீர்கள், உங்களைப் பார்த்து அங்கே சிரிப்பார்கள். ஆகவே, இதுமாதிரி நிலை யிலே காமராஜ் அவர்கள் எப்படி இவர்களை ஆதரிக்கலாம், சுதந்திராக் கட்சி யோடு எப்படி சேரலாம் என்று கேட்கிறார்கள்?

1967 தேர்தலில் எல்லாக் கட்சிகளையும் சேர்த்து கூட்டணி சேர்த்துக் கொண்டு, ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், ஏணியில் ஏறியதற்குப் பின்னால், அதை உதைத்துத் தள்ளுகிறீர்களே? ஏணியை ஏறுவதற்குப் பயன்படுத்திக் கொண்டு, கூட்டணி என்று சொல்லி, ராஜாஜி அவர்களின் ஆதரவு எங்களுக்கு இருக்கிறது என்று சொல்லி, சுதந்திராக் கட்சி, இடதுசாரி கம்யூனிஸ்டு, வலது சாரி கம்யூனிஸ்டு இவர்களின் ஆதரவைப் பெற்று, பதவிக்கு வந்ததற்குப் பின்னால் ஏணியில் ஏறியதற்குப் பின்னால், ஏஏணியை எட்டி உதைத்தது நீங்கள்தானே? அதற்கு மக்கள் தீர்ப்பு கொடுப்பார்கள். மக்கள் உங்களை

இப்படியே போய்க் கொண்டிருக்க விடமாட்டார்கள் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். மக்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்? 1972 தேர்தல் அல்ல, உப தேர்தல் நடப்பதற்கு ஆர்டர் பண்ணிப் பாருங்கள். உடனே உபதேர்தலை நடத்துங்கள், யார் பக்கம் யார் இருக்கிறார்கள் என்று பார்ப்போம் . . .

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நிச்சயம் இடதுசாரி கட்சிகள் உங்களோடு சேருவது என்பது கிடையாது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: எங்களை ஆதரிக்கவேண்டும் என்று உங்களை நாங்கள் கெஞ்சிக் கேட்கும் நிலையில் இல்லை. கூட்டணியில் வந்துவிட்டு ஏன் பிரிகிறீர்கள்?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பிரிகிறோமா, இல்லையா என்று நாங்கள் சொல்ல வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: உபதேர்தல்களைச் சீக்கிரம் வையுங்கள் என்று நான் கேட்கிறேன் . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முன்பே அவர்கள் இப்படிப் பேசியிருக்கிறார்கள் என்று பத்திரிகையில் வந்த செய்தியை நான் வெளிநாட்டில் இருக்கும்பொழுது படித்தேன். உப தேர்தல்களை வைப்பதற்குக் கழகம் பயப்படுகிறது, தள்ளிப் போடுகிறது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப் போகிறோம் என்று அவர்கள் அறிக்கை விடுத்திருந்தார். உப தேர்தல் தள்ளிப் போவதற்கு நாங்கள் காரணம் அல்ல. காங்கிரஸ் கட்சிக்கு என்ன சின்னம் என்று திரு. கக்கன் அவர்கள் போட்டிருக்கிற வழக்குதான் காரணம். அதற்கு வேறு காரணம் இல்லை. கேரளாவில் தென்னைமரம், சைக்கிள் என்று போய் விட்டீர்கள். ஆனால், இங்கே மாத்திரம் எங்கள் சின்னம்தான் வேண்டும் என்று உறுதியாக இருந்து, நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினால், இடைத் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. அது எங்கள் குற்றம் அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன்: முதல் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். அப்புறம் கோர்ட்டைக் காட்டுவார்கள். ஏதாவது சொன்னால் கோர்ட்டுக்குப் போங்கள் என்று சொல்வார்கள். அதுபற்றிப் பாதகம் இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நாளைக்கே நீதிமன்றத்தில் சின்னத்தைப் பற்றித் தொடர்ந்த வழக்கை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன் என்று சொல்லி விட்டால், உபதேர்தலுக்குத் தேதியை நிர்ணயிக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: யோசிப்போம். நாங்கள் வந்ததற்குப் பின்னால் தென் சென்னைத் தேர்தல், பாராளுமன்றத்திற்கு இடைத் தேர்தல் நடந்தது, அதிலே பார்த்தீர்களா எங்களுடைய செல்வாக்கை என்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன். கார்ப்பரேஷன் தேர்தல் நடந்ததே அண்மையிலே. அதை நீங்கள் பார்த்தீர்களா? என்ன பார்த்தீர்கள்? நாங்கள் 52, நீங்கள் 56. வித்தியாசம் என்ன? முன்பு இருந்ததற்கும், இப்பொழுது இருப்பதற்கும் என்ன வித்தியாசம்? லட்சத்து பதினாயிரம் வோட்டுகள் வாங்கி ஜெயித்தீர்கள், மாலை போடுகிறேன். கூட்டணி சேர்த்து ஜெயித்தீர்கள்.



இப்பொழுது இருக்கும்படியான பிரச்சினை என்னவென்றால், பஞ்சாயத்துத் தேர்தலைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வோட்டு பற்றி சொன்னார்கள். 178 தங்களுக்கு வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அவரே அவருடைய சந்தேகத்தையும் சொல்லிவிட்டார்கள். 'நாங்கள் அறிமுகப்படுத்தப் போகிறோம், அவர்களை வேறு ஆட்கள் என்று சொன்னாலும் சொல்வார்கள்' என்றார். என்னுடைய மனதைப் பூரணமாக அறிந்தவர் அவர். முன்கூட்டியே எதிர்பார்த்துச் சொல்லிவிட்டார் செய்யப்போகிற காரியத்தை. அதுவரைக்கும் நன்றி. பஞ்சாயத்துத் தேர்தலில் நீங்கள் அப்படி வெற்றி அடைந்தீர்கள் என்று சொல்லிக் கொள்ள முடியாது. பாக்கி இருக்கும்படியான கட்சிகளைப்பொறுத்த வரையில் ஒன்றுமே இல்லாமல் போய்விட்டது. எங்களுக்கும், உங்களுக்கும் தான் போட்டி. மாற்றக் கட்சிகள் இருக்கிற இடமே தெரியவில்லை. ஆகவே, இது மாதிரி நிலையிலே பஞ்சாயத்து தேர்தல்களை ஒட்டி எத்தனை கொலைகள் நடந்திருக்கின்றன, எத்தனை ஊழல்கள் நடந்திருக்கின்றன? போலீஸிடம் போய் எவ்வளவு புகார்கள் சொன்னாலும் எடுக்கப்படாமல் இருக்கின்றன. திருநெல்வேலியில் புகார், எல்லா இடங்களிலும் புகார்தான். காங்கிரஸ் காரர்கள்போய் விண்ணப்பம் கொடுத்தால், அதை ஏற்றுக்கொள்வதில்லை. இவர்கள் இருக்கிறார்களே, துண்டுக்காரர்கள் கொடுத்தால் அலறுகிறார்கள். கட்டுவிரியனைப் பார்த்தால் பயம் என்று சொல்வார்களே, அதே போல், சிறிய துண்டைப் பார்த்தாலே பயம். அவர்களைக் கண்டாலே பயம். அப்படி பயந்தால் என்ன செய்வது? ஆகவே, நியாயம் நீதி இருக்கிறதா? நான் சொல்வது என்னவென்றால், யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுங்கள். கேட்டால், கக்கன் மகனுக்கு உத்தியோகம் கிடைக்கவில்லையா என்கிறார்கள். நியாயம் இருந்தால் எல்லோருக்கும் கிடைக்கவேண்டியதுதான். இல்லையென்றால், தள்ள வேண்டியதுதான். இதையெல்லாம் சொல்லி, பிரச்சினையிலிருந்து விலகிப் போகப் பார்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சாட்டுகிறேன்.

இன்னொன்று சொன்னார்கள். அமைச்சர்கள் வீட்டுத் திருமணங்களில் பரிசுப் பொருள்கள் வருகின்றன என்று எதற்காக வருகின்றன? பரிசுகள் பற்றியெல்லாம் குற்றச்சாட்டுச் சாட்டினேன். முதல் அமைச்சர் அவற்றிற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார். 'உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு' என்று சொன்ன பச்சைத் தமிழர்கள், மாணவர்களையெல்லாம் அவர்கள் மனதைக் கெடுத்து, வாழ்க்கையைக் கெடுத்து விட்டீர்கள் என்ற குற்றம் சாட்டினேன். அந்த நிலையில் தேர்தலுக்குப் போனீர்கள். இந்தியை ஒழிக்க வேண்டும் என்று சொன்னீர்கள். இப்பொழுது கல்வி அமைச்சர் என்ன சொல்லுகிறார்கள்? உத்தரப் பிரதேசத்தில் வேலையிருக்கிறது (குறுக்கீடு) டாக்டர்களுக்கு, அங்கே போங்கள் என்று சொல்லுகிறார். அடிப்படையில்லாமல் எப்படிப் போவார்கள்? அப்பொழுது இந்தியை விரட்டினீர்கள். அந்த நிலையில் மாணவர்களுடைய பிரச்சினைகள் எதை தீர்த்திருக்கிறீர்கள்? மூன்று வருஷ காலத்தில் எத்தனை கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன? தானாகத் தீரவேண்டுமேயல்லாமல் அவைகளைத் தீர்ப்பது முடியாது என்றால்? நாங்கள் தீர்க்கவில்லை, தானாகவே தீர்ந்தால்தான் முடியும் என்கிறார்களா?

ஹவுஸ் ஸர்ஜன்கள் வந்து பேசினார்கள், வாக்குறுதி கொடுத்தார்கள் என்கிறார்கள். அதற்கு நன்றி. ஸ்ட்ரைக் நிறுத்தியதற்கு அவர்களுக்கு நன்றி. அது பொதுமக்கள் விவகாரம்; சுகாதார விவகாரம்.

பத்து வருஷ ஆட்சியில் கார்ப்பொரேஷன் நிலை எப்படியிருக்கிறது? (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நல்லா இருக்கிறது.) ஆமாம் டயரியா, மஞ்சக்காமாலை எல்லாம் இருக்கிறது. கலப்படத்திற்காக அரெஸ்ட் செய்வதாக இருந்தால், கார்ப்பொரேஷன் முதலில் அரெஸ்ட் செய்யப்படவேண்டும். குடி தண்ணீர் இல்லை (குறுக்கீடு) உங்களுடைய எம். பி. யே மஞ்சக்காமாலையில் படுத்திருந்தாரே. பத்து வருஷ ஆட்சியில் சுகாதார வசதி ஏற்பட்டிருக்கின்றனவா? ரோடு வசதி ஏற்பட்டிருக்கின்றனவா? இப்பொழுது இருக்கும் அதிகமான வரிப் பளுவினால் என்ன வசதிகள் பெருகியிருக்கின்றன?

உங்கள் தேர்தல் அறிக்கையில் என்ன சொன்னீர்கள்? படியரிசி என்று சொன்னீர்கள். ஏன் நிறுத்தினீர்கள்? தேர்தலின்போது பெரிய படத்தைப் போட்டு, உதய சூரியனில் குத்துங்கள், மூன்று படியரிசி எங்கள் லட்சியம், ஒரு படியரிசி நிச்சயம் என்று சொன்னீர்களே? ஏன் நிறுத்தினீர்கள்? விவசாயிகளுடைய நலன்களைப் பற்றிச் சொன்னீர்கள். . .

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** அந்த லட்சியம் விரைவில் வருகிறது, நீங்களும் பார்க்கத்தான் போகிறீர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அந்தப் படியரிசியையும் எடுத்துப் போட்டார்கள், சைக்கிள் ரிக்ஷாக்காரன் பேட்டியில் சொல்லுகிறான், அரிசி கிடைத்தால் போதுமா? (குறுக்கீடு) எத்தனை சொன்னாலும் காதில் ஏறுவதாக இல்லையே, நான் சொன்னதற்குப் பதில் வரவில்லையே. மதுரைக்கும் வரும் என்று மான்செஸ்டர் கார்டியனுக்குப் பேட்டியில் சொன்னீர்களே? ஏன் வரவில்லை? ஐம்பத்து ஏழிலிருந்து 63 லட்சத்திற்குப் பெருக்கியிருக்கிறோம் என்கிறார்கள். குறைந்தபோது மழை பொழியவில்லை என்பது, மழை பொழிந்தால், எங்கள் சாதனை என்பது. 1967-68-ல் மில்லி மீட்டர், சென்டிமீட்டரில் சொல்வது. . .

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** 1967-ம் ஆண்டில் நிலப்பரப்பு விளைச்சலுக்கு 5 லட்சம் ஏக்கர்; இப்பொழுது 12 லட்சம் ஏக்கர். அதிகமான நிலப்பரப்பின் காரணமாகவும் அதிக உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது. மழை பெய்ததால் மட்டுமல்ல. எடுத்துக் கொண்ட நிலம் அதிகம், சாகுபடி அதிகம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** காங்கிரஸ் ஆட்சியில் நிலப்பரப்பை வேண்டாம் என்றா சொன்னோம்? ஏற்கனவே இப்படி வரும் என்று திட்டம் போட்டிருந்தோம். அப்பொழுதே போட்ட திட்டத்தின் விளைவுதான் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் விளைச்சல். 'நன்றி சொல்லவில்லை, நன்றி சொல்லவில்லை' என்கிறீர்களே, இதற்கு ஏன் எங்களுக்கு நன்றி சொல்லவில்லை.

இப்பொழுது இருக்கும்படியான பிரச்சினையெல்லாம் எல்லா இடத்திலும் தவறுகள் நடந்திருக்கின்றன. சிவில் சப்ளையில் தவறுகள் கொஞ்ச நஞ்சம் கிடையாது. (மணியடிக்கப்பட்டது) ஏன் மணியடிக்கிறீர்கள்? பசியோடு, 4 மணி வரையிலும் பேசுவேன்.

சொல்லுகிறார்கள், கொள்முதல் செய்துவிட்டோம் என்று. (குறுக்கீடு) வேண்டுமானால் ஒத்திவையுங்கள், பின்னால் பேசிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.



**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஆகவே, இது ஒரு ஒயிட் எலிபெண்ட், இந்த சிவில் சப்ளைஸ். கேட்டால் என்ன சொல்லுவார்கள்? பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி சேர்மென் என்பார்கள். 1969-70 கணக்கு எப்பொழுது அங்கே வரும்? இந்த ஆட்சியோ வேறு எந்த ஆட்சியோ? அவசரமாகச் சொல்லவேண்டும் என்றுதான் இப்பொழுதே சொல்லுகிறேன்.

டெண்டர் ஏன் விடவில்லை என்றால், லாபம் என்று சொல்லுகிறார்கள். ஏன் லாபம் இல்லை என்றால், டெண்டர் என்கிறார்கள். டெண்டர் விடுவது லாபமாக இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் டெண்டர் விடாமல் இருப்பதேகூட லாபமாக இருக்கலாம்.

மைலோ, கோதுமை என்று சொல்லுகிறார்கள். அதாவது, வடநாட்டில் கோதுமை விற்றதில், கெட்டுவிட்டது என்பதால், 50 ரூபாய்க்குக் கேட்டார்கள், 86-க்கு விற்றார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தென்னாற்காடில் அ.தி. எதிர்க்கட்சித் தலைவர் தவறான தகவல்களை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள். மைலோவுக்கும் டெண்டர் விடப்பட்டது; கோதுமைக்கும் டெண்டர் விடப்பட்டது. கோணிப் பைக்கும் டெண்டர் விடப்பட்டது. இதைத் தெளிவுபடுத்தியிருக்கிறேன். கோதுமை, மைலோ, கோணி இவற்றிற்கெல்லாம் டெண்டர் விட்டிருக்கிறோம். இதற்குமேல் நான் என்ன சொல்வது?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** டெண்டர் விடுகிறோம் என்றால், அது கெட்டுப் போய்விட்டது . . . ரூ. 50-க்கு டெண்டர், ரூ. 86-க்கு கொடுத்தோம் என்றால் . . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தகவலைக் கேட்டிருந்தால் கொடுத்திருப்பேன். டெண்டர் விட்டோம்; மிகக் குறைவாக இருந்தது. நஷ்டம் வரக் கூடாது என்று நினைத்தோம். ஆலைகளுக்குச் சொல்லியனுப்பினோம்; இந்திய சர்க்கார் விலையில் எடுத்துக் கொள்ளச் சொன்னோம். டெண்டர்கள் குறைவாக இருந்தது. இன்னொரு இடத்தில் அதிகமாக இருந்ததால், அரசாங்கத்திற்கு நஷ்டத்தைக் குறைப்பதற்காகக் கொடுத்தோம். அவ்வளவுதான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அரசாங்கத்திற்கு நஷ்டம் வரக்கூடாது என்று ஒரு குறிப்பிட்ட வியாபாரிக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த விலைக்கு யார் யார் கேட்கிறார்களோ அவர்களுக்குக் கொடுத்திருக்கலாம் அல்லவா? கெட்டு விட்டது என்பதற்கு ஆபீஸ் சர்ட்டிபிகேட் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆபீஸ் சர்ட்டிபிகேட் இருக்கிறது என்கிற தகவல்கூடத் தெரியாமல் இருக்கும் எதிர்க்கட்சித் தலைவரைக் கண்டு பரிதாபப்படுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நானும் உங்களுக்காகப் பரிதாபப்படுகிறேன். ஒரு வியாபாரிக்குக் கொடுத்தார்கள் என்றால், வியாபாரிமேல் சந்தேகம் இருக்கிறது. இதைக் கேட்க உரிமை இருக்கிறது.

''Proceedings of the Commissioner of Civil Supplies R.C. No. 4950/C.S. re. levy sugar and release of stock...... Commissioner of Civil Supplies hereby appoints Messrs. Karthikeyan and Company, Vellore, wholesaler.'

சர்க்கரை பர்மிட் கொடுப்பதில் ஒரே கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது சர்க்கரை தேங்கியிருக்கிறது என்றால் ஏன் தகுதியுள்ளவர்களுக்கெல்லாம் கொடுக்கக் கூடாது? ஒருவருக்கு மட்டும் கொடுப்பானேன்? இத்தனை மூட்டைகளை இத்தனை பேர்களுக்கு என்று கொடுக்கலாமே. (குறுக்கிடு) சிவில் சப்ளைஸ், ப்ரொஸீடிங்ஸ் டேட்ட் 18—2—1970 சமீபத்தில் போட்டது தான். சர்க்கரை தேங்கியிருந்தால் கார்த்திகேயன் கம்பெனிக்கு மட்டும் கொடுப்பானேன்? தவறான முறையில் நடந்திருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன. வெளியிலே அனுப்பும் தானியங்களையெல்லாம்கூடச் சில பேருக்குக் குறிப்பிட்டவர்களுக்குக் கொடுக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டைச் சாட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின்மீது நடந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கும் முறையில் பேசவேண்டுமேயல்லாது, விவாதத்தில் முன்பு பேசாத கருத்துக்களை, பதில் அளிக்கும் முறையில் புதுக் கருத்துக்களைப் புகுத்துவது முறையல்ல. அப்படித்தான் விதிகளும் சொல்லுகின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டிலே டெண்டர் போடும்படியான முறையை என்னுடைய நண்பர் கிளப்பினார். அதற்குச் சரியான பதில் சொல்லவில்லை. நான் வற்புறுத்துவது என்னவென்றால், இதை பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டி விசாரித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகும். பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டிக்கு ஃபைல்களை அனுப்பினால் விசாரித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும் (குறுக்கீடு). (ஓர் உறுப்பினர் : நீங்கள் வரப்போகிறீர்களே, அப்போது பார்த்துக் கொள்ளுங்கள்) நான் வந்தால் கட்டாயம் பார்த்துக்கொள்வேன்.

அடுத்து, வீராணம் ஏரித் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வெறும் அறிக்கை சமர்ப்பித்துவிட்டால் மட்டும் போதாது. 18 கோடி ரூபாய்த் திட்டத்தை ஏன் சர்க்காரே ஏற்று நடத்தக் கூடாது? இதை நான்கு பகுதியாகப் பிரித்து ஏன் டெண்டர் விடக்கூடாது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான்கு பகுதிகளாகப் பிரித்து வேலை செய்வது என்றால் எப்படி? ஒருவர் 16 கோடி ரூபாய்க்கு டெண்டர் கேட்கலாம், இன்னொருவர் 18 கோடிக்குக் கேட்கலாம், பிறிதொருவர் 23 கோடிக்குக் கேட்கலாம். மற்றவர் 25 கோடிக்குக் கேட்கலாம். ஒருவருக்கு 50 மைல், இன்னொருவருக்கு 50 மைல் என்ற முறையில் டெண்டர் கோருவதா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மொத்தம் உள்ள 132 மைல்களை நான்கு பகுதிகளாகப் பிரித்துக் கிட்டத்தட்ட 40 மைல், 40 மைல் என்று பிரித்து டெண்டர் கால்ஃபார் பண்ணியிருக்கலாமே?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒருவர் சூனியக் குழாயைப் போடுவார், இன்னொருவர் சுழற்சிக் குழாயைப் போடுவார். இப்படி இரண்டும் கலந்து வந்துவிடும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மறுபடியும் ஆலோசனை வேண்டுமென்று சொன்னால் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். ஃபைல்களில் எல்லாம் எப்படிச் செய்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறீர்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முன்னாலே இருந்தவர்கள் ஃபைல்களைக் காட்டியிருக்கலாம். பச்சை இங்கில் எழுதியது எல்லாம் தவறு என்று சொல்லி அமைச்சர்கள் மறுத்திருக்கலாம். நாங்கள் அப்படிக் காட்டுவதாக இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பச்சை இங்க்கில் எழுதியதை எனக்குக் காட்டியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஐ.சி.எஸ். செக்ரடரி ஒருவர் பச்சை இங்க்கில் எழுதியிருந்தார். நான் சொன்னேன், பச்சை இங்க்கில் எழுதியதையும் மறுக்கிறேன் என்று.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளும்பொழுது, ரகசியங்களை வெளியில் சொல்லக்கூடாது என்று பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்கிறார்கள். அதை மீறியவர்கள் எல்லாம் அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஃபைலை எனக்குக் காட்டியதாகவா நான் சொன்னேன்?

இப்போது நிர்வாகம் சரியாக இல்லை. கடைசியாகக் கேட்டார்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்களே, குற்றச்சாட்டுக்கள் என்ன என்று. எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் சொல்ல வேண்டுமென்றால் அதற்கே இரண்டு மணி நேரம் ஆகும். இப்பொழுது மீண்டும் சொல்கிறேன். கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல்களில் அமைச்சர்கள் செய்தது தவறு. மூன்று வருட ஆட்சியிலே மக்களுடைய வாழ்க்கைத்தரம் பொருளாதாரத்திலே உயரவில்லை. நாட்டிலே படிக்கும்படியான மாணவர்களின் நிலை, வேலையில்லாத் திண்டாட்டம், எதிர்காலத்திலே இவர்களுடைய நிலை என்ன என்பதைப்பற்றியெல்லாம் எந்த விதமான திட்டமும் இல்லையென்பதைக் குற்றச்சாட்டாகக் கூறுகிறேன்.

மேலும், இன்றையதினம் பஞ்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. 1967-லே 29 பஞ்சாலைகள் மூடப்பட்டன. சில பஞ்சாலைகள்தான் திறக்கப்பட்டிருக்கின்றன. பல மூடிக் கிடக்கின்றன. இதன் காரணமாகப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் சாப்பாட்டிற்கே வழியில்லாமல் வருந்துகிறார்கள்.

அடுத்தபடியாக வண்டலூர் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைக் குற்றச்சாட்டாகக் கூறுகிறேன். டெக்ஸ்டூலில் நான்காயிரம் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் குன்றியிருக்கிறது. அதை இந்த சர்க்கார் கவனிக்கவில்லை. இந்த சர்க்கார் தூங்கிக் கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சுமத்த விரும்புகிறேன். இப்படியாக ஒன்று, இரண்டு, மூன்று குற்றச்சாட்டுக்களை எண்ணிச் சொல்ல முடியாது.

அடுத்தபடியாக, விலைவாசியேற்றம் அதிகமாக இருக்கிறது. நாங்கள் வந்தால் விலைவாசிகளைக் குறைப்போம், கடல் நீரைக் குடிநீராக ஆக்குவோம் என்றெல்லாம் சொன்னார்கள். இப்பொழுது ஏன் வீராணம் ஏரித் திட்டம்? கடல் நீரைக் குடிநீராக மாற்றுவதுதானே?

மேலும், சூரிய கிரணத்திலிருந்து கிடைக்கின்ற உஷ்ணத்தை வைத்துச் சமையல் செய்வோம் என்றெல்லாம் சொன்னார்கள். 1967-ல் விறகு குண்டு என்ன விலை என்பதை உணர்ந்தார்களா?

விலைவாசியைக் குறைப்போம் என்றார்களே, விலையைக் குறைத்தார்களா? 1967 ல் இருந்த புள்ளிவிவரம் என்ன? இன்றைக்கு இருக்கும் புள்ளிவிவரம் என்ன? லிவ்விங் இன்டெக்ஸ் 70 புள்ளிகள் ஏறியிருக்கின்றன. இதுவா வாழும் படியான மக்களுக்குக் கிடைக்கும்படியான ஒரு சலுகை? நீங்கள் அளித்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றிவிட்டீர்களா? எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றத் தவறிவிட்டீர்கள்.

சட்டம், அமைதி என்பது கிடையாது. போலீஸ் எதேச்சாதிகாரம் இருக்கிறது. உங்கள் கட்சியைச் சேர்ந்த எம். பி. அவர்களே சொல்கிறார்கள். இதுவா மரியாதை? அவரை அரஸ்ட் செய்கிறார்கள். கோயம்புத்தூர் டிஸ்ட்ரிக்ட் கமிஷனர் ஆபீசில் கைது செய்கிறார்கள். போலீஸ் எதாச்சாதிகாரம் இருக்கிறது. இதைக் கேட்டால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தவறே நடக்கவில்லையா என்று கேட்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் தவறு செய்தால் நாங்களும் தவறுசெய்வோம் என்று சொல்வதாகத்தானே இதற்குப் பொருள், ஆகவே, இந்தச் சர்க்கார் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை. தங்களுடைய கட்சியின் நலனையே பிரதானமாகக் கருதினார்கள். மக்களுடைய வாழ்க்கை வளம் பெறவில்லை. கட்சி நிலைத்து, கட்சி வளர, கட்சி நலனுக்காக இருந்து வருகிற சர்க்காரை அகற்றுவதுதான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் நோக்கமாகும். ஆப்ரகாம் லிங்கன் அவர்கள்,

'Government of the people, by the people and, for the people' என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுத் தேர்தலைப்பற்றி அவர் சொல்லும் நேரத்தில்,

'People may err in an election. The remedy is the next என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான் இந்த சர்க்கார்மீது நம்பிக்கையில்லையென்று சொல்லும்படியான நிலைமை இருக்கிறது. உங்களிடத்தில் மக்களுக்கு நம்பிக்கை போய்விட்டது. இப்போது நீங்கள் உங்களுடைய தவறுகளைத் திருத்திக்கொண்டு உணர்ந்து செயல்படுங்கள். இல்லாவிட்டால் மக்கள் உங்களை மன்னிக்கமாட்டார்கள் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** அடுத்து திரு. என். சங்கரய்யா அவர்கள் அரை மணி நேரம் பேசுவார்கள். இப்பொழுதே நேரமாகிவிட்டது.

■ **திரு. என். சங்கரய்யா:** தலைவர் அவர்களே, நான் 45 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். 45 நிமிட நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே நான் ஒன்றையும் புதிதாகச் சொல்வதாக இல்லை. பொதுவாக இருக்கக்கூடிய சில விஷயங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கும் முறையிலேதான் நான் பேச விரும்புகிறேன்.

இந்தக் கண்டனத் தீர்மானத்தைப் பொறுத்தவரையிலும், இதுவரையில் நடந்த விவாதத்திலே பெருவாரியான உறுப்பினர்கள் போலீஸ் துறையைப் பற்றி மிகவும் கடுமையாக விமர்சனம் செய்யக்கூடிய வகையிலே அதனுடைய போக்கு வளர்ந்திருக்கிறது. இந்தக் கண்டனத் தீர்மானத்தை ஆதரிக்காத கட்சிகளின் சார்பாகப் பேசியவர்கள், சுதந்திராக் கட்சியின் சார்பாகப் பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் போலீஸ் லாக்கப்பில் நடைபெறக்கூடிய கொடுமைகளைப்பற்றி எடுத்துச்சொல்லி, தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மேலும், முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாகப் பேசிய அதன் தலைவர் ஹாஜி பீர் முஹம்மது அவர்கள் பேசும்போது, போலீஸ் நிலையங்கள் மனிதாபிமான உணர்வோடு நடந்துகொள்ள வேண்டுமென்று அரசுக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பொதுப்படையாகப் பார்க்கும்போது, இன்று இந்தப் போலீஸ் இலாகாவில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகள், சாதாரண மக்களுக்கு விரோதமான வகையில் காரியங்கள் நடைபெறுகின்றன என்பதற்குப் பல ஆதாரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. ஆசைத்தம்பி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்திக் கிளர்ச்சி நேரத்தில்கூட தமிழ்நாடு அரசு எந்தவிதமான அடக்குமுறையையும் பிரயோகிக்கவில்லை என்றார்கள். அந்தக் கிளர்ச்சி மொழிக் கிளர்ச்சி என்ற காரணத்தினால் ஆளும் கட்சிக்குச் சாதகமான பிரச்னையாக இருக்ககூடியதால் தாராளமான போக்குடன் நடந்துகொண்டிருக்கலாம். அதேபோல அவர்கள் பேசும்போது சொன்னார்கள், "எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சீனிவாசன் அவர்கள் கைது செய்யப்படவில்லையா?" என்றார்கள். கைது செய்யப்பட்டார்கள். தொழிலாளர்களுடைய உரிமைக்காக அவர் குரல் கொடுக்க முன்வந்தபோது கைது செய்யப்பட்டார்கள். அது சரியானது அல்ல என்பதுதான் எங்கள் அபிப்பிராயம்.

முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். கேரளாவில் இ. எம். எஸ். நம்பூத்திரிபாட் ஆட்சியில் துப்பாக்கிப்பிரயோகம் நடக்கவில்லையா என்றார்கள். நடந்திருக்கிறது. சமீபத்தில் பெரியகுளம் தாலுக்காவில் வகுப்புக்கலவரம் நடந்தபோது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அதைப் பொறுத்து நாங்கள் வாதிடவில்லை. காரணம் மக்களிடையே ஒரு தகராறு வகுப்புக் கலவரம் எழுகிறபோது அமைதியை இந்த அரசாங்கம் காத்தாக வேண்டும். இதுபோலத்தான் கேரளாவில் வகுப்புக் கலவரங்களை அடக்கத் துப்பாக்கிப்பிரயோகம் நடந்திருக்கிறதே தவிர தொழிலாளர்களுடைய உரிமைக் குரலை நசுக்க துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது இல்லை.

இங்கே ஏற்பட்டதே நெய்வேலியில் துப்பாக்கிப் பிரயோகம், கோவையில் துப்பாக்கிப் பிரயோகம், விம்கோவில் துப்பாக்கிப் பிரயோகம், ஆவங்காட்டில் துப்பாக்கிப் பிரயோகம் இதுபோன்றெல்லாம் அங்கு நடக்கவில்லை. அடக்கு

முறை என்றால் தொழிலாளர்கள்மீது விவசாயிகள்மீதுதான் இங்கே ஏவப்படுகிறது. முதலாளிகளுக்குச் சாதகமாக, நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாக இந்தச் சர்க்கார் அடக்குமுறையை உபயோகிக்கிறது.

முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள், பேச்சுவார்த்தைகள் நடந்து ஒரு உடன்பாடு ஏற்பட்ட பிறகு நடந்த கலவரங்கள் என்று. பேச்சு வார்த்தை நடந்தப்படலாம், ஒரு உடன்பாடு ஏற்படலாம். ஆனால் அந்த உடன்பாடு தொழிற்சங்கப் பொதுக் குழுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகுதான் அமுலுக்கு வந்ததாக ஆகுமே தவிர உடன்பாட்டில் தொழிலாளர்களுடைய விருப்பப்படியோ, விருப்பத்திற்கு மாறாகவோ இருதரப்பு, முத்தரப்பு உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் அதை அப்படியே தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது அல்ல. அந்தத் தலைவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கை பொதுக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றாகவேண்டும். இதுதான் தொழிற்சங்க நியதி. தொழிலாளர்களுக்கு ஒப்பந்தம் திருப்தி அளிக்காதபோது, தகராறு எழுகிறபோது அதற்கு அரசியல் சாயம் கொடுக்கப்படுவது சரியல்ல. மின்சார வாரிய என்ஜினியர்கள் தங்களுடைய கோரிக்கையை வற்புறுத்த வேலைநிறுத்தம் செய்தார்கள் என்றால் அதற்கு அரசியல் உள்நோக்கமா கற்பிப்பது ?

நான் குற்றம்சாட்டினேன். கருமுத்து தியாகராஜசெட்டியாருக்கு இந்தச் சர்க்கார் உடந்தைபோயிருக்கிறது, கோத்தாரி சர்க்கரை ஆலை முதலாளிக்கு உடந்தையாக இருந்திருக்கிறது என்பதாக—இல்லை என்று இந்தச் சர்க்காரால் மறுக்க முடியுமா ?

சேஷசாயி பேப்பர் மில்லில் வேலைநிறுத்தம் ஏற்பட்ட பிறகுதான் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. நீங்கள் எந்த இடத்தைப் பார்த்தாலும் தொழிலாளர்களுடைய போராட்டத்திற்குப் பிறகே நியாயம் பிறந்திருக்கிறதே தவிர, முன்கூட்டியே முதலாளிகளை வற்புறுத்தி இந்த அரசு தொழிலாளர்களுக்கு நியாயம் தேடித் தந்திருந்தால் பல போராட்டங்கள் நடக்கவே இடம் இல்லாது இருந்திருக்கும். உண்மையை உணர்ந்து கொள்ளாது காங்கிரஸ ஆட்சியிலும் தொழிலாளர்கள் போராட்டம் என்றால் அதற்கு அரசியல் உள்நோக்கமே கற்பித்து வந்தார்கள். கடைசியில் ஏமாந்தார்கள். பொதுத்தேர்தலுக்குப் பிறகு மாற்று அரசாங்கம் ஏற்பட்டது. அவர்கள் சொன்ன காரணத்தையே நீங்களும் திருப்பித்திருப்பிச் சொல்லி உங்களை ஏமாற்றிக்கொள்ளாதீர்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கிறபோது அவற்றுக்கு அரசியல் மாசு கற்பிப்பது சரியல்ல. இன்று நாட்டிலே கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அடிப்படையான காரணங்களை அலசிப் பார்க்காமல் தொழிலாளர்களுடைய போராட்டம் என்றால் அரசியல் மாசு கற்பிப்பது, இரும்புகரம் கொண்டு அடக்குவோம் என்பது சரியான முறை அல்ல.

கேரளத்திலும், மேற்கு வங்கத்திலும் சர்க்கார் என்னசெய்தது ? தொழிலாளர்களுடைய நியாயமான பிரச்சினை எழுகிறபோது நாங்கள் தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கையை ஆதரிக்கிறோம், முதலாளிகள் அந்தக் கோரிக்கையை ஒப்புக்கொள்ளவேண்டுமே தவிர, அரசு அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று நினைக்கக்கூடாது என்று அவர்களுக்குப்



பாதுகாப்புக்கொடுக்க மறுத்தார்கள். முதலாளிகளுக்கு, நிலப்பரப்புகளுக்கு அந்த அரசு உடந்தையாக மறுத்ததன் விளைவு அவை கவிழ்க்கப்பட்டன.

மாவூரில்ரயான் தொழிற்சாலையில் தகாரறு எழுந்தபோது கேரள அரசு அவர்களுக்கு ஆதரவு தரவில்லை என்பதற்காகப் பிரபல பத்திரிகைகள் எல்லாம் இது என்ன அராஜகம், குழப்பம் என்று கேட்டன. அரசு ஆதரிக்க மறுத்த காரணத்தினால்தான் அந்த முதலாளி ஒரு ஒப்பந்தத்திற்கு வரும்படியாக ஆயிற்று.

அதேபோல மேற்கு வங்காளத்தில் சணல் தொழிலாளர் வேலை நிறுத்தம் நடந்தபோது அங்கு புதிதாக அமைக்கப்பட்ட ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் போலீஸ் மந்திரி, "இந்த ஆட்சி தொழிலாளர்களுக்கான ஆட்சி, ஆகவே அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளைத் தீர்த்து வையுங்கள் என்றது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது கருங்காலிகளை வைத்து அதை முறியடிப்பதற்கான முயற்சிகளை, நடவடிக்கைகளை நாங்கள் நிச்சயமாக ஆதரிக்க முடியாது. அதற்குப் பதிலாக அப்படிப் போராடக் கூடிய தொழிலாளர்கள் அவர்கள் குடும்பங்களுக்கு ஆதரவாக அரசு இருக்கும்" என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

போலீஸ் மந்திரி தொழிலாளர் கூட்டங்களுக்குப் போய், வேலை நிறுத்தம் நடைபெறும் தொழிற்சாலைகளுக்குச் சென்று, தொழிலாளர்களைப் பார்த்து, பயப்படாதீர்கள், தைரியமாக இருங்கள், முதலாளிகள் உடன்பட்டு வரும்வரையில் இந்த அரசாங்கம் உங்களுக்கு ஆதரவாக இருக்கும் என்று சொன்னார்கள். இருபது ரூபாய் கொடுப்பதற்கு மறுத்த முதலாளிகள் 30 ரூபாயை ஏற்று இடைக்கால சம்பளமாகக் கொடுக்க ஏற்றுக் கொண்ட காரணத்தினால் 2 லட்சம் தொழிலாளர் குடும்பங்கள் பலனடைந்தன. இந்தத் தொழிலாளர்கள் அனைவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஐ.என்.டி.யு.ஸி. ஸதாபனத்திலிருந்த எல்லாவிதமான அமைப்புகளையும் சேர்ந்தவர்கள். இன்றைக்கு இரும்புக் கரத்தைக் கொண்டு தொழிலாளர்களுக்கு எதிராக, விவசாயிகளுக்கு எதிராக இந்த மாநில அரசாங்கம் செயல்படும் என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. ஏற்கனவே இன்றைக்கு இந்த மாநிலத்தில் பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால் அரசாங்கத்தை ஆதரிக்கக்கூடிய பல பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் அரசு இரும்புக் காம் கொண்டு அடக்கும் என்ற தொனியில் பெரிய தலைப்புகள் போட்டன. பத்திரிகைகளில் போடப்பட்டன.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நான் வரும்போது வங்காளத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். 1967-லே ஆட்சி நடத்தியபோது மேற்கு வங்காள சர்க்கார் டார்ஜிலிங் விவசாயிகளைக் கைது செய்தது, அத்துமீறி நிலங்களை ஆக்கிரமித்ததற்காக. அப்போது இடதுசாரிகளின் நண்பர்களாகிய சீனக் கம்யூனிஸ்ட் கட்சிப்பத்திரிகை என்ன பட்டம் சூட்டியது தெரியுமா ? மேற்கு வங்கத்திலுள்ள காங்கிரஸ் அல்லாத சர்க்கார் என்று சொல்லப்படுகின்ற சர்க்காரானது டார்ஜிலிங் புரட்சிகர விவசாயிகளை ரத்த வெறியுடன் அடக்குவதற்கு பிற்போக்கு இந்திய சர்க்காரைப் பகிரங்கமாக ஆதரிக்கிறது. இந்தத் துரோகிகளும் திருத்தவாதிகளும், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், சோவியத் திருத்தல் வாதத்திற்கும் ஏவலி நாய்களென்றும், இந்தியப் பெரும்

நிலப்பிரபுக்களுக்கும் பூர்ஷ்வாக்களுக்கும் அடிமைகள் என்றும் இது மேலும் நிரூபிக்கிறது, என்று சீனாவின் பீபிள்ஸ் டெய்லியில் 5—6—1967-ல் தலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியது உண்மைதான். இன்றைக்கு இந்தியாவிலே அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன், நாங்கள் 'திருத்தல் வாதம்' செய்வதாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டுகிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் இந்திய அரசாங்கத்துக்குச் சாதகமாக மேற்கு வங்காளத்தில் உள்ள மாநில அரசு மக்களை அடக்க முயன்றது என்று குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால், இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பிற்போக்கு சக்திகள் மேற்குவங்க கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஆட்சியிலே மக்களுக்குச் சாதகமாக, விவசாயிகள் நிலங்களைப் பெறுகின்ற நிலைக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கூறு கிறார்கள். எனவே, சீன கம்யூனிஸ்ட் கட்சி எங்களைப்பற்றிக் கூறியது தவறு என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல 1967-லே . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நிலங்கள் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டபோது போலீஸ் அமைச்சராக இருந்த ஜோதிபாசு அவர்கள், அவர்களைக் கைது செய்ய உத்தரவு இட்டது உண்மையா ?

**திரு. என். சங்கரய்யா :** இல்லை. டார்ஜிலிங்கிலுள்ள சிலுகுரி என்ற இடத்தில் அங்கு இருந்த அஜாய் குமார் முகர்ஜி அவர்கள் அந்தச் சம்பவம் ஏற்பட்ட உடனே கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டார். போலீஸ் அமைச்சர் ஜோதிபாசு அவர்களும், நிலத் துறை அமைச்சர் ஹரி கிருஷ்ண கோனார் அவர்களும் விவசாயிகளுடன் பேசி அந்தப் பிரச்சினை பற்றித் தீர்வு காண முயற்சி எடுத்தார்கள். ஜோதிபாசு அவர்கள் கைது செய்யப் பட்ட விவசாயிகளை விடுதலை செய்தார்கள். சீன கம்யூனிஸ்ட் கட்சி ஏடோ அல்லது நம் நாட்டிலுள்ள வேறு பிற்போக்கு சக்திகளோ சொல்வதுபோல் இல்லாமல் மேற்கு வங்காளத்தில் 1967-ல் ஆட்சி நடத்திய ஐக்கிய முன்னணி ஜனநாயகக் கொள்கைகளை நிறைவேற்றி இருக்கிறது என்பதற்கு, பிறகு நடந்த இடைத்தேர்தலில் ஐக்கிய முன்னணியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யும் பெரும் வெற்றி பெற்றதே அது பின்பற்றிய கொள்கை; விவசாயிகளுக்கு ஏற்கக்கூடியது என்பது நிரூபிக்கப்பட்டது. மக்களால் ஆதரிக்கப்பட்டது என்பதை தெளிவுபடுத்தி இருக்கிறது.

அடுத்தபடியாக, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நெய்வேலியில் ஓரிடத்தில் அதிகாரிகள் அத்துமீறி நடந்திருக்கிறார்கள். அதை உள்துறை இலாகா செயலாளர் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என் றார்கள். ஏனென்றால், சம்பவம் நடந்த இடத்தில் 5 மைல், 10 மைல் தூரத்தி லிருந்த தொழிலாளர் குடும்பங்களின் மீது 3 நாட்களாக இரவு பகலாக தடியடி பிரயோகம் நடத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அடக்குமுறை தொழிலாளர் சங்கப் போராட்டத்தோடு மட்டும் நின்றிருந்தால் இன்றைக்கு உள்துறை செயலாளர் அவர்கள், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல், ஒரு குறிப்பிட்ட இடத்திலே ஒரு டி.எஸ்.பி., தவறு செய்தார் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.



இன்றைக்கு நான் பகிரங்கமாகக் கூற விரும்புகிறேன். கோயம்புத்தூர் போல, பெருமாநல்லூர் போல, ஏன் நெய்வேலியில் நீதி விசாரணை வைக்க வில்லை? அங்குள்ள போலீஸ அதிகாரிகளை மாற்றி விட்டு, அந்த விசாரணையை நடத்தினால், உள்துறை காரியதரிசி ஏற்றுக் கொண்டிருக்கும் அந்த ஒரு உண்மை மட்டும் அல்ல, பல உண்மைகள் தெரியவரும். அதற்குப் பல்வேறு கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். இதிலே எனக்கு வருத்தமும், வேதனையும் கொடுக்கக்கூடிய பிரச்சினை என்னவென்றால் அங்கே இருக்கும் அதிகாரிகள் நிலைமையைச் சமாளிக்க எடுத்த நடவடிக்கைகள், அதைப்பற்றிக் கூட நான் இன்றைக்கு அவ்வளவு கவலைப்படவில்லை.

ஆனால், மாநில அரசாங்கம் நேரடியாக எடுத்த நடவடிக்கையைப் பொறுத்த வரையில், நெய்வேலியில் நடந்த ஒவ்வொரு சம்பவமும் அவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்று அன்றைக்கு முதல் அமைச்சர் வழிகாட்டிக் கொண்டிருக்கக் கூடிய நேரத்தில், இனிமேல் தொழிலாளர்கள் நெய்வேலி நிகழ்ச்சிக்குப் பிறகு ஸ்ட்ரைக் என்றோ, போராட்டம் என்றோ கனவிலும்கூட கருதக்கூடாது. அப்படிப்பட்ட ஒரு பாடம் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று ஒரு கொள்கைப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. தொழிற்சங்க வரலாற்றிலேயே கண்டிராத அளவுக்கு அந்த அடக்குமுறை நடந்தது. தி.மு. கழக அரசாங்கத்தின் போலீஸ் கொள்கையில், தொழிலாளர் கொள்கையில் ஒரு திருப்புமுனை பிரதி பலிக்கிறதுதான் இதற்குக் காரணம். இவ்வளவு செய்த பிறகும் கோவையில் கிளர்ச்சி நடத்தியபோது கொடுக்கப்பட்ட நீதி விசாரணை நெய்வேலியில் ஏன் மறுக்கப்படுகிறது என்று கிளர்ச்சி செய்த தொழிலாளர்கள் யாருக்கும் விளக்க முடியாத கேள்வியாக இருக்கிறது.

இன்றைக்கு இதேபோலத்தான் நிலமீட்சி இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிட் டார்கள். திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் கடிதத்தை முதல் அமைச்சர் அவர்கள் படித்த நேரத்தில் இவர்களைத் தொழில் அமைச்சர் அவர்கள் பேட்டி கண்டார்கள், பேச்சு வார்த்தைகள் நடத்திய சம்பவங்களை இங்கு சொல்லி இருந்தால் இன்றைக்கு இந்தப் பிரச்சினை இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்க வேண்டியது இல்லை. உண்மையில் ஒரு பகுதியைச் சொல்லியபோது, கடிதம் தொழில் அமைச்சருக்குச் சம்பந்தம் இல்லாமல் வந்திருக்கிறதே என்று பார்க்கும் நேரத்தில் அந்தக் கடிதத்தைப் பார்த்தால் ஒரு மாதிரியாக இருந்தது. இப்போது அமைச்சர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் இந்த அடிப்படையைப் பார்க்கும்போது பார்க்கவேண்டிய முறையில் முற்றிலும் வேறு படுகிறது. ஆகவே, இன்றைக்கு அவ்வாறு சொல்லப்படாமல் விட்டதனால் அந்த இயக்கத்தின்மீது மாசு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

முதல் அமைச்சர் அவர்கள் தீக்கதிரிலே வந்ததைப் பற்றிக் குறிப்பிட் டார்கள். அச்சுத மேனன் ஆட்சியில் கேரளாவில் விவசாயிகளை அடக்கி னார்கள் என்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்று எனக்கும் ஏ. கே. சுப்பையா அவர்களுக்கும் கேரளாவைப்பற்றிய வியாக்கியானத்திலே அபிப்பி ராயபேதம் இருக்கின்றது. விவசாயிகள் கிளர்ச்சி என்று நாங்கள் சொன்னோம். அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதன் காரணமாக ஏற்பட்ட பிரச்சினையில் இன்றைக்கும் தீர்வுகாண முடியவில்லை. ஒருகால் கேரள தேர்த

வில் செப்டம்பர் மாதம் நடைபெறவிருக்கும் தேர்தலில், மக்கள் இதற்கு முடிவு கூறலாம். வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஆட்சியில் நடந்ததைப் போல இன்றைக்கு இங்கே நடக்கிறது என்று சொல்வதைக் கேட்டு எப்படி சும்மா இருக்கமுடியும், என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அந்த நில இயக்கம் நடந்ததில் என்ன பலாத்காரம் ஏற்பட்டது? ஒரு பலாத்காரமும் ஏற்படவில்லை. அவ்வாறு திட்டமிட்டு பலாத்காரத்தில் ஈடுபட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்படவில்லை என்பது பின்னால் வந்த சம்பவங்களிலிருந்து தெரிகின்றன. எத்தனையோ போராட்டங்கள் நடந்திருக்கின்றன, அப்பொழுதெல்லாம் கைது செய்வார்கள், சாதாரண ஷரத்துக்களின்பேரில் நடவடிக்கை எடுப்பார்கள், ஜெயிலில் போடுவார்கள், கேஸ் போடுவார்கள், சில நேரங்களில் விடுதலை செய்யப்படுவார்கள். ஆனால், இதற்கு ஏன் கிரிமினல் திருத்தச் சட்டத்தைப் பிரயோகிக்க வேண்டும்? கிரிமினல் லா திருத்தச் சட்டம் ஏன் பிரயோகிக்கப்பட்டது? அதைத்தான் குறிப்பாகக் கேட்க விரும்புகிறேன். விவசாயக் கிளர்ச்சியின்பொழுது சாதாரணக் குற்றவியல் சட்டப் பிரிவுகளின்கீழ் கைது செய்து வழக்குத் தொடர்ந்திருந்தால் அது வேறு விஷயம். ஆனால் கொள்ளையடிப்பவர்கள், சதித்திட்டத்தில் ஈடுபடுவர்களைப்போன்று 120 (பி) என்பதைப் பிரயோகிக்கிறது என்றால், இரும்புக்கரம் கொண்டு விவசாயிகளின் கிளர்ச்சியை ஒடுக்குவதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை ரீதியான முடிவாக ஏற்பட்டு இருக்கிறதோ என்ற சந்தேகம்தான் இந்த மாநிலத்திலிருக்கும் பெரும்பான்மையான விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அவர்கள் பல குற்றங்களைக் கூறினார்கள். ஆனால் நாங்கள் அந்தத் தனிப்பட்ட குற்றங்களைக் கூறவில்லை. அதற்குக்காரணம் சில அமைச்சர்கள், சில அதிகாரிகள்மீது சாட்டப்படும் குற்றங்களுக்கு ஆதாரமிருந்தால் நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அப்படியிருந்தால் திராவிட முன்னேற்றக் கழக அரசு கவனிக்கவேண்டும் என்பதால், திட்டவட்டமான தகவல் இருந்தால் அவற்றின் அடிப்படையில் கொண்டு வந்து இந்தச் சபை முன் வைக்கத் தயாராக இருப்போம். ஆனால், இன்று நாங்கள் அவைகளில் கவனம் செலுத்தவில்லை. எதற்காக நான் இதைக் கூறுகிறேன் என்றால், கூவம் திட்டம், வீராணம் திட்டம், இதிலே என்ன நடந்தது, இந்த மந்திரி இப்படிப் பேசினார் என்ற அவைகளைப்பற்றி இன்று அவ்வளவு பிரதானமாக நாங்கள் பார்க்கவில்லை. ஆனால் எங்களுடைய பிரதான பிரச்னையெல்லாம், இந்த அரசாங்கம் பின்பற்றப்போகும் கொள்கை என்ன? என்பதைப்பற்றித்தான்.

குறிப்பாக, தியாகிகளுக்கு மானியம் கொடுத்தல், வேறு பல காரியங்களைச் செய்தல் இவைகளைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. பொதுத் தேர்தலுக்கு முன்பு என்ன செய்தோம் என்பது நமக்கெல்லாம் தெரியும். காங்கிரஸ் ஆட்சியை அகற்றப் பல முயற்சிகளைச் செய்தோம். 1967 தேர்தலுக்குப்பிறகு மாற்று அரசாங்கம் ஏற்பட்டதும், மக்கள் என்ன எதிர்பார்த்தார்கள்? திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் நிறைவேற்றிய கொள்கைக்கு நேர் மாறான தொழில்கொள்கையை, விவசாயக் கொள்கையை, தொழிலாளர் கொள்கையைக் கடைப்பிடிக்கும் என்று எதிர்பார்த்தார்கள். நான் முன்பு பேசும்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலிருந்து 4



பாராக்களை மேற்கோள் காட்டினேன். அதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது. அந்நியப் பெருமுதலாளிகளையும், இந்தியப் பெருமுதலாளிகளையும் காங்கிரஸ் வளர்த்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் அவைகளைத் திருத்தி அமைக்கப் பாடுபடும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒருவிதத்திலே தன்னுடைய கொள்கையை மாற்றிக்கொண்டு விட்டார்களோ என்றுதான் நான் எண்ணுகிறேன். அதற்குக் காரணம், ஆர்த்தடாக்ஸ் கொள்கைகளை, பழைமையான கொள்கைகளை மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

ஆனால் கேந்திரமான தொழில்களைத் தேசிய உடைமைகளாக்க வேண்டும், தனியார் மூலதனத்தை அனுமதிக்கக்கூடாது. அந்நிய நாட்டு மூலதனம் இந்த மாநிலத்திற்கு வரக்கூடாது என்பது தி.மு. கழகத் தேர்தல் கொள்கை. ஆனால் நான் வருத்தத்தோடு குறிப்பிடுகிறேன். ஜாயிண்ட் செக்டார் அதாவது கூட்டுத் தொழில்துறையைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இன்றைக்குக் குறிப்பிட விரும்புகிறேன், இன்று சோஷலிச நாடுகளிலோ அல்லது ஜனநாயக ரீதியில் பொருளாதாரத்தை மாற்றியமைக்க விரும்பும் நாடுகளிலோ ஜாயிண்ட் செக்டார் என்பதிலெல்லாம் அரசாங்கத்தின் முதலீடு அதிகமாக இருக்கும், தனியார் முதலீடு குறைவாக இருக்கும். அது காலப்போக்கில் தனியாரிடமிருந்து குறைந்து படிப்படியாக சோஷலிசத்தை உண்டாக்குவது என்று ஜாயிண்ட் செக்டார் அமைப்பை ஏற்படுத்தியுள்ளார்கள்.

காங்கிரஸ் கட்சியில்கூட அவர்கள் என்ன சொன்னார்கள்? பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கூட The Commanding sectors of the economy should be with the State என்று சொன்னார்கள். இந்தப் பொருளாதாரத்தினுடைய ஆதிக்கம் செலுத்தும் நிலைமை அரசாங்கத்தின் கையில் இருக்க வேண்டும். காங்கிரஸ இரண்டாகப் பிளவுபட்டதற்குக் காரணமே அதுதானே. இன்றைக்கு நான் கேட்பதெல்லாம் நம்முடைய தொழிலமைச்சர்வர்கள் சமீபத்தில் மோட்டார் பார்ட்ஸ் விற்பனையாளர் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். தேசிய மயமாக்க வேண்டும், தேசிய மயமாக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் அப்படிச் செய்தால் உற்பத்தி பெருகுமா என்று பேசியிருக்கிறார்கள். அப்படி தேசிய மயமாக்குவதால் உற்பத்தி குறையும் என்று கருதியிருந்தால் தேர்தல் அறிக்கையில் அப்படிச் சொல்லியிருக்கலாமா என்றுதான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, தேசிய மயமாக்கினால் உற்பத்தி அதிகரிக்குமே தவிர உற்பத்தி குறையாது.

அவர்கள், டி.வி.எஸ். குடும்பத்தை ஏகபோக பட்டியலில் குறிப்பிட்டதைப் பற்றி வருத்தப்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். மாநில அரசுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் ஆதரிக்கிறோம், நடந்த விவாதத்திலேகூடக் கூறியிருக்கிறோம். இந்திராகாந்தி அம்மையார் அரசாங்கம் கூட நாட்டில் ஏற்பட்டுள்ள நிர்ப்பந்தத்தின் காரணமாக அயல்நாட்டு முதலாளிகளுக்குச் சில தடைகளைப் போட ஆரம்பித்திருக்கிறார்கள். தொழிற்சாலைகள் நடத்துவதற்கு மேலும் மேலும் இந்தியர்கள் பயிற்சிபெற வேண்டும். அந்நிய முதலாளிகள் குறிப்பிட்ட விகிதாசாரத்தில்தான் இருக்க வேண்டும். அயல் நாடுகளிலேயிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்யாமல் அவற்றை இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்லும் நேரத்திலே; திராவிட

முன்னேற்றக் கழக அமைச்சரொருவர் இந்திய அரசாங்கத்தின் கொள்கை அயல் நாட்டு முதலாளிகள் தமிழகத்திலே வருவதற்கு இடைஞ்சலாக இருக்கிறது, அவர்கள் தங்கு தடையற்றமுறையில் இந்தியாவிலே அனுமதிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், நான் குறிப்பிட விரும்புகிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் அதிகார பூர்வமாக வைத்திருக்கும் கொள்கையிலிருந்து பிறள்கிறது, தாண்டிச் செல்கிறது, வலதுசாரி திசையிலே செல்வதாக ஆகிறது என்பதைத் தான்.

முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள், கேரளாவிலே பிர்லா தொழிற்சாலையைப்பற்றி. இன்றைக்கு நான் கூற விரும்புகிறேன், அது ஏற்பட்டது 1957-ஆம் ஆண்டிலே. இன்று என்ன கூறியிருக்கிறோம்? தமிழ்நாட்டிலே எஞ்சினியரிங் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அத்தனை தொழிற்சாலைகளையும் தேசிய மயமாக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோமா? வட இந்திய முதலாளிகள் தமிழகத்திற்கு வருவதை மறுக்கிறோம் என்று கூறியிருக்கிறோமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பிர்லா தொழிற்சாலையை எடுப்பது மட்டுமல்ல. தொழிற்சாலைக்கு, மூங்கில் 1 டன் 1 ரூபாய் விலைக்கு இன்னும் தரப்பட்டு வருகிறது.

**திரு. என். சங்கரய்யா :** இந்த மாநிலத்திலேயே, சவுத் இண்டியா பல்ப் கம்பெனிக்கு மரத்தூள் கொடுப்பதைப்பற்றி, சேலம் அலுமினியம் தொழிற்சாலைக்கு மின்சாரத்திற்கு 1 கோடி ரூபாய்க்கு மானியம் கொடுப்பதைப் பற்றியும் எத்தனையோ முறை கூறப்பட்டிருக்கிறது.

எங்களுடைய கருத்து, அலுமினியம் தொழிற்சாலை, தூத்துக்குடியில் ஆரம்பிக்க இருக்கும் ரசாயன உரத் தொழிற்சாலை இவைகள் கேந்திரமான தொழில்கள். சாதாரண பஞ்சாலைகள் இருக்கின்றன. அவைகளை எந்த முதலாளி வேண்டுமானாலும் நடத்திவிட்டுப் போகட்டும். பல இன்ஜினியரிங் தொழிற்சாலைகள் இருக்கின்றன, அவைகளை யாராவது நடத்திவிட்டுப் போகட்டும். ஆனால் பல கோடிக்கணக்கான ரூபாயில் ஆரம்பிக்க இருக்கும் தூத்துக்குடி உரத்தொழிற்சாலைக்கு மாநில அரசாங்கம் அதிகமான பங்கை வைத்துக் கொண்டு, இளைய பங்காளிகளாக தனிப்பட்ட முதலாளிகளை வைத்திருக்கிறோம் என்று கூறினால் அதை எங்களால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் அது அப்படி இல்லை. சில குறிப்பிட்ட ரகத் தொழில்கள், அதாவது ரசாயன உரத் தொழிற்சாலைகள், அலுமினியம் தொழிற்சாலை போன்றவற்றில் மத்திய, மாநில அரசாங்கத்தின் ஆதிக்கம் ஏற்படும் வகையிலே அமைய வேண்டும். இந்த நாட்டிலே கடன் வாங்குவதைப்பற்றியோ, அரசாங்கத்திற்கு அரசாங்கம் கடன் வாங்குவதைப்பற்றியோ நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அதற்குப்பதிலாக இன்றைக்கு மேற்கு ஜெர்மனியிலுள்ள தனிப்பட்ட முதலாளிகள் வருவதைப் பற்றித்தான் குறிப்பிடுகிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே நாங்கள் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைப்பற்றிக் கூறியபோது எந்த சப்ஜெக்டைப்பற்றிப் பேசப்பட்டதோ அதைத்தான் பேச வேண்டுமென்று கூறினீர்கள். அவர்கள் கொண்டு வந்தது போலீஸ் துறையைப்பற்றிக் கண்டனத் தீர்மானம். இப்பொழுது



தொழிற்சாலையைப்பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் பேசுவதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. எந்தக் குற்றங்கள் எழுப்பப்பட்டதோ அதைப்பற்றி பின்னால் பதில் சொல்ல வேண்டுமென்று ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பிர்லா தொழிற்சாலை பற்றிக் குறிப்பிட்டுப் பேசியதால் உறுப்பினர் அதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது உறுப்பினர் தூத்துக்குடிக்கு வந்துவிட்டார்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பிர்லா தொழிற்சாலைபற்றி முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதால் பதிலிலே விளக்கிச் சொல்ல வேண்டியது அவசியம். .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களை யார் கேட்டார்கள்? உங்கள் இஷ்டத்திற்கு எழுந்து பேசிக் கொண்டிருக்கிறீர்களே.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கு அதிகமான நேரத்தை நான் எடுத்துக் கொள்ளமாட்டேன். எங்கள் பிரச்சினையை விளக்கிச் சொல்ல வேண்டியது அவசியம். அரசாங்கத்தின் தொழில் கொள்கை, விவசாயக் கொள்கை, போலீஸ் கொள்கையில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்த்தோம், ஆனால் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. வன்முறை என்று குற்றம் சாட்டினார்கள். ஜனநாயக ரீதியில் பிரச்சினைகளைத் தீர்க்க என்னென்ன வழிமுறைகள் என்பதை அந்தந்தச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மக்கள்தான் முடிவு செய்வார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தனிநாடு கோரிக்கையை வைத்திருந்த நேரத்தில், பின்னால் என்ன நடக்கும், எப்படிப்பட்ட போராட்டம் நடக்கும் என்பதைப் பற்றி யாரும் சொல்ல முடியாது என்றார்கள். வன்முறையின்றிப்போக ஜனநாயக ரீதியாக வாய்ப்புகள் இருக்க வேண்டும். அப்படி வழிமுறைகள் இருந்தால் வன்முறைக்குப் போகாமல் ஜனநாயக ரீதியில் லட்சியத்தை அடைய மக்கள் போராடுவார்கள். பாரதிதாசனின் 'சங்கே முழங்கு' என்ற பாடலை தமிழ்மொழியைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகப் பாடினார்கள். அதே பாரதிதாசன் சமுதாயச் சீர்திருத்தத்தைப் பற்றி உலகப்பன் பாட்டில் கூறும்போது—

"ஓட்டப்பராயிருக்கும் ஏழை அப்பர்
உதையப்பராகி விட்டால் ஓர் நொடிக்குள்
ஓட்டப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆகிடுவார் உணரப்பா நீ."

என்று உலகப்பன் பாட்டில் கூறியிருக்கிறார். சமுதாயத்தில் நிலவுடைமையாளர்கள், பெரும் முதலாளிகள் அதிகாரத்தை வைத்துக் கொண்டிருப்பதைத் தடை செய்ய வேண்டுமென்று பாரதிதாசனே அவருடைய கவிதையில் சொல்லுகிறார். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல், ஜனநாயக முறையில் உழைப்பாளி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வழி இருக்கிறதா என்பதுதான் கேள்விக்குறி.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றி ஒரு வார்த்தை. 22 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லையென்று வேறு கட்சியை மக்கள் ஆட்சியில் வைத்தார்கள். அப்படி ஆட்சிக்கு வந்தவர்கள் கூட தொழிலாளர்

களுக்கு விரோதமான கொள்கைகளை, நிலச்சுவான்தார்களை ஆதரிக்கும் கொள்கையைக் கைக்கொண்ட காரணத்தால்தான், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்காவிட்டாலும் கண்டனத் தீர்மானம் ஒன்றை நாங்கள் கொடுத்திருக்கிறோம். கீழ்வெண்மணியில் நடந்த சம்பவத்தின்போது கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டினோம். கோவை விவசாய இயக்கத்தின் மீது அடக்குமுறை, மதுரையில் காங்கிரஸ் தொண்டர்கள் மீது அடக்குமுறை ஆகியவற்றை எல்லாம் காங்கிரஸ் கட்சியினரே உணர்ந்துதான் எங்களுடைய கண்டனத் தீர்மானத்திற்கு அவர்கள் ஆதரவு கொடுத்தார்கள். ஆனால் ஒட்டுமொத்தமாக இந்த ஆட்சியில் நம்பிக்கை இல்லை என்று அவர்கள் ஏன் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரியும். ராஜமான்யம் ரத்து செய்யப்படவேண்டும் என்பதைக் கூட எதிர்க்கும் அக்கட்சியின் கொள்கையை நாங்கள் ஆதரிக்கவில்லை. ஆகவே, ஆதரிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். கீழ்வெண்மணி சம்பவத்தின்போது விவசாயிகளுக்கு இந்த அரசு பாதுகாப்புக் கொடுக்கவில்லை. நாகப்பட்டினம் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் மீனாட்சி சுந்தரம் 1968 டிசம்பர் மாதம் 5-ம் தேதியன்று அந்தப் பகுதி விவசாயிகளுக்குத் தக்க பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று எழுதி பதிவுத் தபாலில் அனுப்பினார். இடையிலே 20 நாட்கள் இருந்தன. அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்குமானால் கீழ்வெண்மணி சம்பவம் நடைபெற்றிருக்க முடியாது. அன்றையதினம் தி.மு.க. ஆட்சி மக்களுக்கு விரோதமாகப் போகிறது என்பதைக் காங்கிரஸ் கட்சியினர் சொல்லவில்லை. கம்யூனிட்டுக் கட்சியின் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்பார்கள். இப்போது தி.மு.க. கொள்கையில் வலதுசாரி திருப்பம் ஏற்பட்டிருப்பதால் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை ஆதரிக்கும் நிலை எங்களுக்கு இல்லை. விவசாயி, தொழிலாளர் கொள்கையில் மாற்றம் இல்லை. போலீஸ் கொள்கையில் மாற்றம் இல்லை என்பதற்காகக் கண்டனத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

நாங்கள் கொடுத்த கண்டனத் தீர்மானத்தை வற்புறுத்துகிறோம். திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் தொழிலாளர் கொள்கையில், விவசாயிகள் கொள்கையில், போலீஸ் கொள்கையில் நிச்சயமாக மாற்றத்தை ஏற்படுத்தினால் தான் எதிர்காலத்தில் ஆதரிப்பது பற்றி முடிவை எடுக்க முடியும், வருங்காலம் அதைப் பற்றி முடிவு செய்யும் என்று கூறி அமர்கிறேன்.

DR. H. V. HANDE : On a matter of personal explanation, Sir. The Hon. Chief Minister mentioned about my revered leader Shri Rajaji. (interruption) I had been patient and we had been patiently hearing when the Hon. Chief Minister spoke.

Should you not be kind to us and allow me to speak ?

It is not the question of Rajas or Maharajas that Rajaji is worried. It is the manner in which the spirit of the Constitution and the actual Constitution that is being invalidated by the Prime Minister of India that Rajaji is worried.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப்பற்றிக் குறிப்பிடவில்லை உறுப்பினரைப் பற்றிக் கூறியிருந்தால்தான் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் கொடுக்க முடியும்.



DR. H. V. HANDE : The Leader of my party has been referred to and he has been criticised. Should I not have the liberty. 'உரிமை' to give a personal explanation.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காமராஜரைப் பற்றிப் பேசினால் அதற்காக இங்கே இருப்பவர் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் கொடுக்க முடியுமா ?

DR. H. V. HANDE : Rajaji has always been right. He forsees in the near future the erosion of the rights of the people, one by one. Today it is the privy purse, tomorrow it will be the fundamental rights of the people belonging to different sections, it would be the fundamental rights of the same 4-1/2 crores of citizens of Tamil Nadu for whom the Chief Minister seems to be pleading now.

If the assurances given by Sardar Vallabhai Patel are thrown to the winds, who will believe any assurances given by the Government? It is the credibility of the Government that Rajaji is worried.

Look at the manner in which the Prime Minister has flouted the Rajya Sabha verdict. Even P.S.P. though it is for the Privy Purses abolition has opposed the dictatorship of the Prime Minister of India in ignoring the verdict of the Rajya Sabha.

Just as it took some time for the D.M.K. to understand the currents it may take some more time to understand the dictatorship of the Prime Minister. Unfortunately, by that time it will be too late.

Rajaji has always been right and that is what history has taught us.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னுடைய விளக்கங்களுக்குப் பிறகும் தன்னுடைய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்தி முதலிலே சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுபடியும் எடுத்துரைத்துப் பேசியிருக்கிறார்கள். இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும் மீண்டும் தன்னுடைய கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். நான், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்ள அதிக உரிமையைப் பெறவில்லை, காரணம் அவர்கள் எதிர்க்கட்சிகளின் தலைவர்.

திரு. சங்கரய்யா அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் தோழமைக் கட்சியின் தலைவர் என்ற முறையிலும், ஏனைய தோழமைக் கட்சிகளின் உறுதுணையோடு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற வகையிலும் தோழமை உணர்வு இன்னும் இருக்கிறது என்ற அடிப்படையில் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ள உரிமைபடைத்தவனாக இருக்கிறேன்.

அண்மையில் அவர்கள் கட்சியில் போட்ட தீர்மானத்தில் கூட இடைத் தேர்தல்களில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிப்பதில்லை என்று போட்டிருக்கிறார்களே அல்லாமல் பொதுத் தேர்தல் பற்றி அதில் சொல்லவில்லை. பி.ப. 3.30

**திரு. என். சங்கரய்யா :** இப்போதுதான் கூறினேன். திராவிட முன்னேற்றக் கழக அரசின் மூன்றாண்டு கால ஆட்சியின் பலாபலன்களைப் பார்த்தோம். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இவ்விரண்டுக்கும் இடையே இருபது ஆண்டுக் காலத்தில் பல்வேறு சர்ச்சைகள் நடந்திருக்கின்றன.

ஆகவே, திடீரென்று ஒரு முடிவிற்கு வர நாங்கள் விரும்பவில்லை. இடைத் தேர்தல்கள்தான் இன்றையதினம் நடக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கைகளிலுள்ள மாறுதல்களைப் பார்த்துத்தான் பொதுத் தேர்தல் பற்றி ஒரு முடிவு எடுக்கமுடியும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் சொன்னதைத்தான் அவரும் சொல்கிறார். இடைத் தேர்தல்களில் ஆதரிப்பதில்லை என்று ஒரு ஆண்டுக் காலமாக எங்களுக்குள் ஏற்பட்டிருக்கிற சில ஊடல்கள் காரணமாக—ஊடல்கள் என்று சொன்னால் ராமமூர்த்தி அவர்கள் கிண்டல் செய்கிறார்கள் என்று நினைப்பார்கள்—அப்படித்தான் நான் எடுத்துக்கொள்கிறேன். நாங்கள் எப்படி நடந்து கொள்கிறோம் என்று பார்த்து நாங்கள் நடந்து கொள்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்படுகிற எந்தக் குற்றச்சாட்டையும் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் கருத்திருமன் அவர்கள் எடுத்துச்சொன்னாலும் அல்லது சுதந்திராகட்சி சார்பில் சீமைச்சாமி அல்லது ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொன்னாலும் அல்லது யார் எடுத்துச்சொன்னாலும் அவற்றை சீர்தூக்கிப் பார்த்து குறைகள் இருந்தால் அவைகளைக் களைய நிச்சயமாக அதை ஒரு கௌரவப் பிரச்னையாக எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று திரும்பத் திரும்ப சொல்லியிருக்கிறேன்.

தஞ்சை விவகாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஜமீலா என்ற அம்மையார் தொந்தரவு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார் போலீஸ் லாக்கப்பில் என்று சொன்னார்கள். பெண்களை இரவு நேரத்தில் லாக்கப்பில் வைக்கக் கூடாது என்று முதல் அமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டார்களே அது என்னவாயிற்று? என்று கேட்டார்கள். தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டால் தக்க நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு தயங்காது. குற்றச்சாட்டுக்கள் சொல்லப்படுமானால் அதைச் சொல்பவர்கள் யார் என்று பார்க்க மாட்டோம், சொல்லப்படுகிற கருத்துக்கள் யாவை என்று பார்த்து நிச்சயமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற உறுதியை சங்கரய்யா அவர்களுக்கும் அவர்களோடு இணைந்து நின்று கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களுக்கும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தக் கண்டனத் தீர்மானத்தை வலியுறுத்தாமல் இருக்கவேண்டுமென்று அவர்களைத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலிலேயே பேசியதைத் திரும்பவும் சொன்னார்கள். மூன்று ஆண்டுகளாக அவர்கள் பேசிக் கொண்டிருக்கிற பல விஷயங்களைத் திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னார்கள். அது கூட ஒரு நல்லமுறைதான். ஒரு காரியத்தைத் திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னால்தான் மக்கள்



மனதில் அது பதியும் என்று ஜர்மனியில் கூட ஹிட்லர் காலத்தில் ஒருவர் இருந்தார். (திரு. பி. ஜி. கருத்திருமன் : கோயபல்ஸ்) அவருக்கு உடனே ஞாபகத்திற்கு வந்துவிட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இவர்களைப் பார்த்தவுடன் அவர் ஞாபகம் வந்தது. அவரே இவரிடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர் இல்லாத காரணத்தினால் உங்களிடமே நான் பாடம் கற்றுக்கொள்கிறேன். நான் கூறிய குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியாமல் திணறிப் போய் விட்டார் என்று சொன்னார்கள். அவர்கள் என்ன குற்றச்சாட்டைச் சொன்னார்கள்? கோணி, பை, வீடு, வாசல் என்ற அளவில் குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டன. நான் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. முதலிலேயே நான் விளக்கிச் சொல்லியிருக்கிறேன். ஆகவே அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் ஏற்கனவே பழைய நண்பர்கள் என்று கேட்கிறேன். நீங்கள் புதிய நண்பர்களாக ஆகக்கூடும் என்பதால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாமென்று அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என் மீது முதல் அமைச்சர் அவர்கள் களங்கம் கற்பிக்கிறார்கள். கோணி, பை, அது இது என்று லிட்டாக சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்கள்மீது சில குற்றச்சாட்டுக்களைக் கொண்டு வந்திருக்கிறேன்.

தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களைப் பற்றியும், நிதி அமைச்சர் விஷயத்தைப் பற்றியும் சொன்னபோது அவர்கள் கோபித்துக்கொண்டார்கள். லாயிட்ஸ் ரோட்டில் 143-ம் நம்பர் வீடு அவரது மனைவி பெயரில் வாங்கப்பட்டிருக்கிறதா இல்லையா? எங்கிருந்து அதற்குப் பணம் வந்தது? ஸ்பெஸிபிக் சார்ஜஸ் இல்லை என்று சொல்கிறார்கள். ஸ்பெஸிபிக் குற்றச்சாட்டாக இதைச் சொல்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் தைரியமாக முன்வந்து இதன் பேரில் நடவடிக்கை எடுப்பார்களா, விசாரணை செய்வார்களா? என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த விவாதத்திற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், லாயிட்ஸ் ரோடில் வீடு வாங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். வீடு வாங்குவது தவறு என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருதுகிறார்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வாங்கலாம். எப்படி வாங்குகிறார்கள் என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்காக எவ்வளவு கேவலமான முறையில் மூன்று நாட்களாக எங்களை நடத்தினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். தஸ்தாவேஜுகள் கொண்டு வந்திருக்கிறேன். வீடு வாங்கப்பட்டிருக்கிறது என்றால் வாங்கக் கூடாதா, அல்லது தகாத முறையில் லஞ்சப் பணத்தைக் கொண்டு வாங்கியதா?

ஆகவே கண்ணியமற்ற முறையில் என்னை இழுத்திருக்க வேண்டாம். முதல் அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, இந்தமாதிரி சாடுகள், புரட்டல்கள் எல்லாம் பொது வாழ்வில் இருக்கிறார்கள் என்பதற்காக என்ன வேண்டுமானாலும் சொல்லலாம், எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று கண்ணியக்குறைவான முறையில் சொல்லக்கூடாது.

ஆகவே, இதுகுறித்த விவரத்தைத் தருகிறேன். தென்னகம் என்ற ஒரு பத்திரிகை நிறுவனம் நடைபெறுகிறது. அந்த நிறுவனம் ஒரு பார்ட்னர்ஷிப் ஃபேர்ம். அதில் என் சகோதரர் கே. ஏ. கிருஷ்ணசாமி, எம்.ஏ., பி.எல்.-ம் ராஜசுந்தரி அம்மையாரும் அதன் பாகஸ்தர்கள். அப்படி தென்னகம் என்ற ஒரு பத்திரிக்கை நடக்கிறது. அந்த நிறுவனத்திற்காக லாயிட்ஸ ரோடில் உள்ள ஒரு வீடு வாங்கப்பட்டிருக்கிறது. இரண்டு லட்சம் ரூபாயில் அது வாங்கப் பட்டிருக்கிறது. தெளிவாகத் திட்டவட்டமாகச் சொல்கிறேன். இரண்டு லட்சம் ரூபாய்க்கு அது வாங்கப்பட்டிருக்கிறது. அதுவும் நம் சர்க்காரில் வேலை பார்க்கிற பெரிய போலீஸ் அதிகாரி டி.ஐ.ஜி. ஷெனாய் குடும்பத்தினருடைய வீடு. ஜூலை 30, 1970-ல் வாங்கப்பட்டிருக்கிறது. விலை இரண்டு லட்சம் ரூபாய். அதுவும் எக்மோர் பெனிஃபிட் சொஸைட்டிக்காரர்கள் இரண்டு லட்சம் ரூபாய் பணம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அடைமானமாக அந்த வீடு அந்த நிறுவனத்தின் அலுவலகம் எக்மோர் பெனிஃபிட் சொஸைட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு லட்சம் ரூபாய்க்கு அடைமானமாக வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான கிரயப்பத்திரம், சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் கிரயப் பத்திரத்தின் நகலை, சபாநாயகர் அவர்களே, நான் கொடுக்கிறேன்.

'The amount paid to the vendors by the Egmore Benefit Society, Madras, in consideration of the purchasers executing the mortgage deed in favour of the said Egmore Benefit Society before the Sub-Registrar at the time of the registration of the deed......'

அந்த இரண்டு லட்ச ரூபாய் அவர்கள் கொடுத்ததற்கு அவர்களிடத்தில் அந்த வீடு அடைமானம் வைக்கப்பட்டு இருக்கிறது. அது தென்னகம் கன்சர்ன்சுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதிலே அமைச்சருக்கு என்ன சம்பந்தம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அமைச்சருடைய பதவியை ஏதேனும் இதிலே துஷ்பிரயோகம் செய்யப்பட்டு இருக்கிறதா? ஏதோ அமைச்சர்களாக இருக்கிற காரணத்தால் அவர்களுடைய சொந்தக்காரர்கள் வீடு வாங்கக் கூடாதா? இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை ஒட்டு மொத்தமாகச் சாட்டுவது சரி அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னுடைய குற்றச்சாட்டு எல்லாம் . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்தப் பணத்தை 8 ஆண்டு காலத்தில் வாடகை செலுத்துகிற மாதிரி திருப்பிக் கட்ட வேண்டும். வீடு வாங்க அவர்கள் எக்மோர் பெனிஃபிட் சொஸைட்டியிலிருந்து கடன் வாங்கி இருக்கிறார்கள். இதிலே அமைச்சரை இழுக்கிற மாதிரி என்ன இருக்கிறது? இப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொல்வது ரொம்ப வருந்தத்தக்கது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்கும் ரொம்ப வருத்தமாகத்தான் இருக்கிறது. அமைச்சராக இருப்பதால் தான் எக்மோர் பெனிஃபிட் சொஸைட்டியில் அவ்வளவு பெரிய தொகையை லோன் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே,



பதவியில் இருக்கக்கூடியவர்கள் இத்தகைய பெரிய பணத்தை லோனாக பெறுகிறார்கள். இதற்கு உள் நோக்கம் கற்பிப்பதற்காக இல்லை. நீங்கள் அமைச்சராக இருக்கிறபடியால் அந்த செல்வாக்கில் லோன் கொடுத்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ரொம்பத் தவறு. எக்மோர் பெனிஃபிட் சொஸைட்டியில் நாவலர் கூட லோன் வாங்கி இருக்கிறார். முதலமைச்சர் கூட வாங்கி இருக்கிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எக்மோர் பெனிஃபிட் சொஸைட்டி மந்திரிகளுக்குக் கடன் கொடுக்கும் சொஸைட்டியா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படிச் சொல்வது தவறான வாதம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உமாபதி கூட அங்கே லோன் வாங்கி இருக்கிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவரும் அமைச்சராக இருந்தால் விட்டு விடுவோமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எதிர்க்கட்சித் தலைவர் இதில் ஏதோ தவறு இருப்பதாகச் சொல்கிறார்கள். எக்மோர் பெனிஃபிட் சொஸைட்டிக்கும் அமைச்சருக்கும் என்ன சம்பந்தம்? இந்த நடவடிக்கைகளை எல்லாம் சொல்லி அதைப் பயன்படுத்தி நீங்கள் குறை சொல்வதற்கு ரொம்ப நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஒரு ஐயப்பாட்டை என் மேல் ஏற்படுத்தி இருக்கக்கூடுமோ என்பதால் சொல்ல விரும்புகிறேன். எக்மோர் பெனிஃபிட் சொஸைட்டியில் இல்லை. வேறு ஒரு சொஸைட்டியில் 1961-ம் ஆண்டில் வாங்கிய கடன் 1966-ம் ஆண்டிலே முடிந்து விட்டது. நான் அமைச்சரானதற்குப் பிறகு எதையும் வாங்கவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** என்னைப்பற்றியும் சொன்ன காரணத்தால் சொல்கிறேன். என் வீட்டின் பெறுமானம் எவ்வளவோ, அந்தப் பெறுமான அளவுக்கு கடன் வாங்கவில்லை. நான் வாங்கிய வீட்டின் மதிப்பு சுமார் ரூ. 40,000. ரூ. 20,000 கடன் வாங்கி இருக்கிறேன். அதை என் சொத்து விவரத்திலேயே தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன். இதற்குத் தேவையான . . . (மணி அடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் இயங்கும் அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையை இப்பேரவை தெரிவிக்கிறது."

திரு. கருத்திருமன் கொடுத்து இருக்கும் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது. தீர்மானத்தை ஏற்போர் 'ஆம்' என்க. மறுப்போர் 'இல்லை' என்க. ஏற்போர் எண்ணிக்கையை விட, மறுப்போர்

எண்ணிக்கை அதிகம். ஆகவே, தீர்மானம் தோல்வியுற்றது என அறிவிக்கிறேன்.

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு கோரப்பட்டு உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு வாக்களித்தனர்.

### ஏற்போர்

திரு. பி. ஜி. கருத்திருமன்
திரு. ஆர். பொன்னப்ப நாடார்
திரு. கே. விநயகம்
திரு. எஸ். இராமலிங்கம்
திரு. க. இராமமூர்த்தி
திரு. எ. பட்டாபி நாயுடு
திரு. கே. சகாதேவ கண்டர்
திரு. ஆர். சௌந்தரராஜ மூப்பனர்.
திரு. பா. தம்பி நாய்க்கர்
திரு. டி. டி. எஸ். திப்பையா
திரு. தா. விஜயராஜ்
திரு. பி. எம். முனுசாமி கௌண்டர்
திரு. என். எஸ். வி. சித்தன்
திரு. ஏ. பாலய்யா
திரு. எம். வில்லியம்
திரு. இல. பலராமன்
திரு. த. சி. சுவாமிநாத உடையார்
திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்
திரு. ஜே. ஜேம்ஸ்
திரு. வ. ஜார்ஜ்
திரு. மு. கந்தசாமி படையாட்சி
திரு. ஆர். கருப்பையா
திரு. நா. சௌந்தரபாண்டியன்
திரு. ப. மகாதேவன்
திரு. டி. மார்டின்
திரு. க. முருகேசன்
திரு. கே. கே. முத்தையா
திரு. தோ. மு. நல்லசாமி
திரு. சி. நஞ்சன்

### மறுப்போர்

திரு. ஜி. ஆர். எட்மண்ட்
திரு. எஸ். அக்னி ராஜு
திரு. மு. அலங்காரம்
திரு. மு. ஆனந்தன்
திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி
திரு. சி. வி. எம். அண்ணாமலை



திரு. வி. டி. அண்ணாமலை
திரு. எஸ். கணேசன்
திரு. அ. பொ. அரசு
திரு. அ. ஆறுமுகம்
திரு. எல. ஆறுமுகம்
திரு. ஆலடி அருணா
திரு. கே. ஆண்டி என்கிற குருசாமி
திரு. எம். சி. பாலன்
திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்
திரு. சோ. கருணாநாதன்
திரு. சி. கே. சின்னராஜி
திரு. மு. சின்னசாமி
திரு. வி. சின்னசாமி
திரு. ந. தருமலிங்கம்
திரு. சு. ம. துரைராஜ்
மாண்புமிகு திரு. மு. கருணாநிதி
மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்
மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்
மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து
திரு. இராம. அரங்கண்ணல்
திரு. எஸ். முருகையன்
திரு. எம். எஸ். மணி
திரு. எம். சண்முகம்
திரு. முனு ஆதி.
திரு. ஆர். என். அரங்கநாதன்
திரு. பழனிவேல் ராஜன்
திரு. கே. ஆர். கோவிந்தன்
திரு. வி. எஸ். கோவிந்தராஜன்
திரு. ஆ. கோவிந்தராசன்
திரு. கி. ஜயராமன்
திரு. பி. ஜயராமன்
திரு. கலியமூர்த்தி என்ற ஆ. கு. மூர்த்தி
திரு. எம். கந்தசாமி
திரு. எம். ஆர். கண்ணன்
திரு. எம். கண்ணப்பன்
திரு. தே. கேசவலு
திரு. என். கிட்டப்பா
திரு. க. மு. கதிரவன்
திரு. கொளத்தூர் கோதண்டம்
திரு. கு. கிருஷ்ணமூர்த்தி
திரு. குடவாசல் கிருஷ்ணமூர்த்தி
திரு. மு. கிருஷ்ணமூர்த்தி
திரு. அ. கிருஷ்ணன்

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்
திரு. நா. கிருட்டிணன்
திரு. எம். சி. கோவிந்தராஜன்
திரு. சி. வீரமணி
திரு. பெ. மலைச்சாமி
திரு. வி. மலைக்கண்ணன்
திரு. பி. துரைராஜ்
திரு. இரா. மாணிக்கவாசகம்
திரு. பி. எஸ். மணியன்
திரு. மூ. மாரிமுத்து
திரு. எம். மேத்தா
திரு. ரா. ரா. முனுசாமி
திரு. ஏ. முனியாண்டி
திரு. எல். கணேசன்
மாண்புமிகு திரு. செ. மாதவன்
மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
மாண்புமிகு திரு. மா. முத்துசாமி
மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்
மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா
மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்
மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்
திரு. என். ராஜாங்கம்
திரு. மா. இராசாங்கம்
திரு. மு. ச. சிவசாமி
திரு. எஸ். இராமச்சந்திரன்
திருமதி ஜி. பத்மாவதி
திரு. எஸ். முத்துலிங்கம்
திரு. பு. செ. முத்துச் செல்வன்
திரு. என். நாச்சிமுத்து
திரு. மு. வேதாசலம்
திரு. பா. நாகலிங்கம்
திரு. ஆர். நாகசுந்தரம்
திருமதி சு. குப்பம்மாள்
திருமதி வி. ப. பழநியம்மாள்
திரு. இரா. நாராயணன்
திரு. மு. க. து. நடராசன்
திரு. ஜி. நடராசன்
திரு. செஞ்சி வெ. முனுசாமி
திரு. ஈ. எம். நடராசன்
திரு. எஸ். பி. பச்சையப்பன்
திரு. சி. பழநி
திரு. ஏ. சி. நரசிம்மன்
திரு. எம். கோபால்
திரு. எம். பன்னீர்செல்வம்



திரு. பி. என். பரமசிவம்
திரு. பெ. பெரியசாமி
புலவர் பொ. பொன்னம்பலம்
திரு. தி. பொன்னுமலை
திரு. ஏ. எம். இராஜா
திரு. க. மு. ராசகோபால்
திரு. சு. துரைசாமி
திரு. புலவர் க. முருகையன்
திரு. டி. ஏ. ராஜவேலு
திரு. க. ந. இராமச்சந்திரன்
திரு. மு. ராமன்
திரு. எஸ். ஆர். சொன்னியப்பன்
திரு. வ. க. இராமராசன்
திரு. இ. ராமசாமி
திரு. ஜே. எஸ். இராசு
திரு. மு. இரத்தினசபாபதி
திரு. கே. என். சாமிநாதன்
திரு. பி. எஸ். சந்தானம்
ஹாஜி ம. மு. பீர் முஹம்மது
திரு. ம. பொ. சிவஞானம்
திரு. எம். அப்துல் கபூர் சாகிப்
திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி
திரு. பெ. சீனிவாசன்
திரு. இர. இளம்வழுதி
திரு. சி. சேதுராமன்
திரு. எஸ். ஜே. ராமசாமி
திரு. மா. பா. சாரதி
திரு. அ. ப. சண்முகசுந்தரம்
திரு. வி. எஸ். இளஞ்செழியன்
திரு. தொ. க. சிறைமீட்டான்
திரு. ந. சோமசுந்தரம்
திரு. பெ. சௌந்தரபாண்டியன்
திரு. க. ந. சிவபெருமாள்
திரு. எம். சுப்பிரமண்யக் கவுண்டர்
திரு. டி. தங்கப்பன்
திரு. எஸ். கே. வடிவேலு
திரு. எஸ். அழகுத் தேவர்
திரு. நா. வீராசாமி
திரு. சி. வே. வேலப்பன்
திரு. ஏ. வெள்ளத்துரை

### நடுநிலைமை வகிப்போர்

திரு. ஏ. ஆர். மாரிமுத்து
திரு. ஆ. கு. சுப்பையா
திரு. க. ர. நல்லசிவன்
திரு. கே. என். குமாரசுவாமி
திரு. சோ. அழகர்சாமி
திரு. கே. பி. எஸ். மணி
திரு. எம். சுரேந்திரன்
திரு. என். மருதாசலம்
திரு. ஏ. அ. சுப்பராஜா
திரு. கரு. சீமைச்சாமி
டாக்டர் எச். வி. ஹாண்டே
திரு. என். சங்கரய்யா
திரு. கோ. பாரதி மோகன்
திரு. வி. கே. கோதண்டராமன்
திரு. பி. எஸ். தனுஷ்கோடி
திரு. எம். பூபதி
திரு. கே. எஸ். கோதண்டராமையா
திரு. கொ. இர. ஞானசம்பந்தன்
திரு. சி. கோவிந்தராஜன்
திரு. பி. வெங்கடசாமி
திரு. ஆர். சீனிவாச நாய்க்கர்
திரு. கே. பி. ஜானகி அம்மாள்
திரு. என். வரதராஜன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தீர்மானத்தை ஏற்போர் 29 உறுப்பினர்கள், தீர்மானத்தை எதிர்ப்போர் 133 உறுப்பினர்கள், நடுநிலைமை வகிப்போர் 23 உறுப்பினர்கள். ஆகவே, தீர்மானம் தோல்வியுற்றது.

பி.ப. இப்பொழுது கண்டனத் தீர்மானம் பேரவையின் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது. பேரவையின் முன் உள்ள கேள்வி :—

"குறிப்பாக அரசின் போலீஸ் அடக்குமுறைக் கொள்கையை இப்பேரவை கண்டிப்பதோடு, அரசின் கொள்கையை ஏற்க மறுக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது.

('டிவிஷன்' கோரப்பட்டு, மணியடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்பொழுது கண்டனத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது. தீர்மானத்தை ஏற்போர் எழுந்து நிற்க வேண்டுகிறேன் . . . . தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்க வேண்டுகிறேன்.

(தீர்மானத்தை ஏற்போரும், மறுப்போரும் தனித்தனியே எழுந்து நின்று, இருக்கைகளில் அமர்ந்த பிறகு)



தீர்மானத்தை ஏற்போரின் எண்ணிக்கையைக் காட்டிலும், மறுப்போரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதன் காரணத்தினுல், தீர்மானம் தோல்வியுற்றதாக அறிவிக்கிறேன்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுறுகின்றன. பேரவையைக் காலவரையறையில்லாமல் ஒத்திவைக்கிறேன். வணக்கம். பி.ப. 4-05

பின்னர் பேரவை காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

## 8. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

@ 284. Notification issued with G.O. No. 2363, Revenue, dated the 25th July 1970, in regard to exemption from liability to sales tax in respect of the sales by the Co-ordinating Council for Social concerns, Kodaikanal. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

285. Notification issued with G.O. Ms. No. 29, Legislative Assembly, dated the 15th April 1970 in regard to certain amendments to the Tamil Nadu Legislative Assembly Travelling Allowance (Elections) Rules, 1952, published with the Public Department Notification No. 59, dated the 22nd March 1952 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 22nd March 1952. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

### B. *Reports, Notifications and Other Papers.*

£ 77. Report of Thiru H. K. Ghazi, I.A.S., Secretary to Government, Home Department on his enquiry into Police action in Neyveli. (English and Tamil).

& 78. Annexure to the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1970 L.A. Bill No. 37 of 1970).

& 79. Annexure to the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 38 of 1970).

@ 80. Interim Report of the Joint Committee appointed to advise the Hon. Minister for Finance in examining the nature and scope of deletion or modification of exemptions contained in the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961).

---

@ Placed on the Table of the House on 8th September 1970.
£ Placed on the Table of the House on 7th September 1970.
& Despatched to Members on 7th September 1970.

## இணைப்பு—I

**[321-ம் பக்கத்தில் 315-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினுவிற்கு விடையைக் காண்க]**

(அ) தமிழ்நாடு, மாநிலத் தொழிற்கல்வி பயிற்சி வாரியத்துடன் இணைக்கப்பட்ட சில பல் தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் (Polytechnics) தொழிற்சாலைத் தொழிலாளர்கள் உள்ளிட்ட தொழில்நுட்பப் பணியாளர் களுக்கென்று பகுதிநேரப் பட்டயப் படிப்பு வகுப்புக்கள் நடத்தப்படு கின்றன.

(இ) பட்டயப் படிப்புக்கான பகுதிநேர வகுப்புக்கள் குறித்த விவரங் கள் வருமாறு :—

| பாட முறையின் பெயர். | நடத்தப்படும் கால அளவு. | நடத்தும் கல்வி நிறுவனங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கட்டிடப் பொறியியல் .. | 4 ஆண்டுகள் .. | சென்னையிலுள்ள மத்திய பல்தொழில் பயிற்சிப் பள்ளி மற்றும் மதுரை யிலுள்ள தமிழ்நாடு பல்தொழில் பயிற்சிப் பள்ளி. |
| இயந்திரப் பொறியியல் | ஷை | ஷை |
| மின்சாரப் பொறியியல் | ஷை | ஷை |
| குளிர்ப்பதனம் —குளிர் காற்று வசதிப் பொறி யியல். | இரண்டாண்டுகள்.. | சென்னையிலுள்ள மத் திய பல்தொழில் பயிற்சிப் பள்ளி. |
| மின்சார மேற்பார்வை யாளர் தகுதிச் சான் றிதழ். | ஷை | ஷை |
| அச்சுத் தொழில் நுட்பப் பாடமுறை. | 5 ஆண்டுகள் .. | சென்னையிலுள்ள வட் டார அச்சுத் தொழிற் பள்ளி. |

(a) Part-time diploma courses for working Technicians including industrial Workers are being conducted in certain Polytechnics affiliated to the State Board of Technical Education and Training, Tamil Nadu.



(b) Details of the part time diploma courses are as follows :—

| Name of the course. | Duration | Institution where conducted |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| Civil Engineering .. | 4 years. | Central Polytechic, Madras and Tamilnad Polytechnic, Madurai. |
| Mechanical Engineering .. | Do. | Do. |
| Electrical Engineering | Do. | Do. |
| Refrigeration and Airconditioning. | 2 years. | Central Polytechnic, Madras. |
| Electrical Supervisors' Competency Certificate. | Do. | Do. |
| Printing Technology .. .. | 5 years. | Regional School of Printing, Madras. |

## இணைப்பு 2.

[342-ம் பக்கத்தில் 320-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினுவிற்கு விடையைக் காண்க.]

பகுதி (a)—1950-ம் ஆண்டு பருத்திப் போக்கு வரத்து விதிகளின் 10 விதியின்படி 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 18-ந் தேதிக்கு முன்பு பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் பருத்தி, பருத்திக்கட்டுகள் முத லியவற்றை இறக்குமதி செய்வதற்காக உரிமதாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிட்டுள்ளபடி நேடுதல் கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டன.—

| | | |
|---|---|---|
| 1. | விதை எடுக்கப்பட்ட பருத்தி .. | 400 ராத்தல் கொண்டுள்ள (bale) கட்டு ஒவ்வொன்றுக் கும் அல்லது அதன் பகு திக்கும் ரூபாய் ஒன்று. |
| 2. | விதை எடுக்கப்படாத பருத்தி . | 800 ராத்தல் கொண்ட கட்டு (bale) ஒவ்வொன்றுக்கும் அல்லது அதன் பகுதிக்கும் ரூபாய் இரண்டு. |
| 3. | பருத்தி விதை .. .. .. | 100 ராத்தல் ஒவ்வொன்றுக் கும் அல்லது அதன் பகு திக்கும் 50 காசுகள். |
| 4. | கழிவுப் பருத்தி .. .. | 500 ராத்தல் கொண்ட கட்டு (bale) ஒவ்வொன்றுக்கும் அல் லது அதன் பகுதிக்கும் 25 காசுகள். |

மேலும், விதையெடுக்கப்பட்ட பருத்தி, பருத்தி விதை ஆகிய வற்றை ஒவ்வொரு முறைநேடுதல் செய்யும்பொழுதும் எத்தனை வகைப் பருத்தி நேடுதல் செய்யப்படினும் குறைந்த அளவுக் கட்டணம் ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) ஆக இருந்தது.

1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 8-ந் தேதி முதல் இறக்குமதி செய்யப்படும் பருத்தி முதலியவற்றிற்காக உரிமம் வழங்குவதற்கான கட்டணம் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டது.—

| | உரிமம் வழங்கும் பருத்தி வகை. | கட்டணம். | உரிமம் ஒன்றிற்கு. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1. | விதைப் பருத்தி (கபாஸ்) | 35 கிலோகிராமுக்கு 10 காசு. | ஆண்டு பொது உரிமம் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு. |
| 2. | பஞ்சு (உதிரி அல்லது அழுத்தப்பட்டது). | 50 கிலோகிராமுக்கு 25 காசு. | |
| 3. | பருத்தி விதை .. | 35 கிலோகிராமுக்கு 10 காசு | |
| 4. | கழிவுப் பருத்தி .. | 40 கிலோகிராமுக்கு 25 காசு. | |
| 5. | ஆலைகளில் பயன்படுத்துவதற்காக முழுவதும் அழுத்தப்பட்ட பருத்தி பேல்களை இறக்குமதி செய்ய பருத்தி நூற்பு நெசவு ஆலைகளுக்கும் தயாரிப்பு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கான முழுவதும் அழுத்தப்பட்ட பருத்தியை இறக்குமதி செய்ய வியாபாரிகளுக்கும், பருத்தி விதையை நசுக்குவதற்கு அவற்றை இறக்குமதி செய்ய பருத்தி விதை எண்ணெய் ஆலைகளுக்கும் வழங்கப்படும் ஆண்டுப் பொது உரிமம். | உரிமம் ஒன்றுக்கு ரூ. 300 (ரூபாய் முன்னூறு மட்டும்.) | |

மேலும் ஒவ்வொரு உரிமம் குறித்தும் இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு தொகுதி பருத்திக்கும் வழங்கப்படும் உரிமத்திற்கு விதிக்கப்படும் மேற்கூறிய கட்டணம் குறைந்த அளவு ரூ. 50 என்று வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆண்டுப் பொது உரிமம் பெற்றுள்ள தயாரிப்பு ஆலைகளுக்கு மேற்கொண்டும் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

மேலும், இவ்விதியின்கீழ் இம்மாநிலத்தின் பல்வேறு அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள், தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் ஆகியவற்றிற்கு உரிமக் கட்டணம் செலுத்துவதினின்று விலக்களிக்கப்பட்டுள்ளது.

பகுதி (b)—

நேடுதல் செய்வதற்காகவும் உரிமங்கள் வழங்குவதற்காகவும் ஏற்படும் நிர்வாகச் செலவை சரிக்கட்டுவதற்கு திருத்தப்பட்ட வீதங்கள் செயலுக்குக் கொண்டுவரப்பட்டன.



*Clause (a)*—

As per rule 10 of the Cotton Transport Rules, 1950 prior to 8th October 1968, inspection fees were collected as follows from the licencees for the import of cotton, cotton bale, etc., in the protected areas :—

(i) Ginned Cotton.—Rupee one per bale of 400 lb., or part thereof.

(ii) Unginned cotton.—Rupees two per bale of 800 lb., or part thereof.

(iii) Cotton seed.—Fifty paise for every 100 lb., or part thereof.

(iv) Cotton waste.—Twenty-five paise per bale of 500 lb., or part thereof.

Provided that the levy fees for the inspection of ginned cotton and cotton seeds shall be subject to a minimum of Rs. 100 in respect of each inspection irrespective of the number of varieties of cotton inspected.

The fee for the grant of licence for importing cotton, etc., was revised from 8th October 1968 as follows :—

| *Licence for.* | *Fees prescribed.* | *For single licence.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (*a*) Seed cotton (kapas) | 10 paise per 35 Kg. | (for those who have not obtained Annual General licence.) |
| (*b*) Lint (loose or pressed.) | 25 paise per 50 Kg. | |
| (*c*) Cotton seed .. | 10 paise per 35 Kg. | |
| (*d*) Cotton waste. | 25 paise per 40 Kg. | |
| (*e*) Annual General Licence issued to Cotton spinning and weaving mills for importing full pressed bales for use in the mills, to merchants for importing full pressed bales for sale to manufacturing concern and to cotton seed oil mills for importing cotton seed for crushing. | | Rs. 300 per licence. |

Provided that the levy of the above fees for the grant of licence shall be subject to a minimum of Rs. 50 in respect of each lot imported against each licence.

Provided that the manufacturing mill, which has taken an Annual General Licence, shall be exempt from any further levy of fee.

Provided also that the other Government Departments of the State, Government Institutions and the Madras State Khadi and Village Industries Board shall be exempt from paying the licence fee under this rule.

*Clause (b)*—

The revised rates were introduced to defray the administrative expenses in connection with the inspection and issue of licences.



*How to use the index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., ' Committee(s) ', ' Council(s) ', ' Corporation(s) ', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below:—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Ann. | ... | Announcement. |
| B.O.H. | ... | Business of the House. |
| C.A. | ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. | ... | Calling Attention Statement. |
| Consid. | ... | Consideration stage of a Bill. This stage includes :<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate. |

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Cousid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H. Dis/H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res. | ... | Resolution. |
| St. | ... | Statement. |

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

EIGHTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*7th, 8th and 9th September 1970.*

Volume XXXIV (Nos. 1 to 3.)

## A

PAGES

ADITANAR, THIRU SI. PA.—
Land Mortgage Banks in Ramanathapuram District, non-disbursement of loans to Agriculturists (C.A. St.) ... ... ... ... 371-372
No-confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... 81, 237-238

ADMINISTRATION—
Animal Husbandry Department, re-organisation ... 5
Community Development Service, formation ... 173-174
Madurai as second capital ... ... 184-186
Ramanathapuram District, bifurcation ... ... 182-184
Rural Development Department, reorganisation ... 172

ADVOCATES, CHAMBER—
*See* Buildings.

AGRICULTURE—
Package Schemes, extension ... ... ... 29
Production in fiodgrains ... ... ... 29-30
Soil Testing Laboratories ... ... ... 35

ALAGARSWAMY, THIRU S.—
Animal Husbandry Department, re-organisation ... 5
No-confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... 296-299
Thambarabarani, reconstruction of the bridge at Eral-Thenthiruperai ... ... ... 14

ANIMAL HUSBANDRY—
Re-organisation of Department ... ... ... 5

PAGES.

ARANGANNAL, THIRU RAMA—
- No-confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... ... 204, 205-208
- Refusal to speak when called by the chair, (Point of Order) ... ... ... ... ... 194
- Publication of distorted version of the proceedings in 'Nava Sakthi' (P.M.) ... ... ... ... 359, 365

ARCHAKAS—
- Sri Kapaleeswarar Temple, Mylapore ... 177

ASAITHAMBI, THIRU A. V. P.—
- No-confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... 230-236, 241-243

AUCTIONS—
- Auction by Municipal Commissioner, Coimbatore, low proceeds (St.) ... ... ... ... 372-374

B

BANKS—
- Land Mortgage Banks, Ramanathapuram district, non-disbursement of loans to agriculturists ... 371-372
- State Co-operative Land Development Bank ... 336

BHUPATHY, THIRU M.—
- Poultry Farms, Research ... ... ... 164-165

BHUVARAHAN, THIRU G.—
- No-confidence and Censure Motions against Ministry ... ... ... ... 375-379

BILL(S)—
- Agricultural Produce Markets (Amendments and Validation of Cess) Bill, 1970,
  - Consid., 261-265
  - Consid. Cl., 265
  - Passed
- Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970,
  - Consid. 266-273
  - Consid. Cl., 273-274
  - Passed 274



PAGES.

BILL (S)—*cont.*
- Requisitioning of Motor Vehicles Bill, 1970: Message from Governor ... ... ... 274
- Requisitioning of Motor Vehicles Bill, 1970,
  - Consid., 277-286
  - Consid. Cl., Motion to pass, Passed 286

BOARD(S)—
- Board of Industries, Election of Members (Ann.) 191

B.O.H. ... ... ... ... ... 108-109, 260

BRIDGES AND CULVERTS—
- Alaiaru, reconstruction ... ... ... 332-333
- Coleroon river, construction near Thirumanur ... 331-332
- Manaivaikkal, ... ... ... ... 334-335
- Nerunjikudi river, all-weather bridge ... ... 334
- South-Pennar river in Hosur taluk ... ... 15
- Thambarabarani, reconstruction at Eral-Thenthiruperai ... ... ... ... 14

BUILDING(S)—
- Advocates' Chamber ... ... ... ... 165-166
- Panchayat Union School, Tirumangalam ... ... 333-334

C

CALLING ATTENTION—
- Closure of Sri Shanmugar Spinning Mills in Rajapalayam ... ... ... ... ... 369
- Failure of monsoon, and need to postpone collection of land tax and loans and write off of old loans in certain areas ... ... ... ... ... 189
- Fire accident in Pothakkalanvillai village ... 368
- Fire accident, Harijans' houses in Sundararajapuram village ... ... ... ... 367-368
- Hunger strike by retrenched Bee Fieldmen before the Collectorate, Nagercoil ... ... ... 370-371
- Land Mortgage Banks in Ramanathapuram district, non-disbursement of loans to agriculturists ... ... ... ... ... 371-372
- Naxalite intrusion from the Western Ghats, stopping ... ... ... ... ... 43-44
- P.U.C.—Need to provide seats for large number of students in English medium ... ... ... 44-49
- Raj Bhavan forest, cutting of trees ... ... 49-51

CHAIR—

Announcement :

Board of Industries, Election of Members ... 191

Business of House ... ... ... ... 108–109, 260

Public Accounts Committee, election of Thiru B. Venkataswamy ... ... 41

Rulings and Observations—

ADJOURNMENT MOTIONS :

*Burning of camphor by the teachers on the hands of students in Vellalapatti village and the wounds caused thereby.*

Consent was withheld on the grounds that it was not in order to allow adjournment motions during the discussion on a No-confidence Motion and that the members had an opportunity to refer to the matter in the course of their speeches on the No-Confidence Motion ... ... ... ... 188–189

*Murders by Naxalites in Vellergoda village.*

Consent was withheld as the Members would have an opportunity to refer to the matter in the course of their speeches on the No-Confidence Motion ... ... ... 366

BILLS :

*Second and Third Reading stages.*

On 7th September 1970 a Member raised a point of order and stated that a Bill had been passed without a discussion at the second and third reading stages. The Chair observed that after that Bill was passed a Government Resolution had also been passed by the House. The Membed should have raised this point of order even at that time. He added that he had already put the clauses of the Bill to vote and declared them carried. ... ... ... ... 287



CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

BILLS.—*cont.*

*The Tamil Nadu Requisitioning of Motor Vehicles Bill, 1970—Admissibility.*

On 7th September 1970, just before the Bill was taken up for consideration points of order were raised that the necessity for the Bill as stated in the Statement of Objects and Reasons appended to this Bill, namely, to provide uninterrupted service to the public in case the proposal of private operators of lorries to take their vehicles off the road on 15th August 1970, materialised had lapsed and that the Bill had, therefore, become infructuous After the Minister concerned explained the need for the Bill, the Chair held that though the purpose for which the Bill was contemplated might not exist just then, the necessity for the Bill might arise in future and that the Government might like to be clothed with powers to deal with such cases in future and hence the Bill was in order.

Moreover, the Statement of Objects and Reasons did not form part of the Bill. It was just meant to explain the purpose for which the Bill was brought forward. With these remarks, the Chair held that there was no point of order. ... .. ... 276–277

CATCHING THE EYE OF THE CHAIR.

Members who wish to catch the eye of the Chair are simply to raise their hands; they should not stand up when another Member or Minister was in possession of the House ... ... ... ... ... 238–239

DEBATE.

*Allegations* :

Baseless allegations should not be made It was not in order for a Member to refer in the House to what was spoken in Mount Road. The House should not be converted into Mount Road ... ... ... 424–426

PAGES.

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
DEBATE—*cont.*
*Allegations*—cont.
When a Member of the ruling party made an allegation against a Member of the Congress Party who was not present in the House just then, another Member of the Congress Party stated that as the Member was not present, it would be better if the Member made the allegation when he was present. Thereupon, the Speaker observed that the Member should have been present in the House and it was not wrong to make the allegation just then. ... ... ... 218

*General.*
When replying to the debate on a No-Confidence Motion, the mover could not introduce new ideas not referred to earlier ... 432

*Interruptions.*
Too many interruptions would impair the debate. ... ... ... ... 103

*Repetition.*
It was not in order to refer to a subject on which there had been a discussion in the same session and on which the Speaker had given a ruling as it would amount to disrespect to him. ... ... ... ... 245-246

*Right of Reply.*
On exception being taken by the Leader of the Opposition and a Member of his party to a member of the ruling party replying to the point made by the Opposition in the course of the discussion on the No-Confidence Motion against the Ministry, the Chair held that the Members were entitled to reply to the points made by other Members. So long as members conformed to the rules of procedure, he could not impose any restriction on any Member and say what he should talk and should not talk. ... ... ... 204-208



CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
DEBATE—*cont.*
*Time limit*—
It is the duty and privilege of the Speaker to fix a time-limit for a Member's speech and no one including the Chief Minister and the Leader of the Opposition had a right to encroach upon that privilege. The Speaker may, in his discretion, extend the time-limit by a few minutes. ... 194
When a Member wanted more time than was allotted to him, the Chair observed that one Member could not take away all the time of the House. ... ... ... ... 192
While leaders of parties were, by convention, given more time, it was not the practice to allot more time for a member of a party who initiated the discussion as all the Members would have to be treated alike and the time allotted for a party as a whole could not be allowed to be taken by a single member of that party ... ... 192

DECORUM.
The Chair deprecated the practice of members making some remarks sitting in their seats. While interruptions were admissible to some extent, too many of them would impede the smooth conduct of the business of the House. ... ... ... ... 55-56
When a Member refused to speak when his name was called upon, the Chair remarked that when the Chair called upon a Member to speak, it should be construed as an order. Disregard of the Order was disrespect to the Chair. It also amounted to contempt of the House. ... ... ... ... 193-194

EXPRESSIONS USED IN THE HOUSE.
"Are you going to throttle me and gag my mouth by not allowing me to speak?"—remark addressed to the Chair—Deprecated. ... ... ... ... ... 374

PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

EXPRESSIONS USED IN THE HOUSE—*cont.*

'*அப்பாவி*' (innocent)—in the sentence 'He is an innocent man' with reference to a Member—Deprecated. ... ... ... 61

'*ஆட்டம் போடுவது*' 'in the sentence *எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பழைய நினைப்பிலே —1967-க்கு முன்னாலே இருந்த நிலையிலே தங்களுடைய ஆட்டங்களை எல்லாம் போடுகிறார்கள்.*

(The Leader of the Opposition thinking of the old state of affairs, i.e., the pre-1967 period—had been indulging in such 'extravagant behaviour'—Held to be not unparliamentary ... ...... ...... ... ... ... 105–106

MATTERS SUB JUDICE.

On 7th September 1970 interrupting a Member, another Member rose on a point of order and drew the attention of the Chair to a ruling given by a previous Speaker in regard to matters *sub judice*. The Speaker observed that the rulings of the previous Speakers were not binding on him. He added that he was aware of the rule that reference to matters *sub judice* should not be made. He was watching the speech of the member and the moment he was convinced that the member referred to a matter which was *sub judice*, he would call him to order and so, there was no need to cite former Speakers in that regard. When a member stated that a D.M.K. volunteer was brutally murdered by Congressmen, the Chair advised him not to use the word 'Congressmen'. ... 105

MINISTER'S STATEMENT.

No question could be asked on a Minister's statement made under rule 82. ... 374

NO-CONFIDENCE MOTION.

*Decorum to be observed in speeches.*

On 7th September 1970, just before the discussion on the No Confidence Motion against the Ministry and the Motion disapproving the policy of Government with particular



PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

NO-CONFIDENCE MOTION.

*Decorum to be observed in speeches.*

reference to Police repression commenced the Speaker appealed to the Members who wished to participate in the discussion to observe restraint in their observations and to make only such charges which they could substantiate with facts and figures. Likewise, those who refuted the charges should also observe equal restraint and should refute the charges with facts and figures.

He also appealed to the Members to restrict their speeches to the time allotted to them as he had to distribute the limited time available equitably among all the parties.

He informed a Member who took exception to the restriction which the Chair according to him sought to impose, the Chair observed that his appeal was not against the Rules of Procedure as according to the rules baseless and wild allegations should not be made. 51–52

PERSONAL EXPLANATION.

A member could make a personal explanation only if a reference to him had been made ... 444–445

POINTS OF ORDER.

*Admissibility.*

A point of order should not be raised under Rule 42 to seek information about the number of adjournment motions allowed. It was the privilege of the Chair to decide the admissibility of a motion given notice of under rule 42 and no point of order would lie thereon. ... ... ... ... 41–42

*Business Advisory Committee's decisions, questioning.*

With reference to a point of order whether it was in order for the Leader of the Opposition who was a Member of the Business Advisory Committee to question the decision of that Committee which fixed the time-limit for the Members of various parties who would take part in the discussion on the

PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

POINT OF ORDER—cont.

*Business Advisory Committee's decisions, questions—cont.*

No Confidence Motion, the Chair observed that the Committee did not take a decision with regard to the allotment of time. ... 53-54

*Refusal to speak when called by the Chair.*

On 8—9—1970 when a Member declined to speak when called upon by the Speaker to speak, another Member rose on a point of order and enquired whether the Member was in order in doing so.

Upholding the point of order the Speaker held that when the Chair called upon a Member to speak it was not a mere invitation, it should be construed as a direction. Failure to comply with that direction amounted to disrespect to the Chair. The Member should express regret for his conduct before he spoke. When the Member was hesitant, the Leader of the Opposition expressed regret on behalf of the Member whereupon he was allowed to speak. ... ... ... 194-196

PRIVILEGE MATTER.

*Alleged reflection cast on a Member by the Minister for Law.*

On 9—9—1970 a member of the Communist Party of India, raised a matter of privilege against Hon. Thiru S. Madhavan, Minister for Law. He contended that the action of the Minister in visiting the jail in person and getting a letter from him direct requesting *inter alia* that he might be released, reading it in the House without his knowledge, distorting the good intention underlying the spirit of the letter by making it appear that it was an undertaking, affected the privilege of the House and his right to function freely as a Member. Hence, it was intended to defame him and his party. It was also intended to prevent the free expression of the Member's views on the Censure Motion which was under consideration by the House. So, the Minister had committed a breach of privilege of not only



PAGES.

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

PRIVILEGE MATTER—*cont.*

*Alleged reflection cast on a Member by the Minister for Law—cont.*

the House but of the Members also and the matter be referred to the Committee of Privileges.

The Law Minister explained the circumstances under which the letter was given by the Member and stated that even the Executive of the Party to which the Member belonged had passed a resolution demanding the release of the arrested persons.

After hearing the Leader of the Opposition and the Chief Minister, the Speaker held that inasmuch as the member had not stated that the letter was taken from him under coercion, inasmuch as no distorted version of the letter given by him had been read as alleged by the Member and inasmuch as the matter related to his party and not to any of the functions that he was expected to discharge as a Member of the House, there was no breach of privilege. ... 345-354

*Publication in* Navasakthi.

On 9—9—1970, a member raised a matter of privilege against the Tamil Daily *Navasakthi* and stated that in spite of the Education Minister's denial of a charge made by a Member on the floor of the House, it had given the caption ' Minister furnishes wrong information '. It was a distorted version of the proceedings made with intent to lower his image in public esteem. The Member contended that the paper had therefore committed a breach of privilege.

The Member also stated that while the paper had published the text of the allegations made by a member regarding the sale of gunny bags, the reply of the concerned Minister had not been published. As it was a garbled and partial version of the proceedings with intent to injure the individuals, it should be treated as a breach of privilege.

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

PRIVILEGE MATTER.

*Publication in Navasakthi—cont.*

The Chair held that the caption "The Minister had furnished wrong information" published in the paper and failure to publish the statement of the Minister was meant to attribute motive to the Minister and hence there was a *prima facie* case of breach of privilege.

As the publication of the charge made by a Member and omission to publish the denial by the Minister amounted to distorted publication of the proceedings there was a *Prima facie* case of breach of privilege.

The motion moved by a Member that the two matters raised by the Member be referred to the Committee of Privileges was adopted after some discussion ... ... ... 355-366

PROCEEDINGS.

*Publication in Newspapers.*

In the course of the consideration of a privilege matter the Speaker made the following observations :—

"While it was not possible for the newspapers to publish the proceedings of the House in toto, wherever there was conflict of views, the publication of a Member's statement and omission to publish the Minister's explanation was tantamount to deliberate distortion of the proceedings. If such publication in any news paper—it was immaterial which newspaper it was—was brought to the notice of the Speaker, it would be examined.

While the Speaker had never curtailed the freedom of expression for newspapers, the Speaker had power and duty to see that the proceedings were not published in such a manner as to create a wrong impression about some Member, among the public". He also quoted the previous



CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Proceedings—*cont.*

Publication in Newspapers.

rulings on the subject, viz., "So long as the details are correctly and faithfully reported, the orders which prohibit their publication are not enforced; but when they are reported *mala fide*, the publishers of newspapers are liable to punishment". ...

It is for the Committee of Privileges to decide whether the publications are *mala fide or not.*

It is not the duty of the Speaker to find out whether any newspaper has committed breach of privilege. It is the duty of Members. If any such breach of privilege is brought to my notice, I shall examine it on its merits and give my ruling.

"I do not want to curtail the freedom of the Press. Let it remain as it is. But when a charge is made against the Minister and the Minister has denied it, it is not in order to prominently publish the charge alone and completely black-out the Minister's denial as that will cast a reflection on the Minister. Let the Press publish the charge and the denial. Subject to that, they can continue to enjoy the existing freedom and there is no need to prescribe any guideline for them as to how the proceedings should be published". ... ... ... ... 359-364

QUESTIONS AND ANSWERS.

*Supplementary Questions.*

*Minister's reply.*

A Minister stated in reply to a supplementary question that the matter raised in the question was *sub judice.* Thereupon a Member raised a point of order and asked how the Minister could advance the argument of *Sub Judice*, when the Speaker had already admitted the question. The Speaker observed

PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

*Supplementary Questions—cont.*

*Minister's reply*—cont.

that the Minister might either say that he had no deails or he had no reply o give insead of commenting on an admitted question. ... 337

*Relevancy.*

Supplementaries should relate to the main question. ... ... ... ... 187, 324

*Repetition.*

A question which had already been answered should not be put again. ... ... ... 10

QUOTATION.

Any document could be read only with the consent of the Chair. ... ... ... 245

There was no ban against making remarks based on newspaper reports. Quotation from newspaper with the permission of the Chair was in order. ... ... ... ... 348–349

RULING.

When the Chair had given its ruling on a matter, it was wrong for a Member to question it as it amounted to opposing it which was neither fair nor in order. ... 246

CHEEMAICHAMY, THIRU K.—

Erskine Hospital, Madurai, workers' strike ... 163–164

No Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... 209–216

Soil Testing Laboratories ... ... ... ... 35

CHINNASWAMI, THIRU M.—

No Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... 151–155

CHINTHAN, THIRU N. S. V.—

Community Development Service, formulation ... 173–174

Dam in Varishnadu hills area ... ... ... 171

Employees of Small Engineering Units, demonstration ... ... ... ... ... 20–21

Foodgrains, production ... ... ... 29–30

Handloom Industry, Dye Chemicals ... ... 9–10



PAGES

CHINTHAN, THIRU N. S. V.—

Mid-day meals, food poison in Vadapathimangalam Elementary School ... ... ... 164

Naphtha Cracker Plant, Manali ... ... ... 10–11

Naxalites, arrests in State ... ... ... 31

No Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... ... 192 243–245, 247–250

Panchayat Union school building, Tirumangalam ... 333–334

Public Works Minister's visit, Vallur Anicut ... 333

Savariyappa Udayar High School, equipment grant ... ... ... ... ... 31

COCOA—

Cultivation ... ... ... ... ... 342–343

COCONUT—

Research Centre ... ... ... ... ... 178–179

COLLEGE(S)—

Agricultural College, Coimbatore, Film projector ... 26

COMMISSION(S)—

Linguistic Minorities Commission, visit to State ... ... ... ... ... 22–24

COMMITTEE(S)—

Public Accounts Committee, election of Thiru B. Venkataswamy (Ann.) ... ... ... 41

CO-OPERATIVE SOCIETIES—

Co-operative Credit Society, Kolagathur, misappropriation ... ... ... ... ... 16–17

District Co-operative Society, Tirunelveli, irregularities ... ... ... ... ... 336–339

House Building Society, Cuddalore, misappropriation ... ... ... ... ... 17–18

CORPORATION—

Lay-outs, scrutiny fee ... ... ... 174

COTTON—

Licence fee for transport ... ... ... 342

Cotton Transport Rules, Amendment (R) ... ... 286–287

COURTS—

Sub-Magistrate's Courts, Vannarpet ... ... 166–167

## D

PAGES

DAM(S)—

Noyyalaru—at Tiruppur ... ... ... ... 169–170
Pambaru—at Kosapatti ... ... ... ... 171
Vallur Anicut, Public Works Minister's visit ... 333
Varshnadu hills area ... ... ... ... 171

DHANUSHKODI, THIRU P. S.—

No Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... 142–145

DHOBIKANA—

Construction ... ... ... ... ... 36

DIVISION—

No-Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... 450–454

DURAISWAMY, THIRU S.—

Co-operative Credit Society, Kolagathur, misappropriation ... ... ... ... ... 16–17
Dam across Noyyalaru at Tiruppur ... ... 169–170
Factories—Compulsory Gratuity scheme ... 18–20
Handloom cloth, export ... ... ... ... 5
Industrial development, separate legislation for Land acquisition ... ... ... 329
Industrial establishments, constitution of Grievance Committee ... ... ... ... ... 34
Khadi sale during 1969-70 ... ... ... 34
Municipal School, Tiruppur ... ... ... 341–342
Rural Development Department, reorganisation ... 172
Small Industries, District Level Committees ... 325–327
Small Industries, training for starting ... 327–328
Small Scale Industries, permanent exhibition in Coimbatore Town ... ... ... ... 169
State Co-operative Land Development Bank ... 336
Super Markets, running on profit ... ... 32
T.B. Sanatorium, Perundurai ... ... ... 1–2



## E

PAGES

EDUCATION—

Industrial workers, admission to Engineering Courses ... ... ... ... ... ... 321
Panchayat Unions, full grant ... ... ... 15–16

EMPLOYEES—

Parry's Employees' Union, Ranipet, memorandum. 339

ELAMVAZHUDHI, THIRU Era.—

No-Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... ... 99–108, 109–113

## F

FACTORIES—

Compulsory Gratuity Scheme ... ... 18–20
Naptha Cracker Plant, Manali ... ... 10–11

FISHERIES—

Boats and steam launches to fishermen ... ... 28

FOODGRAINS—

Adulteration cases ... ... ... ... 30
Milo and wheat, lifting stocks ... ... ... 344

## G

GNANASAMBANDAN, THIRU K. R.—

Industrial Estate, Nagapattinam ... ... 167–168

GOMATHI SANKARA DIKSHIDAR, THIRU G.—

Agricultural College, Coimbatore, Film projector 26
Cocoa cultivation ... ... ... ... 342–343
Electronics Industries, working group ... ... 168–169
Handloom fabrics, fashion parade ... ... 8–9
Housing projects, loans from Government of India ... ... ... ... ... 37–38
Industrial workers, admission to Engineering Courses ... ... ... ... ... 321
Japanese Goodwill Mission ... ... ... 163
Linguistic Minorities Commissioner, visit to State 22–24
Madras Corporation, scrutiny fee on lay-outs ... 174

PAGES.

GOMATHI SANKARA DIKSHIDAR, THIRU G.—cont.
Madras Management Association, seminar ... 177
Race Courses income ... ... ... ... ... 38
State Transport Department, canvas belts purchased ... ... ... ... ... 38
Veterinary College students, loan scholarships ... 325

GOVINDARAJAN, THIRU C.—
Handloom cloth, export to South-East Asian Countries ... ... ... ... ... 5–8
House Building Co-operative Society, Cuddalore, misappropriation ... ... ... ... 17–18
No Confidence and Censure Motions, against the Ministry ... ... ... ... 220–225

GOVINDARAJAN, THIRU V. S.—
No Confidence and Censure Motions, against the Ministry ... ... ... ... 304–308

GROUNDNUT—
Groundnut crops in Thanjavur area pests attack ... 26

## H

HANDE, DR. H. V.—
District Co-operative Society, Tirunelveli, irregularities ... ... ... ... ... 336–339
Elementary School Teachers, Demands ... 321–322
Harijan Colony of Pullarambakkam ... ... 25
No-Confidence and Censure Motions against the Ministry ... ... ... ... ... ... 114–123, 444, 445
Parry's Employees' Union, Ranipet, memorandum ... ... ... ... ... 339
Refusal of consent for Adjournment Motion (Point of order) ... ... ... ... 41, 42
Publication of distorted version of the proceedings in 'Navasakthi' (P.M.) ... ... ... 359–360, 362, 363
P.U.C., need to provide seats for large number of students in English medium (C.A.) ... 45, 47, 48
Tank Bund Poramboke, Peravallur, ... ... 340–341
Township Committee, Mettur ... ... ... 36



PAGES.

HANDLOOM—
Cloth export ... ... ... ... ... 5
Dye Chemicals ... ... ... ... ... 9–10
Export to South-East Asian Countries ... ... 5–8
Fashion parade ... ... ... ... 8–9

HARIJAN(S)—
Grant for wells in Harijan Colony ... ... 28
Pullambakkam Colony ... ... ... ... 25

HOSTEL(S)—
Backward Classes college students, Madurai ... 4

HOUSING—
Loans from Government of India ... ... 37–38

HOUSE-SITES—
Mayuram taluk ... ... ... ... 30
Tank Bund Poramboke, Peravallur ... 340–341

HOUSE SURGEONS—
Strike (St.) ... ... ... ... ... 190–191

## I

INDUSTRIAL ESTATE(S)—
Nagapattinam ... ... ... ... ... 167–168

INDUSTRIES—
Electronics—, working group ... ... ... ... 168–169
Small Engineering Units, employees, demonstration of ... ... ... ... ... ... ... 20–21
New—, delay in starting ... ... ... 328–329
Small—, District Level Committees ... ... 325–327
Small Scale Industries, permanent exhibition in Coimbatore Town ... ... ... ... ... 169
Small—, training for starting ... ... ... 327–328

IRRIGATION—
Kudaganar-Noyyalar schemes near Karur, execution ... ... ... ... ... 11–12
Periayaru System, improvements ... ... 12–13
Tenkasi-Rajapalayam areas, facilities ... 13

J

PAGES

JAMES, THIRU J.—
Increased bus fares, Kanyakumari district ... 330–331

JANAKIAMMAL, THIRUMATHI K. P.—
No Confidence and Censure Motions against the Ministry ... ... ... ... 155–158
Backward Classes—College students, hostel in Madurai ... ... ... ... 4

JAPANESE GOODWILL MISSION—
Education Minister's meeting with ... 163

K

KARUNANIDHI, THIRU M.—
Naxalites' intrusion from the Western Ghats, stopping (C.A.) ... ... ... ... ... 43–44
No Confidence and Censure Motions against the Ministry ... ... ... ... ... 65, 66, 73, 74, 76, 117, 120–121, 132, 204, 210, 213, 214, 215, 216, 229–230, 231, 232, 233, 237, 245, 247, 248, 289–290, 295, 315, 316, 317, 318, 389–417, 432, 433, 437–438, 455, 446–447, 449
Publication of distorted version of the proceedings in 'Navasakthi' (P.M.) ... ... ... 358, 359, 361, 362
Question of privilege against the Law Minister in respect of his using in the House the letter obtained from Thiru A. K. Subbiah in Tiruchirappalli Central Jail (Privilege Matter) ... ... 348, 351–354



PAGES

KARUPPIAH, THIRU R.—
Bridge, across Coleroon river near Thirumanur ... 331–332

KARUTHIRUMAN, THIRU P. G.—
Milo and wheat, lifting stocks ... ... 344
No Confidence Motion against Ministry ... 51
No Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... 53, 54, 55, 56, 57, 58–82, 100, 101, 102, 103, 104, 105, 106, 107, 113, 131, 132, 201, 217, 218, 219, 220, 231, 232, 233, 234, 236, 237, 238, 239, 240, 246, 247, 248, 307, 377, 380, 381, 401, 404, 417–434, 442, 447, 449

Point of order *re* :-
Member's refusal to speak, when called by the Chair ... ... ... ... ... ... 195, 196, 204

Point re :
Allotment of time for speeches on No Confidence and Censure Motion ... ... ... ... 191, 192, 193
Publication of distorted version of the proceedings in 'Navasakthi' (P.M.) ... ... ... 358, 359, 361, 362
Question of privilege against the Law Minister in respect of his using in the House the letter obtained from Thiru A. K. Subbiah in Tiruchirappalli Central Jail (Privilege Matter) ... 348–350, 351, 353
Sale of wine, licence ... ... ... ... ... 186–188

PAGES.

KASIRAMAN, THIRU N.—
Fuel for departmental vehicles ... ... 33
Karpagam Super Market, Vellore, purchase of silk sarees ... ... ... ... ... ... 33
Karpagam, Super Market, Vellore, working ... 33
Plantation labour, award ... ... ... ... 177–178
Supermarkets, working ... ... ... ... 32–33

KHADI—
Khadi hanks, procurement rate ... ... ... 335–336
Sales during 1969-70 ... ... ... ... 34

KITTAPPA, THIRU N.—
Boats and steam launches to fishermen, allotment 28
Bus permits, Thanjavur district ... ... 37
Cocoanut Research Centre ... ... ... ... 178-179
Dhobhikana, construction ... ... ... 36
Elementary School Teachers, demands ... 321–322
Food adulteration cases ... ... ... 30
Harijan colonies, grant for wells ... ... 28
House-sites to Harijans, Mayuram taluk ... 30
Major Panchayats, upgrading into Municipalities 27
Municipal area, removal of caste reference in names of streets ... ... ... ... 24–25
N.C.C., Central Government share in expenditure ... ... ... ... ... 2–3
New Industries, delay in starting ... 328–329
No Confidence and Censure Motions against Ministry ... ... ... ... 299–301
Package Scheme, extension to other districts ... 28
Pump sets, flying squads for repairs ... 181–182
Sandalwood in Javadi Hills, sales ... ... 30
Seed Farms, district-wise particulars of area ... 27
Temples, etc., utilisation of net income ... 175–177
Wild Life Sanctuary, Mudumalai ... ... 30–31

KOLATHUR KOTHANDAM, THIRU—
Strike, Madurantakam Co-operative Sugar Mills ... 340



PAGES

KOTHANDARAMAN, THIRU V. K.—
Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Bill, 1970 ... ... ... 265
Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 ... ... ... ... 267, 268-270
Censure Motion ... ... ... ... 51

KOTHANDARAMIAH, THIRU K. S.—
Administration, Madurai as second capital ... 184–186
Bridges over South Pennar river in Hosur taluk 15

KRISHNAN, THIRU E. R.—
No-Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... 130–131, 132–135

KUMARASAMY, THIRU K. N.—
No Confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 256–260

L

LABOUR—
Industrial establishments, constitution of Grievance Committees ... ... ... ... 34
Plantation Labour, award, ... ... ... 177–178

LANDS—
Industrial development, separate legislation for acquisition ... ... ... ... ... ... 329

LIQUOR—
Sale of wine, licences ... ... ... ... 186–188

M

MADHAVAN, THIRU S.—
Closure of Sri Shanmugar Spinning Mills in Rajapalayam (C.A. St.) ... ... ... 369
No Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... 62–63, 64, 65, 66, 198–199, 200, 212, 228, 238, 239, 240, 241

PAGES

MADHAVAN, THIRU S.—cont.

Question of privilege against the Law Minister in respect of his using in the House the letter obtained from Thiru A. K. Subbiah in Tiruchirappalli Central Jail (Privilege Matter) ... ... 347, 348, 349–350

MANI, THIRU K. B. S.—

No Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... 311–314

MANIAN, THIRU P. S.—

Karuppamaniyakkaran taluk, desilting and deepening ... ... ... ... ... ... 171

Periyaru System, improvements ... ... 12–13

MANICKAVACHAKAM, THIRU R.—

Mid-day Meals, Central kitchen in Periyanayakkanpalayam area ... ... ... ... 3–4

MARUDACHALAM, THIRU N.—

No Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... 123–127

MATHIALAGAN, THIRU K. A.—

Failure of monsoon and need to postpone collection of land tax and loans and write off of old loans, up certain areas (C.A. St.) ... ... 189

Fire accident in Pathakkalanvillai village, (C.A. St.) ... ... ... ... 368

Fire accident, Harijans' houses in Sundararajapuram village (C.A. St.) ... ... ... 367, 368

No Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... ... 72, 107 121–122, 141–445, 447–448, 449

MARTIN, THIRU T.—

Advocates' Chamber, ... ... ... 165–166

Driving schools, starting by traffic police ... 329–330

Elementary School Teachers, demands ... 321–322

Fire accident in Pathakkalanvillai village, (C.A.) ... ... ... ... ... ... 365



MARTIN, THIRU T.—cont. PAGES

Member's refusal to speak when called by the chair (Point of order) ... ... ... ... 195

No-Confidence and Censure Motions against Ministry ... ... ... ... ... ... 192, 196–198 199, 200–201, 202, 203–204, 227, 229

Panchayat Unions, full educational grant ... 15–16

Police lines, permission to rear cattle ... ... 21–22

Ramanathapuram District, bifurcation ... 182–184

Sub-Magistrate's Courts, Vannarpet, ... 166–167.

MID-DAY MEALS—

Central kitchen in Periyanayakanpalayam area ... 3 4

Elementary School, Vadapathimangalam, food poison, ... ... ... ... ... ... 164

MEETING(S)—

Japanese Goodwill Mission ... ... ... 163

MOTIONS—

Ad. Motion.

Burning camphor in palms of school students in Vellalepatti village ... ... ... 188–189

Murder of five persons by Naxalite at Veliargoda village ... ... ... ... ... 366

No-Confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... ... 51, 191–193, 196–260, 288 318, 374–455

Privilege:

Publication of distorted version of proceedings in "Navasakthi" ... ... ... ... ... 355–366

Supension of Rule 41 (3) ... ... ... ... 42 366

MUNICIPALITIES—

Caste reference in names of streets, removal ... 24–25

MUNU ADHI, THIRU—

No-Confidence and Censure Motions, against Ministry ... ... ... ... .. 216–220

MURUGAIAN, THIRU S.—

Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Bill, 1970 ... ... ... 262–264

M—cont.

PAGES

MUTHIAH, THIRU M.—
Puthiamputhur of Ottapidaram Panchayat Union, Water-tank ... ... ... 14
Tenkasi-Rajapalayam areas, irrigation facilities 13

MUTHUSWAMY, THIRU M.—
Dr. Hande's remarks regarding low proceeds realised from auctions conducted by Municipal Commissioner, Coimbatore (St.) ... ... ... 372–374
Hunger strike by retrenched Bee Fieldmen before the Collectorate, Nagercoil (C.A. St.) ... 370–371

N

NALLASIVAN, THIRU K. R.—
No Confidence and Censure Motions against the Ministry ... ... ... ... ... ... 288–292

NALLASWAMY, THIRU T. M.—
No-Confidence and Censure Motions, against Ministry ... ... ... ... 294–296

NAXALITES—
Arrests in State ... ... ... ... 31
Naxalites incrusion in the Western Ghats stopping (C.A.) ... ... ... ... ... ... 43–44

N.C.C.—
Central Government share in expenditure ... 2–3

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—
Assets of Members, correction in Form for disclosure (R) ... ... ... ... 286
Member's refusal to speak when called by the chair (Point of order) ... ... ... ... 190
No Confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 138–139, 140, 141, 449

P.U.C. need to provide seats for large number of students in English medium (C.A. St.) ... 44–47, 48, 49, 51
Raj Bhavan forest, illegal cutting of trees (C.A.) ... 190–191
Strike by House Surgeons (St.) ... ... 42, 366
Suspension of Rule 41 (3) (M) ... ... ...



P

PAGES

PADDY—
I.R. 8, Crash programme ... ... ... 179–181

PANCHAYAT(S)—
Upgrading into Municipalities ... ... 27

PAPERS LAID ON THE TABLE—
Agricultural Produce Markets Act, 1959, Notification, ... ... ... ... ... 319
Agricultural Produce Markets (Amendment and validation of Cess) Bill, 1970 and Annexure ... 160
Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 ... ... ... ... 160
Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 159
Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 319
Co-operative Societies (Second Amendment) Bill, 1970, Annexure ... ... ... ... 455
District Municipalities Act, 1959, Notification ... 159
General Sales Tax Act, 1959, Notification ... 159
General Sales Tax Act, 1959, Notification ... ... 455
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1970 and Annexure 159, 160
Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, interim report of Advisory Committee ... 455
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1970 ... ... ... 319
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1970, Annexure ... 455
Panchayats Act, 1958, Notification ... ... 158, 159
Panchayat Courts (Validation of Proceedings) Bill, 1970 and Annexure ... ... ... 160
Payment of Salaries Act, 1951, Notification ... 455
Payment of Salaries (Amendment) Bill, 1970 ... 159
Police action in Neyveli, enquiry report ... 455
Public Service Commission Regulations, 1954, Notification ... ... ... ... ... ... 318–319
Requisitioning of Motor Vehicles Bill, 1970 ... 160

PEER MOHAMMED, HAJI M. M.—
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... ... 302–304

PAGES

PERUMAL, THIRU A. R.—
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... ... 251–253

POINT OF ORDER—
Adjournment Motion, refusal of consent ... 41, 42
Refusal of a Member to speak when called by the Chair ... ... ... ... ... 193–196
Requisitioning of Motor Vehicles Bill, 1970, objection to take into consideration ... ... 274–277

POLICE—
Permission to rear cattle in Police lines ... ... 21–22

POLYTECHNICS—
Government and Private ... ... ... 39–40

PONNAMBALAM, PULAVAR, P.—
All-weather bridge across Nerunjikudi river ... 334
Dam across Pambaru, Kosapatti ... ... 171
Plantain trees, Kathaleeswarar temple, Tirukalampur ... ... ... ... ... 18

PONNAPPA NADAR, THIRU R.—
Hunger strike by retrenched Bee Fieldmen, before the Collectorate, Nagercoil (C.A.) ... ... 370–371
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 51, 314–318
Requisitioning of Motor Vehicles Bill, 1970 ... 283–284

POULTRY—
Research ... ... ... ... ... ... 164–165

PRIVILEGES—
Publication of distorted version of proceedings in " Navasakthi " (M) ... ... ... ... 355–366
Question of privilege against the Law Minister in respect of his using in the House the letter obtained from Thiru A. K. Subbiah in Tiruchirappalli Central Jail (Privilege Matter) ... ... ... 345–354

PUMP SETS—
Flying squads for, repairs ... ... ... 181–182



PAGES

RACE COURSES—
Income.

RADAR—
Installation ... ... ... ... ... 343–344

RAJANGAM, THIRU N.—
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 253–256

RAMACHANDRA DORAI, THIRU R.—
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 135–138

RAMACHANDRAN, THIRU K. N.—
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 292–293

RAMAMOORTHY, THIRU K.—
Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 .. ... ... ... 266, 267–268
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 146–150, 406
Publication of distorted version of the proceedings in " Navasakthi " (P.M.) ... ... ... 364–365
Requisitioning of Motor Vehicles Bill, 1970, objection to being taken into consideration (Point of Order) ... ... ... ... ... ... 274–275, 276, 277
Requisitioning of Motor Vehicles Bill, 1970 ... 278, 279–281, 285, 286

RAMAN, THIRU O. P.—
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 425
Raj Bhavan forest, cutting of trees (C.A. St.) ... 49, 50

RAMASWAMY, THIRU S. J.—
Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Bill, 1970 ... ... 264–265

R—*cont.*

PAGES.

REPATRIATES—
Burma, rehabilitated in Thanjavur district ... 34–35

RESOLUTIONS—
Assets of Members, correction in Form for disclosure ... ... ... ... ... 286
Cotton Transport Rules, 1950, amendment ... 286–287

S.

SADIQ PASHA, THIRU S. J.—
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... 385–388
Requisitioning of Motor Vehicles Bill, 1970, objection to being taken into consideration (Point of Order) ... ... ... ... ... ... 276
Requisitioning of Motor Vehicles Bill, 1970 ... 277–278, 284–285

SAHADEVA KANDER, THIRU K.—
Archakas, Sri Kapaleeswarar Temple, Mylapore 177
Bridge across Alaiaru, reconstruction ... 332–333
Polytechnics, Government and Private ... ... 39–40

SANATORIUM—
T.B. Sanatorium, Perundurai, grant ... ... 1–2

SANCTUARY—
Wild Life Sanctuary, Mudumalai ... ... 30–37

SANDALWOOD—
Javadi Hills, sales ... ... ... ... 30

SANKARIAH, THIRU N.—
Censure Motion ... ... ... ... 51
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... ... 82–91, 92–99, 434–437, 438–442, 443–444, 446
Publication of distorted version of the proceedings in 'Navasakthi' (P.M.) ... ... ... ... 363–364

SARATHI, THIRU M. P.—
Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 ... ... ... ... 271–272



S—*cont.*

PAGES.

SATYAVANIMUTHU, THIRUMATHI (Dr.)—
Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Bill, 1970 ... ... 261–262, 265
Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... 266, 272–273, 274
Cotton Transport Rules, 1950 amendment (R), ... 286–287
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 430

SCHOLARSHIPS—
Veterinary College students, loan scholarships ... 325

SCHOOLS—
Municipal School, Tiruppur ... ... ... ... 341–342
Non-teaching staff of Madras City Aided Secondary School, representations ... ... ... 321–325
Savariyappa Udayar High School, equipment grant ... ... ... ... ... 31

SEED FARMS—
District-wise particulars of area ... ... ... 27

SEMINAR—
Madras Management Association ... ... ... 177

SHANMUGHAM, THIRU P. U.—
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 201, 202, 203, 226, 228, 248, 431

SIVAGNANAM, THIRU M. P.—
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... ... 379–382

SIVASUBRAMANIAN, THIRU S.—
Bridge across Manaivaikkal ... ... ... ... 334–335

SOUNDARAPANDIYAN, THIRU N.—
Khadi hanks, procurement rate ... ..., ... 335–336

STRIKES—
Co-operative Sugar Mills, Madurantakam ... 340
Erskine Hospital, Madurai workers ... ... 163–164

PAGES

SUBBARAJA, THIRU A. A.—

Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... 266, 270–271

Closure of Sri Shanmugar Spinning Mills in Rajapalayam (C.A.) ... ... ... 369

Failure of monsoon and the need to postpone collection of land tax and loan and write off of old loans, in certain areas (C.A.) ... ... 189

Fire accident, Harijan's houses in Sundararajapuram village (C.A.) ... ... ... ... 367–368

Land Mortgage Banks in Ramanathapuram District, non-disbursement of loans to agriculturists (C.A.) ... ... ... ... ... 371

Naxalities intrusion in the Western Ghats stopping (C.A.) ... ... ... ... ... ... 43, 44

No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 127–130

Raj Bhavan forest, cutting of trees (C.A.) ... 49, 50, 51

SUBBIAH, THIRU A. K.—

Burma repatriates, rehabilitation in Thanjavur district ... ... ... ... 34–35

Question of privilege against the Law Minister in respect of his using in the House the letter obtained from Thiru A. K. Subbiah in Tiruchirappalli Central Jail (Privilege Matter) ... ... 345–347

SUBBIAH MUDALIAR, THIRU A. R.—

No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 308–311

SUPER MARKETS—

Karpagam Super Market, Vellore, purchase of silk sarees ... ... ... ... 33

Karpagam Super Market, Vellore, working ... 33

Working ... ... ... ... 32–33

SURENDRAN, THIRU M.—

No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 382–383



PAGES.

SWAMINATHAN, THIRU V.—

Groundnut crops in Thanjavur area, pests attack ... 26

Kudaganar-Noyyalar schemes near Karur ... 11–12

Radar equipment, installation ... ... ... 343–344

Taxes, Heavy Electricals area, Tiruverumbur ... 174–175

T.

TANK(S)—

Karuppamaniyakkaram Tank—desilting and deepening ... ... ... ... ... ... 171

TAXES—

Heavy Electricals area, Tiruverumbur ... 174–175

TEACHERS—

Elementary School— demands ... ... 321–322

TEMPLE(S)—

Kathaleeswarar temple, Tirukalampur, plantain trees ... ... ... ... ... 18

Net income, utilisation ... ... ... ... 175–177

TRANSPORT AND COMMUNICATIONS—

Bus permits, Thanjavur district ... ... 37

Canvas belts purchased by Department ... 38

Driving schools by traffic police ... ... 329–330

Fuel for departmental vehicles ... ... ... 13

Increased bus fares, Kanyakumari district ... 330–331

TOWNSHIP—

Township Committee, Mettur ... ... ... 36

V.

VINAYAKAM, THIRU K.—

Cotton, Licence fee for transport ... ... 342

I.R. 8 paddy, crash programme ... ... 179–181

No-confidence and Censure Motions, against Ministry, personal explanation ... ... 226–227

No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 374, 375, 377, 384–385, 387, 388–389

V—*cont.*

PAGES

VINAYAKAM, THIRU K.—*cont.*
Non-teaching staff of Madras City Aided Secondary School, representations ... ... 322–325
Point of Order—
Requisitioning of Motor Vehicles Bill, 1970, objection to take into consideration ... ... 275, 277
Publication of distorted version of the proceedings in 'Navasakthi' (P.M.) ... ... ... 359, 364
Requisitioning of Motor Vehicles Bill, 1970 ... 281–283
Small Industries, District Level Committees ... 325–327

VEZHAVENDAN, THIRU K.—
No-confidence and Censure Motions, against Ministry ... ... ... ... ... 424

VEERASWAMY, THIRU N.—
A Member's refusal to speak when called by the chair (Point of Order) ... ... ... ... 194
Publication of distorted version of the proceedings in 'Navasakthi' (P.M.) ... ... ... 355–358

W.

WALK-OUT ... ... ... 384

WATER-SUPPLY—
Puthiamputhur of Ottapidaram Panchayat Union, tank ... ... ... ... ... 14

61494
147